வெளியீடு 03-03-2000 Issued 03-03-2000

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, மே 12, 1999 - தொகுதி 81 - எண் 1

**Wednesday, 12th May, 1999—Volume 81 - No. 1**

D
V2h, 31 N99.
N99. 81.
221199.

...ப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
...e Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

12-05-1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | v-viii |
| Personnel of the Government of Tamil Nadu | ix-xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | xv-xvi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| 1. **அறிக்கைகள் அளித்தல்--** | |
| (அ) பொது நிறுவனங்கள் குழு | 1 |
| (ஆ) அரசு உறுதிமொழிக் குழு | 1-2 |
| 2. **மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி** | |
| (அ) கோரிக்கை எண் 27 - ஊரக வளர்ச்சி | |
| (ஆ) கோரிக்கை எண் 48 - குடிநீர் வழங்கல் | |
| (இ) கோரிக்கை எண் 49 - நகராட்சி நிருவாகம் | |
| *மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 2,7,11,14,18,22, 24,28,40-41, 44,45-46,48-51,53-54,62, 71-72,79-81, 85-87,93,99, 118,122,125-129,137-139, 140-204 |

| | பக்கங்கள் |
|---|---|
| 2. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 15-16,38-39, 45,46r |
| *திரு. கே. சுப்பராயன் | 16,42-53,92-93,162-163, 169 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 16-17,123-130 |
| திரு. ச. அழகிரி | 17-21,23-33, 71,91-92 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 22,29,30,69-70,72-74,85, 86,88-89, 90-91,92,94,103, 107, 110,204 |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 26-27 |
| *மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் | 27 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 31,89-90, 92,173 |
| *திரு. ஏ.ஜி. சம்பத் | 34-41 |
| திரு. பி. இராசமாணிக்கம் | 57-63 |
| திருமதி ஏ.ஆர். வேடம்மாள் | 64-68 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 69,73-84 |
| திரு. சி. ஞானசேகரன் | 84-88,94-95 |
| திரு. பி. வெங்கடசாமி | 95-99 |


221199.




| | பக்கங்கள் |
|---|---|
| 2. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| *திரு. என். பெரியசாமி | 99-102 |
| திரு. தி.ப. மாயவன் | 103-108 |
| திரு. அ.வ. அப்துல் நாசர் | 108-111 |
| திரு. ஜி.கே. மணி | 111-119 |
| திரு. ஜி. சொக்கலிங்கம் | 119-123 |
| *திரு. கே.சி. கணேசன் | 130-134 |
| திரு. கே.ஆர். இராமசாமி | 134-139 |
| 3. விதி 110-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை-- | |
| அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனப் பணிகளில் தற்போதுள்ள இடஒதுக்கீடு இனச்சுழற்சி முறையில் நியமனம் செய்வதுபற்றி ஆராய்ந்த குழுக்கள் அளித்த பரிந்துரைகள் மீதான அரசு முடிவுகள் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரின் அறிக்கை | 54-57 |
| 4. அறிவிப்பு-- | |
| உறுப்பினர்களுக்கு மதிய உணவு ஏற்பாடு | 124 |
| 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 211-215 |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. **முதலமைச்சர்** | : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும வணிக வரிகள். |
| 2. **கல்வி அமைச்சர்** | : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** | : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. **வருவாய்த் துறை அமைச்சர்** | : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** | : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப்பணித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து. இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு:**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை. கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :**
கைத்தறி, துணித் தொழில்.

16. **பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**
வனம், சின்கோனா மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:**
கால்நடைப் பராமரிப்பு.

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Chief Minister .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. Minister for Education.. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. Minister for Health and Electricity .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. Minister for Revenue .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. Minister for Rural Development and Local Administration .. **The Hon. Thiru Ko. Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona, and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

| | |
|---|---|
| 20. **Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |
| 21. **Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. **Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. **Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. **Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. **Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

**திரு. சி.டி. தண்டபாணி**

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்**

**திரு. பெ. ஆசையன்**

**டாக்டர் ஆ. ஞானசேகரன்**

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**

**திரு. வை. சிவபுண்ணியம்**

*செயலாளர்*

**திரு. டி. சாலமன் ஜெயபால்**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 4. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 5. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| 7. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 8. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 9. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 10. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 11. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 12. | திரு. சு. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| 13. | திரு. சௌரி அய்யாத்துரை | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 14. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 15. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 16. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 17. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 18. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 19. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. | துணைச் செயலாளர் |
| 20. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 23. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 24. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| 25. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. | தலைமை நிருபர் |
| 30. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. .. | தலைமை நிருபர் |
| 31. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. | தலைமை நிருபர் |
| 32. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல் .. | சார்புச் செயலாளர் |
| 35. | திரு. நா. நடராஜன், பி.ஏ. .. | தலைமை நிருபர் |
| 36. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர் |
| 37. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ.,பி.எல்., .. | தலைமை நிருபர் |
| 38. | திரு. தி. உமாபதி, பி.ஏ., .. | தலைமை நிருபர் |
| 39. | திருமதி பி. சரஸ்வதி, எம்.ஏ.,பி.ஜி.எல்., .. | சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. .. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. வி. .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. .. | செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. .. | துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. .. | பவானிசாகர் |
| 18. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். .. | வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. .. | ஆலங்குளம் |
| 20. | ஆவுடையப்பன், திரு. இரா. .. | அம்பாசமுத்திரம் |

21. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணாநகர்
23. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
24. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
26. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
27. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
29. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
30. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
31. இராமசந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
33. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
34. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
35. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
36. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
37. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
38. இராஜரெட்டி, திரு. ச. .. தளி
39. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
40. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
41. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
42. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்



43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
44. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
45. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
46. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
47. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
48. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
49. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
50. கன்னையன், திரு. க. .. தொட்டியம
51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
52. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
54. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
55. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்
56. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
58. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி
60. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
61. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
62. கோபால், திரு. பா. .. மேட்டூர்
63. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
64. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
65. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

66. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
67. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
68. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
71. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
72. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
73. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
74. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
75. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூா
76. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
77. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
79. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
81. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
82. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
83. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
84. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
85. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
86. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
87. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



88. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
89. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
90. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
91. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
92. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
93. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
94. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
95. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
96. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
97. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
98. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
99. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
100. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி
101. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
102. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
103. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
104. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
105. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
107. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
108. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
109. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

110. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி

111. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)

112. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்

113. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்

114. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்

115. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)

116. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை

117. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி

118. தங்கவேல், திரு. அ.ல. .. சேலம்-2

119. தண்டபாணி, திரு. சி.டி. .. கோயம்புத்தூர் மேற்கு

120. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி

121. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)

122. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு

123. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி

124. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1

125. தனபால், திரு. வி.ஜி. .. குடியாத்தம்

126. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்

127. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)

128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி

129. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி

130. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்

131. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)

132. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்

133. துரைமுருகன், திரு. .. காட்டும



134. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி

135. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)

136. நடராசன், திரு. ஆ. .. பேரூர்

137. நடராஜன், திரு. த. .. செஞ்சி

138. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்

139. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)

140. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

141. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி

142. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்

143. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்

144. நேரு, திரு. கா.நா. .. லால்குடி

145. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை

146. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)

147. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1

148. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)

149. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)

150. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு

151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

152. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)

153. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்

154. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்

155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி

156. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

157. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
158. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
159. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
160. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
162. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
163. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
164. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
165. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
166. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
171. மகேந்திரன், திரு. இரா. .. நாட்றாம்பள்ளி
172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
173. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. டி. .. விளவங்கோடு
176. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
178. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



179. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
180. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
181. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
182. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
183. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
184. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
185. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
187. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
188. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
189. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
190. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
191. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
192. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
193. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
194. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
195. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
196. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
197. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
198. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
199. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
200. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
201. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

202. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்

203. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்

204. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)

205. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்

206. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்

207. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி

208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்

209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்

210. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு

211. வல்லரசு, திரு. பி. என். .. உசிலம்பட்டி

212. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்

213. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்

214. வ[illegible]யன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்

215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. வீரபாண்டி

216. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை

217. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்

218. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி

219. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு

220. வெங்கடேசன், திரு. ச.ந. .. மதுராந்தகம்

221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். .. காவேரிப்பட்டினம்

222. வெங்கிடு, திரு. ஜி. பி. .. கோபிச்செட்டிப் பாளையம்

223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)



224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்

225. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்

226. வேலுசாமி, திரு. வ .. மதுரை கிழக்கு

227. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)

228. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி

229. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்

230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்

231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி

232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு

233. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்

234. வெற்றிடம் .. நத்தம்

235. வெற்றிடம் .. திருவட்டாறு

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 29, பிரமாதி – திருவள்ளுவர் ஆண்டு 2030**
**1999 மே 12, புதன்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பிடிஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்னிற் பவை."

நூலறிவுடன் இயற்கையான மதி நுட்பமும் உள்ளவர்களுக்கு முன்னால் எந்த சூழ்ச்சிதான் எதிர்த்து நிற்க முடியும்? முடியாது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள். திரு. ஆ. நடராசன், குழுவின் தலைவர்.

***திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்தேழாவது முதல் எண்பத்தொன்பதாவது வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். டாக்டர் தே. குமாரதாஸ், குழுவின்

தலைவர், இருக்கையில் இல்லை. அரசு உறுதிமொழிக் குழுவின் சார்பில் உறுப்பினா திரு நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1998-99ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் எட்டாவது மற்றும் ஒன்பதாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 2. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி**

**(ஆ) கோரிக்கை எண் 48—குடிநீர் வழங்கல்**

**(இ) கோரிக்கை எண் 49—நகராட்சி நிர்வாகம்**

### (அ) கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்தபடியாக, 1999-2000ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரக வளர்ச்சி பற்றிய 27-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1225,73,04,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4654, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம் சாமல்பட்டி கிராமத்திற்குச் செல்ல சாலையே இல்லாமல் பொதுமக்கள் அவதியுறுவதால், மகாதேவ கொல்லஅள்ளி கிராம புலன் எண் 576/பி,





575/ஏ நிலத்தை 100 X 16 அடி கையகப்படுத்தி சாலை அமைத்துத்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1225,73,04,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1983, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேரூராட்சி பகுதிகளிலும் தொகுப்பு வீடு கட்டித் தரும் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1225,73,04,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4317, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊத்துக்குளி ஒன்றியம் ஊராட்சிகளில் சாலைகளை மேம்படுத்தவும், தார்ச் சாலைகளாக மாற்றவும் அரசு மானியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1225,73,04,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4653, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3326, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சத்தியநாதபுரம், மோட்டுப்பட்டி, ஆணைக்கல்வானூர், கொட்டாபூர், கரியம்பட்டி, வில்லியனூர், ராமனூர், தாலிப்பள்ளம், நல்லானூர், பிக்கம்பட்டி, பாப்பாரப்பட்டி, குள்ளனூர், பேடறஅள்ளி, முக்கன் அள்ளி,

ஸ்ரீஆண்டியூர் ஆகிய கிராமங்களுக்கு உடனடியாக கூடுதலாக தெரு விளக்குகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1225,73,04,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2351, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியம், குறிச்சி ஊராட்சி கூச்சக் கல்லூரியிலிருந்து ராமாச்சிபாளையம் வழியாக கருங்கள்ளிகரட்டூர் வரை உள்ள சாலையை தார்ச் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1225,73,04,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1492, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3007, திரு. ந. கருப்பண்ண உடையார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2237, திரு. கே. சுப்பராயன்.

* **திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் முருகம்பாளையம் ஊராட்சி முருகம்பாளையத்தில் பாதாள சாக்கடை வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1225,73,04,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4537, திரு. பி. வெங்கடசாமி.



**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, 'to discuss the need to give more powers to the Ward Members and Municipal Councillors in local administration' I move—

"That the sum of Rs.1225,73,04,000/- allocated under Demand No.27-Rural Development be reduced by Rs.100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத்தீர்மானம் எண் 2780, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், ஏத்துக்குடி கோட்டூர் ஒன்றியம், ஜங்கநாதபுரம் இணைப்பு கோரையாற்றின் குறுக்கே பேருந்து செல்ல சிறு பாலம் ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1225,73,04,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2721, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, கப்பியறை பேரூராட்சி, பனங்குழியில் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1225,73,04,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3700, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**DR. E.S.S. RAMAN:** Hon. Speaker Sir, 'to discuss the need to construct a compound wall to the R.K. Pet Panchayat Union office in Pallipat Taluk' I move—

"That the sum of Rs. 1225,73,04,000/- allocated under Demand No.27-Rural Development be reduced by Rs.100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3961, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாங்குனேரி தொகுதி, நெடுங்குளம் கிராமத்தில் வாடகைக் கட்டடத்தில் நடக்கும் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1225,73,04,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3972, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேரன்மகாதேவி தொகுதி; சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியத்திற்கு, ஒன்றியத்திலுள்ள பொது நிதியிலிருந்து தார் கலவை கொதிகலன் ஒன்று வாங்குவது குறித்தும் அதற்கு ஓர் ஆபரேட்டர் நியமிப்பது குறித்தும்" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1225,73,04,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3710, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழப்பாவூர் ஒன்றியம், பாவூர் சத்திரத்தில் பேருந்து நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம்" குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1225,73,04,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4162, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

## (ஆ) கோரிக்கை எண் 48 - குடிநீர் வழங்கல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 48, குடிநீர் வழங்கல், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.218,13,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4670, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் வட்டம் சத்துவாச்சாரியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி பாலாற்றிலிருந்து குடிநீர் சப்ளை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.218,13,53,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4364, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு நல்லாம்பட்டி-பெத்தாம்பாளையம் காஞ்சிகோயில், பள்ளபாளையம் ஊரகப் பேரூராட்சிகள் மற்றும் 247 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை விரைவில் முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.218,13,53,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2124, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி நகராட்சிக்கு உட்பட்ட கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்கப்படாமல் விடுபட்டுப்போன பகுதிகளுக்கு புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துத்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.218,13,53,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3473, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட 1. பாலவாடி ஊராட்சியில் தாசன்கொட்டாயி - 1, சிந்தேரிகொட்டாய், நடுகாடு, காணகப்பட்டு, சுடுகாட்டுக்கு, 2. கோமனஅள்ளி ஊராட்சியில் குப்பு செட்டிப்பட்டிமேடு, கூகன்கொட்டாய், கீழ் கோமனஅள்ளி, மொட்டையன்காடு, 3. நாகர்கூடல் ஊராட்சியில் தின்னகொல்லை கொளந்தை வீட்டுக்கொட்டாய், செங்கொல்லைகொட்டாய், பேவின மரதஅள்ளி, கரடிகுட்டிகொட்டாய் ஆகிய ஊர்களில் குடிநீர் வசதி செய்யும் வகையில் ஆழ்துளைக் கிணறு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.218,13,53,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2420, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, சலங்கபாளையம் பேரூராட்சியில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து மின் மோட்டார் வைத்து உடனே குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.218,13,53,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2206, திரு. கே. சுப்பராயன்.

முற்பகல் 9-35

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.218,13,53,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4523, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, 'to discuss the need to supply drinking water to Hosur, Thally, Kelamangalam, Shoolagiri, Vepanapalli Blocks from Kaveri river' I move-

"That the sum of Rs.218,13,53,000/- allocated under Demand No.48 - Water Supply be reduced by Rs.100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2787, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி நகராட்சி ருக்மணிபாளையம் பகுதியில் புதிதாக பெரிய அளவிலான குடிநீர்த் தொட்டி ஒன்று கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.218,13,53,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3693, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**Dr. E.S.S. RAMAN:** Hon.Speaker Sir, 'to discuss the need to establish a new office for T.W.A.D. officials at Pallipattu' I move—

"That the sum of Rs.218,13,53,000 allocated under Demand No.48–Water Supply be reduced by Rs.100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 114, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாங்குனேரி தொகுதி, திருமலாபுரம், சீரன்குளம், புதுக்குறிச்சி, தோட்டாக்குடி ஆகிய கிராமங்களில் மேல்நிலைத் தொட்டிகள் அமைத்து, குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.218,13,53,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3970, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 25 கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.218,13,53,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3735, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கோட்டை நகராட்சிக்குக் குடிநீர் வழங்க தாமிரபரணி குடிநீர்த் திட்டத்திற்கு அனுமதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 218,13,53,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3521, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதி, கூட்டணூர் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகின்றேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.218,13,53,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3680, திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி மாவட்டம், தேனி ஒன்றியத்தில் உள்ள கோபாலபுரம், நாகலாபுரம், தாடிச்சேரி, பாலகிருஷ்ணபுரம் ஆகிய ஊர்களுக்குத் தனியாக கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.218,13,53,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்.

## (இ) கோரிக்கை எண் 49—நகராட்சி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 49-நகராட்சி நிருவாகம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.503,64,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4666, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் நகராட்சியில் உள்ள நகராட்சிப் பள்ளிக் கட்டடங்கள் பழுதடைந்து உள்ளதைச் செப்பனிட்டு வெள்ளையடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.503,64,14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4366, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை, கருமாண்டி-செல்லிபாளையம் பேரூராட்சிகளை இணைத்து நகராட்சியாக உயர்த்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.503,64,14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2051, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சி முழுமைக்கும் விரிவான ஒரு சாக்கடைத் திட்டம் தீட்டி சுகாதார மேம்பாடு அடையச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.503,64,14,000-ல ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 802, திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் பேருந்து நிலையம் நெருக்கடியாகவும், குறுகலாகவும், சுகாதார வசதியற்றும் உள்ளதால் பேரூராட்சி எல்லைக்குள்ளேயே நவீனக் கழிப்பிட வசதியுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.503,64,14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2380, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி நகரில் உள்ள புகழ்பெற்ற அருள்மிகு சங்கமேஸ்வரர் ஆலயத்துக்குச் செல்லும் வழியிலும், ஆலய சுற்றுப்புறங்களுக்கும் சோடியம் மின் விளக்குகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.503,64,14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2196, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் நகர், 12-வது வார்டில் பெரும்பகுதி வீடுகளுக்கு முன்புறம் சாக்கடை நீர் வெளியேற வடிகால் வசதி இல்லாததால், வீடுகளுக்கு சாக்கடை முன்புறம் குழி தோண்டி சாக்கடை நீரைத் தேக்கி வைத்துள்ள நிலை குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.503,64,14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3736, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்காசி புதிய பேருந்து நிலைய பணிகளை விரைவில் முடித்து பயனுக்குக் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.503,64,14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும், அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில், தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் 20 பேர் பேசவிருக்கின்றார்கள். ஆகவே காலத்தின் அருமை கருதி, தங்கள் பேச்சை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன. விவாதத்தைத் தொடங்கி வைக்கிற திரு. அழகிரி அவர்களுக்கு மட்டும் 15 நிமிடங்கள் கொடுக்கப்படும். மற்றவர்களுக்கெல்லாம் 10 நிமிடங்கள்தான். (குறுக்கீடு) திரு. லா. சந்தானம்.

``@ 217 முதல் 351 வரையுள்ள பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு தொகுதியிலும் என்ன என்ன பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன, குடிநீர் ஆதாரத்திற்காக எவையெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் துறையின் மூலமாக, தொகுதி வாரியாகப் பட்டியல் போட்டு, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. அதற்காக இந்தத் துறையை நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை மூலம் ஒவ்வொரு தொகுதி வாரியாக தனித் தனியாகப் பட்டியல் போட்டு என்னென்ன செய்யப்பட்டிருக்கின்றன, என்னென்ன இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப் போகிறோம், அடுத்த ஆண்டு என்னென்ன பரிசீலனையில் இருக்கின்றது என்பதையெல்லாம் பட்டியல் போட்டு, அந்தந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இது நாங்கள் பொதுமக்களைச் சந்திப்பதற்கு. வாய்ப்பாக இருக்கும். அதுபோன்று ஒவ்வொரு துறையிலும் எந்த அளவுக்கு முடியுமோ, அந்த அளவுக்குத் தந்தால், பொதுமக்களோடு நாங்கள் உறவாடி, அவர்களுக்கு உள்ள பிரச்சினைகளைப் பற்றி பரிசீலிக்க, பதில் சொல்ல வாய்ப்பாக அமையும். இது ஓர் உதாரணமான செயல் இதனை மனப்பூர்வமாக பாரதிய ஜனதா கட்சி பாராட்டுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானமும், திரு. வேலாயுதன் அவர்களும் பேசி முடித்துவிட்டதாகக் கருதுகிறேன். (சிரிப்பு)

**•மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை ஒன்றுதான் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதியிலும் பல அமைப்புகளாக இயங்குகிற வாய்ப்பு உடையது. அந்த உள்ளாட்சித் துறை மூலமாகச் செய்யப்படுகின்ற செயல்களைத்தான் சட்டமன்ற உறுப்பினர் தொகுதிவாரியாகப் புரிந்து கொள்ளும்படி தரக்கூடிய வாய்ப்புண்டு. பல துறைகள் ஒவ்வொரு தொகுதியிலும், சிறு பணிகளையோ அல்லது குறிப்பிட்ட பணியையோதான் ஆற்றக்கூடும் என்ற காரணத்தால்,

பட்டியல் போடக்கூடிய வாய்ப்பு மற்ற துறைகளுக்கு அதிகமாகக் கிடையாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி. (குறுக்கீடு) திரு. பழனிசாமி, இதற்குமேல் என்ன சொல்லப்போகிறீர்கள்? (குறுக்கீடு) 20 உறுப்பினர்கள் பேசப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) எப்படி கொடுக்கிறது?

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான மூன்று கோரிக்கைகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஒன்றைச் சொல்கிறேன். தவறாக நினைக்கக்கூடாது. இதுவரையில் மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன், நான் சொன்ன நேரத்தில் பேச்சை முடித்துக் கொண்டதில்லை. நான் கேட்டுக்கொண்டே இருக்கின்றேன். ஏதாவது ஒரு வரம்பு வைத்துத்தான் ஆகவேண்டும். (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியக் கோரிக்கையான உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கை மிக முக்கியமான கோரிக்கை. இதில் நான் பேசுவதற்காக அனுமதி கேட்டேன். நான் இதுவரை ஆறு மானியக் கோரிக்கைகளில் பேசியிருக்கின்றேன்.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முழுமையாகச் சொல்லுங்கள். "நான் அனுமதி கேட்டேன். அதற்கு முடியாது என்று சொல்லி விட்டீர்கள்" என்று சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் கேட்டதற்குப் பிறகு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்டதற்கு, நான் முடியாது என்று சொல்லிவிட்டேன். அதற்குப் பிறகு, நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யுங்கள், உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இது மிகவும் முக்கியமான மானியக் கோரிக்கை. இதுவரையில் நான் 6 மானியக் கோரிக்கைகளில்தான் பேசியிருக்கிறேன். தயவுசெய்து அனுமதி கொடுங்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இதற்கான புள்ளிவிவரத்தை வைத்திருக்கிறேன். ஒரு மணி 20 நிமிடங்களுக்கு மேலே 5 உறுப்பினர்கள் சட்டமன்றத்திலே பேசியிருக்கிறார்கள். திருவாளர்கள் சி. வேலாயுதன், மணி, பி.ஆர். சுந்தரம், சி. ஞானசேகரன் போன்ற 4,5 உறுப்பினர்கள்தான் ஒரு மணி 20 நிமிடங்களுக்கு மேலே பேசியிருக்கிறார்கள். ஆளும் கட்சியில் 16 பேர் இன்னும் வாயே திறக்கவில்லை. இன்றைக்கு அவர்கள் 8 பேருக்காவது வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதனால் உங்களுக்குப் பேச நேரம் ஒதுக்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிட்டேன், உட்காருங்கள். தீர்ப்பு சொல்லிவிட்டேன் அல்லவா, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள்பேச அனுமதி கேட்டீர்கள். நான் அனுமதிக்க முடியாது என்று சொல்லிவிட்டேன், உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** உங்களிடம் request செய்து கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் முடியாது என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) நானும் அன்போடுதான் சொல்லுகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) serious ஆகவும் சொல்லுகிறேன். திரு. அழகிரி பேசுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, உள்ளாட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய மானியக் கோரிக்கைகளிலே தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக என்னுடைய கருத்துகளைச் சொல்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

உள்ளாட்சித் துறையும், உணவு வழங்கல் துறையும் பொது மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகள் தொடர்புடைய இரண்டு துறைகள் ஆகும். எனவே, இந்தத் துறைகள் எவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டாலும் பொது மக்களுக்கு அங்கொன்றும் இங்கொன்றுமாக சில குறைகள் இருக்கத்தான் செய்யும். ஆனால், இவைகளையும் மீறி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துறையிலே பெரிய வெற்றிகளை ஈட்டியிருக்கிறார்கள் என்பதை நான் அன்போடு இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக கிராமக் குடிநீர்த் திட்டம் என்பது ராஜா தேசிங்கினுடைய குதிரையைப் போன்றது. கடந்த காலங்களிலே இதிலே பெரிய

வெற்றிகளை நம்மால் பெற முடியாமல் இருந்தது. ஆனால் இப்போது இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் கிராமக் குடிநீர்த் திட்டத்திலே மகத்தான சாதனைகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்தி, இந்தச் சாதனைகள் தொடர வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, கிராமங்களுக்கு வழங்குகின்ற குடிநீர் இணைப்புகளை 7,8 points-ல்தான் கொடுக்கிறார்கள். இவற்றை மாற்றி அந்தந்த கிராமங்களிலே எங்கெங்கெல்லாம் குடியிருப்புகள் இருக்கின்றனவோ அங்கெங்கெல்லாம் இணைப்புகளையும், தண்ணீர் பெறுகின்ற குழாய்களையும் பொருத்த வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நான் மானியங்களினுடைய உள் பகுதிக்குச் செல்வதற்கு முன் என்னுடைய தொகுதிப் பிரச்சினைகளை முதலில் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமான உறுப்பினர்கள் பேச இருக்கின்ற காரணத்தால், அவ்வப்போது சில விளக்கங்களை மட்டும் சொல்லலாம் என்று நான் கருதுகிறேன். குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே 150 வீடுகள் —குடும்பங்கள்—இருந்தால்தான் ஒரு பொது இணைப்பு கொடுக்கலாம் என்ற விதி இருந்தது. அதைத் தளர்த்தி, 20 வீடுகளுக்கு மேல் ஒரு குடியிருப்பு தனிப்பட்டு இருந்தால்கூட அது எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று 6 மாதங்களுக்கு முன்பாக உத்தரவிடப்பட்டு, அது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே திருமுட்டம் ஸ்ரீமுஷ்ணம் பகுதியை தனி ஊராட்சி ஒன்றியமாக அல்லது தனி வட்டமாக ஆக்கித் தர வேண்டுமென்று நீண்டகாலமாக நான் கோரிக்கை வைத்து வருகிறேன். அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே இந்தக் கோரிக்கையை நான் வைத்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நண்பர் என்கின்ற முறையிலே அந்தப் பகுதியிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்களும் இந்தக் கோரிக்கையை நீண்டகாலமாக வைத்திருந்தார். எனவே, இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல, கொள்ளிடத்திலிருந்து சிதம்பரம் நகரத்திற்கும், அண்ணாமலை நகருக்கும் குடிநீர் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்து வருகிறது. அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் நகரத்திற்கு வக்காரமடையிலிருந்து தண்ணீர் வருகிறது. ஆனால் தண்ணீரை Filter செய்வதற்கான அமைப்பு அங்கே பழுதடைந்திருப்பதால் அந்தத் திட்டம் தோல்வியடைந்து விட்டது. அந்த நகராட்சியிலே பணப் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தால், துறை தன்னுடைய பணத்திலிருந்து அதனைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் நகரத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டம் 1952 ஆம் ஆண்டு முதல் முறையாக நடைமுறைக்கு வந்தது. அப்போது அந்தப் பகுதியிலே இருந்த சுதந்திரப் போராட்ட வீரரும், காங்கிரஸ் தியாகியுமான சுப்பராயப் பிள்ளை அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்தி, நகரத்திற்கு வெளியே கழிவுநீரைக் கொண்டு போய் விடுவது மாதிரி ஒரு திட்டத்தை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-45

என்னுடைய தொகுதியிலே முதலமைச்சர் அவர்கள் ஒரு சமத்துவபுரத்தை நிலைநிறுத்த வேண்டும். சமத்துவபுரத்தை என்னுடைய தொகுதிக்கு, குறிப்பாக என்னுடைய பகுதிக்குக் கொடுத்தால், அது ஏற்புடையதாக இருக்கும். பாராட்டப்படக்கூடியதாக இருக்கும். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமத்துவபுரத்தை என்னுடைய பகுதிக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய சொந்தக் கிராமமான கீரப்பாளையம் கிராமத்தை சுகாதாரத்திலே தன்னிறைவு பெற்ற கிராமமாக மத்திய அரசாங்கமும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, எங்களுடைய ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களும் அந்தப் பணியைச் செவ்வனே செய்தார்கள். இது ஒரு நல்ல உதாரணம். உள்ளாட்சிகளிலே அரசியல் இல்லாமல் இருந்தால் உள்ளாட்சி அமைப்புகள் மிகச் சிறந்த அமைப்புகளாக

இயங்க முடியும் என்பதற்கு இந்தத் திட்டமே ஓர் உதாரணம். ஏனென்றால் அமைச்சர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர், சட்டமன்ற உறுப்பினர் தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்தவர், அந்தக் கிராமத்தினுடைய ஊராட்சி மன்றத் தலைவர் திரு. பன்னீர் செல்வம் அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். நாங்கள் மூவரும் இணைந்து மாநிலத்திலேயே சுகாதாரத்திலே தன்னிறைவு பெற்ற கிராமமாக அந்தக் கிராமத்தை மாற்றிக் காட்டியிருக்கிறோம். உள்ளாட்சி அமைப்புகள் இருக்கிற ஒரே காரணத்தினால்தான் இதனைச் செயல்படுத்த முடிந்தது என்பதை நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். எனவே இதுபோன்ற உள்ளாட்சி அமைப்புகளை மேலும் பலமுள்ளதாகவும், அதிக அதிகாரங்கள் உள்ளதாகவும் ஆக்குவதற்கு மாநில அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

முதற்கட்டமாக வறுமை ஒழிப்புத் திட்டங்கள். வறுமை ஒழிப்புத் திட்டத்திலே சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 29 சதவிகிதம் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. குறைவான ஒதுக்கீட்டைத்தான் . மத்திய அரசாங்கத்திடமிருந்து மாநில அரசாங்கத்தால் பெற முடிந்திருக்கிறது. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்திலே 1997-98-ல் 155.39 கோடி பெற்றிருக்கிறோம். ஆனால் 1998-99-ல் 103 கோடிதான் பெற முடிந்திருக்கிறது. அதேபோல ஒவ்வொரு திட்டமாகப் பார்க்கின்றபோது 29 சதவிகிதத்திற்குக் குறைவான நிதியைத்தான் மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடமிருந்து பெற்றிருக்கிறது. வறுமை ஒழிப்புத் திட்டத்தில் நீங்கள் குறைவான நிதியைப் பெறுவீர்களேயானால் மாநிலத்தினுடைய முன்னேற்றம் வளர்ச்சியடையும் என்று நாம் எவ்வாறு சொல்ல முடியும் என்பதனை நான் கேட்க ஆசைப்படுகின்றேன். மத்திய அரசாங்கத்தோடு போராட வேண்டும். போராடுகிறோம் என்று சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. டெல்லியிலே போய் அமர்ந்து அதிக நிதி ஆதாரங்களை மாநிலத்திற்குக் கொண்டு வருவதற்கு மாநில முதலமைச்சர் அவர்களும், மாநில அரசாங்கமும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாநிலத்தினுடைய நிதி ஆதாரங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கிறபோது நீங்கள் சொல்லியவாறு நடைபெறவில்லை என்பதனை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 1997-98-ல் ரூ. 662 கோடி உள்ளாட்சி அமைப்புகளுக்கு



மாநில நிதி ஆதாரத்திலிருந்து தந்திருக்கிறீர்கள். 1998-99-லே ரூ. 839 கோடி கொடுப்பதாக அறிவித்தீர்கள். ஆனால் வந்திருப்பதோ ரூ. 453 கோடிதான். அதற்கு என்ன காரணம் சொல்லுகிறார்கள் என்றால், வரி வசூல் முறையாக நடைபெறவில்லை, எனவே மாநில அரசாங்கம் உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கொடுக்கிற நிதியிலே குறைவு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இந்த அளவுக்குக் குறைவு ஏற்படுமேயானால் அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டங்களை உங்களால் எப்படி நிறைவேற்ற முடியும்? திட்டங்களை அறிவித்துக்கொண்டே இருக்கிறீர்கள். ஆனால் அதற்கான நிதி ஆதாரங்கள் இல்லை என்றால் அந்தத் திட்டங்கள் கிடப்பிலே போடப்படும் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். தற்போது மாநில நிதி ஆதாரத்திலிருந்து 8 சதவிகிதத்தை மட்டுமே மாநில அரசாங்கம் உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கொடுக்கிறது. தமிழ் மாநில காங்கிரசின் சார்பாக 29 சதவிகிதத்தை அளிக்க வேண்டும் என்று நாங்கள் கோரி இருந்தோம். சமீபத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நிகழ்ச்சியிலே பேசுகிறபோது 19 சதவிகிதம் கொடுத்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஆனால் எப்படிப் பார்த்தாலும் 19 சதவிகிதம் கொடுத்து இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. எனவே அதனைப்பற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிக அதிகாரங்கள் பெறுவதற்கான ஓர் உயர்நிலைக் குழு அறிவிக்கப்பட்டது. அந்த உயர்நிலைக் குழுவோ தன்னுடைய தீர்ப்புகளையும், தன்னுடைய சிபாரிசுகளையும் அரசாங்கத்திற்கு அளித்திருக்கிறது. ஆனால் நேற்று இரவு 10-00 மணி வரை அந்த உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளின்படி என்னென்ன அதிகாரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன, என்னென்ன அதிகாரங்கள் மறுக்கப்பட்டிருக்கின்றன போன்ற குறிப்புகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. இங்கே காலையிலே வந்து பார்த்தால், அதைக் கொடுத்திருக்கிறீர்கள். நான், மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பார்த்து கேட்க ஆசைப்படுகிறேன்; அதிக அதிகாரங்கள் பெறுவது குறித்து 500 பக்கங்களிலே நீங்கள் புத்தகங்களாக அச்சடித்து வைத்திருக்கிறீர்கள். இந்த 500 பக்கங்களையும் குறைந்த கால அவகாசத்தில் படித்து, இப்போது, அதன் மீது விவாதம் நடத்த முடியுமா? ஆகவே, அதன் மீது விவாதம் நடத்துவதற்கு வேறொரு நேரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டு, 14 உறுப்பினர்கள் 7 நாட்கள் கூடி, 13 முறை விவாதித்து, அதற்காக 1008 குறிப்புகள் தரப்பட்டு அதிலிருந்து இதுவரை ஏறத்தாழ, நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது—இந்த மானியக் கோரிக்கை பற்றிய முடிவுகளை 2 நாட்களாக உட்கார்ந்துதான் நான் பார்த்தேன் — ஆனால், இந்த ஒரு மாத காலமாக முதலமைச்சர் அவர்களுடைய ஆணையை ஏற்று, இது சம்பந்தமாகப் பரிசீலித்து, இரண்டு நாள் அமைச்சரவைக் கூட்டம் கூடி, அதிலே 3 மணி நேரம் ஒவ்வொரு நாளும் விவாதித்துத்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டது. அதற்குப்பிறகு, இது நேற்று காலை 3 மணிக்குத்தான் என் கைக்கே அச்சகத்திலிருந்து கிடைத்தது. அவசரப்பட்டு வைத்துவிட்டு, அதிலே வருகிற நிலைமைகளைப் பற்றி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடாது என்பதற்காக, அதைத் தெளிவாக வைக்க வேண்டும் என்பதற்காகத்தான், இவ்வளவு அவகாசம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதுவரையில் எந்தக் குழுவும், இந்த அளவுக்குப் பரிசீலித்து முடிவெடுக்கவில்லை. அவசரப்படாமல், நிரந்தரமான ஒரு முடிவை அறிவித்திருக்கிறது. உறுப்பினர் விரும்புவதுபோல், எப்போது வேண்டுமானாலும் அதைப் பற்றிக் கேட்கலாம்; எப்போது வேண்டுமானாலும் அதற்குரிய பதிலை முதலமைச்சர் அவர்கள் அளிப்பார்கள்; முடிந்தால் நானும் தெரிவிப்பேன்; இதிலே எந்த சந்தேகமும் உங்களுக்கு இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் சொல்வது இந்த இரண்டு புத்தகங்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. அவர்களுடைய சிபாரிசுகள் அடங்கியதுதான் பெரிய புத்தகம். இதிலே என்னென்ன சிபாரிசுகள் இருக்கின்றன என்பது திரு. அழகிரி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால் அவரும், அதிலே உறுப்பினராக இருந்தவர், இவையெல்லாம் பரிந்துரைகள் அடங்கியது; இது முக்கியமல்ல. இந்தப் பரிந்துரைகளில் அரசு ஏற்றுக்கொண்ட பரிந்துரைகள் என்னென்ன என்பது குறித்து ஒரு சின்ன புத்தகமும் வைக்கப்பட்டிருக்கிறது. அதை 1/2 மணி நேரத்திலே, திரு. அழகிரி போன்ற திறமைசாலிகள் நிச்சயமாகப் படித்து முடித்திருக்க முடியும். மற்றவர்கள்கூடப் படிக்கலாம். ஆனால், திரு. அழகிரி சொன்னதை வைத்துக்கொண்டு, 500 பக்கம் என்று சொல்வது மலைப்பாகத்



தோன்றக்கூடிய ஒன்று. 500 பக்கங்கள் கொண்டது நீங்கள் தந்த சிபாரிசுகள். அவற்றில் எதை எதை ஏற்றுக் கொண்டோம் என்பது பற்றி சின்ன புத்தகத்தில் இருக்கிறது. இந்த அவையிலே வைக்கப்படுகிற புத்தகங்கள் எல்லாம் சில நேரங்களில் அநாதையாகவே கிடக்கின்றன என்று நான் நேற்றே சொல்லியிருக்கிறேன். இனிமேலாவது அவற்றிற்கு ஆதரவு அளிக்குமாறு மாண்புமிகு உறுப்பினர்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையிலே வைக்கப்படுகிற மற்ற புத்தகங்கள் அறைகளுக்குச் சென்று படிக்க வேண்டியவை. ஆனால், இப்போது நீங்கள் வைத்திருக்கிற :9 பக்கங்களைக் கொண்ட புத்தகம் என்பது இங்கேயே படித்து, இப்போதே விவாதிக்க வேண்டிய விஷயம். எனவே, எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும், இதற்குமேல் படித்து விவாதிப்பது என்பது முடியாத விஷயம். எனவே, மாண்புமிகு முதலமைச்சா அவர்கள் இதே சட்டப்பேரவையில், இன்னொரு நாளில் அதற்கு ஒரு தனி நேரத்தை ஒதுக்கித் தருவார்களேயானால்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற கட்சிகளில் உள்ளவர்கள் என்றால் இந்தக் குறையைச் சொல்லலாம். உங்கள் கட்சியிலே ஐந்தாறு பேர் பேசவிருக்கிறீர்கள். நீங்கள், படித்துவிட்டு கடைசியாகப் பேசுகிறவர்களிடம் இந்தப் பரிந்துரைகளைப் பற்றிப் பேசச் சொல்லுங்கள். திரு. அழகிரிதான் அதைச் சொல்லியாக வேண்டும் என்பதல்ல.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையினுடைய வீச்சை இது குறைப்பதாக இருக்கிறது. என்னுடைய கருத்து என்னவென்று சொன்னால், இது ஒரு பிரதானமான விஷயம். அதிகாரத்தைத் தருகிற ஒரு விஷயம். உங்களிடமிருந்து அதிகாரத்தை உள்ளாட்சி அமைப்புகளுக்கு எங்களால் பெற்றுத்தர முடியவில்லை என்ற கருத்து எங்களுக்கு இருக்கிறது. எனவே, அதிகாரத்தைக் கொடுக்கிற விஷயம் குறித்த புத்தகத்தை கொஞ்சம் பரவலாக முன்கூட்டியே கொடுத்து இருந்தீர்களேயானால், அதைப் படித்து, விவாதித்து பேச முடியும். நாங்களும் சிந்திக்க வேண்டும்; உடனடியாகப் பதில் சொல்லிவிட முடியாது என்பதற்காகத்தான் நான் சொன்னேன்.

அடுத்ததாக, உள்ளாட்சி அமைப்புகளுக்கான சட்டங்களை நாம் அறிவித்திருக்கிறோம். 1994 ஆம் ஆண்டு வகுக்கப்பட்டது. ஆனால்,

இன்றுவரை அதற்கான விதிகள் — rules—கொடுக்கப்படவில்லை. நடைமுறை நூல் — Manual— தரப்படவில்லை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994-வது ஆண்டு சட்டத்தினுடைய விதிகள் அனைத்துமே செய்யவில்லை என்று சொல்வது தவறு. குறிப்பிட்ட சிலவற்றிற்கு தற்காலிகமாக எடுத்த முடிவையொட்டி அவ்வப்போது விதிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அநேகமாக இந்தச் சட்டமன்றக் கூட்டம் முடிந்தவுடன் அனைத்திற்குமே விதிகள் முடிவாகிவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-55*

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்குதான் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களோடு வேறுபடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தத் துறையிலே பல்வேறு சாதனைகளைச் செய்திருந்தும்கூட இந்தச் சாதனைகள் வெளியிலே சிலரால் விமர்ச்சிக்கப்படுவதற்குக் காரணம், நீங்கள் மட்டுமே உழைக்கிறீர்கள், ஓர் உள்ளாட்சி அமைப்பு எப்படிச் செயலாற்ற வேண்டும் என்பதற்கான விதிகள், அதாவது rules மற்றும் Manual Book இவை இரண்டும் மிகமிக முக்கியம். உள்ளாட்சித் துறை அமைச்சரும் Chairman ஆக இருந்திருக்கிறார், விவசாயத் துறை அமைச்சரும் Chairman ஆக இருந்திருக்கிறார். அவர்களுக்கு இது புரியும். விதிகள் அடங்கிய ஒரு புத்தகமேயில்லாமல் ஒரு துறை எப்படிச் செயல்பட முடியும்? Rules Book கிடையாது, Manual Book கிடையாது. அரசாங்கம் என்ன சொல்லி இருக்கிறது என்பது பற்றி விதிகளே இன்னும் இயற்றப்படவில்லை. அவ்வப்போது அதிகாரிகளுடைய மனதிலே என்ன தோன்றுகிறதோ, அதனை அவர்கள் G.O. ஆகப் போடுகிறார்கள். அந்த G.O. ஒவ்வொரு முறையும் மாறுகிறது.

எனவே, ஓர் உள்ளாட்சி அமைப்பு திறம்படச் செயல்பட வேண்டுமானால் Rules இருக்க வேண்டும். Manual Book இருக்க வேண்டும். அதாவது விதிகளும் நடைமுறைகளும் என்ற நூல் இருக்க வேண்டும். அது இல்லாததன் நோக்கம் என்னவென்றால், உள்ளாட்சி அமைப்புகளை குழப்புவதற்காகவே செய்யக்கூடிய ஒரு ராஜ தந்திரம். ஏனென்றால், உங்களுக்கு என்ன அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றது என்பது யாருக்கும் தெரியாது, மாவட்ட பஞ்சாயத்துத் தலைவருக்கும்



தெரியாது, Chairman-க்கும் தெரியாது. Panchayat Board President-க்கும் தெரியாது. யாருக்குத் தெரியும் என்றால், Secretary-க்கு மட்டும்தான் தெரியும். D.R.D.-க்கு தெரியும். இரண்டு பேருக்குத்தான் தெரியுமேயொழிய மற்றவர்களுக்குத் தெரியாது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு நீங்கள் தேர்தல் நடத்தி மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால், இந்த மூன்று ஆண்டுக் காலத்திலே இந்த அமைப்புகள் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதற்கான விதிகள் இல்லை என்றால், இந்த அமைப்புகள் இயங்கியிருக்குமா? இதுதான் நாங்கள் கேட்கிற கேள்வி. எனவே, இதற்குப் பிறகாவது, விதிகளும் நடைமுறைகளும் என்ற நூலை அரசு வெளியிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, Panchayat Raj சட்டத்திலே, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 73-வது திருத்தத்தின் மூலமாக, மத்திய மாநில அரசுகளுக்கு இணையான அந்தஸ்தினை உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசாங்கம் வழங்கியிருக்கிறது. இங்கே பிரச்சினையே, அதிக அதிகாரம், அதிக அதிகாரம் என்பதுதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட சென்ற ஆட்சியைவிட நிறைய உரிமைகளை நாம் வழங்கி இருக்கிறோம் என்று நினைக்கலாம். மேலும் மேலும் அதிக அதிகாரங்கள் என்று இவர்கள் கேட்பதனுடைய நோக்கம் ஏதோ அரசியல் காரியங்களுக்காகக் கேட்கிறார்கள் என்ற உணர்வு முதலமைச்சர் அவர்களுக்கும் இருக்கலாம், மற்றவர்களுக்கும் இருக்கலாம். ஆனால், என்னைப் பொறுத்தவரையில் என்னவென்றால், மத்திய அரசாங்கம் வழங்கியிருக்கின்ற உரிமைகளை மாநில அரசாங்கம் ஏன் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தரக்கூடாது என்பதுதான். இப்போது அந்த உரிமைகள் எதையுமே நாம் வழங்கவில்லை. உதாரணமாக ஒன்றைச் சொல்லலாம்.

இந்திய அரசமைப்புச் சட்டப்பிரிவு 243-G, அதேபோல தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டக்கூறு 257 இவைகள் இரண்டுமே 29 துறைகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கலாம் என்று கூறியிருக்கிறது. ஆனால், 29 துறைகள் மாநில அரசாங்கம், உள்ளாட்சி அமைப்புகளுக்கு எந்த அடிப்படையிலே வழங்கி இருக்கிறது என்று சொன்னால், உள்ளாட்சி அமைப்புகள் இந்த 29 துறைகளிலும் சென்று உதவலாம், ஆலோசனை தெரிவிக்கலாம், பரிந்துரைக்கலாம், மேற்பார்வையிடலாம் என்கின்ற வார்த்தைகள்தான் அடங்கியிருக்கிறது. இது எப்படி அதிக அதிகாரம் கொடுத்ததாக இருக்கும். 'அதிக' என்ற வார்த்தைகூட இதிலே வரவில்லை. அதிகாரமே இதிலே கிடையாது. உதாரணமாக

வேளாண்மைப் பொறியியல் துறையினர் கிராமங்களிலே குளங்களை வெட்டுகிறார்கள் என்றால், ஓர் ஊராட்சி மன்றத் தலைவரோ அல்லது ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரோ அல்லது மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவரோ அல்லது சட்டமன்ற உறுப்பினரோ அங்கு சென்று பார்த்தால், ஓர் அதிகாரி அந்த வேலையைச் செய்து கொண்டிருப்பார். பொதுப் பணித் துறையிலே Tender விடுகிறார்கள். Highways-ல் Tender விடுகிறார்கள். உள்ளாட்சி அமைப்புகளில் Tender விடுகிறார்கள். ஆனால் ஒரு துறையினுடைய அதிகாரியே அங்கு வந்து வேலையைச் செய்கிறார். அது எப்படி சரியாக இருக்க முடியும்? ஒரு கிராமத்திலே அதிகாரி வந்து ஒரு குளத்தை வெட்டுகிறார் என்றால், அந்த அதிகாரிக்கு குளத்தை வெட்டுகிற உரிமையை யார் வழங்கினார்கள்? இதுதான் நான் கேட்பது. Trespass, அதாவது அத்துமீறல், உள்ளாட்சிக்கு அளிக்கப்பட்டிருக்கிற அதிகாரத்திலே பிற துறைகள் அத்துமீறுவதற்குக் காரணம், உள்ளாட்சித் துறை அமைச்சர் தன்னுடைய துறைக்கு, தன்னுடைய துறையின் கீழே இயங்குகின்ற அமைப்புகளுக்கு அதிகாரம் கொடுக்காத காரணத்தால், உங்களுக்குப் பக்கத்திலே இருக்கிற அமைச்சர்களின் துறையினர் வந்து உங்களை அத்துமீறி விட்டார்கள் என்பது என்னுடைய கருத்து.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எந்தவிதமான அதிகாரமுமே கொடுக்கவில்லை என்பதைப் போன்ற ஒரு கருத்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அழகிரியினுடைய பேச்சிலே அமைகின்ற காரணத்தால் ஒன்றிரண்டை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்த 29 இலாகாகளிலும் சில அதிகாரங்களை நாம் இப்போது வழங்கியிருக்கின்றோம். அதிலே குறிப்பாக ஒன்றிரண்டைச் சொல்கிறேன். உதாரணத்திற்கு மின்சார இலாகா என்று எடுத்துக்கொண்டால் மின்சாரத் திருட்டைக் கண்டறியும் பொறுப்பினை கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைப்பு செய்யலாம். (குறுக்கீடு) இல்லை. இந்தப் பணிகளை ஊராட்சிகள் செவ்வனே செய்ய தமிழ்நாடு மின்சார வாரியம், மின் திருட்டுக்காக வசூலிக்கப்படும் மொத்தத் தொகையில் 10 விழுக்காடு தொகையை சம்பந்தப்பட்ட ஊராட்சிக்குக் கொடுக்கலாம். அதைக் கொடுத்திருக்க வேண்டும். ஆக, ஒரு கிராமத்திலே 2 இலட்சம் ரூபாய் திருட்டைக் கண்டுபிடித்துக் கொடுத்தார்களேயானால், அவர்களுக்கு 20,000 ரூபாய் கொடுக்கலாம் என்ற அந்த அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறோம். அதேமாதிரி Transformer எங்கே போட வேண்டும், கம்பம் எங்கே நட



வேண்டும் என்று அவர்கள் எங்கே சொல்கிறார்களோ, அங்கே நடுவது என்ற அந்த அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறோம். அவர்களை மீறி எதையும் செய்வதாக இல்லை. அந்தமாதிரி சில இலாகாகளில் கொடுத்திருக்கிறோம். மக்கள் நல்வாழ்வுத் துறையிலே என்னென்ன கேட்கிறார்களோ அதைப் பெரும்பாலும் கொடுத்திருக்கிறோம்.

*முற்பகல் 10-00*

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உள்ளாட்சித் துறையிலே, வேளாண்மைத் துறை அத்துமீறல் செய்வதாகச் சொல்கிறார்கள். அது அத்துமீறல் அல்ல. (குறுக்கீடு) நானும் அதைத் தவறாக எடுத்துக் கொள்ளவில்லை. அதாவது, மத்திய அரசாங்கத்தினுடைய வழிகாட்டுதலின் பேரில் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் Tender விடக்கூடாது. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடியவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று சொல்கிறபோது Tender விடாமல் வேலை நடக்கும்போது, அதிகாரிகள் தான் மேற்பார்வையிட்டு, பொறியியல் துறை மூலம் அந்தப் பணி நடைபெறுகிறது. Tender விட்டிருந்தால் அதிகாரி அங்கே போக வேண்டியதில்லை. வேலை சரியாகச் செய்கிறார்களா என்று பார்வையிட்டுவிட்டு வந்துவிடலாம். ஆகவே, Muster Roll போட்டுக் கொண்டு, நாள்தோறும் அந்தக் கிராமத்திலே இருக்கக் கூடியவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்காக இந்தத் திட்டம். ஆகையினாலே, Tender விடக்கூடாது என்ற மத்திய அரசாங்கத்தின் வழிகாட்டுதலின் பேரிலேதான் இந்த E.A.S. திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அழகிரி, நீங்கள் பேச ஆரம்பித்து 21 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) திரு. மு. அப்பாவு நீங்கள் கொஞ்சம் இருங்கள். உங்கள் கட்சியின் சார்பிலே வாய்ப்பு கொடுக்கிறபோது நீங்கள் பேசுங்கள். நான் இந்த மாதிரி ஒவ்வொருவருக்கும் Point of Order-ல் பேச அனுமதி கொடுக்க முடியாது, உட்காருங்கள். திரு. அழகிரி, இன்னும் 2 நிமிடங்களிலே பேசி முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கீடு எல்லாம் வந்து விட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத்தான் கூடுதலாக நேரம் கொடுத்தேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள். ஆனால, நான் அதற்குள் செல்ல விரும்பவில்லை. நான் விளக்கம் பெற விரும்புவது இதுதான். நீங்கள் Tender விடவில்லையே என்று நான் வருத்தப்படவில்லை. Tender விடக்கூடாது என்பதுதான் மத்திய அரசாங்கத்தினுடைய தெளிவான கருத்து. ஆனால், அந்தக் காரியத்தை யார் செய்வது என்பதுதான் கேள்வி. அந்தக் காரியத்தை அந்த ஊரிலே இருக்கிற ஏதாவது ஓர் உள்ளாட்சி அமைப்புதான் செய்ய வேண்டுமேயொழிய ஓர் அதிகாரி வந்து செய்யக் கூடாது என்பதுதான் உள்ளாட்சி அமைப்பினுடைய தாத்பரியமே. நீங்கள் யார் வேண்டுமானாலும் அந்த வேலையைச் செய்கிற மாதிரி கொடுங்கள். அந்த வேலையை மேற்பார்வையிடுகிற மாதிரி நீங்கள் செய்யலாமேயொழிய, சம்பந்தமே இல்லாத ஓர் அதிகாரி Pant போட்டுக் கொண்டு வந்து குளம் வெட்டுகிறார். அதைமாற்றி அந்தக் கிராமத்தில் இருக்கிற விவசாயிகளிடமோ அல்லது விவசாய அமைப்பினிடமோ கொடுக்கலாம் அல்லது கிராமத்திலே உள்ள நாட்டாண்மைக்காரரிடம் கொடுக்கலாம் அல்லது கிராமப் பஞ்சாயத்திடம் கொடுக்கலாம் அல்லது ஊராட்சி ஒன்றியத்திடம் கொடுக்கலாம் அல்லது மாவட்டப் பஞ்சாயத்திடம் கொடுக்கலாம். ஏகப்பட்ட அமைப்புகள் இருக்கின்றன. எனவே, அதைத்தான் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். ஒன்றே ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். யாரோ வந்து செய்வது அல்ல. ஊராட்சி மன்றத்திற்குத் தெரிவித்துவிட்டுதான் அந்தப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று அண்மையில் உத்தரவிட்டிருக்கிறோம். ஊராட்சி மன்றத் தலைவர்கள் அதைக் கண்காணிக்கலாம். அதைப் பற்றிய புகார்களை அரசுக்கு அனுப்பலாம். அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையே அங்கேதான் இருக்கிறது. அதாவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உள்ளாட்சிமன்ற அமைப்பு போய் பார்வையிடலாம் என்பதுதான் பிரச்சினைக்குரிய விஷயம். அந்தப்



பணியைச் செய்யக் கூடியவர்களாகவே அவர்கள் இருக்க வேண்டும். இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உங்களையும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் எதற்காக ஆந்திராவிற்கு அனுப்பினார்கள்? அங்கே அந்தப் பணிகளை எல்லாம் விவசாயிகளே செய்கிறார்கள். (குறுக்கீடு) தவறுகள் இருக்கலாம். இல்லை என்று நான் சொல்லவில்லை. ஏன் என்றால், ஜனநாயகமே தவறுகள் உடையதுதான். அந்தத் தவறுகளை எப்படியெல்லாம் சீர்செய்வது என்பதற்காகத்தான் நாம் இந்த ஏற்பாட்டைச் செய்யவிருக்கிறோமேயொழிய வேறல்ல. எனக்குத் தெரியாது.. நீங்கள் சொன்னதினாலே நான் சொல்கிறேன். (குறுக்கீடு) ஆந்திரத்தில் எப்படி நடக்கிறது என்று எனக்குத் தெரியாது நீங்கள் பார்வையிட்டு வந்து சொன்னதினாலே அங்கே ஏதோ நன்றாக நடக்கிறது என்று நினைத்துக்கொண்டு நான் சொல்கிறேன் அவ்வளவுதான்.

அடுத்ததாக, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய கூற்றை நான் ஏற்றுக்கொள்கிறேன். சில அதிகாரங்களை அளித்திருக்கிறீர்கள். நான் இல்லை என்று சொல்லவில்லை. தந்தை பெரியார் அவர்களும், மகாத்மா காந்தி அவர்களும் சந்தித்துப் பேசினார்கள். மகாத்மா காந்தி, பிராமணர்களை எல்லாம் நீங்கள் எதிர்க்கிறீர்களே, பிராமணர்களிலே நல்லவர்களே இல்லையா என்று கேட்டார். கேட்ட உடனே பெரியார் இல்லை என்று சொன்னார். உடனே மகாத்மா ஏன் இராஜாஜி இல்லையா என்று கேட்டார். உடனே தந்தை பெரியார் நீங்களேகூட ஒருவரைத்தான் காட்ட முடிந்தது. மற்றவர்களை உங்களால் சொல்ல முடியவில்லை என்று அவருக்குப் பதில் சொன்னார்கள். அதே பதிலைத்தான் நானும் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நாங்கள் என்ன அதிகாரமா கொடுக்கவில்லை, ஓரிரண்டு அதிகாரங்களைக் கொடுத்து இருக்கிறோமே என்று சொன்னார்கள். எங்களுடைய கூற்றும் அதுதான். ஓரிரண்டு அதிகாரங்களைத்தான் கொடுத்திருக்கிறீர்களேயொழிய.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். கல்வித் துறை அதிகாரத்தை எப்படி வழங்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் கருதுகிறார்.

முற்பகல் 10-05

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதிலே தெளிவாக இருக்கிறேன். முதலமைச்சர் அவர்களும் அதிலே தெளிவாக இருக்க வேண்டுமென்று நான் விருப்பப்படுகிறேன். ஏனென்றால் அவர்களுடைய அறிவு, அவர்களுடைய அனுபவம் காரணமாக, அவர்களைப் போன்றவர்கள்தான் அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் கல்வித் துறையையும், பொது சுகாதாரத் துறையையும், வேளாண்மைத் துறையையும் கொண்டு வந்தால் அதிலே பணியாற்றுகிறவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள் என்பது அரசாங்கத்தினுடைய கருத்து. எல்லாவற்றுக்குமே எதிர்ப்பு இருக்கிறது. நீங்கள் செய்கின்ற எதற்கு எதிர்ப்பில்லை ? நீங்கள் அவர்களை அழைத்துப் பேச வேண்டும். இந்திய அரசமைப்புச் சட்டம்... (குறுக்கீடு) உண்மைதான். நீங்கள் அவர்களை அழைத்துப் பேச வேண்டும். இப்போது நீங்கள் பாராளுமன்றத்திலே எதிர்க் கட்சிகளை அழைத்துப் பேசி விவாதம் இல்லாமல் Budget-ஐ நிறைவேற்றவில்லையா ? நிச்சயமாக நிறைவேற்றலாம். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எங்கேயோ திசை திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறீர்கள். 2 நிமிடங்களிலே உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள் என்று சொன்னால் நீங்கள் எங்கேயோ பெரியார், அண்ணா அப்படியென்று வரிசையாக ஆரம்பித்து, இன்னும் ஒரு கால் மணி நேரம் பேசப் போகிறீர்களா? சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டுகிறேன். நான் தெரிந்துகொள்ள விரும்புவது ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் கல்வித் துறையைக் கொண்டுவந்தால் ஆசிரியர்கள் பெரும் கிளர்ச்சி நடத்துவார்கள். ஏற்கெனவே நடத்தியிருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் மீண்டும் அதிலே ஒரு புதிய நிலையை எடுக்க வேண்டியிருந்தது. பழைய நிலைக்கே போக வேண்டியிருந்தது. எடுத்த புதிய நிலையை மாற்ற வேண்டியிருந்தது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தின்படி, பொதுவாக தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய கருத்தின்படி, உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் கல்வித் துறையைக் கொண்டுவந்துவிட்டால் ஆசிரியர்கள் வேலைநிறுத்தம், உண்ணாவிரதம் போன்ற கிளர்ச்சிகளை நடத்துவார்கள். அவற்றிற்கு நீங்கள் ஆதரவு தராமல் இருப்பீர்களா என்பதைத் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்



**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பக் கல்வி, நடுநிலைக் கல்வி எல்லாம் உள்ளாட்சி மன்றங்களின்கீழ்தான் இருக்க வேண்டும். அதற்கு முழுமையான ஆதரவை தமிழ் மாநில காங்கிரஸ் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே பிரச்சினைகள் வரலாம். ஆளும் கட்சியும், எதிர்க் கட்சிகளும் சேர்ந்து அந்த அமைப்புகளைச் சேர்ந்தவர்களை அழைத்து வைத்து, ஏற்கெனவே பழைய காலங்களிலே உள்ளாட்சி அமைப்புகளிலே ஆசிரியர்கள் அடிமைகளாக நடத்தப்பட்டார்கள், இந்த 20, 30 ஆண்டுகளாக பல்வேறு சீர்த்திருத்தங்கள், மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன, அவர்களிடம் பலமான சங்கங்கள் இருக்கின்றன, எனவே, இப்போது கல்வித் துறையை உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் கொண்டு வந்தால் அதைப்போன்ற சிரமங்கள் ஏற்படாது என்பதை விளக்கிச் சொல்ல வேண்டும். அரசாங்கமே ஒத்துக்கொள்கிறது. அதாவது தொடக்கக் கல்வி முற்றிலுமாகத் தோற்றுவிட்டது என்பதனை மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் பல இடங்களிலே சொல்லியிருக்கிறார்கள். எனவே, தொடக்கக்கல்வி தோற்றும் விட்டது. அதனைச் சரி செய்ய ஒரு வாய்ப்புக் கிடைக்கிறபோது ஏன் நாம் அதனைப் பயன்படுத்தக்கூடாது என்பதனை மட்டும் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்ததாக இப்போது 3 அடுக்கு முறை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிஷம்தான் கொடுப்பேன். அரை மணி நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) இல்லை, எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. தமிழ் மாநில காங்கிரஸ் சார்பிலே அவர் ஒரு மணி நேரம் பேசட்டும்.

**திரு. ச. அழகிரி:** இல்லை, இல்லை, நான் சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. அப்பாவு சொல்கிறார்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது உள்ளாட்சி அமைப்புகளிலே 3 அடுக்கு முறை இருக்கிறது. இந்த மூன்று அடுக்கு முறை தமிழகத்திலே ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் இருக்கின்றது. எனவேதான் பிரச்சினைகள் ஆரம்பிக்கின்றன. தங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லையென்று அவர்கள் சொல்வதற்குக் காரணமே ஒன்றோடொன்று தொடர்பில்லாமல் இருப்பதுதான். ஆனால், கர்நாடகாவிலே, மேற்கு வங்காளத்திலே, மத்தியப் பிரதேசத்திலே இவையெல்லாம் ஒன்றோடொன்று தொடர்புடையனவாக இருக்கின்றன. ஏற்கெனவே மாநில அரசு சார்பாக இதிலே சொல்லப்பட்ட கருத்து என்னவென்றால், மத்திய சட்டத்திலே இப்படித்தான் இருக்கிறது. எனவே இதிலே ஏதாவது மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்றால், மீண்டும் பாராளுமன்றத்திற்குச் சென்று மூன்றில் இரண்டு பங்கு majority பெற்றுத்தான் மாற்றங்களைச் செய்ய முடியும் என்று நம்முடைய மாநில அரசாங்கம் கருத்துச் சொல்லியிருந்தது. நாங்களும் இதனை உண்மை என்று கருதியிருந்தோம். ஆனால் மத்திய சட்டத்தைப் பார்த்த பிறகு, அப்படி எதுவும் அதில் இல்லை.

மத்திய சட்டத்திலே, Parent Act-ல் மூன்றடுக்கு முறை இருக்க வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறார்களேயொழிய இந்த மூன்றடுக்கு முறையை எப்படி நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதனை மாநில அரசாங்கமே முடிவு செய்துகொள்ளலாம். அதற்கு எந்தத் தடையும் கிடையாது. இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நினைப்பார்களேயானால் இந்த மூன்றடுக்குகளையும் ஒன்றோடொன்று தொடர்புடைய அமைப்புகளாக, அதாவது கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் ஊராட்சி ஒன்றியத்திலே அங்கம் வகிக்கலாம். ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிறவர்கள் மாவட்டப் பஞ்சாயத்திலே அங்கம் வகிக்கலாம். எனவே, அதைப்போன்று அவர்கள் செய்தாலேயே பெரும்பாலான பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்பதனை நான் கூறிக்கொள்கிறேன்.

அதேபோல, முன்பு மாவட்ட திட்டக் குழு இல்லை. ஆனால் D.D.C. இருந்தது. அதாவது மாவட்ட வளர்ச்சி மன்றம் இருந்தது. ஆனால் இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு மாவட்ட வளர்ச்சி மன்றத்தை எடுத்துவிட்டார்கள். ஆனால் அதற்குப் பதிலாக திட்டக் குழுவை நியமிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இதுவரை



நியமிக்கப்படவில்லை. மாவட்ட வளர்ச்சி மன்றமும் கிடையாது. திட்டக் குழுவும் கிடையாது. இரண்டும் இல்லை என்றால் மாவட்டத்திலே எப்படி நிருவாகத்தை செயல்படுத்த முடியும் என்பதனை நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஏனென்றால், இது மிக முக்கியமான விஷயம். நீங்கள் அதிகாரத்தைத் தருவதற்குத் தயங்குகிறீர்கள் என்பது இதிலேயிருந்து தெளிவாகத் தெரிகிறது. (குறுக்கீடு) திட்டக் குழு பற்றி இன்றைக்கு அறிவிப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திட்டக் குழுவில் கூட, எல்லோருமே உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

முறபகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது நேரம் 10-10, அரை மணி நேரம் ஆகிவிட்டது. திரு. ஏ.ஜி. சம்பத்

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் நிறைய பேச வேண்டும். எனக்கு நஷ்டம் இல்லை. உங்களுக்குத்தான் நஷ்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு என்ன நஷ்டம்? திரு. ஏ.ஜி. சம்பத்.

**திரு. ஏ.ஜி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு இப்படி உட்கார்ந்துக்கொண்டே பேசுகிற வழக்கத்தை விட்டுவிடுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு, மூன்று விஷயங்கள் இருக்கின்றன. கொஞ்சம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் நான் சொன்னேன் இல்லையா? நீங்கள் முன்மாதிரி ஆகிவிடுவீர்கள். அப்புறம் பேச இருக்கிற 20 உறுப்பினர்களுக்குப் பேச வாய்ப்பே கிடைக்காது. நீங்கள் இன்னும் மிச்சம் வைத்திருப்பதை அடுத்து பேச இருக்கின்ற உங்களுடைய கட்சி உறுப்பினர்களிடம் சொல்லி பேசச் சொல்லுங்கள்.

**திரு. ச. அழகிரி:** சின்ன வாய்ப்புக் கொடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுத்துவிட்டேனே. நீங்கள் 9-40 மணிக்குப் பேச ஆரம்பித்தீர்கள், இப்போது என்ன நேரம் பாருங்கள்? திரு. ஏ.ஜி. சம்பத்.

*** திரு. ஏ.ஜி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி, கோரிக்கை எண் 48 -- குடிநீர் வழங்கல், கோரிக்கை எண் 49--நகராட்சி நிருவாகம் ஆகியவை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு என்னுடைய கருத்துகளை இந்த மாமன்றத்திலே தெரிவிப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை நல்கிய தங்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்து, சில கருத்துகளை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் கட்டில் ஏறுகின்ற நேரம் எதுவாக இருந்தாலும், குறிப்பாக 1989 ஆக இருந்தாலும், 1996 ஆக இருந்தாலும் இந்த ஆட்சிக் கட்டில் தலைவர் கலைஞர் அவர்களுக்கு ஒரு மலர் மஞ்சமாக இல்லாமல் முள் படுக்கையாகவே இருப்பதை நாமெல்லாம் நன்றாக அறிவோம். எனவே, முள் படுக்கையின்மீது அமர்ந்துவிட்ட காரணத்தால் கொஞ்சம்கூட முகம் சுளிக்காமல் தமிழக மக்களின் நலன் கருதி நல்ல திட்டங்களை எல்லாம் இந்த நாட்டுக்கு வழங்குகின்ற நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களை நான் மெத்தவும் பாராட்டுகின்றேன். தமிழக மக்களுக்காக நித்தம் நித்தம் உழைக்கின்ற மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பிலே கோடிக்கணக்கான நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனக்கு முன்னாலே தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உறுப்பினர் நண்பர் திரு. அழகிரி அவர்கள் பேசிய நேரத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்லியிலே போராடியாவது நிதியினைப் பெற்றுத் தர வேண்டும் என்று சொன்னார்கள். தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய நல்ல மதிப்பைப் பெற்ற அன்னை இந்திராகாந்தி அவர்கள் Emergency நேரத்திலே ஒன்றைச் சொன்னார்கள். "There is no substitute for hard work" 'கடின உழைப்பிற்கு ஈடு இணை எதுவும் இல்லை' என்று சொன்னார்கள். இப்போது தமிழ்நாட்டிலே கடின உழைப்பிற்கு இலக்கணமாக விளங்குகின்ற உன்னதமான தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர்



அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய கடின உழைப்பை இந்த மாமன்றத்திலே இங்கே எனக்கு முன்னாலே பேசிய திரு. அழகிரியாக இருந்தாலும் சரி அல்லது எதிர்க் கட்சித் தலைவராக இருந்தாலும் சரி, பாராட்டாத நேரமே கிடையாது என்பதை இந்த மாமன்றமே நன்றாக அறியும். இருந்தாலும், தற்போது திரு. அழகிரி அவர்கள் என்ன காரணத்தினால், எதை மனதில் வைத்து தமிழக முதல்வர் அவர்கள் டெல்லிக்குச் சென்று போராடியாவது நிதியினைப் பெற்றுத் தர வேண்டும் என்று சொன்னார் என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இயற்கையாகவே போர் குணம் படைத்தவர்கள். போராட்ட குணம் கொண்டவர்கள். அவருடைய விழி, அந்தப் புருவம் மேலே விளிக்கின்ற நேரத்திலே டெல்லி பட்டணத்திலே இருப்பவர்கள், அந்தப் புருவத்திற்குக்கூட எந்த அளவிற்கு மரியாதை கொடுக்கிறார்கள் என்பதை நாங்கள் எல்லாம் நன்றாக அறிவோம். எனவே, போர் குணம் கொண்ட நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ் மாநிலத்திற்குத் தேவையான நிதியினைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து நான் மெத்தவும் மகிழ்ச்சியடைகின்றேன். அதேபோல, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கொள்கை விளக்கப் புத்தகத்தை நான் படித்த நேரத்திலே, 1998-99 ஆம் ஆண்டு சாதனைகளை எல்லாம் ஒவ்வொன்றாகப் படித்து பார்த்தேன். படித்துப் பார்த்ததும், இவ்வளவு நல்ல காரியங்களை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்களே என்பதைப் பார்த்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. எனவே, அவருக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலே நல்ல பாராட்டுகளைத் தெரிவிப்பதிலே நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

அடுத்து, என்னுடைய தொகுதிப் பிரச்சினைகளை, பின்னால் விடுபட்டு போய்விடும் என்ற காரணத்தினால் முன்பாகவே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். முகையூர் ஒன்றியத்தில் 65 பஞ்சாயத்துகள் அடங்கியிருக்கின்றன. அந்த அளவிற்கு மிகப் பெரிய

ஒன்றியம். எங்களுடைய விழுப்புரம் மாவட்டத்திலேயே பெரிய ஒன்றியம் என்று சொல்லக்கூடிய அளவிலே இருப்பது முகையூர் ஒன்றியம். கிட்டத்தட்ட விழுப்புரத்திலேயிருந்து ஆரம்பித்து, திருவண்ணாமலை வரையிலே நீண்டு, விரிந்து, பரந்து இருப்பது முகையூர் ஒன்றியம். அந்த முகையூர் ஒன்றிய அலுவலகம் மனம்பூண்டியிலே இருக்கிறது. பெயர் முகையூர் ஒன்றியம்; ஆனால் அலுவலகங்கள் எல்லாம் மனம்பூண்டியிலே இருக்கின்றன. இது நிருவாகத்திலே சில கோளாறுகளை ஏற்படுத்துகின்றது. எனவே, பெரிய ஒன்றியமாக இருக்கின்ற எங்களுடைய முகையூர் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து முகையூர் ஒன்றியம் என்றும், மனம்பூண்டி ஒன்றியம் என்றும் இரண்டு ஒன்றியங்களாக அமைச்சர் அவர்கள் பிரித்துத் தர வேண்டுமென்று மிகத் தாழ்மையோடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-15*

அடுத்து மிகப் பெரிய அளவிலே இருக்கின்ற எங்களுடைய முகையூர் ஒன்றியத்திற்குத் தொகுப்பு வீடுகள் ஒதுக்குவதிலே சில குளறுபடிகள் எல்லாம் நேர்ந்திருக்கின்றன. நான் அமைச்சரவர்களிடத்திலே அப்படிப்பட்ட பிரச்சினைகளையெல்லாம் பற்றி ஏற்கெனவே நேரடியாக எழுத்து மூலமாகக் கொடுத்திருக்கின்றேன். அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கின்ற வகையிலே, தாழ்த்தப்பட்ட மக்களும், மிகவும் பின்தங்கிய மக்களும் வாழ்கின்ற அந்த முகையூர் ஒன்றியத்திற்குத் தொகுப்பு வீடுகள் கட்டுவதிலே அமைச்சரவர்கள் தயவுசெய்து ஈடுபட்டு எங்களுடைய தொகுதிக்கு முறையான ஒதுக்கீட்டினை வழங்க வேண்டுமென்று மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப்பற்றிச் சொல்லுகின்றபொழுது ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதல்வரவர்கள் இந்த மாமன்றத்திலே வைத்த நேரத்திலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் ஒரு கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மிக அற்புதமான திட்டம், இந்த மாநிலமே பாராட்டக்கூடிய மிக அற்புதமான திட்டம் என்று சொல்லிவிட்டு ஒன்றைச் சொன்னார்கள். இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை ஒரு தொகுதிக்கு இரண்டு என்று கொடுங்கள், இல்லையென்றால் ஒன்றியத்திற்கு ஒன்று வீதமாவது கொடுங்கள் என்று





இங்கே எனக்கு முன்னால் வீற்றிருக்கின்ற உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொன்னார்கள். அப்படிச் சொல்லுகின்ற நேரத்திலே மேலும் ஒரு கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள். 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. அதில் வேண்டுமானால், 5 இலட்சம் ரூபாயை, 6 இலட்சம் ரூபாயை குறைத்துக்கொண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை இரண்டு இடங்களில் வழங்க வேண்டுமென்று அன்றைக்கு அழகாகச் சொன்னார்கள். அவர்கள் கூறிய கருத்தை நான் வழிமொழியக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், நல்ல பணி நடக்கின்ற நேரத்திலே, சில சங்கடங்கள் கூடவே வருகின்றன.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கான இடத்தை இந்த ஆண்டு நாங்கள் தேர்ந்தெடுத்தபோது, எங்களுடைய இல்லங்களுக்குக் கிராமங்களிலேயிருந்து Tractor-களிலே வந்தார்கள், லாரிகளிலே வந்தார்கள், எங்கள் கிராமத்திற்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் வேண்டும் என்று வீட்டிற்கு வந்து முற்றுகையிட்டார்கள். எப்படியாவது இந்தத் திட்டத்தை எங்களுக்குத் தாருங்கள் என்று கேட்கிறார்கள். இந்த ஆண்டு வரை 5 கிராமங்களிலேயிருந்து நேரடியாக 1000-க்கும் மேற்பட்டவர்கள் வாகனங்களிலே வுந்து வீட்டிலே முற்றுகையிட்டு விட்டார்கள். எனவே, நல்ல திட்டத்தை வழங்குகின்ற நேரத்திலே, வேண்டுமானால் அந்தச் செலவினங்களை ரூபாய் 25 இலட்சம் என்பதை ரூபாய் 20 இலட்சமாகவோ அல்லது ரூபாய் 15 இலட்சமாகவோ அல்லது ரூபாய் 18 இலட்சமாகவோ குறைத்துக்கொண்டு 2 கிராமங்களுக்கு அதை வழங்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்தல் வருகின்ற காரணத்தினால் அறிவிக்க வேண்டுமென்ற அவசியம் கிடையாது. ஏனென்றால் நம்முடைய தலைவரவர்கள், அடுத்த தேர்தலைப்பற்றிக் கவலைப்படாத ஒரு தலைவர்; அடுத்த தலைமுறையைப் பற்றிக் கவலைப்படுகின்ற தலைவர். எனவே, அடுத்த தலைமுறையைப் பற்றிக் கவலைப்படுகின்ற தலைவர் அவர்கள், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை தயவுசெய்து ஒரு தொகுதிக்கு 2 அல்லது ஒன்றியத்திற்கு 1 என்றாவது தயவுசெய்து அறிவிக்க வேண்டுமென்ற எனனுடைய வேண்டுகோளை ஏற்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதோடு மட்டுமல்ல, நமக்கு நாமே திட்டத்திற்கு 10 கோடி ரூபாயை இங்கே ஒதுக்கியிருக்கிறார்கள். அதை நகர்ப்புறங்களுக்கும் வழங்க இருப்பதைப் பாராட்டுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூபாய் 50 இலட்சத்தை நம்முடைய முதல்வரவர்கள், நாம் இந்த ஆண்டு கேட்காமலேயே வழங்கியிருக்கின்றார்கள். அதற்காக நாம் அவருக்குப் பெரிதும் நன்றிக் கடன்பட்டிருக்கின்றோம். ஆனால், அப்படி வழங்குகின்ற அதேநேரத்தில் கூடவே ஒரு advice note-ம் எங்களுக்கு வந்திருக்கின்றது. எங்களுடைய மாவட்டத்திற்கு மட்டுமா அல்லது தமிழகம் முழுமையுமா என்று எனக்குத் தெரியவில்லை. 5 அல்லது 6 இடங்களில் Computer class room கட்டுவதற்காக நீங்கள் அந்த தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அறிவிப்பு அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலேயிருந்தும் ஒரு குறிப்பிட்ட தொகையை அந்தந்தத் தொகுதியிலே உள்ள மேல்நிலைப் பள்ளிகளுடைய கணிப்பொறி வகுப்பை நடத்துவதற்கான வகுப்பறைகள் கட்டுவதற்கு என்று அரசு அந்த நிதியை மொத்தமாக அந்தந்தத் தொகுதிக்கு உறுப்பினர் நிதியிலேயிருந்து ஒதுக்கி வழங்குகிறது. ஆகவே, உறுப்பினர்கள் அந்தப் பள்ளிக்கூடங்கள் எவையாக இருக்கலாம் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆலோசனை வழங்கினால் அந்தப் பள்ளிக்கூடங்களில் கட்டடம் கட்ட அந்த நிதி செலவிடப்படும்.

முற்பகல் 10-20

**திரு. ஏ.ஜி. சம்பத்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய ஆலோசனையை நான் ஏற்றுக்கொள்கிறேன். இருந்தாலும் அப்படி நாங்கள் அதை ஒத்துக்கொண்டு கடிதம் கொடுக்கின்ற நோத்திலே, என்னுடைய தொகுதியிலே மட்டும் கிட்டத்தட்ட 20 லட்சம் ரூபாய அதற்காகச் சென்றுவிட்டது. மிஞ்சியிருபபது 30 லட்சம் ரூபாய்தான். அந்த 30 லட்ச ரூபாயில் சில நல்ல திட்டங்களையெல்லாம் நாங்கள் வகுத்துக்கொண்டிருக்கிறபோது, பற்றாக்குறை ஏறபடுகிறது. எப்படி Budget-ல் பற்றாக்குறை ஏற்படுகின்றதோ.....

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகுதியில், அந்தப் பணம் செலவிடப்படுகின்ற காரணத்தால், அதுவும் உறுப்பினர் நிதியிலிருந்து



அந்தக் கட்டடம் கட்டப்படுவது என்பது அந்த உறுப்பினருக்குக் கிடைக்கும் பெருமையாகத்தான் அது கருதப்படும்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் கணினி வாங்குவது குறித்து.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உங்களுக்குத்தான் தனியாக வாய்ப்புக் கொடுக்கப்படுகிறதே, அப்புறம் என்ன? உட்காருங்கள். திரு. சம்பத்.

**திரு. ஏ.ஜி. சம்பத்:** சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூ.50 இலட்சம் ஒதுக்கிய நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டு, முடிந்தால், தயவுசெய்து மேலும் ஒரு 10 இலட்சம் ரூபாய் வழங்குமாறு வேண்டி விரும்பி நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, Employment Assurance Scheme-ல் உள்ள பிரச்சினையை இங்கே சொன்னார்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 11 நிமிடங்கள் ஆகிவிட்டன, விரைவில் பேசி முடியுங்கள்.

**திரு. ஏ.ஜி. சம்பத்:** 1999-2000 ஆம் ஆண்டுக்கான மாநில அரசின் பங்காக 47.60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மைய அரசு திட்டங்களை நிறைவேற்றுவதில் தற்போது சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. அதன் அடிப்படையில் மாவட்ட ஊராட்சிகள் மூலமாக அப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்களைக் கலந்துபேசி திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் இங்கே கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவித்திருக்கிறார்கள். அதாவது அந்த E.A.S. திட்டம் தொடங்குவதற்கு, M.P.-க்களுடைய ஆலோசனையைப் பெறவேண்டுமென்று மைய அரசு உத்தரவு போட்டிருப்பதாக இங்கே கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். என்னுடைய தாழ்மையான வேண்டுகோள், அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களை மறந்துவிட வேண்டாம். அதற்கு மறு ஆணை பிறப்பித்து, M.P.-க்களை சேர்த்து இருக்கிற வரிக்கு அடுத்த வரியில் M.L.A.-க்களையும் நீங்கள் தயவுசெய்து சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

10 லட்சம் கிணறு திட்டம் என்பது நாடே பாராட்டக்கூடிய ஒரு திட்டம். ஆனால் அதில் இருக்கிற பிரச்சினை என்னவென்றால், மின் இணைப்பு கிடைப்பதில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. கிணற்றை வெட்டி விடுகிறார்கள். ஆனால், மின் இணைப்பு கிடைப்பதில்லை. ஆகவே, அந்த மின் இணைப்பை வழங்குவதற்கு உடனடியாக நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக நாங்கள் பரிந்துரை செய்கிறபோது, வேண்டுமானால் ஆதிதிராவிட மக்களுக்கு மின் இணைப்புக் கொடுத்துவிடுகிறோம், மற்றவர்களுக்கு என்றால் இல்லை என்று சொல்கிறார்கள். இதனால் சாதிப் பிரச்சினைகள் போன்றவை உருவாகக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. எனவே, இணைப்பை வழங்குகிறபோது அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அந்த மின் இணைப்பு கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

குடிநீர் வழங்கல் வாரியம் பற்றி ஒரே ஒரு பிரச்சினை. சென்ற ஆண்டு நான் பேசுகின்றபோதுகூட, குடிநீர் வாரியத்தைப் பற்றி வெகுவாகப் பாராட்டிப் பேசினேன். இப்போதும் வாரியத்தைப் பாராட்டாத M.L.A.-க்களே இருக்க முடியாது. அதுவும் குறிப்பாக நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபிறகு, குடிநீர் வடிகால் வாரியம் எந்த அளவுக்கு ஓங்கி வளர்ந்து நிமிர்ந்து நிற்கிறது என்பதை நாடே பாராட்டுகிறது. என்னுடைய நண்பர் திரு. அழகிரி அவர்கள் பேசியபோதுகூட ஊரகக் குடிநீர்த் திட்டத்தை நிமிர்த்திய பெருமை இங்கே இருக்கிற அமைச்சரைச் சாரும் என்று சான்றிதழ் வழங்கியிருக்கின்றார்கள். எனவே, சான்றிதழ் வழங்கிய உறுப்பினர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் நான் சொல்ல வேண்டிய விஷயம் என்னவென்றால், விழுப்புரம் Division கொஞ்சம் sick ஆகிவிட்டது. அதை sick division என்றே நீங்கள் அறிவித்துவிடலாம்.....

**திரு. ச. அழகிரி:** நான் சான்றிதழ் வழங்கியிருக்கிறேன். அவர் குற்றச்சாட்டு சொல்கிறார். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுதான் தோழமைக்கு எடுத்துக்காட்டு. அதனால் பரவாயில்லை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் கோட்டம் sick ஆக இருந்தது உண்மைதான்.



நான் மறுக்கவில்லை. இப்போது அது தெளிவுற்று நடைபோட ஆரம்பித்துவிட்டது.

**திரு. ஏ.ஜி. சம்பத்:** அது உண்மைதான். தெளிவுற்று நடைபோட ஆரம்பித்தபோது சில நடைமுறைச் சிக்கல்கள் வந்திருக்கின்றன. நான் அமைச்சர் அவர்களிடத்திலே நேரடியாக அதை விளக்குவதற்குத் தயாராக இருக்கிறேன். ஏனென்றால் காற்றுக்கு அடுத்தபடியாக முக்கியமானது குடிநீர்தான். விழுப்புரம் கோட்டத்தில்தான் என்னுடைய தொகுதி முழுவதுமாக மாட்டிக்கொண்டு இருக்கிறது. வேறு ஒரு தொகுதியாக இருந்தால், கள்ளக்குறிச்சியோ, கடலூரோ இப்படி இருந்தால் நான் கவலைப்படப் போவதில்லை. அது என்னுடைய தொகுதிக்கு அப்பால் இருக்கிறது என்று விட்டுவிடலாம். அமைச்சர் அவர்கள் என்னுடைய வேண்டுகோளை ஏற்று சென்ற முறை 30 Tanks கட்ட உத்தரவு கொடுத்தார்கள். ஆனால் உண்மையில் அதை implement பண்ண ஆரம்பிக்கவில்லை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரத்தைப் பொறுத்தவரையில் ஓராண்டுகாலம் அனைத்துப் பணிகளுமே பல காரணங்களால் முடக்கப்பட்டு சரியில்லாமல் போய், நான்கு முறை நான் அந்த விழுப்புரம் மாவட்டத்திற்கு மட்டும் சென்று ஓரளவுக்குச் சில அதிகாரிகள் எல்லாம் மாற்றப்பட்டு, இப்போது வேகமாக, துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிச்சயமாகச் சொல்கிறேன், அவருக்கு நான் தந்திருக்கின்ற கடிதத்தில் குறிப்பிட்டிருப்பது, இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளும் பணி என்பதால் நிச்சயமாக எடுத்துக்கொள்கிறேன். கூடுமானவரையில் இந்த ஆண்டேகூட முடிக்கக்கூடிய பணிகள் அவருடைய தொகுதியில் இருக்கின்றன.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. ஏ.ஜி. சம்பத்:** சுருக்கமாகச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு, பேசுவதற்கு அதிக நேரம் கொடுத்தாகிவிட்டது, நீங்கள் உட்காருங்கள். திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று மிக முக்கியமான மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. மேலும், உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிக அதிகாரங்கள் வழங்குவதற்கு ஆய்வு செய்த குழுவின் பரிந்துரைகள்பற்றிய விஷயங்களையும் வெளிப்படுத்த வேண்டியதொரு கட்டாயம் இருக்கிறது. சொல்லவேண்டிய கருத்துகள் எல்லாவற்றையும் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் சொல்லி முடிக்க இயலாத ஒரு வேதனையை மட்டும் என்னால் வெளிப்படுத்த முடியும்.

இங்கே பிரச்சினைகள் பேசப்படுவது என்பது, மேலும் கூர் தீட்டுவதற்காக என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். எதிர்க் கட்சிகள் ஒரு சாணைக் கல்லுக்குரிய நிலையிலே இருந்துதான் ஆளுங்கட்சியின் கத்தியைக் கூர் தீட்டுகின்ற, மேலும் அவற்றைச் செழுமைப்படுத்துகின்ற முறையிலேதான் தங்கள் பங்களிப்பினைச் செலுத்துகின்றன. அந்த வகையிலேதான் இந்த விஷயத்திலும் நாங்கள் எங்கள் பங்கினைச் செலுத்த விரும்புகிறோம்.

இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் கடந்த மூன்று ஆண்டுகளில உண்மையிலேயே பல நல்ல விஷயங்களை மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. மனம் திறந்து பாராட்டுகிறேன். உண்மையில், உள்ளாட்சித் துறையில் இத்தகைய சில சாதனைகளைச் செய்ய இயலும் என்பதை, குறிப்பாக, குடிநீர் வழங்கு துறையில் அவர்கள் செய்துகாட்டியிருக்கிறார்கள் என்பது மனமகிழ்ச்சியோடு பாராட்ட வேண்டிய ஒரு விஷயமாகும். ஆனாலும், இருக்கிற சிலபல விஷயங்களைக் கோடிட்டுக்காட்டுவதன் மூலம் மேலும் தன்னுடைய செயல்திறனை உயர்ந்த மட்டத்திற்குக் கொண்டு செல்வதற்கு உதவும் என்ற முறையில் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

முதலில் நான் எடுத்துக்கொள்ள விரும்புவது, அதிக அதிகாரம் பற்றிய பிரச்சினையாகும். இது ஒரு, முடிவற்று, தொடர்ந்து விவாதிக்கப்பட்டு வருகின்ற பிரச்சினை. இங்கேகூட எனக்கு முன்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள்கூட, 73-வது அரசியல் சாசனத் திருத்தம் வந்ததற்குப் பின்னர் பல அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். ஆனால், நான் கருதுவது, அரசியல் சட்டத்தினுடைய 11-வது அட்டவணையின் 243(G) பிரிவில் சொல்லப்பட்டிருக்கின்ற 29 அதிகாரங்கள் உள்ளாட்சி



அமைப்புகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் முற்றிலும் மறுக்கிறேன். மத்தியச் சட்டமோ, மாநிலச் சட்டமோ அப்படி வழங்கவில்லை. மத்திய அரசும், மாநில அரசுகளும் தீர்மானிக்கின்ற விஷயங்களைச் செயல்படுத்துகின்ற ஒரு Agency-ஆகத்தான் உள்ளாட்சி அமைப்புகள் நடைமுறையில் செயல்படுகின்றன. ஆனால் Panchayat Raj சட்டத்தினுடைய சாராம்சம் என்னவென்று கேட்டால், உள்ளாட்சி அமைப்புகள் தன்னாட்சி அமைப்புகளாக, நடைமுறையில் இருக்கக்கூடிய உயிர்த் துடிப்போடு செயல்பட வேண்டுமென்றுதான் சட்டத்தை இயற்றியவர்கள் கருதினார்கள், கருதுகிறார்கள். இந்திய நாடெங்கிலும் இதுபற்றித்தான் பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன; விவாதிக்கப்படுகின்றன; தொடர்ந்து விவாதிக்கப்படும்.

இங்கேகூட, மாநில அரசு 29 பொறுப்புகளில், 26 பொறுப்புகளை உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கொடுத்திருக்கின்றன. தன்னாட்சி அமைப்பு என்றால் என்ன? சுயமாக அந்த விஷயங்களை மாற்றியமைக்கவோ, தீர்மானிக்கவோ, நிராகரிக்கவோ உரிமைகள் அவர்களுக்கு உண்டு. ஆனால், இந்த விஷயத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு, அத்தகைய உரிமைகள் இல்லை. எனவே, மதுதண்டவதே அவர்கள் சொன்னதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

உண்மையில் அதிகாரப் பரவல் என்ற சொல்லுக்கு அர்த்தம் கிடைக்க வேண்டுமானால், உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் தேவைகளுக்கு ஏற்பத் திட்டமிடுகிற பொறுப்புகளையும், திட்டமிடுகிற பொறுப்புகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான நிதி ஆதாரங்களைத் திரட்டிக்கொள்கின்ற அதிகாரத்தையும் வழங்குகின்றவரை அதிகாரப் பரவல் என்ற சொல்லுக்கு உயிர் இருக்காது. அதிகாரப் பரவல் என்ற சொல்லுக்கு உயிர் இருக்க வேண்டுமானால், உள்ளாட்சி அமைப்புகள் தாங்களே தீர்மானித்துக்கொள்கிற நிலையை உருவாக்க வேண்டும். இதுபற்றி விரிவாகச் சொல்வதற்கு விஷயங்கள் இருந்தாலும், காலம் இல்லை. நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அங்கே தீர்மானிப்பது யார்? கிராமத்தில் இருக்கிற மக்களின் தேவைகளைத் தீர்மானிக்கின்ற தகுதி படைத்த முழு உரிமையுள்ள நீதிபதிகள் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள்தான். அந்த உள்ளாட்சி அமைப்புகள் தாங்கள் தீர்மானிக்கின்ற விஷயங்களை இன்றைக்கும் செயல்படுத்த முடியாது, செயல்படுத்த வழியில்லை. பல பிரச்சினைகள் நிருவாக ரீதியாகத்

தடையாக இருக்கின்றன. இவற்றையெல்லாம் மாற்றியமைப்பதற்குரிய நடவடிக்கைகள் இன்னும் முழுமையடையவில்லை. முழுமையடைய வேண்டும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-30*

இதே அவையிலேகூட பேரறிஞர் அண்ணா அவர்கள், அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள்மீது ஆதிக்கம் செலுத்த அனுமதிப்பது ஜனநாயகத்திற்கு முரணானது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் குறிப்பிடவில்லை, அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரையில், இன்றைக்கும் என்ன நிலை ? உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளுக்கு அதிகாரம் இல்லை, அதிகாரிகளுக்குத்தான் அதிகாரம். அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்குவது ஜனநாயகத்தை கேலிக் கூத்தாக்குகிறது, ஜனநாயகத்தை உண்மையிலேயே சித்திரவதை செய்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு Elected Body-க்கு அதிகாரம் இல்லாமல் போனால் ஓர் அதிகாரிக்கு எப்படி அதிகாரம் வரும்? எப்படி வரலாம்? எப்படி வரக்கூடும்? வரக்கூடாது. எனவே நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது.....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இதில் கருத்து வேறுபாடு இல்லை. எந்த அதிகாரி, எந்த நிலையில், எப்போது தலையிட்டு எந்தப் பணியைத் தடுத்திருக்கிறார்? அதைத் தெரிவித்தால் அதை மாற்றுவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவரவர்களே, எனக்கு நேரம் வேறு குறைவாக இருக்கிறது. நான் நிறையப் பேசுவேன். நிறைய விஷயத்தை என்னால் சொல்ல முடியும். ஒன்றே ஒன்று, விஷயம் என்னவென்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்கிற விஷயத்திற்கு நான் தனிப்பட்ட முறையில் சொல்லிக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். இது மாநில அரசு சம்பந்தப்பட்ட விஷயமோ, ஏதோ இங்கே இருக்கிற ஒரு பிரச்சினை சம்பந்தப்பட்ட விஷயமோ அல்ல. இந்தியாவில் தேசிய விடுதலை இயக்க காலத்திலிருந்து இன்றுவரை சொல்லப்பட்டு வருகிற ஒரு விஷயத்தை வலியுறுத்துகிறேன். அதனால்தான் நான் அதற்கு அழுத்தம் கொடுத்தேனே தவிர, குறை சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல. அதை மேலும்



செழுமைப்படுத்த வேண்டும் என்ற அக்கறையில்தான் குறிப்பிடுகிறேன் என்பதைச் சொல்லி, எனக்கு இதுகுறித்து நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன, அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். இப்போதும் டெல்லியில் 80% மாநில அரசிடம் 20% அதிகாரம் இருக்கிறது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு single percent அதிகாரம் இருக்கிறது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு single percent அதிகாரம்கூட கிடையாது, இதை நான் நிரூபிக்கத் தயார், இதுபற்றி விவாதிப்பதற்குத் தயார்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்காக அவருடைய நிருவாகத்திலே அவர்கள் படுகிற கஷ்டத்தில் 50% முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார், அதற்காக மனதார நாம் வாழ்த்தலாம். அப்படி இருக்கும்போது ஓர் அதிகாரம்கூட கொடுக்கப்படவில்லை என்றால், இந்த அவையிலே அதை நான் ஏற்றுக்கொள்வது என்பது நியாயமாகாது என்று நான் கருதுகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். வருடத்திற்கு நான்கு முறை கிராம சபையை நடத்த வேண்டுமென்று ஓர் அதிகாரம் வழங்கப்பட்டு இருக்கிறது. கிராம சபையை நடத்த வேண்டுமென்றால் என்ன தெரியுமா? பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்களைத் தாங்களே சிலுவையில் அறைந்து கொள்வதாகப் பொருள், செத்து செத்துப் பிழைக்கிறார்கள்.

**• மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம மக்கள் சபையைவிட உயர்ந்த ஜனநாயக அமைப்பு உலகத்திலே வேறு எதுவாக இருக்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகள் கட்டப்படுகின்றன. இதுவரையில் இல்லாத வகையில் மாநில அரசு 50% நிதியை ஒதுக்கியிருக்கிறது. இந்தியாவில் மத்திய அரசாங்கம் தருகிற நிதியோடு சேர்த்து பாதி நிதியைக் கொடுத்து உதவுகிற ஒரே மாநிலம் தமிழ் மாநிலம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆனால் அப்படிக் கட்டப்படுகின்ற அந்த வீடுகளில் என்னுடைய சொந்த மாவட்டத்தில், திருவாரூரில் ஒரு கிராமத்தில், இரண்டு ஆதிதிராவிடர்களுக்கும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒருவருக்கும், அதேபோல

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒருவருக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுக்க என்னால் முடியவில்லை. அவர்களைத் தேர்வு செய்ய ஊராட்சி மன்றத் தலைவர் மறுத்த காரணத்தால், இதை சட்டமன்ற உறுப்பினர்களால் செய்ய முடியவில்லை. இந்தத் துறையை ஏற்றிருக்கிற அமைச்சரால் செய்ய முடியவில்லை, திருவாரூர் மாவட்டத்திலேயே முடியவில்லை. இப்போது யாருக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை மட்டும் தாங்கள் சொன்னால் நான் மகிழ்ச்சி அடைவேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவரவர்களே, நான் சொல்கிற விஷயத்தை எப்போதுமே நீங்கள் முழுமையாகக் கேட்டுவிட்டு பதில் அளிப்பது பொருத்தமானதாகும். நான் இன்னும் முழுமையாகச் சொல்லவே இல்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், கிராம சபையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அரைகுறையாகச் சொல்லும்போதே இவ்வளவு எதிர்ப்பு வரும்போது, நீங்கள் முழுமையாகச் சொன்னால் எவ்வளவு எதிர்ப்பு இருக்கும்? நான் எவ்வளவு நேரம் உங்களைப் பேச விடுவது?

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவரவர்களே நான் என்ன சொல்ல வந்தேன் என்றால், கிராம சபை என்பது குறித்து பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டதை நான் முழுக்க ஒப்புக்கொள்கிறேன். அதுதான் ஜனநாயகத்தினுடைய சல்லிவேர். அதை நான் மறுக்கவே இல்லை. ஆனால் அந்த ஜனநாயக உரிமையை நிலை நாட்ட முயல்கிறபோது, அவர்களுக்கு ஏற்படுகிற பிரசவ வேதனையை நான் வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு இருக்கிறது.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகம் என்பதே பிரசவ வேதனைதான் (சிரிப்பு)

முற்பகல் 10-35

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவரவர்களே, கிராம சபையிலே என்ன வேதனை என்றால், வாயால் பேசுவதற்கு உரிமை



வழங்கப்பட்டுவிட்டது. ஆனால் வயிற்றுக்குப் பட்டினி போடப்பட்டு விட்டது. அதனால்தான் பிரச்சினை. நிறைய கருத்துகளைச் சொல்லலாம் என்று கிராம மக்களைக் கூட்டிவைத்து சொல்கிற உரிமை வழங்கப்பட்டு விட்டது. ஆனால் சொல்லப்படுகிற விஷயத்தை நிறைவேற்றுகிற பொறுப்புக்கு நிதி இடையூறாக அமைந்து விடுகிறது.

முதல்முறை நடக்கின்ற கிராம சபையிலே அவர்கள் கோரிக்கை வைக்கிறார்கள். எங்களுக்கு இன்னென்ன வசதிகள் வேண்டுமென்று வைக்கிறார்கள். அடுத்த பொது மக்கள் தலைவரிடம் கோரிக்கை வைக்கிறார்கள். அடுத்த முறை தலைவர் போகிறபோது, அவர் அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற முடியாத நிலைமை. அதற்கு அடுத்த முறை கிராம சபை நடக்கின்றபோது அந்தத் தலைவர் அஞ்சி அஞ்சி சாகிறார். கிராம சபையைக் கூட்டுவதற்கே அஞ்சுகிறார். ஏனென்றால் நான் போன முறை சொன்னேனே, என்ன ஆயிற்று என்ற கேள்விகளுக்கு பதில் அளிக்கவே முடியவில்லை. எனவே நான் கேட்க விரும்புவது வாய்க்கு சுதந்திரத்தைக் கொடுத்துவிட்டு, வயிற்றை சிறை வைக்காதீர்கள். வயிற்றுக்கு சிறை வைத்தால் வாய்க்குக் கொடுக்கிற சுதந்திரத்திற்குப் பொருள் கிடைக்காது. எனவே சொல்கிற உரிமையை வழங்குகிற நாம் அவற்றைச் செயல்படுத்துவதற்காக நிதியையும், நிதியைப் பயன்படுத்திக் கொள்கிற அதிகாரத்தையும் தர வேண்டுமென்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் இந்த விஷயத்தில் உள்ளே போனால் நிறைய பிரச்சினைகள் வந்துவிடக்கூடும். ஆகவே இந்த விஷயத்திற்குள்ளே நான் போக விரும்பவில்லை. ஆனால் பேராசிரியர் அவர்கள் சொன்ன கருத்தில் நான் மாறுபடவில்லை. அந்த ஜனநாயக உரிமை காப்பாற்றப்பட வேண்டும். எனவே, நான் வேறு விஷயத்திற்குப் போய்விடுகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு விஷயம், layout approval. நகராட்சி நிருவாகத்தில் நான் குறை காணவில்லை. அமைச்சருடைய அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அமைச்சருடைய நடவடிக்கையில் என்முனை அளவுகூட குறை காணவில்லை. அவர்களுடைய வேகம் ரொம்பவும் சிறப்பானது. அதைப்போல, அந்தத் துறையைச் சேர்ந்த அரசச் செயலாளர்களிடமும் நான் குறை காணவில்லை. முதலமைச்சர் அவர்கள்கூட அதிகாரிகளைச் சாடுவது, சுப்பராயனுக்கு அதிரசம் சாப்பிடுவது மாதிரி என்று குறிப்பிட்டார்கள்.

ஆனால், இன்றையதினம் நான் அதிரசம் சாப்பிட விரும்பவில்லை. ஏனென்றால், இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் உண்மையிலேயே சிறப்பாகத்தான் செயல்படுகிறார்கள் என்பதால், நான் அவர்களையும் அமைச்சர் அவர்களோடு சேர்த்துப் பாராட்ட விரும்புகிறேன். அவர்களின் செயல்பாடுகள் உண்மையிலேயே தேவைகளை நிறைவேற்றுவதில் அக்கறை செலுத்துகின்றன. அதில் குறிப்பான சில விஷயங்களைக் குறிப்பிட்டு முடித்துவிடுகிறேன்.

முதலாவது Pump Operators பிரச்சினை ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கிறது. 46,000 பேர் தமிழ்நாடு முழுவதும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பிரச்சினைகளிலே, அரசுத் துறைகளிலே முரண்பாடுகள் ஏற்படுகின்றன என்பதற்காக நான் குறிப்பிட விரும்புகிறேன். நிதித் துறை ஆணை போடுகிறது, நிதித் துறையின் ஆணையை மறுத்து உள்ளாட்சித் துறை மறு ஆணை போடுகிறது. இது ஒரு முரண்பட்ட நிலை. ஒரே ஒரு உதாரணம் என்னவென்றால், 6-வது ஊதியக் குழு அடிப்படையில் 1-1-1996 முதல் உள்ளாட்சித் துறையில் பணியாற்றும் Pump Operators-க்கு 515 ரூபாய் என்றும், Sweepers-க்கு 666 ரூபாய் என்றும் அரசு ஆணை பிறப்பித்தது. இதை முதலமைச்சர் துறை பிறப்பித்தது. நம்முடைய மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களின் துறை, முதலமைச்சரின் துறை 666 ரூபாய் என்று போட்டதை 300 ஆகக் குறைத்து ஆணை போடுகிறது. ஓர் அரசு இரண்டு முரண்பட்ட ஆணைகளைப் போடுவது பொருத்தமானதுதானா, போடலாமா, இது நீடிக்கலாமா என்பதை மாநில அரசு சிந்திக்க வேண்டும். 825 ரூபாய் bonus கொடுக்க வேண்டுமென்று முதலமைச்சரின் துறை, நிதித் துறை ஆணை போடுகிறது. 825 ரூபாய் bonus கொடுங்கள் என்பதை உள்ளாட்சித் துறை அமைச்சர் 825 ரூபாய் அல்ல, 300 ரூபாய்தான் கொடுக்க வேண்டுமென்று ஆணை போடுகிறார்கள். ஏன் இப்படிப்பட்ட முரண்பட்ட ஆணைகள் அரசுத் துறைகளில் வருகின்றன என்பதைச் சிந்திக்க வேண்டும் என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முரண்பட்ட இரண்டு ஆணைகளைப் போடுவதற்கு அதிகாரமே எனக்கு இல்லை. முதலமைச்சர் இட்ட ஆணையை



மறுத்துப் போடுகின்ற உரிமை மற்ற அமைச்சர்களுக்குக் கிடையாது. இது அதை நடைமுறைப்படுத்துவதில் என்ன பிரச்சினை இருக்கிறது? இது சம்பந்தமாக, நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. நேற்றுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதித் துறை செயலாளர் அவர்களை வைத்துக்கொண்டு, இதுபற்றிப் பேசினார்கள். ஓரளவுக்கு நிதித் துறையில் ஒரு முடிவு ஏற்பட்ட பிறகு, நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் மறுபடியும் உட்கார்ந்து பேசலாம் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அதன்படி நிச்சயமாகச் செய்யக் காத்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, என்ன விஷயம் என்று சொன்னால், 1977-ஆம் ஆண்டு 243 ரூபாய் குறைந்தபட்ச சம்பளம் வழங்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. 100 ரூபாய்தான் வழங்கி வந்தார்கள். இதை எதிர்த்து Labour Court-ல் முறையீடு செய்ய, Labour Court-ல் இருந்து இவ்வளவு ரூபாய் இவர்களுக்கு arrears கொடுக்க வேண்டுமென்று Award வந்துவிட்டது. அவற்றை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு யாருக்கு இருக்கிறது என்றால் அந்த பஞ்சாயத்திற்கு இருக்கிறது. ஆனால் என்ன பிரச்சினை தெரியுமா, Labour Court-க்குப் போய் Award வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தால், அவற்றை நிறைவேற்றுகிற அதிகாரி யார் தெரியுமா? மாவட்ட ஆட்சித் தலைவர். கொடுக்கக்கூடிய அதிகாரி மாவட்ட ஆட்சித் தலைவர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் ஊராட்சி ஒன்றியத்தில் வேலை பார்த்தவர்கள். அந்த அதிகாரம் பூராவும் பஞ்சாயத்துக்கு ஒப்படைக்கப்பட்டுவிட்டது. அப்படி ஒப்படைக்கப்பட்ட காரணத்தால் ஊராட்சி ஒன்றியத்தில் அவர்களை வைத்துக்கொள்வதற்கு இவர்கள் விரும்பவில்லை. அதுகுறித்து வேறு என்ன செய்வது என்று பரிசீலித்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில் நீதிமன்றத்திற்குச் சென்று இருக்கிறார்கள். வழக்கு அங்கே நடந்து கொண்டிருக்கிறது. அதுபற்றி விவாதிக்கக்கூடாது என்பது என் அபிப்பிராயம். வழக்கு முடிவுற்ற பிறகு என்ன நியாயமோ, அதை முதலமைச்சர் அவர்கள் செய்து கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்று அறிவித்து இருக்கிறார்கள். அதுபற்றி உள்ளே போக வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி அவற்றை விட்டுவிட்டேன். அடுத்த விஷயத்திற்குப் போய்விடுகிறேன். அத்திக்கடவு-அவினாசி திட்டம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் புன்னகைக்கிறார்கள். அது நல்ல புன்னகையாகத்தான் இருக்கும் என்று நம்புகிறேன். என்ன என்றால், அத்திக்கடவு-அவினாசி திட்டம் என்பது இதே பேரவை மண்டபத்தில் அமர்ந்திருக்கின்ற 7 சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகள் சம்பந்தப்பட்ட ஒரு விஷயம். 10 ஊராட்சி ஒன்றியங்கள் சம்பந்தப்பட்ட ஒரு விஷயம். 30 இலட்சம் மக்களுடைய ஜீவாதாரப் பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வர வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் எப்படி இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. எழுந்து எந்த விஷயத்தையும் சொல்லிவிட வேண்டாம் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், 30 இலட்சம் பேர் சம்பந்தப்பட்டது. நிலத்தடி நீர் மட்டம் கோவை மாவட்டத்தில் கீழ் இறங்கிப் போய்விட்டது. 1000 அடியிலே 1200 அடியிலேகூட தண்ணீர் இல்லை. பவானி ஆற்றிலே வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்றபோது அந்த வெள்ளப் பெருக்கு பவானி ஆற்றங்கரையிலே இருக்கக்கூடிய வாழைத் தோப்புகளையெல்லாம் சர்வநாசப்படுத்தி விடுகிறது. அந்த வெள்ளப் பெருக்கில் பயிர்களுக்கு வெள்ளச் சேதம் வராமலேயும், அதே நேரத்தில் வீணாகின்ற நீரை வாய்க்கால் வழியாகச் செலுத்தி, குளம், குட்டைகளில் தேக்குவதன் மூலம் நிலத்தடி நீர் மட்டம் உயரும் என்பதால் இந்தத் திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இப்போது, காவிரி நீர் பிரச்சினை இருக்கின்ற காரணத்தினால் நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. ஆனால், இந்த விஷயத்தை....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, மூன்று முறை முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, அவர்கள் விவசாயிகளை அழைத்து வைத்து, ஏதாவது ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று மனம் திறந்து என்னிடத்தில் பலமுறை அவர்கள் தெரிவித்தும், பொதுப் பணித் துறை அளித்த அறிக்கையின் பேரில் பரிசீலிக்கின்றபோது, குடிநீருக்காக என்று வந்தால் நிச்சயமாக அந்தப் பகுதிகளுக்கு குடிநீர் கொடுப்பதற்கான திட்டம் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். நிச்சயமாக அதைப் பரிசீலிப்பதில் எந்தவிதமான தவறும் இல்லை. ஆனால்,



30 ஆண்டுகாலக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு 30 ஆண்டு காலத்தில் இரண்டு முறைதான் வெள்ளமே வந்திருக்கிறது. வெள்ளம் வந்தால் மூன்று மாதங்களுக்குமேல் தண்ணீர் தங்குவதற்கான வாய்ப்பு அங்கு இல்லை. அப்படி இல்லாதபோது, நிலத்தடி நீர் உருவாகும் என்பதை நம்பி, அந்தக் காரியத்தில் ஈடுபடக்கூடிய சூழ்நிலையை, நம்பிக்கையை பொதுப் பணித் துறையும் தெரிவிக்கவில்லை. குடிநீரும் அதற்காக தனியாக எடுக்கக்கூடிய சூழ்நிலையும் இல்லை. இதற்கு அப்பால், காவிரி நீர்ப் பங்கீடு பற்றிய பிரச்சினையில் சற்று தயக்கம் காட்ட வேண்டிய சூழ்நிலையும் அதில் வருகிறது. எனவே, கலந்தாய்வு நிறுவனத்தைக் கலந்து, அதற்காக பரிசீலிக்கச் செய்து, உண்மையிலேயே அவர்கள் அதை ஒப்புக்கொள்வார்களானால் அதைப்பற்றிப் பரிசீலிக்கப்படும் என்று முதலமைச்சரும் தெரிவித்திருக்கிறார்கள். நானும் அதை இங்கே அவையிலே தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போன முறையும் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இரண்டே நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன். முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அந்த 7 சட்டமன்ற உறுப்பினர்களையும், 10 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும் அழைத்துப்பேசி, ஒருமித்த கருத்தை உருவாக்குவது பொருத்தம். எனவே, அதற்கான முயற்சியை மாநில அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு மிக முக்கியமான பிரச்சினை. கிராம சபையினுடைய எழுத்தர்கள் சம்பந்தப்பட்ட விஷயம். 31 ஆவணங்களை அவர்கள் பராமரிக்கின்றார்கள். 31 ஆவணங்களைப் பராமரிக்கின்ற அந்த எழுத்தர்களுக்குச் சம்பளம் 450-லிருந்து 650 வரைக்கும்தான் வழங்கப்படுகிறது. அவர்களின் வேலைகள் நிரந்தரமானது. ஆனால், அவர்கள் தற்காலிகமானவர்கள். பஞ்சாயத்து நிரந்தரமாக இருக்கும், பஞ்சாயத்து [illegible] மட்டும் தற்காலிகமாக இருக்கிறார்கள். இது ஒன்றுக்கொன்று முரண்பாடாகத் தெரிகிறது. இது நல்லதல்ல. எனவே, நான் இங்கே தெரிவிக்க விரும்புவது, தயவுசெய்து, 31 ஆவணங்களைப் பராமரிக்கக்கூடிய அந்த எழுத்தர்களை நிரந்தரமாக்குவதற்கும், அவர்களுக்குக் காலமுறை ஊதியம் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய கோவை மாநகராட்சியிலே ஒரு சாதாரண நபர் மாநிலத்திற்கே challange ஆக இருந்து கொண்டிருக்கிறார். அந்த மாநகராட்சியே ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அவரை எந்த மாற்றமும் செய்ய முடியவில்லை. Town Planning Inspector ** அவருடைய வருமானத்திற்கு மேல் சொத்துகளைச் சேர்த்து, மாநில அரசு நிருவாகத்திற்கே ஒரு சவாலாக இன்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

அதுபற்றிய விரிவான புகார்களை துறையைச் சார்ந்த செயலாளரிடமும் நான் கொடுத்திருக்கின்றேன். இதுபற்றி மாநகராட்சியில் தீர்மானமும் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் நடவடிக்கை இல்லை. அவரை மாநகராட்சியிலேயிருந்து பிற இடங்களுக்கு transfer செய்வதற்கு உரிய முறையில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையென்றால் சிக்கல் ஆகிவிடும் என்பதைச் சொல்லி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஒரு மரபு இருக்கிறது. நீங்கள் அந்த Town Planning Section-ல் வேலை பார்க்கின்ற ஒருவர் என்று சொல்லுங்கள். பெயர் சொல்கின்ற மரபு இல்லை.

**திரு. கே. சுப்பராயன்:** அந்தப் பெயரை நீக்கிவிடலாம். அந்தப் பிரச்சினையில் அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டு, நிறைவாக ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன். நகரங்களில் இப்போது இருக்கின்ற ஜீவாதாரமான பிரச்சினை, அதில் இவ்வளவு சிறப்பாக பணியாற்றுகிற நகராட்சி நிருவாகத்தைச் சார்ந்த அமைச்சர் அவர்களின், அந்தத் துறையைச் சார்ந்த செயலாளர் அவர்களின் பார்வையில் ஏன் இது இன்னும் படவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு) இன்னும் சொல்லவேயில்லை என்ன பிரச்சினை என்று. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், Unapproved Lay-outs என்பது தமிழ்நாட்டில் ஒரு பெரும் பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. Unapproved Lay-outs உருவாவதற்கு அந்த Unapproved Lay-outs-ல் இருக்கின்ற பொது ஜனங்கள் காரணம் அல்ல. அதிகாரிகளின் ஊழல் சிந்தனையும், ஊழல் சிந்தனையில் வயப்படுத்திக்கொண்டு இருக்கக்கூடிய lay-outs போடுகிறவர்களும் செய்த தவறு காரணமாக குற்றவாளிகள் தப்பித்துக்கொண்டார்கள். Unapproved Lay-outs-ல் உள்ள site-ஐ விற்றுவிட்டு தப்பிவிட்டார்கள். அங்கு குடியிருக்கிற நிரபராதிகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தண்டிக்கப்பட்டு வருகிறார்கள். அவர்களுக்கு சாக்கடை வசதி இல்லை, விளக்கு வசதி இல்லை, பிற அடிப்படை வசதிகள் இல்லை என்ற நிலை இருக்கிறது. எனவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, தயவுசெய்து இதுவரையிலும் Unapproved Lay-outs ஆக இருப்பதை approve செய்வது என்று ஒரு Special ஆணை வெளியிடுங்கள். இனிமேல தமிழகத்தில் எந்த இடத்திலும் Unapproved lay-outs உருவாகாமல் இருப்பதற்காக, பத்திரப் பதிவுத் துறையிலேயே, approved lay-outs ஆக இருந்தால்தான் கிரயம் செய்யப்படும் என்ற முறையில் பத்திரப் பதிவுச் சட்டத்தில் பொருத்தமான திருத்தத்தைக் கொண்டு வந்துவிட்டால், Unapproved lay-outs என்பது எதிர்காலத்தில் உருவாகாது எனவே, இந்த விஷயத்தை அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேரவைத் தலைவர் அவர்கள் அடிக்கடி மணி பார்த்துக்கொண்டிருப்பதால் மற்ற விஷயங்களை அமைச்சரிடம் நேரிலே கொடுத்துவிடுகிறேன் என்று தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு விஷயம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சென்ற ஆண்டே உள்ளாட்சித் துறை அமைச்சருக்குச் சொன்னேன். நீங்கள் ஒவ்வோர் உறுப்பினருக்கும் இப்போதே பதில் சொன்னீர்கள் என்றால், கடைசியாக அரைமணி நேரம்தான் உங்களுக்குக் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கொடுக்காவிட்டால்கூடப் பரவாயில்லை; இந்த ஒன்றுக்கு மட்டும் பதில் சொல்லிவிடுகிறேன்; வேறு எதற்கும் எழுந்திருக்கவேயில்லை. அதாவது, குறை என்பது எல்லாத் தரப்புகளிலும் உண்டு. ஆனால், ஒரு வழிபாகவே. அந்த மக்கள் என்ன செய்வார்கள் அவர்களுக்கு எப்படித் தெரியும் என்று அதை மட்டும் மறைப்பது தவறு. இப்படியெல்லாம் சாலை இல்லை, குடிக்கத் தண்ணீர் இல்லை; இங்கே போடுகிறார்களே, இந்த மனையை வாங்கலாமா; இதை வாங்கினால் மற்ற பணிகள் நடக்குமா என்பது தெரியாமல் அவர்கள் அத்தனைபேரும் வாங்கி இருக்கிறார்கள் என்பதை மனதார என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், எப்படி இருந்தாலும், தவறு இரண்டுபுறமும் இருந்தாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களிடத்திலே அதைப்பற்றித் தெரிவித்து இருக்கிறேன்; அவரும் ஒரு நல்ல முறையைச் சொல்லி இருக்கிறார்; அதைப்பற்றி நிச்சயமாக நடவடிக்கை எடுக்கிறேன்.

## 3. விதி 110-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை

**அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனப் பணிகளில் தற்போதுள்ள இடஒதுக்கீடு இனச்சுழற்சி முறையில் நியமனம் செய்வதுபற்றி ஆராய்ந்த குழுக்கள் அளித்த பரிந்துரைகள் மீதான அரசு முடிவுகள் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரின் அறிக்கை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையை பேரவைக்கு அளிக்க அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை சட்டசபையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாக்கல் செய்தபொழுது பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:-

“ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோரை அரசுத் துறைப் பணிகளிலும், அரசு நிறுவனப் பணிகளிலும் பணி நியமனம் செய்வது பற்றி இரு துறைகளின் குழுக்களால் ஆராயப்பட்டு, அக்குழுக்களின் அறிக்கைகள் அரசுக்கு அளிக்கப்பட்டுள்ளன. இவற்றை அமைச்சர்கள், அத்துறைகளின் செயலாளர்கள் கொண்ட குழு பரிசீலித்து வருகிறது. அக்குழு தரும் பரிந்துரையின் அடிப்படையில் முடிவினை அரசு அறிவிக்கும்” என்பதாக நேற்றையதினம் முதல்வர் அவர்கள் அறிவித்தவாறு அமைச்சரவை கூடி எடுத்த முடிவை இந்த அறிக்கை மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

7-6-1971 ஆம் நாளிட்ட சமூக நலத் துறையின் அரசாணை எண் 695-ன்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 16 விழுக்காட்டிலிருந்து 18 விழுக்காடாகவும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 25 விழுக்காட்டிலிருந்து 31 விழுக்காடாகவும் உயர்த்தி இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.





1-2-1980 ஆம் நாளிட்ட சமூக நலத் துறை அரசாணை எண் 73-ன்படி பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு 31 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

28-3-1989 ஆம் நாளிட்ட பிற்படுத்தப்பட்டோர் நலன், சத்துணவு மற்றும் சமூக நலத் துறையின் அரசாணை எண் 242-ன்படி மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு 20 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.

22-6-1990 ஆம் நாளிட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அரசாணை எண் 1090-ன்படி ஆதி திராவிடர்களுக்கு 18 விழுக்காடு இட ஒதுக்கீடும், பழங்குடியினருக்கு 1 விழுக்காடு இட ஒதுக்கீடும் வழங்கி ஆணையிடப்பட்டது.

இந்த அரசு 27-7-1989 ஆம் நாளிட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் அரசாணை (நிலை) எண் 1352 மற்றும் 21-8-1989 நாளிட்ட பிற்படுத்தப்பட்டோர் நலன், சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத் துறையின் அரசாணை (நிலை) எண் 731-ல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் ஆகிய இனத்தவர்களுக்கு நேரடி நியமனங்களில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டு நிரப்பப்படாமல் உள்ள காலி பணியிடங்களை இட ஒதுக்கீட்டிலிருந்து நீக்கும் முறையைத் தடை செய்து ஆணையிடப்பட்டது.

முற்பகல் 10-50

அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர் மரபினர் ஆகியோருக்கு இட ஒதுக்கீடு குறித்து ஆய்வு செய்ய ஆதி திராவிடர் நலத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்களின் தலைமையின் கீழ் இரண்டு உயர்நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அக்குழுக்களின் அறிக்கைகளை அமைச்சரவை ஆய்வு செய்தது. இப்பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஓர் அமைச்சரவைத் துணைக் குழு அமைத்து அப்பரிந்துரைகளைப் பரிசீலனை செய்யலாம் என்று அமைச்சரவை முடிவு செய்தது. இந்த அமைச்சரவைத் துணைக் குழு அளித்த பரிந்துரைகள் 11-5-1999 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டு, பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன:

பத்தும் அதற் குமேலும் எண்ணிக்கை உள்ள பணிநிலை பிரிவுகளுக்கு மட்டும் இட ஒதுக்கீடு பின்பற்றவேண்டும் என்று தற்போதுள்ள விதியை மாற்றி ஒன்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கை உள்ள பணிநிலை பிரிவுகளுக்கும் இட ஒதுக்கீட்டு முறையை அமல்படுத்தலாம்; இவ்விட ஒதுக்கீட்டு முறையை நடப்பிலுள்ள இனச்சுழற்சி அடிப்படையில் கடைப்பிடிக்கலாம் என்றும்;

பணிமாறுதல் முறை மூலம் நியமனங்களில் நிரப்பப்படாத பணியிடங்களை முன்கொணர் முறையை (carry forward) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உள்ளதுபோல் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினருக்கும் விரிவுபடுத்தலாம்; நேரடி நியமன முறையில் தற்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு உள்ள முன்கொணர் முறையை (carry forward) பிற்படுத்தப்பட்டோருக்கும் விரிவுபடுத்தலாம் என்றும்;

தற்பொழுது நடைமுறையிலுள்ள பணிகளுக்கு பணிமாறுதல் முறை நியமனத்தில் இட ஒதுக்கீடு கடைப்பிடிக்கப்பட்டு வரும் முறையை மற்ற பணிகளுக்கும் விரிவுபடுத்த மேலும் பரிசீலிக்கலாம் என்றும்;

இட ஒதுக்கீட்டு முறையை பல்கலைக்கழகங்கள்/தலைமை கூட்டுறவு நிறுவனங்கள்/வங்கிகள்/மாவட்ட மத்தியக் கூட்டுறவு நிறுவனங்கள்/வங்கிகள்/பொதுத் துறை நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தலாம் என்றும்;

ஒதுக்கீட்டுக்குரிய எந்த ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் பணி நியமனத் தேர்வு பெறுவதற்குரிய மதிப்பெண்களைப் பெறத் தவறினால் வேறு பிரிவினரை தேர்வு செய்வதைத் தவிர்த்து அடிப்படைத் தகுதிகளை அப்படியே வைத்துக்கொண்டு, அவர்கள் தேர்வு பெற ஏற்ற வகையில் தகுதிக்குரிய மதிப்பெண்கள் குறைக்கப்பட வேண்டும் என்றும்;

1-4-1989 முதல் ஒவ்வொரு பதவியிலும் நிரப்பப்படாமல் உள்ள பின்னடைவுப் பணியிடங்களை முன்கொணர்ந்து (Carry forward) அவைகளைத் தற்பொழுது நிரப்புவது சிரமமாக இருப்பினும், 1-4-1989 முதல் முன்கொணரப்பட்ட பின்னடைவுப் பணியிடங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் இல்லையெனில் எத்தனை



பணியிடங்கள் குறைகின்றனவோ, அப்பணியிடங்களை ஒவ்வொரு பதவியிலும் கணக்கில்கொண்டு அத்துறையிலுள்ள நுழைவுப் பதவியில் (Entry Level Post) படிப்படியாக ஐந்தாண்டு காலத்திற்குள் நியமனம் செய்யலாம் என்றும்;

எங்கெல்லாம் இட ஒதுக்கீட்டு முறை வகை செய்யப்பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம இனச்சுழற்சி முறையை சரியாகக் கடைபிடிக்காத நியமன அதிகாரிகள் மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17(பி)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து கடுந்தண்டனை வழங்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

## 2. மானியக் கோரிக்கைகள் 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

**(அ) கோரிக்கை எண் 27 — ஊரக வளர்ச்சி**

**(ஆ) கோரிக்கை எண் 48 — குடிநீர் வழங்கல்**

**(இ) கோரிக்கை எண் 43 – நகராட்சி நிருவாகம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் தொடர்கிறது. திரு. பி. இராசமாணிக்கம்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் உள்ளாட்சி அமைப்புப் பற்றிய மானியக் கோரிக்கையிலே சில கருத்துகளை எடுத்து வைக்கின்ற ஓர் அரிய வாய்ப்பைத் தந்தமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்

முற்பகல் 10-55

மக்களாட்சியில் கிராம ஊராட்சிகளே ஓர் அடித்தள அமைப்பு என்றும், அவைகளை வலுவுள்ள அமைப்புகளாக மாற்றினால்தான் நமது ஜனநாயக அமைப்பு உறுதியானதாகவும், உயிர்த்துடிப்புள்ளதாகவும் இருக்கும் என்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கை வழியில் நடக்கிற இந்த ஆட்சியில் நம்முடைய மாண்புமிகு முதல்வர்

அவர்கள் சொல்வதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம் என்ற உன்னதமான கொள்கை அடிப்படையில் கிராம மக்களுடைய அடிப்படைத் தேவைகளான குடிக்கத் தண்ணீர், படிக்கப் பள்ளி, பார்க்க வெளிச்சம், நடக்கப் பாதை, இருக்க வீடு, உயிர் காக்கச் சுகாதாரம் என்ற அடிப்படைக் கொள்கைகளை முன்னிலைப்படுத்தி கிராம மக்களுடைய நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறது. அந்த அடிப்படையில்தான் இப்போது இந்தியாவிலேயே முதல் மாநிலமாக, முன்னோடி மாநிலமாக அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் தொகுதியில் ஓர் ஊராட்சியைத் தேர்ந்தெடுத்து, அந்த ஊராட்சியினுடைய அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றி வைத்து, ஒரு முன்மாதிரி கிராமம் என்று சொல்கிற அளவுக்கு இப்போது அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பொதுமக்களிடம் பெரிய வரவேற்பைப் பெற்று, பாராட்டைப் பெற்று நிறைவேற்றப்பட்டு வருகிறது.

அதைப்போல, பெரியார் நினைவு சமத்துவபுரம். இந்தத் திட்டமும் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் சிறப்பாக நடைபெற்று வருகிறது சாதியின் பெயரால், மதத்தின் பெயரால், கடவுளின் பெயரால் இந்த நாட்டில் சட்டம்-ஒழுங்கை சீர்கெடுக்கிற ஒரு சூழ்நிலையை மாற்றுகிற வகையில் இப்போது பெரியார் நினைவு சமத்துவபுர திட்டம் தமிழகத்திலே நடைபெற்று வருகிறது.

அதைப்போலத்தான் 'நமக்கு நாமே' திட்டம். இந்த 'நமக்கு நாமே' திட்டத்திற்கு பெரிய வரவேற்பே உண்டு. ஒரு வரலாறும் உண்டு. கடந்த கால ஆட்சியில் ஊழலின் ஊற்றுக்கண்ணாக இருந்த உள்ளாட்சித் துறையில் இப்போது பொதுமக்களும் பங்கேற்கலாம் என்ற அளவுக்கு ஒரு தூய்மையான நிருவாகத்தை நடத்த வேண்டுமென்ற அடிப்படையில்தான் 'நமக்கு நாமே' திட்டப் பணிகள் பல்வேறு ஊராட்சிகளில், பொதுமக்களுடைய ஒத்துழைப்போடும், பொதுமக்களுடைய மேற்பார்வையோடும் சிறப்பாக நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்து வருகிறது. அதைப்போல, கிராம மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுகிற வகையில் மத்திய அரசினுடைய ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், வேலை உறுதியளிப்புத் திட்டம், இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம் போன்ற பணிகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன.



மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி இங்கே பேசினார்கள். கடந்தகால சட்டமன்ற வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் இங்கே பேசுகின்ற உறுப்பினர்கள் தங்களுடைய முதல் கோரிக்கையாக குடிநீர்ப் பிரச்சினைப்பற்றிய கோரிக்கையைத்தான் வைப்பார்கள். இது கடந்த கால வரலாறு. எந்த உறுப்பினர்கள் எழுந்து பேசினாலும் எங்களுடைய பகுதியில், எங்களுடைய தொகுதியில், எங்களுடைய கிராமத்தில் குடிக்கத் தண்ணீர் இல்லை என்று தான் கடந்தகாலத்தில் பேசியிருக்கிறார்கள். ஆனால் கடந்த 3 ஆண்டு காலத்தில் தமிழகத்தில் ஒரு மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. எல்லா கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும் என்ற உயர்ந்த திட்டத்தை நம்முடைய முதல்வர் அவர்களும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அறிவித்து, அதை ஏற்று இப்போது தமிழகத்தில் குடிநீர்ப் பிரச்சினை இல்லை என்று சொல்கிற அளவுக்கு ஒரு நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். அந்த அளவில்தான் கடந்த 3 ஆண்டு காலத்தில் 36,179 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தமிழகத்தில் குடிநீர்ப் பஞ்சம் இல்லை என்று சொல்கிற அளவுக்கு நிலைமைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

அடுத்து நம்முடைய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சருடைய தீவிர முயற்சியால் உருவான ஊராட்சி ஒன்றியச் சாலைகள் எல்லாம் தார்ச் சாலைகளாக மாற்றப்பட வேண்டும் என்கிற திட்டம், இந்தத் திட்டம் ஓர் அருமையான திட்டம். கடந்த 3 ஆண்டு காலத்தில் 14,784 கிலோ மீட்டர் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தார்ச் சாலைகளாகப் போடப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 11-00

ஒரு கிராமத்துக் குடிமகன், தன்னுடைய வீட்டைவிட்டு வெளியே காலடி வைக்கும்போது, தார்ச் சாலையிலே அடி வைக்கிறான். அவன் சற்று தூரம் தள்ளி 10 அடி சென்றால், ஒரு பாதுகாக்கப்பட்ட மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அங்கே கட்டப்பட்டு வருகிறது. மேலும் 10 அடி தூரம் சென்றால், பள்ளிக்கூடம்; நியாயவிலைக் கடை. இன்னும் சற்று தள்ளிச் சென்றால் சத்துணவுக் கூடம்; ஊட்டச் சத்து மையம். இன்னும் 10 அடி தள்ளிச் சென்றால் தொகுப்பு வீடுகள். இவையெல்லாம் இப்போது கிராமத்திலே நடைபெறுகிற பணிகள். ஒரு காலத்திலே 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று

சொன்னார்கள். இப்போது நிலைமை, தார்ச் சாலை இல்லாத ஊரில், பள்ளிக் கட்டடம் இல்லாத ஊரில், நியாய விலைக் கடை இல்லாத ஊரில், மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று சொல்கிற அளவுக்கு, கிராமங்கள் எல்லாம் தன்னிறைவு பெறுமளவுக்கு பல்வேறு திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் சொல்கிற அதிகாரங்கள் எல்லாம் என்னென்ன என்று எனக்குப் புரியவில்லை. இப்போது, ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு 70 விழுக்காடு நிதியாதாரம் வழங்கப்பட்டு வருகிறது. அவர்கள் எந்தத் திட்டத்தை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். அரசாங்கம் நியாயவிலைக் கடைக்கான கட்டடம் கட்டிக் கொடுக்கிறது. அரசாங்கம் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டிக் கொடுக்கிறது. அரசாங்கம், தார்ச்சாலை அமைத்துக் கொடுக்கிறது. ஊராட்சி மன்றத் தலைவர்கள் செய்ய வேண்டிய பணிகள் என்ன? பல்வேறு, சாதாரண மண்சாலைகளை கப்பிச் சாலைகளாக ஆக்குகிற ஒரே பணிதான். அதுபோதும்.

அரசாங்கம் பல்வேறு திட்டங்களைத் தீட்டி அரசு நிதி வழங்குகிற நேரத்தில், அதற்கு அதிகாரம் இல்லை என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள்கூடச் சொன்னார்கள். வாயிலே அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு, வயிற்றிலே ஒன்றும் இல்லை என்று. இப்போது ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியில் 70 விழுக்காடு அளவுக்கு அவர்கள் எதை வேண்டுமானாலும், செய்து கொள்ளலாம்; திட்டமிட்டுக்கொள்ளலாம். அதேபோல், உடனடித் தேவைக்கு 500 ரூபாய் எடுத்துக்கொள்ளலாம். அதேபோல், மதிப்பீடு இல்லாமல், ஊராட்சி மன்றத் தலைவர்கள் ரூபாய் 2,000 பணம் எடுத்து, செலவு செய்வதற்கு அதிகாரம் இருக்கிறது. அதேபோல், குடிநீர்க் குழாய்கள் பழுதுபட்டால், விசைப் பம்புகள் பழுதுபட்டால், ஓராண்டிற்கு 7000 ரூபாய் வரை மதிப்பீடே இல்லாமல் செலவு செய்வதற்கு அதிகாரம் இருக்கிறது எந்த அதிகாரம் கேட்கிறார்கள் என்று தெரியவில்லை. ஊராட்சிக்கு ஒரு குளம் வெட்டவேண்டுமென்றால் ஊராட்சி மன்றத் தலைவரே அந்தப் பணியைச் செய்யலாம், செய்து கொண்டிருக்கிறார்கள். தார்ச்சாலை போடுகிறார்கள். கப்பிச் சாலை போடுகிறார்கள். தொகுப்பு வீடுகள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் கட்டுகிறார்கள். ஏன் அதிகாரம்



இல்லை? இருக்கிற அதிகாரத்தை முறையாக ஊராட்சி மன்றத் தலைவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

I.R.D.P. கடனை ஒரு பயனாளி வாங்க, சட்டமன்ற உறுப்பினரால் பரிந்துரை செய்யப்பட்டும், அதை ஊராட்சி மன்றத் தலைவரால் செய்ய முடியவில்லை, செய்ய விரும்பவில்லை என்று இங்கே சொன்னார்கள். ஓராண்டிற்கு 15 பேர், 20 பேர்களுக்கு வழங்குகிறார்கள். ஆனால் முழு அதிகாரமும் அந்த ஊராட்சி மன்றத் தலைவருக்குத்தான், 60 ஆயிரம் பேர், 70 ஆயிரம் பேர் வாக்களித்து வெற்றிபெற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பரிந்துரை செய்வதற்கு அந்த அதிகாரம் இல்லை. நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட இங்கே சொன்னார்கள். தன்னுடைய மாவட்டத்தில் 2 பேர்களுக்குக்கூட வீடு கட்டிக் கொடுக்க முடியவில்லை என்று. பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கிற மாபெரும் அதிகாரம் அந்தந்த ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு இருக்கிறது. அதுதான் அண்ணல் காந்தியடிகள் கண்ட கிராம ராஜ்யம்; சுய ராஜ்யம் இப்போது உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் முழு அதிகாரத்தோடு பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணிகள் எல்லாம் செம்மையாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வருவது, சில இடங்களில் 5 ஆயிரம் மக்கள் தொகை, 6 ஆயிரம் மக்கள் தொகை இன்னும் சொல்லப்போனால், 10 கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட பெரிய ஊராட்சிகள் எல்லாம் இருக்கின்றன; அவற்றையெல்லாம் நீங்கள், பொதுமக்களுடைய நலன் கருதி, இரண்டு ஊராட்சிகளாக அல்லது 3 ஊராட்சிகளாகப் பிரிப்பதற்கு முடிவு செய்து, அதுபற்றி இந்த அவையிலே அறிவிக்க வேண்டுமென்று உங்களைத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கிராமங்கள்தோறும் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகள் கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள். அவற்றிற்கு Jet Motors வழங்கி வருகிறீர்கள். சில இடங்களில் இருக்கிற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழங்குகிற Jet Motors-க்குப் பதிலாக நீர்மூழ்கி மோட்டார்களைப் பயன்படுத்தினால், கொஞ்சம் அரைகுறையாக உள்ள குடிநீர்ப்

பிரச்சினையும் முழுவதுமாக தீர்க்கப்பட்டுவிடும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு மாதத்திற்கு முன்பே இதுகுறித்து ஓர் அறிவுரையே வழங்கியிருக்கின்றோம். குறிப்பாக, இதுபோன்ற நீர்மூழ்கி மோட்டார் போட்டால்தான் தண்ணீர் கடைசிவரை கிடைக்கும் என்ற நிலையிருந்தால், எங்களைக் கேட்காமல், அவர்களுக்கு இருக்கிற அதிகாரத்திற்கு உட்பட்டே அதைச் செய்யலாம் என்று நாங்கள் உத்தரவிட்டிருக்கிறோம். அப்படிச் செய்யாவிட்டால், அது தேவையற்ற செலவாகிவிடும் என்பதற்காகத்தான் சில இடங்களில் அப்படியே இருக்கலாம். அது உண்மையாக இருந்தால், நிச்சயமாகச் செய்து கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** இப்போதுதான் பேச ஆரம்பித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போதுதான் பேச ஆரம்பித்தீர்களா?

**திரு. பி. இராசமாணிக்கம்:** நம்முடைய ஊராட்சிகளில் பல இடங்களில் மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. அத்தகைய மருத்துவமனைகளில் மருத்துவர்கள் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் நிரப்பிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இப்போது ஊராட்சி ஒன்றியங்களில் கிட்டத்தட்ட ரூ. 5 கோடி அளவிற்கு திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பல இடங்களில் அலுவலர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் உடனடியாக நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டு ஒன்றியப் பொறியாளர்கள் இருக்கிறார்கள். பணிச் சுமை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், மேலும் ஒரு பொறியாளரை நியமித்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் கிட்டத்தட்ட 12,000 மக்கள் நலப் பணியாளர்களை நியமனம் செய்து, அவர்களுக்குத் தொகுப்பு ஊதியமாக மாதம் ரூ. 750 வழங்கியிருக்கிறீர்கள். உள்ளபடியே அதனை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம். மேலும் அவர்களை அரசு ஊழியர்களாக்கி நிரந்தரப்படுத்திட வேண்டுமென்பதை இந்த நேரத்தில் நான் முதலமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல, நீண்ட காலமாக பேரூராட்சிகளில் N.M.R. என்று சொல்லப்படுகின்ற தற்காலிகப் பணியாளர்கள் இருந்து வருகிறார்கள். அவர்களையும் நிரந்தரப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு இடங்களில் சிறு சிறு கிராமங்களை இணைக்கின்ற வகையில் நடைப் பாலங்களையும், வண்டிப் பாலங்களையும் உள்ளாட்சித் துறை மூலமாக அமைத்துத்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு இடங்களில் தார்ச் சாலை அமைக்கின்ற பணி முற்றுப்பெறுகின்ற நிலையிலே இருந்தாலும், மண் சாலைகள் சில கிராமங்களில் இருக்கின்றன. எனவே, அவற்றையெல்லாம் கப்பிச் சாலைகளாக மாற்றித் தரக்கூடிய வகையில் ஓர் அறிவிப்பினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினை இருக்கிறது. நீடாமங்கலம் பேரூராட்சிக்கு ஒரு பேருந்து நிலையம் கட்ட வேண்டுமென்று நான் முன்மொழிய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தஞ்சை மாவட்டத்திலே இருந்துகொண்டு, தொகுதிப் பிரச்சினையைப்பற்றி, நீங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் இங்கேதான் பேச வேண்டுமா? அமைச்சர் அறைக்குப் போய் பேசிக்கொள்ளுங்கள் திருமதி ஏ.ஆர். வேடம்மாள்.

**திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் கலந்து கொண்டு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களை வணங்கி சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன். இந்தியாவிற்கே வழிகாட்டும் இடமாக உள்ளாட்சித் துறையில் புதுமைகளையும், புதிய சாதனைகளையும் நமது கழக அரசு செய்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது மாண்புமிகு முதலமைச்சர், தலைவர் கலைஞர் அவர்கள் எண்ணத்தில் உதித்தவைதான் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பெரியார் சமத்துவபுரத் திட்டம், கலைஞரின் நமக்கு நாமே திட்டம் ஆகியவை. இவை மூன்றும் உள்ளாட்சித் துறையின் முத்தான மூன்று திட்டங்களாக, தலைவரின் பெருமையினைத் தமிழகமெங்கும் கூறி வருகிறது என்பதை இந்த நல்ல நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நாடு முழுவதும், பட்டி தொட்டிகளிலும், பணிகளைப் பார்வையிட்டு, பொது மக்களும், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும், சட்டமன்ற உறுப்பினர்களும் பாராட்டி மகிழும் வண்ணம், இப்போது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பெரும் பணியாற்றி வருகின்றார்கள் என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்வதோடு, என்னுடைய தொகுதிக்கு வருகை தந்து பல திட்டங்களை உடனே நிறைவேற்றித் தந்து, மக்களின் குறைகளைப் போக்கிய அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஊராட்சி சொந்த நிதியில் நிறைவேற்றப்படும் பணிகள் குறித்து ஊராட்சிகளே முடிவு எடுத்துக் கொள்ளவும், ஏனைய அரசு திட்டப் பணிகளை ஊராட்சி மூலம் செயல்படுத்தும்போது, மாநில அரசின் பிரதிநிதியாக, சம்பந்தப்பட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினரைக் கலந்து அல்லது அவர்களை உறுப்பினராகக் கொண்ட குழு அமைத்து, திட்டப் பணிகளைத் தேர்வு செய்து நிறைவேற்றி, அனைத்துத் திட்டங்களையும் சரியான முறையில் செயல்படுத்தி, பொது



மக்களைச் சென்று அடைய இப்போது வாய்ப்பு உள்ளது. குறிப்பாக, பயனாளிகளைத் தேர்வு செய்யும் அனைத்து திட்டங்களும், குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகக் கட்டப்படும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணிகளைச் செயல்படுத்துவதற்கு முன்பாக சட்டமன்ற உறுப்பினர் வட்டார வளர்ச்சி அலுவலர் போன்றவர்களின் ஆலோசனைகளைப்பெற்று அவ்வப்போது தேவைப்படும் கிராமங்களுக்கு பணிகளை ஒதுக்கீடு செய்வது என்பது பொதுமக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க ஏதுவாக இருக்கும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றவுடன், மாண்புமிகு தமிழக முதல்வரும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், பல்வேறு திட்டங்களை வழங்கியிருக்கிறார்கள். தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக கிராமப்புறங்களில் சாலை வசதிகளை நிரந்தரமாக உருவாக்கித்தரும் பொருட்டு 15 முதல் 20 கிலோமீட்டர் வரை புதிய தார்ச் சாலைகள் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும், ஒவ்வோர் ஆண்டும் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தத் தார்ச் சாலைகளைப் பராமரிக்கும் பொருட்டு தேவையான சாலைப் பணியாளர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் நியமிக்கப்படுவதில்லை. இதனால், பாதைகளில் பழுது ஏற்படுவதோடு உடனடியாக பராமரிப்புச் செய்ய இயலாத சூழ்நிலையும் உள்ளது. மேற்கொண்டு முழுமையாகப் பராமரிக்க அதிகமான செலவையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. போதுமான நிதி வசதி இல்லாததால் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, நெடுஞ்சாலைத் துறை மூலம் சாலைகளைப் பராமரிக்க சாலைப் பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அதேபோன்று ஊராட்சி ஒன்றியங்களிலும் சாலைகளைப் பராமரிக்க உதவும் சாலைப் பணியாளர்களை நியமித்து [illegible] வேண்டுமென்று [illegible] கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சிகளில் மின் கட்டண பாக்கி நீண்ட நாட்களாக உள்ளது. மக்கள் பிரதிநிதிகள் வந்தவுடன் தெரு விளக்குப் போட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ஆனால் மின்சார வாரியம், மின் இணைப்புத் தர மறுக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி நிதியிலிருந்து மின்சார தெரு விளக்குகள் போட வேண்டி உள்ளது. ஆகவே,

வாரியம் ஊராட்சிகளிடம் இருந்து உறுதிக் கடிதம் பெற்றுக்கொண்டு மின் இணைப்பு வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நமது தலைவர் அவர்கள் கொண்டு வந்துள்ளார்கள். மக்களிடையே மிகுந்த எதிர்பார்ப்பையும், பாராட்டையும் பெற்றுள்ள இந்தத் திட்டத்தை ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு இரண்டு ஊராட்சிகள் வீதம் ஒவ்வோர் ஆண்டும தேர்வு செய்து, தன்னிறைவுப் பெற்ற கிராமங்களாக மாற்றிட ஆணையிட வேண்டுமென்று நான் இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஊராட்சிகள் மூலமாக தேர்வு செய்யப்படும் தொகுப்பு வீடுகள், I.R.D.P. கடன் உதவி, ஜீவன்தாரா கிணறுகள் போன்றவற்றுக்கான பயனாளிகளைத் தேர்வு செய்யும்போது ஊராட்சித் தலைவர்கள், அவர்கள் இஷ்டத்திற்குத் தேர்வு செய்துவிடுகிறார்கள். எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்குச் செல்லும்போது பொதுமக்கள் எங்களுக்கு ஒரு வீடு வேண்டும், கிணறு வேண்டும் என்று கேட்டால், ஒருவருக்குக்கூட சட்டமன்ற உறுப்பினர்களால் கடன்பெற்றுத்தர முடியவில்லையே என்ற குறைபாடுகளை எடுத்து வைக்கிறார்கள். இந்த நிலையைப் போக்க வேண்டுமானால், மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர், ஊராட்சித் தலைவர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று அமைத்து பயனாளிகளைத் தேர்வு செய்தால்தான், சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களின் கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்ற முடியும் என்று சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக இங்கே கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நகராட்சி, பேரூராட்சி போன்றவைகளில் திட்டங்களை நிறைவேற்ற நமது அரசு ஏராளமான நிதியினை ஒதுக்குகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாநிலம் முழுவதும் சென்று வந்து திட்டங்களை நிறைவேற்ற உழைக்கிறார்கள். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களை நகராட்சி நிருவாகம் மதித்திட, ஆண்டுத் திட்டங்கள் வரையறை செய்யும்போது, சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்துகொண்டு செய்திட வேண்டுமென்று அறிவுறுத்திட நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



ஊராட்சிகளில் உதவியாளர்கள், எழுத்தர்கள் போன்றவர்கள் பகுதி நேர ஊழியர்களாகவே பணிபுரிந்து வருகின்றனர். அவர்களை முழு நேர ஊழியர்களாக நிலை உயர்த்த வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு அவர்களுடைய இஷ்டத்திற்குத்தான் அந்தப் பகுதி நேர எழுத்தர்களைப் பயன்படுத்துகிறார்கள். அந்த நிலை மாற வேண்டுமானால், வட்டார வளர்ச்சி அலுவலர்களின் கட்டுப்பாட்டில் இவர்களைக் கொண்டு வந்தால், இவர்கள் எவ்விதமான இடையூறும் இல்லாமல் தங்கள் பணிகளைத் தொடர்ந்து செய்வார்கள் என்பதை இந்த நல்ல நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

ஊராட்சிகளில் செயல்பட்டு வரும் குடிநீர் ஆதாரங்களுக்கு, ஊராட்சி மன்றங்களின் மூலம் பொருள்கள் பெறப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கைப்பம்ப் பொருத்துநர் மூலம் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இச்செயல் முறையில் கைப்பம்ப் பொருத்துநர்களுக்கு சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்கள் போதிய ஒத்துழைப்புத் தருவதில்லை. அதனால் பொதுமக்களுக்கு உரிய காலத்தில் குடிநீர் வசதிகள் செய்து தர முடியாத சூழ்நிலையுள்ளது. எனவே, ஆழ்துளைக் கிணறுகள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் போன்றவைகளைப் பராமரிக்கும் பணியை ஒன்றியத்தின் மூலமே செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். பல ஊராட்சிகளில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் மேற்கண்ட பணிகளை ஊராட்சிகள் நேரடியாக நிவர்த்தி செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பதவி என்பது மக்களுக்குத் தொண்டாற்றுவதற்காகத்தான் என்பதை முக்கிய குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். நம்மை யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்ற அலட்சியப் போக்கைத் தடுக்கவும், உள்ளாட்சித் துறையில் ஒரு கட்டுப்பாடு, ஒரு பய உணர்ச்சி, மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற பொறுப்புணர்ச்சி போன்றவை வர வேண்டுமானால் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரும் சட்டம் நிறைவேற வேண்டும். இதைக் கொண்டுவந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திருமதி ஏ.ஆர். வேடம்மாள்] 

கிராமங்களில் கட்டப்படுகின்ற தொகுப்பு வீடுகளைப்போல பேரூராட்சிகளிலும் தொகுப்பு வீடுகளைக் கட்டித்தர வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளில் குடியிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தொகுப்பு வீடுகளோ, I.R.D.P. கடன் வசதிகளோ செய்து தர முடியாத காரணத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் அனைவரும் பதில் சொல்ல முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் எடுத்துக்கூறி, பேரூராட்சிப் பகுதிகளுக்கும் தொகுப்பு வீடுகளையும், I.R.D.P. கடன் வசதிகளையும் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளின் சார்பாகப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, கடந்த ஆட்சிக் காலத்தில் தொகுப்பு வீடுகள் சரிவரக் கட்டித்தரப்படாததால் பழுதடைந்து மக்கள் குடியிருக்க மிகவும் கஷ்டப்படுகிறார்கள். என்னுடைய தொகுதி முழுக்க இந்த நிலை உள்ளது. தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களால் பழுது பார்த்துக்கொள்ளக்கூட முடியாத சூழ்நிலை உள்ளது. அவர்கள் போதிய நிதி வசதியில்லாமல் உள்ளார்கள். எனவே, இந்த வீடுகளைப் புதுப்பித்துத் தர நமது அரசு தனியாக நிதி ஒதுக்கித் தந்து ஆவன செய்திட வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பெண்கள் போன்றவர்களின் குறைகளைப் போக்கிட உண்மையாய் பாடுபட்டுவரும் நமது தலைவர் அவர்கள் தமிழ்நாட்டில் பெண்கள் முன்னேறப் பல திட்டங்களைத் தந்துள்ளார்கள். குறிப்பாக உள்ளாட்சித் தேர்தலில் தாழ்த்தப்பட்டவர்களும் பெண்களும் பதவிக்கு வர வேண்டுமென்று 33 சதவிகித இடங்களை ஒதுக்கித் தந்து புரட்சி செய்தவர் நமது கழகத் தலைவர் அவர்கள். அதற்காக தாய்க்குலத்தின் சார்பாக தலைவர் அவர்களுக்கு நன்றியினைக் கூறிக்கொள்கிறேன். இறுதியாக எனது தொகுதிக்கு உள்ளாட்சித் துறை மூலம் பல பணிகளைச் செய்து தந்துள்ள மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைக் கூறி முடிக்கிறேன், வணக்கம்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை, குடிநீர் வழங்கல் போன்ற மானியக் கோரிக்கைகளின்மீது எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில பொதுவான கருத்துகளையும், கோரிக்கைகளையும் முன் வைக்க விரும்புகிறேன்.

உள்ளாட்சித் தேர்தல் முறையில் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களைப் பொதுமக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் விதத்தில் Panchayat Raj சட்டத்திலே, மத்திய அரசின் சட்டத்திலே திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று மாநில அரசு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சொக்கர்:** Sir, Point of clarification. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது மிக முக்கியமான கருத்தாக இருப்பதால், அதில் ஒரு தெளிவுரை பெற விரும்புகிறேன். ஏனென்றால் எங்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் பேசும்போது மத்திய அரசு சட்டத்திலே மூன்றடுக்கு முறைதான் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த மூன்றடுக்கு முறைக்கு உட்பட்டு மாநில அரசுகள் எப்படி வேண்டுமானாலும் தேர்தல் முறையை வைத்துக்கொள்ளலாம் என்பது ஒரு கருத்து. அதாவது, Panchayat Board Member, Union-லே Member ஆக இருக்க வேண்டும், Union Member, direct ஆக elect ஆகி District Board-க்கு வர வேண்டும், என்பதுபோல இருக்கிறது. அது அப்படித்தானா? இல்லையென்றால் மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல மத்திய அரசுச் சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டுமா என்பதிலே விளக்கம் பெற விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் வரும்போதே, அதுபற்றிக் கருத்துகளைத் தங்க கட்சிகளிலே ஒன்று திராவிட முன்னேற்றக் கழகம். பெங்களூரில் இதுபற்றி ஒரு மாநாடு போட்டு விவாதித்தபோது அழுத்தம் திருத்தமாக எங்களுடைய கருத்துகளைத் தெரிவித்திருக்கிறோம். இன்றைக்கு நீங்கள் காமராசர் ஆட்சி என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், காமராசர் ஆட்சி அடிப்படையிலேயிருந்து அன்றைக்கு அவருடைய கருத்தின்படி அமைக்கப்பட்ட அந்த முறைதான் பஞ்சாயத்திலே இருக்க வேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்து. (மேசையைத்

தட்டும் ஒலி) ராஜீவ் காந்திக்கு யாரோ தவறாகச் சில யோசனைகளைச் சொல்லி, அந்த 'மணி' அடித்த காரணத்தால் ராஜீவ் காந்தி அவர்கள் அதைக் கேட்டு ஒரு புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தினார். அதுதான் இந்த மூன்று அடுக்கு என்பதாகும். இந்த மூன்று அடுக்கில் ஓர் அடுக்கு திரிசங்கு சொர்க்கம்போல தொங்கிக்கொண்டிருக்கிறது. அதற்குத் தொடர்பே கிடையாது. தனியாக தொங்கிக் கொண்டிருக்கிறது. அது எங்கே விழும், எங்கே போய் சாயும் என்றே தெரியாத ஓர் அடுக்காக இருக்கிறது.

முற்பகல் 11-20

பெருந்தலைவர் காமராசர் காலத்திலே இந்தச் சமூக நலத் திட்டம் எப்படி இருந்தது என்றால், பஞ்சாயத்து, ஒன்றியம், மாவட்டங்களிலே D.D.C. என்ற அந்த அளவிலே இருந்தது. அதுதான் ஏற்றுக்கொள்ளத்தக்க முறை என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் அழுத்தந்திருத்தமாகப் பலமுறை சொல்லியிருக்கிறது. ஆனால், ஏதோ ராஜீவ் காந்தி மீதுள்ள கோபத்தால் அப்படிச் சொல்கிறோம், ராஜீவ் காந்தியினுடைய கருத்தை எதிர்க்க வேண்டும் என்பதற்காக அப்படிச் சொல்கிறோம் என்ற முறையிலேதான் அன்றைக்கு வாதிடப்பட்டதே தவிர, யாரும் உண்மையை உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை. இப்போதும் தமிழகத்தைப் பொறுத்தவரையிலேயாவது ஏற்கெனவே, பெருந்தலைவர் காமராசர் காலத்திலேயிருந்த அதே முறை வர வேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணம். அந்த அடிப்படையிலேதான் இந்தப் பஞ்சாயத்து ராஜ்யம் இருந்திட வேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அழுத்தந்திருத்தமான கருத்து. ஆனாலும் இடையிலே ஏற்பட்டிருக்கிற இந்த மூன்று அடுக்கு முறையிலே என்னென்ன செய்துகொள்ளலாம் என்பதைப் பற்றித்தான் இப்போது விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஏதோ வந்தது வந்தாகிவிட்டது. அதற்குள்ளே எந்த அளவிற்கு மக்களாட்சி நடைபெறுவதற்கு நாம் ஒத்துழைக்கலாம்; எந்த வகையிலே அதற்கான திருத்தங்களைத் தரலாம். விதிகளை வழங்கலாம் என்றுதான் இப்போது நாம் பேசிக்கொண்டிருக்கிறோம்.

**திரு. ஆர். சொக்கர்:** Sir, Point of clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Clarification கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பிறகும், அடுத்த Clarification வேண்டுமா?



**திரு. ஆர். சொக்கர்:** முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன முக்கியமான பிரச்சினை? அதை உங்களுடைய கட்சி உறுப்பினரிடம் சொல்லி, பேசச் சொல்லுங்கள். திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துதான் எங்களுடைய கருத்தும். எங்களுக்கு அதிலே மாற்றுக் கருத்து கிடையாது. இரண்டு அடுக்கு சிறந்த முறைதான் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், இப்போது மூன்று அடுக்கு முறை, அரசமைப்புச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிறகு, அதனை ஒழுங்குபடுத்துவதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. மூன்று அடுக்கு முறையை ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக ஆக்கக்கூடிய ஆற்றல் நமக்கு இருக்கிறது. அதற்குச் சட்டத்திலே இடம் இருக்கிறது. உதாரணமாக ஊராட்சி மன்றத் தலைவர் ஒன்றியக் குழுவிலே உறுப்பினராக இருக்கலாம். ஒன்றியக் குழுவினுடைய பெருந்தலைவர் மாவட்டப் பஞ்சாயத்திலே உறுப்பினராக இருக்கலாம். அதிலே தடையேதும் இல்லை. Parent Act-லே அது தடைசெய்யப்படவில்லை. இந்த முறை கேரளாவிலே இருக்கிறது; கர்நாடகாவிலே இருக்கிறது; மத்தியப் பிரதேசத்திலே இருக்கிறது: மேற்கு வங்காளத்திலே இருக்கிறது. எனவே, அதைப்போல நாமும் சரி செய்து கொண்டோம் என்றால், இங்கேயிருக்கிற பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதுதான் எங்களுடைய கருத்து.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசமைப்புச் சட்டத்திலேயிருக்கிற நிலையையொட்டி, நாம் திருப்பி 1994-வது ஆண்டினுடைய சட்டத்தையும் ஒப்பிட்டுப்பார்க்கிறபோது அவர்கள் அங்கே போகலாம், எதற்காக? எதையாவது சொல்லலாம். ஆனால் ஏற்கலாமா? அவர்களுக்கு ஓட்டுரிமை உண்டா? இந்தப் பிரச்சினை இருக்கிறது. இன்னொன்று, ஒருவருக்கொருவரை இணைத்து ஒரு கூட்டத்தையே என்னால் நடத்த முடியவில்லை. ஒரு மாவட்டத்தில் இந்த அமைப்புகளில் இருக்கிற அத்தனை பேரையும் ஒன்றுபடுத்தி, அவர்களுக்கு இருக்கிற உரிமைகளை விளக்கி, அவரவர்களின் பணிகளைச் செய்ய வேண்டும் என்று பேசுவதற்கே என்னால் முடியவில்லை. எப்படி அவர்கள் கூட்டம்

நடத்துவார்கள்? எதற்காகத் தேவை? அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? அரசமைப்புச் சட்டத்தின்படி அவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. அவர்கள் அங்கே போனால், சென்று வரலாம். அவர்கள் சென்று வரலாம், போய் வரலாம் என்கிற நிலையை இந்த அரசு உருவாக்க விரும்பவில்லை.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள். நீங்கள் ஒரு extra உறுப்பினர் த.மா.கா.-விற்கு. அவ்வளவுதான். Point of clarification-லேயே உங்களுடைய பேச்சை முடித்துவிடுவீர்கள்.

**திரு. ஆர். சொக்கர்:** அனுமதிக்கு நன்றி. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவாக விளக்கத்தைச் சொன்னார்கள். இந்த அரசு ஏற்பட்டபோதே, உள்ளாட்சித் தேர்தலை நடத்தியபோதுகூட அதைப்பற்றி சில கருத்துகள் பரிமாற்றம் செய்யப்பட்டன. ஆனால், அந்த நேரத்திலே சட்டத் திருத்தம் கொண்டுவந்தால் அதைக் காரணமாக வைத்துகூட யாராவது நீதிமன்றங்களுக்குச் சென்றுவிடக்கூடும். ஆகவே, அவர்கள் ஏற்படுத்திய சட்டத்தின்படியே தேர்தலை நடத்தினோம். தேர்தல் முடிந்தபிறகு தேவையான சட்டத் திருத்தங்களை, மாறுதல்களை அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலே நாம் செய்துகொள்ள முடியும் என்ற அடிப்படையிலேதான் அந்த நேரம் முடிவு செய்யப்பட்டது. இப்போது இதில பிரச்சினை என்னவென்றால் பஞ்சாயத்துத் தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களாகச் சென்றுவிட வேண்டும். ஆகவே, இந்த 5000 ஓட்டு, 50,000 ஓட்டு என்று இருப்பதிலே சில மாறுதல்களைச் செய்தால் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக, மிகத் தெளிவாக இது அமைய முடியும். யோசனைகூட பண்ணலாம். இதற்கு அதிகாரம் நம் மாநில அரசுக்கு இருப்பதாகத்தான் நாங்கள் அறிகின்றோம். அப்படியிருக்குமானால் அந்தத் திருத்தத்தைச் செய்யலாமா என்பதைப் பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுகிறேன்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இதற்கு நீண்ட நேரம் விவாதம்கூடத் தேவையில்லை. மீண்டும் காமராசர் காலத்திலேயிருந்த பஞ்சாயத்து முறை, ஈரடுக்கு முறை — பஞ்சாயத்து, ஒன்றியம் என்ற இந்த ஈரடுக்கு முறை இருப்பது நல்லதா அல்லது ராஜீவ் காந்தி கொண்டு வந்த முறை நீடிப்பது நல்லதா என்பதைப்பற்றி ஆராய்ந்து, நம்முடைய சொக்கர் போன்றவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் போன்றவர்களையெல்லாம் கொண்ட ஒரு குழுவைக்கூட நியமித்து, அந்தக் குழுவினுடைய கருத்தின் அடிப்படையிலே அடுத்த ஆண்டு நாம் ஒரு முடிவையெடுத்து தீர்மானமாக நிறைவேற்றலாம் சட்டமாகச் செய்ய முடியுமா என்பதைப்பற்றிக்கூட யோசிக்கலாம்.



**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னை அழைத்து 15 நிமிடங்கள் பேசச் சொன்னீர்கள். 10 நிமிடங்கள் ஆகிவிட்டது, உறுப்பினர்கள் குறுக்கிட்டதாலே. எனவே, அதிக நேரம் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே சொன்னதுமாதிரி த.மா.கா. உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்டார்கள். பெருந்தலைவர் காமராசருடைய திட்டம் அப்படியே தொடர வேண்டுமா அல்லது ராஜீவ் காந்தி கொண்டு வந்த திட்டம் தொடர வேண்டுமா என்பதைவிட என்னுடைய யோசனை என்னவென்றால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கொண்டு வந்த திட்டம் தொடர வேண்டுமென்று நான் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்ன திட்டம் என்றால், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப்போல, பெருந்தலைவர் காமராசர் காலத்தில் இரண்டு அடுக்கு முறை இருந்தது, பஞ்சாயத்து, ஒன்றியம்—இப்படி இருந்தது. அப்பொழுதுகூட என்ன முறை இருந்தது என்றால், Panchayat Board Presidents எல்லாம் சேர்ந்து தலைவரைத் தேர்வு பண்ணுவார்கள். நேரடியாக மக்கள் ஓட்டு கிடையாது. ஆனால், அதிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஒரு மாறுதலைக் கொண்டு வந்து ஒரு தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலிலே ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர்கள் நேரடியாக மக்களால், வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நான் சொன்னது, பெருந்தலைவர் காமராசர் கொண்டு வந்தது ஓர் அடிப்படைதான். ஈரடுக்கு முறை என்பது ஓர் அடிப்படை. அந்த அடிப்படையை வைத்து, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு சொல்வதற்கு மாறாக அல்ல; சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக

ஒரு கருத்து. அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுதே அதிலே ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து ஊராட்சி மன்றத்திலே, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களெல்லாம் சேர்ந்து ஊராட்சி மன்றத் தலைவரைத் தேர்ந்தெடுப்பது என்ற ஒரு indirect முறை இருந்தது. அது வேண்டாம் என்று அண்ணா காலத்திலேயே direct election ஊராட்சிக்கு மாத்திரம் வந்துவிட்டது. எம்.ஜி.ஆர். காலத்திலே ஒன்றியத்திற்கு வந்தது. அவர் எம்.ஜி.ஆர். அண்ணா தி.மு.க. என்று கட்சிக்குப் பெயர் வைத்திருப்பதால், அண்ணாவினுடைய திட்டமும் அதிலே இருக்கிறது; எம்.ஜி.ஆருடைய திட்டமும் அதிலே இருக்கிறது என்று கொள்ளலாம். முதலிலே இதை உருவாக்கியவர் அண்ணாதான் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களுக்குச் சொல்கிறேன். இதை, எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. என்ற அதனுடைய பொதுச் செயலாளர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்றே கருதுகிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்வது சரிதான். அதிலே இரண்டையும் அல்ல, அண்ணாவையும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரையும் மட்டுமல்ல, கலைஞரையும்கூட அத்தோடு சேர்த்துக் கொள்கிறோம். அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. ஏனென்றால், பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தத் திட்டத்தைச் சொல்லியிருக்கலாம். ஆனால் முதல்முறையாகத் தேர்தல் வந்தது 1970-லேதான். 1971-லே சட்டமன்றத் தேர்தல் நடந்தது. 1970-லே பஞ்சாயத்துத் தேர்தல் நடந்தது. 1970-லே பேரறிஞர் அண்ணா அவர்கள் உயிரோடு இல்லை. அப்பொழுது முதலமைச்சராக இருந்த, இப்போது இருக்கிற கலைஞர் அவர்கள்தான் 1970-லே, Panchayat President-களை எல்லாம் நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்ற முறையை, ஊராட்சி மன்றத்தினுடைய தலைவர்கள் நேரடியாக மக்களாலே, வாக்காளர்களாலே தேர்ந்தெடுக்கின்ற முறையை முதன்முறையாக அமல்படுத்தினார்கள். அதை அண்ணா சொன்னார். அவருடைய தம்பியான கலைஞர் ஊராட்சித் தலைவர்கள் மட்டத்திலே செய்தார்கள். அதற்குப் பிறகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர்களை, தேர்தலின்போது பொதுமக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்ற விதத்திலே அதை மாற்றினார், விரிவுபடுத்தினார் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



ஆனால், இப்பொழுது நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, நம்முடைய அன்பிற்குரிய சொக்கர் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார். மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் சொன்னதை வைத்து, சட்டத்திலே என்ன இருக்கிறது என்று கேட்டார். எனக்குத் தெரிந்தவரை, மத்திய சட்டத்திலே என்ன இருக்கிறது என்றால், ஏற்கெனவே இருந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள், அதுபோல நகராட்சிகளினுடைய தலைவர்கள், அதுபோல பேரூராட்சிகளினுடைய தலைவர்கள், இவர்களெல்லாம் நேரடியாக வாக்காளர்களால், மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒன்றியப் பெருந்தலைவர்களைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னபடி இன்னொரு அநாவசியமான பிரிவு இருக்கிறது. எந்தவிதமான சம்பந்தமும் இல்லாமல், 5000 வாக்காளர்களுக்கு ஒரு Councillor என்று வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. அவர்களுக்குப் பண ஒதுக்கீடும் கிடையாது. 5000 வாக்காளர்களுக்கு ஒருவர் என்று போட்டு ஒன்றிய அளவிலே Councillors தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்த Councillors சேர்ந்துதான் ஒன்றியத்தினுடைய பெருந்தலைவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இதிலே என்ன கஷ்டம் என்றால், ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர் அந்த 5000 வாக்காளர்களுக்கு ஒரு Councillor என்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட Councillor-களிலிருந்துதான் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார். அதன்பிறகு, பழைய காலத்தில் இருந்தது மாதிரி, Panchayat Board தலைவரைத் தூக்கியது மாதிரி, இப்போது இந்த 5000 வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட Councillor-களால் ஆள் தூக்குகிற காரியம் தமிழ்நாடு முழுவதும் நடக்கிறது. இதில் யாருக்கு செல்வாக்கு இருக்கிறதோ, வசதி இருக்கிறதோ, யாரிடம் பணம் இருக்கிறதோ, அவர்கள் அதையெல்லாம் செய்து, ஆள் தூக்குகிற முறையில் இந்த ஒன்றியப் பெருந்தலைவர் தேர்தல் நடக்கிறது.

*முற்பகல் 11-30*

ஒன்றிய அளவிலேதான் பெரும்பாலான பணிகள் எல்லாம் நடைபெறுகின்றன. அது சாலையாக இருந்தாலும், பாதையாக இருந்தாலும், எதுவாக இருந்தாலும், பொதுமக்களுக்கு வேண்டிய காரியங்கள். ஒன்றிய அளவிலேதான் பல கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன. இதில் ஒன்றியப் பெருந்தலைவருக்கு என்ன பொறுப்பு என்றால், 5000 வாக்காளர்களால்

தேர்ந்தெடுக்கப்படுகிற முறையில் ஜெயித்து வந்திருக்கிறார் அல்லவா. அவரைக் கவனித்துக்கொண்டு, அதாவது அவருக்கு ஓட்டுப் போட்டார்கள் அல்லவா, அந்த 15 பேரில் 6 பேர் அல்லது 7 பேர், அவர்களை cover மூலம் கவனித்துவிட்டால் போதும். பிரச்சினையே கிடையாது.

ஓர் இலட்சம் வாக்காளர்கள் அல்லது 50,000 வாக்காளர்கள் என்று மக்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. பதினைந்து பேர் கவுன்சிலர்களாக இருக்கிற ஒன்றியத்தில், தலைவருக்கு ஓட்டுப்போட்டு 7 பேர் அல்லது 8 பேர் அவரை ஜெயிக்க வைத்திருப்பார்கள். ஆகவே அப்படி 5000 வாக்காளர்கள் தேர்ந்தெடுத்த அந்த 7 அல்லது 8 Councillor-களைக் கவனித்துவிட்டால் போதும். பொதுமக்களுக்கு நேரடியாக பதில் சொல்ல எந்தப் பொறுப்பும் அவருக்குக் கிடையாது. ஆகவே இப்படிப்பட்ட ஒரு தவறான முறை இருக்கிற காரணத்தாலே, பொதுவாக, பொதுமக்களுக்குப் போய்ச் சேர வேண்டிய காரியங்கள், சிறப்பாக நடைபெறுவதில்லை. சட்டத்திலே Chairman, Representative election மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. மத்திய அரசின் சட்டத்திலே, ஒன்றியத்தில் 5000 வாக்காளர்களுக்கு ஒரு Councillor என்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த Councillor-களிலிருந்துதான் Chairman தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. அதனால்தான் இதைக் கொண்டுவர முடியவில்லை. எப்படி Town Panchayat President, Municipal Chairman, Panchayat President இவர்கள் எல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்களோ அதுபோல ஒன்றியப் பெருந்தலைவர்களும் அந்தப் பகுதிக்குட்பட்ட மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அளவுக்கு, சட்டத் திருத்தத்தை இந்தச் சட்டமன்றத்திலே ஒரு தீர்மானம் வாயிலாக நிறைவேற்றி, மத்திய அரசை அதன் மூலம் வற்புறுத்தி, அந்தச் சட்டத்தில் மாறுதல் கொண்டுவர மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுதான் நான் இங்கே தெரிவிக்க வந்தேன்.

அப்புறம் மாவட்ட Councillors-ஐப் பொறுத்தவரையில், மாவட்ட Council வேண்டாம் என்பது ஒருபுறம் இருக்கட்டும், அதிலேயே இருவிதக் கருத்துகள் இருக்கின்றன. அந்த மாவட்ட Council-லுக்குத் தனியாக fund allot பண்ணுகிறார்கள். Panchayat Raj சட்டத்தில், நேரடியாக President வரைக்கும் பணம் வருகிறது. அதிலே மாவட்ட



Council-க்குப் பணம் தருகிறார்கள் பரவாயில்லை. இருந்துவிட்டுப் போகிறது என்று விட்டாலும் கூட, அவர்கள் Car எல்லாம் வைத்துக்கொண்டு, மாவட்டக் குழுத் தலைவர் என்று சொல்லிக்கொண்டு, சுற்றிக்கொண்டு இருக்கிறார்கள். ஏதோ காரியங்கள் நடக்கிறது. நடக்கட்டும், பரவாயில்லை. நான் அதை மாற்ற வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால் அது இருக்கிற காரணத்தினாலேயே மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் தேவையில்லை என்று முடிவு பண்ண வேண்டியதில்லை என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் முன்பெல்லாம் எப்படி நடந்ததோ அப்படி நடக்கட்டும் அதற்கும் இதற்கும் தொடர்பே கிடையாது. இது ஓர் ஆலோசனைக் கூட்டம்தான். சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன் Chairmen. மேலும் வேண்டுமானால் மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கூட அதில் கலந்துகொள்ளட்டும், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்ற அதிகாரிகள் எல்லாம், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்கு வருகிறபோது, அப்போது அந்தந்தப் பகுதிகளில் உள்ள பிரச்சினைகளை எடுத்துச் சொல்கிறபோது முந்தின தடவை பேசியதை வைத்து, பதில் சொல்லவேண்டிய கடமைக்கு உட்படுத்தப்பட்டவர்களாக அவர்களும் தயாராக வருகிறார்கள். ஆகவே இது பல காரியங்களைப் பொதுமக்களுக்கு இன்னும் செம்மையாகச் செய்வதற்கு, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பிரச்சினைகளை அங்கே பேசுவதற்கு, இந்தச் சட்டமன்றத்தோடு மட்டுமல்லாமல், அந்த மன்றத்திலேயும் பேசுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தாலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் அந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களை நடத்த உத்தரவிட வேண்டும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நிறைய ஆதரவு இருக்கிறது. (குறுக்கீடு) முதலமைச்சர் அவர்களும் அதை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆகவே, அதுகுறித்து உரிய நடவடிக்கையை மேற்கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 2, 3 புதிய சிறப்பான திட்டங்களைக் கிராமப்புற வளர்ச்சிக்காக அறிவித்தார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்களையும் இந்த நேரத்தில் பாராட்டுகிறேன். அவர் ரொம்ப சிறப்பாக, வேகமாக, பம்பரம்போல் சுற்றிச் சுற்றிப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். என்ன கஷ்டம் என்றால், கொஞ்சம் அதிகமாகப்

பேசிக்கொண்டே இருப்பார். ஏனென்று கேட்டால், முதலில் முடியாதுங்க என்பார். என்ன வேலையைப் பற்றிச் சொன்னாலும், முதலில் முடியாதுங்க, சட்டப்படி எப்படிச் செய்ய முடியும் என்று கேள்வி கேட்டுவிட்டுத்தான் எதையும் செய்து கொடுப்பார். (சிரிப்பு) எடுத்தவுடனேயே இது எப்படி முடியும் என்றுதான் ஆரம்பிப்பார். (சிரிப்பு) கடைசியில் எப்படியாவது செய்வார் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் ஏதாவது சொல்கிறாரா என்று கேளுங்கள். (சிரிப்பு) ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர், நீங்கள் இனிமேல் உறுப்பினர் திருநாவுக்கரசு கேட்டால், முடியாது என்றால், முடியாது என்று கடைசிவரைக்கும் நின்று விடுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** நான் அவரிடம் இதுவரை கேட்டதேயில்லை, கேட்பதும் இல்லை. அதனால், பொதுவாக, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொல்வதுமாதிரி அவர் மிகச் சிறப்பாக அந்தத் துறையை முடுக்கிவிட்டு பணியாற்றிக் கொண்டிருக்கிறார் அவர் இடையிலே கொஞ்சம் உடம்பு சரியில்லாமல் இருந்தார். அதைக்கூடப் பார்க்காமல், அரசுக்கு நல்ல பெயர் எடுக்க வேண்டும். நல்ல பெயர் வர வேண்டும் என்று மிகச் சிறப்பாகச் செயல்படுகிறார். அதை நாங்கள் பாராட்டுகிறோம்.

அதுமாத்திரமல்லாமல், எல்லா அமைச்சர்களும் நன்றாகச் செயல்படுகிறார்கள். அதனால், அவரை மட்டும் பாராட்டுகிறேன் என்பதால் பக்கத்து மாவட்டக்காரர், அதனால் பாராட்டுகிறார் என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். இருந்தாலும், முதலமைச்சர் அளவுக்கு மற்றவர்களுக்கு எல்லாம் மேன்மை இல்லை என்றாலும்கூட, ஓரளவுக்குச் சிறப்பாகத்தான் செயல்படுகிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய பிரத்தியேகமான சில திட்டங்களைக் கிராமப்புற வளர்ச்சிக்காக அறிவித்தார்கள். அதிலே ஒன்று, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். அதைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே சொன்னேன் இப்போதுகூட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினார்கள். மீண்டும் முதலமைச்சர் அவர்களை நான்



கேட்டுக்கொள்கிறேன். ஒரு தொகுதிக்கு ஒரு பஞ்சாயத்து என்பதற்குப் பதிலாக, தயவுசெய்து, ஒரு தொகுதிக்கு இரண்டு பஞ்சாயத்துகள் என்று எடுத்துக்கொண்டு, பணத்தை வேண்டுமானால் குறைத்துக் கொள்ளுங்கள். நான் போன தடவையே சொன்னேன். 1 கோடி ரூபாய், 1½ கோடி ரூபாய் என்று ஒரே பஞ்சாயத்தில் போட்டு, பஞ்சாயத்தைத் தன்னிறைவு உள்ள பஞ்சாயத்தாக ஆக்குகிறோம் என்று சொல்லி, அங்கே போய் பணத்தை dump செய்வதைக் காட்டிலும்—அதிலே வந்து அப்படியே வேலை நடப்பதில்லை. அது எந்த ஆட்சியாக இருந்தாலும், அதற்குக் கீழே பல சின்ன சின்ன பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன. எனவே, அப்படிச் செய்வதற்குப் பதிலாக, அடிப்படையிலே அத்தியாவசியமான தேவைகள் என்னென்ன உண்டோ, அவற்றைக் கணக்கிட்டு, அந்தப் பணத்தை வேண்டுமானால் கொஞ்சம் குறைத்துக்கொண்டு, ஒரு தொகுதிக்கு 2 பஞ்சாயத்துகளில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நான் எல்லா சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலே—ஏனென்றால் எல்லோருக்கும் அந்தக் கஷ்டம் இருக்கிறது இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே வலியுறுத்துகிறேன்.

அதுபோல, கிராமப்புறங்களைப் பொறுத்தவரை நான் ஏற்கெனவே சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மறுத்துச் சொன்னார்கள். இப்போதும் நான் வலியுறுத்துகிறேன். ஊராட்சி ஒன்றியங்களிலே ஊராட்சி ஒன்றிய நிதியிலே இருந்து, புது Road formation கூடாது என்று ஓர் உத்தரவு இருப்பதாக எல்லா ஒன்றியத் தலைவர்களும் சொல்கிறார்கள். அதனால் நான் திரும்பவும் இதை வலியுறுத்துகிறேன். பல இடங்களுக்கு நான் செல்கின்றபோது, சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் ஆகின்றன, இன்னும் இணைப்புச் சாலைகள் பல ஆட்சிகள் வந்தும்கூட இல்லை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்முறை அவர்கள் அமைப்பாற்க் குறிப்பிட்டு, மறுபடியும் நான் அதற்குப் பதில் சொல்லி, அப்படி ஏதாவது இருந்தால் எனக்குத் தெரிவியுங்கள் என்றும் கேட்டிருக்கிறேன். நிச்சயமாக அப்படிப்பட்ட உத்தரவுகள் போடப்படவே இல்லை. நகராட்சிகளிலேகூட, புதிய சாலைகளை இப்போது போட வேண்டுமென்ற சூழ்நிலை வரும்போது, Formation of roads, போடலாம் என்று தெரிவித்திருக்கிறோம். அதுபோல, சில சாலைகளைப் போட்டு,

அவற்றினுடைய பட்டியலையும் நான் வைத்திருக்கிறேன். அதனால், அப்படி ஏதாவது இருந்து, அதைச் சொன்னால், அதை நிச்சயமாக நான் மாற்றி அவர்களுக்குத் தொலைபேசி மூலமாகவே சொல்லி, அதைச் செய்யச் சொல்லுகிறேன். அதிலே ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள், சம்பந்தப்பட்ட துறையினுடைய அமைச்சர். அவர் இங்கே சொன்னதையே உத்தரவாகக் கருதி, தமிழ்நாடு முழுவதும் எல்லா B.D.O.-க்களும் இதற்கு அனுமதி தருவார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களும் எடுத்துக்கொள்வார்கள். ஏனென்றால், இங்கே மேலே துறையினுடைய அதிகாரிகள் இருக்கிறார்கள். இங்கே அமைச்சரவர்கள் சொன்னதை வைத்து, அவர்களும் நடவடிக்கை எடுத்து, தயவுசெய்து உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்குத் தெரிந்தவரைக்கும் road formation என்னும்போதும், ஒரு பஞ்சாயத்திலே 10 கிராமங்கள் இருக்கும். அவற்றுக்கு இணைப்புச் சாலைகள் என்று வருகின்றபோது, road formation என்பதற்கு மண் சாலை மட்டும் போடுவதற்கு provision கிடையாது என்று சொல்லி என்ன செய்கிறார்கள் என்றால, போட்டால் at a stretch மண் சாலை, Gravel road, metal road, இதுவரைக்கும் பண்ணினால்தான், அந்தச் சாலையைப் போட முடிகிறது. வெறும மண் சாலை என்றால், எங்களுக்குப் provision இல்லை, எம்.எல்.ஏ. தொகுதி நிதியிலிருந்து கொடுங்கள். இல்லையென்றால், Panchayat Union Fund-ல் இருந்துதான் செய்ய வேண்டும் என்கிறார்கள். பஞ்சாயத்தில் இருந்து எதுவும் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றத்திற்குச் சொந்தமான சாலைகளை ஊராட்சி மன்றம், அவர்களுக்கு என்று இருக்கிற நிதியில் இருந்து அல்லது வேறு ஏதாவது நிதி மதிப்பீடுமானால், அதிலிருந்து அதைச் செய்யலாம் என்று வலியுறுத்தி, சொல்லப்பட்டிருக்கிறது. யாராவது தவறாக சில அதிகாரிகள் இப்படிச் சொன்னால், அதைச் சுட்டிக்காட்டினால், இன்றுகூடச் சொன்னால், அதை நான் எடுத்து அவர்களுக்குத் தெரிவித்து, வாய்ப்பு இருந்தால் செய்யச்சொல்லி உத்தரவிடுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திருநாவுக்கரசுக்கு இன்னும் ஒரு நிமிடம்தான்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதிலே ஒரு சிறிய விளக்கம். நீங்கள் சொன்னதை ஒத்துக்கொள்கிறேன். பஞ்சாயத்து நிதியிலிருந்து சாலைகள் போடலாம் என்று நீங்கள் சொல்கிறீர்கள். இருக்கிறது, ஒத்துக்கொள்கிறேன். Panchayat-லே பணம கிடையாது. நான் கேட்பது, Panchayat Union-லே இருந்து நிதி கேட்கிறார்கள் Panchayat Union Fund இருக்கிறதல்லவா, அரசாங்கம் கொடுப்பது, இவைகளிலேயிருந்து road formation செய்வதற்கு, சாலை போடுவதற்கு விதிகளில் இடமில்லை என்று சொல்கிறார்கள். அதை மட்டும் நீங்கள் தயவுசெய்து பார்த்துச் செய்ய வேண்டும். Gravel road, metal road எல்லாம்...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து ஒன்றியத்திலிருந்துதான் கொடுக்க வேண்டுமென்று கேட்கக்கூட அவசியம் இல்லை. அது முக்கியமானது என்றால், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் பரவலாக்கப்பட்ட திட்டம், இவைகளிலேயிருந்து எடுத்துச் செய்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது. எதிலிருந்தாலும், பஞ்சாயத்திலிருந்துதான் செய்யப் போகிறோம்.

முற்பகல் 9-40

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** சரி, எதிலேயிருந்தாவது போட்டால் சரிதான், விடுங்கள். (சிரிப்பு) எனவே கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகளை ஏற்படுத்துகிற முயற்சியில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நகராட்சிகளில் ஏறக்குறைய 845 கிலோமீட்டர். பேரூராட்சிகளில் ஏறக்குறைய 13,000 கிலோமீட்டர் தூரம் பராமரிக்கப்படுவது என்று வைத்துக்கொண்டால், அதிலே ஏறக்குறைய 1,500 கிலோமீட்டர் அளவிற்கு மண் சாலை அல்லது செம்மண் சாலை என்றிருக்கிறது. அதேமாதிரி ஒன்றியத்தால் பராமரிக்கப்படுகிற அல்லது நகராட்சிகளால் பராமரிக்கப்படுகிற பகுதிகளில் இன்னும் மண் சாலைகள் இருக்கின்றன. எனவே, Municipality, Town Panchayat இதுபோன்ற பகுதிகளில் மண் சாலைகளை கொஞ்சம் கொஞ்சமாக gravel சாலைகளாக, metal சாலைகளாக மாற்ற நடவடிக்கை எடுத்து வருகிறீர்கள். இன்னும் அதிக அளவிலே

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

அறந்தாங்கியில் ஏற்கெனவே அந்தக் காலத்தில், அண்ணா காலத்தில் பேருந்து நிலையம் இருந்தது. அங்கே வெளியூர் பேருந்துகள் எல்லாம் வருவதால் நகரப் பேருந்துகளுக்கு என்று தனியாக இடம் ஒதுக்கித்தந்து Town Bus Stand ஒன்றைக் கட்டித்தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அறந்தாங்கியில் குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. அங்கே புதிதாக Borewell போட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மணமேல்குடி, ஆவுடையார்கோவில் இவை இரண்டும் Union head-quarters plus Taluk head-quarters ஆக இருக்கின்றன. Borewell இருக்கிறதே தவிர வீதிகளில்தான் தண்ணீர் பிடிக்க முடிகிறது. வீடுகளுக்கு குழாய் இணைப்புக் கொடுக்கக்கூடிய விதத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சில கோரிக்கைகள் குறித்த தலைப்புகளை மட்டும் படித்து விடுகிறேன், உள்ளே இருப்பதைப் படிக்கவில்லை, இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிற திருச்சி, கோவை, சேலம் மற்றும் திருநெல்வேலி மாநகராட்சிகளிலே எல்லாம், ஏற்கெனவே ஒன்றியப் பகுதிகளாக இருந்தபோது வீட்டுமனைகளுக்கு அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒன்றியப் பகுதிகளாக இருந்து பிரிந்து அல்லது Municipality ஆக இருந்து பிரிந்த, இந்த நான்கும் இப்போது Corporation எல்லைக்குள்ளாக வந்ததற்குப்பிறகு அங்கெல்லாம் வீட்டுமனைகளுக்கு எந்த அங்கீகாரமும் தரப்படுவது இல்லை. அதற்காக மாநகராட்சி மன்றங்கள் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளன. அதனால் எந்தவிதமான construction-ம் அந்தப் பகுதிகளிலே, புதிதாகச் சேர்ந்திருக்கிற பகுதிகளிலே நடைபெறவே இல்லை. அந்தந்தப் பகுதிகள் மாநகராட்சிகளில் சேர்த்திருந்தும் அந்தந்த Municipality limit-ல் வந்தாலும்கூட, புதிதாகச் சேர்ந்திருக்கிற பகுதிகளில் அவை housing plan-க்கும் அனுமதி தருவதே இல்லை. இதுசம்பந்தமாக அந்த 4 மாநகராட்சிகளிலிருந்தும் பரிந்துரை செய்யப்பட்டு வந்திருக்கின்றன.



இதுகுறித்து நடவடிக்கை எடுத்தால்தான் அங்கே development activities இருக்கும், வீடுகள் கட்ட முடியும். ஆகவே, இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வரிகள் செலுத்துவது சம்பந்தமாக, வரிகள் செலுத்துவோர் சங்கத்தின் சார்பிலே சொல்லப்படுவது, நெல்லை, புதுக்கோட்டை, ஈரோடு போன்ற சில நகராட்சிகளில் 100%, 150% என்று, அதிகமாக வரி போடுகிறார்கள் என்று சொல்லி, அவற்றுக்கெல்லாம் ஒரே மாதிரியான ceiling கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அவற்றையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பேரூராட்சி அனைத்துத் தற்காலிகப் பணியாளர்கள் ஏறக்குறைய 15 ஆண்டுகள், 20 ஆண்டுகளாக, பேரூராட்சிகளிலே பணிபுரிகிற பணியாளர்கள் தங்களை நிரந்தரமாக்க வேண்டும் என்றும் சம்பள உயர்வு வேண்டுமென்றும் கேட்கிறார்கள், இதுகுறித்தும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல உள்ளாட்சி அமைப்புகளில், 3 அடுக்கு முறைகளிலே சிற்றூராட்சிகளில் பணிபுரிகிற துப்புரவுப் பணியாளர்கள், நீரேற்றுபவர்கள் இதுமாதிரி சாதாரண பொறுப்புகளில் இருக்கிறவர்களுடைய சம்பளத்தை அதிகரிக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் அதேமாதிரி, திருநெல்வேலி, திருச்சி, சேலம் போன்ற எல்லா மாநகராட்சிகளிலேயும் பணிபுரிகிற தினக் கூலிகளை நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் வடிகால் வாரியத்திலே ஏறக்குறைய 1000 பேர் தொகுப்பு ஊதிய அடிப்படையிலே பணிபுரிகிறார்கள். அவர்களுடைய சம்பள உயர்வு, பணி நிரந்தரம் ஆகியவை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மாநில அளவிலே ஊராட்சி ஒன்றியங்களிலே பணிபுரிகிற கை பம்ப் பொருத்துபவர்களுடைய பணி நிரந்தரம், சம்பள உயர்வு ஆகிய பிரச்சினைகள் குறித்தும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காரைக்குடி, அறந்தாங்கி போன்ற பல நகராட்சிகளிலே பல ஆண்டுகளாக, 15, 20 ஆண்டுகளாக, தற்காலிகமாக ஊழியர்கள் பணிபுரிகிறார்கள். அவ்வாறு நகராட்சிகளிலே ஏறக்குறைய 5,000-க்கு மேற்பட்ட N.M.R.-ஆகப் பணிபுரிகிறவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய தொழில்நுட்ப உதவியாளர்கள் சங்கத்தின் சார்பிலே D.C.E. படித்திருக்கிற, தொழில்நுட்ப உதவியாளர்கள், 10, 15 ஆண்டுகளாக வேலை நிரந்தரம் இல்லாதவர்களாக, வேலை பார்க்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினையையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியங்களில் இரவுக் காவலர்கள், (night watchmen) இருக்கிறார்கள். Basic Pay ஆக அந்தக் காலத்தில் 18 ரூபாய் நிர்ணயித்து இருக்கிறார்கள். இன்னமும் 18 ரூபாய் அடிப்படைச் சம்பளத்தில்தான் வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். Union-ல் ஒருத்தர் அல்லது இரண்டு பேர்தான் இருப்பார்கள். எனவே, அந்த இரவுக் காவலர்களுடைய பிரச்சினையை அரசு கவனத்திலே கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, மாநில அளவிலே ஊராட்சி ஒன்றியங்களிலே கைபம்ப் பொருத்துநர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினையைப் பற்றி மற்ற உறுப்பினர்களும் பேசினார்கள். திரு. சுப்பராயனும் பேசினார். நீதிமன்றத்திலே இருக்கிறது என்று சொன்னார். அவர்களுடைய கோரிக்கைகள் குறித்தும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி, இந்த அளவோடுபேசி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், பேசுவதற்கு 7 நிமிடங்கள் கேட்டிருக்கிறீர்கள்.

*முற்பகல் 11.45*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்திலே பேசுகிற வாய்ப்பு நல்கிய தங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலிலே கோரிக்கைகளை சொல்லி முடித்துவிடுகிறேன். என்னுடைய வேலூர் தொகுதியில் இப்போது இருக்கக்கூடிய பேருந்து நிலையம் மிகவும்



நெருக்கடியான பேருந்து நிலையமாக இருக்கிற காரணத்தாலே கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்குச் சொந்தமான இடத்தில், கூடுதலாக ஒரு 4 ஏக்கர் கையகப்படுத்தி மொத்தம் 15 ஏக்கர் அளவில் ஒரு நவீன, புதிய பரந்த பேருந்து நிலையத்தை உடனடியாக நடப்பாண்டில் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் பேருந்து நிலையம் சம்பந்தமாக பொதுப் பணித் துறை அமைச்சரும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும் கலந்து பேசி ஒரு நல்ல முடிவுக்கு வந்திருக்கிறார்கள். முடிவுக்கு வந்த பிறகு எதற்காக இப்போது அந்தப் பிரச்சினையை எழுப்புகிறார் என்று தெரியவில்லை. இதை நான் சொல்ல வேண்டுமென்பதற்காக எழுப்புகிறாரோ, என்னவோ தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சாதனையாகச் சொல்கிறார்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உறுதிமொழிக்கு என்னுடைய நன்றி. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரும், நானும் பேசியபோது, பழத் தொழிற்சாலைக்குச் சொந்தமான இடத்தைப் பற்றி மட்டும் பேசினோம். இதனுடன்கூட ஒரு 4 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தினால் 15 ஏக்கர் அளவில் இது அமைந்தால்தான் சிறந்த பேருந்து நிலையமாக அமையும் என்கிற காரணத்தால்தான், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக வழங்கியிருக்கக்கூடிய, அந்தப் பணத்தை அப்படியே அந்தத் திட்டத்திற்குக் கொடுத்துவிடுகிறேன் என்று நான் ஏற்கெனவே உறுதிமொழியாக எழுதிக் கொடுத்துவிட்டேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு உறுப்பினரையும், மாண்புமிகு அமைச்சரையும் கலந்து பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்து, ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், இன்னும் கொஞ்சம் அதிகமாக நிலம் கேட்டு அதற்கு மட்டுமே 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. 40 இலட்ச ரூபாய்கூட செலுத்த உறுப்பினரின் நகராட்சியில் வாய்ப்பில்லை. அதற்காகத்தான் இவ்வளவு

நாட்கள் கலந்து பேசி பிறகு, ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். இன்னும் கொஞ்சம் அதிகமாக நிலம் சேர்த்து (குறுக்கீடு) புதிய நவீன நாகரீக என்றெல்லாம் சொல்வது நடக்கின்ற கதையா? *(சிரிப்பு)*

இன்றைக்குப் பேச வேண்டிய பிரச்சினை இதுவா? பழைய பேருந்து நிலையத்தை புதிதாக அமைக்க வேண்டுமா அல்லது ஏதாவது பேருந்து நிலையம் அமைப்பதற்கான யோசனையை தயவுசெய்து சொல்லுங்கள். மறுபடியும் அதைக் கிடப்பில் போட்டுவிட வழி செய்ய வேண்டாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அதைப்போல மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உடனடியாக இவ்வாண்டே அறிவித்ததற்கு நன்றி. அடுத்த தடவை பரந்த அளவில் நீங்கள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பரந்த இடம், பரந்த இடம் என்று கேட்கிறார். இப்போது பரந்த இடம் என்று கேட்பதிலே, இடையின 'ர'கரம் தான் இருக்கிறது. தொடர்ந்து இதைக் கேட்டால் வல்லின 'ற'கரம் வந்துவிடும். ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். *(சிரிப்பு)*

**திரு. சி. ஞானசேகரன்:** இடையின 'ர'கரமே போதுமானது என்று சொல்லி, அடுத்து என்னுடைய வேலூர், ஆம்பூர், வாணியம்பாடி போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய நிலத்தடி நீர் tannery water காரணமாக ஆங்காங்கே மாசு அடைந்திருக்கக்கூடிய காரணத்தால், குடிநீர் குடிப்பதற்கே லாயக்கற்ற நீராக இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம் ஒகேனக்கல்லிலிருந்து காவிரி நீரை நீங்கள் எங்களுக்குக் குடிநீராகக் கொண்டு வந்து வழங்க வேண்டுமென்று ஒரு திட்டத்தை இப்போதே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல பாதாளச் சாக்கடை திட்டத்திற்காக, கிர்லோஸ்கர் கம்பெனி ஏற்கெனவே வந்து ஆய்வுகள் நடத்தி முடித்துவிட்டன. 30 கோடி ரூபாய் செலவில் அதற்கு இப்போது திட்ட மதிப்பீடு கொடுத்து இருக்கிறார்கள். என்னுடைய நகராட்சியில் பணம் இல்லை என்கிற காரணத்தாலேயே மாண்புமிகு முதல்வர் அவர்கள் 15 கோடி ரூபாய் மானியமாக இந்த ஆண்டு தந்தார்கள் என்று சொன்னால், வீட்டுக்கு 100 ரூபாய் வீதம் வசூல் செய்து அந்தத்



திட்டத்தை நிறைவேற்றிடலாம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு கடிதம் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக, கருணையோடு அந்த நிதியை, 15 கோடி ரூபாயை மானியமாக வழங்கி அந்தத் திட்டத்தை எங்களுக்கு அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே வீட்டுக்கு வீடு இவ்வளவு ரூபாய் என்று நிர்ணயித்து வசூலித்து அதை கஜானாவில் செலுத்துவார்களேயானால், அன்றைக்கே இந்தத் திட்டம் இந்த அவையில் நிச்சயமாக அறிவிக்கப்படும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக நாங்களும் உறுதுணையாக இருப்போம். அரசும் உறுதுணையாக இருந்து அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய கோரிக்கை இவ்வளவுதான்.

அடுத்து, பொதுவான பிரச்சினைக்கு வருகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் நாம் உள்ளாட்சிக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும், கொடுக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு இருக்கிறோமேயொழிய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநிலத் திட்டக் குழுவின் தலைவராக இருக்கிறார்கள். அதுபோல மாவட்ட திட்டக் குழுவிற்கு இப்போது மாவட்டத் ஆட்சித் தலைவரை தலைவராக வைத்து இருக்கிறோம். உண்மையில் அதிகாரம் வழங்குகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டாக இனி அங்கிருக்கக்கூடிய மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் (District Chairman) அவர்களையே மாவட்ட திட்டக் குழுவிற்கு தலைவராக நியமிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்

*முற்பகல் 11-50*

அடுத்து, இப்போது சட்டத்தை இங்கே அறிமுகப்படுத்தி இருக்கிறீர்கள். அதாவது Panchayat Union Chairman, District Chairman இவர்கள்மீது எல்லாம் No Confidence Motion கொண்டு வருவதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அப்படிப்பட்ட சட்டம்

ஏற்கெனவே இருக்கிறது. அது அவர்கள் தவறு செய்தால் அவர்களை நீக்குவதற்கான சட்ட வழிகள் இருக்கின்றன. Removal of Chairman என்ற பிரிவு ஏற்கெனவே இருக்கிறது. அது அரசுக்குப் போய் வர வேண்டும். ஆனால், இப்போது அங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் சேர்ந்தால் உடனடியாக அவர்களை நீக்கிவிடலாம் என்று நீங்கள் ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வருவது என்பது இன்றுள்ள பல Chairman-களை பழிவாங்கக்கூடிய நிலைக்கு ஆளாக்கிவிடுமோ என்ற ஒரு நிலையிருக்கிறது. குறிப்பாக, வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக வந்திருக்கக்கூடிய Chairmen என்று வைத்துக்கொள்ளுங்கள். அங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வார்டு உறுப்பினர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் நீக்க வேண்டுமென்று நினைத்தால் உடனடியாக தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்த தலைவர்கள் அத்தனைபேரும் இப்போது வீட்டுக்குப் போக வேண்டிய நிலைமை வந்துவிடும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தக் கருத்தில் கொள்கை ரீதியாக வாதாடினால் நான் அதை ஏற்றுக்கொள்வேன. ஆனால், தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர்களையெல்லாம் வீட்டுக்கு அனுப்புவதற்கான திட்டம் என்று சொல்வது என்னைக் கேலி செய்வதுபோல இருக்கிறது. எனக்கு அண்ணா கற்றுக் கொடுத்த ஜனநாயகத்தை நீங்கள் இழித்துப் பேசுவதுபோல் இருக்கின்றது. அப்படிப்பட்ட அற்ப புத்தி என்றைக்கும் இந்த அரசுக்கு வராது என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எப்பொழுதும் நேரடியாக ஒரு தேர்தல், மறைமுகமாக ஒரு தேர்தல் என்று இருக்கின்றது. நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை, அந்த Council-லே உள்ளவர்கள் நீக்க முடியாது. அப்போதுதான் அது அரசாங்கத்திற்கு வர வேண்டும். அவர்களுடைய தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டு அரசாங்கத்திற்கு வர வேண்டும். மறைமுகமாகத் தேர்தல் என்றால் ஒவ்வொரு Body-யிலும் ஒவ்வொரு Council-லிலும் உள்ள உறுப்பினர்கள் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றார்கள். அந்த உறுப்பினர்களுக்கு அந்தத் தலைவரைத் திரும்பப் பெற்றுக்கொள்ள அல்லது அவர்மீது நம்பிக்கை இருக்கிறது அல்லது நம்பிக்கை இல்லையென்று சொல்ல உரிமை இருக்கிறது. இது சட்டசபையிலே இருக்கிறது. நாடாளுமன்றத்திலே இருக்கிறது.



நாடாளுமன்றத்திலே அந்த உரிமையிருந்த காரணத்தினால்தான் திரு. வாஜ்பாய் அரசுக்கே இப்போது சீட்டு கொடுக்கப்பட்டது. அதை நாம் மறந்துவிடக்கூடாது. எனவே, மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறதோ அதே உரிமை மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற ஒன்றியங்களுக்கும் அல்லது மாவட்ட ஊராட்சிகளுக்கும் இருக்க வேண்டும் என்றுதான் இந்த அரசு கருதுகிறதேயல்லாமல் வேறல்ல. அரசாங்கத்தினுடைய கையிலே இந்த அதிகாரத்தை வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்வது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. எல்லா அதிகாரங்களும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கின்ற தமிழ் மாநில காங்கிரசின் சார்பாக இப்போது அரசாங்கமே அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், அப்போதுதான் பழி வாங்கக்கூடிய நிலைமை ஏற்படும். பழி வாங்குகின்ற முயற்சி என்றைக்குமே இந்த அரசுக்கு வராது என்பதை மீண்டும் மீண்டும் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே ஒரு விளக்கத்தை நான் சொல்ல விரும்புகிறேன். முதன் முதலாக பஞ்சாயத்துத் தேர்தல் வந்த நேரத்தில், நானும், நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் முதலமைச்சரைப் பார்த்து தலைவருக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் 50-க்கு மேற்பட்ட இடங்கள் எங்களுக்குக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் பஞ்சாயத்து யூனியன் Chairmen, மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் நிருவாகத்தைச் சிறப்பாக நடத்த முடியும் என்று நாங்கள் கேட்ட நேரத்தில் அவர்கள் இதிலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பதே கிடையாது. ஆகவே, நீங்கள் ஏன் அதிகமாகக் கேட்கிறீர்கள், ஒரே மாதிரியாக இருக்கட்டும் என்று அன்று ஓர் உறுதிமொழி சொன்னார்கள். அந்த அடிப்படையிலேதான் இன்று ஊராட்சி ஒன்றியங்களின் மாவட்டப் பஞ்சாயத்துகளின் தேர்தல்கள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. இப்போது, நான் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர்களுக்காக மட்டும் பேசவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்திலேயிருக்கின்ற ஏராளமான Panchayat Union Chairmen என்னிடம் தொடர்புகொண்டு இருக்கிறார்கள். இந்தச் சட்டத்தின்மூலம் பல Panchayat Union Chairmen-களை பதவி

இறக்குவதற்கு பணக்காரர்கள் தயாராக இருக்கிறார்கள். ஏராளமான கள்ளப் பணம் வைத்திருப்பவர்கள் உடனே அவர்களைப் போகச் சொல்லிவிட்டு, 6 மாதத்திற்கு ஒரு தடவை குதிரை வியாபாரம் நடந்தே தீரும். தயவுசெய்து இந்தச் சட்டத்தை Select Committee-க்காவது அனுப்புங்கள், அல்லது வருகின்ற தேர்தலில் இருந்தாவது இந்தச் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வரலாம் என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, வாதம் அரசியல் ரீதியாக மாறிவிட்டது. அதற்காக வருத்தப்படுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார்கள். இந்த உள்ளாட்சித் தேர்தல்களுக்கான உடன்பாடு வந்தபோது, என்ன பேசினோம் என்பதைப்பற்றிப் பேசினார்கள். அப்போது பேசப்பட்டதே முக்கியமான கருத்து, அடிப்படை கருத்து, எப்படி சட்டமன்றத் தேர்தலுக்கு Percentage கொடுக்கப்பட்டதோ, அதைப்போன்று 30% அல்லது 30% எங்களுக்குத் தேவையென்றுதான் வாதிட்டார்களேயல்லாமல இந்த 50% எல்லாம் அப்போது வாதிடவில்லை. அது உண்டா இல்லையா என்று மறுபடியும் மாறி மாறிப் பேசிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமுமில்லை. அவர்களே குறிப்பிட்டதைப்போல, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் நிறைய பேர் இன்றைக்கு ஒன்றியங்களிலே, மாவட்ட ஊராட்சிகளிலே இருக்கின்றார்கள் என்று அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-55

அப்படி இருக்கும்போது அவர்களுக்கு விரோதமான ஒரு விதிமுறையை, சட்டத்தை இந்த அரசு ஏன் கொண்டுவரப் போகிறது என்பதையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இப்போது இருக்கிற நிலை என்னவென்றால், ஒரு தவறு சுட்டிக்காட்டப்பட்டால், அந்தத் தவறைப்பற்றி அரசு சிந்தித்து, ஏன் சிந்திக்காமலேகூட நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம், சர்வாதிகாரம் இல்லை என்று, ஜனநாயக முறையிலே மகாராஷ்டிரத்திலே ஒருவர் அதிகமாக வாக்கு அளித்தால் கூடப்போதும், ஒரு வோட்டு வித்தியாசத்திலேகூட ஒரு சபையைக் கலைக்கலாம என்று இருக்கிறது; மகாராஷ்டிரத்திலே உள்ள நிலை அது. ஆனால், இங்கே உள்ள நிலை, இப்போது நாம் எண்ணிக் கொண்டிருப்பது, நிறைவேற்ற



விரும்புவது, மசோதாவாகக் கொண்டு வந்திருப்பது, two-third majority இருந்தால்தான் இங்கே முடியும்; 3-ல் 2 பங்கு இருந்தால்தான் முடியும் என்ற நிலையை எடுத்து இருக்கின்றோம். எனவே, இதிலே அச்சப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஜனநாயக முறைக்கு ஏற்றவாறுதான் இது நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல கொள்கை ரீதியாகவே இந்தப் பிரச்சினையை நாங்கள் அணுக விரும்புகிறோம். ஒருவர் மீது நம்பிக்கை இருக்கிறதா, நம்பிக்கை இல்லையா என்பதை முடிவு செய்கிற அளவிற்கு, கீழ்நிலையிலே இருக்கிற உள்ளாட்சி அமைப்புகளில் போதிய அனுபவம் உள்ளவர்கள் இல்லை

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அனுபவம் உள்ளவர்கள் இல்லை என்று திரு. அழகிரி அவர்களே ஒத்துக்கொண்ட காரணத்தினாலேதான், அதிகாரங்களை உடனடியாகத் தூக்கிக் கொடுக்காமல், அனுபவம் பெறட்டும் என்று கொஞ்சம், கொஞ்சம் பொறுத்து இருங்கள் என்று கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கிறோம்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கிறோம் என்பதை முதலமைச்சர் ஒத்துக்கொண்ட வரைக்கும் நன்றி. நாங்களும் அதைத்தான் சொல்கிறோம். குறைவாக, மிகவும் லேசாக கொடுத்துக் கொண்டிருக்கிறீர்களே என்ற கருத்தைத்தான் நாங்களும் சொல்கிறோம். என்னுடைய கருத்து என்னவென்றால், உள்ளாட்சி மன்றங்களிலே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, செல்வந்தர்கள், மற்றவர்கள் குதிரை வியாபாரம் செய்வதற்கு ஏதுவாக அமைந்துவிடும். இப்போது பாராளுமன்றத்திலேயே 2 கோடி ரூபாயில் ஆரம்பித்து 25 கோடி ரூபாயில பேரம் முடிந்ததைப் பார்த்தோம். எனவே, ஒரு மேம்பட்ட திட்டத்தை தமிழ் மாநில காங்கிரசின் சார்பாக நாங்கள் அளித்து இருக்கிறோம்; ஒரு பஞ்சாயத்து தீர்ப்பாயம் அமைக்கலாம். பஞ்சாயத்து தீர்ப்பாயம் அமைத்து, 2 உயர்நீதிமன்ற நீதிபதிகளை அதிலே நியமித்து, ஓர் அரசு செயலாளரையும் நீங்கள் அதிலே போடுவீர்களேயானால், ஓர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரோ, மாவட்ட பஞ்சாயத்துத் தலைவரோ தவறு செய்து இருக்கிறார் என்று

மாவட்ட ஆட்சித் தலைவர் கருதினால், அவர்கள் மீது குற்றப் பத்திரிகை பதிவு செய்து அதைத் தீர்ப்பாயத்திற்கு அனுப்பலாம். தீர்ப்பாயத்திற்கு அனுப்புகிறபோது குற்றம் செய்தவர் என்று கூறப்படுகிறவரை விசாரிப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடு) முதலமைச்சர் அவர்கள் விரும்பினால் இங்கும் வைக்கலாம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதை Assembely வைக்கலாம்; நாடாளுமன்றத்திற்கும் வைக்கலாம், அந்தத் தீர்ப்பாயத்தை வைத்திருந்தால், இவ்வளவு சீக்கிரம் திரு. வாஜ்பாய் கவிழ்ந்து இருக்கமாட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விசித்திரமாக இருக்கிறது, நம்முடைய அரசியல் அமைப்பு, ஜனநாயக அரசியல் அமைப்பு. இந்த ஜனநாயக அரசியல் அமைப்பில் தேர்ந்தெடுத்தவர்களுக்கு, அவர்களை திரும்பப் பெறுகிற உரிமை உண்டா, இல்லையா என்கிற பிரச்சினைகள்தான் இதில் வருகிறது. நான் இங்கே குறிப்பிட விரும்புவது, ஜனாதிபதிக்குக்கூட Impeachment உண்டு; உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு Impeachment உண்டு. சாதாரண உள்ளாட்சி அமைப்பில் ஒன்றியத் தலைவர்களை, மாவட்டத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்த அந்த உறுப்பினர்களுக்கு நீக்குகிற உரிமையைக் கொடுக்காமல் அரசாங்கமே வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்வதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒப்புக்கொள்ள இல்லை. ஏனென்றால், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய உரிமையைப் பறிக்க அரசுக்கு உரிமை இல்லை; அரசு தன்னுடைய உரிமையை விட்டுக் கொடுக்கிறபோது அதை நாங்கள் வலுவாக ஆதரிக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. கோபு அவர்கள்தான் இப்படி இந்த சட்டமன்றத்திலே நீங்கள் பேச வேண்டும் என்று மிகத் தெளிவாக என்னிடம் வலியுறுத்தினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திரு. கோபு இருக்கிற கட்சியில்தான் நானும் இருக்கிறேன். கோபுவோடு நானும் கலந்துபேசி இப்படி ஒரு சட்ட முன்வடிவு வருகிறபோது, இந்தச்



சட்டமுன்வடிவு குறித்த கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை நிலை என்ன என்பதை விவாதித்து எழுத்துக்கு எழுத்து தீர்மானித்ததற்குப் பின்னர்தான் வருகிறோம். ஒரே ஒரு விஷயம் என்னவென்றால், அச்சப்படுகிற அளவுக்குப் பிரச்சினைகள் இருக்கக் கூடாது என்று சொல்வது அனுதாபத்தோடு சொல்லப்பட்டதே தவிர, எங்கள் கொள்கை நிலை உறுதியானது; தெளிவானது. தேர்ந்தெடுக்கப்பட்ட யூனியன் மெம்பர்கள் 19 பேர் சேர்ந்து ஒரு Union Chairman-ஐத் தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்களை Simple majority யில் நீக்கிவிட்டு, துஷ்பிரயோகம் வந்துவிடக் கூடாது என்பதில் அரசு மிகுந்த விழிப்போடு two-third வேண்டுமென்று போட்டு இருப்பது இன்னும் சிறப்பானது. எனவே, இந்த அடிப்படையில் இந்த நிலை வரவேற்கத்தக்கது; அதில் எங்கள் நிலை உறுதியானது.

நண்பகல் 12-00

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குழுவில் மாண்புமிகு உறுப்பினர் அழகிரி இருந்தார். ஆனால் 2 கூட்டங்களுக்கு அவர் வரவில்லை. எழுத்துமூலமாக அறிவித்ததை அடிப்படையாக வைத்தே நாங்கள் பரிந்துரைத்தோம். அதுகூட குழுவிற்குத் தேவையில்லை. பெருந்தன்மையோடு, அவருக்கு இருக்கிற ஆற்றலை மதித்து, அதை நாங்கள் வைத்தோம். அப்போது அந்த கட்சியைச் சார்ந்தவர்களும் அங்கே இருந்தார்கள். ஆனால் அதைப் பற்றிய பிரச்சினை வந்தபோது அவர்களும் மறுக்கவில்லை. இது ஒன்று. இரண்டாவது, இந்தச் சட்டம் வரும்போதுகூட, அவர்கள் முன்மொழிவை மறுத்து யாரும் இங்கே பேசியதாக எனக்குத் தெரியவில்லை. அடுத்து, கோபு அதை மறுத்தார் என்று அவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக கோபு அதை மறுக்கவில்லை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த, இந்த மன்றத்தில் இல்லாத திரு. இராமகிருஷ்ணன் அதிலே அங்கம் பெற்றிருந்தார். அவர்கூட என்ன சொன்னார் என்றால், இந்த விதியை ஏற்றுக்கொள்ளலாம், ஆனால் இன்னொரு படி மேலே போய கட்சி மாறுதல் தடைச் சட்டம் பாராளுமன்றத்தில், சட்டமன்றத்தில் இருப்பதைப் போல, அதையும் நிறைவேற்றி, இதையும் கொண்டு வந்தால் கொஞ்சம் நலமாக இருக்கும், என்று ஓர் ஆலோசனை சொன்னாரே தவிர, இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும், இந்த விதி தேவையில்லை என்று சொல்லவில்லை, இது தேவை என்பதைத்தான் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

[1999 மே 12

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதற்காக ஒரு மசோதா வரவிருக்கிறது. ஏற்கெனவே ஒரு சட்டமுன்வடிவு இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி நிறைய பேசலாம். இன்றைக்கே அதைப்பற்றிப் பேசிவிட்டு, பிறகு மசோதா வரும்போது பேசுவதற்கு விஷயம் இல்லாமல் போய்விடும். இன்றைக்கு ஊராட்சித் துறையைப் பற்றிப் பேசுவதற்கு அனைவருக்கும் வாய்ப்பையும் அளித்து, அந்த வாய்ப்பையும் அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்காகத்தான் உறுப்பினர் ஞானசேகரனுக்கு நான் அனுமதியே கொடுப்பதில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வருடைய ஜனநாயக உணர்வை.... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இழித்துப்பேச வேண்டுமென்கிற எண்ணம் எனக்கில்லை. ஏற்கெனவே இருக்கக்கூடிய எங்களுடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்கிற முறையில்தான் இதை வலுவாக இந்த இடத்திலே தெரிவித்தோம் என்பதைத் தெரிவித்து, Select Committee-க்கு இந்தச் சட்டமுன்வடிவை அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சொத்து வரி. இப்போது எல்லா நகராட்சிகளிலும் சொத்து வரிக்காக போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். வணிக வளாகம், தொழிற்சாலைகளுக்கு எல்லாம் 150 சதவிகிதம் 100 சதவிகிதம் என்று வரி உயர்வாகப் போட்டிருப்பதை எல்லாம் எல்லோரும் எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நாங்கள் தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பாக ஒரு தீர்மானம் போட்டதுபோல, வணிக வளாகத்திற்கும், தொழிற்கூடங்களுக்கும் 50 சதவிகித வரி உயர்வு என்று நீங்கள் அறிவித்தால்தான் ஓரளவிற்கு எடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான். 20 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். இதற்குமேல் கொடுக்க முடியாது. (குறுக்கீடு)



1999 மே 12]

**திரு. சி. ஞானசேகரன்:** திரு. திருநாவுக்கரசு மற்றும் அதைப்போல மற்ற உறுப்பினர்கள் எல்லாம் சொன்னதைப்போல, ஏற்கெனவே பேரூராட்சிகளில் பணியாற்றக்கூடிய Pump Operators-க்கு கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய சம்பளத்தைவிட குறைவாக Consolidated pay என்று கொடுக்கிறீர்கள். அதற்காக ஒரு G.O.-வும் போட்டிருக்கிறீர்கள். ஏற்கெனவே வாங்கிய சம்பளத்தைக்கூட அவர்களால் வாங்க முடியாமல் இருக்கிறது. ஆகவே, அதை மறுபரிசீலனை செய்து அவர்களை பணி நிரந்தரம் செய்து சம்பளத்தை உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வரைபடங்களை, பேரூராட்சிகளே approve செய்யலாம் என்று G.O. இருந்தாலும்கூட பேரூராட்சிகளிலே இருக்கக்கூடிய E.O.-க்கள் அதை approve செய்ய மறுக்கிறார்கள். அதையும் உடனடியாக செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கிராமத்திலே குடிநீர் இணைப்புக்கு 1000 ரூபாய் என்று இருப்பதை... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அவையில் இருக்கிற மரபின்படி உங்களுடைய பேச்சை முடிக்கச் சொன்னால், நீங்கள் சொன்ன கருத்து நடுவில் நிறுத்தப்படக் கூடாது என்பதற்காகத்தான் உங்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தேன். அதற்குப் பிறகு 4 கருத்துகளைப் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. பி. வெங்கடசாமி. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** 1000 ரூபாய் என்பதை 500 ரூபாயாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன்.

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்று தமிழிலே பேச வேண்டுமென்று எண்ணுகிறேன். 1999-2000 ஆம் வருடத்திய ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு ஜனதா தளம் சார்பில் நான் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பல்வேறு திட்டங்களைப்பற்றி அவருடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். மொத்தத்தில் சொல்லப் போனால், அவர்கள் இந்த நாட்டுக்கு உள்ளாட்சிப் பகுதியில் வசிக்கிற சுமார் 66 சதவீத மக்களுக்கு, அதாவது 3.68 கோடி பொதுமக்களுக்கு மிக சுறுசுறுப்பாக சேவை செய்து வருகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 12-05

உதாரணத்திற்கு, குடிநீர் வழங்கல், ஊரகச் சாலைகள், தெரு விளக்குகள் மற்றும் சில அடிப்படை வசதிகளை எல்லோருக்கும் இந்தத் துறையின் மூலமாகத்தான் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஆகையால், சுமார் 66% ஜனங்களுக்குச் சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள். அதே சந்தர்ப்பத்தில், உதாரணத்திற்கு Panchayat, Panchayat Union, District Panchayat என்ற Three Tier System பற்றிப் பேசினார்கள். Union Council Members இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்றே தெரியவில்லை. நான்கூட ஒரு Union Council Memberதான். சும்மா கூட்டத்திற்குப் போக வேண்டும், வர வேண்டும், அவ்வளவுதான். வேறு அதிகாரம் ஒன்றுமில்லை. Cheque power இல்லை. அந்த Union Council-மெம்பர் அவர்களுக்கு ஏதாவது பொறுப்பு இருக்கிறதா? அதை தயவுசெய்து நீங்கள் சொல்ல வேண்டும். ஏதாவது ஒரு பொறுப்பு கொடுக்க வேண்டும். பஞ்சாயத்து தலைவர் 2 ஆயிரம் வாக்குகளில் ஜெயிக்கிறார். ஆனால் 5 ஆயிரம் வாக்குகளில் ஜெயிக்கிற Councillor-க்கு power இல்லை. எல்லாத் தொகையையும் பஞ்சாயத்து தலைவர்தான் செலவு செய்ய முடியும். இவர் வெறுமனே பஞ்சாயத்தில் உட்கார்ந்துவிட்டு வரவேண்டும். ஆகையால் இந்த முறைகளை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திட்டக் குழுத் தலைவர் பற்றி திரு. ஞானசேகரன் அவர்கள்கூடப் பேசினார்கள். மாவட்டங்களில் திட்டக் குழுத் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிறார். மாநில அளவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திட்டக் குழுத் தலைவராக இருக்கிறார்கள். அதேசமயத்தில் மாவட்டங்களில் மாவட்டப் பஞ்சாயத்து Chairman திட்டக்குழு தலைவராக இருக்க வேண்டும். கேரளா, கர்நாடகா மற்றும் மேற்கு வங்காளம் ஆகியவற்றில் திட்டக் குழு தலைவராக, மாவட்டங்களில் மாவட்ட பஞ்சாயத்து Chairman இருக்கிறார். அதைப் பரிசீலிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே சென்ற ஆண்டேகூட அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பற்றிச் சொல்லும்போது காந்தியடிகள் நினைத்த ஒரு திட்டம் என்று சொன்னேன். ஓர் ஊருக்கு என்னென்ன அடிப்படை வசதிகள்



வேண்டுமோ அவை எல்லாவற்றையும் செய்து கொடுக்கிறீர்கள். தமிழ்நாட்டில் நாம் இதை ஒரு 'மாதிரி' ஆக எடுத்துக்கொள்ளவேண்டும். ஒரு தொகுதியில் இரண்டு ஊர்களுக்கு திட்டங்களைக் கொடுத்தால்கூட நல்லது. இரண்டு ஊர்களுக்குக் கொடுத்தால் சீக்கிரமாகப் பணியை முடிக்க முடியும். பெரிய அளவில் பணமும் செலவாகாது. கொஞ்சம் பணம் கொடுத்தால்கூட இரண்டு ஊர்களுக்கும் கொடுத்தால், நல்லபடியாக சீக்கிரமாக பணியை முடிப்பதற்கு அவகாசம் இருக்கிறது. அதனால் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை ஒரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் இரண்டு ஊர்களில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, சமத்துவபுரத்தைப்பற்றி எனக்கு ஒரு தகவல் வந்திருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் கட்டட மையம் கட்டுவதற்கு, பொதுப் பணித்துறையினர் 210 சதுர அடியில் 100 வீடுகள் கட்டுவதற்கு சுமார் 64 இலட்சம் ரூபாய் ஆகிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். அதேசமயத்தில் Union-ல் உள்ள திட்ட இயக்குநர் அவர்கள் 281 சதுர அடி கட்டுவதற்கு 47 இலட்சம் ரூபாயதான் செலவு ஆகிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். அப்படிச் சொல்லி கட்டட மையம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். 47 இலட்சத்தில் செய்துவிட்டு, 17 இலட்சம் ரூபாயைச் சேமித்திருக்கிறார்கள். தயவுசெய்து இதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டும். திருவாடானை ஒன்றியத்தில் இது நடந்து கொண்டிருக்கிறது. இதனால் 71 சதுர அடி அதிகம் வருகிறது. அதேசமயத்தில் செலவு 17 இலட்சம் ரூபாய் குறைகிறது. அதனால் தயவுசெய்து அமைச்சர் அவர்கள் இதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். Better quality iron, grill எல்லாம் கொடுக்கிறார்கள்.

அடுத்து, Water Man பற்றிப் பேசினார்கள். Water Man-க்கு 250 ரூபாய் போதாது. தயவுசெய்து அதை அதிகரிக்க வேண்டும். More powers to Panchayat, Panchayt Union என்று சொன்னார்கள். முன்பு ஒரு காலத்தில் Elementary Education, Agriculture, Primary Health Centre போன்றவை Panchayat Union-ன் கட்டுப்பாட்டில் இருந்தன. இப்பொழுது இல்லை. வேளாண்மை என்றால், வேளாண்மைத் துறை அமைச்சர் இருக்கிறார். அதனால் என்னென்ன திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன என்று எந்த பஞ்சாயத்து தலைவருக்கும் தெரியாது. Chairman-க்கும் அந்த Union-ல் P.H.C.-யில் என்ன நடக்கிறது என்று தெரியாது. There is no connection between the Panchayats and the P.H.C.

Panchayat Union-க்கு Control இல்லை. பஞ்சாயத்துத் தலைவரிடம் கட்டுப்படுத்தும் அதிகாரம் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட Elementary Education, Agriculture, Primary Health Centre எல்லாம் வர வேண்டுமா என்று கேட்டார்கள். வந்தால்தான் நல்லது. நாட்டினுடைய நலனைக் கருதி, இந்தத் துறையின் control-இல் கொண்டு வந்தால்தான் தொடர்பு இருக்கும். அவர்களுக்கு contact இருக்கும். அப்படி இருந்தால் நல்லபடியாக வேலை செய்வதற்கு உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-10

அடுத்து, ஓசூர் தொகுதியை எடுத்துக்கொண்டால், சென்ற ஆண்டில் 44 இடங்களில், குடிநீர் திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு 1999-2000-ல், 54 ஊர்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான புதிய திட்டங்களையும் கொடுத்திருக்கிறார்கள். இதுகுறித்து என்னுடைய நன்றியை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் ஓசூருக்கு வருகை தந்தபோது, கர்நாடகாவில் எங்கே தண்ணீர் கேட்டாலும் கொடுக்கிறார்கள். அப்துல் நசீப் சாப் என்பவர் அங்கே அமைச்சராக இருந்தார். அவருக்கு நீர் சாப் என்று பெயர் வைத்தார்கள். நீர் சாப் என்றால் தண்ணீர் கொடுக்கின்ற சாப் என்கிற பொருளில் நீர் சாப் என்று பெயர் வைத்தார்கள் என்று நான் சொன்னேன். அந்த அளவுக்கு நம்முடைய அமைச்சர் அவர்களும்கூட தண்ணீர் கொடுப்பதில் தமிழ்நாட்டில் நல்லபடியாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதால் இவருக்கும், 'நீர் அமைச்சர்' என்ற titleகூட கொடுக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, Cauveri Water Scheme-ஐ தர்மபுரி மாவட்டத்திற்குக் கொடுத்திருக்கிறீர்கள் மிகவும் சந்தோஷம். (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களில் பேசி முடித்து விடுகிறேன். அதேபோல் ஓசூர் ஒகேனக்கல் குடிநீர் திட்டம் மற்றும் சுகாதாரத் திட்டத்தின்கீழ் ஓசூர் பகுதிக்கான விவர அறிக்கை ஒன்றை Proposals for next year வைத்திருக்கிறீர்கள். ஓசூர் ஒன்றியம், ஓசூர் நகராட்சி, சூளகிரி ஒன்றியம், மத்திகிரி பேரூராட்சி என்று அதில் சேர்த்திருக்கிறீர்கள். மேலும், தளி, கெலமங்கலம், வேப்பனப்பள்ளி ஆகியவற்றையும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். ஓசூருக்கு குடிநீர் மிகவும் முக்கியமானது. ஏனென்றால் ஓசூரில் கிடைக்கும் நீரில் ஃப்ளோரைடு இருப்பதால் நிறைய கஷ்டம் ஏற்படுகிறது. எனவே நான்



குறிப்பிட்ட பகுதிகளையும் இந்தத் திட்டத்தில் தயவுசெய்து சேர்த்துக்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஓசூருக்கு under ground drainage system தேவைப்படுகிறது. ஏனென்றால் அது model city-யாக, industrial city-யாக இருப்பதால் under ground drainage தேவைப்படுகிறது. எனவே ஓசூருக்கு under ground drainage system திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிவகாசியில் இருந்து ஒரு விண்ணப்பம் வந்திருக்கிறது. நான் அமைச்சர் அவர்களுக்கு இதைச் சமர்ப்பிக்கிறேன். வரியைப் பொறுத்தவரையில் சொந்த வீட்டில் இருப்பவர்களுக்கு 25 சதவிகிதத்தை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். வாடகைக் கட்டடத்திற்கு 50 சதவிகிதம் என்றும், வாடகை வளாகத்திற்கு 100 சதவிகிதம் என்றும், தொழிற்சாலைகளுக்கு 150 சதவிகிதம் என்றும் வரியை நிர்ணயித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 25 சதவிகிதம் அதிகரிக்கவில்லை. பழைய வரியைவிட 25 சதவிகிதத்திற்கு மிகாமல் வரி விதிக்க வேண்டும். அப்படித்தான் நாம் சட்டத்தில் போட்டிருக்கின்ற புதிய வரி குறித்து வருகிறது. அதேபோல், 50 சதவிகிதத்திற்கும் மிகாமல் வரி விதிக்க வேண்டும். 45 சதவிகிதம் விதிக்கலாம், 20 சதவிகிதம் விதிக்கலாம், 10 சதவிகிதம்கூட விதிக்கலாம்.

**திரு. பி. வெங்கடசாமி:** சிவகாசியிலிருந்து வந்துள்ள கோரிக்கையை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சமர்ப்பிக்கிறேன். மிகவும் நல்லபடியாக அமைச்சர் அவர்கள் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நிறைய வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நல்லபடியாக இந்த வேலையைச் செய்வதால் அவருக்கு 'நீர் அமைச்சர்' என்று ஒரு title-ஐக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என். பெரியசாமி.

***திரு. என். பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு எனக்கும் வாய்ப்பை உருவாக்கித் தந்த தலைவர் கலைஞர் அவர்களுக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் என் தொகுதிக்குட்பட்ட இடங்களில என்னென்ன பணிகள் நடைபெறுகின்றன என்பதை எல்லாம் இன்றைககு ஒரு புத்தகமாகக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட பகுதியில் 67 கிராமங்களுக்கு, சாயல்புரம்-பெருங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டே வேலைகள் முடியும் என்று அதில் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன. அதோடு இன்னும் 4 பஞ்சாயத்துகளுக்கு உட்பட்ட கிராமங்களுக்கு ஒரு கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் 2000-ஆவது ஆண்டில் வேலைகள் முடிந்துவிடும் என்றும் கொடுத்திருக்கிறார்கள். வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்காகவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீண்ட காலமாக தூத்துக்குடி நகரத்து மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெரிய கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காகவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தூத்துக்குடி நகரத்தில் குடிநீருக்கென்று கீழே தோண்டினால் உப்புத் தண்ணீர் தான் வரும். அங்கு தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்க மூன்றாவது Pipe line திட்டம் வேண்டும் என்று 1989 ஆம் ஆண்டு நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த அந்த நேரத்தில் இந்த அவையிலே பேசியிருக்கிறேன். தொடர்ந்து 3 ஆண்டுகளாக நான் கேட்டுக் கொண்டிருந்தேன். அதை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு இங்கே 25 கோடி ரூபாய் செலவில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்துள்ளார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு இந்த நல்ல திட்டங்கள் முடியக்கூடிய அளவில் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், மூன்றாவது Pipe line திட்டம் விரைவாகத் தொடங்கப்பட்டு, அந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பிற்பகல் 12-15

நான் 1989ஆம் ஆண்டிலிருந்தே கேட்டுக் கொண்டிருக்கக்கூடியது, பக்கிள் ஓடைப பிரச்சினை பற்றி இந்த அவையில் இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும். தூத்துக்குடி நகரத்தில் இருக்கக்கூடிய அந்த பக்கிள் ஓடையைச் சீரமைக்க வேண்டுமென்று ஒவ்வோர் அமைச்சரிடமும் 1989ஆம் ஆண்டிலிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறேன். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டால் எனக்கு சம்பந்தம் இல்லை, உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேளுங்கள் என்கிறார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேட்டால், அவர் வந்து சுற்றிப் பார்த்துவிட்டு எனக்குச் சம்பந்தம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆக மொத்தம் ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள். அது மாண்புமிகு முதலமைச்சருக்குத்தான் சொந்தமே தவிர மற்ற யாருக்கும் சொந்தம் இல்லை. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் அதைச் செய்து தர வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். அதற்குப் பின்னால் நான் மாண்புமிகு முதலமைச்சரிடம் இரண்டு முறை மனுக்கள் கொடுத்து அந்த மனுக்கள் இப்போது நடவடிக்கையில் இருந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு எல்லோருக்கும் செய்து கொண்டிருக்கிறார்கள், எதிரிலே உட்கார்ந்து இருப்பவர்கள் அவ்வப்போது கேட்டு Order வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் தள்ளி இருக்கிறோம. ஆகையால் எங்கள் தொகுதிக்கு எத்தனையோ நல்ல திட்டங்களைச் செய்து கொடுத்த தாங்கள், நிச்சயமாக இந்த பக்கிள் ஓடையை இந்த ஆண்டு தயவுசெய்து கட்டித் தருவதற்கு நிதி ஒதுக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மூன்றாவது Pipe line திட்டம் பெரிய திட்டம். அந்தத் திட்டத்தை நிறைவேற்றினாலே போதும். பக்கிள் ஓடை பிரச்சினை நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால் அந்தத் தொகுதி மக்கள் என்றென்றைக்கும் நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள் என்பதால் அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்துகள் மூலம் தெரு விளக்குகள் போட வேண்டிய நிலைமை இருக்கிறது. சில பஞ்சாயத்துகளில் நீண்ட நாட்களாக வருமானமே இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றது. அந்தப் பஞ்சாயத்துகளில் எல்லாம் புதிதாக தெரு விளக்குகள் போட வேண்டும் என்று சொன்னால் அவற்றைப் போடமுடியவில்லை [illegible]



22.11.99

கட்டினால்தான் போடுவோம் என்று சொல்லுகிறார்கள். ஆகவே ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், வருமானமே இல்லாத பஞ்சாயத்துகளில் மக்களுக்காக தெருவிளக்குகள் போட வேண்டிய பகுதிகளில் தெருவிளக்குகள் போடுவதற்கு ஏதாவது ஒரு வழிவகையைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்று. வீடு கட்ட licence வாங்க வேண்டுமென்று சொன்னால் பஞ்சாயத்துகளுக்கு அந்த அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கின்றது. அந்த அதிகாரத்திற்கு உட்பட்டுதான் பஞ்சாயத்துகள் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. யாரும் பஞ்சாயத்துகளில் licence வாங்குவதில்லை. ஏனென்றால் அங்கே அதற்குரிய அதிகாரிகள் இல்லை. பஞ்சாயத்துகளில் இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு வீடுகள் கட்டுவதற்கான அங்கீகாரம் கொடுக்கக்கக்கூடிய தகுதி இல்லாத காரணத்தால், பஞ்சாயத்துகளுக்கு அந்த licence கொடுக்கக்கூடிய தகுதி இல்லை. அதனால் அந்த union-க்கே ஒப்படைத்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே எனக்கு முன்னால் பேசியவர்கள் நல்ல கருத்துகளைச் சொன்னாலும், இந்த உள்ளாட்சி மன்றத்தைப் பற்றி நான் ஒருசில கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உள்ளாட்சி மன்றத் தேர்தலை நடத்தியதற்குப் பின்னால் எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் மாவட்டத்தில் இருந்தாலும், எந்தக் கிராமத்திற்குச் சென்றாலும் 5, 6 ஆண்டு காலமாக எந்த வேலையும் நடைபெறாத கிராமங்களிலேகூட, சாலைகள் போடுவது தண்ணீர் வசதி செய்வது, தெருவிளக்கு போடுவது போன்ற பணிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மக்கள் எல்லாம் அவற்றைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாராட்டு நிச்சயமாக வீண் போகாது என்று எங்களைப் போன்றவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. இப்போது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வேகமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த ஆண்டு, கூடிய விரைவில், தூத்துக்குடிக்கு வந்து மூன்றாவது Pipe line திட்டத்தை ஆரம்பித்து வைத்தால் நன்றாக இருக்கும். ஏனென்றால், அறிவித்துவிட்டு கிடப்பிலே போட்டால், ஆரம்பித்தீர்களா என்று என்னைக் கேட்பார்கள்.

அதுமட்டுமல்லாமல், அயல்நாட்டு உதவியோடு கடல் நீர் உப்பு நீராக ஆக்கப்படும் என்று அறிவித்தீர்கள்....



பிற்பகல் 12-20

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கடல் நீர் ஏற்கெனவே உப்பாகத்தான் இருக்கிறது. (சிரிப்பு) கடல் நீரை உப்பு நீராக ஆக்க யாரும் முயற்சிக்கவில்லை. (சிரிப்பு)

**திரு. என். பெரியசாமி:** தலைவர் முன்னால் பேசுவதாக இருந்தால் எனக்குப் பேச்சு வராது. அதனால் உளறிவிட்டேன். மன்னித்துக்கொள்ளுங்கள். அயல்நாட்டு உதவியோடு கடல்நீரை நல்ல நீராக ஆக்க வேண்டுமென்று இங்கே அறிவித்திருக்கிறீர்கள். அதையும் சீக்கிரமாக ஆரம்பிக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அளவுக்கு எனக்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்கள் ஊராட்சி மன்றத்தில் விளக்கே எரியாமல் சில இடங்கள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அப்படி இருந்தால் மிகக் குறைவாகத்தான் இருக்கும். இருந்தாலும், எந்தெந்த ஊராட்சிகள் என்பதைத் தெரிவித்து ஒரு கடிதம், எனக்கு அவர் போகும்போது கொடுத்துவிட்டுப் போனால், அதை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைத்து, நிச்சயமாக அங்கு விளக்கு எரிய வைக்கிற நிலையை அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. முகம்மது கோதர் மைதீன்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோதர் மைதீன் நீங்களா? நீங்கள் பேசுவதற்காகப் பெயர் கொடுத்து, நான் கூப்பிடுகிற நேரத்திலே இல்லை. உங்கள் இஷ்டத்திற்கு வந்து, மறுபடியும் என்னைக் கூப்பிடுங்கள் என்று கேட்டால், உங்களுடைய நேரத்தின்படி நான் உங்களைக் கூப்பிட முடியுமா? திரு. தி.ப. மாயவன்.

**திரு. தி.ப. மாயவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியத் திருநாட்டின் ஜனநாயகத்தின் ஆணிவேராகத் திகழ்கின்ற நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள், 'சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்' என்னும் தாரக மந்திரத்திற்கேற்ப, 1996ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தி, கிராமப்புறங்களிலே நகர்ப்புறங்களிலே வாழ்கின்ற அனைத்து மக்களும் குடிநீர் வசதி, சாலை வசதி, விளக்கு வசதி போன்ற அடிப்படை வசதிகளைப் பெறுகின்ற வகையில், சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகாலம் நடைபெறாத பணிகளை கடந்த 3 ஆண்டுகளில் செய்து முடித்திருப்பதற்காக நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களின் குறிப்பறிந்து பம்பரம்போல் சுழன்று சாதனை படைத்து, உள்ளாட்சித் துறையிலே சரித்திரத்தைப் படைத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் இட்ட பிச்சையின் காரணமாக, 1996 தேர்தலில் நாங்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொகுதிக்கு நன்றி சொல்லச் செல்கின்ற அந்தக் காலகட்டங்களிலே, எனது தொகுதியிலே உள்ள கிராமப்புறங்களிலே உள்ள மக்கள், ஏறத்தாழ 70லிருந்து 90 சதவிகிதம் மக்கள், குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றிய குறைகளையெல்லாம் என்னிடத்திலே சொன்னார்கள். விளக்கு வசதி இல்லை என்று சொன்னார்கள். சாலை வசதி இல்லை என்று சொன்னார்கள். அவையெல்லாம் இந்த 3 ஆண்டுகளாகச் செய்யப்பட்டு வருவதால், நான் இப்போது தொகுதியிலே சுற்றுப் பயணம் செய்கின்ற நேரத்திலே, கிட்டத்தட்ட குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி ஏதாவது நூற்றிலே ஒரு பங்குதான், எங்கேயாவதுதான் குறை சொன்னார்களேயொழிய, மற்றபடி அத்தனை கிராமங்களிலும், குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி யாரும் குறை சொல்லாத அளவுக்கு, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்திருக்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் சென்ற எல்லா இடங்களிலும் நன்றி சொல்வதைத்தான் மனப்பூர்வமாக அறிய முடிகிறது. அந்தவகையிலே, உள்ளாட்சித் தேர்தல்கள் வருவதற்குக் காரணமாக இருந்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். பல ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்ததை, நடத்த வேண்டுமென்று



1986 ஆம் ஆண்டிலேயே கேட்டு, இப்போது உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் வருவதற்குக் காரணமாக இருந்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக 8 முறை போராட்டங்களை நடத்தி, உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு 1986 ஆம் ஆண்டிலேயே காரணமாக இருந்து, என்னைப் போன்றவர்கள் எல்லாம் நகர மன்றத் தலைவர்களாக வருவதற்கும் காரணமாக இருந்தவர்கள் நம்முடைய தலைவர் அவர்கள். ஆகவே, உள்ளாட்சித் துறையைப் பொறுத்த அளவிலே மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளையெல்லாம் மிக மிக சுறுசுறுப்போடு இங்கே செய்து கொண்டிருக்கின்ற இந்த வேளையிலே ஒருசில கருத்துகளை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 12-25

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எந்த ஒரு திட்டமானாலும், அந்தத் திட்டத்தின் பயன்கள் கீழ்த்தட்டிலே உள்ள மக்களுக்கு நிச்சயமாகப் போய்ச் சேர வேண்டுமென்கின்ற ஓர் எண்ணத்தோடு பணியாற்றிக்கொண்டு இருக்கின்ற இந்த வேளையிலே, அமைச்சர் பெருமக்களும், அதுபோல சட்டமன்ற உறுப்பினர்களும், இன்னும் கீழ் தளத்திலே இருக்கின்ற அந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தனைப் பிரதிநிதிகளும் அந்த மக்களுக்குச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு செயல்பட்டுக் கொண்டிருந்தாலும்கூட, ஒருசில இடங்களிலே இந்தியத் துணைக் கண்டத்திலேயே இல்லாத அளவிற்கு ஒருசில காரியங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

தந்தை பெரியார் அவர்களுடைய எண்ணத்தினையும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய எண்ணத்தினையும் நிறைவேற்றுகின்ற வகையிலே பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டினை உள்ளாட்சி மன்றங்களில் செய்து கொடுத்து இருக்கின்றார்கள் ஆனால், உள்ளாட்சித் துறைகளிலே, ஊராட்சி மன்றங்களிலே, ஊராட்சி ஒன்றியங்களிலே அந்தப் பெண்களுக்குக் கொடுத்திருக்கின்ற உரிமையை, அவர்களுடைய கணவன்மார்களும், உறவினர்களும் முழுமையாகச் செய்ய விடுவதில்லை என்பதை இந்த நேரத்திலே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்னும் சொல்லப் போனால், பல ஊர்களிலே, பல ஊராட்சி மன்றங்களிலே போய், தலைவர் யார் என்று கேட்டால், 90 சதவிகிதத்திற்கு மேற்பட்ட இடங்களிலே அந்தச்

சகோதரிகளினுடைய கணவன் பெயரைத்தான், தலைவர் என்று குறிப்பிடுகிறார்கள். அதுபோல சில இடங்களிலே எல்லைக்கு மீறி, அந்தக் கணவன்மார்கள் கூட்டங்களிலேகூட வந்து உட்கார்ந்துகொண்டு, அவர்களே கேள்விகளுக்குப் பதில் சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்து கொண்டு இருக்கிறது. இன்னும் சில இடங்களில், என்றைக்கு அந்தச் சகோதரிகள் ஊராட்சி மன்றத் தலைவிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ, அன்று கையெழுத்து போட வந்ததுதான், அதற்குப் பிறகு எல்லா வேலைகளையும் அந்தந்த ஊராட்சி மன்றத் தலைவிகளுடைய கணவன்மார்கள்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். இதைக் கேட்டால் சட்டமன்ற உறுப்பினர்களைக் குறை கூறுகிறார்கள். அங்கேயிருக்கின்ற அதிகாரிகளை மிரட்டுகின்றார்கள். இன்னும் சில நண்பர்கள் சற்று எல்லைமீறிப் போய் வாகனங்களைக்கூட எடுத்துக்கொண்டு தேவையில்லாத இடங்களிலே போட்டுவிடுகின்றார்கள். நீங்கள் இந்த நாட்டு மக்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்களோ, கீழ்தளத்திலே உள்ள மக்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்களோ, அந்த எண்ணத்திற்கு மாறாக சிலபோ செய்கின்ற தவறுகள் இந்த ஆட்சிக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும்தான் கெட்டப் பெயரை ஏற்படுத்துகின்றது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இதற்கு வேண்டிய விதிமுறையினை நீங்கள் தயவுசெய்து வகுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இங்கேயிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுடைய கணவன்மார்களோ அல்லது மனைவிமார்களோ இந்தச் சட்டமன்றத்திலே வந்து உட்கார ஆரம்பித்தால் என்ன நடக்கும் என்பதை தயவுசெய்து எண்ணிப்பார்த்து . . .

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு என்று ஒரு சட்டத்தை நிறைவேற்றி, அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே 33 சதவிகிதத்தை பெண்களுக்கென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு என்னுடைய ஊரிலேகூட எனக்கு போட்டியாகவே இருக்கின்றார்கள். இப்போது அங்கே 8 பெண்கள் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் அங்கு வந்து பேசுகின்றார்கள். எல்லாவித காரியங்களையும் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்தப் பெண்களே ஒன்றும் செய்வதில்லை, அதற்குப் பதிலாக அவர்களுடைய



கணவன்மார்கள்தான் எல்லா காரியங்களையும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். கணவன்மார்கள் வேண்டுமானால் அவர்கள் பின்னாலே உட்கார்ந்து கொண்டு போகட்டும். அதையெல்லாம் பெரிதாக்கி இந்தத் திட்டத்திற்கே பங்கம் வரக்கூடிய அளவிற்கு அவர்கள் சொல்வது நியாயமில்லை. அவர்கள் எல்லாம் இப்போதுதான் புதிதாக வந்திருகக்கக்கூடியவர்கள். இதுபற்றியெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும், நாங்கள் எல்லாம் சிறிய வயதாக இருந்தபோது, இங்கே வந்தபோது, பேசத் தெரியாது. மைக்கைப் பிடித்தாலே கை நடுங்கும். அதெல்லாம் ஆரம்ப காலம். இப்போது மணிக்கணக்கில் பேசிக்கொண்டு இருக்கிறோம். இந்த அளவிற்கு அவர்களுக்கும் அனுபவம் வந்துவிட்டால், அவர்களும் சிறப்பான முறையிலே பணியாற்றுவார்கள். அதைப் பெரிதாக ஆக்க வேண்டாம் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவா அவர்களே, மாண்புமிகு உறுப்பினா மாயவன் அவர்கள் பெண்களைக் குறைத்துப் பேசவில்லை. பெண்களுக்குத் தாப்பட்ட உரிமைகளை ஆண்கள பறித்துவிடக்கூடாது என்று பெண்களுக்காகப் பரிந்துதான் பேசினாரேயல்லாமல் குறைத்துப் பேசவில்லை. ஆனால், அக்காள் அவர்களுக்கு சொல்லிக்கொள்கின்றேன்—நீங்களும, தாய்மார்களுக்குச் சொல்ல வேண்டும் மகளிருக்குச் சொல்ல வேண்டும். நீங்கள் ஊராட்சி மன்றத் தலைவியான பிறகு, ஒன்றியத் தலைவியான பிறகு, பின்னால் வந்து உட்காரக்கூட உங்களுடைய கணவருக்கு உரிமை அளிக்காதீர்கள் என்று நீங்கள் சொல்ல வேண்டும். அந்தத் துணிச்சல் உங்களுக்கும் வர வேண்டும்.

பிற்பகல் 12.30

**திரு. தி.ப. மாயவன்:** மாண்புமிகு முதலமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைப்போல் நம்முடைய உள்ளாட்சி மன்றத்திற்கான பலவேறு திட்டங்களை எல்லாம் வகுத்து, அந்தத் திட்டங்கள் எல்லாம், எல்லா இடங்களுக்கும், கிராமப்புற மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்று முழு அக்கறை காட்டுகின்ற முதல்வர் அவர்களின் எண்ணத்திற்குத் தகுந்தாற்போல்தான் எல்லோரும் நடக்க வேண்டுமென்பதற்காகததான் நான் இதைச் சொன்னேன். பெண்களை இழிவுபடுத்த வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே, குடிநீர் வடிகால் வாரியத்தின் பணியைப்பற்றிக் கூற வேண்டும். Circus-லே சில magic எல்லாம் காட்டுவார்களே, அதேபோல் அந்தக் குடிநீர் வடிகால் வாரியத்திடம் சட்டமன்ற உறுப்பினர் எழுதிக் கொடுத்தால் மறுநாளே இயந்திரங்களைக் கொண்டு வந்து 'Bore' போட்டு, மக்களுக்குத் தண்ணீர் கொடுக்கின்ற அந்த வாய்ப்பு, கிராம மக்களாலே மிகமிக பாராட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதைப்போலவே, பல்வேறு திட்டங்கள் இருந்தாலும்கூட, கிராமப்புறங்களிலே 10,000 கிலோமீட்டருக்கு மேல் இப்போது கிராமச் சாலை வசதிகள், 12,000 கிலோமீட்டருக்கு அதிகமான தார்ச் சாலை வசதிகள் எல்லாம் கிராம மக்களுக்குச் செய்யப்பட்டிருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) கடைசியாக, என்னுடைய மாநகராட்சியிலுள்ள திருவரங்கம் நகரத்தைப்பற்றி ஒரு கருத்தை மட்டும் இந்த நேரத்திலே சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரமாகிவிட்டது. திரு. அ.வ. அப்துல் நாசர், பேசுங்கள்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் குறித்த மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் பேரூரில் இருக்கக்கூடிய சென்னீர்குப்பத்தில் உள்ள ஹாஜிமுகுதா என்ற அரபி கல்லூரி வளாகத்திலே கிருஷ்ணா நதிநீர் வரத்திற்கான குழாய் பதிப்பின் காரணமாக எழுந்த பிரச்சினையை சுமுகமான முறையிலே தீர்த்து வைத்து, அவர்களுக்கு அனுமதி அளித்ததற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், குடிநீர் வடிகால் வாரிய M.D. அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி நிருவாகத்திலே இன்றைக்கு பல குளறுபடிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மூன்று அடுக்கு முறை என்பது மிகவும் பிரச்சினைக்குரிய விஷயமாகத்தான் இருக்கிறது. அதுகுறித்து இங்கு எல்லோரும் பேசியிருந்தாலும் இப்போது எந்த ஒரு பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும், ஒன்றியப் பெருந்தலைவர் எங்களுக்கு அதிகாரம் இல்லை, எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை என்று



சொல்கின்றார்கள். உள்ளாட்சி மன்றத் தலைவரைக் கேட்டால் எங்களுக்கு அதிகாரம் இல்லை, நாங்கள் என்ன செய்வது என்று கேட்கின்றார்கள். மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவரைக் கேட்டால், எங்களுக்கு அதிகாரம் இல்லை, நாங்கள் என்ன செய்வது, எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை என்று சொல்கின்றார்கள். எனவே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி சொன்னதுபோல, யார், யாருக்கு என்னென்ன அதிகாரம் என்பதை வரையறுத்து, அவர்களுக்கு ஒரு புத்தகமாக அளித்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், மூன்று அடுக்கு முறையைச் சீரமைக்கும் பொருட்டு ஒரு குழு அமைக்கப்படுவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்புச் செய்தார்கள். அதை உடனடியாக அமைத்து அந்தக் குழுவின் பரிந்துரையை ஏற்று அமல் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தொகுதிக்குச் செல்கின்ற நேரத்திலே ஒரு பெரும் பிரச்சினை எதிர்கொண்டு இருக்கிறது. ஏன் என்றால், தொகுப்பு வீடுகளை வழங்குகின்றபோது, பயனாளிகளைத் தேர்வு செய்கின்ற அதிகாரம் எல்லாம் அந்தந்த உள்ளாட்சி மன்றத் தலைவருக்கே இருக்கின்ற காரணத்தினால், சட்டமன்ற உறுப்பினரைப் பார்த்து, நாங்கள் எல்லாம் உங்களுக்குத் தேர்தல் வேலை செய்தோமே, நாங்களும் ஏழைகள்தானே, எங்களுக்கும் அந்தத் தொகுப்பு வீடு கொடுப்பதற்கு நீங்கள் ஏற்பாடு செய்யக்கூடாதா என்றெல்லாம் வற்புறுத்திக் கேட்கிறார்கள். I.R.D.P. கடன் பெறுவதிலும் பிரச்சினை இருக்கிறது. எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்வதற்கு முன்னுரிமை அளித்து, தொகுப்பு வீடு பயனாளிகளைத் தேர்வு செய்வதில், எங்களுக்கும் அதில் பங்கு தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தொகுப்பு வீட்டிலே பங்கு வேண்டுமா? பயனாளிகளைத் தேர்வு செய்வதில் பங்கு வேண்டுமா? தெளிவாகச் சொல்லுங்கள்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** தேர்வு செய்வதில். அதுமட்டும் அல்லாமல், பிற்படுத்தப்பட்டோர்களுக்காக தொகுப்பு வீடுகள் மிகவும் குறைவான

எண்ணிக்கையில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் வழங்கப்படுகின்றன. அதிலே மிகப் பெரிய பிரச்சினைகள் இருக்கின்றன. எந்த ஊருக்கு, எவ்வளவு கொடுப்பது என்று தெரியவில்லை. அவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே, அதைச் சற்று அதிகப்படுத்தித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு ** இந்த மன்றத்திலே ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டுவரப் போவதாகச் சொன்னார்கள். அதாவது திரும்பப் பெறக்கூடிய சட்டம். இதை இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக நிச்சயமாக நாங்கள் வரவேற்கிறோம். ஏனென்று சொன்னால்,**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, பொதுப்படையாக எதுவும் சொல்லாமல், அவர் இப்போது பேசும்போது ஒரு குறிப்பிட்ட பஞ்சாயத்தினுடைய பெயரையும் சொல்லியிருக்கிறார். அந்தத் தலைவர் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அவரைப் பற்றிச் சொல்லப்பட்ட நடவடிக்கைகள் மிக மோசமான நடவடிக்கைகள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். எனவே அவை, அவைக்குறிப்பில் இருப்பது நல்லதல்ல. அவை அனைத்தையும் எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப்பகுதி அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து நான் முதலமைச்சர் அவர்களுக்கு மனு அளித்திருக்கிறேன். ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் மனு அளித்திருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) இல்லையில்லை, சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மனு அனுப்புவது வேறு. நீங்கள் குற்றம் சாட்டிச் சொல்கிறபோது, அதற்கான பதில் சொல்வதற்கு அவர் இந்த அவையில் இல்லை. அதனால், இத்துடன் நிறுத்திவிடுங்கள். அடுத்த subject-க்கு வாருங்கள்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** அதாவது, பேரூராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில், பேரூராட்சிப் பகுதிகளுக்கும் தொகுப்பு வீடுகள் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



எங்கள் தொகுதியிலே இருக்கக்கூடிய கிள்ளை பேரூராட்சி என்பது மிகவும் பின்தங்கிய பகுதி. அந்தக் கிள்ளைப் பேரூராட்சியைப் பார்த்தால், ஒரு சாதாரண கிராமம் போலத்தான் இருக்கும். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம். பல கூட்டுக் கிராமங்கள் சேர்ந்து ஒரு பேரூராட்சி போல இருக்கும். அந்தப் பகுதியிலே இருக்கக்கூடியவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் வழங்கவில்லை என்று சொல்லும்போது மிகவும் வேதனைக்குரிய விஷயமாக இருக்கின்றது. தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்தால்கூட அதனைப் பார்க்கலாம். எனவே, இப்படிப்பட்ட பின்தங்கிய பகுதிகளிலே இருக்கக்கூடிய பேரூராட்சிகளுக்காவது நீங்கள் தொகுப்பு வீடுகள் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத தலைவர் அவர்களே, சட்டப்படி, மத்திய அரசினுடைய வழிகாட்டு நெறிமுறைப்படி பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் வழங்கக்கூடாது என்று திட்டவட்டமாக இருக்கிறது. ஒரு முறை, முதல் முறையாக கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றபோது ஓர் ஆண்டு நாங்கள் அனுமதித்தோம். அனுமதித்து அவர்களுக்குப் பல விளக்கங்களையெல்லாம் தெரிவித்தோம். இருந்தாலும், மறுபடியும் அதை மாற்றவில்லை. இப்போதுகூட ஆட்சி வந்ததற்குப் பிறகு, ஒரு மாநாட்டில் நான் அதை வலியுறுத்தினேன். அவர்கள் அதை ஏற்கவில்லை. எனவே, உறுப்பினர் குறிப்பிடுகின்ற பகுதிகளுக்கு தொகுப்பு வீடுகள் கொடுக்கின்ற அதிகாரம் இல்லை.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிள்ளைப் பேரூராட்சியிலே குடிநீர்ப் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அடிப்படையில் அங்கு தண்ணீர் சப்ளை செய்தாலும் அங்கு சரிவர தண்ணீர் போய்ச் சேருவதில்லை. எனவே, அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்திலே, சேத்தியாத்தோப்பு பேரூராட்சியில்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல், நகராட்சி நிருவாகம், ஆகிய துறைகள் குறித்து பேச

வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துகளை இங்கே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்று நம்முடைய மாமன்றத்திலே விதி 110-ன்கீழ் மாண்புமிகு முன்னவர் அவர்கள் ஓர் அறிவிப்பை வழங்கியிருக்கிறார்கள். அந்த அறிவிப்பு எப்படியிருக்கிறது என்று சொன்னால் பசிக்கு அழும் குழந்தையின் வயிற்றுக்குப் பாலை வார்த்ததுபோல இருக்கிறது. அதேபோல இன்றும் சொல்ல வேண்டும் என்று சொன்னால்,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்று வள்ளுவன் சொன்னானே, அதைப்போல, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இட ஒதுக்கீடு என்று கிடைத்தபோது அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்; சந்தோஷப்பட்டார்கள். ஆனால், இட ஒதுக்கீட்டிலே இருக்கக்கூடிய நீண்ட நாளைய குறைகளையெல்லாம் கோரிக்கையாக பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த நாங்களெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி களைய வேண்டுமென்று வாதிட்ட நேரத்திலே குறைகள் களையப்படும் என்று வாக்குறுதி அளித்தார்கள். அவைகளையெல்லாம் களைந்தெறிவதற்கான குழுக்களை அமைத்து, அந்தக் குழுக்களினுடைய பரிந்துரைகளை இன்று நிறைவு செய்து இருக்கிறீர்கள் என்று சொன்னால், உள்ளபடியே அதை நாங்கள் மீண்டும் எண்ணி மகிழ்ச்சியுறுகிறோம், வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். இப்படி இட ஒதுக்கீட்டிலே இருக்கக்கூடிய குறைகளை எல்லாம் களைந்தெறிந்ததற்கு, அதை நிறைவு செய்ததற்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மீண்டும் நன்றி சொல்லிப் பாராட்டுகின்றோம்.

(பிற்பகல் 12.40)

அதேவேளையிலே எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிய முதல்வர் அவர்கள் தனியார் துறையிலேயும் இடஒதுக்கீட்டைக் கொண்டு வருவதற்கு வழிவகை காண வேண்டும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, இந்தத் துறையைப் பொறுத்தவரையிலே, இன்றைய மானியக் கோரிக்கைகளிலே, 'எழுமின் விழுமின் கருதிய கர்மம் கைகூடும் வரை உழைமின்' என்று



விவேகானந்தர் அவர்கள் சொன்னாரே அதைப்போல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன நோக்கத்திற்காக தன் பொது வாழ்க்கைப் பணியைத் தொடங்கினார்களோ, அதை முழுமையாக நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம் என்ன என்று சொன்னால், கிராம ராஜ்யம், கிராம ராஜ்யம் என்று சொல்வார்கள். கிராமங்கள் நாட்டின் முதுகெலும்பு என்று சொல்வார்கள். அந்தவகையிலே, அண்ணல் காந்தி அவர்களும், ஜவஹர்லால் நேரு அவர்களும், தந்தை பெரியார் அவர்களும், பெருந்தலைவர் காமராசர் அவர்களும் மற்றும் பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் எல்லாம் கிராமங்களினுடைய முன்னேற்றத்திற்காக ஏராளமான திட்டங்களை வகுத்தளித்தார்கள். அந்தவகையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சமத்துவபுரத்தைத் தந்தார்கள். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை வழங்கினார்கள். 'நமக்கு நாமே' திட்டத்தை எல்லாம் தந்தார்கள். ஆகவே, இந்தத் திட்டங்களையெல்லாம் கண்ணுற்ற நாங்கள் பெரியார் பெயரிலே சமத்துவபுரம் கண்ட சரித்திர நாயகன் என்றும், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை வகுத்தளித்த அறிவுலக மேதை என்றும் 'நமக்கு நாமே' திட்டத்தைத் தந்த நாடு போற்றும் உத்தமர் என்றும் இந்த நேரத்திலே நான் வெகுவாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேநேரத்தில், தந்தை பெரியார் சொன்ன கூற்றுக்கு இணங்க பெண் உரிமை பேண வேண்டும் என்றும், அடிமைத்தனம் அகற்றப்பட வேண்டும் என்றும் உள்ளாட்சி அமைப்புகளிலே 33 விழுக்காடு இடங்களைப் பெண்களுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படி எல்லா நிலைகளிலேயும் அடித்தட்டு மக்களுடைய முன்னேற்றத்திற்காக திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக, உள்ளாட்சி நிருவாகம் என்பது அன்றாடம் அடித்தட்டு மக்களுடைய அடிப்படை வசதிகளைப் பேணி காப்பதுடன் மக்களிடையே நேரடியாகத் தொடர்பும் கொண்டது. ஆகவே, இப்படி அடித்தட்டு மக்களுக்காக அடிப்படைத் தேவைகளையெல்லாம், வசதிகளை எல்லாம் செய்து கொடுத்ததை இந்த நேரத்திலே, நாங்கள் மட்டும் பாராட்டவில்லை, கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய சாதாரண, சாமானிய மக்கள் எல்லாம் பாராட்டுகின்றார்கள். ஏன் என்று சொன்னால் குடிநீர் வழங்கல் துறையால் எல்லா கிராமங்களிலேயும் பாதுகாக்கப்பட்ட

குடிநீர் வழங்கப்படுகின்றது என்று மக்கள் சொல்கிறார்கள். சாலை வசதியே இல்லாத கிராமங்களில் எல்லாம் தார்ச் சாலைகள் போடப்படுகின்றன என்று சொல்லி மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த வகையிலே நம்முடைய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப்பற்றிச் சொல்கின்ற நேரத்திலே, இந்தத் துறைக்கு இலக்கணம் வகுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உள்ளாட்சித் துறை என்பது, குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வார்த்தைகள் கடுமையாக இருக்கும். ஆனால், வீரராய் அவருடைய செயல்பாடு என்பது எளிதாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பற்றிச் சொல்கின்ற நேரத்திலே ஒரு தொகுதிக்கு ஓர் ஊராட்சி என்று வழங்குகிறீர்கள். அந்தத் தொகையை கொஞ்சம் குறைத்து ஓர் ஒன்றியத்திற்கு மூன்று என்ற வகையிலே வழங்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

1986-ஆம் உள்ளாட்சிகளுக்குத் தேர்தல்கள் நடந்தன. உள்ளாட்சிகளுக்குத் தேர்தல்கள் நடந்த நேரத்திலே, ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவராக நான் இருந்தேன். எங்களுடைய பதவிக்காலம் மூன்று ஆண்டுகாலமாக இருந்தது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1989-லே மீண்டும் முதலமைச்சராக வந்தபிறகு அந்த மூன்று ஆண்டுப் பதவிக்காலத்தை மாற்றி ஐந்து ஆண்டுகாலம் என்று வழங்கியதைப் பார்க்கிறபோது அன்றைய காலத்திலேயிருந்தே உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதலான அதிகாரம் வழங்க வேண்டும் என்ற அளவிலே செயல்பட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணி மகிழ்ந்து நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தவகையிலே உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதலான அதிகாரம் வழங்கியிருக்கிறோம் என்று சொல்லியிருந்தாலும்கூட, மாநில அரசாங்கம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கக்கூடிய நிதி என்பது மிகக் குறைவாக இருக்கிறது. 8 சதவிகிதமாக இருப்பதைக் கூடுதலாக ஆக்கி வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



மத்திய அரசிடமிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைக்கக்கூடிய நிதியாதாரங்கள் குறைவாக இருக்கின்றன என்று எனக்கு முன்னாலே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். கூடுதலாக நிதி பெற வேண்டும் என்று கூறினார்கள். நிச்சயமாக வரக்கூடிய காலகட்டங்களிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில இருக்கின்ற காரணத்தாலே, மத்திய அரசிலேயிருந்து அதிகமான நிதி உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-45

வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்திலே சில குறைகளெல்லாம் இருக்கின்றன. பொதுமக்கள் நேரடியாக அந்த வேலையிலே ஈடுபட வேண்டும், அவர்கள் பயன்பெற வேண்டும் என்று சொல்லக்கூடிய அந்த நல்ல திட்டத்திலே, இன்றும் நம்முடைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களும், மேல் மட்டத்திலே இருக்கக்கூடிய உயர் அதிகாரிகளெல்லாம் ஈடுபட்டு சீரிய முறையிலே செயலாற்றினாலும்கூட, அடிமட்டத்திலே இருக்கக்கூடிய அந்த அதிகாரிகளெல்லாம் பினாமி பெயரிலே contract-ஐ எடுத்துக்கொண்டு, அதற்குப் பங்கம் ஏற்படக்கூடிய வகையிலே செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த முறையையெல்லாம் மாற்றியமைக்க வேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய தர்மபுரி மாவட்டம் என்பது மிகப் பின்தங்கிய மாவட்டம் மற்ற மாவட்டங்களிலேயெல்லாம் மிகப்பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களெல்லாம் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) கோரிக்கைகள் குறித்துப் பேச நிறைய இருக்கின்றன. எல்லோருக்கும் நிறைய நேரம் கொடுத்தீர்கள். எங்கள் கட்சி சார்பிலே நான் ஒருவனதான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரமெல்லாம் சரியாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது

**திரு. ஜி.கே. மணி:** கூட்டுக் குடிநீர்த் திட்டம் தமிழ்நாட்டிலே எந்தவகையிலே நடைமுறைப்படுத்தப்படுகிறதோ அதைப்போல, தர்மபுரி

மாவட்டத்திலே காவிரிக் குடிநீர்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்று சொல்லி எல்லா மக்களும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நானும் பலமுறை இந்த மன்றத்திலே வற்புறுத்தியிருக்கிறேன். தர்மபுரி மாவட்டத்திலுள்ள காரிமங்கலத்திற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வந்த நேரத்திலே அந்த மக்களுக்கெல்லாம் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். மக்களுடைய எதிர்பார்ப்புகளை உணர்ந்து, அரசின் பரிசீலனையிலே இருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள் மாண்புமிகு முதல்வரவர்களே, கருணை உள்ளம் கொண்ட நீங்கள், இந்த 1,008 கோடி ரூபாய்த் திட்டத்தை எப்படியாவது நடப்பாண்டிலேயே எடுத்துக்கொள்வது குறித்து இந்த மன்றத்திலே இன்றே நீங்கள் அறிவிப்புகளை வெளியிட வேண்டுமென்று தர்மபுரி மாவட்ட மக்களுடைய சார்பிலே உங்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி நகராட்சியிலே செங்கொடிபுரம் என்ற ஒரு பகுதி இருக்கிறது. அங்கே இருக்கக்கூடியவர்களெல்லாம் சாதாரண தொழிலாளிகள், பன்றி மேய்ப்பவர்கள். அந்த நகராட்சியிலே கடைநிலை ஊழியர்களாகப் பணியாற்றக் கூடியவர்கள். அவர்கள் குடியிருப்புப் பகுதியை eviction—காலி செய்யப் போவதாக அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் கொடுக்கக்கூடிய வகையிலே, அங்கே தொடர்ந்து வாழ்வதற்கு, வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பெண்ணாகரம் தொகுதியிலே பாப்பாரப்பட்டி, பெண்ணாகரம் என்கிற இரண்டு பேரூராட்சிகள் இருக்கின்றன. அந்தப் பேரூராட்சிகளிலெல்லாம் குடிநீர்க் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. அந்தக் குடிநீர்க் கஷ்டத்தைப் போக்கக்கூடிய வகையிலே இரண்டு பேரூராட்சிகளுக்கும் நடப்பாண்டிலே குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பெண்ணாகரம் என்பது இப்பொழுதுதான் வளர்ந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு சின்ன நகரம். அந்தப் பேரூராட்சியிலே நவீன கழிப்பறை வசதியுடன்கூடிய பேருந்து நிலையமே கிடையாது. ஆகவே, இப்பொழுது இருக்கக்கூடிய குறுகலான அந்தப் பேருந்து நிலையத்தை மாற்றி புதிய இடத்திலே ஒரு நவீன கழிப்பறை வசதியுடன்கூடிய பேருந்து நிலையத்தை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) விரைவில் பேச்சை



முடித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே பெண்ணாகரம், நல்லம்பள்ளி என்கிற இரண்டு ஒன்றியங்கள் இருக்கின்றன. அதிக பரப்பளவுள்ள ஒன்றியங்கள். ஏறக்குறைய 35, 60 ஊராட்சிகள் இருக்கின்றன. அந்த 2 ஒன்றியங்களையும் ஒன்றாக இணைத்து 3 ஒன்றியங்களாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, எங்களுடைய தொகுதியிலே பெருமானேரியிலே மாணவருக்குப் போக ஓடை தடையாக இருக்கின்ற காரணத்தாலே அது தீவைப் போல இருக்கிறது. அதேபோல, சின்னம்பள்ளியிலேயிருந்து அரகாசநள்ளி, பெரும்பாளையிலேயிருந்து செம்மனூர், இவைகளுக்கெல்லாம் செல்வதற்கு ஓடைகள் தடையாக இருக்கின்ற காரணத்தினால் அவைகள் எல்லாம் ஒரு தீவைப்போலக் காட்சியளிப்பதாலே உள்ளாட்சித் துறையின் மூலமாக அங்கே சிறு பாலம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒகேனக்கல் என்பது மிகப்பெரிய சுற்றுலாத் தலம். அங்கே, சுற்றுலாத் துறையின்மூலம் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்குப் பொருளாதார நெருக்கடியிருக்கின்றது என்றும், நிதி ஆதாரம் இல்லையென்றும், மாண்புமிகு அமைச்சரவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் காரணம் சொல்கிறார்கள். ஆகவே, உள்ளாட்சித் துறையின்மூலம் அங்கே நிதியாதாரங்களை ஒதுக்கி, அடிப்படை வசதிகளைச் செய்து, ஒகேனக்கல் சுற்றுலா மையத்தை மேம்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திண்டிவனத்திலே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்பு அலுவலர் கோட்டம் வேண்டும் என்ற நீண்ட நாளைய கோரிக்கை ஒன்று இருக்கிறது. அதுபோல, கடலூர் நகரிலே நகர்க் கோட்டம் ஒன்று அமைக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இருக்கிறது. என்னுடைய பெண்ணாகரம் தொகுதியிலேகூட ஓர் உதவிக் கோட்ட அலுவலகம் தேவை என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த 3 அலுவலகங்களும் வருவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தெரு விளக்கு வசதி. நான் பலமுறை இந்த மன்றத்திலே பேசியிருக்கிறேன். மின்சார தெரு விளக்கு வாடையே படாத கிராமங்கள் எங்களுடைய தொகுதியிலே பல இருக்கின்றன என்று

சொல்லிக்கொண்டிருக்கிறேன். அதற்குக் கூட ஊராட்சியிலேயிருந்து நிதியைச் செலுத்துவதற்கு ஊராட்சியிலே நிதியாதாரம் இல்லை. அந்தவகையிலே உள்ளாட்சித் துறையின்மூலமாக நிதியை ஒதுக்கி அந்தக் கிராமங்களுக்கெல்லாம் தெருவிளக்கு வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒன்றே ஒன்று. இப்பொழுது உள்ள மிகப்பெரிய குறை என்னவென்று சொன்னால், தார்ச்சாலை போடுவதற்கு தார் வழங்குகிறீர்கள், தார் வழங்குகின்ற நேரத்திலே அந்தத் தாருக்கும், தாரோடு சேர்ந்து இருக்கக்கூடிய Drum-முக்கும், Barrel-க்கும் சேர்த்து விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. அந்தத் தாரை எடுத்துக்கொண்ட பிறகு, சில ஒன்றியங்களிலே மீண்டும் தார் Drum விலையை contractor-களிடமிருந்து திரும்பப் பெறுவதற்கு ஆணையெல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது. Bill தொகையில் பிடித்தம் செய்துகொண்டு இருக்கிறார்கள். இது ஒருசில ஒன்றியங்களிலே, குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில், நல்லம்பள்ளி போன்ற . . .

பிற்பகல் 12-50

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தார் loose-ஆக வாங்குகிறபோது பல தவறுகள் நடக்கின்றன. தார் லாரியில் வரும்போதே கலப்படமாக மாற்றப்படுகிறது. பலமுறை இது கண்டுபிடிக்கப்பட்டு, அதற்குப்பிறகு ஆரம்பத்திலேயே அது seal வைக்கப்பட்டு, கடைசிவரையில் அந்த Drum-மோடுதான் வாங்க வேண்டும், பிறகு Drum-ஐ வேண்டுமானால் விற்பனை செய்து கொள்ளலாம் என்ற அளவுக்குத்தான் நாம் செய்துகொண்டிருக்கிறோம். அந்த loose தாரிலே செய்யப்படுகிற சில கெடுதல்களை, கலப்படங்களைத் தடுப்பதற்காகத்தான் இதைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது ஊராட்சிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய ஊராட்சி உதவியாளர்கள், பகுதி நேர எழுத்தர்கள் எல்லாம் குறைந்த ஊதியத்திலே பணியாற்றி வருகிறார்கள். பணி நிரந்தரமும் இல்லை, பணிப் பாதுகாப்பும் இல்லாத காரணத்தாலே, ஊராட்சி உதவியாளர்கள், பகுதி நேர எழுத்தர்கள், கைபம்ப் பொருத்துநர்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைப் பராமரிக்க operators-ஆக இருந்து



பணியாற்றுகிறவர்கள், பேரூராட்சிகளில் பணியாற்றககூடிய தற்காலிகப் பணியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள் எல்லாம் நீண்டகாலமாகக் குறைந்த ஊதியத்தில் பணியாற்றி வருகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு இருக்கிற குறைகளை எல்லாம் களையக்கூடிய வகையிலே நம்முடைய அரசு அவர்களுக்கு ஊதிய உயர்வையும், பணி நிரந்தரத்தையும் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசியது போதும், உட்காருங்கள். திரு. ஜி. சொக்கலிங்கம்.

**திரு. ஜி.கே. மணி:** ஒரே ஒரு வரியில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதிக நேரம் எடுத்துக்கொண்டுவிட்டீர்கள். திரு. ஜி. சொக்கலிங்கம்.

**திரு. ஜி. சொக்கலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டுக்கான ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்த தலைவர் கலைஞர் அவர்களைப் பாராட்டக்கூடிய விதத்திலே, மாநகராட்சியில், குறிப்பாக கை ரிக்ஷாவை ஒழித்து அவர்களுக்கு சைக்கிள் ரிக்ஷா கொடுத்ததற்காகவும், மனிதனை வைத்து மனிதன் இழுத்ததை மாற்றியமைத்ததற்காகவும் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தெருவில் திரிந்த தொழு நோயாளிகளுக்கு இல்லம் அமைத்து, அந்த மனிதர்களையும் மனிதர்களாக மதித்து வாழ்வு தந்ததோடு மட்டுமல்லாமல் ஆண்டுதோறும் அவர்களுக்கு உணவும் உடையும் கொடுத்த தலைவர் அவர்கள், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மனிதக் கழிவுகளை மனிதனே சுமக்கும் கொடுமையான இழிவினை மாற்றி, மனித நேயம் காத்த கருணை உள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள், ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்பவர். இந்த மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தலின்போது சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றுகிற விதத்தில் 1996 ஆம் ஆண்டு தேர்தலில் அன்றையதினம் வெற்றிபெற்றபோது, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவோம், உள்ளாட்சி

மன்றங்களுக்கு நிருவாகிகளைக் கொண்டு வருவோம் என்று சொன்ன அடிப்படையில், இப்போது 38,391 பெண்களும், 24,148 ஆதிதிராவிடர்களும், பழங்குடியினர்களும் பிரதிநிதிகளாக வந்திருக்கிறார்கள் என்றால், தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னதைச் செய்வார்கள் என்பதற்கு இது எடுத்துக்காட்டு என்று சொல்ல விரும்புகின்றேன்.

ஊராட்சி மன்றங்கள் சிறப்பாகச் செயல்பட, தலைவர் கலைஞர் அவர்கள் கிராம சபைக் கூட்டங்கள் நடத்த வேண்டுமென்றும், மக்கள் குறைகளை அங்கே நேரடியாகச் சொல்லி, குறைகளைப் போக்கிக் கொள்ளவும், காந்தி கண்ட கிராம ராஜ்யத்தை இப்போது நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் சொல்கிற குறைகளை எல்லாம் கேட்கிறபோது தலைவர்கள் எல்லாம் வேதனைப்படுகிறார்கள் என்று இங்கேகூட சில உறுப்பினர்கள் சொன்னார்கள். தலைவர்கள்மீது பிரச்சினை வருகிற நேரத்தில், உள்ளாட்சி மன்றத்திலே குறைகளைச் சொல்ல வேண்டும் என்றால், அப்படிப்பட்ட கிராம சபை வேண்டுமென்று நான் சொல்ல கடமைப்பட்டுள்ளேன். அதேநேரத்தில், கிராம சபைகளின் மூலமாக, உதாரணமாக துணைத் தலைவராக இருக்கிற ஒருவர்மீது ஒரு குற்றம் சொல்ல வேண்டுமென்றால், நேரடியாகச் சொல்வதற்கு கிராம சபை அவசியம் என்பதை என்னால் சொல்ல முடிகிறது. அதேபோல், மாநில நிதிக் குழுவின் பரிந்துரைப்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி பகிர்ந்து அளிக்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக, முத்திரைத்தாள் மேல்வரி, சிறு கனிமங்கள் உரிமக் கட்டணம் மூலம் அளிக்கப்படுகிறது. உள்ளாட்சி நிறுவனங்களுக்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி காலதாமதமாக வருவதால் உள்ளாட்சி மன்றங்களில் வளர்ச்சிப் பணிகள் நடைபெறுவது தாமதப்படுகிறது. எனவே, குறிப்பிட்ட காலத்திற்குள் உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதியைத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமச் சாலைகளும் உள்ளக வளர்ச்சித் திட்டங்களும் இங்கே பல உறுப்பினர்கள் கூறியதைப்போல, ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பஞ்சாயத்து நிதியிலிருந்து கிராமச் சாலைகள், குறிப்பாகத் தார்ச் சாலைகள் போடப்படுகின்றன. இப்போது எங்கே சென்றாலும், கலைஞர் ஆட்சியில் தார்ச் சாலைகள் போடப்பட்டுள்ளன. குறிப்பாக ஒவ்வொரு குக்கிராமங்களில்கூட தார்ச் சாலைகள் இப்போது போடப் பட்டிருக்கின்றன. அதனால், பொதுமக்கள், தாய்மார்கள் மற்றவர்கள் எல்லாம், நாங்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் நேரத்திலேகூட, கிராமச் சாலைகளில் இதுவரை நாங்கள் தார்ச் சாலைகளைப் பார்த்ததில்லை என்று மகிழ்கின்ற அளவுக்கு இப்போது குக்கிராமங்களில் எல்லாம் தார்ச்சாலைகள் போடப்பட்டிருக்கின்றன என்றால், அதற்குக் காரணம் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் அதற்கான நிதி ஒதுக்கப்பட்டு, கிராம மக்கள் எல்லாம் பயனடைய வேண்டுமென்று தார்ச் சாலைகளைப் போட்டுத் தந்திருக்கிறார்கள்.



பிற்பகல் 12-50

அடுத்து, தெருவிளக்குகள், சோடியம் விளக்குகள் அவற்றைப் பஞ்சாயத்து நிதியிலிருந்து போடுவது குறித்து குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். ஆனால், சில பின்தங்கிய பஞ்சாயத்துகளில், வருவாய் இல்லாத பஞ்சாயத்துகளில், நிதிப் பற்றாக்குறை இருக்கிறது. மின் கம்பங்கள் நட்டவுடனே, மின் இணைப்புக் கொடுப்பதற்கு பஞ்சாயத்து நிதியிலிருந்து, பணம் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படிப் பணம் கட்டுவதற்குப் பஞ்சாயத்தில் நிதி இல்லாத நிலைமை இருப்பதால் அமைச்சரவர்கள், பின்தங்கிய பஞ்சாயத்துகளுக்கு, நிதிப் பற்றாக்குறை உள்ள பஞ்சாயத்துகளுக்கு கணிசமான மானியம் வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதி மூலம்தான் இப்படிப்பட்ட வருவாய் இல்லாத பஞ்சாயத்துகளும், சிறு சிறு பஞ்சாயத்துகளும் பயன்பெறுவதற்கு ஏதுவாக இருக்கும்.

இன்றைக்கு உறுப்பினர்கள் கூறியதுபோல, ஜீவன்தாரா கிணறைப் பொறுத்தவரை, எல்லா ஒன்றியங்களிலும் அதற்காகக் கொடுக்கப்படுகின்ற நிதி போதாது. இப்போது இருக்கின்ற நிலையிலே பார்க்கின்றபோது, ஜீவன்தாரா கிணறுக்கு 40 ஆயிரம் ரூபாய் கொடுக்கின்றார்கள். இதனால், சிலபேர், உண்மையானவர்கள் அந்த ஜீவன்தாரா கிணறை எடுத்துச் செய்ய முடியவில்லை. அதனால், ஜீவன்தாரா கிணறுக்கு என்று ஒதுக்கப்பட்ட பணம் சில ஒன்றியங்களில் இருந்து திரும்பி அனுப்பப்படுகிறது. ஆகையினால், ஜீவன்தாரா கிணறு வெட்டும் பணியை குறிப்பிட்ட நபர்களுக்கு அதிகாரிகள் கொடுத்து, அமைச்சரவர்களும் அதை நேரில் பார்வையிட வேண்டும். மேலும், அந்த நிதியைக் கூடுதலாக ஒதுக்கித்தர வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொகுப்பு வீடுகளைப் பொறுத்தமட்டில், இங்கே உறுப்பினர்கள் கூறியதுபோல, இப்போது ஒரு பஞ்சாயத்துக்கு 20

வீடுகள் என்று கொடுக்கின்றார்கள். இப்படி 20 வீடுகள் என்று கொடுக்கின்றபோது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சரி, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் சரி, தொகுப்பு வீடுகள் போதவில்லை. ஆகவே, தொகுப்பு வீடுகள் 20 என்று கொடுக்கப்படுவதை 40 ஆக உயர்த்தித் தர வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தொகுப்பு வீடுகளுக்கு ரூபாய் 32 ஆயிரம் கொடுக்கின்றார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஏதோ எங்களிடத்தில் வைத்துக்கொண்டு, கொடுப்பதைக் குறைத்துக் கொடுப்பதைப்போல குறிப்பிடுவதால் எல்லோருக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகக் குறிப்பிடுகிறேன். 71 ஆயிரம் வீடுகள் கட்ட திட்டமிடப்பட்ட இடத்தில் 46 ஆயிரம் வீடுகளாக மத்திய சர்க்கார் குறைத்து அனுப்பியிருக்கிறது. அதற்குள்ளேதான் நாம் செய்ய முடியும். அதிலேயும், பாதிப் பங்கை நம் மாநில சர்க்கார் கொடுக்கின்ற சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. அதைக் கொடுப்பதற்கு மீண்டும் தயாராக இருக்கிறோம். ஆனால, அவர்கள் அதிகரித்துக் கொடுப்பார்களேயானால், அதிகரித்து உங்களுக்கும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சொக்கலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும்கூட, சில கிராமங்களில் இதனால் இப்போது பிரச்சினையே வருகிறது. எனவே, 40 வீடுகளாக உயர்த்தி, கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சரவர்களைப்பற்றி அதிகமாகச் சொல்ல வேண்டுமானால், எங்கு பார்த்தாலும் குடிதண்ணீர் இல்லை என்கிற பிரச்சினையே கிடையாது. எந்த இடத்திற்குப் போனாலும், என்னுடைய ஒன்றியத்திலேகூட கிட்டத்தட்ட 68 கிராமங்களில் இப்போது குடிநீர்த் தொட்டிகள் வழங்கப்பட்டுவிட்டதால், குடிநீர் விஷயத்தில் இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் கூறியதுபோல, 'தண்ணீர் அமைச்சர்' என்றே சொல்லலாம். எல்லா கிராமங்களிலும் தண்ணீர்ப் பிரச்சினையே இல்லை என்று சொல்கின்ற அளவுக்கு, எல்லா கிராமங்களுக்கும் குடிதண்ணீரை வழங்கி ஒரு சிறப்பான பெயரை எடுத்துக்கொண்டு வருகின்ற அமைச்சரவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்... (குறுக்கீடு)



**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரைப் பார்த்து 'தண்ணீர் அமைச்சர்' என்று சொன்னது மாதிரி இருக்கிறது. அது பொருத்தமாக இருக்காது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சொக்கலிங்கம், சீக்கிரம் பேசி முடியுங்கள், நேரம் அதிகமாகிவிட்டது.

**திரு. ஜி. சொக்கலிங்கம்:** உள்ளாட்சி அமைப்புகளில் மூன்று அடுக்கு முறை பற்றி எல்லோரும் கூறினார்கள். ஆனால், என்னைப் பொறுத்தமட்டில், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மாவட்டக் குழு உறுப்பினர்கள் என்று சொல்கின்றபோது, மாவட்டக் குழு உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்குகின்றார்கள். ஆனால், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களுக்கு எந்த நிதியும் கிடையாது. அவர்களுக்கு எந்தவிதமான பணியும் கிடையாது. சாதாரண ஊராட்சி மன்றத் துணை தலைவருக்காவது, cheque-லே கையெழுத்துப் போடுகின்ற அதிகாரம் இருக்கிறது. ஆனால், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களுக்கு எந்தவிதமான பணியும் இல்லை. ஆகவே, ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களுக்கும் அமைச்சரவர்கள் அதிகாரம் கொடுப்பதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

என் தொகுதியிலே எல்லா கிராமங்களிலும் மேய்க்கால் புறம்போக்கிலே வீடு கட்டியிருக்கிறார்கள். பஞ்சாயத்தும் அதற்கு அனுமதி கொடுத்திருக்கிறது. அது சென்னையைச் சுற்றியுள்ள பகுதியாக இருக்கிற காரணத்தால், இந்த ஊராட்சி மன்றம் தீர்மானம் கொடுத்து வருவாய்த் துறை மூலமாக இந்த வீட்டுமனை கிடைக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கைகள்மீது பேச அனுமதித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் என்னுடைய தொகுதிப் பிரச்சினையைப் பற்றிப் பேசி முடித்து விடுகிறேன். இராசிபுரம் ஒரு மக்கள் நெரிசல் நிறைந்த பகுதி, நிறைய ஜனத்தொகை கொண்ட பகுதி அங்கே போக்குவரத்து மிக நெரிசலாக இருக்கிற காரணத்தால் ஒரு By-pass சாலை வேண்டுமென்று கடந்த 3 ஆண்டுகளாக நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

## 4. அறிவிப்பு

### உறுப்பினர்களுக்கு மதிய உணவு ஏற்பாடு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனைத்து உறுப்பினர்களுக்கும் நாமக்கல் கவிஞர் மாளிகையில் பகல் உணவிற்கு ஏற்பாடு செய்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 2. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 48—குடிநீர் வழங்கல்

### (இ) கோரிக்கை எண் 49—நகராட்சி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் தொடர்ச்சி. திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இதிலே ஒரு நிமிடம் போய்விட்டது. நகர் மற்றும் ஊரமைப்பு சார்பாக கிட்டத்தட்ட 20 இலட்சம் ரூபாயில் அந்த By-pass சாலையைப் போடுவதற்காகப் பணம் ஒதுக்கி இரண்டு வருடங்கள் ஆகின்றன. ஆனால், அதற்கான நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்காகப் பணம் ஒதுக்க முடியாத காரணத்தால், எந்த பணத்திலே அதற்குச் செலவு செய்ய முடியும் என்கிற பிரச்சினை காரணத்தால், அந்த By-pass சாலைத் திட்டம் தடைபட்டு இருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை, சென்ற ஆண்டே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படுகிற தொகையில், 25 இலட்சம் ரூபாயை By-pass சாலையைப் அமைப்பதற்கு வழங்கி விடுங்கள் என்று கேட்டேன். அவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து பேசி கொடுப்பதாகக் கூறினார். ஆனால் அது முடியவில்லை. இந்த ஆண்டும் நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கபபட்டிருக்கிற தொகையான 50 இலட்ச ரூபாயில், என்னுடைய விருப்பத்திற்கு, அதாவது சட்டமன்ற உறுப்பினருடைய விருப்பத்திற்கு செலவு செய்யக்கூடிய 25 இலட்ச ரூபாயை By-pass சாலை அமைப்பதற்குத் தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன். நீங்கள் அதைச் சிறப்பு அனுமதியாக முதலமைச்சர் அவர்களிடம் இருந்து வாங்கித் தர வேண்டும் அல்லது அந்தத் திட்டத்திற்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்காக நீங்கள் எந்த



வகையிலாவது உதவி செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பூலாம்பட்டி-ராசிபுரம் குடிநீர் திட்டத்தைப் பொறுத்தவரையில், அந்தத் திட்டம் முடிவு அடைந்துவிட்டது என்று கூறியிருக்கிறார்கள். தமிழக முதலமைச்சர் அவர்கள் நாமக்கல் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் வந்தபோதுகூட அந்தத் திட்டம் தொடங்கப்படுவதாக இருந்தது. ஆனால், அந்தத் திட்டம் முழுமையாக முடிவடையவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற வாரம் அந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்காக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே வருவதாகக் கேள்விப்பட்டேன். ஆனால், அந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இன்னும் அது முழுமையாக முடிவடையவில்லை. பல இடங்களில், குழாய்கள் வெடித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே உடனடியாக பூலாம்பட்டி-ராசிபுரம் குடிநீர் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்துவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 61 கோடி ரூபாய் செலவிலே, பட்டணம், சீறாப்பள்ளி, புதுப்பட்டி ஆகிய பேரூராட்சிகள் அடங்கிய குடிநீர்த் திட்டத்தை நீங்கள் சென்ற ஆண்டு அறிவித்தீர்கள். அதிலே முதல கட்டமாக புதுப்பட்டி, சீறாப்பள்ளி ஆகிய பேரூராட்சிகளை அறிவித்து இருக்கிறீர்கள். நாமகிரிப்பேட்டையை....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்பியதைப்போல ஒரு கடிதத்தை மாண்புமிகு உறுப்பினர் சுந்தரத்திற்கும் அனுப்பியிருக்கிறோம். அதை அவர் படித்தாரா? அதிலே இந்த விவரம் இருக்கிறதா? அதில் இருப்பது, எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய திட்டங்களில் நிச்சயமாகச் சேர்க்கப்படும், எடுத்துக்கொண்டு முடிக்கப்படும். அநாவசியமாக அரசியல் செய்து நேரத்தை வீணடிக்க வேண்டாம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** என்னைத்தான் நீங்கள் பேசவிட மாட்டேன் என்கிறீர்கள். நான் பேசுவதை முழுமையாகக் கேட்டுவிட்டு சொல்லுங்கள், நான் ஒத்துக்கொள்கிறேன். நான் அதைப படித்தேன். அதிலே என்னவென்றால், பட்டணம், சீறாப்பள்ளி மற்றும் புதுப்பட்டி ஆகிய 3 பேரூராட்சிகளிலும் 61 கோடி ரூபாய்க்கான திட்டம், இது முதல் கட்டம். இரண்டாம் கட்டம், நாமகிரிப்பேட்டை, சேந்தமங்கலம், காளப்பநாயக்கன்பட்டி என்னுடைய கோரிக்கை இரண்டாம் கட்டத்தில் இருக்கிற நாமகிரிப்பேட்டை பேரூராட்சியையும் முதலாவது கட்டத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்பதுதான்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திட்டம் என்பது எங்கிருந்து தொடங்கி வருகிறதோ, அந்த இடம் முதல் கட்டமாகவும், முடிகிற இடம் இரண்டாவது கட்டமாகவும்தான் இயற்கையாக அமைகிறது என்பது தெரியாமலேயே பேசிக்கொண்டிருந்தால் எப்படிச் சொல்வது?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இதிலே நேரத்தை நீண்டிக்க விரும்பவில்லை. அடுத்தபடியாக, இன்றைக்கு, இங்கு பேசியவர்கள் அனைவருமே உள்ளாட்சிக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பதுபற்றி நிறையப் பேசினார்கள். நாளைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட கோரிக்கை வருகிறது. அதில் என்னைப் பேச விடுவார்களோ, விடமாட்டார்களோ, தெரியாது. ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருமே, தேர்ந்து எடுக்கப்பட்ட ஊராட்சிமன்றத் தலைவர்களுக்கும், ஊராட்சிகளுக்கும் அதிகாரங்களைக் கேட்கிறோம். நீங்களும் இதிலே சில அதிகாரங்களைக் கொடுத்து இருக்கிறீர்கள். இது போதுமா? போதாதா? தெரியவில்லை. அதுபற்றி நான் பேச வரவில்லை. ஆனால், என்னுடைய கேள்வி இங்கே அமர்ந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில rubber stamp ஆகத்தான் இருக்கிறார்கள்.

பிற்பகல் 1-05

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 ஆண்டுகளுக்கு முன்னால், 3 ஆண்டு காலத்திற்கு முன்னால், அந்த 5 ஆண்டுகால ஆட்சியில் என்னென்ன அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன? எப்படியெல்லாம் நடத்தப்பட்டது? இப்போது ஏன் இப்படி நடக்கின்றது? என்று சொன்னால் பார்க்கின்றவர்களுக்கும், கேட்கின்றவர்களுக்கும் நன்றாக இருக்கும். அதுதான் முக்கியம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** உங்களுடைய கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களே பலபேர் என்னிடம் கையெழுத்து வாங்கியதோடு, இதைப்பற்றி நீங்கள் பேசுங்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அப்படிப்பட்ட இளிச்சவாயர்களும் அல்ல, கட்டுப்பாடு இல்லாதவர்களும் அல்ல,



நாணயம் இல்லாதவர்களும் அல்ல, நம்பிக்கை இல்லாதவர்களும் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்-குழப்பம்)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கோபப்படக்கூடாது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய Jeep-களைப் பயன்படுத்த முடியவில்லை; அங்கே அதற்கு 50 லிட்டர் பெட்ரோல், டீசல் கொடுக்கிறார்கள். அந்த பெட்ரோல், டீசல் கொடுப்பதையும் தற்போது நிறுத்திவிட்டார்கள் என்று என்னிடம் கையெழுத்து கேட்டார்கள், நானும் கையெழுத்துப் போட்டிருக்கிறேன். இது உண்மையா? பொய்யா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** அது ஒரு கோரிக்கையே தவிர, வேண்டுகோளே தவிர, கட்டுப்பாடற்ற நிலையிலோ அல்லது இந்த ஆட்சியைக் குறை சொல்கிற முறையிலோ அல்லது அதிகாரம் இல்லை என்பதையோ காட்டுவது அல்ல. அது ஒரு கோரிக்கை. அதை நிறைவேற்றித் தருவதற்கு எல்லோரும் கையெழுத்துப் போடுங்கள் என்று கேட்டிருப்பார்கள். அதில் என்ன தப்பு இருக்கிறது?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் தப்பு என்று சொல்லவில்லை. அதை consider பண்ணுங்கள் என்றுதான் சொல்கிறேன். ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் அமர்ந்து சட்டமன்ற உறுப்பினர்கள் மனு வாங்க தனியாக ஓர் அறை இல்லை. அதிலேதான் நிறைய பிரச்சினைகள் வருகின்றன. சென்றமுறைகூட, சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பொதுவான இடத்தில், ஒரு மையப் பகுதியில் ஒரு வீடு அல்லது அலுவலகம் வேண்டுமென்று கேட்டோம், பரிசீலிக்கலாம் என்று சொன்னார்கள். அதுகுறித்து இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அதுபோல, அதிகாரத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். ஊராட்சி மன்றத்தைப் அதிகாரத்தைப் பொறுத்தவரையில் ஊராட்சி மன்றத் தலைவர்களாக பெண்கள் பொறுத்தவரையில், ஊராட்சி மன்றத் தலைவர்களாக மாண்புமிகு 33 சதவீதம் பேர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்கள்கூட இங்கே சொன்னார்கள். தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்கள்கூட — இங்கே சொன்னார்கள். நான் போக பெண்களுடைய கணவர்களுடைய விவரங்களுக்குள்ளே நான் போக விரும்பவில்லை. **

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1999 மே 12

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் வரும்போது. பொத்தாம் பொதுவாகச் சொன்னால், நானும் நடவடிக்கை எடுக்க முடியாது, அது உண்மையாக இருக்கும் என்று நம்பவும் முடியாது. எந்த ஒன்றியத்தில், எந்த ஆணையர், எந்த ஊராட்சி மன்றத் தலைவர், எப்படிப்பட்ட நிலையில் நடந்தார் என்பதை இங்கே எழுதிக் கொடுத்தால், நாளையே நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன். பொத்தாம் பொதுவான குற்றச்சாட்டுகள் தயவுசெய்து குறிப்பேட்டில் இடம் பெறக்கூடாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எழுதிக் கொடுக்கிறேன். இதற்கு ஏன் நீக்கச் சொல்கிறீர்கள்? எழுதித் தருகிறேன். அடுத்தபடியாக, கிராமப் பஞ்சாயத்துகளுக்கு கொடுக்கின்ற . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள், குறிப்பிட்ட எந்த இடத்தில் அந்தமாதிரி நடந்தது, எந்த அதிகாரி என்று கேட்டார்கள். (குறுக்கீடு) நீங்கள் எழுதித் தரும் வரையில் நீங்கள் பேசியது அவைக் குறிப்பில் இருக்காது நீங்கள் பொதுவாகச் சொன்ன குற்றச்சாட்டு எதுவும் அவைக் குறிப்பில் இடம் பெறாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, I.R.D.P. கடன்கள், Group housing போன்ற திட்டங்களைப் பொறுத்தவரையில், நகரப் பஞ்சாயத்திற்கு இல்லை என்று சொல்லிக் கொண்டே இருந்தால் அது சரியாக இருக்காது. நீங்கள் மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவர்கள் 5 ஆண்டு கால ஆட்சிக் காலத்தில் என்ன கொடுத்துவிட்டார்கள்? நான் சொல்வது, மத்திய அரசைப பொறுத்தவரையில், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 73, 74-வது திருத்தத்தின் அடிப்படையில் ஊராட்சிகள், நகராட்சிகள், இப்படிப்பட்டவைகள் இயங்குகின்றன. திட்டவட்டமாக அரசியல் சட்டத்திலேயே இடம் பெற்றுள்ள ஒரு விதியை மாற்று என்று சொன்னால் எங்களால் முடியுமா?



1999 மே 12]

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நீங்கள் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வற்புறுத்துவது என்பது, கடிதம் எழுதுவது என்பது, மாநாட்டிலே பேசுவது என்பதுதானே தவிர, போராட்டம் நடத்துவதா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக, தற்போது நிலத்தடி நீர் கீழே சென்றுவிட்டது. நிலத்தடி நீருக்காக ஒவ்வோர் ஊராட்சிக்கும், பஞ்சாயத்திற்கும் கசிவு நீர்க் குட்டைகளைக் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கசிவு நீர் குட்டைகளைக் கட்டுவதற்காக அதிக நிதி ஒதுக்க வேண்டும். குடிநீர் இணைப்பு பற்றி திரு. ஞானசேகரன் பேசும்போது, அது பாதியிலே நின்றுவிட்டது. குடிநீர் இணைப்புக்கு 1000 ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை 500 ரூபாயாகக் குறைக்க வேண்டும்.

பிற்பகல் 1-10

அடுத்தபடியாக, இப்போது தொகுப்பு வீடுகளுக்கான பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை. ஒரு முதலமைச்சருக்கு அதிகாரம் இல்லை. உங்களுக்கு அதிகாரம் இல்லை. யாருக்குமே அதிகாரம் இல்லை. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று ஒரு திட்டம் கொடுத்திருக்கிறீர்கள். அதிலே, தொகுப்பு வீடுகள் திட்டம் பற்றியும் சொல்லியிருக்கிறீர்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினர் எங்கே தெரிவு பண்ணுகிறாரோ, அங்கே கட்டிக் கொடுக்கலாம் என்று சொல்லுங்கள். அந்தத் திட்டத்திலாவது சட்டமன்ற உறுப்பினர்கள் செய்யச் சொல்வதைச் செய்து கொடுக்கலாம். அப்படி ஒரு திருத்தம் சொல்லுங்கள். அதையாவது சொல்லுங்கள், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பற்றி சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே வந்து சொல்கிறார்கள் என்பதற்காகவாவது அதைச் செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.சி. கணேசன்

**திரு. கே.சி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே .... (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள். 10 நிமிடங்களுக்கு மேல் ஒரு நிமிடம் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) சரி, ஒரு நிமிடம் பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தொகுப்பு வீடுகள்பற்றிப் பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் யாருமே அந்தப் பணத்தைச் சேர்த்துக் கொடுங்கள் என்று கேட்கவில்லை. என்ன காரணம் என்றால், தொகுப்பு வீடுகளை ஊராட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கிறார். 27 ஆயிரம் ரூபாயிலிருந்து 32 ஆயிரம் ரூபாயாக உயர்த்தினீர்கள். செங்கல் விலை ஏறிவிட்டது, மற்ற பொருட்களின் விலையும் ஏறிவிட்டது. 32 ஆயிரம் ரூபாய் என்று இருப்பதை குறைந்தது 37 ஆயிரம் ரூபாய், அப்படியில்லை என்றால் 35 ஆயிரம் ரூபாயாக உயர்த்தினால்தான் கண்டிப்பாக இந்தத் திட்டம் வெற்றி பெறும். வீடு குறிப்பிட்ட நேரத்தில் கட்டப்படும் என்று கூறிகிறீர்கள். மக்கள நலப் பணியாளர்கள், உங்கள் தி.மு.க.வினுடைய பிரச்சார பீரங்கிகள், அவர்களுக்கு என்ன வேலை என்று தெரியவில்லை. வருகைப் பதிவேடு இல்லை, உங்களுடைய கொள்கைகளையெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். வாரம் ஒரு முறை வரச் சொல்லுங்கள், வாரம் ஒரு தடவை அவர்கள் வந்து கையெழுத்தாவது போடட்டும். உங்களுடைய அரசில் நீங்கள் போட்டிருக்கிறீர்கள். எந்த அரசு வந்தாலும் தொடர்ந்து செய்வார்கள் ஆனால், என்ன வேலை என்று சொல்லுங்கள். வாரத்தில் ஒரு நாள் வரச் சொல்லுங்கள் ....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.சி. கணேசன்.

***திரு. கே.சி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் அவைமுன் வைக்கப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தற்காக முதலில் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறை மூலம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் இந்தியாவிலேயே இதுவரையில் எந்த மாநிலத்திலும் நடைபெறாத அற்புதமான ஓர் திட்டம். எந்தத் தலைவரை தனனுடைய தலைவராக ஏற்றுக்கொண்டுள்ளாரோ, அந்தத் தலைவருடைய ஞாபகார்த்தமாக அண்ணாவினுடைய பெயரில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நம்முடைய தலைவர் கொண்டு வந்திருப்பதற்காக நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம்.



அதைப்போல, சமத்துவபுரத்திற்கு தன்னுடைய ஒப்பற்ற தலைவர், சுயமரியாதை வீரர், தலைவர் பெரியார் அவர்கள் பெயரில், பெரியார் நினைவு சமத்துவபுரம் என்ற திட்டத்தை ஏற்படுத்தியிருப்பது தமிழ்நாட்டில் இருக்கின்ற எல்லா தரப்பு மக்களாலும் இப்போது பாராட்டப்படுகிற ஒரு சிறப்பான திட்டம்.

அதைப்போல, நமக்கு நாமே திட்டம். அரசுக்கும் பொதுமக்களுக்கும் ஒரு பயனுள்ள திட்டம். சில நாட்களாக பொதுமக்கள், எந்த பொது வேலையும் செய்வதே கிடையாது. முன்பு இருந்த ஆட்சியாளர்கள் வேலை செய்யாமலேயே வேலை செய்ததாகப் பணம் எடுத்த காரணத்தினால், பொது மக்கள் அவர்களுடைய பங்காகச் செய்கின்ற சாலை வேலைகளான வாய்க்கால் வெட்டுவதாக இருந்தாலும்சரி, ஓர் போடுவதாக இருந்தாலும் சரி, நாம் ஏன் செய்ய வேண்டும் என்ற அந்த எண்ணத்தை எண்ணம் மக்களிடத்திலே ஏற்பட்டுவிட்டது ஒவ்வொரு கிராமத்திலும் மாற்றுகின்ற வகையில், நிறையாக பொதுமக்களே, இன்னென்ன வேலைகளைச் செய்ய வேண்டும் என்று பணம் கட்டியிருக்கிறார்கள். கிராமத்து மக்களே பங்குத் தொகையாகப் பணம் கட்டியிருக்கிறார்கள், இப்போது எங்களால் அந்த வேலையைச் செய்ய முடியவில்லை, இப்போது நானே ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக இருக்கிறேன். எங்களுடைய ஊராட்சி ஒன்றியத்தில் 70 கிராமத்திற்கும் மேற்பட்டவர்கள் 'நமக்கு நாமே' திட்டத்திலே வேலை செய்வதற்காக, பணம் கட்டியிருக்கிறார்கள். ஆனால், கொடுக்கப்படுகிற நிதியைக் கொண்டு நான்கு ஊர்களுக்கு மட்டும்தான் வேலை செய்ய முடிகிறது. மற்ற ஊர்களுக்குச் செய்ய முடியவில்லை. ஆகவே, அதற்கு அதிகப் பணம் ஒதுக்க வேண்டும். பொதுமக்கள் தங்களுடைய பங்காக இப்போது நமக்கு நாமே திட்டத்திற்கு அதிகமாகப் பணம் செலுத்தி வருகிறார்கள், செலுத்துவதற்குத் தயாராக இருக்கிறார்கள் ஆகவே, இந்தத் திட்டத்திற்கு நிறைய நிதி ஒதுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன் இது ஒரு நல்ல திட்டம்.

அதைப்போல, ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமும், வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் மூலமும் இப்போது தார்ச் சாலைகள் போடப்படுகின்றன. தார்ச்சாலைகள் போடப்படுவது மட்டுமல்ல, பள்ளிக் கூடங்கள் கட்டுவது, ஏரிகள் வெட்டுவது, நியாயவிலைக் கடைகள் திறப்பது இப்படி பல நல்ல காரியங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த நல்ல காரியங்கள் தொடர்ந்து

நடை பெறுவதற்கு இன்னும் நிறைய நிதி ஒதுக்க வேண்டும். அதிலே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கிராமப்புறத்திலே இப்போது ஊராட்சி ஒன்றியத்திலும், ஊராட்சியிலும் பல சாலைகள் போடப்படாமல் கிடக்கின்றன.

2 ஆண்டுகளாக அடைமழை பெய்த காரணத்தினால் எல்லா சாலைகளையும் பூர்த்தி செய்ய முடியவில்லை. தார்ச் சாலை போடுகிற திட்டம் நல்ல திட்டம். ஏனென்றால், தொகை வீணாகாமல் இருப்பதற்கு தார்ச் சாலை போடுவது நல்ல திட்டம்தான். இருந்தாலும், இருக்கிற அத்தனை சாலைகளையும் தார்ச் சாலைகளாகப் போடுவதற்கு இன்னும் நிறைய காலம் ஆகும். அதனால், எல்லா ஊராட்சி ஒன்றிய சாலைகளையும், ஊராட்சி சாலைகளையும் மண் மராமத்து செய்து gravel அடிப்பதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிறபகல் 1-15*

அதைப்போல, இப்போது நம்முடைய மக்கள் நலப் பணியாளர்களுக்கு 500 ரூபாய் கொடுத்து இருந்ததை 750 ரூபாயாக உயர்த்தி மேலும் 50 ரூபாய் பயணப்படியாகக் கொடுத்து 800 ரூபாயாக ஆக்கி இருக்கிறீர்கள். இது உள்ளபடியே பாராட்டப்பட வேண்டிய திட்டம். அந்த மக்கள் நலப் பணியாளர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மக்கள் நலப் பணியாளர்களை இன்னும் சில ஊராட்சிகளுக்குப் போடவில்லை. இன்னும் சில ஊராட்சிகளில் ஒரு மக்கள் நலப் பணியாளர்கூட இல்லாத நிலை இருக்கிறது. பேரூராட்சிக்கும் மக்கள் நலப் பணியாளர்கள் போடப்படவில்லை. ஆகவே, பேரூராட்சிகளுக்கும், போடப்படாத ஊராட்சிகளுக்கும் மக்கள் நலப் பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில் மக்கள் நலப் பணியாளர்களை நிரந்தரமாக்குவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, இன்றைக்கு நமமுடைய உள்ளாட்சித் துறை மூலமாக ஓர் அருமையான திட்டத்தை அதாவது வீட்டுக்கு தண்ணீர் குழாய் இணைப்பு கொடுத்து நிறைவேற்றி இருக்கிறீர்கள். அதிலே சிக்கல் இருக்கிறது. அது நீங்கள் அவசியம் கண்காணிக்க வேண்டிய ஒரு



காரியம். ஒவ்வோர் ஊராட்சியிலும் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி இருந்தபோது, ஆங்காங்கு இருந்தவர்கள் Commissioner, E.O.(P), Operator போன்றவர்கள் அவரவர்கள் இஷ்டத்திற்கு ஒவ்வொரு வீட்டுக்கும் Service கொடுத்துவிட்டார்கள். அந்த Service இப்போதும் இருக்கிறது. ஆனால், இப்போது Service பெற்றவர்கள் பணம் கட்ட மறுக்கிறார்கள். ஊராட்சித் தலைவர் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆணையரும் அதற்கு உதவியாக இருப்பதில்லை இப்போது ஒரு திட்டத்தை நீங்கள் அறிவித்து இருப்பதன்மூலம், அவர்கள் அந்தப் பங்குத் தொகையைக் கட்டி மாதா மாதம் தண்ணீர் வரி கொடுப்பார்களேயானால், எல்லா ஊராட்சிகளும் சிறந்த முறையிலே செயல்பட முடியும். அது நல்ல திட்டம். ஆனால், எந்தத் தலைவரும், ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிற, தாங்களாகவே எடுத்துக்கொண்ட Service-க்கு பணம் வாங்க முடியவில்லை. கேட்டால், இதற்காகவா நாங்கள் வாக்களித்தோம் என்று கேட்கிறார்கள். அப்படிக் கேட்கிற காரணத்தினால் ஊராட்சித் தலைவரும், அந்த ஆட்சி காலத்தில் கொடுத்த service, நாம் ஏன் கேட்க வேண்டும் என்று அலட்சியமாக இருக்கிறார்கள். ஆணையர்களும் அந்தந்த ஊராட்சித் தலைவர்களிடம் சொல்லி. முறையான நடவடிக்கை எடுத்து, எலலா வீட்டு இணைப்புகள் பெற்றவர்களும் பணம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி எடுத்தால், எல்லா ஊராட்சிகளும் சிறந்த முறையிலே செயல்படும். *(மணியடிக்கப்பெற்றது)*

வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் மூலமாகவும், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாகவும் கொடுக்கிற பணத்தை வைத்துக்கொண்டு மட்டும் ஊராட்சிகள் வேலை செய்து வருகிறார்கள். அதைத் தவிர்த்து, முறையான நடவடிக்கை எடுத்து, எல்லா வீட்டு இணைப்புகள் பெற்றவர்களும் பணம் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய ஊரகக் குடிநீர்த் திட்டம். எங்கள் பக்கத்தில் தணணீர் சரியாக கிடைக்காது; எப்படிச் சொல்கிறேன் என்றால், தெற்கே நாகப்பட்டினத்தில், திருவாரூரில், தஞ்சாவூரில், விழுப்புரத்தில், கடலூரில் பெண் கேட்டால், கொடுக்கவே மாட்டார்கள். ஏனென்று கேட்டீர்கள் என்றால் அங்கு மோசமான தண்ணீர் இருக்கிறது, அங்கே தண்ணீர் குடித்தால் நரம்புச் சிலந்தி நோய் வரும் என்கிற நிலை இருந்தது. ஆனால், இப்போது இந்த ஊரகக் குடிநீர்த் திட்டத்தால்

எங்கள் பகுதியில் நல்ல தண்ணீர் எல்லா கிராமங்களுக்கும் கிடைத்திருக்கிறது. இது ஓர் அற்புதமான திட்டம். இதைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தண்ணீர்த்தொட்டிகளைப் பொறுத்தவரையில் 4, 5-தொட்டிகளுக்குச் சேர்ந்து ஒரே Tender கேட்பதாகச் சொல்கிறார்கள். அந்தமாதிரி வைத்தால் வேலை சீக்கிரமாக நடக்காது. ஆகவே, தனித்தனியாக ஒவ்வொரு Tank-க்கும் Tender விடுவதற்கு ஆணையிட வேண்டும். மொத்தமாக விட்டால், கிராமத்தில் இருப்பவர்கள் எடுக்க முடியாது. அங்கு யாரோ ஒரு பெரிய Contractor எடுப்பார். அதனால் கிராமத்தில் இருப்பவர்களுக்குத்தான் கஷ்டம். கம்பி, சிமெண்ட் எல்லாம் வாங்கிப் போட வேண்டும் என்று சொல்கிறீர்கள். அதிலே சில குறைபாடுகள் இருக்கலாம். அதைச் சரி செய்ய வேண்டுமே தவிர, கம்பி, சிமெண்ட் வாங்கிப் போடுகிறார்கள் என்றால், இன்றைக்கு யாராவது கோடீஸ்வரர், வசதி உள்ளவர், வாய்ப்பு உள்ளவர்தான் அவற்றை வாங்கிப் போட்டுக் கட்ட முடியும். ஆகவே, கம்பி, சிமெண்ட் ஆகியவற்றை ஏற்கெனவே கொடுத்தமாதிரி, அரசே கொடுத்து தண்ணீர்த் தொட்டி கட்ட ஆவன செய்தால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய கருத்தாகும். அவ்வாறு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதியைப் பொறுத்தமட்டில் குடிதண்ணீர்ப் பிரச்சினை ஓரளவிற்குச் சரி செய்யப்பட்டு இருக்கிறது. நமது அமைச்சர் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் கடல்நீரை நல்ல தண்ணீராக மாற்றுவதற்காக நரிப்பையூரில் பெரிய திட்டத்தை செம்மையாக ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதற்கு அடுத்தாற்போல், வைகை ஆற்றிலிருந்து, காவிரி ஆற்றிலிருந்து இராமநாதபுரம் மாவட்டத்திற்குக் குடிநீர் கொண்டுவருவதாகக் கூறி இருக்கிறார்கள். இருந்தாலும் எனது தொகுதியைச் சார்ந்த திருவாடானை ஊராட்சி ஒன்றியத்தை இந்த ஆண்டு குடிதண்ணீர் தன்னிறைவு பெறக்கூடிய திட்டத்தின்கீழ் இணைத்து, அங்கே முழுமையாகக் குடி தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 1-20

இப்போது தமிழகத்து குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நல்லமுறையிலே செயல்படுவதாக, அத்தனை பேரும் பாராட்டக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அது ஒருபுறம் இருந்தாலும், உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில் சிறிய சிறிய பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன 73-வது அரசியல் திருத்தச்சட்டம் தெளிவாகக் கூறியிருக்கிறது. அதாவது ஊராட்சிகளுக்கு, அதனுடைய அமைப்புகளுக்கு எந்தெந்த வகையான அதிகாரங்களை, எவ்வாறு வழங்க வேண்டும் என்பதை தெளிவாகக் கூறியிருக்கிறது. நமது அரசு ஜெயின் குழு மூலமாகவும், சுந்தரம் அவர்கள் குழு மூலமாகவும், நம்முடைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தலைமையிலே குழு அமைத்து, உள்ளாட்சிகளுக்கு எவ்வாறு அதிகாரம் கொடுக்கலாம் என்பதை ஆராய்ந்திருக்கிறது. ஆனால், போதிய அதிகாரங்கள் நிச்சயமாக அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய ஏழையெளிய மக்கள் நன்மை அடையக்கூடிய வகையிலே, உள்ளாட்சித் துறைக்கு கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை. உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில் 29 தலைப்புகளிலே அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நான் சென்ற ஆண்டு பேசும்போதுகூட குறிப்பிட்டேன். கல்வி, வேளாண்மை, ஆரம்பச் சுகாதாரம் போன்ற இலாகாக்களை உள்ளாட்சித் துறையிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கூறினேன். ஆனால் நமது அரசு இதுவரையிலும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவில்லை என்று கருதுகிறேன். ஆசிரியர்கள் பிரச்சினை என்றால் அரசிற்குப் பிரச்சினைதான். ஆனால் நீங்கள் ஆசிரியர்களைக் கூப்பிட்டு இன்னும் பேசவில்லை. அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதையும் நீங்கள் தெரிந்துகொள்ளவில்லை. அதற்கான ஏற்பாட்டை நீங்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில் மாவட்ட நிருவாகம் இருக்கிறது. மாவட்ட நிருவாகத்திலே அதனுடைய தலைவராக இருக்கக்கூடியவர் இப்போது என்ன செய்கிறார் என்பது இங்கிருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் நன்றாகத் தெரியும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கையிலேதான் அதிகாரம் இருக்கிறது. மாவட்டக் குழுவினுடைய தலைவர்கள், அதனுடைய உறுப்பினர்களுக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லாத நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில் பல காலியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. உள்ளாட்சி அமைப்புகளால் நிரப்ப வேண்டிய பதவிகள்கூட, மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி பெற்றுத்தான் நிரப்ப வேண்டும் என்று கூறுகிறார்கள். ஓர் அலுவலகத்திலே Watchman இல்லையென்றால் அதை நிரப்புவதற்குக்கூட மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதி பெற்றுத்தான் நிரப்ப வேண்டுமென்று கூறுவது எந்த வகையில் நியாயம் என்பதை நான் அறிய விரும்புகிறேன். சில இடங்களில் தவறுகள் நடந்திருக்கலாம். தவறு செய்தவர்களைத் தண்டிப்பதற்கு, அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு நமது சட்டங்களிலே இடம் இருக்கிறது. தவறு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுத்து தண்டிப்பதை விட்டுவிட்டு, அதிகாரங்களைக் குறைப்பது நல்லதல்ல என்று நான் கருதுகிறேன்.

இதற்கு முன்பாக மாவட்ட நிருவாகத்திலே D.D.C. இருந்தது. ஆனால் D.D.C. நாம் மாற்றியிருக்கிறோம். இப்போது சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் மாவட்ட அளவிலே எந்தவிதமான விவாதத்திலேயும் கலந்துகொள்ள முடியாத நிலையிருக்கிறது. அதனால் நீங்கள் மீண்டும் நிச்சயமாக D.D.C. மாவட்டங்களிலே ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து அமைப்புகளுக்குப் போதிய நிதி கிடைக்கவில்லை என்று கூறுகிறார்கள். அதைச் சரிக்கட்டுவதற்கு நமது அரசு ஒரு விரிவான திட்டத்தை வகுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். பொதுவாக, இப்பொழுது வரி விதிப்பிலே பல குளறுபடிகள் இருக்கின்றன. நமது அமைச்சர் அவர்கள் தெளிவாகக் கூறி இருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் அந்தந்தப் பகுதிகளில் உள்ள நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சரியாகச் செயல்படவில்லை என்று நான் கருதுகிறேன். அதைப்பற்றி தெளிவான உத்தரவை அரசாங்கம் பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வரி விதிப்பைச் சரிசெய்தால்தான் அந்தந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய நகராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்கள் நல்லநிலையிலே செயல்பட முடியும் என்று நான் கருதுகின்றேன்.

*பிற்பகல் 1-25*

இன்னொன்று. இப்போது பஞ்சாயத்துகளுக்குச் சொந்தமான இடங்களிலே இருக்கக்கூடிய மரங்களை வெட்ட வேண்டுமென்றால்கூட,



இன்னும் நாம் வருவாய்த் துறையினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் வெட்ட வேண்டிய நிலை இருக்கிறது. அந்தக் காலத்திலே வெள்ளையர் ஆட்சியின்போது மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அந்த அதிகாரமெல்லாம் இருந்தது. இப்பொழுதும் அந்த அதிகாரம் அவர்களிடமே இருக்க வேண்டுமா? வேண்டுமென்றால், மாவட்ட ஆட்சித் தலைவர் அதிலே நடக்கக்கூடிய தவறுகளைச் சுட்டிக்காட்டி நடவடிக்கை எடுக்கலாம். அனைத்துக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம்தான் அனுமதி பெறவேண்டுமென்ற நிலையை மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் என்னென்ன வேலைகள் தேவை என்பதை முடிவு செய்யக்கூடிய அதிகாரம் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கும், அதுபோல் சம்பந்தப்பட்ட அந்தந்த மாவட்ட அமைப்புகளுக்கும் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஊருணி வெட்டுவது, சிறிய சாலை போடுவது போன்றவற்றுக்குக்கூட மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதியைப் பெற்றுத்தான் செய்ய வேண்டுமென்று கூறுவது தேவைதானா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களின் ஆளுகைக்குட்பட்ட எல்லையில் ஓர் இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பணிகள் அத்தனையையும் அந்தந்த ஊராட்சி மன்றத் தலைவர்களே தேர்வு செய்து, அவர்களே மதிப்பீடு தயாரித்து, அவர்களே தேவைப்பட்டால், ஒரு பொறியாளரையும் நியமித்து, அந்தப் பணிகளைச் செய்யலாம் என்று உத்தரவிட்டு 1½ ஆண்டுக் காலம் ஆகின்றது. ஆகையால், சாதாரண வேலைகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் போக வேண்டிய அவசியமில்லை. அதைப்பற்றி யாராவது தவறான கருத்துச் சொல்லியிருந்தால், இன்ன அதிகாரி எனக் குறிப்பிட்டு எழுதினால், நான் உள்ளபடியே அவரைக் கேட்டு, நடவடிக்கை எடுக்கின்றேன்.

**திரு. கே.ஆர். இராமசாமி**: அடுத்தபடியாக, நமது கிராம சபைக் கூட்டங்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டுமென்று கிராமங்களில் இருக்கக்கூடிய மக்களுக்குத் தெரிவித்து, அதிலே மக்களுடைய பங்கு என்ன என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியா முழுவதும் இந்த வருடம் கிராமசபை வருடமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தியா முழுவதும் முதலமைச்சர்கள் மாநிலங்களில் இருக்கிறார்கள். ஆனால் அதைப்பற்றி அவர்கள் நடவடிக்கை எடுத்து, ஒரு பெரிய அறிக்கை வெளியிட்டு, பத்திரிகை மூலம், வானொலி மூலம், தொலைக் காட்சி மூலம் அறிவிக்கவில்லை. அப்படி அறிவித்த ஒரே மாநிலம், தமிழ்நாடுதான், இந்த முதலமைச்சர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலேயேகூட இன்னொன்றையும் சொல்கிறேன். எல்லோருக்கும் வேண்டுகோள் விடுத்து, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதம் நேரடியாக எழுதி, அதில் கலந்துகொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தி, 4 முறை நடத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தியதே தமிழ்நாடுதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தயவுசெய்து அதை நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தாருங்கள். நடத்தாத விவரத்தைத் தெரிவியுங்கள், நடத்துவதற்கான முயற்சிகளில் நீங்கள் ஈடுபடுங்கள்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள கூறுவது உண்மைதான். இருந்தாலும், கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு தொலைக்காட்சி மூலமாகவோ அல்லது நாடகங்கள் மூலமாகவோ இன்னும் நல்லமுறையிலே தெரிய வைப்பதுதான் சிறந்தது என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடம்தான் இருக்கிறது, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** சீக்கிரம் சொல்லி முடித்துவிடுகிறேன். ஊராட்சிமன்றங்களிலே தவறு நடக்கும்போது அவர்களின்மீது நடவடிக்கை எடுப்பது மிகக் குறைவாகவே இருக்கிறது. சில ஊராட்சிகளிலே தலைவர்கள் தவறு செய்கிறார்கள். இப்பொழுது ஊராட்சி அமைப்புகள் வந்ததற்குப் பிறகு இன்னும் கூட்டங்களைக் கூட்டாத பல ஊராட்சிகள் இருக்கின்றன. அவைகள்மீது நடவடிக்கை இல்லை. அதையும் நீங்கள் உடனடியாகக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தவறுகள் நடப்பது உண்மை என்று ஒத்துக்கொள்கிறீர்கள். நடவடிக்கையை அரசாங்கம் எடுக்காமல், ஒரு தனிக் குழுவை அமைக்க வேண்டுமென்று குறிப்பிடுகிறீர்கள். இப்பொழுதே, அப்படி இருக்கும்போது, ஒரே ஒரு குழுவை அமைத்தால், அதற்குப் புகார் அனுப்பி, குழு விசாரித்து, அதற்குப் பிறகு யார் நடவடிக்கை எடுப்பது? குழுதானே எடுக்க முடியும்? இதை ஒத்துக்கொண்டதற்காக மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு, அலுவல் நேரம் ஒருசில நிமிடங்கள் நீட்டிக்கப்பெறுகிறது. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** நீங்கள் சொல்வதில் எனக்கு உடன்பாடு இருக்கிறது. இருந்தாலும் தப்பு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமேயொழிய, ஒருசிலர் தப்பு செய்கின்றார்கள் என்பதற்காக தமிழ்நாடு முழுவதும் அதிகாரத்தைக் கொடுப்பதை நிறுத்தி வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அடுத்து, கோயம்புத்தூரில் 10 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு கூடுதல் கட்டடம் கட்டியிருக்கிறார்கள். இப்போது அதிலே சமூக விரோதச் செயல்கள் நடக்கின்றன. கட்டடம் damage ஆகிவிட்டது என்று சொல்லுகிறார்கள்; அந்தக் கட்டடமே தேவையில்லை என்றும், இடித்துவிடலாம் என்றும் சொல்லுகிறார்கள். எனவே, அதன்மீது நடவடிக்கை எடுத்து, ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செங்கோட்டை நகராட்சியில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவில் ஏற்படுத்தித் தரவேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல தண்டராம்பட்டு தொகுதியிலே சாத்தனூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 3-00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 3-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

*** மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அமைச்சரவையில் வயது ஒன்றைத் தவிர மற்ற அனைத்திலும் மிகக் குறைந்தவனான எனக்கு அமைச்சர் பொறுப்பை அளித்தவரும், தந்தை இல்லாத எனக்குத் தந்தையாகவும், அரசியல் ஆசானாகவும், எனது நோய்க்கு மருத்துவராகவும், என்னை இந்த நிலைக்கு உயர்த்தி, உங்கள்முன் இந்தப் பணிகளை ஆற்றி எனக்கு வாய்ப்பு அளித்த என் தலைவரை வணங்கி, நன்றியைத் தெரிவித்து உரையைத் தொடங்குகிறேன்.

இன்றையதினம் சுமார் 25 சட்டமன்ற உறுப்பினர்கள் 108 வெட்டுத் தீர்மானங்களைத் தந்து, அதிலேயே அரிய கருத்துரைகளையும், வினாக்களின் மூலம் விளக்கங்களைப் பெறுவதற்கு முயற்சித்து, எனக்கும் சில ஆதரவுகளை அதற்குத் தந்திருக்கிறார்கள் என்பதற்காக முதலில் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஏறத்தாழ 15 உறுப்பினர்கள் விவாதத்திலே கலந்துகொண்டு காலையிலிருந்து தெளிவான கருத்துகளை விரிவாக எடுத்துச்சொல்லி, இந்த அவைக்குப் பெருமிதத்தை உருவாக்கி இருக்கிறீர்கள். உங்கள் அனைவருக்கும் ஆரம்பத்திலேயே நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அதோடுகூட, இந்தத் துறையைப் பொறுத்தவரையில் எவ்வளவு முக்கியமானது என்பதையும், இந்தத் துறை ஆற்ற வேண்டிய பணி எவ்வளவு அவசியமானது என்பதையும், என்னதான் பணியாற்றினாலும் குறைகளும், குற்றங்களும் தொடரும் என்பதையும், ஆற்ற வேண்டிய பணிகள் இன்னும் இருக்கின்றன என்பதையும் நினைவுகூரத்தக்க வகையில் நீங்கள் எனக்கு வெட்டுத் தீர்மானங்கள் மூலம் அறிவுறுத்தி இருப்பதை நான் வரவேற்கின்றேன். அதற்காக நன்றியும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



ஊரக வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில் இந்தியாவின் இதயம் கிராமங்களில்தான் உள்ளது என்று மகாத்மா காந்தி அவர்கள் கூறியுள்ளார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் மக்களாட்சியில் கிராம ஊராட்சிகளே ஓர் அடித்தள அமைப்பு, அவற்றை நாம் வலுவுள்ளவைகளாக மாற்றினால்தான் நமது ஜனநாயக அமைப்பு உறுதியானதாகவும், உயிர்த் துடிப்புள்ளதாகவும் இருக்கும் என்று கூறியுள்ளார்கள். அதை இங்கிருக்கிற அத்தனை பேருமே ஒத்துக்கொள்கிறீர்கள். நாங்களும் ஒத்துக்கொள்கிறோம்.

இந்திய அரசமைப்புச் சட்டம் 73-வது திருத்தத்தின்படி திருத்தப்பட்ட பின்பு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொறுப்பை ஏற்று, இந்த அரசு, தான் தேர்தல் காலத்தில் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றி, அதன்படி தமிழ்நாடு முழுவதும் இரண்டு நாளில் அனைத்து அமைப்புகளுக்கும் தேர்தலை நடத்தி, 1996 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் தேர்தல் முடிவுற்று, அதிலே 1,16,747 மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, நிருவாகப் பொறுப்பை வழங்கியது மட்டுமல்லாமல், அதிலே பெண்களுக்கு 33 சதவிகிதமும், ஆதிதிராவிடர்களுக்கு மக்கள் தொகை அடிப்படையிலும் உள்ளாட்சி அமைப்புகளில் இடஒதுக்கீட்டை கலைஞர் அவர்கள் தலைமையில் அமைந்த அரசுதான் செய்து முடித்தது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். தேர்தல் நடத்தியதோடு நின்றுவிடாமல் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள மக்கள் பிரதிநிதிகளை அழைத்து சென்னையில் இரண்டு நாட்கள் மாநாடு நடத்தி, மக்கள் அவர்களிடம் இருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதையும், அவர்கள் ஆற்ற வேண்டிய பணிகளும், கடமைகளும், பொறுப்புகளும் எத்தகையவை என்பதையும் முதல்வர் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

இதைத் தொடர்ந்து காந்தியவாதியும், சமூக நலத் தொண்டருமான மதிப்பிற்குரிய எல்.சி. ஜெயின் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட மாநிலத் திட்டக் குழு மூலம் சிறப்புக் குழு அமைத்து அதன் பரிந்துரைப்படி 26 பொருட்களில், கிராம ஊராட்சிகளுக்கு 142 இனங்களிலும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு 170 இனங்களிலும், மாவட்ட ஊராட்சிகளுக்கு 184 இனங்களிலும் அதிகாரங்களை இந்த அரசுதான் வழங்கியுள்ளது. அதிகாரம் கூடுதலா, குறைவா, இது போதுமா, போதாதா என்பது ஒருபுறம். ஆனால், எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாக ஓரளவிற்கு அளிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரத்தை மறக்காமல்

அனைத்துமே தரவில்லை என்ற வாதத்தை மட்டும் சற்றுத் தளர்த்திக்கொண்டால், ஒரு பொதுவான நியதிக்கு உடன்பட்டதாக இருக்கும் என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் இதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 3-05

184 இனங்களில் அதிகாரங்களை இந்த அரசு வழங்கியுள்ளது என்பதை அறிக்கையில் கொடுத்துள்ளோம். கடந்த ஆண்டு உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின்போது அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இந்த அதிகாரங்கள் போதாது; மேலும் வேண்டுமென்று கோரிக்கை எழுந்தபோது, இந்த அரசு வாளா இருக்கவில்லை. எனது தலைமையில் 14 உறுப்பினர்களோடு, உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்து, இக்கோரிக்கையைப்பற்றி ஆய்வு செய்ய ஆணை பிறப்பித்து, இந்த மன்றத்திலுள்ள அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் இந்தக் குழுவில் பங்குபெறவைத்து, வெளியில் இருப்பவர்கள் ஓரிருவரையும் சேர்த்து அமைத்து, இந்தக் குழு, 11-1-1999 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. அப்படிப்பட்ட அந்தக் குழுவிலே 1008 பொருள்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. விவாதித்த நாட்கள் குறைவாக இருந்தாலும், முறை குறைவாக இருந்தாலும், கால அவகாசத்தை உணர்ந்து, காலையும், மாலையும் உட்கார்ந்து பொறுப்புணர்ச்சியோடு உறுப்பினர்கள் பணியாற்றிய காரணத்தினால், 718 பரிந்துரைகளை அமைச்சரவை ஏற்றுக்கொண்டது. அது தற்போது உங்களுடைய பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இம்மாமன்றத்தில், உங்கள் மூலம் ஒரு விவரத்தை நான் அறிய விரும்புகிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில், வேறு எந்த மாநிலத்திலேயாவது அல்லது வேறு எந்த அரசாவது பொறுப்பேற்ற 3 ஆண்டுகளில், இரண்டு உயர்மட்டக் குழுக்களை அமைத்து, அதன் பரிந்துரைகளை ஏற்று அதிகாரங்களைப் பரவலாக்க ஆணை பிறப்பித்துள்ளதா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்த்தால் நன்றாக இருக்கும். நானும்கூட 6 மாநிலங்களுக்கு என் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளை அனுப்பி, விசாரித்து வந்து, அவர்கள் கொடுத்த சில குறிப்புகள் இப்போது என்னிடத்திலே இருக்கின்றன. ஆகவே, இன்றைக்குதான் இதைப்பற்றிப் பேச வேண்டும்; இன்றைக்கே இதுபற்றிப் பேசி முடித்துவிட வேண்டும் என்பதல்ல. காலம் போனாலும், நிச்சயமாக இந்தக் குழுவினுடைய



அறிக்கையிலேயே, ஓராண்டு காலத்திற்குள் இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை திட்டமாக்கி, அதைச் சட்டமாக்கி, அதை மன்றத்தில் வைக்கலாம் என்று எனக்கு அவகாசமே தரப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தக் குழு எனக்குத் தந்த ஓராண்டு காலத்தைக்கூட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவ்வளவு அவகாசம் தேவையில்லை; இத்துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது விவாதிக்கலாம் என்று சொன்னபோது இரண்டையும் எப்படிச் செய்வது என்று நான் சங்கடப்பட்டேன். ஆனால், அதைத் தட்ட முடியாமல் ஏறத்தாழ 25 நாட்கள் அதற்காகத்தான் என் துறையும், நானும் முயற்சி எடுத்து, இந்த மானியக் கோரிக்கையைக்கூட இரண்டாவதாக வைத்துக்கொண்டு அதை முதலில் செய்து, ஏறத்தாழ 2 முறை அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி, முறையே, மூன்று மணி நேரம் விவாதித்து, அதற்குப் பிறகு ஒரு முடிவெடுத்து, அதை அச்சிலே ஏற்றி, நேற்று காலை 3-30 மணிக்குத்தான் எனக்கு அது கிடைத்தது. நான் அவகாசம் கொடுக்கவில்லை என்கிறீர்கள். ஆனால் எனக்கு அவகாசம் முதலமைச்சர் தந்தாரா என்றால் நிச்சயமாகத் தரவில்லை. நீங்கள் என்னைக் கேட்க முடிந்தது; என்னால் கேட்க முடியவில்லை. காரணம், நான் அவரிடத்திலே ஆரம்ப காலத்திலிருந்தே, ஏறத்தாழ 45 ஆண்டுக்காலமாகப் பழகி வருகிறேன். ஆகையினால் அதைக் கேட்டால், அவர் தரமாட்டார் என்று எனக்குத் தெரியும். அது என் சம்பந்தப்பட்ட துறையினுடைய அதிகாரிகளுக்குத் தெரியுமோ, தெரியாதோ, அதை நான் உணர்ந்தவன். ஆகையினால், அதை நாம் எடுத்துக்கொள்வோம் என்று சொல்லித்தான் இந்த அறிக்கையை இவ்வளவு சங்கடப்பட்டு உங்கள் மத்தியில் வைத்திருக்கிறேன். நீங்கள் ஏதோ புரிந்துகொண்டு ஏதாவது பேசிவிடுவீர்கள்; எனவே புரிந்து கொள்ளாமல் இருப்பதற்கு என்ற எண்ணம் எல்லாம் இந்த அரசுக்கு நிச்சயமாக இல்லை. விரைவாக வைக்க வேண்டும், நேரத்தோடு வைக்க வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம்.

அதோடுகூட, இன்னும் ஒன்றை நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இவ்வளவையும் தாண்டி, ஆட்சிப் பொறுப்பேற்று, இன்றோடு 3 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. இது நமது துறைக்குக் கிடைத்த ஒரு பெருமை. இந்த ஆட்சி தொடங்கி (மேசையைத் தட்டும் ஒலி) நாம் நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிற ஒரு நல்ல நாள் இது. இந்த நாளில், நாம் ஒரு நல்ல துறையில், மக்களுக்குத்

தேவையான திட்டங்களைப்பற்றி விவாதித்து, இந்த அரசுக்கு மேலும் பெருமையூட்டுகிறோம் என்றால் அதை எல்லோரும் வரவேற்பார்கள் என்பதற்காகத்தான் இதை நான் குறிப்பிடுகிறேன்.

நாங்கள் சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்று சொல்வதோடு இருந்து விடுவதில்லை. அதை நிறைவேற்றியும் வந்திருக்கிறோம் என்பதற்கு ஏராளமான ஆதாரங்களை என்னால் சொல்ல முடியும். இன்னும் சொல்கிறேன். இதிலே ஏதாவது ஒரு குறைபாடு இருந்து, நீங்கள் எப்போதாவது வெளியிலோ, அல்லது இங்கேயோ சுட்டிக்காட்டினால், அது நியாயம் என்று சொன்னால், அடுத்த நிமிடமே என்னை அழைத்து 'இதைச் செய்' என்று உத்தரவு போடுகிற முதலமைச்சர் தலைமையிலேதான் நாம் அத்தனை பேரும் இங்கே பணியாற்றுகிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மட்டும் நீங்கள் மறந்துவிடக் கூடாது. இது இன்றோடு முடிந்துவிட்டது; இனிமேல் இதைப்பற்றிக் கவலை இல்லை என்று நாம் இருந்தாலும், அவர் விடப்போவதில்லை. அது எனக்கு நன்றாகத் தெரியும். ஆகையினாலேதான், அதைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்ற முறையில் இதிலே நான் ஈடுபட்டிருக்கிறேன்.

மூன்று அடுக்கு உள்ளாட்சி அமைப்புகளைப்பற்றி, இரண்டொரு பிரச்சினைகளை இங்கே சொல்லி இருக்கிறீர்கள்; 29 பொருள்களுக்கு அதிகாரம் என்ன ஆயிற்று என்று கேட்கிறீர்கள். 29 பொருள்கள் குறித்து அதிகாரம் இங்கே கொடுக்கவில்லை என்கிறீர்கள். நானும் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புவது, சில பொருள்கள் சில மாநிலங்களில் வழங்கியிருப்பது உண்மை. ஆனால், வழங்கியிருக்கிறார்கள் என்று மட்டும் சொல்கிறீர்களே தவிர, வழங்கியதால் அங்கே ஏற்பட்டிருக்கிற நிலை என்ன? தயவுசெய்து அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கீழ்மட்டத்திலே அதிகாரம கொடுத்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 3-10*

சில மாநிலங்களிலே ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. சில மாநிலங்களிலே அதுவும் இல்லை. பஞ்சாயத்து ராஜ் சட்டம் வருவதற்கு முன்னாலே, நாம் ஏற்கெனவே வைத்திருந்ததைப்போல இருக்கிற மாவட்ட ஊராட்சிகளில் அது ஏற்கெனவே இருக்கிறது. அதன் அடிப்படையில் ஏற்பட்ட சட்டத்தை இன்னமும் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். கிராம சபையைக் கூட்டுங்கள் கிராம சபையைக்



கூட்டுங்கள் என்றெல்லாம் மத்திய அரசிலிருந்து வருகிறது. இப்போது கிராம சபை ஆண்டு என்று அறிவித்திருக்கிறார்கள். வானொலிச் செய்தி, தொலைக்காட்சிப் பேட்டி, பத்திரிகைச் செய்தி மற்றும் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட கடிதம் எழுதுதல் என்கிற முறையில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எந்த முதலமைச்சராவது, எந்த மாநிலத்திலாவது இப்படிக் கடிதம் எழுதியிருக்கிறார்களா? யாராவது சொல்ல முடியுமா? அதற்கு, இதற்கு என்று எல்லாம் உதாரணங்களைக் காட்டுகிறோமே தவிர, இதற்கு ஏதாவது உதாரணம் காட்டுகிறோமா? இன்னும்கூட நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஒரு மாநிலம், எந்த மாநிலம் என்று தயவுசெய்து கேட்காதீர்கள், ஒரு மாநிலத்தைப் பற்றிச் சொல்வது அவ்வளவு நல்லதல்ல. நிதி ஒதுக்கீடு என்பது பிப்ரவரி மாதம் இறுதி வரையிலேகூட அங்கு மாவட்ட முகமைக்குப் போய்க் கொண்டு இருக்கிறது. திட்டத்தை எப்பொழுது நிறைவேற்றுவது அந்த மாதிரியான நிலை இங்கு உண்டா? தயவுசெய்து சொல்லுங்கள். அப்படி இருந்திருந்தால் ஏழு இலட்சம், எட்டு இலட்சம் என்று வேலைகளை ஏற்று, ஏற்கெனவே உள்ள இலட்சத்து பதினான்காயிரம் வேலைகளையும் சேர்த்து, நாம் ஒரு குறிப்பிட்ட காலத்திலே அதற்குண்டான நிதி உதவியைச் செய்யாமல், இந்தப் பணிகளுக்கு எல்லாம் உத்தரவிடாமல் இருந்திருந்தால், இந்தப் பணிகளை நிறைவேற்றியிருக்க முடியுமா? இதைத் தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த மாநிலத்திலே இருக்கிறது; நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் நிருவாகம் எப்படி இருக்கிறது; பணிகள் அங்கு எப்படி நடந்திருக்கின்றன?

அந்த மாநிலத்திலே தொகுப்பு வீடுகளுக்காக எல்லோருக்கும் பணத்தைக் கொடுக்கிறார்கள். எல்லோரும் வீடு கட்டுகிறார்கள். ஆனால், தமிழ்நாட்டிலே கட்டியிருக்கிற வீட்டையும் பாருங்கள், வெளி மாநிலத்திலே கட்டியிருக்கிற வீட்டையும் பாருங்கள் நீங்கள் பார்த்தீர்களா என்று நீங்கள் என்னைக் கேட்கலாம். பார்த்தேன். ஒரு மாநாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் என்னை டெல்லிக்கு அனுப்பியிருந்தார்கள். 1½ நாள் மாநாடு இல்லை. டெல்லிக்குப் பக்கத்திலே 70 மைல்கள், 78 மைல்கள் கடந்து போய்ப் பார்த்தேன். அந்த ஊரிலே விசாரணை நடத்தினேன். தெரு விளக்கே இல்லையே, என்ன காரணம் என்று கேட்டேன். அங்கேயுள்ள பிரதிநிதிகள் என்ன சொன்னார்கள் தெரியுமா? வசதியுள்ள சில பஞ்சாயத்துகளில் தெரு விளக்குகளைப் போட்டு இருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

அரியானா மாநிலம்தான் அது. தெரு விளக்கே இல்லாத நிலைமை இருக்கிறது. அதை நாம் பின்பற்றலாமா? அது இங்கு முடியுமா? அது நியாயமா? அது நல்லதா? எல்லாவற்றிற்கும் எல்லாவற்றையும் உதாரணம் சொல்லி அதை, இதை என்று காட்டிக்கொண்டு இருக்க முடியாது. ஆகையினாலே நான் திரும்பவும் சொல்வது, நம்முடைய கலாச்சாரம், நம் மாநிலத்தினுடைய நிலை, நாம் பழகி வந்தது, அவைகளை ஒட்டுமொத்தமாகக் கூட்டிக் கழித்து நடைமுறைக்கேற்ப மக்களுக்குத் தேவையான, அவர்களுடைய கட்டமைப்பை, அவர்களுடைய அடிப்படை வசதிகளை எப்படித் தேடிக் கொடுக்க முடியும்; என்ன முறை; எதைக் கையாள்வது என்பதிலேதான் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும் ஈடுபட வேண்டுமென்பது என்னுடைய ஆசை. அதைத்தான் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு நேரத்தோடு வந்திருப்பதற்குக் காரணம், 'இவன் எப்போது முடிக்கிறான் என்பதைப் பார்க்கத்தான் வந்திருக்கிறார். அவருக்கு இரண்டு கவலை. உடல் நலம் இல்லாதவன் ஆயிற்றே, நீண்ட நேரம் பேசினால் என்ன சங்கடம் ஏற்படுமோ' என்று வந்திருக்கலாம். நான் ஒன்றைச் சொல்கிறேன். நிச்சயமாக நீங்கள் இருக்கின்றவரை எனக்கு எந்த நோய் வந்தாலும், நீங்கள் காப்பாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எந்த நோயும் எனக்கு வராது. ஒரே ஒரு நோய்தான் எனக்கு இருக்கிறது. அது என்ன நோய் என்றால், இன்னும் கொஞ்சம் அதிகத் தொகையை நீங்கள் வழங்குவீர்களேயானால் இன்னமும் கொஞ்சம் வேகமாகச் செய்யலாம். அந்த ஒரு நோய்தான் எனக்கு இருக்கிறது. வேறு எந்த நோயும் இல்லை. கொடுத்ததைச் செய்கின்ற எண்ணம் எனக்கு உண்டு. செய்து முடிப்பேன். இப்படிப்பட்ட நிலைமையில் இந்தத் திட்டங்கள் அத்தனையையும் நான் எடுத்துச் சொல்வதற்கு முன்னாலே உங்களிடத்திலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே நடந்த பணிகளைப் பற்றி இனிமேல் சொல்லத் தேவையில்லை. காரணம், கொள்கை விளக்கக் குறிப்பிலே அவைகள் அனைத்தையும்பற்றி நான் கொடுத்திருக்கிறேன்.

இன்னொன்று. சட்டமன்ற உறுப்பினர்கள் மிக அக்கறையோடு அனுதினமும் என்னிடத்தில் பழகுகிற காரணத்தால், குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், பல மாத காலமாக முயற்சித்து



ஒரு விவரத்தைச் சேகரித்து இருக்கிறேன். குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய கொள்கையே, இத்தனை குடியிருப்புகளுக்குக் கொடுத்தோம் என்றுதான் சொல்வார்கள். அது பழக்கம். நான் மிகவும் கஷ்டப்பட்டு, தனியாக முயற்சி எடுத்து, எந்த மாவட்டத்தில், எந்தத் தொகுதியில், எந்த ஒன்றியத்தில் எந்த ஊராட்சிக்குக் கொடுத்தீர்கள் எத்தனை குடியிருப்புகளுக்குக் கொடுத்தீர்கள், என்ற விவரத்தைச் சேகரிப்பதற்கே 6 மாத காலம் 7 மாத காலம் எனக்கு ஆயிற்று. அதன் அடிப்படையிலேதான் ஒவ்வொரு தொகுதியாக பணிகளை எடுத்து இதைச் செய்திருக்கிறேன், இதைச் செய்து கொண்டும் இருக்கிறேன், இதைச் செய்யப் போகிறேன் என்று உங்களுக்கு ஒரு கடிதம்கூட எழுதியிருக்கிறேன். அந்தக் கடிதத்தைக் கொடுத்ததற்குக் காரணமே, உங்களுக்கும் தெரியாமல் சில பணிகள் நடந்திருக்கின்றன. அதற்குக் காரணம், எங்கள் கொள்கைப்படி 10 குடியிருப்புகளுக்குக் குறையாமல் உள்ள இடங்களை நாங்கள் எடுத்துக் கொண்டோம். நீங்கள் சொன்னாலும், சொல்லாவிட்டாலும் அதை நிறைவு செய்திருக்கிறோம். அது உங்களுக்கும் தெரிய வேண்டும், ஊருக்கும் தெரிய வேண்டும், எல்லாவற்றையும்விட எங்களுடைய முதலமைச்சர் அவர்களுக்கும் தெரிய வேண்டும். அதுதான் முக்கியம். அதைத்தான் செய்திருக்கிறோம்.

பிற்பகல் 3-15

இப்படி நடத்தி, எல்லாவற்றையும் முடித்து, இன்றைக்கு உங்கள் மத்தியிலே நான் சொல்ல இருப்பதெல்லாம், நிறைவேற்ற இருக்கிற திட்டங்களை முடிப்பதற்குள்ளாக, மேற்கொண்டு இந்தத் திட்டங்களில் நாம் முன்னுக்குப்பின் முரண்பாடு இல்லாமல் சிலவற்றைச் செய்கின்ற காலம் வருகிறபோது, ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும், மாவட்ட ஊராட்சிகளிலும் தனித் தனியாகத் திட்டங்களைக் கொடுக்கிறீர்கள், அதை இணைக்கக் கூடாதா என்றெல்லாம் கேட்கிறீர்கள். நான் இரண்டு, மூன்று மாதங்கள் முயற்சித்தேன். எல்லோரையும் அழைத்துப் பேசி ஒரு முடிவு செய்வோம், அதற்குப் பிறகு பணிகள் தொடங்குவோம் என்று. என்னாலே முடியவில்லை. இரண்டொரு கூட்டம் நடத்திப் பார்த்தேன். அவர்களுக்குள்ளாகவே அடிதடி சண்டை வந்துவிட்டது. ஊராட்சி ஒன்றியத் தலைவர் சொல்வதை, அந்த ஊராட்சியிலே இருக்கக்கூடிய தலைவர் ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை. அவர்கள் அங்கேயே அதிகாரங்களைக் காட்ட ஆரம்பித்துவிட்டனர். ஆகையால்தான்

அதையும் நான் நிறுத்திவிட்டேன். அதற்குப் பிறகு அதுபற்றி நான் முயற்சிக்கவும் இல்லை.

இப்படிப்பட்ட நிலைகளில் இப்போது இருக்கிற 3 அடுக்கு முறையில் இவ்வளவுதான் நம்மால் செய்ய முடியும் என்பதையெல்லாம் நீங்கள் அறிந்துகொள்வதற்காக, சில நேரங்களில் சிலவற்றை நான் சொல்லியிருக்கிறேன். மொத்தமுள்ள தொகுதிகளிலே கிராமங்களில் எவ்வளவு மக்கள் வாழ்கிறார்கள் என்று கணக்குப் பார்த்தால் 60 சதவிகிதம் மக்கள் கிராமங்களில்தான் வாழ்கிறார்கள். நகரங்களில் 40 சதவிகிதம் மக்கள்தான் வாழ்கிறார்கள். ஆனால், நகரங்களை நோக்கி மக்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்களை விடக்கூடாது, கிராமங்களிலேயே அவர்கள் இருக்கவேண்டும். அவர்கள் கிராமத்தைத் தாண்டி நகரங்களுக்கு அடிக்கடி போனால், அங்கேயும் நெருக்கடி ஏற்படுகிறது. இதுதான் நகரங்களில் இருக்கிற அடிபபடை வசதிகள் அனைத்தையும் கிராமங்களுக்கும் செய்து கொடுக்க வேண்டும் என்கிற உணர்வை எங்களுக்கு ஏற்படுத்தி, அதன் அடிப்படையிலேதான் இவ்வளவு வேகமாக இந்தப பணிகள் கிராமங்களில் நடந்து கொண்டிருக்கின்றன . என்பதையும் உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பொழுது முக்கியமான ஒன்றை நான் குறிப்பிட விரும்புவது, பல பணிகளை அவர்களிடம் ஒப்படைத்திருந்தாலும், சில இடங்களில், விளக்கு இல்லை என்று சொன்னார்கள். ஒட்டுமொத்தமாக தயவுசெய்து சொல்லாதீர்கள். காரணம், விளக்குகளை எல்லா இடங்களிலும் போட்டிருக்கிறோம். போட முடியாத சில இடங்கள் இருக்கின்றன. அதைத் தயவுசெய்து எந்தெந்த இடங்கள் என்று சொல்வீர்களேயானால், மாவட்ட ஆட்சியர் மூலமாகவோ அல்லது அரசு நேரடியாகவோ அதைச் செய்து கொடுப்பதற்கு நிச்சயமாகத் தயாராக இருக்கிறது. விளக்கு வெளிச்சம் இல்லாமல் நாடு இருக்க முடியாது. இருக்க முடியாது. அதனால அவர்களாலே போட முடியாமல் இருந்தால்கூட அரசு அந்தப் பொறுப்பை ஏற்றுச் செய்யும் என்பதற்காக ஒரு சிறிய நிதியைக்கூட ஒதுக்கி வைத்திருக்கிறோம். அதைச் செய்யலாம். அதையும் தாண்டி சில நேரங்களிலே சிலபேர் சாலை குண்டும் குழியுமாக இருக்கிறது, தெருக்கள் எல்லாம் மோசமாக இருக்கின்றன, விளக்குகள் எரியவில்லை, அது இல்லை, இது இல்லை என்றெல்லாம் சொல்கிறீர்கள். அதைக்கூட நான் மறுக்கவில்லை. இன்னும் செய்ய



வேண்டியது அதிகமாக இருக்கிறது. ஆனால், ஒன்றை மட்டும் சிந்திக்க வேண்டும். நம்முடைய ஆட்சி அமைந்து 3 ஆண்டுகள்தான் ஆகியிருக்கின்றன. இந்த 3 ஆண்டு ஆட்சிக் காலத்தில் செய்திருப்பது எவ்வளவு? இதை இதற்கு முன்னாலே இருந்தவர்கள் செய்தார்களா? இது ஒரு யோசனை. அதைச் சிந்திக்க வேண்டியதும் நம் கடமை ஆனால், இதற்குமுன் செய்திருக்கலாம்.

1967-லே பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டு நலனை சீர்தூக்கிப் பார்த்து, இந்த நாட்டைச் சீர்படுத்தியாக வேண்டும் என்று கருதி, ஒரு சீரான பாதை அமைத்து, செப்பனிட்டு, வழிநடத்தி பாதியிலே நம்மை நிறுத்திவிட்டுப் பறந்து எங்கேயோ சென்று விட்டார் பலபேர் மீதி வழி நடப்பதற்கு நாதியில்லை என்றார்கள். அறிஞர் அண்ணாவின் உண்மையான தம்பியாக இருக்கும் கலைஞர்தான் பாதி வழி நடந்த காரணத்தினால், மீதி வழி நடந்து காட்டுகிறேன் என்று தலை கொடுத்து தமிழகத்தைக் காக்கப் புறப்பட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அவரை அப்படியே விட்டிருந்தால், அவர் தொடர்ந்து இந்த ஆட்சியை நடத்தியிருந்தால், சத்தியமாகச் சொல்கிறேன், இந்த நாட்டில் குழியும் இருந்திருக்காது, குண்டும் இருந்திருக்காது, பழுதடைந்த சாலையும் இருந்திருக்காது, எரியாத விளக்கும் இருந்திருக்காது, தண்ணீர் கிடைக்காமல் இருந்திருக்காது. தரித்திரமும் இருந்திருக்காது, அது யாருடைய தவறு, யோசியுங்கள், அதுதான் முக்கியம். (சிரிப்பு)

பிற்பகல் 3-20

தார்ச் சாலைகளைப்பற்றி எல்லாம் சொல்லிக் கொண்டு வந்தோம். 16 ஆயிரத்து சொச்சம், 17 ஆயிரத்து சொச்சம் இவ்வளவுதான் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், சாலைகள் இன்னும் போட வேண்டியது அதிகமாக இருக்கின்றன என்பதை நான் மறுக்கவில்லை. கிராமப்புறச் சாலைகள் நெடுங்காலம் உழைக்கக்கூடிய வகையில், தரமான சாலைகளாகப் போட நாம் சங்கடப்படும் நிலையில், ஒருநாள் காரிலே முதலமைச்சரோடுகூடப் போனேன். ஒரு சாலையிலே போகும்போது, அது பெரிய சாலை, நெடுஞ்சாலைத் துறையினுடைய பெரிய சாலை. அடுத்த சாலைக்குப் போகும்போது அது கிராமப்புறத்துச் சாலை. இது என்னய்யா சாலை? இந்தச் சாலை புதிதாகவே தெரிகிறது, கடகடாவென்று செல்லுகிறதே ஏன் என்று கேட்டார்? நான் அப்போது அவர்களிடத்திலே உண்மையைச் சொன்னேன், அதை Highways-லே போட்டிருக்கிறார்கள்; இதை எங்கள் ஆட்கள் போட்டிருக்கிறார்கள்.

இது இப்படித்தான் இருக்கும். இதற்குமேலே இன்னும் கொஞ்சம் செலவானாலும் இந்தமாதிரிதான் இருக்கும் என்றும் சொன்னேன். என்னய்யா நீ, போடுகிற சாலைகளை அந்தமாதிரி நல்லபடியாகவே போடலாமே என்று சொன்னார். அதற்காகத்தான் இப்போது இதை மாற்றியிருக்கிறேன். அதற்கு என்ன காரணம் சொன்னார்கள் என்றால், இதிலே Estimate Cost கம்மியாக இருக்கிறது, அதனால் எங்களால் அப்படிப் போட முடியாது என்று சிலபேர் சொன்னார்கள்.

அதிலேகூட உண்மையைச் சொல்கிறேன். என் தொகுதியிலே ஒரு கிலோமீட்டர் சாலையைப் போடச் சொல்லி, அதற்கான பொருள்களெல்லாம் வாங்கிக் கொடுத்துப் பார்த்தேன். கொஞ்சம் சிரமமாகத்தான் இருந்தது. அதற்குப்பிறகு, இப்போது முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரைக்கிணங்க முறையை மாற்றியிருக்கிறோம். நெடுஞ்சாலைத் துறையிலே எந்த அளவுக்கு உயர்த்திப் போடுகிறார்களோ அந்த அளவுக்கு, இன்னும்கூடச சொல்லப்போனால் மேலே ஒரு Coating வெறும் தார் மட்டும் போடுவது. அதற்கு 22,800 ரூபாய் ஒரு கிலோமீட்டருக்கு, அதையும் சேர்த்துத்தான் இனிமேல் பஞ்சாயத்து யூனியன் சாலைகளாக இருந்தாலும்சரி, பஞ்சாயத்துச் சாலைகளாக இருந்தாலும் சரி, (மேசையைத் தட்டும் ஒலி) எந்தச் சாலைகளாக இருந்தாலும் சரி, போடலாம் என்ற உத்தரவை வழங்கிவிட்டோம். ஆனால், சென்ற ஆண்டு 7,000 கிலோமீட்டர் சாலைகள் போடுவது என்று அறிவித்தேன். ஆனால் இந்த ஆண்டு அந்த நீளம் கொஞ்சம் குறைகிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், அதனுடைய மதிப்பீட்டுத் தொகை அதிகரிக்கிற காரணத்தால் அளவு குறைகிறது. பரவாயில்லை. இந்தமாதிரி சாலை போடுவோமானால் 10 ஆண்டு காலம் திரும்பிப் பார்க்க வேண்டிய அவசியம் இருக்காது. ஆகையினாலேதான் கூடுதலாக 4,000 கிலோமீட்டருக்குக் குறையாமல், 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, அந்தச் சாலைகளைப் புனரமைப்புச் செய்ய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை சாலைப் பணிகளுக்கு, ஊராட்சி ஒன்றியச் சாலைப் பணிகளுக்கு 200 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்தது இந்த முதலமைச்சர் அவர்கள்தான் என்பதால் நான் மறக்காமல் உங்கள் மூலம் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாலைகளைப் பார்த்தோம். நெடுஞ்சாலைத் துறை சாலைகளைப் பார்த்தோம்; ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் பார்த்தோம். ஆனால்



தெருவைப் பார்க்க வேண்டும். இன்றைக்கு ஒருவன், வீட்டைவிட்டு இறங்கி சேற்றிலே போய் மறுபடி தார்ச் சாலைக்கு வருகிறான். தார்ச் சாலைகளிலே இறங்கி மறுபடி சேற்றிலே நடந்து வீட்டுக்குள்ளே போகும்போது காலை அலம்பிக்கொண்டு போகிறான். இதுதான் கிராமத்திலே பிறந்த நமக்கு வரலாறு. சாலையிலேயிருந்து வீட்டுக்குப் போகும்போது ஒரு சொம்புத் தண்ணீர் வாங்கி அலம்பிவிடலாம். ஆனால் வீட்டிலேயிருந்து சாலைக்கு வரும்போது எங்கே அலம்புவது என்று எனக்குத் தெரியவில்லை. அதனாலே, எல்லோரையும் நான் வேண்டிக் கேட்டுக்கொள்வது, நம்முடைய கவனம் பஞ்சாயத்து யூனியன் சாலைகளைத் தாண்டி, ஊராட்சி ஒன்றியச் சாலைகளைத் தாண்டி, தெருச் சாலைகளுக்கும் போக வேண்டும். இந்த ஆண்டு நாம் எல்லோரும் அதை மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதை முக்கியமாகக் கருத வேண்டும். அதற்கொரு பேருதவியையும் நீங்கள் செய்திருக்கிறீர்கள். உங்களுக்குக் கொடுத்திருப்பதிலே பள்ளிக் கட்டடங்களுக்குக் கணிப்பொறிக் கூடம் கட்ட 12 இலட்சம் ரூபாய் தனி ஒதுக்கீடு செய்து தந்துள்ளீர்கள். மேலும் 13 இலட்சம் ரூபாய் பஞ்சாயத்துகளுக்கு, உங்கள் அபிப்பிராயத்தில் தெருக்களிலுள்ள சாலைகளை எடுத்துக்கொள்வதற்கும் ஒரு வாய்ப்பை அளித்துள்ளீர்கள். அதையும் சேர்த்துத்தான் நான் சொல்கிறேன். சிறிய, சிறிய பஞ்சாயத்துத் தெருக்களுக்கு மட்டும், ஏறத்தாழ 2,000 கிலோமீட்டர்களுக்கு, 100 கோடி ரூபாய் என்று ஒதுக்கிய வரலாறு, முதல் வரலாறு இதுதான். தெருக்களுக்கு மட்டுமே 100 கோடியை இந்த அரசு ஒதுக்கி செலவழிக்கக்கூடிய வாய்ப்பைத் தந்திருக்கிற ஒரே அரசு இதுதான் தெருக்களைத் திரும்பிப் பார்க்காமல் இருந்தோம். இப்போது தெருக்களைத் திரும்பிப் பார்க்கிறோம். 100 கோடி ரூபாயோடு பார்க்கிறோம். இதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இது போதுமானதா என்றால் இல்லை. அது ஒரு 4,000 கிலோ மீட்டர்; இது ஒரு 2,000 கிலோமீட்டர். மொத்தம் 6,000 கிலோமீட்டர். இதைத்தாண்டி, இன்னொரு நிதியின் மூலம் அவர்களாகவே ஏதாவது போடுவதற்கான வாய்ப்பு இருக்குமானால், ஒரு 1,000 கிலோமீட்டர், 2,000 கிலோமீட்டர் போடலாம். ஒரு 8,000 கிலோமீட்டர் போட்டுவிட்டால் முடிந்துவிடுமா என்றால் நிச்சயம் முடியாது. இன்னும் தார்ச் சாலைகள் அமைக்க வேண்டியது அதிகம் இருக்கிறது. அந்தக் கணக்கைப் பார்த்துத்தான் NABARD வங்கியிலே இருந்து ஏதாவது உதவி செய்யுங்கள் என்று நாங்கள் கேட்டிருக்கிறோம். அரசின் கடுமையான முயற்சிக்குப் பின்னும் கிராமப்புறங்களில் சாலை

வசதியை முழுமையாக மேம்பாடு செய்ய இயலவில்லை. ஆகையினால் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மேம்பாட்டுக்கும், காவிரி டெல்டா பகுதிகளில், திருச்சி, தஞ்சாவூர், கடலூர், சிதம்பரம், இந்தப் பகுதிகளில் அதிகமாக வாய்க்கால்கள், சிறு ஓடைகள் பெரும் கால்வாய்கள் இவற்றைச் சீர்படுத்துவதற்கும், சிறுசிறு பாலங்கள் கட்டுவதற்கும், சாலைகள் போடுவதற்குமாக NABARD வங்கிமூலம் கடனைப் பெற்று, நடப்பாண்டில் ஓரளவிற்கு இன்னும் கொஞ்சம் சாலைகளை அபிவிருத்தியைச் செய்யலாம். நிச்சயமாக NABARD வங்கிக் கடன் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆக, அதையும் இணைக்கலாம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரையில் எங்கே போனாலும் ஒரே பிரச்சினை. அதற்கு முக்கியக் காரணம், சிலபேர், குறிப்பாக, நடுத்தர வர்க்கத்தாரும்கூட இப்போது தொகுப்பு வீட்டுக்கு ஆசைப்படுகிறார்கள். நாங்களேகூட அதிலே வருகிறோம் என்று கூறுகிறார்கள். அவ்வளவு துல்லியமாக அவை இருக்கின்றன. எந்த மாநிலத்திலேயும் இந்தமாதிரி வீடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. 7 மாநிலங்களிலே எங்கள் துறை அதிகாரிகள் சுற்றுப்பயணம் செய்தார்கள். சில புகைப்படங்கள்கூட எடுத்து வந்திருக்கிறார்கள். நானேகூட, ஆந்திரத்திற்குப் போனபோது உங்கள் வேலை முடிந்தது, இனி என் வேலைக்கு வாருங்கள் என்று நம்முடைய இரண்டு அமைச்சர்களையும் அழைத்துக்கொண்டுபோய்ப் பார்த்தேன்.

*பிற்பகல் 3-25*

அப்படிப்பார்த்தபோது அங்கே என்ன செய்திருந்தார்கள் என்றால், அவர்கள் தருகிற அந்தத் தொகை ரூபாய் 20 ஆயிரத்தையும் அவர்களிடத்திலே கொடுத்து, நீங்கள் ஏதாவது மேலே போட்டு கட்டிக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். அதிலே எப்படி எப்படியோ கட்டுகிறார்கள். அதைப்பற்றி நான் சொல்லத் தயாராக இல்லை. ஆனால், நாம் அப்படியில்லை. இப்போது கணக்கெடுத்துப் பார்த்தால் மத்திய அரசாங்கம் என்ன கொடுக்கிறதோ அதேமாதிரி even ஆக நாம் இப்போது கொடுக்க ஆரம்பித்துவிட்டோம். இதிலே இரண்டு கட்டங்களாகக் கொடுக்கிறார்கள். மேலே, கூரைக்காக Concrete-க்கு ஒரு பகுதியும், அவர்கள் கொடுக்கிற கணக்கிலே 20 சதவிகிதத்தைச் சேர்த்துப் பார்த்தால் இரண்டும் சமமாக வந்துவிட்டது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் வீட்டையும் குறைத்துவிட்டார்கள். இன்றைக்கு அவர்கள் 46 ஆயிரம் வீடுகள்தான் தந்திருக்கிறார்கள். அவ்வளவுதான் கட்டிக்கொள்ளலாம் என்று அனுப்பியிருக்கிறார்கள். அதற்கான முன்மொழிவுகள் தந்திருக்கிறார்களே தவிர guidelines-வழிகாட்டி நெறிமுறை இன்னும் வரவில்லை. நாம் தொடர்ந்து இப்போது இருக்கிற நிலையை நீட்டியுங்கள் என்றுதான் அவர்களுக்கு உத்தரவு போட்டிருக்கிறோம்.



அதோடுகூட, வறுமைக்கோட்டிற்கும் கீழே உள்ள மலைவாழ் மக்கள், ஆதிதிராவிட மக்கள், 10 சதவிகிதம் பிற்படுத்தப்பட்ட மக்கள், இவ்வளவுதான், இதிலே இருக்கிறது. இதைத்தாண்டி இப்போது ஒரு புதிய திட்டம். வறுமைக்கோட்டிற்கு மேலே, நடுத்தர வர்க்க மக்களாக இருப்பவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கடனுதவி கொடுத்து, அவர்கள் ஏறத்தாழ 10 ஆயிரம் பேர் வீடு கட்டுவதற்கான வாய்ப்பை உருவாக்குவதற்கு ஒரு புதிய திட்டதை நாம் உருவாக்கியிருக்கிறோம். அதற்காக 10 கோடி ரூபாய் தனியாக நிதியொதுக்கீடு செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இது, இதுவரையிலேயும், இல்லாத ஒரு புதிய, ஒரு தேவையான, தரத்தை முழுமைப்படுத்தக்கூடிய அளவிற்கு உள்ள திட்டம் என்பதை நான் உங்களுக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நடப்பு நிதியாண்டில் கட்டடங்களைப் பொறுத்தவரையிலே சொல்ல வேண்டுமானால், நாங்கள் எந்தெந்தத் துறைகளை இப்போது இணைக்கவில்லை, அதில் சேர்க்கவில்லை என்றெல்லாம் சொல்கிறார்களோ அந்தத் துறைகளுக்குக் கட்டிக் கொடுக்க வாய்ப்புகளை அளிப்பதில் நாம் அக்கறை எடுத்துக்கொண்டு ஆண்டுக்காண்டு உயர்த்திக்கொண்டே வருகிறோம். இந்த ஆண்டு மட்டும், பள்ளிக் கட்டடங்கள் என்பதில் 63 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் கிராமப்புறங்களில் மட்டும் தேவைப்படுகின்ற 1,694 பள்ளிக் கட்டடங்களைக் கட்டவும் திட்டமிட்டிருக்கிறோம். இத்தனை ஆண்டுகளைவிட அதிகமான சதவிகிதத்தில் இந்த ஆண்டு கட்டத் திட்டமிட்டிருக்கிறோம். இதிலே தேவைப்படுகிற கட்டடங்கள், அதாவது எந்த எந்தக் கட்டடங்கள், ஏற்கெனவே நடுநிலைப் பள்ளி, ஊராட்சி ஒன்றியப் பள்ளி, இவைகளுடன்கூட சென்ற ஆண்டிலிருந்து உயர்நிலைப் பள்ளிகளை மட்டும் சேர்த்துக்கொண்டு புதியதாகக் கட்டிக்

கொடுத்துவிட்டோம். இந்த ஆண்டு 1,694 பள்ளிகளில் புதியதாக வேறு ஒரு வகையான பள்ளிகளையும் இதிலே சேர்த்திருக்கிறோம். அது எது?

அதாவது தேவைப்படும் 1,694 பள்ளிக் கட்டடங்கள் எவையோ அவற்றில் 382 ஆதிதிராவிடப் பள்ளிகளும் இருக்கின்றன. இதுவரை பள்ளிக் கட்டடம் கட்டமுடியாத, நிதிவசதி இல்லாத நிலையில் அந்தத் துறையினர் இருக்கிறார்கள். அப்படியிருக்கிற 382 ஆதிதிராவிட பள்ளிகள் அத்தனைக்கும் பள்ளிக் கட்டடம் கட்டிக் கொடுப்பது என்ற முடிவிற்கு நாம் வந்திருக்கிறோம். நிச்சயமாகக் கட்டித்தரப் போகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, சீர்மரபினர்களுக்கு ஒரு துறை ஏற்படுத்தி, அவர்களுக்கு பள்ளிகள் நடத்திக்கொண்டிருக்கிறோம். ஆனால், பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கான நிதி வசதி இல்லாத காரணத்தினால், ரொம்ப பேர், நம்முடைய சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கூட ஒருமுறை என்னிடத்திலே கேட்டார், அவர் கேட்டதற்குப் பிறகு நான் கேட்டுச் சொல்கிறேன் என்று சொன்னேன். துறையைக் கேட்டேன் அவர்கள் ஏறத்தாழ 62 சீர்மரபினர் பள்ளிகளுக்கு கட்டடங்கள் தேவைப்படும் என்று சொன்னார்கள். அந்த 62 கட்டடங்களை இந்த ஆண்டு நாம் கட்டித் தருவதற்குத் திட்டமிட்டிருக்கிறோம்; கட்டித் தருவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, அரசு உயர்நிலைப் பள்ளிகள். அந்தந்த கிராமப்புறங்களில் இருக்கின்ற இந்தத் துறை சம்பந்தப்பட்ட பள்ளிக் கட்டடங்கள் எதுவாக இருந்தாலும் கட்டித் தர இருக்கிறோம். அதைவிட, இன்னொன்று, ஆதிதிராவிடர் பள்ளிகளுக்கு, ரொம்பத் தூரத்தில் இருந்து பேருந்து வசதி இல்லாத கிராமத்திலிருந்து வருபவர்கள் தங்கிப் படிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படி தங்கிப் படிப்பதற்கு, Hostel என்ற முறையில் அவர்கள் தங்கி இருக்கிறார்கள். அது இருப்பது, பழைய கட்டடங்களிலும் சில வாடகைக் கட்டடங்களிலும் என்பதையும், அவர்கள் அங்கே தங்கிப் படிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது என்பதையும் விசாரித்து அறிந்து பார்த்த வகையில், அவர்கள் ஏழை எளிய ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவர்கள் என்பதால் அவர்களுக்காக தங்கும் வசதியுடன்கூடிய 49 பள்ளிகளுக்கு, குறிப்பாக மலைப் பிரதேசங்களில் வாழ்பவர்களுக்கு இடவசதி அதாவது இடம் மட்டும் இருந்துவிட்டால்கூடப் போதும், அனைத்து பள்ளிக்



கட்டடங்களுக்கும் நடப்பு ஆண்டிலேயே கட்டடம் கட்டித் தருவது என்று முடிவெடுத்திருக்கிறோம். நிச்சயமாகக் கட்டித் தருவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

சத்துணவு மையக் கட்டடங்களைப் பொறுத்தவரையில் சிலபேர் அந்தப் பெயர், இந்தப் பெயர் இதெல்லாம் வைத்து, கட்சி, அரசியல், உள்நோக்கம், வெளிநோக்கம் என்றெல்லாம் சொல்கிறார்கள். இது எம்.ஜி.ஆர்.-ன் பெயரால், சத்துணவுத் திட்டம் என்ற பெயரால் அன்றைக்குத் தொடங்கி இன்று வரையில் 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடம்' என்று பெயர் அழிந்த Board-ஐக்கூட இந்த அரசு எழுதி மாட்டியிருக்கிறது.

பிற்பகல் 3-30

அதை நான் அந்தப் பக்கம் பார்த்துச்சொல்வதாலே அவருக்குச் சொல்வதாகக் கருதவில்லை. இந்த அரசினுடைய நேர்மையைக் குறிப்பிட்டுக் காட்டுகிறேன். நான் ஓர் அரசியல் கட்சியைச் சேர்ந்தவன். நான் எப்படியோ இருப்பேன். என்னுடைய கொள்கைகளெல்லாம் வேறு. இருந்தாலும்கூட, முதலமைச்சர் இட்ட கட்டளையைத் துளியும் பிசகாமல் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக அந்த அழிந்த Board-களைக்கூட எழுதுவதற்கு உத்தரவிட்டு அதை எழுதியிருக்கிறோம். இன்றைக்குக்கூட அதைப் பார்க்கலாம்.

அப்படிப்பட்ட 2000 சத்துணவு மையங்கள், குறிப்பாகக் கணக்கெடுத்த வகையில் பழுதடைந்திருக்கின்றன என்று அந்தத் துறையிலிருந்து தகவல் கிடைத்தது. இந்த ஆண்டு அந்த 2000 கட்டடங்களுக்கும் 2 கோடி ரூபாய் செலவழித்து அத்தனையையும் பழுது பார்த்து முடிப்பது என முடிவு செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதற்குப் பிறகு, கட்டடங்கள் புதிதாக வேண்டாமா? என்ற வினா எழும். அது இன்னும் தேவைப்படுகிறது. அதிலேகூட, புதிதாக 500 சத்துணவு மையக் கட்டடங்கள் இந்த ஆண்டு கட்டித் தருவதாக முடிவெடுத்திருக்கிறோம். அதையும் கட்டித் தருவோம்.

அடுத்து, பொது விநியோகக் கட்டடங்கள். இப்பொழுது கூட்டுறவுத் துறை அமைச்சர் அவையில் இல்லை. முக்கியமான வேலையாக வெளியே சென்றிருக்கிறார். முதலமைச்சருடைய காதில் விழும்படியாகச் சொல்கிறேன். அதை ஏராளமாகக் கட்டிக் கொண்டிருக்கிறோம். கட்டிக்

கொடுப்பதற்கு காரணம், அவர்கள் வாடகை 500, 600, 700 ரூபாய் வாடகைக்கு என்று, ஓட்டைக் குடிசைகளில் எல்லாம், கதவு இல்லாத இடத்திலேயெல்லாம்கூட கடை வைத்திருக்கிறார்கள். நான் இதைக் கட்டிக் கொடுத்துவிட்டு, ஏதாவது ஒரு வாடகை கொடுங்கள். சுண்ணாம்பு அடிக்கக்கூட மறுக்கிறார்கள். அதிலே நான் ரிப்பேர் செலவுகளையும் செய்கிறேன், என்று சொல்லியிருக்கிறேன். முதலமைச்சரும், உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரும் எனக்கு, அதற்கு என்று வாடகை போட்டுத் தர வேண்டும் என் துறையிலேயிருந்து அது குறித்து குறிப்பு எழுதிக் கொண்டே இருக்கிறார்கள். தயவுசெய்து அவர் அவையில் இருந்திருந்தால் கேட்டிருப்பேன். முதலமைச்சரிடத்தில் நான் இந்தக் கோரிக்கையை வைக்கிறேன். அவர் கோரிக்கையை நிறைவேற்றுகிறாரோ இல்லையோ, இருந்தாலும் என் கடமையை நான் செய்கிறேன்.

சென்ற ஆண்டு ஏறத்தாழ 2000 கட்டடங்களை எடுப்பதாகக் கருதினோம். ஆனால் 2763 கட்டடங்கள் கட்டி முடித்திருக்கிறோம், ஆக, சென்ற ஆண்டு குறியீடு நிர்ணயித்தது 2000; ஆனால் கட்டி முடித்திருப்பது 2763. இன்னும்கூடச் சொல்லுகிறேன். அந்தக் கட்டடங்களைப் பார்ப்பதற்கே அழகாக இருக்கிறது. அதை வடிவமைத்துக் கொடுத்தவர்கள் நல்லமுறையில் செய்து கொடுத்திருக்கிறார்கள். ஒரு கிராமத்தில் அது இருக்கிறது என்றால் அது ஓர் அழகாகவே இருக்கிறது. எனவே, ஏற்கெனவே இருந்த கட்டடங்கள் போக 54 கோடி ரூபாய் செலவில் இந்த வருஷம் ஏறத்தாழ 3000 கட்டடங்கள் கட்டுவதாக முடிவெடுத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற ஆண்டு இலக்கு 2000. அந்த இலக்கைத் தாண்டி 2763 கட்டியிருக்கிறோம். இந்த ஆண்டு ஏறத்தாழ 3000 கட்டடங்கள் எடுப்பதாக முடிவெடுத்திருக்கிறோம். பாக்கியிருப்பவை அத்தனையும் இரண்டு ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டுவிடும் என்ற உத்தரவாதத்தையும் இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு கட்டடங்கள் கட்டுவதில் ஏராளமான திருப்புமுனையை இந்தத் துறை ஏற்படுத்தியிருப்பதற்கு இன்னொரு சான்று கிராமப்புறங்களில் கால்நடைத் துறையின்கீழ் கால்நடை சம்பந்தப்பட்ட மையங்கள் இருக்கின்றன, பெரிய கால்நடை மருத்துவமனை இருக்கிறது. சிறிய மருத்துவ நிலையங்கள் இருக்கின்றன.



இவைகளின் மூலம் கால்நடைத் துறையில் கிராமப்புற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. மொத்தம் 207 இடங்களில் கால்நடை மருந்தகங்கள் இருக்கின்றன. அவை சிறிய மருந்தகங்கள். மேலும் 200 கால்நடை துணை மையங்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் கணக்குப்பார்த்து இந்த ஆண்டு 207 மற்றும் 200 ஆக மொத்தம் 407 கட்டடங்கள் 18 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பக்கத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் இருக்கிறார். அவர் ஒருவகையில் தமிழ்நாடு பூராவிலும் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும் கட்டடம் கட்டித் தருவதாக ஒரு முடிவு எடுத்து கட்டடம் கட்டிக் கொண்டிருக்கிறார், கட்டி முடித்து விடுவார். அதிலேயே இப்போது ஒரு சிறிய மாற்றம். அங்கே இருக்கிற அந்த ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு கீழ் சுகாதார துணை மையங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு இப்போது 300 சுகாதார துணை மையக் கட்டடங்கள் தேவைப்படுகின்றன. 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 300 சுகாதார துணை மையக் கட்டடங்களும் இந்த ஆண்டே கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய முதலமைச்சருடைய அறிவுரைப்படி, நான் எப்பொழுதுமே அவரை இழுத்துச் சொல்வதற்குக் காரணம், அவர் சொல்லிச் செய்கிற காரியங்களுக்குப் பெரிய வரவேற்பு இருக்கிறது. அதனால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அதற்காகச் சொல்கிறேன். கிராமப்புறங்களிலே மயானங்களெல்லாம் இருக்கின்றன. ஓர் ஊரிலே நான்கைந்து மயானங்கள் கூட இருக்கின்றன. ஓர் ஊரிலே ஒரே மயானம் இருக்கிறது. ஒரு வீடு, இரண்டு வீடுகள் இருந்தால்கூட ஒரு மயானம் இருக்கிறது. 500 வீடுகள் இருந்தால்கூட ஒரு மயானம்தான் இருக்கிறது. அதிலே அந்த குறிப்பிட்ட ஜாதிக்காரனைத் தான் எரிக்கலாம், புதைக்கலாம். இதிலே, இந்த 500 ஜாதிக்காரனைத்தான் எரிக்கலாம், புதைக்கலாம். இந்த 500 ஜாதிக்காரன் போவதற்கு சாலை இல்லை. அந்த ஒரு வீடு வைத்திருக்கிறவனுக்கு, ஒரு சாலை வீட்டுக்காரனை எடுத்துச் செல்வதற்கு தார் சாலை போகிறது. இதெல்லாம் நாட்டிலே இருக்கிறது. இந்தப் பிரச்சினைகள் வருகின்றன. ஆகையினாலே முதலமைச்சருடைய ஆலோசனைப்படி ஒரு முடிவெடுத்திருக்கிறோம். கிராமப்புறங்களில் பொது மயானம் என்று ஏற்கெனவே ஒரு மயானம் இருந்தாலும் அல்லது பல மயானங்கள்

இருந்தாலும் அனைத்து மயானங்களையும் அதுபோல், ஓர் ஊராட்சி ஒன்றியத்தில் எத்தனை இடுகாடுகள் இருந்தாலும், அத்தனை இடுகாடுகளையும் எந்த ஜாதியினரும் உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்று ஊராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றி (மேசையைத் தட்டும் ஒலி) 5 மாதங்கள், 6 மாதங்கள் அது நடைமுறையிலே இருந்து அது நிரூபிக்கப்படுமானால், அப்படிப்பட்ட ஊராட்சிகளுக்கு ஓர் இலட்ச ரூபாயை ஊக்க நிதியாகத் தருவதற்கு இந்த அரசு முடிவெடுத்து இருக்கிறது

*பிற்பகல் 3.35*

அதோடுமட்டுமல்ல, அந்த ஊராட்சிக்கு நம்முடைய தமிழக அரசின் சார்பாக 'சமத்துவ விருதை' முதலமைச்சர் வழங்குவதாக ஒத்துக்கொண்டிருக்கிறார். அதனுடைய பெருமையை அடைவதற்கான முயற்சிகளை சட்டமன்ற உறுப்பினர்கள் ஆங்காங்கே செய்ய வேண்டும். நீ என்ன செய்தாய் என்று என்னைக் கேட்டால், ஒரு வருடம் ஆயிற்று, என்னுடைய சொந்த ஊரில், எங்கள் ஊராட்சி மன்றத்தில், அவர்கள் புதிய பொறுப்பை ஏற்றவுடன், அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி, அந்தத் தீர்மானத்தை Board-ல் எழுதி, அந்த மயானத்திற்குப் போகின்ற வாசலில் வைத்திருக்கிறோம். ஓர் ஆண்டுகாலமாக, அங்கே ஆதிதிராவிட சமுதாயத்தில் யாரும் சாகவில்லை. ஆகவே பிரச்சினை இல்லாமல் இருக்கிறது. இது இன்னும் ஆறு மாதம் தள்ளிப்போகும் போல இருக்கிறது. (சிரிப்பு) அதோடு மட்டுமல்ல, அதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நான் பிறந்த மண்ணுக்குப் பக்கத்தில், அரசியல் கட்சிகள், எங்கள் கட்சி இருக்கிற அத்தனை ஊரிலும் இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அறிவித்திருக்கிறேன். அதை நான் நடத்திக் காட்டுகிறேன். நீங்களும் நடத்திக் காட்ட வேண்டும். ஒவ்வொருவருமே இந்தப் பொறுப்பை எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு தொகுதியிலும் இரண்டு இடம் அல்லது ஓர் இடத்தையாவது தயவுசெய்து எடுத்துக்கொள்ள வேண்டும். ஐந்து இடத்திலே செய்துவிட்டுத்தான் நான் இந்தக் கொள்கையை அறிவிக்கிறேன் அதைப்போல, ஒவ்வொருவரும் இரண்டு, மூன்று இடங்களையாவது தேர்வு செய்தீர்களானால், முதல்வர் அவர்களுடைய கனவு நனவாகும். சமத்துவ புரத்தைச் சமைத்தவர் இதையும் அறிவித்து இருக்கிறார். அதை நிறைவேற்றித் தாருங்கள் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.



மக்கள் தொடர்பு தகவல் நிலையத்தை இந்தியாவிலேயே நம்முடைய முதலமைச்சர் தான் முதன்முதலில கொண்டு வந்திருக்கிறார். இது செயல்படுவது முதல் கட்டமாக தஞ்சை மாவட்டத்தில், வேறு மாவட்டம் கிடைக்கவில்லையா, என்று கேட்பீர்கள் நீங்கள் மாவட்டம் கிடைக்கவில்லையா, என்று கேட்பீர்கள் நீங்கள் சொன்னாலும் முதலமைச்சர் அவர்களே சொல்வார். இதில் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கிறது. அதற்காகத்தான் நான் தேடிப் பார்த்தேன். அதிலே 14 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன அவையனைத்துக்கும் கணினி வசதிகளை அமைக்க ஏற்பாடு செய்து கொடுத்து, படிப்படியாக மற்ற ஒன்றியங்களுக்கும் அதை விரிவுபடுத்துவதற்காக இந்தத் திட்டத்தை முதலில் அறிவித்து அதற்கு 63 இலட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். ஒரு மையத்திற்கு 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவாகும்.

அதேதன்னியில் இன்னொன்று, இந்த ஊராட்சிகளே அதை உருவாக்குவதற்கு, நீங்களகூட அதைச் சொல்வீர்கள் என்று எதிர் பார்த்தேன். நன்றாக, சிறப்பாகப் பணியாற்றுகிற ஊராட்சி மன்றங்களுக்கு ஏதாவது செய்யக்கூடாதா என்று நீங்கள் யாரும் கேட்கவில்லை. அந்தப் பொறுப்பை நானே எடுத்துக்கொண்டிருக்கிறேன். காரணம், அதிகாரம் கேட்பதற்கே உங்களுக்கு நாழியாகிவிட்டது. ஆகவே அதற்குள் உங்களாலே போகமுடியவில்லை. ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய முறையில், பஞ்சாயத்து நிருவாகத்தை மேம்படுத்த மக்கள் பிரதிநிதிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சிகளும், அதேபோல், அவர்களுக்கு மற்ற வழிகளிலும், சிறந்த உள்ளாட்சி எது என்பதைத் தேர்வு செய்வதற்கும் ஒரு வாய்ப்பை உருவாக்கியிருக்கிறோம். அந்த வாய்ப்பின் கணக்கைப் பார்த்தால், ஒரு மாவட்டத்திற்கு மூன்று ஊராட்சிகள், மூன்று ஊராட்சி ஒன்றியங்கள், அதேபோல், மாநில அளவில் மூன்று ஊராட்சிகள், மாநில அளவில் மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் மாநில அளவில் மூன்று மாவட்ட ஊராட்சிகள், இவற்றைத் தேர்வு செய்து, எவை சிறப்பாகப் பணியாற்றுகின்றன என்று கணக்கெடுத்து அவற்றிற்கு கிட்டத்தட்ட நாம் அந்த சிறந்த ஊராட்சி அமைப்புகளுக்குப் பிரதிநிதி பரிசுகளும், ஊராட்சிப் பரிசுகளும் வழங்குவதற்கு ஆண்டுதோறும் இந்தத் திட்டத்தை வலியுறுத்தியிருக்கிறோம். அதன் அடிப்படையில் அவர்கள் அத்தனை பேருக்கும் பரிசுகளும், விருதுகளும் வழங்கப்பட இருக்கின்றன. ஏறத்தாழ 177 பரிசுகள் வரும் இந்த கணக்குப்படி பார்த்தால், இந்த 177 பரிசுகளுக்கும் இரண்டு கோடியே ஐந்து இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கருதப்படுகிறது. இந்த ரூபாயை

செலவழித்து அவர்களை ஊக்குவிக்க பரிசளித்து, பாராட்டிதழ் அளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதுபோலவே, மக்கள் பிரதிநிதிகளுக்கு தீவிரப் பயிற்சி, இதை வாயாலேயே சொல்லிக்கொண்டே வந்தோம். உள்ளபடியே நாங்களும் இதில் அரையாண்டுக் காலம், ஓராண்டுக் காலம் தவறிவிட்டோம். பல பணிகள் இருந்ததாலே எங்களால் இதை அதிகமாகச் செய்யமுடியவில்லை. தீவிரமான முயற்சியை இரண்டு மாதத்திற்கு முன்னாலே எடுத்து இருக்கிறோம். அந்த முயற்சியின் அடிப்படையில் நல்ல வெற்றி கிடைத்திருக்கிறது. இங்கே ஐந்து இடங்கள் இருக்கின்றன. அதாவது, கணக்குப் பார்த்தால், 1999 முதல் தீவிரப் பயிற்சித் திட்டம் தொடங்கப்படும். மறைமலை நகரில் மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிலையம் ஒன்று இருக்கிறது. பெரிய பயிற்சி நிலையம். இன்னொன்று பட்டுக்கோட்டையில் இருக்கிறது. ஏற்கெனவே கிராம Self centre-ஆக இருந்தது. நமது துறையில்தான் இருக்கிறது. அங்கே கட்டடம் பழுதாக இருக்கிறது. அதை பழுதுபார்த்து. பட்டுக்கோட்டை, கிருஷ்ணகிரி, எஸ்.வி. நகரம், கல்லுப்பட்டி, பவானிசாகர் போன்ற ஐந்து இடங்களில் வட்டாரப் பயிற்சி நிலையங்களிலும் வசதிகள் செய்து கொடுத்து நடத்தப்படும்.

*பிற்பகல் 3-40*

கிராம ஊராட்சிகளுக்கு மாவட்ட அளவிலேயே சிறப்பாகச் செயல்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் பயிற்சி அளிக்கப்படும். மத்திய-மாநில அரசுகளின் உதவியும் UNICEF போன்ற நிறுவனத்தின் நிதி உதவியும் ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரு கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் 1,31,950 உள்ளாட்சி பிரதிநிதிகளில், ஏறத்தாழ 50 விழுக்காடு பிரதிநிதிகளுக்கு ஒருசில அதிகாரிகளையும் சேர்த்து இந்த ஆண்டில் பயிற்சி அளிக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளில் வேலை பார்க்கின்றவர்களுக்கு தணிக்கைத் தடை என்பது ஒரு பெரிய தொல்லையாக இருந்து, எப்போது அவர்கள் ஓய்வு பெறுகிறார்களோ அப்போது அவர்களை அந்த ஓய்விலிருந்து தடுக்கின்ற மாதிரி ஒரு சூழ்நிலை இருந்து, பரிதாப நிலையில் இருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு குழு அமைத்து,



அந்தக் குழு மூலம் அதையும் ஏற்பாடு செய்தோம். அதிலே இரண்டு ஆண்டுகளில் மட்டும் 1,60,218 தணிக்கைத் தடைகளை நாங்கள் சீர்செய்தோம். இருந்தாலும் அது வளர்ந்து கொண்டே வருகிறது. அதற்காக இப்போது ஒரு புதிய முடிவைச் செய்திருக்கிறோம். புதிய தணிக்கைத் தடைகள் கூடிய வண்ணம் உள்ளன. இவை அதிகரித்துக் கொண்டே வருவதால், இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண, ஊராட்சி ஒன்றியங்களிலும், மாவட்ட ஊராட்சிகளிலும் நடப்பு ஆண்டு முதல் தொடர் மற்றும் உடன் தணிக்கை முறையை அமல்படுத்த இருக்கிறோம். அந்த முறை வந்தால் அவ்வப்போது தணிக்கை ஆகும். அவ்வப்போது தணிக்கை நடைபெற்றால் தணிக்கைத் தடை வளராது, நீளாது. ஆகையினால்தான் அந்த முறையை இந்த வருடம் கொண்டு வந்திருக்கிறோம்.

இன்னொரு பெரிய பிரச்சினை, அரசு அலுவலகங்களில் வேலை பார்க்கின்ற அலுவலர்களுக்கு உள்ளதுபோல, ஊராட்சி ஒன்றியம் போன்றவைகளிலே வேலை பார்க்கின்றவர்களுக்குச் சில சலுகைகள் வேண்டும். அதற்காகத்தான் எங்களை அரசு ஊழியர்களாக ஆக்குங்கள் என்ற கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒன்று. ஓய்வூதியதாரர்களுக்கு மருத்துவ நிதி மற்றும் குடும்பக் காப்பு நிதி வழங்குங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு, அரசு ஊழியர்களுக்குக் கிடைப்பதுபோல, மருத்துவ உதவி மற்றும் குடும்பப் பாதுகாப்பு நிதி வழங்கப்படுவதில்லை. எனவே, மருத்துவ உதவித் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் போன்றவை உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இனி இந்த ஆண்டு முதல் இந்தப் பலன் அரசு அலுவலர்களுக்குக் கிடைப்பதுபோல அவர்களுக்கும் கிடைக்கும். இதனால் மருத்துவ சிகிச்சைக்கு ஏற்படும் செலவினத்தை இவர்கள் திரும்பப் பெற இயலும். அதேபோல், ஓய்வூதியதாரர்கள் ஓய்வுபெற்றபின் குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந்தும், குறைந்தது ஒரு வருடத்திற்குச் சந்தாத் தொகை செலுத்தியபின் இயற்கை எய்தினால் அவர்கள் குடும்பத்தாருக்கு 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்ற திட்டத்தை இந்த ஆண்டு முதல் இந்த அரசு அமல்படுத்துகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, அரசு அலுவலர்கள் பெறும் சலுகைகளை ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். திரு. சுப்பராயன் அவர்கள் எழுத்து மூலமாக ஒரு கடிதம் தந்தார்கள். இன்றைக்கும் அதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் கிடைக்கும் வகையில் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாகன முன்பணம், ஓய்வுபெறும்போது கணக்கில் உள்ள அரைச் சம்பள ஈட்டாத விடுப்பினை காசாக்குதல், விடுப்புப் பயணச் சலுகை, வீடுகட்ட முன்பணம் போன்ற இத்தனை சலுகைகளையும் இனி ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் அத்தனை பேருக்கும் இந்த அரசு வழங்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, ஊராட்சி ஒன்றியப் பணியிடங்களில் ஏற்படும் காலியிடங்களை நிரப்ப இதுவரையில் அனுமதி இல்லை. ஊராட்சி ஒன்றியங்களில் அதன் பொது நிதியிலிருந்து ஊதியம் அளிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பணியிடங்களில் காலி ஏற்படும்போது, அதைப் பூர்த்தி செய்ய அவ்வப்போது விவரங்கள், விளக்கங்கள் மற்றும் தெளிவுரைகள் கோரப்படுகின்றன. இனி, ஊராட்சி ஒன்றியங்களில் அதன் பொது நிதியிலிருந்து ஊதியம் அளிக்கப்படும் பணியிடங்களில் காலியிடம் ஏற்பட்டால், தமிழ்நாடு தேர்வாணைய ஆளுகைக்குட்பட்ட பணியிடங்கள் மற்றும் மறையும் தன்மையுடைய அதாவது தற்போது பணிபுரிபவர் இறந்தாலோ அல்லது ஓய்வு பெற்றாலோ வேறு ஒருவரைக் கொண்டு பூர்த்தி செய்ய முடியாத பணியிடங்கள் தவிர, ஏனைய பணி நீட்டிப்பு உள்ள பணியிடங்களை, குறிப்பாக பதிவுரு எழுத்தர், இரவுக் காவலர் போன்ற பணியிடங்களை ஊராட்சி ஒன்றிய நியமனக் குழு மூலமாக விதிகளுக்குட்பட்டு நிரப்பிக்கொள்ள அனுமதி அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

*பிற்பகல் 3-45*

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நான் வலியுறுத்திக் குறிப்பிடுவது, 12,617 ஊராட்சிகளில் எழுத்தர்களாக, 31 வகையான ஆவணங்களை பராமரிக்கிற எழுத்தர்களாகப் பணிபுரிகிறவர்கள்



நிரந்தரமாக்கப்பட்டு அவர்களுக்கு, time scale வழங்க வேண்டும் என்பதைத்தான் நான் வலியுறுத்தினேன். அதுகுறித்து அமைச்சர் சொல்கிறாரா அல்லது பஞ்சாயத்து யூனியன் பற்றிச் சொல்கிறாரா என்பது எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் முடித்திருக்கிறேன். அடுத்த சில நிமிடங்களுக்குப் பிறகு அதுபற்றி விவாதிக்கலாம். அதைப் பூர்த்தி செய்ய, ஊராட்சி ஒன்றியங்களில் பூர்த்தி செய்ய முடியாத பணியிடங்களைத் தவிர, ஏனைய பணி நீட்டிப்பு உள்ள பணியிடங்கள், குறிப்பாக பதிவுரு எழுத்தர், இரவுக் காவலர் போன்ற பணியிடங்களை ஊராட்சி ஒன்றிய நியமனக் குழு மூலம் நியமனம் செய்யலாம் என்று. அவ்வப்போது விளக்கங்கள் மற்றும் தெளிவான அறிவுரைகளைக் குறிப்பிட்டு ஆணைகள் வழங்கியிருக்கிறோம். ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் இது clear. அதற்கு அடுத்தப்படி, ஊராட்சி ஒன்றியங்களில் சில்லறை செலவினத் தலைப்பில் பணிபுரியும் இரவுக் காவலர்களை முறையான பணிக்குக் கொண்டு வருதல். இதுவொரு தனி Category. 1-4-1981-க்குப் பிறகு இரவுக் காவலர்களை முறையான காலி பணியிடத்தில் சில்லறை செலவினத் தலைப்பில் பணி நியமனம் செய்வது தடை செய்யப்பட்டது. ஆனால் தடை செய்யப்பட்டு இருந்தாலும், பல ஊராட்சி ஒன்றியங்களில் காலி ஏற்பட்டு, காலி இடத்திற்கு ஏற்பட்டதோ, இல்லை அவர்கள் பணிக்கு ஏற்பட்டதோ; இடங்கள் காலி இல்லாமல் போனாலும்கூட ஆட்களைச் சேர்த்திருக்கிறார்கள். அப்படி பல ஊராட்சி ஒன்றியங்களில் காலி ஏற்பட்ட இப்பணியிடங்கள் அரசு முன் அனுமதியின்றியும், பணியிடம் தொடர் நீட்டிப்பு இன்றியும், சில்லறை செலவினத் தலைப்பு, தொகுப்பூதியம், தினக்கூலி மற்றும் கால ஊதிய ஏற்ற முறையிலும் இரவுக் காவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இந்தப் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் என்பதை கருத்திற்கொண்டு, அவற்றையெல்லாம் அனுமதிக்கத்தக்கவைகளாகவே ஏற்றுக்கொண்டோம். ஆனால் அனுமதிக்குத் தகுதி இல்லை, இருந்தாலும் இடத்திற்கு இல்லாமல், நபர்களை மனதில் வைத்து அவற்றை காலி பணியிடங்களாகக் கருத்திற்கொண்டு, இவர்களுடைய பணிகளையும் வரன்முறை செய்து நிலையான பணியிடத்திற்கு இவர்கள் கொண்டு வரப்படுவார்கள். வெளியிலே தற்காலிகமாக இருந்தவர்கள் நிலையான இடத்திற்குக் கொண்டு வரப்படுவார்கள்.

[திரு. கோ.சி. மணி] [1999 மே 12

ஊராட்சி ஒன்றியங்களிலே பணிபுரியும் ஆழ்க்குழாய்க் கிணறு பராமரிப்பு உதவியாளர்கள் பணி வரன்முறை செய்தல், இது ஒரு கோரிக்கை. இதுபற்றி சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். இந்தப் பிரச்சினை பற்றி.... (குறுக்கீடு) நான் தமிழில் சொல்கிறேன். நீங்கள் ஆங்கிலத்தில் சொல்கிறீர்கள். தினக்கூலி அடிப்படையில் 1985 ஆம் ஆண்டு முதல் நியமிக்கப்பட்டு 5-5-1998 வரையில்தான் பணியாற்றினார்கள். அதுதான் அங்கேயிருக்கிற சிக்கலே. அவர்கள் நிரந்தரமாக ஒரு துறையில் 1985 ஆம் வருடத்தில் ஆரம்பித்து, 1998 ஆம் வருடம் 5ஆம் மாதம் வரையில் பணியாற்றினார்கள். அதற்குப் பிறகு பஞ்சாயத்து யூனியன் வேறு, பஞ்சாயத்து வேறு என்று மாற்றப்பட்டுவிட்டது. பஞ்சாயத்து ஒன்றியங்களில் அவர்களுக்குப் பணி இல்லை. அதனாலே அவர்கள் வெளியில் செல்லலாம் என்று சொல்லி விட்டார்கள். அப்படிப்பட்ட தற்காலிகப் பணியாளர்களைச் சேர்க்கக்கூடாது என்று வைத்திருக்கிறோம். அவர்கள் நிரந்தரமாக்கப்பட்டவர்கள் அல்ல. ஆனால் இப்போது இதுபற்றி முடிவு செய்ய நம்மால் இயலாது. என்ன காரணம் என்றால், உயர்நீதிமன்றத்திலே வழக்கிற்குச் சென்று விட்டார்கள். உயர்நீதிமன்றத்தின் வழக்கின் தீர்ப்பு எதுவோ, அதை ஏற்றுக்கொண்டு இந்த அரசு முடிவு எடுக்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்தத் தீர்ப்பை ஒட்டித்தான் இப்போது தற்காலிகமாக அதுபற்றி அறிவிக்காமல் இருக்கிறோம் என்பதையும் நான் இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் மனு கொடுத்தவர்கள், இதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்களிடத்திலே தெரிவித்திருக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். காரணம் அவர் அதிகம் யோசனை செய்து கொண்டிருக்கிறார், இதுதானா, அதுதானா என்று யோசனையில் இறங்குகிறார். நான் நிச்சயமாகச் சொல்கிறேன். அதற்கு என்ன காரணம்? எதற்கு அழுத்தமாக சொல்கிறேன் என்றால் என்னிடத்திலேயே மனு கொடுத்தார்கள். அவாகள் இதைச் சொலலவில்லை. அதை நான் தெரிந்துகொள்ளாமல், அதிகாரிகளை அழைத்துக் கேட்டபோதுதான், இப்படி உயர்நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது என்று சொன்னார்கள். அதைத்தான் நான் முதலமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்தேன். இப்போது புதிய மாவட்டங்களிலே பிறகு இருக்கின்ற சில இடங்களிலே வளர்ச்சி பெறாமல் கட்டடம்....



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் குறிப்பிடுவதுபோல அவர்கள் வழக்காடு மன்றத்திலே வழக்கு தொடுத்திருந்தாலும், நாங்கள் உங்கள் வார்த்தைகளை ஏற்றுக்கொள்கிறோம். பணி வரன்முறை செய்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்துவிட்டால், வழக்கை உடனடியாக திரும்பப்பெற்றுக்கொள்கிறோம் என்கிற நிலையைத் தெரிவித்துத்தான் அமைச்சர் அவர்களிடத்திலே அந்த மனுவைக் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது ஒரு நீதிமன்ற விவகாரம். அது எல்லாவற்றுக்கும் ஒரு வகையாகவே அமையும். ஆகையினால் தீர்ப்பு எதுவோ, தீர்ப்பு மாறாக இருந்தாலும், சரியாக இருந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எத்தனையோ காரியங்களை, என்னென்னவோ செய்திருககிறார்கள். அதைப் பிறகு பேசித் தீர்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) இல்லை, வழக்கு இருக்கும்போது அதிலேபோய் உறுதியாக நான் சொல்ல முடியாது. அப்புறம் அதை நீங்கள் பேசிக்கொள்ளலாம்.

பிற்பகல் 3-50

புதிதாக தோற்றுவிக்கப்பட்ட சில மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடங்களில் இடவசதி இல்லை, அதுபோல மாவட்ட ஊராட்சிகளிலும் இட நெருக்கடி உள்ளது என்று சொல்கிறார்கள். அதற்காக திருவள்ளூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் அரசு அலுவலகங்களுக்கு உள்ள இட நெருக்கடியை போக்கும் வகையில் ஒவ்வோர் இடத்திலும் ரூபாய் 2.5 கோடி செலவில் வளர்ச்சி வளாகங்கள் கட்டப்படும். எங்களிடத்திலே பனகல் சங்கம் என்று ஒரு சங்கம் இருக்கிறது. அந்தக் கட்டடங்கள் பனகல் சங்கத்தின் சார்பில் கட்டப்படும். அந்தச் சங்கம் விரைவில் நடவடிக்கை எடுத்து, கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்.

சில சட்டமன்ற உறுப்பினர்கள் முதலமைச்சருக்குத் தெரிவிக்காமல், என்னிடத்திலே வந்து, முதலமைச்சர் முகவரியிட்டு ஒரு மனுவை எழுதி, மணி அண்ணே, இதை முதலமைச்சரிடம் கொடுத்துவிடுங்கள் என்று என்னிடம் சொன்னார்கள். அது ஒன்றும் பெரிய பிரச்சினையே

அல்ல. ஏற்கெனவே இதுவரையில் தொகுதிக்கு எல்லாம் ஜீப்புகளில் போய்விட்டு வந்தோம், அது நடுவிலே நிறுத்தப்பட்டு விட்டது. இப்போது எங்களுக்கு வேண்டுமென்று சொன்னார்கள். 4 நாட்கள் கேட்டார்கள். எல்லாவற்றுக்கும் அடுத்த மாநிலத்தைச் சொல்கிற நீங்கள், சட்ட விளக்கத்தைச் சொல்கிற நீங்கள், அதிகாரத்தைக் கேட்கிற நீங்கள், வரிவிதிப்பைக் குறைக்க வேண்டுமென்று சொல்கிற நீங்கள், சாதாரணமாக இதுபோல கேட்டுக்கொண்டிருக்கின்ற நீங்கள், இதை விட்டுவிடலாம் இல்லையா? இது ஆந்திராவில் கொடுக்கப்படுகிறதா என்று கேட்டேன். அங்கு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஜீப்பு கொடுக்க வேண்டுமென்பதற்காக, ஆந்திராவில் கொடுப்பதாக முதலில் சொன்னேன். ஆந்திராவில் இல்லை. ஆனால் இதை நாம் ஏற்கெனவே பழக்கப்படுத்தியிருக்கிறோம். ஆனால் இதிலே ஒரு சட்டச் சிக்கல் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான் விசாரித்து, ஜீப்பு கொடுக்க முடியுமா என்று கருத்துக் கேட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிப் படி வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நீங்கள் ஊராட்சி மன்றத்திறகு உறுப்பினராக இருக்கிறீர்கள், ஊராட்சி ஒன்றியத்திற்கு இல்லை. ஆகையினால், அதில் செலவழிக்கின்ற சூழ்நிலை இல்லை. ஆகையினால் ஜீப்புகள் கொடுக்க இயலவில்லை. சட்டத் திருத்தம் தேவை. சட்டம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் இருக்கிற சட்டத்தின் அடிப்படையில், அவர்களுக்கு இருக்கிற அதிகாரத்தைக் கொண்டு, ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். ஓர் ஒன்றியத்திலிருந்து இரண்டு நாட்களுக்கு அவர்கள் ஜீப்பை எடுத்துக்கொள்ளட்டும். இரண்டு யூனியன்கள் மூலம் 2 மற்றும் 2 ஆக 4 நாட்கள் வரும். 4 நாட்கள் ஒரு தொகுதிக்கு நீங்கள் அந்த ஜீப்பை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் Pocket money-ல் இருந்துதான் பெட்ரோல், டீசல் போட வேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறாகள். அதுகூட உங்கள் நிதி அல்ல. தொகுதி சுற்றுப் பயணத்திற்காக உங்களுக்குக் கொடுத்திருக்கிற படியில் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். நாளை, 13 ஆம் தேதி நடைபெற இருக்கின்ற மானியத்திலே ஏதாவது கொஞ்சம் உயர்த்தினால் அதிலே இருந்து நீங்கள் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். தவிர என்னிடம் ஒன்றும் கிடையாது. என்னுடைய வேலை இவ்வளவுதான். நான் இதைக் கேட்டுச் சொல்லிவிட்டேன். பஞ்சாயத்து யூனியனில் இருக்கின்ற ஜீப்புகளுக்கு நான் பொறுப்பு. அதனால் 2 மற்றும் 2, ஆக 4 நாட்கள் நீங்கள் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அந்த வாய்ப்பை (குறுக்கீடுகள்)



நீங்கள் 4 நாட்களுக்குதான் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். அவர்களும் வேலை பார்க்க வேண்டும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொகுதிக்கு 3 ஒன்றியங்களும் வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பதிலுரைக்குப் பின்பு கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 6 நாட்களுக்குப்போக, உங்களுக்கு நேரம் இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். குழுக் கூட்டங்களுக்குப் போவீர்கள், பொதுக் கூட்டத்திற்குப் போவீர்கள், Election-க்கு போவீர்கள். ஓர் ஒன்றியத்திற்கு இரண்டு நாட்கள் என்று எடுத்துக்கொள்ளுங்கள் A.B.D.O., வைத்திருக்கின்ற ஜீப்பை நீங்கள் வைத்துக்கொள்ளலாம். அந்த அந்த ஒன்றியத்திலிருந்து 2 நாட்கள் A.B.D.O.-வுடைய ஜீப்பை நீங்கள் உங்கள் சொந்த எரிபொருளில் உபயோகப்படுத்த வாங்கலாம் என்கிற அளவுக்குத்தான் முதலமைச்சர் அவர்களிடத்திலே இருந்து நான் அனுமதி பெற்று இருக்கிறேன் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து, எழுத்தாளர்கள், பகுதி நேரப் பணியாளர்கள்பற்றி கேட்டு இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சைதை கா. கிட்டு.

**திரு. சைதை கா. கிட்டு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யூனியன்கள் மூலம் ஜீப் கொடுப்பதாகச் சொன்னார்கள். சென்னை மாநகராட்சி, அதுபோல மற்ற மாநகராட்சிகள் மூலமாகக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை. எனக்குத் தெரிந்த வரையில் இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், இந்த ஜீப்பிலே போக மாட்டார்கள், அதனால்தான் சொல்கிறேன். 'அதனால் உங்களுக்குத் தேவைப்படாது என்று நினைக்கிறேன். அது ஒன்றும் பெரிய பிரச்சினையே அல்ல. அதை தனியாகப் பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடு)

இந்த நேரத்திலும், ஞாபகம் வைத்துக்கொண்டு, எழுத்தாளர், முழு நேர எழுத்தாளர்கள் குறித்து என்ன பண்ண போகிறீர்கள் என்று மறுபடியும் திரு. சுப்பராயன் கேட்கிறார். பொதுவாக, முதலமைச்சர் அவர்கள் அன்றையதினம் பேசிய பேச்சிலே, எனக்கு அழுகைகூட வந்துவிட்டது. நாம் திசைமாறிப் போய், தேர்தல் நேரங்களில் மேடைகளில் எவ்வாறு இருந்தாலும், உறவு, நட்பு இவை மாறாமல் இருக்க வேண்டுமென்று ஒரு வார்த்தை சொன்னார்கள். ஆனால் பொதுப்படையான ஒரு கருத்தை நான் சொல்ல வேண்டும். அதிகாரங்கள் கேட்பதே ஒரு குறிக்கோள்.

*பிற்பகல் 3-55*

அறிக்கை விடுகிறபோதுகூட, அதிகாரிகள் தவறு செய்கிறார்கள், தவறு நடக்கிறது என்று ஓர் உண்மையை திரு. இ. ராமசாமி சொன்னார். எதிர்க்கட்சித் தலைவர்கூட, வெளியே பேசும்போது, தவறு நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார். நான் மறுக்கவில்லை. இல்லையென்று சொல்லவில்லை. வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட தவறுகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதற்கு என்ன செய்வது என்பது ஒன்று. அதற்கான முயற்சிகளிலே எல்லோரும் சேர்ந்து ஒத்துழைத்தால்தவிர ஒன்றும் செய்ய முடியாது. இப்போது அங்கே குழு ஒன்று போட வேண்டும், இங்கே ஒரு நீதிபதி மூலம் அதை விசாரிக்க வேண்டும். அதற்கு முடிவு எடுக்க வேண்டும். அதனிடம் கொடுக்க வேண்டும் என்று எல்லாம் நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால், இங்கே எதற்காக உட்கார்ந்து இருக்கிறீர்கள்? எத்தனை ஊராட்சிகளிலே, எத்தனை நகராட்சிகளிலே எவ்வளவு குற்ற நடவடிக்கைகள் குறித்து என்னிடத்திலே மனு கொடுத்து இரண்டு நாட்கள் கழித்து என்ன ஆயிற்று என்று கேட்டவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா? பாருங்கள், அந்தத் தரப்பிலே கையைத் தூக்குகிறார்கள். இரண்டு நாட்கள் போனால், வந்து என்ன ஆயிற்று என்று கேட்கிறார்கள். காரணம், அதையும் நாம் செய்ய வேண்டும். அந்தப் பொறுப்பு இருக்க வேண்டும். ஜீப் கொடுத்தால சரியாகப் போய்விட்டது என்று அல்ல. எவ்வளவோ சிரமப்பட்டு விதிகளைத் தளர்த்தி பண்ணுகிறோம். அதேமாதிரி இவற்றில் சிலவற்றை நீங்கள் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று உங்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.



திரு. சுப்பராயன் அவர்களுக்கு பதில் சொல்ல வேண்டும். ஊராட்சிகளையும் அவர் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். என்னதான் நிதி கொடுத்தாலும், 8%, 19% என்று கணக்குப் போட்டு. எல்லாம் சொல்கிறீர்களே, இன்றைக்கு கொடுத்திருக்கின்ற கணக்கில் 19%-ஐ இந்த 10 ஆயிரம் கோடி வருமானத்தில் இருந்து கழித்தாலே, 19 கோடி சொச்சம் வருகிறது. அந்தக் கணக்கை, இந்தக் கணக்கை தேடிப் பார்க்க வேண்டாம். அதிகாரிகள் கொடுத்தார்களா, அவர்களுக்குக் கொடுத்தார்களா, இவர்களுக்குக் கொடுத்தார்களா என்பது இல்லை. வருகின்ற வருவாயில் கணக்குப் பார்த்து 10 ஆயிரம் கோடியில் கொடுத்திருக்கின்ற 2027 கோடி ரூபாயைக் கணக்குப் பார்த்தால் 19% வருகிறது. கணக்குப்போட்டுப் பார்த்து அதிகாரிகளிடம் நான் கலந்து பேசியிருக்கிறேன். இவ்வளவும் செய்கிறோம்., நிதியிருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துறையின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பில் 8 சதவிகிதம் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 19 சதவிகிதம் என்று எந்த வரியிலும், எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** கட்டுப்பாடற்ற நிதி ஒதுக்கீடு 8 சதவிகிதம். பாக்கி அத்தனையும் மற்ற மற்ற வகையில் சேர்த்துக் கொடுப்பதையும் இந்தத் துறைக்குச் சம்பந்தப்பட்டவைகளையும் சேர்த்தால், குறிப்பிட்ட சிலவற்றைச் சேர்த்தால் 19 சதவிகிதம் வருகிறது. நிச்சயமாகச் சொல்கிறேன் 22 சதவிகிதத்தைத் தாண்டும் அளவிற்கு இன்னும் சில சிறப்புச் சலுகைகள் மூலம் கொடுக்கப்பட்ட தொகையும் இருக்கிறது. நான் அதற்குள்ளே போகவில்லை. சரி, இன்னும் எவ்வளவு நீங்கள் வாங்கிக் கொடுத்தாலும் எனக்குத்தான் இலாபம். என் துறையில் செலவழிக்க நான் தயாராக இருக்கிறேன். அவற்றிடம் போகவில்லை நான். ஆனால், நீங்கள் கணக்குப் பார்த்து, இந்த 12 ஆயிரத்து சொச்சம் பஞ்சாயத்துகளின் நிலைமையையும் கவனத்திலே வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு பஞ்சாயத்தில் ஒருவருக்கு நீங்கள் வாதாடுகிறீர்கள். ஒரு பஞ்சாயத்து என்பது 10 ஆயிரம் மக்களை, 5 ஆயிரம் மக்களை, 3 ஆயிரம் மக்களை, 2 ஆயிரம் மக்களை உள்ளடக்கியது. மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கக்கூடிய சூழ்நிலையில் உள்ளவை பஞ்சாயத்துகள். பஞ்சாயத்து சம்பளம் கொடுத்தால், அந்தச் சம்பளம் கட்டுப்படியாகாமல் கொடுத்து வந்தால் அந்தப் பஞ்சாயத்து நிதிக்கு என்ன செய்வது? அரசாங்கம் கொடுக்கலாம். அரசாங்கம் கொடுத்தால் திட்டச் செலவுக்கு என்ன

செய்வது? திட்ட நிதி குறைந்தால் திட்டங்களை எப்படி நிறைவேற்றுவது? இவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன. அதற்கு நான் என்ன குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்றால், பஞ்சாயத்தில் அதிக வருவாய் உள்ள பஞ்சாயத்துகள் எத்தனை, அவற்றினுடைய வருவாய் என்ன, சம்பளம் கொடுத்தால், அது தாங்குமா, என்ன சம்பளம் கொடுப்பது என்பதையெல்லாம் உறுதி செய்து, நிரந்தரமாக தினசரி பணிக்கு வரக்கூடியவர்களாக, கிராம ஊராட்சிகளுக்கு முழுநேர எழுத்தர்கள் நியமனம் செய்ய வேண்டும் என்பது நெடுநாளைய கோரிக்கையாகும். கிராம ஊராட்சிகளின் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு, இந்தக் கோரிக்கை இதுவரை பரிசீலிக்கப்படாமல் இருந்து வந்தது. தற்போது ஊராட்சிகளின் நிதி நிலை ஓரளவிற்குச் சற்று சீரடைந்த நிலையில் இருப்பதால் முழுநேர எழுத்தர்கள் நியமிக்கப்படுவார்கள். புதிய மாவட்டங்களில் வளாகங்கள் கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. 4 ஆயிரம் பஞ்சாயத்து வரலாம் என்று நான் நினைக்கிறேன். முழுநேரமாக ஒரு சம்பளத்தை நிர்ணயித்து அரசாங்கம் முடிவு செய்து அவர்களுக்கு முதற் கட்டமாக வழங்கிவிட்டு, அதற்குப் பிறகு இரண்டாவது கட்டமாக ஏதாவது செய்யலாமா என்பதை முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். அரசிலே ஒரு முடிவு எடுப்பதற்கு ஒரு குழு D.R.D. தலைமையில் நியமித்து, அதைச் செய்யலாம் என்று இருக்கிறோம். செய்வதற்கு நடவடிக்கை எடுக்கிறோம். இதைப் பொறுத்தவரையில் இதோடு முடித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நகராட்சி நிருவாகத்தை பொறுத்தவரை, மாநில மக்கள தொகையில் 40 விழுக்காடு. ஏற்கெனவே 60 விழுக்காடு பற்றி சொன்னேன். இப்போது இதற்கு 40 விழுக்காடு. (குறுக்கீடு) கிட்டத்தட்ட 40 விழுக்காடு சொச்சம். 42 விழுக்காடு வருகிறது. (குறுக்கீடு) கிட்டத்தட்ட 42 விழுக்காடு என்றும் வைத்துக் கொள்ளலாம். இதற்காக கூடுதல் நிதி உதவியும் அதேசமயத்தில் நிருவாகம் மற்றும் சட்ட மாற்றங்களினால் அதிகாரம் பரவலாக்கப்பட இருக்கிறது. (குறுக்கீடு) ஆமாம். அங்கேதான் சேரும். இப்போது, சுருக்கமாகச் சொல்ல வருகிறேன். திட்டங்களைச் சுருக்கிவிட்டு, என்ன செய்யப்போகிறோம் என்பதை மட்டும் சொலகிறேன். 1995-96-ல் நகராட்சிகளுக்காக ஏற்கெனவே அரசு வழங்கி வந்த தொகை 138 கோடியே 20 இலட்சம் ரூபாய். 1996-97-ல் 165 கோடியே 74 இலட்சம் ரூபாய். 1997-98-ல் 381 கோடியே 37 இலட்சம் ரூபாய். சென்ற ஆண்டு, 1998-99-ல் 548 கோடியே 42 இலட்சம் ரூபாய் இந்தத் துறைக்காக அரசாங்கம் ஒதுக்கி செலவழித்து இருக்கிறது.



*பிற்பகல் 4-00*

இனி இத்துறை சம்பந்தமாக சில முக்கிய அறிவிப்புகளை வெளியிடலாம் என்று இருக்கின்றேன். சென்னையில் வணக்கத்திற்குரிய மேயர் புதிதாகப் போட்டு இருக்கிற உயர விளக்குகளை எல்லாம் பார்த்து பலபேர் வந்து அதுபற்றி சொன்னார்கள். பேருந்து நிலையங்கள், பெரிய அங்காடிகள், வணிக வளாகங்கள் போன்ற மக்கள் திரளாகக் கூடி இருக்கும் பகுதிகளில் உயர மின் கோபுர விளக்குகள் அமைக்கும் திட்டம் இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது. முதற் கட்டமாக 41 சிறப்பு நிலை, தேர்வு நிலை நகராட்சிகளில் நகராட்சிக்கு ஒன்று என்று வைத்துக்கொண்டால் ரூபாய் 7 இலட்சம் செலவில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஏறத்தாழ 50 விழுக்காடு அரசும், 50 விழுக்காடு நகராட்சியும், செலுத்துகிற வசதி பெற்ற, வசதியான சில நகராட்சிகளுக்கு இந்தக் கோபுர விளக்குகள், உயரமாகக் காட்சியளிக்கும் விளக்குகள் அமைக்கலாம் என்று ஒரு புதிய முடிவை அரசு எடுத்து இருக்கிறது.

திரு. ஞானசேகரன் இப்போது அவையில் இல்லை. காலையிலே முதலமைச்சரிடத்திலே கேட்டுக் கொண்டார். அவருடைய வேண்டுகோளையும், நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளையும் மனதில்வைத்து, வேலூர் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வந்தது. இதற்கான இடத் தேர்வுக்கு நகர்மன்றம் ஒப்புதல் அளித்து அனுப்பி இருக்கிறது. தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தில் ஒரு பகுதி தனியார் இடமாகவும், மற்றொரு பகுதி கூட்டுறவுச் சங்கத்தின் இடமாகவும் உள்ளது. மேற்படி நிலங்களை நகராட்சி கையகப்படுத்துவதற்கு சுமார் 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. அந்த நகராட்சிக்கு அந்த நிலத்தை வாங்குவதற்குரிய தகுதி இல்லை. அதைச்சொல்லி காலம் தாழ்த்திக் கொண்டு வந்த காரணத்தால், நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், அன்புச் சகோதரர் துரைமுருகன் அவர்கள் நகர்புறத்திற்கு புதிதாக அமல்படுத்தி இருக்கிற நமக்கு நாமே என்ற திட்டத்தைப் பயன்படுத்தி, ஒரு கணிசமான தொகையை மக்கள் மத்தியில் இருந்து வசூலித்துத் தருவதாக ஒத்துக்கொண்டு இருக்கிறார். அதேபோல மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேரகன் 38 இலட்சம் ரூபாயை அதற்குத் தருவதாக ஒப்புதல் அளித்து இருக்கிறார். அவர்களுடைய வாக்குறுதியை ஏற்று, அந்த இடத்தை வாங்க அதற்கு இந்த ஆண்டு 38 இலட்சம் ரூபாய் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு

நிதியிலிருந்து ஒதுக்க முன்வந்ததாலே நகராட்சி பேருந்து நிலையத்தை அமைக்கும் கட்டுமானப் பணிகளை இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளலாம் என்பதைத் திட்டவட்டமாக நான் அறிவித்துக்கொள்கிறேன். இந்த நிலை நீடித்தால், இந்த ஆண்டு பணி தொடங்கப்பட்டு, வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான அந்தப் பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

அதேபோல, நீண்ட காலமாக இடப் பிரச்சினையாலும், அரசியல் பிரச்சினையாலும் சங்கடப்பட்டுக்கொண்டிருப்பது கிருஷ்ணகிரி நகராட்சி. தருமபுரி மாவட்டத்தில் இருக்கிற அந்த கிருஷ்ணகிரி நகராட்சியில் பேருந்து நிலையத்திற்கான இடம் பற்றிய பிரச்சினையில் தினசரி தகராறு பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நகராட்சி மன்றம் ரொம்பவும் பெருந்தன்மையோடு எல்லோருக்கும் பதில் சொல்வதைப்போல, 5 இடங்களைத் தேர்வு செய்து, அந்த 5 இடங்களில் எந்த இடத்தை அரசாங்கம் விரும்புகிறதோ, அந்த இடத்தில் கட்டிக்கொள்ளலாம் என்று அதிசயமான தீர்மானத்தை அனுப்பி இருக்கிறது. அந்தத் தீர்மானத்தையும் நாங்கள் ஏற்றுக்கொண்டு, அதிலே எந்த இடம் ஏற்றது, என்பதை அரசாங்க அதிகாரிகள் 2, 3 முறை சுற்றிப் பார்த்து, அந்த 5 இடங்களில் ஓர் இடத்தைத் தேர்வு செய்து ஏற்றுக்கொள்ளச் சொல்கிறார்களே என்று பார்த்தபோது, அது; அப்பாராவ் ஏரி. அதிகச் செலவு இல்லாமல், அதை எடுத்துக்கொள்ளலாம் என்ற முடிவின் பேரில் பார்த்தபோது அந்த ஏரியில் இப்போது பாசனம் இல்லை; பாசனம் இல்லாத ஏரி அது; பொதுப் பணித் துறை அமைச்சரும் அதற்கு ஒப்புதல் அளித்து இருக்கிறார்; (குறுக்கீடு) வாயாலே சொல்லி இருக்கிறார்கள். அதை அதிகாரபூர்வமாக பண்ணிக் கொள்ளலாம். அதிலே பாசனம் ஒன்று இல்லை. ஆகையினாலே, அதிலே பேருந்து நிலையம் கட்டுவதற்கான முயற்சியிலே இந்த அரசு ஈடுபடும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நகராட்சிகளின் வருவாயைப் பெருக்கவும், நகர்ப்புற மக்களின் வசதிக்காகவும், சிறு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை சிரமமின்றி விற்பனை செய்யவும், தேவையான வசதிகளுடன், நகர்ப்புறங்களில் சந்தைகள் இல்லாத பகுதிகளில், புதிய சந்தைகள் உருவாக்கப்படும். வெறும் செலவையே வைத்துக்கொண்டிருந்தாலும், வருமானம் வருவதற்காக புதிய சந்தைகள் உருவாக்கப்படும். தற்போது



இருக்கும் சந்தைகளிலும் மேலும் தேவையான கூடுதல் வசதிகள் செய்து மேம்படுத்தப்படும். இதற்கென இந்நிதியாண்டில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

நகர்ப்புறப் பகுதிகளில் சுகாதாரமாகவும், பாதுகாப்பாகவும் ஆடு அறுக்கிற தொட்டிகள் இருக்க வேண்டும். ஆனால், அதற்குரிய இடங்கள் சுகாதாரமற்ற நிலையில் தற்போது இருப்பதைப் பல இடங்களில் நான் பார்த்து இருக்கிறேன். அவைகளை நீக்குவதற்குகாகவும், அதற்கு பதில் புதிய இடங்கள் அமைப்பதற்காகவும், இப்போது இருக்கிற இடத்தைத் தாண்டி இன்னும் சில பேர் இடங்கள் கேட்கிறார்கள்; ஆகவே புதிய இடங்கள் ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டு, அதற்கென ஒரு கோடி ரூபாயை இந்த ஆண்டு செலவழிப்பதற்காக, நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம்.

பிற்பகல் 4-05

சென்ற நிதியாண்டில் 10 கோடி ரூபாய் செலவில் 748 சிமெண்ட் சாலைகள் நகராட்சிகளிலே அமைக்கப்பட்டன. இதுவரையிலும் யாரும் அமைத்ததில்லை. நாம் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், இந்த நிதியாண்டில் 10 கோடி ரூபாய் செலவில் 748 சிமெண்ட் சாலைகள் நகராட்சிகளில் அமைக்கப்பட்டன. நடப்பு நிதியாண்டில் இதற்கென 6 கோடி ரூபாய் அரசு நிதியிலிருந்தும் 6 கோடி ரூபாய் நகராட்சி நிதியிலிருந்தும் ஒதுக்கீடு செய்து 2 கோடி ரூபாயை அதிகரித்து,....

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு கிலோமீட்டர் சிமெண்ட் சாலை போடுவதற்கும், ஒரு கிலோமீட்டர் தார்ச் சாலை போடுவதற்கும் செலவில் எவ்வளவு வித்தியாசப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** 2½ % கூடுதலாகச் செலவழியும் (குறுக்கீடு) 12 இலட்ச ரூபாய் வருகிறது. இருந்தாலும் இதை 3 வருடத்தில் சரி பார்க்க வேண்டும். அது 50 வருடம் வரையிலும் கிடக்கும். ஆனாலும், அதை முடிந்தால் செய்யலாம் (குறுக்கீடு) ஆமாம், 2½ மடங்கு, 6 கோடி ரூபாய் நகராட்சியிலிருந்தும், மொத்தமாக 12 கோடி ரூபாயை வைத்து இந்த வருடம் சிமெண்ட் சாலைகள் அமைப்பதென முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல தார்ச் சாலை, 25 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். அதற்கென 25 கோடி

ரூபாய் தனியாக ஒதுக்கியிருக்கிறோம். 1995-96ஆம் ஆண்டில் மொத்தம் 3,311 கிலோமீட்டர் தார்ச் சாலைகளும் 674 கிலோமீட்டர் சிமெண்ட் சாலைகளும், மீதி இதர சாலைகளும் இருந்தன. கடந்த 3 ஆண்டுகளில் மொத்தம் 915 கிலோமீட்டர் தார்ச் சாலைகள் நகராட்சிப் பகுதிகளிலே புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 992 கிலோமீட்டர் மண் சாலைகளும், கற்சாலைகளும், தார்ச் சாலைகளாகவும், 58 கிலோமீட்டர் சாலைகள் சிமெண்ட் சாலைகளாகவும் மாற்றப்பட்டுள்ளன.

நகராட்சிப் பகுதிகளில் மாட்டு வண்டிகள் துப்புரவு பணிக்கும், கழிவுநீர் அகற்றும் பணிக்கும் தற்போதுகூட பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பணிகளுக்கு மாட்டு வண்டிகளைப் பயன்படுத்துவதை அறவே தவிர்க்க வேண்டும் என்று இந்த அரசு முடிவு செய்ததன் அடிப்படையில், கடந்த மூன்றாண்டுகளில் மொத்தம் 342 லாரிகள், சிறிய லாரிகள், கழிவுநீர் அகற்றும் Tanker முதலியன வழங்கப்பட்டுள்ளதால் பெரும்பாலான நகராட்சிகளில் மாட்டு வண்டிகளைப் பயன்படுத்துவது தவிர்க்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டின் முடிவிற்குள் அனைத்து நகராட்சிகளிலும் மாட்டு வண்டிகளைப் பயன்படுத்துவது அறவே நிறுத்தப்படும். இதற்கென, தேவையான வாகனங்களை வாங்குவதற்கு அடிப்படை வசதித் திட்டத்தின்கீழ் நகராட்சிகளுக்காக இந்த ஆண்டு 3 கோடியே 75 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பேரூராட்சிகளிலும் படிப்படியாக மாட்டு வண்டிகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் பேரூராட்சிகளுக்கு 478 வாகனங்கள் புதிதாக வாங்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் இதற்காக 4 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

கடந்த 40 வருடங்களாக நகராட்சி எல்லைகளில் மாற்றங்கள் ஏதும் செய்யப்படாமல், அதிலே சேர்கிறதா, இதிலே சேர்கிறதா என்றெல்லாம் எண்ணுகின்ற நிலைமை இருக்கிறது. இதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே ஒரு குழு அமைத்து, அதிலே அவர்களுக்குள்ள புகார்களைத் தெரிவித்து அனுப்புவார்களேயானால் 3 மாதத்திற்குள் அந்தக் குழு நமக்குத் தகவல் அனுப்பினால், அதுசம்பந்தமாக சேர்ப்பது, நீக்குவது போன்ற பணிகள் தொடரப்படும். அதையடுத்து மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2001-க்குள் முடிய வேண்டியிருக்கிறது. அதற்குள் இதையெல்லாம் நாம் செய்து முடித்துவிட வேண்டும். 1½ ஆண்டுக்கு



முன்னரே தடை வந்துவிடும். இருப்பது இரண்டாண்டு காலம். இந்த 2 ஆண்டுகள் என்று கணக்குப் பார்த்தால், இதை 1½ ஆண்டு காலத்திற்குப் பிறகு செய்யக்கூடாது என்று ஒரு தடை வந்துவிடும். அதற்குள்ளாகவே நீங்களும், proposal அனுப்ப வேண்டும். இதில் கண்ணும் கருத்துமாக இருந்து அனுப்பி வைக்க வேண்டும்.

தமிழ்நாட்டிலேயுள்ள நகராட்சிச் சாலைப் பணிகள், குடிநீர்த் திட்டப் பராமரிப்பு, தெரு விளக்கு பராமரிப்பு ஆகிய பணிகளுக்காக பல பணியாளர்கள் தினக் கூலிகளாகப் பணியாற்றி வந்தனர். இவர்களைத் தவிர நகரப்புற உள்ளாட்சி அமைப்பிலே உள்ள பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணியில் பதிலி ஆட்கள் என்ற பெயரில் பணியாட்கள் பணியாற்றி வந்தனர்.

துப்பரவுப் பணியாளர் பணியிடங்களைத் தோற்றுவிக்க, 56 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட அளவுகோல்கள்தான் இருந்து வருகின்றன. தற்போதுள்ள சூழ்நிலைக்கேற்ப இந்த அளவுகோல்கள் திருத்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. அதனடிப்படையில், நகராட்சிகளில் 4,103 கூடுதல் துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, தினக்கூலி அடிப்படையில் துப்புரவுப் பிரிவில், பதிலி ஆட்களாக பணிபுரிந்த அனைவரும் புதிய பணியிடங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒன்று முதல் இரண்டாண்டு அனுபவத்திற்குப் பிறகு இவர்கள் ஊதிய ஏற்றமுறைக்கு மாற்றப்படுவார்கள். இதிலே திருப்பூரும் சேரும்.

அதேபோல, தெரு விளக்கு பராமரிப்பிற்காக புதிய அளவுகோல்படி மின் கம்பியாளர் மற்றும் மின் உதவியாளர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டு தினக்கூலி பணியாளர்களாகப் பணியாற்றிய பணியாளர்கள் புதிய பணியிடங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆகவே, அது முடிந்தது.

பிற்பகல் 4-10

அடுத்து, வாகன ஓட்டுநர்களாக தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்த பணியாளர்கள் அனைவரும் நிரந்தரப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். அதேபோன்று, குடிநீர்த் திட்டப் பராமரிப்புப் பணியில் பணிபுரிந்த தினக்கூலி பணியாளர்களை பணி வரன்முறைப்படுத்துவதற்காக, குடிநீர்த் திட்டப் பணியாளர் பணியிடங்களுக்கு உரிய அளவுகோல்கள் நிர்ணயம் செய்யப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவர்களைத்தவிர, சாலைப் பணியிலும்

மற்றும் பிற அலுவலகப் பணியிலும் உள்ள தினக்கூலி பணியாளர்களின் பணியை வரன்முறைப்படுத்த இந்த நிதியாண்டில் தக்க ஆணைகள் பிறப்பிக்கப்படும் எனத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, சென்னை மாநகரப் பகுதிக்கு அப்பால் உள்ள நகர்ப்புறப் பகுதிகளில் அனுமதி இல்லாத மனைப் பிரிவுகள் பொறுத்தவரையில் ஒரு முடிவுக்கு வந்தாகிவிட்டது. அது நடைமுறையில் இருக்கிறது. எனவே, சென்னை மாநகருக்கு அப்பால் உள்ள நகர்ப்புறப் பகுதிகளில் அனுமதி இல்லாத மனைப் பிரிவுகளைப் பொறுத்தவரையில் அவர்கள் தெரியாமல் வாங்கி விட்டார்கள், இவர்களும் கொடுத்துவிட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். எது எப்படியோ, இவற்றில் வீடு கட்டி வாழும் மக்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளால் எந்த ஒரு வசதியையும் செய்து கொடுக்க இயலாத ஒரு சூழ்நிலை இருப்பது உண்மை. இதனைக் கருத்தில்கொண்டு, இதுபோன்ற அனுமதியில்லாது அமைக்கப்பட்டுள்ள மனைப் பிரிவுகளை ஒருசில நிபந்தனைகளின் அடிப்படையில் முறைப்படுத்தலாம் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வரலாம் என்று கருதுகிறேன். (குறுக்கீடு) அதில் ஒன்றும் சூது, வாது கிடையாது. இங்கே செய்திருக்கிற மாதிரி, அடிப்படை வசதியை அவர்களுக்கும் செய்து கொடுக்கக்கூடிய அளவுக்கு, பணம் சம்பாதித்தவர்களிடம் கட்டிக் கொடுக்கச் சொல்லி, ஓரளவுக்கு ஏதாவது செய்யலாம். (குறுக்கீடு) வரும்போது பேசிவிட வேண்டும். (குறுக்கீடு) அதிலே உங்களுக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. எப்படி என்று கேட்பீர்கள் என்றால், அது தொழில். அதில்போய் நீங்கள் தலையிடுகிறீர்களே, வேண்டாம்.

பொதுச் சுகாதாரம், தனி நபர் சுகாதாரம், குடிமை உணர்வு ஆகியவை பற்றி நகர்ப்புறங்களில் வாழும் மக்களிடையே பெருமளவில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதன் அவசியத்தை கருத்தில்கொண்டு, ஒரு புதியத் திட்டத்தை அரசு நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தும் இத்திட்டத்தின்கீழ் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். அரசுசாரா நிறுவனங்களும் இதில் ஈடுபடுத்தப்படும். நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும்.

நகராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சியைத் தவிர பிற மாநகராட்சிகள், பல்வேறு திட்டங்களுக்காக, அரசிடமிருந்தும், ஆயுள்



காப்பீட்டுக் கழகத்திடமிருந்தும் கடன் தொகைகளைப் பெற்றுள்ளன. 1-4-1998 அன்றைய நிலவரபபடி கணக்குப் பார்த்தால் இக்கடன் தொகைகளின் அசல் மற்றும் வட்டி சுமார் 570 கோடி ரூபாயாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயனும், மற்றவர்களும் அதிலே பணியாற்றுகின்ற ஒருசில நண்பர்களுக்காக வாதாடினார்கள். கூடுதல் சம்பளம் தர வேண்டுமென்றும், மற்றவைகளும் தர வேண்டும் என்றும் சொன்னார்கள். வாங்கிய கடனில் காலணாகூட கொடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிற நகராட்சிகளுடைய நிலையைப் பார்த்தால், 570 கோடி ரூபாய் அவற்றிடமிருந்து பாக்கி இருப்பதோடு மட்டுமல்ல, 20 ஆண்டுகளுக்கு 13.5% வட்டி கட்டியாக வேண்டும். இந்தத் தொகைக்கு ஏதாவது செய்யுங்கள் என்று எதிர்பார்க்கிறபோது, அதற்குச் சட்டப்படி செய்கின்ற சூழ்நிலை இல்லாததை மனதில உணர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். இதை அரசுக்குத திருப்பி அளிக்க வேண்டிய நிலை இருப்பதை கணக்கில் கொண்டு, ஓரளவுக்கு, கடுமையாக எது பாதிக்கப்பட்டிருக்கிறதோ, அவற்றையெல்லாம் பரிசீலித்து, முதல் கட்டமாக மொத்தம் உள்ள 102 நகராட்சிகளில் அரக்கோணம், அருப்புக்கோட்டை, கம்பம், திண்டுக்கல், குடியாத்தம், எடப்பாடி, கும்பகோணம், மதுராந்தகம், மேட்டூர், நாகப்பட்டினம், பழனி, புதுக்கோட்டை, இராணிப்பேட்டை, இராசிபுரம், தாம்பரம், தஞ்சாவூர், திருவண்ணாமலை, திருவொற்றியூர், திருப்பூர், உசிலம்பட்டி, வேலூர், வாலாஜாப்பேட்டை, மணப்பாறை ஆகிய 23 நகராட்சிகள் மற்றும் 6 மாநகராட்சிகளில் மதுரை, சேலம் ஆகிய இரண்டும் மிக நலிந்த நிலையில் உள்ளதை கருத்தில்கொண்டு அந்தக் கடனை தள்ளுபடி செய்வதா, தவணை கொடுப்பதா, வட்டியை நீக்குவதா என்பதை யெல்லாம் முதலமைச்சர் அவர்கள் நிதித் துறையோடு கலந்துபேசி, முடிவு எடுக்கலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதைக் கனிவோடு பரிசீலிப்பதாக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்களுக்குச் சீருடை வழங்கும் நடைமுறையைப் பொறுத்தவரையில் ஒரே தடவையாகக் கொடுத்துவிடுங்கள் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தச் சீருடை வழங்கும் நடைமுறையைச் சீரமைப்புதுடன், அதை மேம்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில், சீருடை வழங்குவதில்

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகிய அனைத்து அமைப்புகளிலும் ஒரே நடைமுறை பின்பற்றப்படும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இரண்டு ஜோடி சீருடை வழங்குவதற்குப் பதிலாக, ஆண்டுக்கு ஒருமுறை இரண்டு ஜோடி சீருடை வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆண்களுக்கு கால்சட்டை, மேல்சட்டை, பெண்களுக்கு சேலை, ரவிக்கை, மற்றும் இருபாலாருக்கும் உண்டான தலைப்பாகையும் அதில் சேரும். சென்ற வருடம்தான் தலைப்பாகை இணைக்கப்பட்டது. இந்த வருடம் தொடர்ந்து தலைப்பாகையும், ரவிக்கையும் தரப்படும் சீராக துணிகளை வழங்கவும், அதற்கான தையல் கூலியை இதற்கு முன்னால் கொடுத்து வந்ததைவிட தேவைக்கு ஏற்ப அதிகரிக்கவும் ஆண்டிற்கு ஒருமுறை தீபாவளி பண்டிகைக்கு முன் ஒரு ஜோடி காலணி வழங்கவும் அரசு முடிவெடுத்திருக்கிறது.

பிற்பகல் 4.15

1999-2000 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின் கீழ் 9 மாவட்டங்களில் உள்ள 18 பேரூராட்சிகளில் 54 குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் 1 கோடி ரூபாய் அரசு மானியத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

மனிதக் கழிவுகளை மனிதனே சுமக்கக்கூடாது என்பது இந்தியாவில் முதல் முறையாக ஏற்கெனவே குறிப்பிட்ட நேரத்தில் துவங்கி ஒரு ஆண்டு காலம் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதற்குப் பிறகு அது முடியாமல், ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, இந்த ஆண்டு அதை மிகவும் வலியுறுத்தி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மிகத் தெளிவாக உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எங்களுக்கு இட்ட ஆணையின்படி அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள் பணியை விட்டு நீக்கப்படாமல், அவர்களுக்கு வேறு பணி கொடுப்பதாகவும் முடிவெடுத்தோம். அதேபோல, உலர் கழிப்பிடங்களை எல்லாம் தண்ணீர் உள்ள கழிப்பிடங்களாக மாற்றுவதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கொள்கையை நிறைவேற்றுவதற்காக பகுதி-2 திட்டத்தின் கீழ், 6 மாவட்டங்களில் உள்ள 12 பேரூராட்சிகளில் 27 பொது உலர் கழிப்பிடங்களை தண்ணீர் வசதியுடன் கூடியவையாக மாற்றுவதற்கு 70 இலட்சம் ரூபாய் மானிய நிதி வழங்கப்படவுள்ளது. இது தவிர 34 பேரூராட்சிகளில் உள்ள 236 உலர் பொது கழிப்பிடங்கள் 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் கடன்



பெற்று தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பிடங்களாக மாற்றப்படும். இந்த நிதியாண்டின் இறுதிக்குள் எந்த ஒரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பிலும் உலர் கழிப்பிடமே இல்லை, எந்த இடத்திலும் இல்லை என்ற முடிவை ஏற்படுத்துவதற்காக இந்த நடவடிக்கையை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி ஏற்றுக்கொண்டு நிறைவேற்ற இருக்கிறேன்.

1999-2000 ஆண்டில் தெருக்கள் மற்றும் சிறிய சந்துகளுக்கு ஊராட்சிகள் போல நகராட்சிகளில் சிமென்ட் Concrete தளம் அமைக்கும் பணிகளுக்காக 15 கோடி ரூபாய் மாநில நிதிப் பகிர்வில் இருந்து பேரூராட்சிகளுக்கு ஒதுக்கப்பட உள்ளது. இந்த நிதியைக் கொண்டு 125 கிலோமீட்டர் நீளமுள்ள தெருக்கள் மற்றும் சந்துகளுக்கு சிமெண்ட் Concrete தளம் அமைக்கப்படும்.

பொதுமக்கள் அதிக அளவில் வருகைதரும் பிரதான ஆலயங்கள் மற்றும் சுற்றுலாத்தலங்களைக் கொண்ட பேரூராட்சிகளில் பொதுமக்களுக்குச் சீரிய வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் 1999-2000 ஆண்டில் மாநில நிதிப் பகிர்வில் இருந்து 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அடிப்படை வசதிகள் சிறப்பான முறையில் செய்து கொடுக்கப்பட உள்ளன.

மதுரை-மேலூர் சாலையில், மதுரை மாநகராட்சியின் உரக் கிடங்குப் பகுதியில், மதுரை மாநகராட்சியின் புதிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தின் முதல் கட்டப் பணிகள் 10 கோடி ரூபாய் செலவில் முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் அதைத் திறக்க இருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியையும் உங்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதனால் இந்நகரில் நெரிசல் பெருமளவில் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மதுரை மாநகரில் தற்போது உள்ள பாதாள சாக்கடை அமைப்பின் செயல்திறன் பெருமளவில் உயர்த்தப்பட வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் செலவு 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் என கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் நடப்பாண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

திருச்சி மாநகராட்சிப் பகுதியிலுள்ள பேருந்து செல்லும் சாலைகள், முக்கிய சாலைகள் மற்றும் சாலை சந்திப்புகளில் மூன்றுகோடி ரூபாய்

மதிப்பீட்டில் 1302 சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கும் திட்டம் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படும்.

திருச்சி மாநகராட்சியில் ஏற்படும் கழிவுகள் மற்றும் குப்பைகளை முழுமையாக அகற்ற 10 Tumper Placers, 60 Double Steel Containers, 300 குறைந்த எடையுள்ள கை வண்டிகள், 2 Tractor Dozers 2 கழிவுநீர் லாரிகள் ஆகியவற்றை மொத்தம் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் வாங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சேலம் மாநகராட்சியில் 4 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில், பழைய பேருந்து நிலையம் அருகில், 176 கடைகளைக் கொண்ட ஒரு பெரிய வணிக வளாகம் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாநகரில் போக்குவரத்து நெரிசலைப் பெருமளவு குறைக்கும் வகையில் 6 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் புதிய பேருந்து நிலையம் அமைக்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கோயம்புத்தூர் மாநகராட்சி, மண்டலம் 4-ல் உள்ள பகுதிகளில் சுமார் 58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதை வடிகால் அமைக்கும் பணி உலக வங்கி நிதி உதவியுடன் நடப்பு ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதியில் 27 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில், குடிநீர் சீராக வழங்க உள் கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் நடப்பு ஆண்டில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை மாநகரத்தைப் பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. தினசரி நீங்களே பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக 115 கோடி ரூபாய் செலவில் 10 இடங்களில் மேம்பாலங்களின் கட்டுமானப் பணியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 31-1-1999 அன்று தொடங்கி வைத்தார்கள். இதில் 91 கோடி ரூபாய் செலவில் 9 இடங்களில் புதிய சிறு மேம்பாலங்கள் கட்டும் பணிகளும் அடங்கும் இக்கட்டுமானப் பணிகள் 15 மாத காலத்திற்குள் முடிக்கப்படும். மேலும், 21 கோடி ரூபாய் செலவில் பெரம்பூரில் மேம்பாலம் ஒன்று அமைக்கும் பணி 18 மாதங்களில் முடிக்கப்படும்.



பிற்பகல் 4-20

சாலைப் பணிகளைப் பற்றி ஆய்வு செய்யும்போது எண்ணற்ற பழைய சாலைகளைப் புதியதாக புதுப்பித்திருப்பதையும் மேம்படுத்தியிருப்பதையும், ஏராளமான புதிய சாலைகள் போடப்பட்டிருப்பதையும் நீங்களே நன்றாக அறிவீர்கள். அனைத்து மாநிலங்களிலும் உள்ள மாநகராட்சிகள் பற்றி HUDCO என்கிற கடன் கொடுக்கும் நிறுவனம் ஓர் ஆய்வு செய்தது. அனைத்து மாநிலங்களிலுமுள்ள மாநகராட்சிகள் பற்றி அது செய்த ஆய்வில், தமிழ்நாட்டில் வணக்கத்திற்குரிய மேயர் தம்பி ஸ்டாலின் ஆற்றி வரும் அரும்பணியின் காரணமாக, சென்னை நகரம் சிங்காரச் சென்னை என்று பெயர் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) சிறந்த முறையில் செயலாற்றும் உள்ளாட்சி அமைப்பாக சென்னை மாநகராட்சியைத் தேர்ந்தெடுத்து, தூய்மை நகரம் எனப் பெருமைப்படுத்தி, பாராட்டி, அதற்கு HUDCO நிறுவனம் விருது வழங்கியும் இருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். இவை எல்லாம் நேரத்தில் தக்க உதவியை அளித்து, அதிகாரத்தையும், நிதியையும் அவ்வப்போது எல்லா நகராட்சிகளுக்கும் கொடுக்கின்ற வகை சீர்பெற்று, வளம்பெற்று, ஒரு சீரிய முயற்சிக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது என்று சொன்னால், அதில் நீங்களும் சேர்ந்து பங்குகொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்களின் மாதாந்திர ஓய்வூதியத்தில் சந்தாத் தொகை பிடித்தம் செய்யப்பட்டு, ஓய்வூதியதாரர் இறந்தால் அவரது குடும்பத்திற்கு அல்லது வாரிசுதாரர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இதேபோன்ற திட்டம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகளின் மற்றும் நகராட்சிகளின் ஓய்வூதியதாரர்களுக்கும் இந்த ஆண்டிலிருந்து அமல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, அரசு ஓய்வூதியதாரர்களின் மாதாந்தர ஓய்வூதியத்திலிருந்து சந்தா பிடித்தம் செய்யப்பட்டு அவர்களுக்கு சிறப்பு மருத்துவ சிகிச்சை அல்லது அறுவை சிகிச்சைக்கு செலவழிக்கப்பட்ட தொகையில் 75 விழுக்காடு அல்லது 50 ஆயிரம் ரூபாய் இதில் எது குறைவோ அத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுபோன்ற திட்டம்

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் ஓய்வூதியதாரர்களுக்கும் அமல்படுத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக குடிநீரைப் பொறுத்தவரையில், நான் செய்திருப்பதைச் சொல்லவில்லை. ஆனால் ஒன்று, சென்ற ஆண்டு, இதே இடத்தில், மானியக் கோரிக்கை விவாதத்தின் போது குடிநீர்ப் பிரச்சினை பற்றி நான் என்ன தெரிவித்தேனோ, அவ்வளவையும் செய்து முடித்திருக்கிறேன் என்பது மட்டும் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) அதை இந்தக் கொள்கைக் குறிப்பிலே, அல்லது தனி ஏட்டிலே எழுதினால் அது அவ்வளவு பொருத்தமுடையதாக இருக்காது. அதை மனதில் வைத்துக்கொண்டு 3 மாத காலமாக அந்தத் துறைக்கு நான் விவரம் தெரிவித்து மாவட்ட வாரியாக, தொகுதி வாரியாக, ஒன்றியம் வாரியாக, ஊராட்சி வாரியாக, குடியிருப்புகளைக் கணக்கெடுத்திருக்கிறோம். குடிநீர் வடிகால் வாரியத்தின் நீண்ட காலக் கொள்கை என்னவென்றால், இந்தியா முழுவதிலும இத்தனை ரூபாய் செலவழித்து, இத்தனைக் குடியிருப்புகளுக்கு இத்தனை மக்களுக்குத் தண்ணீர் கொடுத்திருக்கிறோம் என்று சொல்வதுதான். இதைத்தான் சொல்லி வந்தார்கள். அதை மாற்றுவதற்கே ஒரு வருடம் ஆயிற்று. இந்தக் குடியிருப்பு என்றால் யாருக்கு என்று கூறுவது? அதற்காகத்தான் இப்போது கணக்கெடுத்து, மாவட்ட வாரியாக, தொகுதி வாரியாக, ஒன்றிய வாரியாக, ஊராட்சி வாரியாக குடியிருப்புகளை கணக்கிட வேண்டும் என்று சொன்னதன் அடிப்படையில்தான், இப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், உங்களுடைய தொகுதிகளில் இதுவரையில் 3 ஆண்டுகளில் இன்ன இன்ன பணிகள் செய்திருக்கிறோம்; இப்போது இன்ன இன்ன பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன; இனிவரும் ஆண்டில் இன்ன இன்ன பணிகளை எடுக்கப்போகின்றோம் என்கிற விவரங்களை உங்களுக்குத் தந்திருக்கிறேன். இதில் ஒன்று சொல்ல விட்டுவிட்டேன். இதிலே ஏதாவது குறைபாடு இருக்கலாம். அதிலேயும் விடுபட்டவைகள் இருக்கலாம். நான் மறுக்கவில்லை. ஆனால், அவை குறித்து அவ்வப்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நீங்கள் தெரிவிக்கலாம். அதுவும் முடியவில்லை என்றால் என்னிடத்திலும் தகவல் தரலாம். எனவேதான் அந்தக் கணக்கை நான் சொல்லியிருக்கிறேன். இதிலே காலத்தின் அருமை கருதி மூன்றாகப் பிரித்து, அவைகளிலே 3-ஐ மட்டும், சிறியவைகளை விட்டுவிட்டு, அந்தக் கடிதத்தைப் பார்த்து நீங்கள் எல்லாம் தெரிவித்துக்கொள்ளலாம் என்பதற்காக, இந்த ஆண்டு எடுத்து,



நடந்து கொண்டிருக்கிற பணிகளையும், இந்த ஆண்டு எடுக்கப்போகிற பணிகளையும் மற்றும் இந்த ஆண்டு ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பணிகளையும் மட்டும் படித்தாலே ஒரு ½ மணியைத் தாண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-25

இவற்றைச் சேகரிப்பதற்கே இரண்டு நாட்கள் ஆயிற்று. அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள், முதலமைச்சர் சொன்னதாக என்னிடத்திலே ஒன்றைச் சொன்னார்கள். ஒரு மணி நேரத்திற்குமேல் இந்த இடத்திலே நின்று பேசுவதற்கு இடமில்லை; அதற்குள்ளாக முடித்துவிட வேண்டுமென்று ஓர் உத்தரவைப் போட்டார்கள். நேற்று இரவு 2-50 மணி வரை இதைக் குறைப்பது எப்படி என்று பார்த்து குறைத்தேன். அதுதான் இது. கஷ்டப்பட்டு எடுத்ததை, முதலமைச்சர் சொன்னதாக, அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் மிரட்டியதை மனதிலே வைத்து, அதைக் குறைப்பதற்கு இரவு 2-50 மணி ஆகிவிட்டது. அதற்குப் பிறகுதான் நான் சென்று படுத்தேன். அப்படிக் குறைத்ததை, இப்போது மேலும் குறைத்து விட்டேன். என்ன காரணம் என்றால், இதற்கே இவ்வளவு நேரம் ஆகிவிட்டது. ஆகவே, இப்போது நான் சொல்லப் போவதில், மூன்றை மட்டும்தான் சொல்லப்போகிறேன்.

இந்த வருடம் என்ன செய்யப் போகிறோம், இந்த வருடம் என்ன செய்திருக்கிறோம் என்பதைச் சொல்லவில்லை. செய்து கொண்டிருப்பதை, அதற்குப் பிறகு, செய்ய எடுத்துக்கொண்டதை மட்டும் படித்து முடிக்கலாம் என்று கருதுகிறேன். இதையே தேடிப்பிடிப்பதற்கு கொஞ்சம் நேரம் ஆகும். ஏனென்றால், எல்லாம் இதிலே சேர்ந்திருக்கிறது.

நடப்பு ஆண்டில மாவட்ட வாரியாக, முடிக்கப்பட உள்ள திட்டங்கள், அதிலேகூட எவ்வளவு ரூபாய் என்பதை எல்லாம விட்டுவிட்டேன்; எவ்வளவு மக்கள் தொகை என்பதை எல்லாம் விட்டுவிட்டேன்; இன்னின்ன ஊரில் இன்னின்ன திட்டங்கள் வரும் என்று சொல்கிறேன். விவரங்கள் வேண்டுமென்றால் பின்னர் நான் அனுப்புகிறேன்.

இந்த ஆண்டு ஈரோடு மாவட்டத்தில், முடிக்கப்பட உள்ள முக்கிய குடிநீர் திட்டப் பணிகள். இதிலே இருப்பதைத்தான் முடிக்கப் போகிறோம் என்பதல்ல, Individual schemes என்று சின்ன, சின்ன திட்டங்கள் தனிப்பட்ட திட்டங்கள்; இவையெல்லாம் தனியாக இருக்கின்றன. இதிலே மிகக் குறிப்பாக, சில, ஓரளவுக்குச் சொல்லக் கூடியவைகளை நான் சொல்கிறேன். ஈரோடு மாவட்டத்திலே 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முத்தூர்-காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் முதல் கட்டம். ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில், பவானி நகராட்சியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம். 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில், வீரப்பன்சத்திரம் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம். சுமார் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொட்டம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம். ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொளப்பலூர்-குன்றத்தூர் திட்டத்திலிருந்து 33 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கோவை மாவட்டத்தில், சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் உடுமலைப்பேட்டை நகராட்சியில் குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோம். இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால், உடுமலைப்பேட்டை என்பது மாண்புமிகு மறைந்த திரு. சாதிக்பாட்சா அவர்கள் பிறந்த ஊர்; அங்கே அந்த நேரத்திலே, 1971-லே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போட்ட உத்தரவால் தண்ணீரைக் கொண்டு வந்து அந்த ஊர் முனையில்-Town-லே விட்டார்கள். முதலிலே இருக்கிற இரண்டு warot-களுக்குக் கொடுத்தார்கள். சென்ற ஆண்டு நான் அங்கு செல்கிற வரையிலும் அதை என்னிடம் யாரும் சொல்லவில்லை. நான் போய் அங்கே உட்கார்ந்து ஆய்வு செய்யும்போதும் இதுபற்றித் தெரியவில்லை. ஆனால், இங்கு குடிநீர் எல்லாம் எப்படி இருக்கிறது என்று பேசுகிறபோது, இரண்டு Ward-களைத் தவிர, மற்ற Ward-களுக்கெல்லாம் தண்ணீர் இல்லை என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் போட்டாயிற்றே, ஏற்கெனவே செயல்படுகிறதே என்று பார்த்ததில், தேவையான அளவுக்குத் தண்ணீரைக் கொண்டு வந்து அந்த நகரத்திலே வைத்துவிட்டு, அதை எடுத்துக் கொடுக்கிற பணியை நகராட்சி செய்யவில்லை என்ற நிலை இருந்தது. மறுபடியும் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில், அவர்களிடம் இருந்து வெறும் தீர்மானத்தை மட்டும் வாங்கி வைத்து, அந்தத் திட்டத்தின்மூலம், சில நாட்களில் தண்ணீர் கொடுக்கிற சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறோம். அந்தத் திட்டம் நடைமுறையில் முடியவிருக்கிறது.



நாமக்கல் மாவட்டத்தில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கலியனூர், அக்ரஹாரம், படவேடு மற்றும் பள்ளிப்பாளையம் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகள் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

சேலம் மாவட்டத்தில், 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடப்பாடி, கொங்கணாபுரம் ஒன்றியங்களிலுள்ள 177 வழியோர கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம். திரு. ஐ. கணேசன் இப்போதாவது என்னை நம்ப வேண்டும். அந்தக் கடைசியில் வரவில்லை; இந்தக் கடைசியில் வரவில்லை என்பார். இப்போதாவது நம்ப வேண்டும். 5 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பி.என்.பட்டி, வீரக்கல் புதூர் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம். 6 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சேலம் மாநகராட்சிக்கு முதல் பகுதியான குடிநீர் மேம்பாட்டுக்கான முதல் திட்டம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 4 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொல்லங்கோடு, ஏழுதேசம் மற்றும் 21 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாழவச்சான் கோஷ்டம், முளகுமேடு, கட்டாந்துறை மற்றும் 55 குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கடலூர் மாவட்டத்தில், 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அண்ணாமலைநகர் மற்றும் சிதம்பரம் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 3 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வந்தவாசி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம். 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வட இலுப்பை மற்றும் 25 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்.

வேலூர் மாவட்டத்தில் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கழிஞ்சூர், காந்தி நகருக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எழுவம்பட்டி மற்றும் ஐந்து குடியிருப்பிற்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். 2 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பனமபாக்கம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

பிற்பகல் 4-30

தூத்துக்குடி மாவட்டத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாரதி நகர் மற்றும் 6 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

தர்மபுரி மாவட்டத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கிருஷ்ணகிரி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பட்டுக்கோட்டை நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்கழுக்குன்றம் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

திருவள்ளூர் மாவட்டத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நாராவாரிகுப்பம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சின்னாளபட்டி பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

கரூர் மாவட்டத்தில் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இனாம்கரூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம் ஆகிய 25 திட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அவை முடியும் தருவாயில் இருக்கின்றன. இதனுடைய மொத்த மதிப்பு 147 கோடி ரூபாய். எதிர்வரும் 25 ஆண்டுகளுக்கு பயனளிக்கும் வகையில் இந்தத் திட்டங்கள் முடிவுபெற இருக்கின்றன.

அடுத்து நடப்பு ஆண்டில் ஊரகப் பகுதிகளில், செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிற திட்டங்கள் குறித்த வேலை ஆரம்பிக்கவிருக்கிறோம். அதற்கான திட்டங்கள், 6300 ஊரக குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றிட முடிவு எடுத்திருக்கிறோம். அவைகளில் ஃப்ளோரைடினால் பாதிக்கப்பட்ட 950 ஊரக குடியிருப்புகளுக்கு இந்த ஆண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும். ஊராட்சி ஒன்றியங்கள் குடிநீர் வசதி தன்னிறைவு பெறும் திட்டத்தின்கீழ், இந்த ஆண்டு 20 ஊராட்சி ஒன்றியங்களில் திட்டங்கள் நிறைவேற்றப்படும். ஒன்றே ஒன்றை மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தன்னிறைவுத் திட்டத்தில், எங்களுடையதை எடுத்துக்கொள்ளுங்கள் உங்களுடையதை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். அதிலே ஒரு கொள்கையை வைத்திருக்கிறோம். என்ன கொள்கையென்றால், 85 சதவிகிதத்திற்கு மேல் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்து, 15 சதவிகித பணிகள் பாக்கியிருந்து, அதற்கு நீர் ஆதாரம், தகுதி இருந்தால், அவற்றையெல்லாம் முதலில் எடுத்துக்கொள்வது என்ற முடிவை அரசு வகுத்திருக்கிறது. ஆகையினால், எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ள முடியாது. 85 சதவிகிதம்



முடிவடைந்து இருக்கிறது. 15 சதவிகிதம் பாக்கியிருக்கிறது. உள்ளூரிலே நீர் ஆதாரம் இருக்கிறது என்றால் பரவாயில்லை. அப்படியென்றால் அதை எடுத்துக்கொள்ளலாம். அந்தக் கொள்கையிலேயிருந்து நான் நிச்சயமாகத் தவற மாட்டேன். எடுத்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலைமையில் 20 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டு இருக்கின்றன.

நகரப் பகுதிகளில் குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்தவரையில், 6 நகராட்சிகள் மற்றும் 22 பேரூராட்சிகளில் குடிநீர் திட்டப் பணிகள் சுமார் 121 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 18 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் முடிக்கப்படும்.

அடுத்து, பொன்விழா திட்டமானது தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல இந்திய தேசத்திற்குப் பூராவும்தான். தமிழ்நாட்டிலே மட்டும், பொன்விழா திட்டத்தின்கீழ் 12 நகராட்சிகளில் மற்றும் 25 பேரூராட்சிகளில் குடிநீர் திட்டப் பணிகள் 220 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் 23 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்படும்.

நடப்பாண்டில் புதிதாக எடுக்கப்படவுள்ள குடிநீர்த் திட்டங்கள் பற்றிய விவரங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மாவட்டத்தை முதலில் கணக்கெடுத்தால், சுமார் 3 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முள்ளி, மேல்மருவத்தூர் மற்றும் இரவோடு வழியோரக் குடியிருப்புக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் இந்த ஆண்டு எடுக்கப்படும். சுமார் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பீர்க்கங்கரணை பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

திருவள்ளூர் மாவட்டத்தில் சுமார் 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பூண்டி ஒன்றியத்தைச் சேர்ந்த சேந்தராயன்பாளையம் மற்றும் 5 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

கடலூர் மாவட்டத்தில் சுமார் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கடலூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்; சுமார் 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குறிஞ்சிப்பாடி பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

விழுப்புரம் மாவட்டத்தில் சுமார் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விழுப்புரம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்; சுமார் 2 கோடி

ரூபாய் மதிப்பீட்டில் பண்ருட்டி நகராட்சியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்; சுமார் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விக்ரவாண்டி பேரூராட்சியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்; சுமார் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ரிஷிவந்தியம் மற்றும் 4 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 97 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் ஆய்வுப் பணிகள் இந்த ஆண்டு முடிக்கப்பட்டு, அந்தத திட்டம், இந்த ஆண்டே செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

வேலூர் மாவட்டத்தில் சுமார் 2 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பெரியசேகரனூர் மற்றும் 18 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்; சுமார் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அல்லாபுரம் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

சுமார் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பேராணாம்பட்டு பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்; சுமார் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆலங்காயம் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் சுமார் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாமதோடு, சேத்துப்பட்டு ஊரக பேரூராட்சிகள் மற்றும் பெரணமல்லூர் ஒன்றியத்தைச் சார்ந்த 22 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

தர்மபுரி மாவட்டத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குண்டாலப்பட்டி மற்றும் 36 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்; சுமார் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஊத்தங்கரை பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

பிற்பகல் 4-35

திருவாரூர் மாவட்டத்தில் சுமார் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூத்தாநல்லூர் நகராட்சியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம். வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஒரு பகுதியாக சுமார் 23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவாரூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

திருச்சி மாவட்டத்தில் சுமார் 48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மருங்காபுரி, வையம்பட்டி, மணப்பாறை மற்றும் கடம்பூர் ஒன்றியங்களில் 223 ஊராட்சிகள் அடங்கிய 1138 ஊரகக் குடியிருப்புகளுக்கான



கூட்டுக் குடிநீர்த் திட்டம். சுமார் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மணச்சநல்லூர் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம். சுமார் 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கல்லக்குடி பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சுமார் 2 கோடியே, 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தொண்டி குடிநீர்த் திட்டம். இஸ்லாமிய மக்களும் மற்றும் பல சமுதாயத்தினரும் பெருமளவில் சென்று வரும் இஸ்லாமிய புனித ஸ்தலமான ஏர்வாடி ஊராட்சிக்கு தகுந்த நீராதாரம் இதுவரை தேடிப் பார்த்து கிடைக்காத காரணத்தால், நீராதாரம் இல்லாத நிலையில், அதை நீக்கும் வகையில், புதிய குடிநீர்த் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, கூடுமானவரை உப்பு நீரை நன்னீராக ஆக்கும் திட்டத்தின் பயனாக இதை நிறைவேற்றலாம் என்று முடிவு எடுத்துள்ளோம்.

பெரம்பலூர் மாவட்டத்தில் சுமார் 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரம்பலூர் பேரூராட்சி, பூவலூர் பேரூராட்சி, குரும்பலூர் பேரூராட்சி மற்றும் 55 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். சுமார் 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குன்னம் மற்றும் குன்னம் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மணமேல்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த சிறுவை மற்றும் 10 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். சுமார் 2 கோடியே, 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 49 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். சுமார் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகுடஞ்சாவடி, வீரபாண்டி, மல்லசமுத்திரம், பனமரத்துப்பட்டி மற்றும் ராசிபுரம் ஒன்றியங்களிலுள்ள 90 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

நாமக்கல் மாவட்டத்தில் சுமார் 61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பட்டணம், சீராப்பள்ளி, புதுப்பட்டி ஊரக பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்கவும், 3 ஊரக பேரூராட்சிகளின் 296 வழியோர கிராமங்கள் மற்றும் சேலம் மாவட்டத்தில் 6 ஊரக பேரூராட்சிகள் மற்றும் 858 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். சுமார் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருச்செங்கோடு நகராட்சி குடிநீர்

மேம்பாட்டுத் திட்டம். சுமார் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சங்ககிரி பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

ஈரோடு மாவட்டத்தில் சுமார் 2 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அம்மாப்பேட்டை ஒன்றியத்திலுள்ள 8 குடியிருப்புகளுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம். சுமார் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வெள்ளக்கோவில், கொடுமுடி ஒன்றியங்கள் மற்றும் கரூர் மாவட்டம், கே. பரமத்தி ஒன்றியத்தில் முத்தூர், காங்கேயம், கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம். சுமார் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வெள்ளக்கோவில் மற்றும் காங்கேயம் ஒன்றியங்களில் உள்ள 127 குடியிருப்புகளுக்கு முத்தூர்—காங்கேயம், கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம். சுமார் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சூரியம்பாளையம் ஊரகப் பேரூராட்சி மற்றும் 14 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், சுமார் 21 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அந்தியூர், அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களில் சுமார் 190 ஊரக குடியிருப்புகளுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் சுமார் 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில அந்தியூர், சென்னிமலை, கருமாண்டி— செல்லிப்பாளையம் ஆகிய 3 பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்கும் மேம்பாட்டுத் திட்டம்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சுமார் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மடத்துக்குளம் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம். 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பொள்ளாச்சி வடக்கு, பொள்ளாச்சி தெற்கு, கிணத்துக்கடவு, குடிமங்களம் ஒன்றியததிலுள்ள 295 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். 38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அன்னூர், அவினாசி, சூளூர் ஒன்றியங்களில் மற்றும் மூப்பேரிபாளையம் ஊரகப் பேரூராட்சியில் உள்ள மொத்தம் 247 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 1 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மசினகுடி மற்றும் 2 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

மதுரை மாவட்டத்தில் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அவனியாபுரம் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம். சுமார் 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பேரையூர் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.



தேனி மாவட்டத்தில் சுமார் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரியகுளம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

திண்டுக்கல் மாவட்டத்தில் சுமார் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட திண்டுக்கல் நகராட்சி மற்றும் நத்தம் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம். சுமார் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சித்தையன்கோட்டை பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

சிவகங்கை மாவட்டத்தில் சுமார் 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கானாடுகாத்தான் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

விருதுநகர் மாவட்டத்தில் சுமார் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ரோசல்பட்டி மற்றும் 11 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். சுமார் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாத்தூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

தூத்துக்குடி மாவட்டத்தில் சுமார் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருச்செந்தூர், காயல்பட்டினம், ஆறுமுகநேரி, ஆத்தூர் நகர பேரூராட்சிகள் மற்றும் 13 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம. சுமார் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூத்துக்குடி நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

பிற்பகல் 4-40

திருநெல்வேலி மாவட்டத்தில் சுமார் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடையநல்லூர் மற்றும் புளியங்குடி நகராட்சிகள், சாம்பவர் வடகரை மற்றும் சுரண்டை பேரூராட்சிகள் மற்றும் 88 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். சுமார் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேர்ந்தமங்கலம் மற்றும் 72 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். சுமார் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தென்காசி நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம். திருநெல்வேலி மாநகராட்சிக்கு அருகில் உள்ள இராமையன்பட்டி, தென்பட்டு போன்ற ஊரக குடியிருப்புகளுக்கு திருநெல்வேலி மாநகராட்சி குடிநீர் திட்டத்திலிருந்து, மாநகராட்சியின் ஒப்புதல் பெற்று குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்கூறிய 55 புதிய திட்டங்கள் நடப்பாண்டில் மாவட்டங்களுக்கு ஒன்றிரண்டு என்று எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதற்காகத் தயாரிக்கப்பட்ட பட்டியலில் கண்டுள்ள திட்டங்கள். 45 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் இந்தத் திட்டங்கள் அமையப்பெற்றிருக்கின்றன என்பதை மட்டும் தெளிவாக நான் உங்கள் மத்தியிலே (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். அதோடுமட்டுமல்லாமல், எடுத்து முடித்ததையும், எடுக்க இருப்பதையும் அறிவித்தேன். எடுக்க வேண்டிய நிலையில் இருப்பதையும், ஆய்வுக்கு வைத்திருப்பதையும் இப்போது அறிவிக்க விரும்புகிறேன்.

நடப்பாண்டில் புதியதாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் திட்டங்கள். இந்த ஆண்டு அறிவித்தால்தான், அடுத்த ஆண்டு எடுக்கலாம். அதற்காகத்தான் இது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், 48 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் மாடம்பாக்கம் நகரப் பேரூராட்சிக்கான குடிநீர்த் திட்டம். 37 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்தின் 15 கடலோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருவள்ளூர் மாவட்டத்தில் 41 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் திருவள்ளூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம். 48 ஆயிரம் மக்கள் பயன்பெறும வரையில் மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில் அனுப்பம்பட்டு மற்றும் 50 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வேலூர் மாவட்டத்தில் 76 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் ஆம்பூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம். பாலாற்றில் நீராதாரம் மாசு காரணமாக வேலூர் மாவட்டத்திலுள்ள பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் பயனற்றுப் போகும் நிலை உள்ளதால் இதற்கொரு நிரந்தர தீர்வு காணும்பொருட்டு புதியதாக ஒரு குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருவண்ணாமலை மாவட்டத்தில், ஓர் இலட்சத்து 35 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கீழக்கொடுங்காலூர், நல்லூர் மற்றும் 206 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.



திருநெல்வேலி மாவட்டத்தில், 55 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில செங்கோட்டை நகராட்சி, குற்றாலம், இலஞ்சி, மேலகரம் மற்றும் சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். ஓர் இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் மானூர் மற்றும் மேலநீலிதநல்லூர் ஒன்றியங்களிலுள்ள 388 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

தூத்துக்குடி மாவட்டத்தில், 28 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் 42 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

தேனி மாவட்டத்தில், 74 ஆயிரம் மக்கள் பயன்பெறும வகையில் தேனி அல்லிநகரம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுமார் 4 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் வேளாங்கண்ணி, கீழ்வேளூர் பேரூராட்சிகள், நாகபபட்டினம், திருமருகல், தலைஞாயிறு, கீழையூர் மற்றும் கீழ்வேளூர் ஒன்றியங்களிலுள்ள 827 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

சேலம் மாவட்டத்தில், 55 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் மேட்டூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம். 3 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் காடையாம்பட்டி, நங்கவல்லி, தாரமங்கலம், மேச்சேரி மற்றும் ஓமலூர் ஒன்றியங்களிலுள்ள 554 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

மேற்கூறிய 14 திட்டங்கள் சுமார் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் புதிதாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் தொடங்கும் நிலை ஆரம்பிக்கப்படும்.

பாதாள சாக்கடைத் திட்டங்களை மாவட்டத் தலைநகரங்கள் மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களுக்கு முதலிடம் கொடுத்து நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் விருதுநகர், சிவகாசி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம் மற்றும் மாமல்லபுரம் ஆகிய ஏழு நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள தொடங்கப்படும்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எங்களுடைய ஆட்சியிலேகூட இதற்கு ஒரு சதவீதம்தான் செலவழித்திருக்கிறீர்கள் என்ன காரணம் என்று தெரிவிக்க வேண்டும் என்று எனக்குக் குறிப்பெழுதி அனுப்பியிருந்தார்கள். ஆனால், இதற்கான ஒத்துழைப்பு நகராட்சிகளில் இல்லை. அதற்குக் காரணம் நிதி வசதி இல்லை. ஆகையினால், பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பற்றி நான் ஏதோ ஆய்வுக்கு எடுப்பதிலே அஞ்சுகிறேன் என்பதைப்போல சிலர் கருதுகிறார்கள். அது தவறு. முதலமைச்சர் என்ன காரணம் என்று கேட்டதற்கு இதுதான் காரணம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரை இந்த ஆண்டுக்குப் புதிதாக எடுத்துக்கொள்ளும் சில குடிநீர்த் திட்டங்களைப் பற்றியும், புதிதாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட இருப்பவை பற்றியும் அறிவித்தேன். இதிலே, கிராமப்புறங்களுக்கு இந்த ஆண்டு செயலாக்க எடுத்துக்கொள்ளப்படும் திட்டங்களைப் பற்றியும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் திட்டங்களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளேன்.

பிற்பகல் 4-45

இதுவரை நகர்ப் பகுதிகளில் மட்டுமே இருந்து வந்த வீட்டுக் குடிநீர் இணைப்புகளைத் தற்போது முதல்முறையாகக் கிராமப்புற ஊராட்சிகளுக்கும் கொடுத்திருக்கிறோம். உங்களையெல்லாம் நான் ஒன்றே ஒன்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். எங்களை மட்டுமே விரட்டி வேலை வாங்குவது என்பதைச் சற்று தளர்த்தி, ஊராட்சி, பேரூராட்சிகளில் எங்கள் அனுமதி இல்லாமலேயே, வாய்ப்பு வசதி அற்ற, வாய்ப்பே இல்லாத, தண்ணீர் இல்லாத ஊர்களில்கூட சில பேர் வீட்டு இணைப்புகளைக் கொடுத்து, முறைப்படி கணக்கை வைக்காமல் வைத்திருக்கிறார்கள். நாம் போட்டிருக்கிற உத்தரவில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம் 1000 ரூபாய் யாரும் கொடுக்க மாட்டேன் என்று மறுக்கவேயில்லை, தருகிறோம் என்றுதான் சொல்கிறார்கள். ஒரு நாளைக்கு ஒரு ரூபாய். 30 ரூபாய்தான் கேட்டிருக்கிறோம். அதுகூட நான் 50 ரூபாய் என்று போட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது முதலிலேயே இருந்தது மாதிரி 30 ரூபாய் என்று இருக்கட்டும் என்று சொன்னார்கள். நான் இப்போது சொல்வது ஏற்கெனவே கொடுத்திருக்கிறவைகளுக்குக் கணக்கு வர வேண்டாமா? அதைப்பற்றி பேச வேண்டாமா? யாருமே அதுபற்றிக் கவலைப்படாமல் இருக்கிறார்கள். எங்களை மட்டும் இங்கே வந்து



கேட்கிறார்களே? அங்கே, அவர்களைப் பற்றி யாராவது பேச வேண்டாமா? நாடு பூராவிலும் நான் 12,600 பஞ்சாயத்துகளிலேயும் போய்க் கணக்கு கேட்க முடியுமா? நீங்கள் கண்ணாலேயே பார்க்கிறீர்கள். அவ்வளவும் இலவசமாகக் கொடுத்ததாக எங்களுக்குத் தெரியவில்லை. ஒருவருக்குக்கூட இலவசமாகக் கொடுத்ததாகத் தெரியவில்லை. ஒன்று, இரண்டு ஊர்களிலே ஏதாவது அவர்கள் விட்டு வைத்திருப்பார்கள். அதனாலேயே அவற்றை முறைப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே முதல் முறையாகக் கிராமப்புறங்களிலே நகரத்தைப் போல வீடுகளுக்கு இணைப்புக் கொடுத்திருக்கிற ஓரே மாநிலம் தமிழ்நாடுதான் என்பதைப் பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே இன்னொன்று, தேசிய நீர்வளத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டது, கிராமப்புறத்திற்கு 40 லிட்டரும், பேரூராட்சிக்கு 70 லிட்டரும், நகராட்சிக்கு 90 லிட்டரும், மாநகராட்சிக்கு 120 லிட்டரும் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள். அதைத்தாண்டி, இந்தியாவிலே முதல் முறையாக நாம் 40 லிட்டரைத் தாண்டி வீடுகளுக்கு இணைப்புக் கொடுக்கிற காரணத்தால் 15 லிட்டரைச் சேர்த்து 55 லிட்டர் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு இன்று முதல் புதியதாக ஆரம்பித்திருக்கிற திட்டங்கள் அனைத்திற்கும் தலா 55 லிட்டர் கணக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நாம் ஆணையைப் பிறப்பித்திருக்கிறோம். இதற்குரிய செலவினம் சற்று அதிகரிக்கிறது. இருந்தாலும் பரவாயில்லை என்று தான் நாம் அதைச் செய்திருக்கிறோம். இதிலே உங்களுடைய ஒத்துழைப்பு என்னவென்றால் illegal-ஆக, தவறுதலாக, யார் யார்க்கு இணைப்புக் கொடுத்திருக்கிறார்களோ அவர்கள்மீது நாங்கள் நடவடிக்கை எடுத்தால், அவர்களுக்காக நீங்கள் வராமல், மக்களுடைய நிதி தவறாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது, தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்ற உணர்வோடு நீங்கள் எங்களுடன் ஒத்துழைத்தால் ஓரே மாதத்தில் சரியான முடிவிற்கு நான் கொண்டு வருவேன் என்பதை இங்கே பகிரங்கமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது இன்னொரு கணக்கு. 1992-வது வருடத்திலே ஒரு கணக்கு எடுத்திருக்கிறார்கள். ஓர் உண்மையை உங்களுக்கு நான் சொல்கிறேன். அந்தக் கணக்கு சரியோ, தவறோ, அந்தக் கணக்கை

வைத்துத்தான் நாம் இப்போது கணக்கு எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதற்கு அப்புறம் சில கணக்கிலே போய் வந்ததற்குப் பிறகு நான் ஒரு புதிய ஆய்வுக்கு விட்டேன். ஒரு புதிய ஆய்வு நடத்த வேண்டும், ஒரு கோடி ரூபாய் செலவு ஆகும் என்று சொன்னார்கள். பரவாயில்லை, ஒரு புதிய கணக்கு எடுங்கள் என்று மூன்று மாதக் கெடு கொடுத்திருக்கிறேன். இந்த மூன்று மாதத்திற்குள்ளே உண்மையான நீர் ஆதாரங்களினுடைய கணக்கு எடுத்து, அதன் அடிப்படையிலே மெள்ள மெள்ளத் திரும்பவும் அதைப் புனரமைப்பு செய்ய வேண்டும் என்று ஓர் உத்தரவிட்டிருக்கிறேன். அந்தப் பணியும் தொடங்கி நடைபெறுகிறது என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

இப்பொழுது பொன்விழாத திட்டம் என்று கொண்டு வந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நிதியொதுக்கீடு 50 கோடி ரூபாய், தனியாகக் கொடுத்திருக்கிறார். நீங்கள் 8 சதவீதம், 19 சதவீதம் இவ்வளவுதானே, அவ்வளவுதானே— அப்படியெல்லாம் குறிப்பிட்டீர்கள். ஆனால், இது அந்தக் கணக்கிலே வராது. இது ஒரு சிறப்பு நிதி. 50 கோடி ரூபாய் என்பது பொன்விழா திட்டத்திற்கு அளிக்கப்பட்ட உதவித் தொகை. அதோடு மட்டுமல்லாமல் அதை முழுமையாகச் செலவு செய்து, செயல்படுத்த வேண்டும் என்றால் இன்னொரு 100 கோடி ரூபாய் கடன் வாங்கிக்கொள்ளுங்கள் என்று அப்படியும் அனுமதி கொடுத்திருக்கிறார். கடன் என்னை நம்பிக் கொடுக்க மாட்டார்கள். அரசாங்கம் ஒப்புதல் அளித்தால்தான் கடன் கொடுப்பார்கள். Guarantee-யைச் சர்க்கார்தான் கொடுக்க வேண்டும். அந்த 150 கோடிதான் அதற்குக் கணக்கு. அதேமாதிரி அந்த 150 கோடி ரூபாயைச் செலவழிக்கவிருக்கிறோம். இதற்கெல்லாம் விவரங்கள் இருக்கின்றன. எத்தனை ஊருக்கு என்று இருக்கின்றது; என்ன என்று விவரங்கள் எல்லாம் இருக்கின்றன. அதுபற்றி இப்பொழுது சொல்ல வாய்ப்பு இல்லை. நேரம் ஆகிவிட்டது.

ஒகேனக்கல் திட்டத்தைப் பொறுத்தவரையில் ரொம்பப் பேர், அந்த மாவட்டம் முழுவதும் அதைக் கை காட்டுகிறவர்கள் எல்லாம் அதைப்பற்றிக் கேட்கிறார்கள். அது ஒரு பெரிய திட்டம். 700 சொச்சம் கோடி ரூபாய் திட்டம். 636 கோடி ரூபாய்க்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலிலே பொறுப்பேற்றபோது ஒரு திட்டத்தைத் தயாரித்து அறிவித்தார்கள். அதற்கு ஜப்பான் நாட்டினுடைய உதவியைப் பெற



வேண்டும்; அந்த நிதியைக் கொண்டு செய்யலாம், ஜப்பான் நாட்டினுடைய உதவி கிடைக்கும் என்றும், அவர்கள் கொடுப்பதாக உறுதி அளித்ததால் பண்ணினார்கள். மத்திய அரசாங்கத்திலே அது தடைப்பட்டது, காரணம் கர்நாடக அரசினுடைய கட்டுப்பாட்டில் இருந்ததை, அதற்குமேல் தண்ணீர் கொடுக்கக் கூடாது என்று இருந்த நிலையை மாற்றி, இதற்கு முன்னாலே இருந்த அரசாங்கத்தில், மத்திய தொழில் துறை அமைச்சராக இருந்த நம்முடைய மாண்புமிகு திரு முரசொலி மாறன் அவர்கள் உதவி செய்து, அந்தத் திட்டத்தைத் தெரிவித்தார்கள். அப்போது அந்தப் பதிலும் வராமல் இருந்தது.

பிற்பகல் 4-50

நடைமுறையில், இப்பொழுது இந்த ஆட்சி வந்த பிறகுதான் அது வந்தது. நீங்கள் எடுத்துக்கொள்ளலாம், தண்ணீர் எடுப்பதற்கு உங்களுக்கு உரிமை தருகிறோம் என்று அவர்கள் அறிவித்தார்கள். இந்நிலையில் ஜப்பானியர் கடன் தர மாட்டோம் என்று கைவிரித்து விட்டார்கள். அதற்குப் பிறகு கணக்குப் பார்த்தபொழுது அந்த 600 சொச்சம் கோடி ரூபாயாக இருந்தது 776 கோடி ரூபாயாக உயர்ந்துவிட்டது. அதற்குப் பிறகு 3 நாள் நான் அந்த மாவட்டத்தைச் சுற்றிப் பார்த்தபொழுது நாங்கள் அந்தத் திட்டத்தை மட்டும் எடுத்துக்கொண்டால் அடுத்து ஓசூர் போன்ற ஒரு 5, 6 ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தண்ணீர் கொடுக்கின்ற நிலையிலே சங்கடம் ஏற்படும் என்று தெரிய வந்தது. காரணம், எல்லா இடங்களிலும் குழாய் போட முடியாது. அதிலே மலைப் பகுதிகள், சில இடங்களில் மனிதர்களே போக முடியாத பகுதிகள், சில இடங்களில் ஏறத்தாழ 1,500 மீட்டர் உயரத்திற்கு எல்லாம் மலை இருக்கிறது. அவற்றை ஒரு வழியாகச் செய்து கொடுக்க முடியாது, காரணம் தரைக் களமே இல்லை. ஆகையினால் இந்தத் திட்டத்தை ஒகேனக்கல்லில் எடுக்கிறபொழுது, எந்த இடத்திலே நாம் கொண்டு வந்து சுத்திகரிக்கிறோமோ அதுவரையில் அந்த மாவட்டத்திற்குள்ளே பெரிய திட்டமாகத் தயாரித்து, குழாய் போட இடம் தேர்வு செய்து, அங்கே சுத்திகரிப்பு நிலையம் அமைத்து, அதிலிருந்து ஓசூர் மற்றும் 3 ஒன்றியங்களுக்குத் தண்ணீர் கொடுக்கலாம் என்று ஒரு திட்டத்தைச் சேர்த்தோம். அப்படிச் சேர்க்கிறபொழுது, இருநூற்றுச் சொச்சம் கோடி ரூபாய் அதற்குச் செலவாகும். ஆனால் இதை விட்டுவிட்டுத் தனியாகச் செய்வது என்றால், 480 கோடி ரூபாயைத் தாண்டுகிறது என்றாலும், அதை முழுமையாக, முறையாக,

பாதுகாப்போடு செயல்படக்கூடிய சூழ்நிலை இல்லை என்பதை அவர்களிடத்திலே தெரிவித்து 1,008 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டத்தைத் தர்மபுரி மாவட்டத்தில் ஓசூர் பகுதியைச் சேர்த்து இணைத்திருக்கிறோம்.

அப்படி இணைத்தது இப்பொழுது நடக்குமா என்று ஒரு கேள்வி. அதை உலக வங்கிக்கு அனுப்பியிருக்கிறோம். அதற்கான தகவலைச் சேகரித்துக்கொண்டிருக்கிறோம். அதை அனுப்பி, உலக வங்கி அனுமதித்துவிடுமானால், அது எப்பொழுது அனுமதிக்கிறதோ, அதற்கு மறுநாளே இந்தத் திட்டத்தை இந்த அரசு எடுத்துக்கொள்ளும் என்ற உத்தரவாதத்தை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், திருச்சி, கரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களிலுள்ள ஊரகக் குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டங்களுக்கு 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயற்குறிப்பு உலக வங்கியின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 18,000 அரசு ஊரகப பள்ளிகளுக்குக் குடிநீர்த் தொட்டிகள் அமைக்கும் திட்டம் இந்த ஆண்டு செயலாக்கப்படும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மூத்தப் பொறியாளரைப் பொறியியல் இயக்குநராக ஆக்க நிர்வாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஓய்வுபெற்ற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பணியாளர்களுக்கு ஒரு சிறப்பு மருத்துவ உதவித் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சொத்து வரியைப் பொறுத்தவரையிலும், (குறுக்கீடு) இதிலே ஆகா என்று சொல்வதற்கு வழி கிடையாது. நீங்கள் நிறையப் பேசியிருக்கிறீர்கள். இது ஒன்றும் announcement கிடையாது. விவரம்தான் சொல்லப்போகிறேன் தேவைப்பட்டால் சொல்கிறேன். இல்லையென்றால் வேண்டாம். ஏனென்றால் பழசுதான் இது. (குறுக்கீடு) இந்தக் கணக்கைச் சொல்லப் போகிறேன். இப்பொழுது எவ்வளவு என்றால், ஏற்கெனவே நாம் போட்ட வரி உங்களுக்குத் தெரியும் 1993-இலே அவர்கள் என்ன போட்டிருந்தார்கள் என்று உங்களுக்குத் தெரியும். அந்த வரியை முதலமைச்சர் இரண்டாவது முறை குறைத்ததால், நாங்கள் போட்டதிலேயே குறைத்துப் போட்டோம், அதற்குப் பிறகு புதிய சட்டத்தின் அடிப்படையிலே ஒன்று போட்டோம், அதை மறுபடி திருத்தி உங்களுடைய வேண்டுகோளை ஏற்று, முதலமைச்சர் அறிவித்தது



50-ஐ 25 ஆக்கினார்; 100-ஐ 50 ஆக்கினார்; 150-ஐ 100 ஆக்கினார். ஒன்றே ஒன்று மட்டும், 150-ஐ மட்டும் அப்படியே வைத்திருக்கிறார். அது எது? அது Factory. அதன் Number என்ன? அதனுடைய வருவாய் என்ன? இதையெல்லாம் கொஞ்சம் யோசிக்க வேண்டும். இப்பொழுது இந்த வகையிலே அவர்களுக்கு எல்லாவித வாய்ப்பும் கொடுத்திருக்கிறோம்.

கறுப்புச் சட்டம் என்கிறார்கள், சிகப்புச் சட்டம் என்கிறார்கள். கறுப்புச சட்டம் என்பது என்ன என்றால் ஒன்றுமே கேள்வி கேட்க முடியாது. ஆனால், இதிலே அப்படிக் கிடையாது. இது கறுப்புச் சட்டமும் இல்லை, சிகப்புச் சட்டமும் இல்லை. இதைப் போட்டு 30 நாட்களுக்குள்ளே Appeal பண்ணலாம். 3 விதமான appeals இருக்கும். ஒன்று, அந்த ஆணையரிடத்திலே கொடுக்கலாம். அவர் தப்பு இல்லை என்றால் அப்புறம் அந்தக் குழு இருக்கிறது, அதிலே கொடுக்கலாம். அதுவும் தாண்டினால் மாநகராட்சி, பிறகு நீதிமன்றத்திலே கொடுக்கலாம். அது எல்லாவற்றையும் தாண்டி, ஒரு பஞ்சாயத்தாக இருந்தால்கூட நீதிமன்றங்கள் எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கின்றன. இது ஒன்றும் கறுப்புச் சட்டமும் இல்லை, சிகப்புச் சட்டமும் இல்லை, வெள்ளைச் சட்டம்தான். Open சட்டம்தான் இது.

வந்திருக்கிற கணக்குப்படி பார்த்தால், இப்போது 100-க்கு 2 பேர் நகராட்சிகளிலே appeal பண்ணியிருக்கிறார்கள். 100-க்கு 5 பேர் மாநகராட்சியிலே அப்பீல் பண்ணியிருக்கிறார்கள். இதுவொரு இயற்கையா இல்லையா? நான் கேட்கிறது, இதுகூட இல்லாமல் ஒரு வரி கொடுக்கிற சூழ்நிலை இருக்குமா? Appeal பண்ணியிருப்பவர்கள் 100-க்கு 5 சதவீதம் மாநகராட்சி, 100-க்கு 2 சதவீதம் பேரூராட்சி. இவ்வளவுதான். இதை ஏன் பெரிதாக எடுத்துக்கொண்டு நாம் பிரச்சினை பண்ண வேண்டும். சரி இதைப் பண்ணினால் அந்த நகராட்சியினுடைய நிலைமை என்ன? பேரூராட்சியினுடைய நிலைமை என்ன? வருவாய் எப்படிப் பெருக்க முடியும்? அவர் தொழிலாளியை நிரந்தரமாக்கு என்கிறார். அதற்கப்புறம் இவர் ஒருநாளைக்கு அரசாங்கம் தருகின்ற சம்பளத்தைக் கொடு என்று சொல்கிறார். ஒருநாளைக்கு அரசாங்கம் அலுவலராகவே எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார். இது ஒரு பக்கம். அதற்கப்புறம் வரி இல்லை. (குறுக்கீடு) Right, ரொம்ப நன்றி. நீங்கள் ஆதரிப்பதற்கு ரொம்ப நன்றி. 8 சதவிகிதம் கொடுக்கிறீர்கள் என்கிறார்கள். இல்லை 19 சதவிகிதம் கொடுக்கிறோம் என்கிறோம். இவ்வளவு கொடுப்பது என்றால், எங்கேயிருந்து கொடுப்பது?

எல்லா ஊராட்சி மன்றங்களுக்கும் அதிகாரம் வேண்டும்; ஒன்றியங்களுக்கும் அதிகாரம் வேண்டும்; மாவட்ட ஊராட்சிகளுக்கும் அதிகாரம் வேண்டும்; அவர்களுக்குச் சுதந்திரம் வேண்டும்; இவர்களுக்கு ஜனநாயகம் வேண்டும். ஊராட்சி மன்றங்களை மதிக்கிறீங்க, ஒன்றியங்களை மதிக்கிறீங்க, மாவட்ட ஊராட்சிகளை மதிக்கிறீங்க. இந்த ஆட்சியை நடத்துகிறோமே மாநிலத்திற்கு என்று ஓர் அதிகாரம் வேண்டாமா? (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4-55

நாங்கள் மட்டும் என்ன நாதியற்றவர்களா? அவர்களுக்கு எல்லாம் அந்த அதிகாரம் வேண்டும். எங்களுக்கு மட்டும் என்ன Bill Collector அதிகாரம் வேண்டுமா? வரியை வசூலித்து நாங்கள் கொடுக்க வேண்டியது, அவர்கள் எந்தவித அதிகாரமும் இல்லாமல் செலவு பண்ண வேண்டியது.

இன்னொன்றுக்கு சொல்லுங்களேன். முதலமைச்சர் எதிலிருந்து கொடுக்கிறார்? Sales Tax, பிறகு வருமான வரியில் அவர்கள் கொடுக்கிற பணம், அந்த வரி, இந்த வரியைச் சேர்த்து வாங்கி நமக்குக் கொடுக்கிறார். அந்தந்த எல்லைக்குள் அவரவர்களை வசூல் பண்ணிக்கொள்ளச் சொல்லுங்களேன். அந்தச் சுதந்திரத்தைக் கொடுத்துவிடுங்களேன். அவர்களுக்கும் வேலை கம்மி, எங்களுக்கும் வேலை கம்மி. (சிரிப்பு) (குறுக்கீடு) உங்களுக்கும் நல்லது. ஆகையினாலே, நான் என்ன சொல்கிறேன் என்றால், தயவுசெய்து உங்களைக் கரம் கூப்பிக் கேட்டுக்கொள்கிறேன். இதற்குமேல் வரிகளில் எதில் கையை வைத்தாலும் நிச்சயமாக இருக்கிற ஊழியர்களுக்கே சம்பளம் கொடுக்க முடியாது. என் நிலைமை இதுதான். இதைப் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொள்ளுங்கள். புதிதாக வருகின்றவர்களுக்கும் வழி சொல்லுங்கள். இன்னொரு உறுதியையும் நான் உங்களுக்குத் தருகிறேன். நிச்சயமாக, தவறான முறையில் வரி விதிப்பில் யாராவது நடவடிக்கை எடுத்திருப்பார்களேயானால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கிறோம். Appeal செய்பவர்களுக்குச் சரியான தீர்ப்பை வழங்குவதற்கு உத்தரவாதத்தை நிச்சயமாகத் தருகிறோம் என்ற உறுதியை நான் உங்கள் மத்தியில் தந்து, அந்தவகையில் இந்த வரிச் சீராய்வை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, நான் உங்களிடம் இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2027 கோடி ரூபாயை இந்தத் துறைக்கு வழங்கியிருக்கிறார்கள். இந்த வருடம் நிதிநிலையைப் பற்றி அவர்கள் பேசிக்கொண்டு வந்தபோது எல்லாம், நான் ரொம்ப பயந்துபோனேன். நம்மைக் கைவிட்டுவிடுவார்களோ என்னமோ தெரியவில்லையே, போன வருடம் அதைச் சொன்னோமே, இதைச் சொன்னோமே என்று பயந்தேன். இந்த வருடம் எங்கள் துறைக்கும் அதிகாரித்துத்தான் தந்திருக்கிறார். அதிலும் குடிநீர் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், ஒரு பங்கு அதிகமாக்கி, ஏறத்தாழ 70 சதவீதம் உயர்த்திக் கொடுத்திருக்கிறார். அதுதவிர எல்லாத் துறைகளும் அவருடைய கையில்தான் இருக்கின்றன. அத்தனைக்கும் அவர் பொறுப்பேற்று இருக்கிறார். இருந்தாலும் இந்தத் துறையை முக்கியமான துறையாக அவர் கருதி, பல பணிகளை, அவர் ஊனோடு, அவர் இதயத்தில் உருவான சமூக நலத் திட்டத்தில், அவரே எந்த அளவுக்கு அதில் பழக்கப்பட்டு இருக்கிறார் என்பதை மனதில் வைத்துக்கொண்டுதான் இந்தப் பணியை என்னிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்.

நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டுச் சொன்னேன். இங்கே இருக்கிற அமைச்சர்கள் அத்தனைபேரிலும் வயதைத் தவிர, பாக்கி அத்தனையிலும் குறைந்தவன் நான் என்று சொன்னேன். இன்னும் கூடச் சொல்கிறேன், அவ்வளவு பேரிலும் படிக்காதவன் நான். இந்தப் பொறுப்பை எனக்குக் கொடுத்திருப்பதற்குக் காரணம், நான் தொண்டனாக மாவட்டத்தில் அவரோடு பழகிக் கொண்டிருக்கும்போது, எங்கள் ஊரில் 6 சாலைகளைப் புதிதாகக் கண்டுபிடித்துப் போட்டேன். அப்போது 'நமக்கு நாமே' எல்லாம் இல்லை. அப்போது நான் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தேன். அப்போது, 6 சாலைகளைப் போட்டேன். அந்தச் சாலைகளை இவர் பார்த்திருக்கிறார். குளம் வெட்டிக் கொண்டு இருந்தேன். அப்போது மாயவரத்தில் Lakshmi Photo Studio- தலைவர் தங்கியிருந்தார். அந்த Photo Studio-விலிருந்து வந்து திருத்துறைப்பூண்டியைச் சேர்ந்த ஒருவரை அனுப்பி, மணி இருக்கிறானா என்று பார் என்று அனுப்பினார். அப்படிச் சொல்கிறபோது நான் அவரை அழைத்ததாக அழைத்து வா என்றார்கள். அங்கே குளம் வெட்டுகிறான் கோ.சி. மணி என்று சொன்னவுடன், அந்த Photo Studio-வில் இருந்து ஒரு கேமராமேனை அனுப்பிப் படம் எடுத்தார்கள். அப்போதெல்லாம் பிளாக் போட்டு வெளிவருவது என்பது ரொம்ப

ஆச்சரியம். என் படம் அதிலே வருகிறது என்றால் அப்போது அது ரொம்பப் பெரிய விஷயம். அதைப் போய் படம எடுத்து வரச் சொல்லி, அதை பிளாக் எடுத்து, அப்போது வாரப் பத்திரிகையாக வந்துகொண்டிருந்த முரசொலியில், "குளம் வெட்டுவோம் வாரீர்" என்ற தலைப்பைப் போட்டு, ஐந்து பத்திகள் எழுதினார். அந்தப் பத்திரிகையில் அவர் எழுதியதற்குப் பிறகுதான் தமிழ்நாட்டில் நான் கோ. சி. மணியாக ஆனேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நம்பித்தான் இந்த மந்திரி பதவியும், எனக்குக் கொடுத்தார் என்று நான் நினைக்கிறேன். இதிலிருந்து என்ன அர்த்தம் என்றால், இதுபோன்ற பணிகளைச் செய்வதற்கு, யார் யார் தகுதி வாய்ந்தவர்களோ அவர்களை எல்லாம் இந்த முதலமைச்சர் பாராட்டுவார், உயர்த்துவார், தகுதியைத் தந்து மதிப்பை அளிப்பார் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு என்று எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக இதை நான் குறிப்பிடுகிறேன்.

இந்தத் துறையினுடைய பணி அடித்தளத்து மக்களுக்கு இருக்க இடம் போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்வது போன்றதுதான். அதிலே ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன். சென்னைக் குடிநீரை விட்டுவிட்டேன். (குறுக்கீடு) கொஞ்சம்தான் இருக்கிறது. புழலேரி பற்றி பத்திரிகையில் எல்லாம் செய்தி வந்தது. பத்திரிகையில் வந்த செய்தியாக மட்டும் நீங்கள் கருதக் கூடாது. அதனுடைய பேராபத்து பற்றி நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அதிகாலை நாலரை மணிக்கு அங்கே போய் நிற்கிறார். குளிக்கவில்லை. நான் இன்னொன்றையும் உங்களுக்குச் சொல்கிறேன். அண்ணாவைக் கூட ஒருநாள் உட்கார வைத்துவிட்டு, குளித்துவிட்டு வருகிறேன் அண்ணா என்று சொல்லிவிட்டு குளிக்கப்போனவர். எனக்குத் தெரியும். ஆனால் அன்றைக்குக் குளிக்காமல் 4-30 மணிக்கு இந்த Secretariat-க்கு வந்து, அவர்கள் சாவியை எடுத்துக்கொண்டு வருகிறவரை வாசற்படியில் நின்று, சாவி எடுத்துவந்து திறந்த பிறகு, lift இல்லை என்பதற்காகப் படியில் ஏறிப்போய் அங்கே நின்று, அந்த வாசற்படியைத் திறப்பதற்கு முன்பு இந்த வாசற்படிக்கு வந்து, அதற்குப் பிறகு இங்கே வந்து, இவ்வளவு சிரமப்பட்டு, எங்களையும் தொல்லைப்படுத்தி, அங்கே போய் நின்று ஏரியைப் பார்த்தால், துரைமுருகன் அவர்கள்கூடச் சொன்னார், பல்லாயிரக் கணக்கான மக்களைக் காப்பாற்றினார், பல ஊர்களைக் காப்பாற்றினார்



என்று சொல்லி, அதோடு அவர் அன்றைக்கு முடித்துவிட்டார். அவர் பேச்சில்

பிற்பகல் 5-00

அவருக்கு அவ்வளவுதான் நேரம் கிடைத்தது. ஆனால், அதிலே ஒன்றே ஒன்று, நான் சொல்லுகிறேன். அது உடைந்திருந்தால், அந்த மக்களைக் காப்பாற்றுவது ஒரு பக்கம் இருந்தாலும், சென்னைவாழ் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை எந்தக் கிருஷ்ணா நீர் வந்தாலும் காப்பாற்ற முடியாது. அந்த 30 இலட்சம் கன அடி தண்ணீரும் போய்விட்ட பிறகு அதை அடைத்து மறுபடியும் பயனும் இல்லை. அப்படிக் காப்பாற்றிய அந்தத் தலைவருக்கு நாம் அத்தனை பேரும், சென்னைவாழ் மக்களும் இந்தச் சபையின் மூலமாக (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி தெரிவித்து, கரம்கூப்பி அவரை வணங்கக் காத்திருக்கிறோம் என்பதை மட்டும் அவருக்கு நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே இவ்வளவு பெரிய ஏரி உடைந்தும், அந்தப் பிரச்சினையிலே இருந்தது. இன்னுமொன்று நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். சென்னையிலே, இங்கே நான் படிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். காரணம் அத்தனை பணிகளும் தினமும் உங்கள் கண்களில் படுகின்றன. காலையிலே போட்ட சாலையிலே, மாலையிலே போக முடியவில்லை. என்ன காரணம்? குழி தோண்டுகிறார்கள். முதலமைச்சர்கூடச் சொன்னார். என்னைய்யா, ஊர் முழுக்கக் குழி வெட்டுகிறான் உன் ஆள் என்று (சிரிப்பு) வெட்டுறானே தவிர, அதற்கு முன்பெல்லாம் வெட்டுவான, இப்போது வெட்டிவிட்டு மூடுகிறான். அது ஒரு புதுமை. இது ஒரு புதுமைதான். ஏற்கெனவே வெட்டுவான், மூடமாட்டான்; இப்போது வெட்டுறான், உடனே மூடுகிறான். அது ஒரு பெரிய கலை; ஆகையினால் இந்த மாநிலப் புரவியிலும் வேலை நடக்கிறது

இங்கே இருக்கிற எம்.எல்.ஏ.-க்களிலே அதிகச் சிரமம் கொடுக்கக் கூடியவர்கள், நம்முடைய சென்னை நகரத்தினுடைய சட்ட மன்ற உறுப்பினர்கள், அதுவும் மேயர் தம்பி ஸ்டாலின் விடமாட்டார். ஓரளவுக்கு அது சீராக, செம்மையாக நடக்க நல்ல சிறப்பான

அதிகாரிகள் அங்கே பணியாற்றுகின்ற காரணத்தினால்தான் அது நடக்கிறது.

கடிகாரத்தை அருமை நண்பர், அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி காட்டிவிட்டார். இருந்தாலும் நான் உங்களிடத்திலே சொல்வது, இந்தத் துறைக்கு அளித்திருக்கிற பொறுப்பு, மக்களுக்கு இருக்க இடம், நடக்க பாதை, குடிக்கத் தண்ணீர், பார்க்க வெளிச்சம், படிக்கப் பள்ளி, உடல் காக்க சுகாதாரம் இவை மிக முக்கியமானவை என்பதை உணர்ந்து, நம்முடைய தலைவர் அவர்கள் இந்தப் பொறுப்பை என்னிடத்திலே ஒப்படைத்திருக்கிறார். அதற்காக நான் விரும்பிக் கேட்டுக்கொள்வது, உள்ளாட்சி அமைப்புகளிலே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், எதிரே வீற்றிருக்கின்ற நீங்கள், இங்கே இருக்கின்ற சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள், இத்தனை ஒத்துழைப்பிற்கும் தயாராக இருந்தவர்கள், அத்தனைபேரையும் கரங்கூப்பி அழைத்து, வாருங்கள் பணியாற்றுவோம், *அன்பு வணக்க வாழ்த்துக்கூறி, அவர்களுக்கெல்லாம் நல்ல பணியைச் செய்து, இன்னும் மேலும் பணிகள் வளரப் பாடுபடுவோம் என்று உங்களை அழைத்து, தலைவர் கலைஞர் வாழ்க என்று வாழ்த்தி உறுப்பினர்கள் தந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்கள் அத்தனையையும் திரும்பப்பெற்று, இந்த மூன்று மானியக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு வேண்டிக் கேட்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம் (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அமைச்சரவர்கள் தன்னுடைய உரையை நிறைவு செய்தபோது, அனைவருக்கும் ** செலுத்துகிறேன் என்று சொன்னார். அந்த ** என்கிற சொல்லை, அவையின் நடவடிக்கைக் குறிப்பிலே இருந்து எடுத்துவிட வேண்டும். வணக்கம், அன்பு வணக்கம் என்கின்ற வகையிலே மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அன்பு வணக்கம் என்று அது மாற்றப்படுகிறது.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே அமைச்சர் ஏறத்தாழ இரண்டு மணி நேரத்திற்கு மேல் போதிய விளக்கம் தந்துவிட்ட காரணத்தால், மேலும் விளக்கங்கள் கேட்பதற்கு யாருக்கும் அனுமதி இல்லை.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 27-ஊரக வளர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 27 - ஊரக வளர்ச்சி, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.



"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1225,73,04,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 48– குடிநீர் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 48 — குடிநீர் வழங்கல், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ் இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. கே. தங்கமணி.



**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

பிற்பகல் 5-05

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.218,13,53,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### கோரிக்கை எண் 49 — நகராட்சி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 49—நகராட்சி நிருவாகம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பபெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ ரூ.502,64,14,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 13-5-1999, வியாழக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5-06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

161. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மாவட்ட ஊராட்சித் தலைவரை உறுப்பினர்கள் இடைக் கேள்வி கேட்பது) விதிகளை வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 14-7-1998 ஆம் நாளிட்ட 145 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

162. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காவது திருத்த) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1998) 15-07-1998 ஆம் தேதி முதல் அமலுக்குக் கொண்டு வருவது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 14-7-1998 ஆம் நாளிட்ட 146 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

163. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 28/1998) 15-07-1998 ஆம் தேதி முதல் அமலுக்குக் கொண்டு வருவது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 14-7-1998 ஆம் நாளிட்ட 147 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

[1999 மே 12

164. 1998 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்தல் (நியமனக் குழுவினைத் தவிர) விதிகளை வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 14-7-1998 ஆம் நாளிட்ட 148 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]

165. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம சபை (கூட்டம் கூட்டுதல், நடத்துதல் மற்றும் கோரம் (Quorum), விதிகளை வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 17-7-1998 ஆம் நாளிட்ட 150 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

166. 1998 ஆம் ஆண்டு மாவட்ட ஊராட்சியின் நிலைக் குழுக்கள் (உறுப்பினர்கள் தேர்தல்) விதிகளை வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 20-7-1998 ஆம் நாளிட்ட 151 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

167. சேலம் மாவட்டம், ஏற்காடு பேரூராட்சியை ஊராட்சியாக மாற்றியமைத்து ஏற்காடு வளர்ச்சி வட்டாரமாகவும், ஏற்காடு ஊராட்சி ஒன்றியக் குழுவாகவும் அமைப்பதற்கான முன்னறிவிப்பு வெளியிட்டது குறித்து, ஊரக வளர்ச்சித் துறையின் 21-9-1998 ஆம் நாளிட்ட 201 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

168. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல் — ஒப்பந்தங்களின் முறை மற்றும் நிபந்தனைகள்) விதிகளை வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 31-12-1998 ஆம் நாளிட்ட 286 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

169. சேலம் மாவட்டம், ஏற்காடு பேரூராட்சியை ஊராட்சியாக மாற்றியமைத்து ஏற்காடு வளர்ச்சி வட்டாரமாகவும், ஏற்காடு ஊராட்சி



1999 மே 12]

ஒன்றியக் குழுவாகவும் அமைத்தல் குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 25-1-1999 ஆம் நாளிட்ட 17 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

170. ஏற்காடு ஊராட்சி ஒன்றியக் குழு 1-2-1999 முதல் அமைக்கப்படுவது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 25-1-1999 ஆம் நாளிட்ட 18 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

171. ஊரக வளர்ச்சித் துறையினால் வெளியிடப்பட்ட 11(2) ஆர்டிஎல்/1439 (6-13)/95 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 25-1-1999 ஆம் நாளிட்ட 19 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

172. ஏற்காடு ஊராட்சி ஒன்றியத்தின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை கவனிக்க தனி அலுவலர் நியமனம் செய்வது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 25-1-1999 ஆம் நாளிட்ட 20 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

173. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட ஊராட்சிகள் (ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்) விதிகளை வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 1-2-1999 ஆம் நாளிட்ட 23 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

174. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சித் தலைவரை உறுப்பினர்கள் இடைக்கேள்வி கேட்பது) விதிகளை வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 15-2-1999 ஆம் நாளிட்ட 33 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

[1999 மே 12

175. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மாவட்ட ஊராட்சிகளின் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள், கிராம ஊராட்சிகளின் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்களின் பதவி விலகலை ஏற்றுக்கொள்ளுதல்) விதிகளை வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 22-2-1999 ஆம் நாளிட்ட 35 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

176. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தனியார் கழிவு நீர் உறிஞ்சு குழிகளையும் சாக்கடை தொட்டிகளையும் துப்பரவு செய்தல்) விதிகளை வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின 22-2-1999 ஆம் நாளிட்ட 36 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

224. மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு உரிமைகளும், பொறுப்புகளும் மற்றும் அதிகாரங்களும் வழங்குவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து சமர்ப்பித்த உயர்நிலைக் குழுவின் அறிக்கை. (தமிழ்)

225. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்குவது குறித்து உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள்மீது அரசு எடுத்துள்ள முடிவுகள் குறித்த அறிக்கை. (தமிழ்)

226. மானியக் கோரிக்கை எண் 27 - ஊரக வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

227. ஊரக வளர்ச்சி பற்றி செயலாக்க வரவு-செலவுத் திட்டம் 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

228. மானியக் கோரிக்கை எண் 48 - குடிநீர் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)



1999 மே 12]

229. மானியக் கோரிக்கை எண் 49-மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

230. மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் செயல்திறன் பற்றிய குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

231. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பணிகள் பற்றிய கையேடு (தமிழ்)

232. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள் குழுவின் அறிக்கை, 1998-99.

233. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்தேழாவது அறிக்கை, 1998-99.

234. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்தெட்டாவது அறிக்கை, 1998-99.

235. பொது நிறுவனங்களின் குழுவின் எண்பத்தொன்பதாவது அறிக்கை, 1998-99.

236. அரசு உறுதிமொழிக் குழுவின் எட்டாவது அறிக்கை, 1998-99.

237. அரசு உறுதிமொழிக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை, 1998-99.

## இணைப்புகள்

## இணைப்பு-I

*[14 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]*

## ஊரக வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண் - 27

## 1999-2000

### I. முன்னுரை

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 3.68 கோடி மக்கள் ஊரகப் பகுதியில்
வாழ்கின்றனர். இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 65.95
சதவீதமாகும். தற்போது தமிழ்நாட்டில் 66,631 குடியிருப்புகள் அடங்கிய
12,617 கிராம ஊராட்சிகள் உள்ளன. எனவே கிராம வளர்ச்சியே ஊரக
வளர்ச்சிக்கான திட்டங்கள் வகுப்பதிலும், மாநில அரசின் திட்டப்
பணிகளிலும் முதன்மை பெற்று வந்துள்ளது. ஆகவேதான் ஊரக
வளர்ச்சித் துறைக்கு ஆண்டுதோறும் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு
அதிகரித்துக்கொண்டே வந்துள்ளது. உதாரணமாக, 1987-88-ல் வரவு-
செலவுத் திட்டத்தில் ரூ. 203.24 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. 1997-98
ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 789.70 கோடியாக
அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு (1998-99) வரவு-செலவுத் திட்டத்தில்
இதை ரூ. 1184.08 கோடியாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1999-
2000 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு
ரூ. 1224.19 கோடிகளாக மேலும் உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கை வழியில் நடக்கும் இந்த
அரசு, அவர் கூறியபடி "மக்களாட்சியில், கிராம ஊராட்சிகளே ஓர்
அடித்தள அமைப்பு என்றும், அவைகளை நாம் வலுவுள்ள
அமைப்புகளாக மாற்றினால்தான் நமது ஜனநாயக அமைப்பு
உறுதியானதாகவும் உயிர்த் துடிப்புள்ளதாகவும் இருக்கும்" என்பதை
உணர்ந்து செயல்படுகிறது. எனவேதான் 1997-98 ஆம் ஆண்டு மாநில
அரசு புதிதாக கிராமங்களின் முழுமையான வளர்ச்சிக்கு
அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டத்தை "அண்ணா மறுமலர்ச்சி
திட்டம்" என பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரையே இந்த

[1999 மே 12

அரசு சூட்டியது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒரு கிராம ஊராட்சியை ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்து அக்கிராமத்தை மாதிரி கிராமமாக உருவாக்க அனைத்து அடிப்படை வசதிகளையும் தேவைகளையும் நிறைவு செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கிறது.

## அ. உள்ளாட்சி அமைப்பு முறைகள்

2. 1992 ஆம் ஆண்டு 73-வது மற்றும் 74-வது இந்திய அரசியல் அமைப்பு திருத்தச் சட்டம் கடந்த 1993-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதி முதல் அமலுக்கு கொண்டு வரப்பட்டது. இச்சட்டத் திருத்தத்திற்கேற்ப 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டது. இதன்மூலம் 12,584 கிராம ஊராட்சிகள் அடிமட்டத்திலும், இடைநிலையில் 384 ஊராட்சி ஒன்றியங்களும், மாவட்ட அளவில் மேல்மட்ட அமைப்பாக 28 மாவட்ட ஊராட்சிகளும் கொண்ட மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் உருவாக்கப்பட்டன. மொத்த உறுப்பினர்கள் மற்றும் தலைவர் பதவியிடங்களில் 1/3 சதவீதம் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினர்களுக்கு அவர்களின் மக்கள் தொகை அடிப்படையிலும் இடஒதுக்கீடு செய்ய வழிவகை செய்யப்பட்டது. மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அக்டோபர் 1996-ல் ஒரே நேரத்தில் வெற்றிகரமாக தேர்தல் நடத்தி முடித்து, சுமார் 1,16,747 தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் நோக்கங்களைப் பூர்த்தி செய்கின்ற வகையில் உரிய பொறுப்புகளில் அமர்த்தப்பட்டனர். ஊராட்சி அமைப்புகள் சுதந்திரமாக, முழுமையான சுயஆட்சி அமைப்புகளாகச் செயல்பட மாநில அரசு மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி மற்றும் நிருவாக அதிகாரங்களை முழுமையாகப் பகிர்ந்தளித்தது. மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் ஒவ்வொரு நிலையிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தெளிவாகப் பொறுப்புகளை வரையறை செய்து ஜனநாயக அமைப்பில் மக்களின் பங்கினை உறுதிப்படுத்தும் நோக்குடன் கிராமச் சபையை தீவிரமாக செயல் முறைக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டத்தில் 9 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய ஏற்காடு ஊராட்சி ஒன்றியம் 1-2-1999 முதல் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மேலும் 23 பேரூராட்சிகள் 1-4-1999-லிருந்து கிராம ஊராட்சிகளாக மாற்றம் செய்து செயல்பட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. பெருமாத்தூர் என்ற புதிய கிராம ஊராட்சி



1999 மே 12]

கடலூர் மாவட்டத்தில் உருவாக்கப்பட்டு 22-1-1999-லிருந்து செயல்பட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் மாநிலத்தில் உள்ள மொத்த கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை 12,617 ஆகவும் ஊராட்சி ஒன்றியங்கள் 385 ஆகவும் உயர்ந்துள்ளது.

## ஆ. ஊரக வளர்ச்சி

3. கிராமப்புற உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல், அடிப்படை வசதிகள் மற்றும் தேவைகளை நிறைவு செய்தல், சுயவேலை வாய்ப்புத்திட்டம் மற்றும் ஊதியத்திற்கான வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களின் நிலையை உயர்த்துதல், இதன் மூலம் ஊரகப் பகுதிகளில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் போன்றவையே ஊரக வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் மாநில அரசின் முதன்மையான வினைமுறைத் திறனாக உள்ளது. இந்நோக்கத்தை நிறைவேற்றுகின்ற வகையில் பல்வேறு முக்கிய மாநில மற்றும் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் மூலமாகச் செயல்படுத்தப்படுகிறது. 1973-74 ஆம் ஆண்டு 171 இலட்சம் மக்கள் (57.4 சதவீதம்) வறுமைக்கோட்டிற்குகீழ் இருந்தனர். வளர்ச்சிப்பணிகளை தொய்வின்றியும், சிறப்பாகவும் நடைமுறைபடுத்தியதின் பயனாக, 1993-94-ம் ஆண்டில் இது 121 இலட்சமாகக் குறைந்துள்ளது. (32.48 சதவீதம்) மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்களைச் சிறப்பாகவும் தீவிரமாகவும் மாநில அரசு செயல்படுத்தியதின் பயனாகவும் இணைந்து மாநில அரசின் திட்டங்களைச் செயல்படுத்தியதின் காரணமாகவும், வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது.

4. வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மக்கட்தொகை ஒவ்வொரு ஆண்டும் குறைந்து வருவதன் விளைவாக மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்காக மத்திய அரசால் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடும் மிகவும் குறைந்து வருகிறது. 1998-99 வரை வறுமைக் கோட்டின் கீழ்வாழும் மக்கட்தொகையின் அடிப்படையில் சிறப்புத் தேர்வுக்குழு வழிமுறைபடி, மத்திய அரசின் பல்வேறு திட்டங்களான, "ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்", ஊதியத்திற்கான வேலைவாய்ப்பு திட்டங்களான "ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்", "மில்லியன்

கிணறு திட்டம்", "வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டம்", "இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்" போன்றவற்றுக்கான நிதி ஒதுக்கீடு முடிவு செய்யப்பட்டது. மாதிரிக் கணக்கெடுப்புப் புள்ளிவிவரத்தில் கொடுக்கப்பட்ட வறுமைக்கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், சிறப்புத் தேர்வுக்குழு வழிமுறைபடி, 1987-88 ஆம் ஆண்டில் ஒதுக்கீட்டு சதவீதம் 7.062% என்றும் 1993-94-ல் 5.546 சதவீதம் என்றும் கணக்கிடப்பட்டது. ஆனால் தேசிய மாதிரிக் கணக்கெடுப்பின்படி வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களின் புள்ளிவிவரங்கள் அடிப்படையில் நிபுணர்குழு வழிமுறைப்படி 4.987 சதவீதம் என ஒதுக்கீடு சதவீதம் முடிவு செய்யப்பட்டது. தற்போது மத்திய அரசு நிபுணர்கள் குழு வழிமுறையின்படி ஒதுக்கீடு செய்வது என்ற அடிப்படையில் 4.987 சதவீத ஒதுக்கீடே 1998-99 முதல் மாநில அரசுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் என்று முடிவு செய்துள்ளது. இதன் விளைவாக மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு சென்ற வருட ஒதுக்கீட்டைவிட 29 சதவீதம் குறைவாகவே கிடைத்தது. உதாரணமாக ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1997-98 ஆம் ஆண்டில் கிடைத்த ஒதுக்கீடான ரூ.155.39 கோடி ரூ.103.40 கோடியாகக் குறைந்துள்ளது. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.95.37 கோடியிலிருந்து ரூ.74.01 கோடியாகக் குறைக்கப்பட்டது. அதேபோல் மில்லியன் கிணறு திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு ரூ.31.40 கோடியிலிருந்து ரூ.22.39 கோடியாகக் குறைக்கப்பட்டது. மாநில அரசு, நடப்பு ஆண்டுக்கான எல்லா மத்திய நிதி உதவித் திட்டங்களையும் சிறப்பான முறையில் செயல்படுத்தி, பெரும்பாலான பணிகளை முடித்து, அனைத்துத் திட்டங்களின் கீழும் 2-வது தவணைக்கான மானியங்களையும் உரிய காலத்தில் பெற்றுள்ளது. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் 1998-99-ல் ஒதுக்கப்பட்ட நிதிக்கும் மேல் ரூ.9.738 கோடி மாநில அரசு வலியுறுத்தி பிப்ரவரி 1999-ல் பெறப்பட்டு மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டிற்கான இந்த மாற்றப்பட்ட வழிமுறை குறித்து, மாநில அரசு ஆட்சேபம் தெரிவித்து, சிறப்பாகத் திட்டங்களைச் செயல்படுத்தும் மாநில அரசினைத் தண்டிக்கும் வகையில் நிதி ஒதுக்கீட்டினைக் குறைப்பது நல்லதல்ல எனத் தெரிவித்து, முந்தைய ஆண்டுகளின் நிதி ஒதுக்கீட்டு அளவுக்குக் குறையாமலாவது நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென மாண்புமிகு முதல்வர் கோரியுள்ளதால் மாநில அரசின் இந்தக் கோரிக்கையை தேசிய வளர்ச்சிக் குழுமத்தில் உள்ள குழு பரிசீலிக்க உள்ளது.



5. மாநில அரசின் புதிய திட்டங்களான அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தையும், மக்களின் பங்கேற்பு மற்றும் தேவைகளின் அடிப்படையில் செயல்படுத்தும் புதுமையான நமக்கு நாமே திட்டத்தையும், சிறப்பாக நமக்கு நாமே திட்டத்தின்கீழ், மக்களின் தேவைகளின் அடிப்படையிலும், ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்பின் அடிப்படையிலும், செயல்படுத்தப்படுவதால் அவர்களுடைய ஆதரவு இத்திட்டத்திற்குக் கணிசமாகக் கிடைத்துள்ளது. இதனால் 1999-2000 ஆம் ஆண்டில் இருந்து இந்தத் திட்டத்தினை நகர்புறப் பகுதிகளில் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. வளர்ச்சி நிருவாகத்தின் வெளிப்படையான நிருவாகத்தை நடைமுறைப்படுத்த, கிராமச் சபையை வலுப்படுத்தவும், அதன் மூலம் சமூகத் தணிக்கைக்கு வழிவகுக்கவும் மாநில அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. மத்திய அரசின் திட்டமான சுவர்ண ஜெயந்தி ஸ்வரோஜ்கர் யோஜனாவில் ஒருங்கிணைக்கப்பட்ட வறுமை ஒழிப்பு மற்றும் சுயவேலை வாய்ப்புத் திட்டங்களை தொழில் அடிப்படையிலான தொகுப்பு மற்றும் குழு மூலமாகச் செயல்படுத்துதல் தொழில் நுட்பம், பயிற்சி மற்றும் திறமை மேம்பாடு, கட்டமைப்பு விற்பனை ஒருங்கிணைப்பு, போன்றவற்றை ஒருங்கிணைப்பதன் மூலமாகவும் புதிய முறையில் மாநில அரசு செயல்படுத்த உள்ளது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "ஸமக்ரா அவாஸ் யோஜனா" "ஜவகர் கிராம ஸமிர்த்தி யோஜனா", மற்றும் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் போன்ற திட்டங்களும் புதிய உத்வேகத்துடன் செயல்படுத்தப்பட உள்ளன.

6. உள்ளாட்சி அமைப்புகள், அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும், பராமரிக்கவும், வறுமையை ஒழிக்கவும், கிராம அளவில் கூட்டமைப்புகளை ஏற்படுத்தவும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளன.

பின்வரும் குறிக்கோள்களை நிறைவு செய்வது இந்தத் துறையின் தலையாயக் கடமையாகக் கொண்டு தன் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்:

* எல்லா கிராமங்களுக்கும் நபர் ஒருவருக்கு சராசரியாக 40 லிட்டருக்குக் குறையாமல் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்;
* எல்லா கிராமங்களிலும் தெரு விளக்குகள் பொருத்துதல்;

[1999 மே 12

* அனைத்துக் கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகளை போடுதல்;

* 1000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களை இணைக்கும் சாலைகளையும், பேருந்து ஓடக்கூடிய சாலைகளையும் தார் சாலைகளாக மாற்றுதல்;

* வீடில்லாத அனைத்து ஏழை மக்களுக்கும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்துதல்;

* தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, அரசால் நடத்தப்படும் பள்ளிகளையும் சேர்த்து எல்லா ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குக் கழிப்பிட வசதி, குடிநீர் மற்றும் வசதிகளுடன் உரிய கட்டட வசதிகள் செய்தல்;

* உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள், பொது விநியோக மையக் கட்டடங்கள், பால்வாடி விநியோக சங்கக் கட்டடங்கள் சமுதாயக் கூடங்கள் போன்றவற்றைப் படிப்படியாகக் கட்டித் தருதல்;

* சத்துணவு மையங்களுக்குக் கட்டட வசதிகள் செய்து தருதல்;

* கிராமத் தெருக்கள், மற்றும் சந்துகளை செங்கல், உடைகற்கள், சிமெண்ட் கான்கிரீட் அல்லது தார் தளமாகவோ மாற்றி மேம்பாடு செய்து அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தல்;

* சுகாதார துணை மையங்கள், ஆரம்ப சுகாதார மையங்கள், கால்நடை மருந்தகங்கள், தேவை மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப படிப்படியாகக் கட்டித் தருதல்,

* கிராம சுகாதாரத் திட்டத்தைத் தீவிரமாக விளம்பரப்படுத்தி கிராமங்களில் எல்லா வீடுகளிலும், 100 சதவீதம் பூர்த்தி செய்யும் வகையில் வீட்டுக் கழிவறைகள் கட்டுவதற்கும், சமுதாயக் கழிப்பறைகள் கட்டுவதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுத்தல்;

* நீர்ப்பிடிப்பு ஆதாரங்களான ஊரணிகள், குளம், குட்டைகள், சிறுபாசனக் குளங்கள் ஆகியவற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்.



1999 மே 12]

## II. முக்கிய கொள்கை தன்முயற்சிகளும், சாதனைகளும்

### 7. உள்ளாட்சித் தேர்தல்

அடிமட்ட அளவிலான மக்களாட்சியை வலுப்படுத்தவும், உள்ளாட்சி நிருவாகத்தை ஊக்குவிக்கவும், அனைத்து மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தப்பட்டது. இதன்மூலம் 1,16,747 மக்கள் பிரதிநிதிகள் நிருவாகப் பொறுப்பை ஏற்றனர். இதில் 38,391 பெண்களும், 24,148 தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைசாதி வகுப்பைச் சார்ந்தவர்களும் மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### 8. பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் பகிர்ந்தளித்தல்

*ஊராட்சி நிருவாக அமைப்புகள் உண்மையான தன்னாட்சி நிருவாக அமைப்புகளாகச் செயல்படவும், பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதியை கிராமங்களில் நிலைநாட்டவும் உரிய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான பொறுப்புகளையும், நிர்வாக அதிகாரங்களையும், அதற்கேற்ப நிதி ஆதாரங்களையும் ஒருங்கே மாநில அரசு பகிர்ந்தளித்துள்ளது.

*மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் ஒவ்வொரு ஊராட்சி அமைப்புகளும் செயல்படுத்த வேண்டிய கடமைகள், பொறுப்புகள், தெளிவாக வரையறுத்து வழங்கப்பட்டுள்ளன. மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகள் ஆற்ற வேண்டிய கட்டாயக் கடமைகள், விருப்பக் கடமைகள், ஆய்வுப் பணிகள் மற்றும் அரசு சார்பில் நிறைவேற்ற ஒப்படைக்கப்பட்ட கடமைகள் ஆகியவற்றின் அடிப்படையில் தெளிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவு 243-ஜியில் கூறப்பட்டுள்ள 29 பொருள்களில் 26 பொருள்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில அரசு ஏற்கெனவே அதிகாரம் வழங்கியுள்ளது. கிராம ஊராட்சிகளுக்கு 112 இனங்களிலும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு 100 இனங்களிலும், மாவட்ட ஊராட்சிகளுக்கு 154 இனங்களிலும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக மேலும் அதிகாரங்கள் வழங்குவது குறித்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு

11-1-1999-ல் அறிக்கையை சமர்ப்பித்தது. உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை சட்டமன்றப் பேரவை முன்பு தற்போது வைக்கப்பட்டுள்ளது.

## 9. நிருவாக அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல்

* உள்ளாட்சி அமைப்புகள் திறமையாகச் செயல்பட நிருவாக சுதந்திரமும் போதிய நிருவாக அதிகாரங்களும் அவசியம். இந்த அடிப்படையில்தான் அரசு பல்வேறு தன்முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

* கிராம ஊராட்சிகள் தன்னிச்சையாகவும் சிறப்பாகவும் செயல்பட பல்வேறு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

* கிராம ஊராட்சித் தலைவர் கிராம ஊராட்சியின் நிருவாக அலுவலராகப் பொறுப்பாக்கப்பட்டுள்ளார். காசோலைகளில் கையெழுத்திடும் அதிகாரமும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. ரூ.2000 வரை மதிப்பீடு இல்லாமல் அவசர வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளவும் ரூ.2000/-க்கு மேற்பட்ட செலவினங்கள் உரிய மதிப்பீடுகளுடனும் ஊராட்சி ஒப்புதலுடனும் மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது. சில்லறைச் செலவினத்திற்காக ரூ.500/- வரை முன்பணமாக ஊராட்சி நிதியில் இருந்து ஊராட்சித் தலைவர் பெற்று பயன்படுத்திக்கொள்ளலாம்.

* கிராம ஊராட்சிகள் கிராமக் குடிநீர் ஆதாரங்களான கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உள்ளூரிலேயே உரிய வழிமுறைகளைப் பின்பற்றி வெளி அலுவலர் அனுமதியின்றி பழுதினை சரிசெய்து கொள்ளலாம். இருப்பினும் பழுது நீக்கச் செலவு ஒரு வருடத்திற்கு ஒரு விசைப்பம்புக்கு ரூ.7,000/-க்கு மேற்படுமானால், சம்பந்தப்பட்ட உதவி நிருவாகப் பொறியாளர் (விசைப்பம்பு பராமரிப்பு) அவர்களின் ஒப்புதலிப்பு அவசியம்.

* தெரு விளக்கு மற்றும் மின்சார உபகரணங்களை கிராம ஊராட்சிகள் உள்ளூர்களிலேயே வெளி அலுவலர் அனுமதியின்றி வாங்கி பராமரித்துக்கொள்ளலாம்.



* கிராம ஊராட்சிகள் அவர்களது பொது நிதி உபரியிலிருந்து செயல்படுத்தப்படும் வேலைகளுக்கு உரிய வழிமுறைகளைப் பின்பற்றி சிமெண்ட், இரும்பு ஆகியவற்றை உள்ளூரிலேயே வாங்கிப் பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

* கிராம ஊராட்சிகள், ஊராட்சி உபரி நிதியிலிருந்து ரூ. 1 இலட்சம் வரை மதிப்பீடு உள்ள பணிகளை அனுமதித்து செயல்படுத்துவதற்கும் தனியார் பட்டயப் பொறியாளர்களைப் பயன்படுத்திக்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

* கிராம ஊராட்சிப் பகுதிகளில் உள்ள மனைப்பிரிவு மற்றும் கட்டட வரைபடங்கள் மற்றும் கட்டடம் கட்ட அனுமதியளிக்கும் அதிகாரங்கள் கிராம ஊராட்சிக்கு அளிக்கப்பட்டுள்ளது.

* அனைத்துத் தனி நபர் பயன் பெறும் திட்டங்களான வறுமை ஒழிப்புத் திட்டம் போன்றவற்றில் பயனாளிகளை கிராம சபை முன்னிலையில் தேர்வு செய்வதற்கு கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

* கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சிகள் பொது நிதியிலிருந்து செயல்படுத்தும் வேலைகளின் மதிப்பீடு முறையே 1 இலட்சம், 5 இலட்சம், 10 இலட்சம் ரூபாய் வரை இருக்குமானால் அப்பணிகளுக்கு மேல் அலுவலர் அனுமதியின்றி தாங்களே நிருவாக அனுமதி அளித்து வேலைகளை எடுத்துச் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

* மாநில அரசு, கிராமச் சபை நடத்துவதை முனைப்பாக செயல்படுத்தி ஊராட்சி நிருவாகத்தில் தெளிவு மறைவற்ற வெளிப்படையான, மக்களுக்குப் பொறுப்புள்ள நிருவாகத்திற்கு வழி வகுத்துள்ளது. ஊராட்சிகள் சட்டம், மாநில அரசாணை திருத்தப்பட்டு, கிராமச் சபைக் கூட்டத்திற்கான குறைந்தபட்ச உறுப்பினர்கள் வருகை 1/3 பங்காக இருந்ததை 1/10 ஆகக் குறைக்கப்பட்டு வருடந்தோறும் குறைந்தது நான்கு கூட்டங்களாவது நடத்தவேண்டுமென்று உத்தரவிடப் பட்டுள்ளது. கிராமச் சபைக் கூட்டத்தில் சமூகத்தணிக்கை நடைபெறுவதை ஒரு முக்கிய கடமையாக வலியுறுத்தப்பட்டுள்ளது. தற்போது இந்திய அரசு இந்த

ஆண்டினை கிராமச்சபை ஆண்டு என்று அறிவித்திருப்பதால் கிராமச்சபைக் கூட்டங்கள் நடைபெறுவதும் அதன்மூலம் சமூகத்தணிக்கை நடைபெறுவதும் மேலும் முக்கியத்துவப் பெறுவதுடன், இப்பணி வரும் நாட்களில் தீவிரப்படுத்தப்படும்.

## 10. நிதி ஆதாரங்கள் பகிர்ந்தளிப்பு

* மாநில நிதிக்குழுவின் பரிந்துரைப்படி தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஆதாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு இருக்கின்றன. மாநில நிதிக்குழு அமைக்கப்பட்டு, அதன் அறிக்கையை, பரிந்துரையுடன் 1996 ஆம் வருடம் நவம்பர் 21 ஆம் தேதி அரசுக்குச் சமர்ப்பித்தது. இப்பரிந்துரைகள் 1-4-1997 முதல் ஐந்து ஆண்டுகளுக்குப் பொருந்தும். இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் நிதி ஆதாரங்கள் உள்ளாட்சி நிறுவனங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

* சேர்மம் 'அ'-விலிருந்து ஒதுக்கப்பட்ட வருவாயாக உள்ளூர் வரி, முத்திரைக் கட்டண மேல்வரி, சிறுகனிமங்களின் மீதான உரிமைக் கட்டணம் முழுமையாக கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படுகின்றன. உள்ளூர் தல மேல்வரி முழுமையாக ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்கப்படுகிறது. கேளிக்கை வரி கிராம ஊராட்சிக்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் 70:30 என்ற விகிதத்தில் பிரித்து வழங்கப்படுகின்றன.

* சேர்மம் 'ஆ'-வின்கீழ் ஒவ்வொரு வரியினையும் பிரித்துக் கொடுப்பதற்குப் பதிலாக மொத்த அரசு வரி வருவாயில் உள்ளாட்சிகளுக்குக் குறிப்பிட்ட சதவீதம் பிரித்து வழங்கவேண்டும் என்றும் இதனால் நிதி ஆதாரங்களில் பொதுவாக ஏற்படும் மாற்றங்களில் வருவாய் அதிகரிக்கும்போது அதற்கேற்ப உள்ளாட்சிகளும் பயனடையும் என்ற மாநில நிதிக்குழுவின் பரிந்துரையினை ஏற்று அரசு நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளிக்கிறது. இதனால் ஊராட்சிகள் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய வரிவருவாயின் பங்கினை ஓரளவு முன்கூட்டியே தெரிந்துகொள்ள முடியும் 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளில் அரசின் மொத்த வரிவருவாயில் 8 சதவீதம் உள்ளாட்சி மன்றங்களுக்குப் பிரித்து வழங்கப்பட்டது.



இதன் காரணமாக உள்ளாட்சி நிறுவனங்களுக்கு 1997-1998-ஆம் ஆண்டு வழங்கப்பட்ட ரூ.662 கோடிகளில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.369.28 கோடி ஒதுக்கப்பட்டன 1998-1999-ஆம் ஆண்டு பகிர்ந்தளிக்கப்பட்ட ரூ.839 கோடியில் ரூ.467.91 கோடி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டன. ஆனால் 1998-1999-ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் வரி வசூல் குறைவினால் இந்த ஒதுக்கீடு ரூ.453.73 கோடியாகக் குறைக்கப்பட்டது. 1997-98-ஆம் ஆண்டு இந்த ஒதுக்கீடு மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கிடையே முறையே கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சிகளுக்கு 45:45:10 என்ற விகிதத்தில் பிரித்து வழங்கப்பட்டது. 1998-99-ஆம் ஆண்டு இந்த விகிதாசாரம் 47:45:8 என்று மாற்றப்பட்டது. 1999-2000-ஆம் ஆண்டில் அரசு வரிவருவாயில் 8 சதவீதப் பங்குத் தொகையாக ரூ.816.25 கோடி ஒதுக்கீடு செய்ய உள்ளது. அதில் ரூ.455.06 கோடி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைக்கும்.

* மாநில நிதிக்குழுவின் பரிந்துரைக்கேற்ப, மாநில அரசின் நிதி பகிர்ந்தளிப்பில் 15 சதவீதம் சமன்பாடு மற்றும் ஊக்க நிதியாக ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இவை ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி நிறுவனங்களிடையே 60:40 என்ற விகிதத்தில் பிரித்து வழங்கப்படுகிறது. 1997-98-ல் ஊரக உள்ளாட்சிகளுக்கு சமன்பாடு மற்றும் ஊக்க நிதியாக ரூ.59.45 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டன. இது 1998-99-ஆம் ஆண்டு ரூ.73.22 கோடியாக அதிகரிக்கப்பட்டது. இந்த நிதியினைக் கொண்டு ஊராட்சிகள் தங்கள் சுயநிதி ஆதாரங்களைத் திரட்டி வருவாயினைப் பெருக்குவதற்கு ஊக்கத்தொகையாகவும், உள்ளாட்சி அமைப்புகளில் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிதி ஆதாரத்தில் ஊராட்சிகளிடையே உள்ள இடைவெளியை சமன்செய்ய மானியமாகவும் வழங்கப்படுகிறது. 1997-98-ஆம் ஆண்டு ஊராட்சிகளின் ரூ.1 வரிவசூலுக்கு ரூ.2 ஊக்கநிதியாக உயர்த்தி வழங்கப்பட்டது. இதன் காரணமாக வீட்டு வரிவசூல் 1997-1998-ஆம் ஆண்டிற்கான ரூ.10 கோடியிலிருந்து 1998-1999-ஆம் ஆண்டு ரூ.14 கோடியாக உயர்ந்தது. இதேபோன்று இந்த நிதியினைக்கொண்டு நலிவடைந்த ஊராட்சிகள் செலுத்த வேண்டிய குடிநீர்க் கட்டணங்கள்,

மின்சாரக் கட்டணங்கள் ஆகியவற்றைச் செலுத்த ஊராட்சிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது. மலைப்பகுதி, கடற்கரைப் பகுதி, அடிக்கடி இயற்கைச் சீற்றங்களால் பாதிப்புக்கு உள்ளாகும் கிராமங்களில் உள்ள கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், பராமரிக்கவும், நகர்ப்புறப் பகுதியை ஒட்டியுள்ள கிராமங்கள் மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த கிராமங்களில் சாலைகள், விளக்குகள், தெருக்கள், குடிநீர் வசதி ஆகியவற்றை அபிவிருத்தி செய்யவும் இந்த நிதி பயன்படுத்தப்படுகிறது.

* கிராம ஊராட்சிகளில் தொழில் வரி மற்றும் அதன் வசூல் முறைகளை நெறிமுறைபடுத்த தமிழ்நாடு தொழில் வரிவிதிப்பு மற்றும் வசூல் முறையில் அரசு 1-10-1998 முதல் சில சீர்திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளது. இதன் அடிப்படையில் கிராம ஊராட்சிகள் காலமுறையிலான தொழில் வரிவிதிப்பு மற்றும் வசூல் வழிமுறைகள் எளிமையாக்கப்பட்டுள்ளது.

* மத்திய நிதிக்குழு மானியமாக 1996-97-ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் ரூ. 7183 கோடி மூன்று ஊரக உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் மூலதன பணிகளை எடுத்துச் செய்வதற்காக வழங்கப்படுகிறது. இது கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு முறையே ரூ. 1863 கோடி, ரூ. 4620 கோடி, ரூ. 700 கோடி எனப் பிரித்து வழங்கப்படுகிறது. 1996-97, 1997-98-ஆம் ஆண்டுகளில் முறையே மொத்தமாக 14,333 மற்றும் 20,753 பணிகள் இந்த நிதியில் எடுக்கப்பட்டுள்ளன.

* உள்ளாட்சி மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளான கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு, உறுப்பினர்கள் தங்களது கடமையைச் செய்வதற்கு அவர்களது உள்ளாட்சி மன்றப் பகுதி மற்றும் வெளியிடங்களில் பயணம் மேற்கொண்டால் நிரந்தரப் பயணப்படி, பயணப்படி, தினப்படி, மற்றும் கூட்டங்களில் கலந்துக்கொள்ள அமர்வுப்படி போன்றவை வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.



## குடிநீர் வழங்கல் :

11. கடந்த காலங்களில் கிராமப்புறப் பெண்கள் மண் பாண்டங்களில் வெகுதொலைவு சென்று தலைச்சுமையாகக் குடிநீர் கொண்டுவரும் நிலைமாறி அனைத்து ஊரகப் பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும் என்ற மாண்புமிகு முதல்வரின் சீரிய கொள்கை முடிவின் காரணமாக, கிராமங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு அவற்றில் கைப் பம்புகள் பொருத்தப்பட்டன. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர உயர அரசும் அதற்கேற்ப குடிநீர்த் திட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்தி, விசைப்பம்புகள் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தெரு முனைகளில் குழாய்கள் மூலம் வழங்கும் முறையை தீவிரமாக அமல்படுத்தி வருகிறது. இதனால் கிராமப்புறப் பெண்களின் சிரமங்கள் பெருமளவில் குறைக்கப்பட்டன.

இந்த அரசு, ஊரகக் குடிநீர் வழங்கும் திட்டத்தில் மேலும் ஒரு சாதனையாக பாதுகாக்கப்பட்ட குடிநீரை மக்களின் வீடுகளின் உள்ளேயே கிடைக்குமாறு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இதனால் நகர்ப்புற மக்கள் பெறும் அனைத்து வசதிகளையும் கிராமப்புற மக்களும் நுகர வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசாணை எண்.260, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 9-12-1998-ன்படி ரூ.1000 காப்புத் தொகையாகவும், மாதாந்தரக் குடிநீர்க் கட்டணமாக ரூ.30-ம் ஊராட்சிக்குச் செலுத்த முன்வருவோரின் வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு தரும் அதிகாரத்தை முதன் முறையாக அனுமதித்து கிராம ஊராட்சிகளுக்கு இந்த அதிகாரத்தை வழங்கியுள்ளது. இவ்வாறு பெறப்படும் தொகையைக் குடிநீர் வழங்குவதற்கும், அதற்கான பராமரிப்புப் பணிகளுக்கும் செலவிடும் பொருட்டும், ஒரு தனிக் கணக்கினைத் தொடங்கிப் பராமரிக்க வேண்டுமென கிராம ஊராட்சிகளுக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தற்போது தமிழ் நாட்டிலுள்ள கிராமப் பகுதிகளில் மொத்தம் 1,64,881 கைப் பம்புகள் மற்றும் 32,412 விசைப்பம்புகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

## ஊரகச் சாலைகள் :

12. நமது மாநிலத்தின் ஊரகக் கட்டமைப்பு வசதிகளில் கிராமச் சாலைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில் உள்ள மொத்த சாலைகளில் ஏறக்குறைய 48 சதவிகித சாலைகள் ஊரக உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்படுகின்றன. இந்தியாவிலேயே தமிழ்நாடு

சாலை அடர்த்தியில் இரண்டாவது இடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இருந்தபோதிலும் இன்னும் 896 குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் போடவேண்டியுள்ளது. இதில் 91 குடியிருப்புகள், ஆயிரத்திற்கும் அதிகமாக மக்கள் தொகை கொண்டவையாகும். இக் குடியிருப்புகளுக்காக 170.70 கி.மீ. நீளத்திற்கு இணைப்புச் சாலைகள் போட வேண்டியுள்ளது. மேலும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்படும் மொத்த சாலைகளில் சுமார் 40 சதவிகிதச் சாலைகள் தளமாக்கப்படாத சாலைகளாக உள்ளன. நாம் கடுமையான முயற்சிகள் எடுத்துள்ளபோதிலும் 1,192.35 கி.மீ. நீளமுள்ள 598 பேருந்து செல்லும் சாலைகளையும், 512 கிராமங்களை இணைக்கும் 860.40 கி.மீ. நீள சாலைகளையும் இதுவரை தார்ச் சாலைகளாக மாற்ற இயலவில்லை.

13. எனவே, நீண்ட காலம் உழைக்கக்கூடிய வகையிலும் தரமான சாலைகளை அமைக்கவும், ஊரகப் பகுதிகளில் உள்ள உள்ளாட்சிச் சாலைகளை வசதியான தார்ச் சாலைகளாக மாற்றவும் மிக முக்கியமான கொள்கை முடிவை இந்த அரசு 1989ஆம் ஆண்டில் எடுத்தது. பின்னர் இம்முயற்சியானது 1996ஆம் ஆண்டு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 16,784 கி.மீ. நீள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்றும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்பொழுது குண்டும் குழியுமாகவும், சேறும் சகதியுமாக உள்ள தெருக்களையும், சந்துகளையும் நல்ல தரமான தளம் அமைத்து மேம்படுத்தப்படவேண்டுமென்று உணர்ந்து அதற்கான உறுதியான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகின்றன. கிராமத் தெருக்களையும், சந்துகளையும், கான்கிரீட்/செங்கல்/உடைகருங்கல் தளமுடையவையாகவோ அல்லது தார்ச் சாலையாக மாற்றுவதற்குமான மற்றுமொரு கொள்கை முடிவை இந்த அரசு எடுத்துள்ளது.

14. 1999-2000-ஆம் ஆண்டிலிருந்து நெடுஞ்சாலைத் துறையால் ஊரகச் சாலைகள் அமைப்பதில் பின்பற்றப்படும் அளவு மற்றும் தர நிர்ணயச் கட்டுப்பாடுகளை, ஊரக உள்ளாட்சி அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் சாலைப் பணிகளிலும் பின்பற்ற கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இம்முயற்சியானது சாலைகளின் தரம் மேம்படவும், சாலைகள் நீடித்து உழைக்கவும் வழிவகுக்கும். அதாவது சாதாரண கனமுடைய சாலைகள் அமைத்தல் என்ற நிலையிலிருந்து மாறி இனி இறுகிய கனமுடைய சாலைகளமைக்கும் இந்த அணுகுமுறை மாற்றத்தால் கூடுதல் செலவினம் ஏற்பட்டாலும் கிராம மக்கள் நல்ல பயனைப் பெறுவர்.



**தெரு விளக்குகள் :**

15. தெரு விளக்குகள், ஊரகப் பகுதிகளின் அடிப்படைத் தேவைகளில் முக்கியமான ஒன்றாகும். தற்பொழுது ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் உள்ள 2,23,539 தெரு விளக்குகள் உட்பட மொத்தம் 9,68,247 தெரு விளக்குகள் ஊரகப் பகுதிகளில் உள்ளன. 1995-96 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி தெரு விளக்குகள் இல்லாத குடியிருப்புகளில் விளக்குகள் அமைப்பதற்கும், மின் கம்பங்களுக்கிடையிலான தூரத்தைச் சீரமைத்து தெரு விளக்கு வசதி செய்து தருவதற்கும், 50,000 தெரு விளக்குகள் தேவையென கண்டறியப்பட்டது. ஊரகப் பகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 67,191 தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதில் 1997-98 ஆம் ஆண்டு 17,334 தெரு விளக்குகள் அமைப்பதற்கு ரூ.7.28 கோடி நிதியும், 1998-99 ஆம் ஆண்டு 25,714 தெரு விளக்குகள் அமைப்பதற்கு ரூ.12.60 கோடி நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது தவிர 1996-97 ஆம் ஆண்டு முதல் 1998-99 ஆம் ஆண்டு வரை பல்வேறு திட்டங்களின் நிதியை ஒருமுகப்படுத்தி 24,743 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டன. மேலும் 1998-99 ஆம் ஆண்டு நகரக பகுதிகளை ஒட்டி அமைந்துள்ள ஊரகப் பகுதிகளில் உள்ள 10,000 சாதாரணத் தெரு விளக்குகளை சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றுவதற்கு சுமார் ரூ. 2.65 கோடி. நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

## 16. இதர வளர்ச்சித் திட்ட முன்முயற்சிகள்:

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் 13-5-1996ஆம் நாளில் அதற்கு முந்தைய ஆண்டுகளில் எடுக்கப்பட்டு பல்வேறு பிரச்சினைகளால் முடிக்கப் பெறாமல் நிலுவையில் இருந்த 1,14,143 பணிகளை முடிக்கும் கூடுதல் சுமை இந்த அரசுக்கு ஏற்பட்டது. மாநில அரசின் கடுமையான முயற்சியின் காரணமாக நீதிமன்ற வழக்குகள் சம்பந்தப்பட்ட 202 பணிகளைத் தவிர இதரப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பெற்றுள்ளன.

* வளர்ச்சிப் பணிகளில் புதிய தன்முயற்சியாக அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல முன்னோடி வளர்ச்சித் திட்டங்களை இந்த அரசு 1997-1998-ல் அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது.

* மத்திய அரசின் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு 1993-94 ஆம் ஆண்டிலிருந்த ரூ.384.88 கோடியிலிருந்து 1998-99 ஆம் ஆண்டில் ரூ.677.07 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. மாற்றியமைக்கப்பட்ட வறுமைக் கோட்டிற்கான குறியீடு காரணமாக 1997-98 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1998-99 ஒதுக்கீட்டில் 29 சதவிகிதம் குறைவு ஏற்பட்டபோதிலும் கடந்த ஐந்தாண்டுகளில் நிதி ஒதுக்கீடு இரட்டிப்பானதும் அதை உரிய காலத்தில் பயன்படுத்தி முழுமையாக மத்திய நிதியை உரிய காலத்தில் பெற்று பயன்படுத்தியதும் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

* மாநில திட்ட ஒதுக்கீடு 1993-94-லிருந்த ரூ.50 கோடியிலிருந்து 1998-99 ஆம் ஆண்டு ரூ. 206.25 கோடியாக இந்த அரசால் உயர்த்தப்பட்டது.

* கூடுதலாக ஒதுக்கீடு மற்றும் அதிக எண்ணிக்கையிலான நிலுவைப் பணிகள் இருந்தபொழுதிலும், 1996-1997 ஆம் ஆண்டு முதல் 1998-99 ஆம் ஆண்டு வரை 13-5-1996-ல் அதற்கு முந்தைய ஆண்டுப் பணிகளில் நிலுவையாக இருந்த 1,14,141 (இரண்டு பணிகள் நீக்கப்பட்டன) பணிகளையும் சேர்த்து எடுக்கப்பட்ட 7,02,057 பணிகளில் 50.301 பணிகள் தவிர இதரப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1998-1999 ஆம் ஆண்டில் மட்டும் 1,87,474 பணிகள் எடுக்கப்பட்டு, அதில் 1,48,752 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தற்போது 38,722 பணிகள் மட்டும் இந்த ஆண்டு பணிகளில் நிலுவையில் உள்ளன. கடந்த 10 ஆண்டுகளில் ஒவ்வோர் ஆண்டிலும் எடுக்கப்பட்டு முடிக்கபெறாமல், அடுத்த நிதி ஆண்டுக்கு நிலுவையாகக் கொண்டு செல்லப்படும் பணிகளின் எண்ணிக்கை இதுவே மிகக் குறைவானது என்பது குறிப்பிடத்தக்கது.

* முழுமையான கிராம வளர்ச்சிக்கு வழிகோலும் புதுமையான திட்டமான அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கடந்த 2 ஆண்டுகளில் 424 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு, ரூ.353.20 கோடி செலவில், 52,943 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

* 1997-98 ஆம் ஆண்டு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நமக்கு நாமே திட்டமானது, மக்களின் தேவைகள் அடிப்படையில் மக்கள் பங்கேற்புடன் செயல்படுத்தப்படும் ஊரக வளர்ச்சி



திட்டமாகும். இத்திட்டம் மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ. 47.71 கோடி மதிப்பீட்டில் ரூ. 19.26 கோடி மக்களின் பங்களிப்புடன் பல்வேறு சமுதாயப் பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1997-98ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்படும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ரூ. 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வொதுக்கீடானது 1998-ஆம் ஆண்டு ரூ. 35 இலட்சமாக உயர்த்தப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 141 கோடி மதிப்பீட்டில் 12,045 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களில் வாழும் ஏழைகளுக்கு, தீப்பிடிக்காத வீடுகள் கட்டித்தருவது என்பது மாநில அரசின் இலட்சியக் கொள்கையாகும். கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் அதாவது 1996-97 ஆம் ஆண்டு முதல் 1998-99 ஆம் ஆண்டு வரை சுமார் 1,74,266 தீப்பிடிக்காத கான்கிரீட் வீடுகள் கிராமப்புறங்களில் வாழும் ஏழைகளுக்காகக் கட்டித்தரப்பட்டுள்ளன.

இவ்வீடுகளுக்கு கான்கிரீட் கூரை போடுவதற்காக வீடு ஒன்றிற்கு மாநில அரசால் வழங்கப்பட்ட ரூ.7000-ம் 1998-99 முதல் ரூ.12,000 ஆக உயர்த்தப்பட்டது.

தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டித் தருவது தொடர்ந்து மாநில அரசின் முதன்மைப் பணியாக உள்ளது. அந்த வகையில் கடந்த மூன்று ஆண்டுகளில் 1,362 பள்ளிக் கட்டடங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன.

அனைத்துக் கிராம ஊராட்சிகளுக்கும் சொந்த அலுவலகக் கட்டடம் கட்டித்தரப்படும் என அரசு ஏற்கனவே அறிவித்திருந்தது. கடந்த மூன்று ஆண்டுகளில் 690 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. இன்றைய நிலவரப்படி 35 கிராம ஊராட்சிகளைத் தவிர இதர ஊராட்சிகள் அனைத்தும் சொந்த அலுவலகக் கட்டடங்களில் இயங்குகின்றன.

* பொது விநியோகத் திட்டத்திற்காக கட்டட வசதி ஏற்படுத்தித் தருவது, நேரடியாக மக்களுக்கு நன்மை பயக்கும் என்ற காரணத்தினால், கடந்த மூன்று ஆண்டுகளில் 4,957 நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன.
* கடந்த மூன்று ஆண்டுகளில் அங்கன்வாடி மற்றும் சத்துணவு மையங்களுக்குத் தேவையான வசதிகளை அளிக்கும் பொருட்டு, 1,153 மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன.
* மத்திய அரசால் செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்புத் திட்டங்களின் முக்கியமான திட்டமான, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் 5,21,401 குடும்பங்களுக்கு ரூ.195.68 கோடி மானியத்துடன் கூடிய மொத்தக் கடனாக ரூ.379.56 கோடி வழங்கப்பட்டுள்ளது.
* கடந்த மூன்று ஆண்டுகளில் ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 5,882 குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றிற்கு ரூ.14.69 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. ஊரக இளைஞர் சுயவேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின்கீழ், ரூ.18.42 கோடி செலவில் 39,176 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
* மில்லியன் கிணறுகள் திட்டத்தின்கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில் 14,266 சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இலவச பாசனக் கிணறுகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன.
* ஊரக சுகாதாரம் என்பது, மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிக்கும் முக்கிய அளவுகோலாகும். எனவே, இத்திட்டம் குறித்து தகவல், கல்வி மற்றும் தொடர்பு குறித்த முனைப்பு இயக்கங்கள், இராமநாதபுரம், ஈரோடு, தர்மபுரி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் ரூ.146.69 இலட்சம் செலவில் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
* இது தவிர, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் டேனிடா திட்ட நிதியுதவியுடன் சிறப்பு ஊரக சுகாதாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதுவரை, இத்திட்டத்தின் கீழ் 3,609 தனி நபர் கழிவறைகளும், 157 பொதுக் கழிவறைகளும்



மற்றும் 46 குடிநீர் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. மாவட்ட நிருவாகத்தால் எடுக்கப்பட்ட முயற்சிகளாலும், மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வின் காரணமாகவும் கடலூர் மாவட்டத்தில் உள்ள கீரப்பாளையம் என்ற கிராமத்தில் அனைவருக்கும் நவீன சுகாதாரக் கழிப்பிட வசதி ஏற்படுத்தித் தரப்பட்டு, இது ஒரு மாதிரிக் கிராமமாகத் திகழ்கிறது.

* நிலையான குடிநீர் விநியோகத்திற்கும், வேளாண் வளர்ச்சிக்கும் மழை நீரை வீணாக்காமல் சேமிப்பதும், நிலத்தடி நீர் ஆதாரத்தை மேம்படுத்துவதும் மிகவும் அவசியமாகும். எனவே, 1998-99 ஆம் ஆண்டு நீர்நிலை ஆதாரங்களை மேம்படுத்துவது ஒரு முக்கியமான பணியாக மேற்கொள்ளப்பட்டது. இதற்கென ஒரு கிராம ஊராட்சியில் ரூ.1 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டு, ரூ.138.95 கோடி செலவில் 12,129 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.3.57 கோடி செலவில் 36,179 நீர் ஆதாரப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## 17. நிருவாகச் சீர்திருத்தங்கள்

* மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் செயல்பாட்டிற்கு வந்தவுடன், முன்பிருந்த 58 கோட்ட வளர்ச்சி அலுவலர் பணியிடங்களும் கலைக்கப்பட்டு, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் உதவி இயக்குநர் (தணிக்கை) என மாவட்ட அளவிலான பணியிடங்களாக மாற்றியமைக்கப்பட்டன.
* வட்டார அளவில் பணிபுரிந்த துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், கிராம ஊராட்சிகளின் தணிக்கையாளர்களாக அமர்த்தப்பட்டனர்.
* வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலரின் பதவிகள், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) எனவும், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) எனவும் திருத்தி அமைக்கப்பட்டு, அவர்களின் பொறுப்புகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன.
* வேலை உறுதியளிப்புத் திட்டச் செயல்பாட்டினை செம்மைப்படுத்துவதற்காக ஒவ்வொரு மாவட்ட ஊரக

வளர்ச்சி முகமையிலும் ஒரு கூடுதல் உதவித் திட்ட அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டது.

* முன்பு, ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட ஊர்நல அலுவலர் பணியிடங்கள, 21-11-1998 முதல் மீண்டும் களப் பணியிடங்களாக மாற்றப்பட்டு, களப் பணியாளர்களாக ஊர்நல அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். ஒவ்வோர் ஊர்நல அலுவலரும் 8 முதல் 10 கிராம ஊராட்சிகளின் பணிகளைக் கண்காணிக்கும் பொருட்டு, 1,048 முதல்நிலை ஊர்நல அலுவலர்களும், 1,020 இரண்டாம் நிலை ஊர்நல அலுவலர்களும் மீண்டும் களப்பணியில் பணியமர்த்தப்பட்டனர்.

* அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்த செய்திகள் மக்களைச் சென்றடையவும், பிரச்சார இயக்கங்களைத் தீவிரப்படுத்தவும் மக்கள் நலப் பணியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் குறைந்தது ஒரு மக்கள் நலப் பணியாளராவது நியமிக்கப்பட்டனர். இவர்களுக்கு மாத மதிப்பூதியமாக ரூ. 500/- வழங்கப்பட்டது. 1999-2000 நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உரையில், இம்மதிப்பூதியம் ரூ.750/- ஆக உயர்த்தப்படும் என மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவித்துள்ளார். இன்றைய நிலவரப்படி 8,008 ஆண் மக்கள் நலப் பணியாளர்களும், 5,483 பெண் மக்கள்நலப் பணியாளர்களும் 15-9-1997 முதல் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

* தொழில்நுட்பப் பிரிவை வலுப்படுத்தவும், வளர்ச்சிப் பணிகள் மீதான மேற்பார்வையைத் தீவிரப்படுத்தவும் 15 கூடுதல் உதவி செயற்பொறியாளர் பணியிடங்கள் 1997-98 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டன. மேலும், ஊரக வளர்ச்சித் துறைக்கென தனியாக ஊரகப் பொறியியல் பிரிவும் தோற்றுவிக்கப்பட்டது. இதில், மாநில அளவில், ஒரு கண்காணிப்புப் பொறியாளர் பணியிடமும், ஒவ்வொரு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலும் ஒரு செயற்பொறியாளர் பணியிடமும், கோட்ட அளவில் உதவி செயற்பொறியாளர் பணியிடமும், வட்டார அளவில் உதவிப் பொறியாளர் (ஊரக வளர்ச்சி) மற்றும் ஒன்றியப் பொறியாளர்



பணியிடங்களும், அதற்குக் கீழ் நிலையில், ஒன்றியப் பணி மேற்பார்வையாளர் மற்றும் இதர களப் பணியிடங்களும் அடங்கும்.

* ஊராட்சி ஒன்றியங்களில் அதிகரித்துவரும் வேலைப் பளுவிற்கு ஈடு கொடுக்கும் வகையில், ஒன்றியங்களில் ஏற்கெனவே இருந்த ஒன்றியப் பொறியாளர்களுடன், கூடுதலாக ஓர் உதவிப் பொறியாளர் நிலையில் ஒரு பணியிடம் தோற்றுவிக்கப்பட்டது. இதனால், மொத்தமுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும், கோட்ட அலுவலகங்களிலும் கூடுதலாக 400 உதவிப் பொறியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

* ஊரக வளர்ச்சித் துறையில் முதன்முறையாக தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம், 198 உதவிப் பொறியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி அமர்த்த உத்திரவிடப்பட்டுள்ளது.

* மேலும், ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிந்த 547 சாலை ஆய்வாளர்கள், 672 பணி மேற்பார்வையாளர்கள், 204 உதவிப பொறியாளர்கள் மற்றும் 28 உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோர் அவர்களுடைய விருப்பத்தின்பேரில் பிற துறைகளிலிருந்து நிரந்தரமாக ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

* ஊராட்சி ஒன்றியங்களில், அலுவலர் மற்றும் களப் பணியாளர்கள் மேற்கொள்ளும் ஆய்வுகளின் எண்ணிக்கையை யும் தரத்தையும் மேம்படுத்த, கூடுதலாக ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு புதிய கூடுதல் ஈப்பு வழங்கப்பட்டது. 1997-98 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு இரண்டாவது ஈப்பாக 182 புதிய ஈப்புகளும், 1998-99 ஆம் ஆண்டு 173 புதிய ஈப்புகளும் வழங்கப்பட்டன. இது தவிர, 1997-98 ஆம் ஆண்டு 181 கழிவு செய்யப்பட்ட ஊர்திகளுக்குப் பதிலாக புதிய ஈப்புகள் வழங்கப்பட்டன. மேலும், 68 உதவி செயற் பொறியாளர்களுக்கு 68 ஈப்புகளும், 17 செயற்பொறி யாளர்களுக்கு 17 புதிய ஈப்புகளும் வழங்கப்பட்டன.

* நிருவாக மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகளின், நிருவாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி, ஒப்பந்தப்புள்ளி ஏற்பு ஆகியவற்றுக்கான நிதி ஒப்பளிப்பு அதிகார வரம்பு 31-12-1998 ஆம் நாளிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது. இதனால்,

தொழில்நுட்ப அனுமதி வழங்கும் அதிகாரம், ஒன்றியப் பொறியாளர்களுக்கு ரூ.30,000-லிருந்து ரூ.50,000 ஆகவும், உதவி செயற்பொறியாளர்களுக்கு ரூ.2.0 இலட்சத்திலிருந்து ரூ.3.0 இலட்சமாகவும், செயற்பொறியாளருக்கு ரூ.3.0 இலட்சத்திலிருந்து ரூ.5.0 இலட்சமாகவும், கண்காணிப்பு பொறியாளருக்கு ரூ.5.0 இலட்சத்துக்கு மேற்பட்டும் உயர்த்தி ஆணையிடப்பட்டது.

## 18. சட்டம் சம்பந்தமான தன் முயற்சிகள்

* குடிநீர் வழங்கும் பணியை கிராம ஊராட்சியின் கடமைகளில் ஒன்றாகச் சேர்க்கும் வகையில், 1994 தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. கிராம சபைக்கு அதிகாரமளித்தல், கிராம சபையின் குறைந்த பட்ச உறுப்பினர்கள் வருகை எண்ணிக்கையை மூன்றில் ஒரு பங்காக இருந்ததை பத்தில் ஒரு பங்காகக் குறைத்தல் ஆகியவை 1998-99 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட முக்கியமான திருத்தங்கள் ஆகும். இதைப்போல், 1998-99-இல் இயற்றிய முக்கிய திருத்தங்களில் ஒன்று கிராம ஊராட்சியின் மூலம் தொழில் வரி விதித்தல் ஆகும்.

* கடந்த மூன்றாண்டுகளாக 10 முறைக்கு மேல் 25 பிரிவுகளுக்குத் திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. தற்போதைய சட்டமன்றப் பேரவைத் தொடரில் மேலும் ஐந்து திருத்தங்கள் வரவிருக்கின்றன. இந்த அனைத்துத் திருத்தங்களும் அனுமதித்துச் செயல்முறைபடுத்தப்பட்டால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் முழுமை பெற்று, கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சிறப்பான செயல்பாட்டுக்கு வழிவகுக்கும்.

* இதுவரை சட்ட அங்கீகாரத்தின்கீழ் 25 விதிகளுக்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. இது தவிர, 84 விதிகள் அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளன. இவ்விதிகள் அனைத்தும் உருவாக்கப்பட்ட பின் பஞ்சாயத்து ராஜ் நிருவாகம் குறித்து விரிவான நடைமுறை நூல் வெளியிடப்படும்.

* கிராம ஊராட்சிக் கணக்குகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. சுமார் 61-க்கும் மேலான படிவங்களில் இருந்த பதிவேடுகள் தீவிரமாக மறுபரிசீலனை செய்யப்பட்டு, 31 படிவங்களாகவும் பதிவேடுகளாகவும் குறைக்கப்பட்டுள்ளன.



# III. திட்டப் பணிகள்

19. மத்திய அரசு மற்றும் மாநில அரசின் திட்டங்களை ஊரக வளர்ச்சித் துறை செயல்படுத்தி வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டிற்கு நான்கு பகுதி-2 திட்டங்களைச் செயல்படுத்த உள்ளது.

## புதிய திட்டங்கள்

### *1. தஞ்சை மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் கணிப்பொறி மயமாக்கும் முன்னோடித் திட்டம்*

ஒவ்வோர் ஒன்றியத்திலும் அடிப்படை வசதிகளைப் பேணுவதற்கு, சாலைகள், பள்ளிக்கட்டடங்கள், தொலைக்காட்சி அறைகள், கைப்பம்புகள், விசைப்பம்புகள், தெரு விளக்குகள், சிறு பாசனக் குளங்கள், குட்டைகள் போன்ற விவரங்களைச் சேகரிப்பது அவசியமாகிறது. அது மட்டுமல்லாமல், மேற்குறிப்பிட்டுள்ள அடிப்படை வசதிகளும் பராமரிப்பு பற்றிய விவரங்களும் கணக்கெடுக்கப்படவேண்டும். அதேபோல், ஒவ்வோர் ஒன்றியத்திலும் உள்ள வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள குடும்ப விவரங்களைச் சேகரித்துப் பராமரித்தல், அவர்களுக்கு உதவியளிக்க ஏதுவாக இருக்கும். எனவே, ஒவ்வோர் ஒன்றியத்திலும் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், ஊரக வளர்ச்சித் திட்டங்களை சிறப்பாகக் கண்காணிக்கவும் ஒன்றிய அளவில் கணிப்பொறி வசதிகளை ஏற்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஆரம்ப கட்டமாக, தஞ்சை மாவட்டத்திலுள்ள அனைத்து ஒன்றியங்களிலும் கணிப்பொறி வசதித் திட்டத்தை ரூபாய் 19.50 இலட்சம் செலவில் ஒரு முன்னோடித் திட்டமாக அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை 1999-2000 ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *2. ஊரக வளர்ச்சி இயக்கத்தில் கணிப்பொறி நிருவாகத் தகவல் பரிமாற்றம்*

தற்போதுள்ள தகவல் பரிமாற்றம் முறையை நெறிப்படுத்தி மேம்படுத்தவும், மாவட்டங்களிலிருந்து தகவல்களை அவ்வப்போது பெறவும், மத்திய மாநில அரசுத் திட்டங்களின் புள்ளி விவரங்களைப் பெற்று அதன் செயல்பாட்டைக் கண்காணிக்கவும் ஊரக வளர்ச்சி இயக்கத்தில் நிருவாகத் தகவல் பராமரிப்பு வசதிகளை ஏற்படுத்த அரசு 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.5.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

[1999 மே 12

*3. மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குப் பயிற்சி அளித்தல்*

அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் அடிப்படையில், 1994 ஆம் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டதன் மூலம் உள்ளாட்சி அமைப்புகள் இன்றியமையாத அமைப்பாக புத்துணர்வு பெற்று, புதிய மூன்றடுக்கு உள்ளாட்சி முறை அமலுக்கு வந்தது. இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளுக்கும் பொறுப்புகளுக்கும் ஏற்ப, கிராம ஊராட்சிகளுக்கு நேரடியாக ஒதுக்கப்படும் நிதியும் கணிசமாக உள்ளது. இதன் விளைவாக உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு நிருவாகத்தினால் ஏற்படும் சவால்களைச் சமாளிக்கவும், தேவையான தகவல்களைப் பெற்று சிறப்பாக நிருவகிக்கவும் பயிற்சியை மக்கள் பிரதிநிதிகளுக்கு அளிப்பது அவசியமாகிறது. எனவே, தேர்ந்தெடுககப்பட்ட மூன்றடுக்கு உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு தீவிரமான பயிற்சி அளிக்க அரசு முடிவெடுத்துள்ளது. இதற்காக 1999-2000-ஆம் ஆண்டிற்கு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*4. திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியக் கட்டடத்தை சீர் செய்தல்*

ஆலங்குளம் ஒன்றிய அலுவலகக் கட்டடம் 38 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது. தற்போது அலுவலகக் கூரை முழுவதுமாகப் பழுதடைந்ததன் விளைவாக மழைக்காலங்களில் கட்டடம் ஒழுகும் நிலையில் உள்ளது. எனவே அரசு, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியக் கட்டடத்தை மேம்பாடு செய்ய முடிவு செய்து, 1999-2000-ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.7.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.



1999 மே 12]

**பிற திட்டங்கள்:-**

1999-2000 ஆம் ஆண்டிற்கான மாநில அரசின் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடும், மத்திய அரசின் திட்டங்களுக்கான மாநில அரசின் பங்கு விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

## XXX. இதர திட்டப் பணிகள்

### அட்டவணை

### திட்டப் பணிகளும் ஒதுக்கீடுகளும்

| திட்டங்கள் | 1997-98 கணக்குகள் | 1998-99 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 1998-99 திருத்த மதிப்பீடு | 1999-2000 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 57,75.00 | 58,75.00 | 82,25.00 | 82,25.00 |
| நமக்கு நாமே திட்டம் | 1,15.00 | 10,00.00 | 10,00.00 | 10,00.00 |
| அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் | 51,86.23 | 7500.00 | 7500.00 | 7500.00 |
| ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.* | 20.34.54 | 27,92.00 | 28,14.18 | 27,39.56 |
| சுயவேலை வாய்ப்பில் கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி.* | 55.65 | 97.04 | 97.40 | 97.03 |
| சுயவேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தில் கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சியளித்தல்.* | 1,79.34 | 2,48.62 | 2,48.14 | 2,48.62 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதிகளில் மகளிர் மற்றும் சிறார் நல மேம்பாடு * | 2,75.55 | 2,45.83 | 3,88.46 | 3,84.67 |
| தகவல், கல்வி, தகவல் தொடர்பு மற்றும் குழந்தைகள் காப்பு நடவடிக்கைகள்.* | 5.75 | 22.00 | 22.00 | 22.00 |
| கங்கா கல்யாண் திட்டத்தைச் செயல்படுத்துதல்.* | 35.22 | 64.49 | 64.49 | 64.49 |
| மாவட்டங்களில் பரவலாக்கப்பட்ட திட்டம் தயாரிக்க உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதியுதவி. | 34,53.84 | 35,00.00 | 35,00.00 | 35,00.00 |
| ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியங்கள்- பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரை | 66,05.06 | 71,83.00 | 71,83.00 | 71,83.00 |
| இந்திரா நினைவு குடியிருப்பு | 10,75.88 | 308.00 | 2,50.00 | 2,84.12 |
| பத்து இலட்சம் கிணறுகள் திட்டம்.* | 2,31.10 | 2,61.68 | 1,86.36 | 1,86.36 |
| ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு அடிப்படை வசதிகளுக்காக மூலதனத் திட்டங்கள் | 3,30.00 | 25,00.00 | 25,00.00 | 5000.00 |
| ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் | 46,28.79 | 55,77.46 | 50,61.14 | 48,89.98 |
| சீரமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் (மாநில அரசின் பங்கான 20 ரூபாயை குறிக்கின்றது) | 54,20.21 | 47,60.00 | 47,60.00 | 47,60.00 |



| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| சிறப்புக் கூறுகள் திட்டம் வேலை வாய்ப்பிற்காக கிராம இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல்.* | 17.81 | 61.00 | 60.89 | 61.00 |
| சிறப்புக் கூறுகள் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக மேம்பாட்டுத் திட்டம்.* | 4,69.70 | 19,46.50 | 19,45.50 | 18,01.14 |
| சிறப்புக் கூறுகள் திட்டம், பத்து இலட்சம் கிணறுகள் தோண்டும் திட்டம்.* | 4,66.29 | 5,23.37 | 3,73.44 | 3,73.44 |
| சிறப்புக் கூறுகள் திட்டம், இந்திரா மகளிர் நலத்திட்டம் | 41,69.24 | 17,70.00 | 11,34.00 | 16,35.59 |
| ஊரக வளர்ச்சித் திட்டக் கண்காணிப்புப் பிரிவுகள் | 1.30 | 2.07 | 2.24 | [illegible] |
| மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் | — | 23.74 | 22.54 | 19.49 |
| வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்காக வட்டார நிருவாகத்தை வளப்படுத்துதல் | 2,04.40 | 2,37.64 | 2,50.02 | 2,38.31 |
| சுயவேலைவாய்ப்பில் கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி.* | 1,11.30 | 1,94.08 | 1,94.79 | 1,94.05 |
| ஊரக வளர்ச்சித் திட்டக் கண்காணிப்புப் பிரிவுகள் | 2.60 | 4.13 | 4.47 | 5.23 |
| தகவல், கல்வி மற்றும் தகவல் பரிமாற்றம் குறித்து திட்டமிடல் | 33.93 | 1,35.71 | 0.01 | 0.01 |
| மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் | - | 47.47 | 45.08 | 38.98 |

[1999 மே 12

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்காக வட்டார நிருவாகத்தைப் பலப்படுத்துதல் | 4,08.80 | 4,75.28 | 5,00.03 | 4,76.62 |
| ஊரக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு புதிதாக வீடுகள் கட்டுதல் | — | 0.01 | 0.01 | 0.01 |
| உள்ளாட்சி மன்றங்களுக்கு சமூகக் கல்வி மானியங்கள் | 28.65 | 34.00 | 34.00 | 34.00 |
| ஊராட்சி நிறுவனங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கான பயிற்சித் திட்டம் | — | — | — | 10 00 |
| டேனிடா நிதியுதவியுடன் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த கிராமப் பகுதித் துப்புரவு மற்றும் குடிநீர் வழங்கல் திட்டங்கள் | 1,54.40 | 14,09.94 | 4,02.17 | 11,77.38 |
| ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படுத்தப்படும் குடிநீர் வழங்கல் திட்டங்கள் | 93.74 | 1,00.01 | 1,00.01 | 1,00.01 |
| மக்கள் நலப் பணியாளர்கள் | 3,40.69 | 8,09.46 | 8,09.46 | 8,09.46 |
| மத்திய ஊரக துப்புரவுத் திட்டம் | 6,05.57 | 6,79.56 | 7,25.56 | 7,25.56 |
| ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சமுதாய வானொலிப் பெட்டிகள் வழங்குதல். | 5.23 | 5.23 | 5.23 | 5.23 |
| கல்ராயன் மலைகளில் பழங்குடியினர் வளர்ச்சி வட்டாரத்தை ஏற்படுத்துதல் | 16.12 | 18.23 | 23.25 | 22.68 |



1999 மே 12]

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| ஜவ்வாது, ஏலகிரி மலைகளில் பழங்குடியினர் வளர்ச்சி வட்டாரத்தை ஏற்படுத்துதல் | 14.31 | 16.97 | 21.92 | 20.80 |
| ஊரகப் பகுதிகளில் உள்ள சிறுபாசன ஏரிகளை மேம்படுத்துவதற்கான சிறப்புத் திட்டம் | 2,35.00 | 2,35.00 | 2,35.00 | 0.01 |
| விரிவாக்க அதிகாரிகள் (அதிந)-ஊரக வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துதல் | 3,21.9[illegible] | 4,13.84 | 4,50.72 | 4,69.79 |
| ஆதிதிராவிடர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கான திட்டம் | 33,77.00 | 30,29.09 | 33,59.[illegible] | 46,92.00 |
| இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு வீடு கட்டும் திட்டம் | 559.00 | 525.14 | 583.14 | 828.00 |
| மொத்தம் ... | **47044.17** | **54632.59** | **55382.16** | **55326.24** |

*இதில் குறிப்பிட்ட திட்டங்கள் அனைத்தும் மைய அரசின் சொர்ண ஜெயந்தி கிராம் சுவ ரோஜ்கர் யோஜனா என்ற திட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கப்பட்டன.

## IV. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

24. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டமாக 1997-98-ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் ஆண்டுதோறும் ஒவ்வோர் ஊரக சட்டமன்றத் தொகுதியிலும் ஓர் ஊராட்சி தேர்ந்தெடுக்கப்பட்டு அனைத்து அடிப்படைத் தேவைகளையும், வசதிகளையும் ஏற்படுத்தி ஒரு 'மாதிரிக் கிராமம்' உருவாக்கப்படுகிறது. அடிப்படைத் தேவைகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர், தெரு விளக்கு, சாலைகள், கல்வி, உள்கட்டமைப்பு வசதி, சுகாதாரம், வடிகால் வசதிகள், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு, வீட்டுவசதிகள் போன்றவைகளுக்கு இத்திட்டத்தில் முக்கியத்துவம் தரப்படுகிறது. மக்களிடையே விழிப்புணர்வை

ஏற்படுத்தவும், வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றவும் மற்றும் மனித வள மேம்பாட்டுக்கும் பல்வேறு முகாம்கள் மற்றும் தீவிரப் பிரச்சாரங்கள் மாவட்ட நிருவாகம் மூலம் நடத்தப்படுகின்றன. இத்தகைய பிரச்சார உத்திகள் சமூக உள்கட்டமைப்பை மேம்படுத்த, திட்டப் பணிகள் முடிவடைந்த பிறகும் நிரந்தர வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. சுகாதார முகாம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், மகளிர் மன்றங்கள் அமைத்தல், விவசாயிகள் அமைப்பை ஏற்படுத்துதல், அறிவொளிப் பிரச்சாரம், பார்வையின்மை தடுப்பு முகாம், மதுவிலக்குப் பிரச்சாரம், சிறுசேமிப்பு பிரச்சாரம், பல் பாதுகாப்பு முகாம்கள், கால்நடை முகாம் போன்றவை கிராமங்களில் காலமுறை வகுக்கப்பட்டு முறையான, தீவிர இயக்கமாக நடத்தப்படுகின்றன.

25. 1997-98ஆம் ஆண்டு 212 கிராமங்களில் 29,679 பணிகள் ரூ.172.77 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றுள் 1747 பணிகள் ரூ. 56.00 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டத்திற்காக மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டன. 1998-99ஆம் ஆண்டு 23,264 பணிகள் ரூ.180.43 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றுள் ரூ.75.00 கோடி சிறப்பு மானியமாக அரசு வழங்கியது. சுமார் 1462 பணிகள் ரூ.65.07 கோடியில் குடிநீர் திட்டத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்டன. சாலைகள், பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகள் போன்றவை தொடர்ந்து முக்கியத்துவம் பெற்று வருகின்றன. 1334 தார்ச் சாலைப் பணிகளும், 938 இதர சாலைப் பணிகளும், 6955 பள்ளிக் கட்டடங்களும், பொது விநியோகக் கட்டடப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

26. 1999-2000ஆம் ஆண்டிற்கு ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி நீங்கலாக 211 ஊராட்சிகள் மேம்பாட்டிற்காக ரூ. 75.00 கோடி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## V. நமக்கு நாமே திட்டம்

27. 'நமக்கு நாமே திட்டம்' தேவையின் அடிப்படையில் மக்களின் பங்கேற்போடு செயல்படுத்தப்படும் ஒரு புதுமையான வளர்ச்சித் திட்டமாகும். சமுதாயத்தின் தேவையை மக்களே திட்டமிட்டு செயல்படுத்துதல் மற்றும் உருவாக்கப்பட்ட சொத்துகளைப் பராமரித்தல்வரை ஈடுபடுத்தி, சமூக தேவைகளைப் பூர்த்திசெய்து, வளர்ச்சிப் பணிகளில் மக்களின் பங்கேற்பை மீண்டும்



உயிர்ப்பிப்பதுதான் இத்திட்டத்தின் நோக்கம். பொதுமக்களின் அத்தியாவசியத் தேவையை கிராம சபை மூலம் முன்னுரிமைப்படுத்தி, திட்டம் தயாரிக்கவும், மக்களே திட்டங்களைச் செயலாக்கவும், அவர்கள் நிதியாகவோ, பொருளாகவோ, உடல் உழைப்பாகவோ தம் பங்காக அளித்து, அரசு நிதியுடன் பணிகளைச் செயல்படுத்துகின்றனர். அரசு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் இத்திட்டத்தின் மூலம் குடிமராமத்து என்ற பழைய முறைக்குப் புத்துயிர் அளித்து, எல்லாப் பணிகளுக்கும் இதுபோன்று மக்களை ஈடுபடுத்தி செயல்படுத்த வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

28. இத்திட்டம், 1997-98ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு அந்த ஆண்டு 4,932 பணிகள் ரூ. 17.78 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டன. 2,445 பணிகள் 100 விழுக்காடு பொதுமக்கள் பங்குடன் செயல்படுத்தப்பட்டன. பொதுமக்களிடம் பங்களிப்பாகப் பெறப்பட்ட ரூ.6.90 கோடியில், பணமாக ரூ.3.07 கோடியும், பொருளாக ரூ.1.20 கோடியும், உழைப்பாக ரூ.2.63 கோடியும் பெறப்பட்டது.

29. 1998-99ஆம் ஆண்டு இத்திட்டம் பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. ஆண்டின் தொடக்கத்தில் ரூ. 10.00 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், மக்களிடம் இருந்த வரவேற்பை கருத்தில் கொண்டு, கூடுதலாக ரூ.4.00 கோடி சிறப்பு நிதியாக விடுவிக்கப்பட்டது. 4,790 பணிகள் ரூ.29.93 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பங்களிப்பாக ரூ. 12.36 கோடி பெறப்பட்டது. இதில் ரூ.6.34 கோடி பணமாகவும், ரூ.4.25 கோடி பொருளாகவும், ரூ.1.77 கோடி உழைப்பாகவும் பெறப்பட்டது. 2045 பணிகள் 100 விழுக்காடு பொதுமக்கள் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டன. நீண்ட கால அடிப்படை வசதிகளான இணைப்புச் சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், பள்ளி சுற்றுசுவர்கள், பள்ளி தளவாடச் சாமான்கள், கணிப்பொறி அறைகள், நெற்களங்கள் போன்ற பல்வேறு தேவைகள் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் நனவாக்கப்பட்டன.

30. ஊரகப் பகுதிகளில் மக்களிடம் இத்திட்டம் சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளதால், 1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 10.00கோடி முதல்கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு, நகர் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மக்களின் ஈடுபாட்டிற்கு ஏற்ப அரசு கூடுதல் நிதியை அனுமதிக்கும்.

[1999 மே 12

## VI. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

31. 1997-1998 ஆம் ஆண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும், ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக் கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1998-99-ஆம் ஆண்டில் ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ. 35.00 இலட்சமாக உயர்த்தப்பட்டது.

| ஆண்டு | அனுமதிக்கப்பட்ட பணிகள் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1997-98 | 5409 | ரூ. 58.75 கோடி |
| 1998-99 | 6636 | ரூ. 82.25 கோடி |
| மொத்தம் | 12045 | ரூ. 141.00 கோடி |

1999-2000-ஆம் ஆண்டில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ரூ. 50.00 இலட்சமாக உயர்த்தி ஒதுக்கப்படும். இதற்கென திட்ட மதிப்பீட்டில் ரூ.117.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## VII. மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டம்

32. மாவட்டங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், திட்டம் தயாரிக்கவும் வளர்ச்சித் துறை மூலம் மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டம் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்குரிய நிதி ஒதுக்கீடு நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளுக்கு 40:60 என்ற விகித அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாவட்டங்களில் சிறுசேமிப்பு சாதனையை அடிப்படையாகக் கொண்டும், இத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 1998-99-ஆம் ஆண்டில் 3286 பணிகள் ரூ.35.00 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டது. அதில் ஊரகப் பகுதிகளில் 1843 பணிகளும், நகர்ப் பகுதிகளில் 1443 பணிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டன.

33. 1999-2000 ஆம் ஆண்டில் 28 ஊரக மாவட்டங்களில் மாவட்ட திட்டப் பிரிவு உருவாக்கப்படும். வரவு-செலவுத் திட்டத்தில் இதற்குரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முதல் மூலதனப் பணிகளுக்குப் பதிலாக மாவட்டங்களில் மாவட்ட திட்டக்குழு மூலம் ஆண்டு மற்றும் ஐந்தாண்டு வளர்ச்சித் திட்டம் தயாரிக்க இத்திட்டத்தின் நிதியுதவி மூலம் வழங்கப்படும்.



1999 மே 12]

## VIII. ஸ்மாக்ரா அவாஸ் யோஜனா

34. 1999-2000-ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தை ஸ்மாக்ரா அவாஜ் யோஜனா என்ற புதிய பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/மலை ஜாதியினர் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஊரகப் பகுதியில் வாழும் மிகவும் பிற்படுத்தப்பட்ட/ பிற்படுத்தப்பட்ட ஏழை எளியவர்களுக்கும் இலவசமாக வீடுகள் கட்டித் தருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த அரசு இத்திட்டத்தை ஒரு முதன்மையான திட்டமாகக் கருதுகிறது. மாநில அரசு அதன் பங்குத் தொகையுடன், சிமென்ட் கூரை மற்றும் தீப்பிடிக்காத கான்கிரீட் வீடுகளை கட்டுவதற்கு கான்கிரீட் கூரைக்காக ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 12,000 கூடுதலாக அளிக்கிறது. சுகாதார வசதி உட்பட, ஒரு வீட்டிற்கு சாதாரண பகுதிகளுக்கு ரூ. 32,000 ஆம் இலகுவான மண் மற்றும் பிரச்சினைக்குரிய பகுதியான மலைப்பகுதி போன்ற இடங்களில் ரூ. 34,000-ம் மதிப்பீடு நிர்ணயிக்கப்படுகிறது.

35. 1996-97-ஆம் ஆண்டில் 15364 வீடுகளும், 1997-98-ஆம் ஆண்டு 6780 வீடுகளும் (கூடுதலாக 22144 வீடுகள்) கட்டுவதற்கு மத்திய அரசின் மானியத் தொகை போதுமானதாக இல்லை. எனவே, இந்தப் பற்றாக்குறையை ஈடு செய்து பணிகளைத் தொடர மத்திய அரசின் மானியத் தொகையை எதிர்பார்த்து தொடங்கப்பட்ட இந்த வீடுகளைக் கட்டி முடிக்க ஜனவரி 1998-ல் மாநில மற்றும் மத்திய அரசின் பங்குத் தொகையாக முன்பணம் ரூ. 45.40 கோடி ஒதுக்கீடு செய்தது. மத்திய அரசு 1997-98 ஆம் ஆண்டு ரூ. 5.98 கோடி கூடுதலாக விடுவித்தாலும் 1998-99 ஆம் ஆண்டுக்கென ரூ.74.01 கோடி மட்டுமே விடுவித்தது. முன் நிலுவை ரூ. 30.34 கோடியை சரி செய்த பின், 1998-99-ஆம் ஆண்டு மத்திய அரசின் ஒதுக்கீடு ரூ.46.67 கோடி மட்டுமே. எனவே, 1998-99-ஆம் ஆண்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் 50,000 வீடுகள் கட்டுவதாக அறிவித்தபோதிலும், 40545 வீடுகள் கட்ட மட்டுமே குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. இருப்பினும், 1998-99-ல் 41328 வீடுகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில் மாநில அரசின் பங்குத்தொகை ரூ. 18.70 கோடியுடன் சிமென்ட் கூரை அமைப்பதற்கான கூடுதல் நிதியாக ரூ. 39.42 கோடியும் மாநில அரசு விடுவித்துள்ளது. இருப்பினும், 29.68 கோடி மத்திய அரசு பங்குத் தொகை இன்னும் நிலுவையில் உள்ளதை விடுவிக்கக் கோரி மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது. இதைத் தவிர குறைந்தபட்ச அடிப்படை வசதித் திட்டத்தின்கீழ்

[1999 மே 12

கூடுதலாக 1688 வீடுகள் ரூ. 15.00 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

36. 1999-2000 ஆம் ஆண்டு மத்திய அரசு இத்திட்டத்தினை ஸ்யாக்ரா அவாஸ் யோஜனா என்ற பெயரில் குடிநீர் மற்றும் சுகாதார வசதியும உள்ளடக்கி, வீடுகள் கட்டித்தர தீர்மானித்துள்ளது. நடப்பாண்டில் 46,000 வீடுகள் கட்டப்படும். இதற்கென ரூ. 18.40 கோடி மாநில அரசின் பங்காகவும், ரூ. 55.20 கோடி சிமென்ட் கூரை அமைக்க கூடுதல் நிதியாகவும் மாநில அரசு ஒதுக்கியுள்ளது.

## IX. ஜவஹர் கிராம சம்ரிதி யோஜனா

37. வறுமையை ஒழிக்கும் திட்டங்களுக்கு உறுதுணையாக வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்கள் கூடுதல் வருவாய் ஈட்டும் வகையில் வேலைவாய்ப்புகளை ஊரகப் பகுதிகளில் உருவாக்குவதே ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கு 1998-99 ஆம் ஆண்டு மாநில நிதி ஒதுக்கீட்டில் மாநில அரசின் பங்காக ரூ. 35.05 கோடி வழங்கப்பட்டது. ஆனால், இதில் ரூ.27.19 கோடியை மட்டுமே பயன்படுத்தியது. மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு முறையில ஏற்பட்ட மாற்றம் காரணமாக, 1997-98-ல் பெறப்பட்ட ரூ. 140.38 கோடி நிதி ஒதுக்கீட்டுக்கு, குறைவாக 1998-99-ல் ரூ. 103.49 மட்டுமே மத்திய அரசால் அனுமதித்து விடுவிக்கப்பட்டது. முந்தைய ஆண்டுகளின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில், 1998-99-ல் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டதால், இதில் ஏற்பட்ட பற்றாக்குறையை ஈடுகட்ட ரூ.36.89 கோடி மத்திய அரசிடம் கூடுதலாகக் கோரப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், இத்திட்டத்தில் மூன்றாவது தவணை நிதி விடுவிக்கக் கோரி மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டில், 50 பள்ளிக் கட்டடங்கள், 42 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், 371 பொது விநியோக கட்டடங்கள், 49 சத்துணவு கூடங்கள் மற்றும் 1420 கி.மீ. நீளமுள்ள தார்ச்சாலைகள் ஆகியவற்றைச் சேர்த்து 41,309 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன

38. கிராம அளவில் நிறைவு செய்யப்படாமல் இருக்கும் அடிப்படைத் தேவைகளை உருவாக்குவதற்கு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் சீரமைக்கப்பட்டு ஜவஹர் கிராம சம்ரிதி யோஜனா (ஜே.ஜி.எஸ்.ஒய்) என்ற பெயரில் 1-4-1999 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இப்புதிய திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:



1999 மே 12]

(அ) இத்திட்டம் கிராம ஊராட்சி அளவிலேயே முழுவதுமாகச் செயல்படுத்தப்படும். இதற்கான நிதி மாநில பங்கையும் சேர்த்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை/ மாவட்ட ஊராட்சிகள் மூலம் நேரடியாக கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தின் ஆண்டு செயல் திட்டத்தை வகுத்தல் மற்றும் நிறைவேற்றுதல் ஆகிய பணிகளை கிராம ஊராட்சிகளே செய்யும். இருப்பினும், இத்திட்டத்தின் 22.5 சதவிகித நிதியை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் தனி நபர் பயன்பாட்டுத திட்டத்திற்குத் தொடர்ந்து செலவு செய்யலாம்.

(ஆ) இத்திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்படும கூலியானது மாநிலத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட குறைந்தபட்சக் கூலி அல்லது மாநில அரசு வலியுறுத்துவதன் மூலம் மாநில/மாவட்ட அளவில் நிர்ணயிக்கப்படும் அதிகப்படியான கூலியாக இருக்கும்.

(இ) தொழிலாளர் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் பணிகளுக்கு முக்கியத்துவம் தொடர்ந்து வழங்கப்பட்டாலும், 60:40 என்ற கூலி மற்றும் பொருள்களுக்கான விகிதாச்சாரம் இனி வலியுறுத்தப்படமாட்டாது.

(ஈ) கிராம சபையின் ஒப்புதலுடன், ரூ.50,000 வரையிலான பணிகள்/திட்டங்களை கிராம ஊராட்சிகளே அனுமதித்து நிறைவேற்ற கிராம ஊராட்சிகளுக்கே அதிகாரம் உண்டு. இதற்கு நிருவாக ஒப்புதல் மேலதிகாரிகளிடம் பெறத் தேவையில்லை.

(உ) நிருவாக/எதிர்பாரா செலவு மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை பெறுதல் ஆகியவற்றிற்கு ஆண்டுக்கு ரூ. 7500 அல்லது ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் 7.5 சதவிகிதம் அதில் எது குறைவோ அதனை கிராம ஊராட்சிகள் செலவு செய்து கொள்ளலாம்.

(ஊ) இத்திட்டத்தின் நிதியில் 15 சதவிகிதம் வரை இதில் ஏற்படுத்தப்பட்ட சொத்துகளைப் பராமரிக்க செலவு செய்ய கிராம ஊராட்சிகள் அனுமதிக்கப்படும்.

(எ) மக்கள் தொகை 10000 என்ற கூடுதல் வரம்பு இல்லாமல், மக்கள் தொகையின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

[1999 மே 12

(ஏ) தற்போது நடைபெற்று வரும் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் இனி தொடராது.

39. ஜவஹர் கிராம சம்ரிதி யோஜனா திட்டத்தின் விரிவான வழிமுறைகள் மத்திய அரசிடமிருந்து இன்னும் பெறப்படவில்லை. இப்புதிய திட்டத்தின் முன்னேற்பாடான பணிகளைச் செய்ய மேற்கண்ட மாறுதல்களைப் பற்றி மத்திய அரசு மாநில அரசிற்குத் தெரியப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தை ஏற்று நடத்தும் முகமைகளும், இத்திட்டப் பணிகளைச் செம்மையாகச் செயலாற்றிட தக்கவகையில் திருத்தியமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்ற 1999-2000ஆம் நிதியாண்டில் மாநில அரசின் பங்காக ரூ. 48.90 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## X. வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்

40. விவசாய வேலைகள் நடைபெறாத காலங்களில் இரண்டு நபர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு ஓராண்டில் குறைந்த பட்சம் நூறு நாட்களாவது வேலைவாய்ப்பு வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் நிலம் மற்றும் நீர் வளங்களைப் பாதுகாக்கும் பணிகள், சாலைகளில் மரம் நடுதல், நீர்சேமிப்புப் பணிகள் மற்றும் பாலங்கள் கட்டுதல் போன்ற பணிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. 1998-99ஆம் ஆண்டில் 20,876 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. ஏறத்தாழ 3501 கி.மீ. தார்ச்சாலைகளும் 1,439 பள்ளிக்கட்டடங்களும் 217 ஊராட்சி அலுவலகக் கட்டடங்களும், 2,324 பொது விநியோக கட்டடங்களும், 269 மதிய உணவு மையங்களும், 2,884 சிறுபாசன திட்டங்களும் மற்றும் 8,579 நீர்சேமிப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதுவரை ரூ. 187.20 கோடி மைய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது. மாநில அரசின் ஒதுக்கீடான ரூ. 47.80 கோடியில் ரூ.46.85 கோடி செலவிடப்பட்டுள்ளன.

41. 1999-2000 ஆண்டிற்கு மாநில அரசின் பங்காக ரூ.47.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மைய அரசு திட்டங்களை நிறைவேற்றுவதில் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. அதன் அடிப்படையில் மாவட்ட ஊராட்சிகள் மூலம் அப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்களைக் கலந்து திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.



1999 மே 12]

## XI. சொர்ண ஜெயந்தி கிராம சுவா ரோஜ்கார் யோஜனா

42. ஆரம்ப காலகட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மட்டுமே சுய வேலைவாய்ப்புத் திட்டமாக இருந்தது. காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்களினால் கிராம இளைஞர் சுய வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டம், கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், கிராம கைவினைஞர்களுக்கான கருவிகள் வழங்கும் திட்டம் மற்றும் கங்கா-கல்யாண் திட்டம் ஆகியவை ஒவ்வொன்றாக இத்திட்டத்துடன் இணைக்கப்பட்டன. இந்தத் திட்டங்கள் கிராமப்புறங்களின் சுய வேலைவாய்ப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட போதிலும், அவை எதிர்பார்த்த அளவு முழுமையான பயனைத் தரவில்லை. இத்திட்டங்களின் பலவாறான திட்டங்கள், சமுதாயத் தொடர்பின்மை, இத்திட்டங்களிடையே ஒருங்கிணைப்பின்மை, போதிய வருமானத்தைத் தொடர்ந்து உருவாக்க இயலாமை போன்ற பல காரணங்கள் இத்திட்டத்தின் முழு வெற்றிக்குத் தடைகளாக இருந்தன. அந்தக் குறைபாடுகளை நீக்கி சுய வேலைவாய்ப்புத் திட்டங்களை மாற்றியமைக்க மைய அரசு முடிவு செய்தது. இந்தத் திட்டங்கள் மற்றும் பத்து இலட்சம் கிணறுகள் திட்டம் ஆகியவை ஒன்றாக இணைக்கப்பட்டு, சொர்ண ஜெயந்தி கிராம சுவா ரோஜ்கார் யோஜனா என 1999-2000 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. சுய வேலைவாய்ப்புக் குழுக்களாக வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களை ஒருங்கிணைத்தல், பயிற்சி, கடன், தொழில்நுட்பம், கட்டமைப்பு மற்றும் விற்பனை ஆகிய வசதிகளை ஏற்படுத்தி நிரந்தர வருமானம் ஈட்ட வழிவகை செய்வது இத்திட்டத்தின் நோக்கம். இத்திட்டம் மைய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே 75:25 என்ற விகிதத்தில் பங்கிடப்படும். திட்ட ஒதுக்கீடு தற்போது நடைமுறையில் உள்ள விகிதப்படி வழங்கப்படும் தமிழ்நாட்டின் பயன்பாட்டின் திறனைக் கணக்கில் கொண்டு அதிகமான நிதியை வழங்கும்படி மைய அரசை தமிழக அரசு கேட்டுள்ளது. இத்திட்டம், 1999-2000 ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும். 1-4-1999 வரை உள்ள செலவு செய்யப்படாத நிதி இத்திட்டத்தின்கீழ் ஒன்று சேர்க்கப்பட்டு புதிய வழிகாட்டி நெறிமுறைகளின்படி பயன்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு 1999-2000 ஆம் ஆண்டில் மாநில அரசின் பங்கு ரூ. 67,28.31 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. (ஒருங்கிணைந்த ஊரக வளர்சித் திட்டம் - ரூ. 45,40.70 இலட்சம், பத்து இலட்சம் கிணறுகள் திட்டம் ரூ. 55.80 இலட்சம். கிராமப்புற

இளைஞர் வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டம் ரூ.406.65 இலட்சம், கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் ரூ.406.67 இலட்சம், கங்கா-கல்யாண் திட்டம் - ரூ.61.49 இலட்சம்)

## XII. பத்து இலட்சம் கிணறுகள் திட்டம்

43. சிறு மற்றும் குறு ஏழை விவசாயிகள், விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்கள், ஆதிதிராவிடர்-பழங்குடியினர் மற்றும் இவர்கள் அல்லாத குடும்பங்களுக்கும் இலவசமாக திறந்தவெளி கிணறுகள் வெட்ட நிதி உதவி வழங்குவதற்காக இத்திட்டம் 1998-99 வரை செயல்படுத்தப்பட்டது. கிணறுகள் வெட்ட சாத்தியமில்லாத பகுதிகளில் சிறுபாசனம் மற்றும் நீர்சேமிப்பு பணிகளை மேற்கொள்ள வழிகாட்டி நெறிமுறைகளில் வழிவகை உள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் மாநில அரசின் பங்காக ரூ.261.68 இலட்சமும், சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ் ரூ. 523.37 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இருப்பினும், மைய அரசு ஒதுக்கீட்டை குறைத்து வழங்கியதால் ரூ.559.79 இலட்சம் மட்டுமே பயன்படுத்த முடிந்தது. மைய அரசு ரூ.22.39 கோடி மட்டுமே ஒதுக்கியது. எனவே, 2,680 ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் மற்றும் 1,368 மற்றவர்களும் பயன்படுத்துவதற்காக 4,048 ஜீவன்தாரா கிணறுகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. மேலும் 73 சிறுபாசன குளங்களும் 568 நீர் சேமிப்பு அமைப்புகளும் எடுத்துக் கொள்ளப்பட்டன. இத்திட்டம் தற்போது சொர்ண ஜெயந்தி கிராம சுவா ரோஜ்கார் யோஜனா திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

## XIII. ஏனைய வறுமை ஒழிப்புத் திட்டம்

44. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராம மகளிர் (மற்றும்) சிறார் மேம்பாட்டுத் திட்டம், கிராம இளைஞர் வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டம் மற்றும் கிராம கைவினைஞர்களுக்கு மேம்படுத்தப்பட்ட கருவிகள் வழங்கும் திட்டம், கங்கா-கல்யாண் திட்டம் மற்றும் பத்து இலட்சம் கிணறுகள் திட்டம் ஆகிய பல்வேறு மைய அரசின் வறுமை ஒழிப்புத் திட்டங்கள், புதிய வறுமை ஒழிப்புத் திட்டமாக மாற்றியமைத்து மைய அரசு 1999-2000ஆம் ஆண்டில் சொர்ண ஜெயந்தி கிராம சுவா ரோஜ்கார் யோஜனா திட்டமாக அறிமுகப்படுத்தியுள்ளது.





45. 1998-99 ஆம் ஆண்டு மைய மற்றும் மாநில அரசின் பங்குகளோடு சேர்த்து ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.68.388 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது இதுவரை 1,42,813 நபர்களுக்கு கடன் வழங்கப்பட்டது. மேலும், 1,28,188 நபர்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. ரூ.70.128 கோடி நிதி இருப்பில் ரூ.69.83 கோடி செலவிடப்பட்டுள்ளது.

46. கிராம மகளிர் (மற்றும்) சிறார் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2,908 குழுக்கள் அமைக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அனைத்து குழுக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. ரூ. 366.408 இலட்சம் ஒதுக்கீட்டில் மைய அரசு ரூ.366.408 இலட்சத்தை விடுவித்துள்ளது. இதனால், 40,064 கிராமப் பெண்கள் பயன்பெற்று உள்ளார்கள். சமுதாய ஒருமுகப்படுத்தப்பட்ட பணிக்கென மைய அரசு 8 மாவட்டங்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.0.50 இலட்சம் வீதம், 8 மாவட்டங்களுக்கு ரூ.4 இலட்சம் விடுவித்துள்ளது. இதற்கு மாநில அரசு அதன் பங்காக ரூ.2 இலட்சத்தை விடுவித்துள்ளது.

47. டிரைசம் திட்டத்தின்கீழ் 1998-99 ஆம் ஆண்டு ரூ.210.428 இலட்சம் ஒதுக்கப்பட்டுவிட்டது. ஏறத்தாழ 12,381 கிராம இளைஞர்கள் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். 1998-99 வரை ரூ.116.139 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

48. கிராம கைவினைஞர்களுக்கு மேம்படுத்தப்பட்ட கருவிகள் திட்டத்தின்கீழ், வறுமைக் கோட்டிற்குக்கீழ் தச்சர்கள், காலணி செய்பவர்கள் மற்றும் பானை செய்பவர்கள் போன்ற கிராமப்புற கைவினைஞர்கள் பயன்படுவதற்காக மேம்படுத்தப்பட்ட கருவிகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு கைவினைஞரும் ரூ. 2,000/- மானியம் பெறுவதற்குத் தகுதியுடையவர் ஆவார். அதில், பயன்பாட்டாளரின் பங்கு 10 சதவிகிதம் ஆகும். 1998-99 ஆம் ஆண்டு மைய அரசு ரூ.162.283 இலட்சம் விடுவித்துள்ளது. இதன் மூலம் 14,353 கைவினைஞர்களுக்கு கருவிகள் வழங்கப்பட்டன.

[1999 மே 12

## XIV. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளை மாற்றியமைத்தல்

49. பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களைக் கிராமங்களில் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு திட்டங்களைச் செயல்படுத்தும் அமைப்பு சிறப்பாக இருக்க வேண்டுமென உணரப்பட்டுள்ளது. பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதை மேற்பார்வையிடுவதில் பல ஆண்டுகளாக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் முக்கிய பங்காற்றி வருகின்றன. எனவே, மைய அரசு இந்த முகமைகளை வலுப்படுத்த முடிவு செய்துள்ளது. இந்த முகமைகளின் நிருவாகச் செலவினை பல்வேறு திட்டங்களுக்கான செலவுகளில் சேர்க்காமல் தனித் திட்டமாக செயல்படுத்துவதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் தனித் தலைப்பு ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தகுந்த பணியாளர் கொள்கை மூலம், இந்த முகமையின் செயல்பாடு தொழில்நுட்ப ரீதியாக செயல்படத் தக்க வகையில் மாற்றி அமைக்கப்படும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் அடிப்படை ஆதாரமான அமைப்பாகச் செயல்படுவதோடு, சிறப்பான கண்காணிப்பு அமைப்பாகவும் அமையும். இதன் பணியாளர் அமைப்பு அதன் நடவடிக்கைகளைப் பொறுத்து, பெண்களுக்கான சுயவேலைவாய்ப்பு, கூலி வேலைவாய்ப்பு, பொறியியல், நீர் அமைப்பு, கண்காணித்தல், பகுப்பாய்வு, நிருவாகம் மற்றும் கணக்கு என்ற எட்டு பிரிவுகளாக இருக்கும். இதுபோல் பணியாளர் மற்றும் நிதியமைப்பு ஆகியவற்றைப் பொறுத்த மாவட்டங்களும் நான்கு தொகுப்புகளாகப் பிரிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| தொகுப்பு-அ | .. | ஆறுக்கும் குறைவான வட்டாரங்கள் (ஒரு மாவட்டம்) |
| தொகுப்பு-ஆ | .. | ஆறிலிருந்து பத்துவரையான வட்டாரங்கள் (5 மாவட்டங்கள்) |
| தொகுப்பு-இ | .. | 11-லிருந்து 15 வரையான வட்டாரங்கள் (11 மாவட்டங்கள்) |
| தொகுப்பு-ஈ | .. | 16-க்கும் மேற்பட்ட வட்டாரங்கள் (8 மாவட்டங்கள்) |



1999 மே 12]

## XV. ஊரக சுகாதாரம்

50. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஒரு முன்னோடி திட்டமாக மைய ஊரக சுகாதார திட்டம் மற்றும் டேனிடா உதவி பெறும் குடிநீர் வழங்கல் - சுகாதார தேவை திட்டம் ஆகியவை நிறைவேற்றப்படுகின்றன.

### (1) மைய ஊரக சுகாதார திட்டம்

51. ஊரகப் பகுதியில் உள்ள வீட்டுக் கழிப்பறை, பள்ளிக்கூடக் கழிப்பறை மற்றும் சமுதாய கழிப்பறைகளை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் ஊரக பெண்களின் தனிமையை பாதிக்காமலும், அவர்களின் சுயமரியாதைக்குப் பங்கம் நேரிடாமலும், உரிய வசதிகளை ஏற்படுத்துவதோடு கிராம மக்களின் உடல் நலம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துகிறது. 1998-99-ஆம் ஆண்டில் ரூ.135,9.12 இலட்சம் ஒதுக்கப்பட்டது. அதில் 52,976 வீட்டுக் கழிப்பறைகளுக்கும், 561 நடுநிலைப் பள்ளிகளுக்கும், 648 தொடக்கப் பள்ளிகளுக்கும் சுகாதார வசதி செய்து கொடுக்கப்பட்டது. மேலும், 28 மாவட்டங்களில் ரூ.146.12 இலட்சம் செலவில் வடிகால் வசதியும், நீர் உறிஞ்சும் குழிகளுக்கான பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. வீடுகளுக்கான கழிப்பறையை பொறுத்தமட்டில் ஒன்றிற்கான செலவு ரூ.2,500. இதில் வீட்டு உரிமையாளரின் பங்களிப்பு 20% ஆகும். பள்ளிக்கூடக் கழிப்பறையை பொறுத்தமட்டில் தொடக்கப் பள்ளிக்கு ரூ.32,000-மும், நடுநிலைப் பள்ளிக்கு ரூ.37,000-மும் செலவாகும். இதில் முறையே 9,600-ம், 11,100-ம் பெற்றோர்-ஆசிரியர் கழகம் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு ஆகும். மைய ஊரக சுகாதாரத் திட்டத்தின் ஒரு பகுதியான தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு செயல்பாடு திட்டம், 4 மாவட்டங்களில் (ஈரோடு, தருமபுரி, திண்டுக்கல் மற்றும் இராமநாதபுரம்) நிறைவேற்றப்படுகின்றன. 1997-98 ஆம் ஆண்டில் இத்திட்டம் மேலும் கோயம்புத்தூர், திருவள்ளூர், வேலூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 4 மாவட்டங்களில் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டு ரூ.135.71 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான மொத்த செலவு மைய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே 50:50 விகிதத்தில் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. இத்திட்டம் பல இடங்களில் பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளதால் 1998-99 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி, திருவண்ணாமலை, விருதுநகர் மற்றும்

சிவகங்கை ஆகிய நான்கு மாவட்டங்களில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டது. 1999-2000-ஆம் ஆண்டிற்கு ரூ.149.694 இலட்சம் முன்மொழியப்பட்டுள்ளது.

(2) டேனிடா உதவிபெறும் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார தேவைத் திட்டம் (WASDEP)

52. டேனிடா திட்டம் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள அனைத்து கிராமங்களில் உடல் நலம் மற்றும் சுகாதார நிலைகளை மேம்படுத்தும் நோக்குடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் அக்டோபர் 1996-ல் தொடங்கியது. அக்டோபர் 2000-ல் முடிவடையும். இத்திட்டத்திற்கான பங்கேற்பு பின்வருமாறு அமையும்.

| | | |
|---|---|---|
| (அ) | டேனிடா | ரூ.36.60 கோடி |
| (ஆ) | தமிழக அரசு | ரூ.5.46 கோடி |
| (இ) | ஊராட்சிகள் | ரூ.3.91 கோடி |

1998-99 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட மதிப்பீடாக ரூ.3.83 கோடி முன்மொழியப்பட்டது. இந்த ஆண்டு இத்திட்டத்தில் ரூ.2.31 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதுவரை 3,609 வீட்டுக் கழிப்பறை பணிகளும், 157 நிறுவன கழிப்பறை பணிகளும், 46 குடிநீர்த் திட்ட பணிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டு இதுவரை 2,477 வீட்டுக் கழிப்பறைகளும், 96 நிறுவன கழிப்பறைகளும், 24 குடிநீர் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. 1999-2000 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடாக ரூ.17.77 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## XVI. பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

53. நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டம், மத்திய அரசால் 1993-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் (மக்களவை மற்றும் மாநிலங்களவை) தங்களுடைய தொகுதியில் வளர்ச்சிப் பணியை மேற்கொள்வதற்காக ஒவ்வோர் ஆண்டும் 1 கோடி ரூபாய் வழங்கப்படுகிறது. இத்திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. சென்னையைப் பொறுத்தவரையில்



இத்திட்டம், மாநகர ஆணையர் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளில் பின்வரும் எண்ணிக்கையிலான பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன:—

| ஆண்டு | எடுக்கப்பட்ட பணிகள் | முடிக்கப்பட்ட பணிகள் | நிலுவையில் உள்ள பணிகள் |
|---|---|---|---|
| 1996-97 | 4266 | 4143 | 123 |
| 1997-98 | 3210 | 2381 | 829 |
| 1998-99 | 3393 | 1838 | 2055 |

54. தமிழ்நாட்டில் 39 மக்களவை உறுப்பினர்களும், 18 மாநிலங்களவை உறுப்பினர்களும் உள்ளனர். இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசு ஒவ்வோர் ஆண்டும் ரூபாய் 57 கோடி வழங்குகிறது. இத்திட்டம் ஒரு தொடர் திட்டமாதலால், ஒரு தவணைக்கு ரூ.50 இலட்சம் வீதம் விடுவிக்கும். முதல் தவணையில் 50 சதவிகிதத்திற்கும் மேலாக நிதி செலவழிக்கப்பட்ட பின்னர்தான் மத்திய அரசிடமிருந்து அந்த ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட எஞ்சியுள்ள தொகையில் இரண்டாவது தவணையை விடுவிக்கும். 1990 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் மத்திய அரசு ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும், இத்திட்டத்திற்கான நிதியினை ரூபாய் 1 கோடியில் இருந்து 2 கோடியாக உயர்த்தி இருக்கிறது. இதன்மூலம் 1999-2000 ஆம் ஆண்டிற்கு, மத்திய அரசிடமிருந்து 114 கோடி ரூபாய் கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## XVII. தேசிய கரிம வாயுத் திட்டம்

55 இத்திட்டம் முற்றிலும் மத்திய அரசால் நிதி உதவி வழங்கப்பெறும் திட்டமாகும். காடுகளை அழிவிலிருந்து தடுப்பதும், மக்கள் எளிதில் பயன்படுத்தக்கூடிய மரபுசாரா எரிசக்தி வழங்கல் உபயோகப்படுத்துவதை ஊக்கப்படுத்துவதும், இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் மரபுசாரா எரிசக்தியை வழங்குவதோடு, சுற்றுப்புறச் சுகாதாரம் மற்றும் இயற்கை வளமுள்ள உரங்கள் உற்பத்தியையும் ஊக்குவிக்கும். தமிழ்நாட்டில் 1997-98 ஆம் ஆண்டு 1764 கலன்கள் அமைக்கப்பட்டன. மத்திய அரசு 1998-99 ஆம் ஆண்டிற்கு 1500 கலன்கள் அமைக்க வேண்டுமென இலக்கு நிர்ணயித்திருந்தது.

இதுவரை 1782 கலன்கள் அமைக்கப்பட்டுவிட்டன. 1998-99 ஆம் ஆண்டிற்கு ஒரு கலன் அமைப்பதற்கு ரூ. 2000 வீதம் 30 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இத்திட்டம் 1999-2000 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

## XVIII. தேசிய மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்பு

56. இது, மத்திய அரசால் முழுமையாக நிதி வழங்கப்படும் திட்டமாகும். கிராமப்புறப் பெண்களை, இன்னல்களில் இருந்து விடுவிக்கவும், காடுகளின் அழிவைத் தடுக்கவும், அடுப்பறைகளில் இருந்து புகை வருவதைத் தடுப்பதற்கும், மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்பை நல்லமுறையில் பயன்படுத்தவும், இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1998-99-ஆம் ஆண்டிற்குள் மத்திய அரசு 60 ஆயிரம் புகையில்லா அடுப்புகளை அமைப்பதற்கு ரூ.36 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. இதுவரை 86,553 புகையில்லா அடுப்புகள் கிராமப் புறங்களில் அமைக்கப்பட்டுள்ளன. 1999-2000 ஆம் ஆண்டிலும் மத்திய அரசின் உதவியுடன் இத்திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.

## XIX. உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில அரசின் மானியம்

57. 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டிற்கு மாநில அரசு சேர்மம்-ஆ வருவாயில் 8% ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்மூலம் 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ.369.28 கோடியும், 1998-99-ம் ஆண்டிற்கு ரூ.467.95 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு சமன்பாடு மற்றும் ஊக்க நிதியாக 1997-98 ஆம் ஆண்டுக்கு ரூ. 59.45 கோடியும், 1998-99-க்கு ரூ.75.54 கோடியும் அடங்கும். இருப்பினும், 1998-99-ல் வரி வசூல் குறைந்தமையால் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு ரூ.453.73 கோடியாகக் குறைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 1998-99-ஆம் ஆண்டிற்கான சமன்பாடு மற்றும் ஊக்க நிதி குறைக்கப்பட்டு ரூ. 73.22 கோடி விடுவிக்கப்பட்டது. 1997-98-ஆம் ஆண்டு மூன்றடுக்கு ஊராட்சிகளான கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு முறையே 45:45:10 என்ற விகிதாச்சாரத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டது. 1998-99-ஆம் ஆண்டில் இவ்விகிதாச்சாரம் முறையே 47:45:8 என்ற அடிப்படையில் வழங்கப்பட்டது.

58. 1999-2000-ஆம் ஆண்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய 8 விழுக்காடு பங்காக ரூ. 816.25 கோடி வழங்க



உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 73.46 கோடி சமன்பாடு மற்றும் ஊக்க நிதியையும் சேர்த்து ரூ.145.06 கோடி மொத்த பகிர்ந்தளிக்கும் நிதியாகவும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளான கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு நிபந்தனையற்ற நிதியாக ரூ.381.60 கோடி 47:45:8 என்ற விகிதாச்சாரத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.

## XX. பத்தாவது நிதிக் குழு மானியம்

59. பத்தாவது நிதிக் குழு மானியமாக 1996-97-லிருந்து ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் ரூ. 71.83 கோடி வழங்கப்படுகிறது. இம்மானியம் மூலதனப் பணிகளை மட்டும் மேற்கொள்ள வழங்கப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.71.83 கோடி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## XXI. பயிற்சித் திட்டங்கள்

60. ஊரக வளர்ச்சி செயல் திறனை மேம்படுத்தும்பொருட்டு உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் திறமையை தொய்வின்றி ஊக்குவிப்பது மிகவும் இன்றியமையாதது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், மறைமலை நகரில் மாநில அளவில் உயர்நிலைப் பயிற்சி நிலையமான மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நிலைக்கு மேலாக உள்ள அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி மற்றும் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டு 55 பயிற்சிகள் நடத்தப்பட்டதில் 431 அலுவலர்களும், 647 உள்ளாட்சி பிரதிநிதிகளும் அடங்குவர். மாநிலத்தில் பவானிசாகர், கிருஷ்ணகிரி, பட்டுக்கோட்டை, தேகல்லுப்பட்டி, மற்றும் சத்திய விஜயநகரம் ஆகிய இடங்களில் 5 ஊரக விரிவாக்கப்பட்ட பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன. இந்தப் பயிற்சி நிலையங்களில் 1,483 அலுவலர்கள், பயிற்சி பெற்றுள்ளனர்.

61. யூனிசெப் நிதி உதவியுடன் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள், பிற துறை அலுவலர்கள் யற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு திறமையை மேம்படுத்தும்பொருட்டு தீவிர பயிற்சி

அளிக்க, பயிற்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சித் திட்டமானது பயிற்சியாளர்கள் தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டும், கலந்துரையாடல் மூலமாகவும், பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களை ஒருங்கிணைக்கும் பயிற்சி முறையை பின்பற்றியும் நடத்தப்பட உள்ளது. தீவிர பயிற்சி முகாம்கள் 1999 மே மாதம் தொடங்கப்பட்டு 1999-2000 ஆம் ஆண்டு வரை நடத்தப்படவுள்ளது.

## XXII. சமூகக் கல்வி மானியம்

62. தகவல் தொடர்பை மேம்படுத்தும்பொருட்டு, தமிழரசு திட்டம், பஞ்சாயத்துச் செய்தி மற்றும் பஞ்சாயத்து ராஜ்யம் போன்ற பத்திரிகைகளை அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகள் வாங்குவதற்கு ஏதுவாக அரசு மானியமாக நிதியுதவி அளிக்கிறது. இந்த மானியம் அகில இந்திய சுற்றுலா பொருட்காட்சி மற்றும் குடியரசு தின அலங்கார ஊர்திகள் அணி வகுப்புக்கும் பயன்படுத்தப்படுகிறது. 1995-96 ஆம் ஆண்டு இத்தலைப்பின்கீழ், வழங்கப்பட்ட ரூ.32.90 இலட்சம், 1996-97ஆம் ஆண்டு ரூ.34 இலட்சமாக உயர்த்தப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டு ரூ.31.22 இலட்சம் செலவிடபட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 34.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது.

## XXIII. ஊரக மருந்தக மானியம்

63. ஊரக மருந்தகங்களை நிறுவி பராமரிப்பது, ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியமும் மேற்படி ஊரக மருந்தகங்களுக்காக மேற்கொள்ளும் ஆண்டு செலவினத்தில் ரூ.5,400/- உச்சவரம்புக்கு உட்பட்டு, 50 சதவிகித செலவினத்தை அரசு மானியமாக வழங்குகிறது. ஏற்கெனவே ஊரகப் பகுதிகளில் செயல்பட்டு வரும் முழுநேர மருந்தகங்களுக்கு இந்த மானியத்தின் உச்சவரம்பு ரூ.2,040/- ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது புதிதாகத் தொடங்கப்படவுள்ள மருந்தகங்களைப் பொறுத்தவரையில், ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலைமைக்கேற்ப, 100 சதவிகித மானியம் அரசால் வழங்கப்படுகிறது. இதுகுறித்து, அரசாணை பல்வகை எண். 1168, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 18-7-1983-ல் உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டு ரூ. 8.8. இலட்சம் இத்தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது. 1999-2000-ஆம் நிதியாண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ. 8.8 இலட்சம் ஒதுக்கீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.





## XXIV. ஊரக குடிநீர் வழங்கல்

64. 1998-99 ஆம் ஆண்டு, தேவையான ஊரகப் பகுதிகளில், கைப்பம்பு அமைத்தல் மற்றும் குடிநீர் விநியோகக் குழாய்கள் விரிவுபடுத்தவும் ரூ.100 இலட்சம் விடுவிக்கப்பட்டது. 1999-2000-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## XXV. மக்கள் நலப் பணியாளர்கள் திட்டம்

65. 1996-97 ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில், மக்கள் நலப் பணியாளர்கள் திட்டம் மீண்டும் கொண்டுவரப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. 1989-91 ஆம் ஆண்டுகளில், நடைமுறையிலிருந்த இத்திட்டமானது, 13-7-1991 முதல் கைவிடப்பட்டது. இதனால், பணியிழந்த நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், அவர்களது சேவையை, முதியோர் கல்வியைப் பரப்புவதிலும், குடிப்பழக்கத்தின் தீமைகளை மக்களுக்கு உணர்த்தி, விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், தமிழ்நாடு மின் வாரியத்துடன் தொடர்பு கொண்டு தெரு விளக்குகளைப் பராமரிப்பதிலும் மற்றும் சத்துணவு மையங்களைப் பராமரிப்பதிலும் பல்வேறு பிற பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டும் மீண்டும் இப்பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மக்கள் நலப் பணியாளர்களுக்கு, 1997 செப்டம்பர் மாதம் முதல் மாதந்தோறும் மதிப்பூதியமாக ரூ.500/- வழங்கப்படுகிறது. தற்போது 8,008 ஆண்களும், 5,483 பெண்களும் மக்கள் நலப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கிராம ஊராட்சிகள் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவி புரிகின்றனர். இவர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியம் ரூ.750/- ஆக உயர்த்தப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். 1999-2000-ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்டத்தில் ரூ.809.46 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## XXVI. கி.பி. 2000-க்குப் பின்னால் ஊரக வளர்ச்சி

66. இதுவரை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மூலமாகவும், கூலி வேலைவாய்ப்பளிக்கும் திட்டங்கள் மூலமாகவும் மற்றும் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் மூலமாகவும், ஊரக பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும்பொருட்டு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன். அவற்றின் மூலமாக, கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தில் விரைவான மறுமலர்ச்சியைக்கொண்டு வரமுடியும் என நான் நம்புகிறேன். மேலும், அரசு எடுத்துள்ள முக்கிய கொள்கை முடிவுகள் குறித்தும், மேற்கொண்டுள்ள முனைப்பு நடவடிக்கைகள் குறித்தும், அணுகுமுறைகள் குறித்தும், கோடிட்டுக் காட்டியுள்ளேன். ஊரக உள்ளாட்சி அமைப்புகளின், செயலாக்கத் திறனை மேம்படுத்தும்பொருட்டு, அவற்றுக்குத் தேவையான அதிகாரங்களையும், நிதி ஆதாரங்களையும் பகிர்ந்தளிப்பதில், நடைமுறைக்கு சாத்தியமான அணுகுமுறையை நாம் மேற்கொண்டுள்ளோம். கிராமப்புறங்களில் வறுமைக்கோட்டுக்குக்கீழ் வாழும் குடும்பங்களுக்கு, நிலையான வருமானம் அளிக்கத்தக்க சுய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் அக்குடும்பங்கள், வறுமைக் கோட்டைத் தாண்டிடவும் மற்றும் ஊரகப் பகுதிகளில் குடிநீர், சாலைகள், கல்வி, சுகாதாரம் மற்றும் பொது நலம், வீட்டுவசதி போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதுமே நாம் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளின் நோக்கமாகும். நாம் முழு அர்ப்பணிப்புடன் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக, கடந்த மூன்று ஆண்டுகளில் திட்டப் பணிகளின் செயலாக்க வேகத்திலும், தரத்திலும் குறிப்பிடத் தகுந்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளபோதிலும், எதிர்காலத்தில் அடைய வேண்டிய நமது இலக்கினை அடையும் முயற்சியில், இந்த அனுபவங்கள் உரிய பாதையை வகுத்துக்கொள்ள உதவும்.

67. வறுமை ஒழிப்பு, கூட்டமைபபு வசதிகளை உருவாக்குதல் மற்றும் ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவையே நம்முடைய இறுதி குறிக்கோளாகும். கி.பி.2000-க்குப் பின் வரும் ஆண்டுகளில், அடுத்த நூற்றாண்டில் கிராமப்புறங்களில் நாம் இரண்டு வகையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. முதலாவதாக, ஊரகக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரும் திட்டங்களை ஒருமுகப்படுத்தி வலுப்பெறச் செய்ய வேண்டும். இரண்டாவதாக, சுய





வேலைவாய்ப்பு மற்றும் கூலி வேலைவாய்ப்புக்கான திட்டங்களான 'ஸ்வர்ண ஜெயந்தி' கிராமிய சுவாரோஜ்கார் யோஜனா மற்றும் வேலை உறுதியளிப்புத் திட்டம் போன்ற திட்டங்களை ஒருங்கிணைப்பதன் மூலமாக வறுமை ஒழிப்புக்கு ஒரு நிரந்தர தீர்வு காண முடியும். சுய வேலைவாய்ப்புக்கான திட்டமானது, தொழில்நுட்பம், பயிற்சி, கட்டமைப்பு வசதி மற்றும் விற்பனை இணையங்கள் மற்றும் குழு அமைப்பு ரீதியிலான அனைத்து அம்சங்களையும் கொண்டிருக்கும் இந்த உட்கூறுகளை ஒருங்கிணைப்பதன் மூலம், வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்கு நிலையான வருமானம் கிடைத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வேலைவாய்ப்பு மற்றும் கட்டமைப்பு வசதிகளுக்கான திட்டங்கள், ஏழைக் குடும்பங்களின் வருமானத்தை ஈடு செய்யும் விதத்திலும், அதேசமயம், மக்களின் முன்னுரிமைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்திலும் செயல்படுத்தப்படும்.

68. கிராமப்புறங்களில் முழுமையான வளர்ச்சியை ஏற்படுத்த நாம் எடுக்கும் இம்முயற்சிக்கு மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளையும் இந்த அரசு முழுமையாக ஈடுபடுத்த உள்ளது. குடிக்க தண்ணீர், படிக்க பள்ளி, நடக்க பாதை, இருக்க வீடு, பார்க்க வெளிச்சம், உயிர்காக்க சுகாதாரம் கிராமப் பகுதியில் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்ற எங்கள் இலட்சிய கொள்கையை நிறைவேற்றும் வரை நாங்கள் ஓயமாட்டோம்.

# இணைப்பு-II

[14-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## குடிநீர் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண் 48

## 1999-2000

**முகவுரை**

குடிநீர் வழங்குதல் மூலம், மனித நலம் மற்றும் வாழ்க்கைச் சூழலில் மேம்பாடு காண்பது என்பது அரசின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாகும். இக்கொள்கையை எய்தும்பொருட்டு, தமிழக அரசு 14-4-1971 அன்று 'தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்' என்ற சட்டப் பூர்வமான அமைப்பினை உருவாக்கியது. சென்னைப் பெருநகர் பகுதி நீங்கலாக தமிழகத்தில் அனைத்து ஊரக மற்றும் நகரகப் பகுதிகட்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று திட்டங்களுக்கான ஆய்வு, திட்ட உருவாக்கம, திட்ட செயலாக்கம் மற்றும் திட்ட பராமரிப்பு ஆகியவை இவ்வாரியத்தின் பணிகளாகும். சென்னைப் பெருநகர் பகுதியை பொறுத்தவரை இபபணிகள் 'சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால்' செயல்படுத்தப்படுகிறது.

## 1. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

2. கடந்த ஆண்டுகளில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், குறிப்பிடத்தக்க அளவு எய்தியுள்ள திறன் "அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர்" என்னும் இலக்கினை அடைய ஏதுவாக அமைந்துள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், அதன் பொறுப்புகளுக்கு ஏற்ப பெற்றுள்ள திறன் பற்றிய விவரம் வருமாறு:

* சிறந்த கல்வித் தகுதியுடைய 2,200 பொறியாளர்கள் மற்றும் 9,800 தொழில்நுட்ப நிருவாக கணக்கு அலுவலர்கள் அடங்கிய 12,000 பணியாளர்கள்.



* நீராதாரம் உருவாக்கும் பணிக்கென 48 ஆழ்துளையிடும் கருவிகள் மற்றும் வற்றிப்போன ஆழ்துளைக் கிணறுகளில் நீர் ஆதாரத்தைப் பெருக்கும் பணிக்கென 6 புனரமைப்பு இயந்திரங்கள்.
* தொலையுணர்வு மற்றும் வானியல் வரைபடம் போன்ற நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய நிலநீர் பிரிவு.
* குடிநீர் தரத்தினைத் தொடர்ந்து கண்காணிக்கும் வகையில் அனைத்து மாவட்ட தலைநகரிலும் சோதனைக் கூடங்கள்.
* திட்ட ஆய்வுப் பணிகளில் கணினி உபயோகம் மற்றும் கணினி மூலம் நவீன முறையில் வடிவமைப்பு.
* சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோவை ஆகிய நகரங்களில் உள்ள பயிற்சி மையங்களில் செயல்திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப உயர்விற்கான நிகழ்ச்சிகள் மூலமாக மனிதவள மேம்பாடு.

3. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தன்வசம் உள்ள வளமான திறமையை, மாநிலத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றும் பணியில் சிறப்புற பயன்படுத்துகிறது. வாரியத்தின் செயலாக்கம், குறிப்பாக கடந்த மூன்றாண்டுகளில், குறிப்பிடத்தக்கதாக உள்ளது. இந்த நிலையினை கடந்த ஆறு ஆண்டுகளில் குடிநீர் வழங்கு பணிகட்கு ஆன செலவு பிரதிபலிக்கிறது. ஊரகக் குடிநீர் வழங்கு பணிக்கென 1993-94 ஆம் ஆண்டு முதல் 1995-96 ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகளில் ஆன செலவு 240 கோடி ரூபாய் அளவில் இருக்க, 1996-97 ஆம் ஆண்டு முதல் 1998-99 ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகளில் ஆன செலவு 631 கோடி ரூபாயாக உயர்ந்து, 163 விழுக்காடு அதிகமாக உள்ளதைக் காட்டுகிறது. இதேபோல் நகரக் குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு 1993-94 ஆம் ஆண்டு முதல் 1995-96 ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகளில் ஆன செலவு 108 கோடி ரூபாய் அளவில் இருக்க, 1996-97 ஆம் ஆண்டு முதல் 1998-99 ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகளில் ஆன செலவு 203 கோடி ரூபாயாக உயர்ந்து, 88 விழுக்காடு அதிகரித்துள்ளதைக் காட்டுகிறது.

## ஊரகக் குடிநீர் வழங்கு திட்டம்

| ஆண்டு | பயன்பெற்ற குடியிருப்புகள் | செலவு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1993-94 | 3751 | 70.36 |
| 1994-95 | 3808 | 99.49 |
| 1995-96 | 2954 | 69.93 |
| 1996-97 | 2699 | 86.62 |
| 1997-98 | 4531 | 220.55 |
| 1998-99 | 7974 | 324.12 |

## நகரகக் குடிநீர் வழங்கு திட்டம்

| ஆண்டு | முடிக்கப்பட்ட நகரக் குடிநீர்த் திட்டங்கள் | செலவு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1993-94 | 32 | 43.34 |
| 1994-95 | 28 | 29.12 |
| 1995-96 | 18 | 36.00 |
| 1996-97 | 26 | 10.65 |
| 1997-98 | 30 | 78.63 |
| 1998-99 | 12 | 83.72 |

4. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மாநில அரசின் நிதி ஒதுக்கீடு மற்றும் மத்திய அரசின் நிதியுதவி, டேனிடா, யூனிசெப் மற்றும் உலக வங்கி ஆகிய அயல்நாட்டு நிதியுதவி மேலும் ஆயுள் காப்பீட்டுக் கழகம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் (ஹட்கோ) போன்ற நிதி நிறுவனங்களின் கடனுதவி ஆகியவற்றின்



மூலம் திட்டத்திற்கான நிதியினைப் பெறுகிறது. ஆயுள் காப்பீட்டுக் கழகம் மற்றும் ஹட்கோ நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடனுதவி பின்வருமாறு:

| ஆண்டு | ஆயுள் காப்பீட்டுக் கழக கடனுதவி | ஹட்கோ கடனுதவி |
|---|---|---|
| 1993-94 | 38.75 | 17.61 |
| 1994-95 | 43.59 | 0.20 |
| 1995-96 | 48.94 | .. |
| 1996-97 | 54.81 | .. |
| 1997-98 | 83.52 | .. |
| 1998-99 | 121.23 | 60.27 |

**கடந்த மூன்றாண்டுகளில் மேற்கொண்ட கொள்கை முயற்சிகள் மற்றும் சாதனைகள்**

5. குடிநீர் வழங்கு பணிகளை அதிகப்படுத்தவும், திறனை மேம்படுத்தவும், மேலும் பணிகளில் தெளிவு மற்றும் பொறுப்பினை உறுதிபடுத்தவும், கடந்த மூன்றாண்டுகளில் அரசு பல கொள்கை முயற்சிகளை மேற்கொண்டது. அத்தகைய முயற்சிகளில் சில பின்வருமாறு:

- இதுவரை குடிநீர் வசதி பெறாதிருந்த 154 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அமைத்ததன் மூலம், 1.1.1997 முதல் குடிநீர் வசதி இல்லாத குடியிருப்பே இல்லை என்னும் நிலை கண்டது.

- 150-க்கு மேலான மக்கட் தொகை உள்ள குடியிருப்புகளுக்கு மின்னிறைப்பான் மூலம் குழாய் வழி குடிநீர்த் திட்டம் அமைத்துத்தர முடிவு செய்தது.

கூட்டுக் குடிநீர் வழங்கு திட்டங்களில் ஊரகக் குடியிருப்புகளை இணைக்க இரண்டு கிலோமீட்டர் தூரத்திற்குள் இருக்கவேண்டும் என்கிற வரன்முறை நீக்கப்பட்டு, ஊரகக் குடியிருப்பின் தேவையை மட்டும் கருத்திலேற்று கூட்டுக் குடிநீர் வழங்கு திட்டத்தில் இணைக்க முடிவு செய்தது.

குடிநீர் பொதுக் குழாய் அமைக்க நிர்ணயிக்கப்பட்டிருந்த மக்கட்தொகை 150-லிருந்து 100 என குறைக்கப்பட்டு மக்களுக்கு திட்டப் பயன் சிறப்பாகச் சென்றடைய வழிவகை செய்யப்பட்டது.

இதுவரை நகரகப் பகுதிகளின் வசதியென கருதப்பட்ட "குடிநீர் வீட்டு இணைப்பு" வசதியினை மாநிலத்தின் ஊரகப் பகுதிகளிலும் அமைத்துத்தா முடிவு செய்தது.

இந்திய துணைக் கண்டத்திலேயே முதல் மாநிலமாக தமிழகத்தில் ஊரகப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கு அளவினை நாளொன்றிற்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டரிலிருந்து 55 லிட்டராக உயர்த்தியது.

உள்ளாட்சிகள் குடிநீர்க் கட்டணம் வசூலித்து, அதற்குத் தனி கணக்கு வைத்து, அவ்வாறு வசூலித்த தொகையை முடிக்கப்பட்ட குடிநீர் வழங்கு திட்ட இயக்கம் மற்றும் பராமரிப்பிற்கு மட்டுமே பயன்படுத்த வழிவகை செய்தது.

"அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்" கீழ் ஊரகப் பகுதிகளில் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஓர் ஊராட்சி என்ற விகிதத்தில், கடந்த இரண்டாண்டுகளில் 121 கோடி ரூபாய் செலவில் 421 ஊராட்சிகளுக்கு குடிநீர் வசதி அமைத்துத் தந்தது.

கடந்த ஆண்டுகளில் முடிக்கப்பட்ட குடிநீர் வழங்கு திட்டங்களின் முழுப்பயனை அடைவதற்கு, 1996-97 ஆம் ஆண்டு முதல் புனரமைப்புப் பணிகளை ஏற்றது.

வாரியத்திறனை கூட்டும்பொருட்டு, குடிநீர் ஆதாரம் உருவாக்கும் பணிக்கு புதியதாக 12 ஆழ்துளையிடும் கருவிகள், மற்றும் தொழில்நுட்பப் பணியாளர் பயண வசதிக்கென





243 ஈப்புகள் மற்றும் 24 இதர ஊர்திகள் வழங்கப்பட்டன; இதுமட்டுமன்றி புதியதாக 100 பொறியாளர்கள் வேலையில் அமர்த்தப்பட்டனர். மேலும், குடிநீர் வழங்கு திட்ட இயக்கம் மற்றும் பராமரிப்பிற்கென 2,000 திறன் பெற்ற பணியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர்.

வாரியப் பணிகளின் தரத்தை உறுதி செய்யும் பொருட்டு தர உத்தரவாத பிரிவு அமைக்கப்பட்டது.

குடிநீரின் தரத்தை முழுமையாக உறுதிபடுத்தும் வகையில் மாவட்ட அளவிலான சோதனைக் கூடங்கள் அமைக்கப்பட்டன.

செயலாக்க அறிவு மற்றும் பணித்திறன் இவற்றை புகட்டும் வகையில் மனித வள மேம்பாட்டுப் பிரிவு அமைக்கப்பட்டு 2,800 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

நிருவாக மற்றும் தொழில்நுட்பப் பணி நடைமுறைகள் பின்வருமாறு எளிதாக்கப்பட்டன:—

குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு நிருவாக மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்குவதற்கான அதிகாரங்கள் முறைப்படுத்தப்பட்டன.

10 கோடி ரூபாய் வரையிலான மதிப்புள்ள எல்லா குடிநீர் திட்டங்களுக்கும் வாரியமே நிருவாக ஒப்புதல் வழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

10 கோடி ரூபாய்க்கு மேலான மதிப்புள்ள குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு நிருவாக ஒப்புதல் வழங்க உயர்மட்ட அதிகாரக் குழு உருவாக்கப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதில் ரூ.1.00 கோடி என்ற உச்சவரம்பு நீக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு வாரியத்திற்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளிகள் பற்றிய தகவல்கள் தாங்கிய ஒப்பந்தப்புள்ளி வெளியீடு வெளியிடப்படுகிறது.

[1999 மே 12

ஒரு கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கணிப்பொறி இணையத்தில் வெளியிடப்படுகிறது. (http: www/twadboard/com).

விழுக்காடு ஒப்பந்தப்புள்ளி முறை அறிமுகப்படுத்தப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விரைவான முடிவு எடுக்கப்படுகிறது. திட்ட செயலாக்கத்தின் வேகம் மற்றும் திறமையை மேம்படுத்தும் நோக்கோடு 'டர்ன் கீ' முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர்கள் அதிக அளவில் பங்கேற்பிற்கு வழி வகுக்கப்பட்டது.

திட்டங்களை அதிக அளவில் உருவாக்கும் நோக்கோடு, கள ஆய்வு மற்றும் விரிவான வடிவமைப்புப் பணிகளை ஏற்க தகுதி வாய்ந்த கலந்தறிதற்குரியவர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர்.

## ஊரகக் குடிநீர் வழங்கல்

### பொது விவரங்கள்

6. ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கு திட்டங்கள் மாநில அரசின் குறைந்தபட்ச அடிப்படைத் திட்டம் மற்றும் மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கு திட்டம் ஆகியவற்றின்கீழ் முழுமானியமாக நிதியுதவி பெற்று செயல்படுத்தப்படுகின்றன. ஊரகக் குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகமும் கடனுதவி வழங்குகிறது.

7. ஊரகக் குடியிருப்புகளில் நிலவும் குடிநீர் வழங்கும் நிலையை அறியும் வகையில் கால முறை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஊரகக் குடியிருப்புகள் குடிநீர் வழங்கு பணிகளில் தேசிய அளவுக் குறியீட்டின்படி மூன்று வகையாக அதாவது (i) தேசிய அளவுக் குறியீடான நாளொன்றிற்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள் "முழுமையாக குடிநீர் வசதி பெற்றவை" எனவும், (ii) நாளொன்றிற்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டருக்கும்கீழ் குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள் "பகுதியாக குடிநீர் வசதி பெற்றவை"



1999 மே 12]

எனவும், மற்றும் (iii) எந்தவொரு பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரமும் இல்லாத குடியிருப்புகள் "குடிநீர் வசதி பெறாத குடியிருப்புகள்" எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. 1992 ஆம் ஆண்டு நடத்திய ஆய்வின் முடிவுகளே தற்போது செயல்படுத்தப்படும் குடிநீர் வழங்கு பணிகளுக்கு அடிப்படையாகும். ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கு நிலை பின்வருமாறு உள்ளது:—

| நாள் | குடியிருப்புகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | முழுமையாக குடிநீர் வசதி பெற்றவை | பகுதியாக குடிநீர் வசதி பெற்றவை | இதுவரை குடிநீர் வசதி பெறாதவை | மொத்தம் |
| 1-4-1993 | 23234 | 41970 | 1427 | 66631 |
| 1-4-1994 | 27002 | 38420 | 1209 | 66631 |
| 1-4-1995 | 30810 | 34790 | 1031 | 66631 |
| 1-4-1996 | 34459 | 32018 | 154 | 66631 |
| 1-4-1997 | 37155 | 29476 | .. | 66631 |
| 1-4-1998 | 41655 | 24976 | .. | 66631 |
| 1-4-1999 | 49629 | 17002 | .. | 66631 |

8. 2002 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் பகுதியாக குடிநீர் வசதி பெற்ற நிலையிலுள்ள அனைத்துக் குடியிருப்புகளையும் முழுமையாக குடிநீர் வசதி பெற்ற நிலைக்கு உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது.

## 1998-99 ஆம் ஆண்டில் செயல்பாடு

9. 1998-99 ஆம் ஆண்டில், வாரியம் இதுவரை இல்லாத அளவு செயலாக்க சாதனையை எய்தியது. ஆண்டு இலக்கான 6000 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கு பணிகள் என்ற நிலையில், 7974

[1999 மே 12

குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கி சாதனை புரிந்தது. இதேபோல், 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதி இலக்கு ரூ. 274 கோடி என்ற நிலையில் ரூ. 324 கோடி செலவில் பணிகளைச் செயல்படுத்தி புதிய எல்லையை அடைந்துள்ளது.

## 1999-2000 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

***10.*** *1999-2000* நிதியாண்டில், *6300* "பகுதியாக, குடிநீர் வசதி பெற்ற" குடியிருப்புகளுக்கு நாளொன்றிற்கு, நபர் ஒருவருக்கு *55* லிட்டர் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. *450* கோடியாகும். இதில் ரூ. *150* கோடி மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கு திட்டத்தின்கீழ் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கிட்டத்தட்ட ரூ. *100* கோடி செலவில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வாழும் *2000* குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் பணிகளும் அடங்கும்.

### I. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

***11.*** *1997-98* ஆம் ஆண்டு, அரசு "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்னும் ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வந்தது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், ஏதேனும் ஓர் ஊராட்சி தேர்வு செய்யப்பட்டு அவ்வூராட்சியின் அனைத்துப் பகுதிகட்கும் குடிநீர் வசதி உட்பட, அனைத்து அடிப்படை வசதிகளையும் அமைத்துத்தர முடிவு செய்யப்பட்டது. *1997-98* மற்றும் *1998-99* ஆகிய இரண்டாண்டுகளில் *424* கிராம ஊராட்சிகளில், *3389* குடிநீர் வழங்கு திட்டங்கள் *118.86* கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலுக்கு ஏற்கப்பட்டு, *31-3-1999* வரை *2706* பணிகள் முடிக்கப்பட்டன. மீதமுள்ள பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இத்திட்டத்தின்கீழ் *1999-2000* நிதி ஆண்டில், மேலும் *212* கிராம ஊராட்சிகளில் முழுமையாகக் குடிநீர் வசதி செய்துதர திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு குறைந்தபட்ச அடிப்படை பணி திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கப்படும்.

### II. குடிநீர் வழங்கு திட்டங்கள் புனரமைப்பு

***12.*** கணிசமான அளவு செலவில் செயல்படுத்தப்பட்ட பல குடிநீர் வழங்கு திட்டங்கள், முறையான பராமரிப்பின்மையால் செயலற்றுப் போயிருந்தன. செயலற்றுப் போன இத்திட்டங்களின் நிலை



1999 மே 12]

முதன்முறையாக அரசால் கண்டறியப்பட்டு, *1996-97*ஆம் ஆண்டு இத்தகைய திட்டங்களின் புனரமைப்புப் பணிகளை இரண்டாண்டுகளில் ஏற்க *52* கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. *1998-99* ஆம் ஆண்டு, மேலும் இரண்டாண்டுகளுக்கு ஊரக மற்றும் நகர உள்ளாட்சிகளின் பங்கேற்போடு செயல்பட புனரமைப்புப் பணிகளுக்காக ரூ. *52* கோடி நிதி ஒதுக்கப்பட்டது. *1999-2000* ஆம் ஆண்டில், இந்தப் புனரமைப்புத் திட்டம், *50* விழுக்காடு செலவை ஏற்க முன்வரும் உள்ளாட்சிப் பகுதிகளில் செயல்படுத்தப்படும்.

### III. ஃபுளோரைடால் பாதிக்கப்பட்ட பகுதிகட்கு குடிநீர்

***13.*** ஃபுளோரோசிஸ் என்னும் நலக்கேடு, மனிதனின் வளமான வாழ்வையும், உற்பத்தித் திறனையும் பலவீனப்படுத்தவல்லது. ஆண், பெண் மற்றும் சிறார்கள் ஃபுளோரோசிஸ் நோயால் முடமாக்கப்பட்டிருக்கிறார்கள். ஃபுளோரைடு உடலின் உட்செல்ல பல வழிகள் இருந்தபோதிலும், *60* விழுக்காடு ஃபுளோரைடு உட்செல்வது குடிநீர் மூலமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் சேலம், ஈரோடு, நாமக்கல், தர்மபுரி, திருச்சி, கரூர், கோவை, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த *3,555* ஊரகக் குடியிருப்புகளில் குடிநீர் ஆதாரங்களில் அதிக அளவில் ஃபுளோரைடு இருப்பது கண்டு அறியப்பட்டது. இப்பகுதிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டு, *31-3-1998* வரை *888* குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்துதரப்பட்டது. *1998-99*ஆம் ஆண்டு *752* குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டது. *1999-2000*ஆம் ஆண்டில் *60* கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் *950* குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அமைத்துத்தர திட்டமிடப்பட்டுள்ளது. ஃபுளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் அனைத்திற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணி *31-3-2001*-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### IV. உப்புநீரை நன்னீராக்கும் கலன்கள்

***14.*** தமிழகத்தின் நீண்ட கடலோரப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கு பணிகளில் நீராதாரங்களில் உப்பு மற்றும் உவர்தன்மை பிரச்சினையாக அமைந்துள்ளது. அதிலும் உப்பு நீரால் பாதிக்கப்பட்ட பகுதி அதிகமடங்கிய இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரிய அளவில் உள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு

காணும் வகையில் 11 இடங்களில் "உப்பு நீரை நன்னீராக்கும் கலன்" நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் 345 ஊரகக் குடியிருப்புகள் பயனுறும் வகையில் ஒரு பெரிய அளவிலான, நாளொன்றிற்கு 3.80 மில்லியன் லிட்டர் கொடுதிறன் கொண்ட பெரியதொரு "கடல் நீரை நன்னீராக்கும் கலன்" நரிப்பையூரில் நிறுவும் பணியும் அடங்கும். இவையன்றி, ஆஸ்திரிய நாட்டு உதவியுடன் தூத்துக்குடியில், பல்லடுக்கு ஒளி தொழில்நுட்பத்துடன்கூடிய, நாளொன்றிற்கு 20 மில்லியன் லிட்டர் கொடுதிறன் கொண்ட உப்பு நீரை நன்னீராக்கும் கலன் நிறுவும் பணி ஏற்கப்படவுள்ளது. இந்தக் கலன், தூத்துக்குடி அனல் மின்நிலையத்திலிருந்து வெளியாகும் குறைந்த அழுத்த நீராவியினைப் பயன்படுத்தி, கடல்நீரை நன்னீராக்க வல்லதாகும்.

## V. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வசதிகளை நிரந்தரமாக்க வழிமுறைகள்

*15.* அனைத்து ஊரகப் பகுதிகளுக்கும் மின்னிறைப்பான் மூலம் குழாய் வழி குடிநீர்த் திட்டம், நபர் ஒருவருக்கு, நாளொன்றிற்கு 40 லிட்டருக்கு பதிலாக 55 லிட்டர் என குடிநீர் வழங்கும் அளவில் உயர்வு மற்றும் வீட்டு இணைப்பு வசதி போன்ற கொள்கை முனைப்புகளைச் செயலாக்கும்போது அவற்றை நிரந்தரமாக்கும் வழிமுறைகள் பற்றியும் சிந்திக்கவேண்டியுள்ளது. குடிநீர் வழங்கு திட்டங்கள் நிரந்தரமாகச் செயல்பட திட்டப் பயனாளிகளின் பங்கேற்பு என்பது முக்கிய அம்சமாகும். தற்போது பயனாளிகளின் உண்மையான தேவையினை அறியாமல், நபர் ஒருவருக்கு நாளொன்றிற்கு 40 லிட்டர் என முன்னமே முடிவு செய்யப்பட்டு, குடிநீர் வழங்கு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. பயனாளிகளின் சரியான தேவையை அறிந்து, அதன் அடிப்படையில் குடிநீர் வழங்கு திட்டங்கள் நிறைவேற்றும் முறை உலகெங்கும் தற்போது கடைப்பிடிக்கப்படுகிறது. பயனாளிகளின் சரியான குடிநீர் தேவை பற்றி அறியவும், கூடுதல் வருமானம் மற்றும் அதனால் ஏற்படும் கூடுதல் தேவை ஆகியவற்றால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தேவை மாற்றங்கள் பற்றி அறியவும், குடிநீர் வழங்கு திட்டங்களைப் பயனாளிகளின் தேவையை அறிந்து, அதன் அடிப்படையில் செயலாக்குவது அவசியமாகிறது. டேனிடா உதவியுடன் கூடிய "கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் குடிநீர் வழங்கு திட்ட புனரமைப்பு, நிரந்தரப் பராமரிப்பு மற்றும் கழிவு நீர் அகற்றல்" என்கிற திட்டத்தின்கீழ் "பங்கேற்பு மற்றும் தேவை அடிப்படையில் அணுகுதல்" என்கிற கொள்கை செயலாக்கப்படுகிறது. திட்டப் பகுதிகளில் நிரந்தர முறையில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வசதி அமைத்துத் தருவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். வகைப்படுத்தப்பட்ட ஊராட்சி அடுக்கின் அடிப்படையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டப் பணிகள் அனைத்தும் தேவை அடிப்படையிலேயே அமைந்தவை என்பதோடு, குடிநீர் வழங்கு பணிகளுக்கான திட்டம், செயலாக்கம், கண்காணிப்பு மற்றும் மேலாண்மை ஆகியவற்றில் மக்கள் பங்கேற்பு என்பது இத்திட்டச் சிறப்பாகும். முடிக்கப்பட்ட திட்டத்தைப் பயன்பெறும் மக்களே பராமரிப்பது என்பதும் திட்டத்தின் பகுதியாகும். இத்திட்டத்தின் மூலம் 350 கிராம ஊராட்சிகளில் 30,000 வீடுகளுக்குக் குடிநீர் வசதி மற்றும் 700 நிறுவன கழிப்பறைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. உருவாக்கப்பட்ட திட்டங்கள் நிரந்தரமாகச் செயல்பட பயனாளிகள் பங்கேற்பு அவசியமாகும். குடிநீர் வழங்கு திட்டப் பயனாளிகள் பொதுவாக ஒரு திட்டத்தினை நிறைவேற்றுவதில் உள்ள இடையூறுகளை அறியமாட்டார்கள். குடிநீர் வழங்கு திட்டச் செலவு மற்றும் கட்டுப்பாடுகளை பயனாளிகள், முக்கியமாக பெண்கள் அறிதல் அவசியம். திட்ட கட்டமைப்புகளைப் பற்றி பயனாளிகள், அதிலும் குறிப்பாக பெண்கள், தங்களின் கருத்துகளைக் கூற வாய்ப்புகள் வேண்டும். கடைசிப் பயனாளிகளான பெண்கள் குடிநீர் வழங்கு பணிகளின் செயல்முறைகளை அறிந்து, அத்திட்டத்தின் உடைமையாளர் மற்றும் கூட்டு அக்கறை கொண்டவர்கள் என்கிற நினைப்பை எப்போது அடைகிறார்களோ, அப்போதுதான் இருக்கக்கூடிய ஆதாரங்கள் முறையாக, அறிவார்த்தத்துடன் பயனாகக்கூடிய நிலை ஏற்படும். இந்த நிலை காண, பயன்பெறும் மக்களின் பங்கேற்பு என்பது திட்ட ஆய்விலிருந்து தொடங்கி, நீரின் அளவைப் பங்கிடுதல், பல்வேறு திட்ட பாகங்களை அமைத்தல் என்பவை மக்களால் கூட்டு முறையில் எடுக்கப்பட்ட ஒருமித்தக் கருத்தாக இருத்தல் வேண்டும். திட்டத்தினைச் செயல்படுத்துவதைவிட, செயல்படுத்தப்பட்ட திட்டத்தினைச் சரிவரப் பராமரிப்பதன் மூலமே, திட்டப்பயன்கள் பயனாளிகளை நிரந்தர அடிப்படையில் சென்றடையச் செய்யமுடியும். இந்நிலைகாண உள்ளூர் மக்களைப் பராமரிப்புப் பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். இதன் அடிப்படையில், "கிராம அளவிலான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று குழுக்கள்" அமைக்கப்படும். இவற்றில் 30 விழுக்காடு பெண் உறுப்பினரும், குறைந்தபட்சம் 20 விழுக்காடு பிற்படுத்தப்பட்ட,

[1999 மே 12

தாழ்த்தப்பட்ட, வசதியற்ற பகுதியினரும் இடம் பெறுவர். இத்தகைய ஊராட்சி அளவிலான குழுக்களிடம் திட்டச் செயலாக்கம், அதாவது, உண்மையான தேவையை அறிதல், திட்ட விருத்திக்கான இடங்களைத் தேர்வு செய்தல், பயன்பெறும் இடங்களைத் தேர்வு செய்தல், திட்டச் செலவினை வசூலித்தல், திட்ட இயக்கம் மற்றும் பராமரிப்பு ஆகிய பணிகளுக்கான பொறுப்புகள் ஒப்படைக்கப்படும்.

## நகரகக் குடிநீர்த் திட்டங்கள்

***16.*** தமிழ்நாடு அதிக அளவில் நகர்ப்புற வளர்ச்சி அடைந்த மாநிலமாகும். நகர்ப்புறப் பகுதிகளுக்கும் முறையான குடிநீர் வசதி அளிப்பதற்கு தமிழக அரசு முன்னுரிமை அளிக்கிறது. குடிநீர்த் திட்டங்களுக்கு தமிழக அரசின் நிதி வழங்கு கொள்கையின்படி, மாநகராட்சி மற்றும் நகராட்சி குடிநீர்த் திட்டங்களுக்கு 100 விழுக்காடு அரசு அல்லது ஆயுள் காப்பீட்டுக் கழகம்/வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் (ஹட்கோ) ஆகிய நிதி நிறுவனங்களிடம் இருந்து கடனாகவும், நகரகப் பேரூராட்சி குடிநீர்த் திட்டங்களுக்கு 70 விழுக்காடு கடன் மற்றும் 30 விழுக்காடு அரசு மானியமாகவும் மற்றும் ஊரகப் பேரூராட்சி பகுதிகளுக்கு 100 விழுக்காடு அடிப்படை தேவை பணி திட்டத்தின்கீழ் அரசு மானியமாகவும் வழங்கி குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

***17.*** மாநகராட்சிப் பகுதிகளுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு நபர் ஒருவருக்கு, நாள் ஒன்றுக்கு 110 லிட்டர் எனவும், நகராட்சிப் பகுதிகளுக்கு நபர் ஒருவருக்கு, நாள் ஒன்றுக்கு 90 லிட்டர் எனவும் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளுக்கு நபர் ஒருவருக்கு, நாள் ஒன்றுக்கு 70 லிட்டர் எனவும் வரையறுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள 743 நகரங்களில் தற்போதைய குடிநீர் வசதி நிலைமை வருமாறு:—



1999 மே 12]

| நாள் | மொத்த நகரங்கள் | போதுமான குடிநீர் வசதியுடைய நகரங்கள் | சராசரி குடிநீர் வசதியுடைய நகரங்கள் | குறைவான குடிநீர் வசதியுடைய நகரங்கள் |
|---|---|---|---|---|
| **மாநகராட்சிகள்** | | | | |
| 1-4-1993 | 2 | -- | 1 | 1 |
| 1-4-1994 | 2 | -- | 1 | 1 |
| 1-4-1995 | 5 | -- | 5 | -- |
| 1-4-1996 | 5 | -- | 5 | -- |
| 1-4-1997 | 5 | -- | 5 | -- |
| 1-4-1998 | 5 | -- | 5 | -- |
| 1-4-1999 | 5 | -- | 5 | -- |
| **நகராட்சிகள்** | | | | |
| 1-4-1993 | 107 | 9 | 40 | 58 |
| 1-4-1994 | 108 | 9 | 41 | 58 |
| 1-4-1995 | 103 | 11 | 42 | 50 |
| 1-4-1996 | 104 | 12 | 44 | 48 |
| 1-4-1997 | 104 | 15 | 43 | 46 |
| 1-4-1998 | 102 | 16 | 44 | 42 |
| 1-4-1999 | 102 | 20 | 42 | 40 |

[1999 மே 12

| நாள் | மொத்த நகரங்கள் | போதுமான குடிநீர் வசதியுடைய நகரங்கள் | சராசரி குடிநீர் வசதியுடைய நகரங்கள் | குறைவான குடிநீர் வசதியுடைய நகரங்கள் |
|---|---|---|---|---|
| **நகரப் பேரூராட்சிகள்** | | | | |
| 1-4-1993 | 378 | 66 | 106 | 206 |
| 1-4-1994 | 377 | 65 | 105 | 207 |
| 1-4-1995 | 368 | 98 | 104 | 166 |
| 1-4-1996 | 370 | 102 | 101 | 167 |
| 1-4-1997 | 370 | 105 | 100 | 165 |
| 1-4-1998 | 371 | 113 | 102 | 156 |
| 1-4-1999 | 371 | 130 | 105 | 136 |
| **ஊரகப் பேரூராட்சிகள்** | | | | |
| 1-4-1993 | 269 | 20 | 77 | 172 |
| 1-4-1994 | 269 | 27 | 82 | 152 |
| 1-4-1995 | 268 | 42 | 76 | 148 |
| 1-4-1996 | 265 | 62 | 70 | 133 |
| 1-4-1997 | 265 | 71 | 68 | 126 |
| 1-4-1998 | 265 | 87 | 66 | 112 |
| 1-4-1999 | 265 | 104 | 66 | 95 |



1999 மே 12]

## 1998-99 ஆம் ஆண்டின் செயல்பாடு

18. 1-4-1998 வரை குறைவாகக் குடிநீர் வசதி பெற்று வந்த நகரங்கள் 310 ஆகும். 1998-99 ஆம் ஆண்டு 3 மாநகராட்சிகள், 26 நகராட்சிகள், 66 நகரப் பேரூராட்சிகள் மற்றும் 52 ஊரகப் பேரூராட்சிகள் ஆகியவற்றைச் சேர்த்து மொத்தம் 147 நகரங்களுக்கு குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் 5 நகராட்சிகள், 20 நகரப் பேரூராட்சிகள், 17 ஊரகப் பேரூராட்சிகள் என மொத்தம் 42 நகரங்களுக்கு குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட்டு, போதுமான அளவு குடிநீர் வசதி அளிக்கப்பட்டது. இத்திட்டங்களுக்காக ரூ. 83.72 கோடி செலவிடப்பட்டது.

## 1999-2000 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

19. 1999-2000 ஆம் ஆண்டில் 3 மாநகராட்சிகள், 21 நகராட்சிகள், 46 நகரப் பேரூராட்சிகள் மற்றும் 35 ஊரகப் பேரூராட்சிகளில் தொடர் குடிநீர்த் திட்டங்களின் செயலாக்கம் தொடரப்படும். இவை தவிர, புதிதாக 12 நகராட்சிகள், 25 நகரப் பேரூராட்சிகள் மற்றும் 9 ஊரகப் பேரூராட்சிகள் பயன்பெறும்வகையில் புதிய குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். 1999-2000 ஆம் ஆண்டில் 6 நகராட்சிகள், 20 நகரப் பேரூராட்சிகள் மற்றும் 20 ஊரகப் பேரூராட்சிகளில் குடிநீர்த் திட்டப் பணிகளை நிறைவேற்றி, பயனுக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. நகரக் குடிநீர்த் திட்டங்களின் செயலாக்கத்திற்காக 1999-2000 ஆம் ஆண்டில் நிதி ஆதாரம் பின்வருமாறு:—

| வ எண் | | நிதி ஆதாரம் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1. | | மாநில வரவு-செலவுத் திட்டம் | |
| | அ. | கடன் | 10.00 |
| | ஆ. | மானியம் (ஊரகப் பேரூராட்சிகளுக்கு ரூ. 20 கோடி உட்பட) | 40.00 |
| | இ. | பொன்விழா உதவித் தொகை | 50.00 |
| 2. | | நிதி நிறுவனங்கள் - கடன் | 100.00 |
| | | மொத்தம் | **200.00** |

[1999 மே 12

## அ. செயல்பாட்டில் உள்ள நகரகக் குடிநீர் வழங்கும் திட்டங்கள்

| ஆண்டு | செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திட்ட விவரங்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | நகரகப் பேரூராட்சிகள் | ஊரகப் பேரூராட்சிகள் | மொத்தம் |
| ***1998-1999*** | | | | | |
| செயல் | 3 | 26 | 66 | 52 | 147 |
| 1999-2000-க்கான திட்டம் | 3 | 21 | 46 | 35 | 105 |
| நிதி | (ரூபாய் கோடியில்) | | | | |
| மதிப்பீட்டு தொகை | 28.25 | 144.26 | 149.84 | 96.06 | 418.41 |
| 1999 மார்ச் வரை மொத்தச் செலவு | 5.98 | 27.78 | 43.71 | 50.31 | 127.78 |
| மீதமுள்ள பணிகளின் மதிப்பு | 22.27 | 116.48 | 106.13 | 45.75 | 290.63 |
| 1999-2000-க்கான திட்டம் | | 10.00 | 20.00 | 15.00 | 45.00 |



1999 மே 12]

## ஆ. 1999-2000 ஆம் ஆண்டில் புதியதாகச் செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள திட்டங்கள்:

| ஆண்டு | செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள திட்ட விவரங்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | நகரகப் பேரூராட்சிகள் | ஊரகப் பேரூராட்சிகள் | மொத்தம் |
| ***1999-2000*** | | | | | |
| செயல் | .. | 12 | 25 | 9 | 46 |
| நிதி | (ரூபாய் கோடியில்) | | | | |
| மதிப்பீட்டு தொகை | .. | 75.39 | 61.40 | 78.82 | 215.61 |
| 1999-2000-க்கான திட்டம் | பொன்விழா திட்டங்களுக்கான உதவித் தொகை 50.00 | | | 5.00 | 55.00 |

## வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழக கடன் (ஹட்கோ) உதவி பெறும் திட்டங்கள்

20. தமிழக அரசும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகமும் இணைந்து ஏற்படுத்திக்கொண்ட உடன்பாட்டின்படி வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் ஐந்தாண்டு காலத்திற்கு குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ. 500 கோடி கடனுதவி அளிக்க முன்வந்துள்ளது. இந்த உடன்பாட்டின்படி 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 60.27 கோடி கடன் உதவி பெறப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ. 180 கோடி அளவில் கடன் உதவி பெறப்படவுள்ளது. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழக கடன் உதவியுடன் 44 நகரங்களில் குடிநீர்த் திட்டப் பணிகள் செயலாக்கத்தில் இருந்து வருகின்றன. இத்திட்டப்பணிகள் 1999-2000 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். திட்டப்பணி விவரங்கள் வருமாறு:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப் பீட்டுத் தொகை | கடன் தொகை. | பெறப் பட்ட கடன் | 1999-2000-ஆம் ஆண்டு பெறப்பட வுள்ள கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | | | |
| | **செறிவு 1** | | | | |
| 1. | நாகர்கோவில் | 17.06 | 14.79 | 3.35 | 10.31 |
| 2. | தென்காசி | 10.66 | 7.78 | 4.12 | 3.66 |
| 3. | தாம்பரம் | 17.70 | 15.15 | .. | 8.71 |
| 4. | சிட்லபாக்கம் | 0.81 | 0.59 | 0.42 | 0.17 |
| 5. | கும்பகோணம் | 13.54 | 12.59 | 12.59 | .. |
| 6. | மயிலாடுதுறை | 11.00 | 8.50 | 2.05 | 4.21 |
| | **மொத்தம்** | **70.77** | **59.40** | **22.53** | **27.06** |
| | **செறிவு 2** | | | | |
| 1. | தூத்துக்குடி | 17.27 | 13.28 | 0.29 | 3.98 |
| 2. | திருச்சி | 14.23 | 10.73 | 0.29 | 9.20 |
| 3. | கே. சாத்தனூர் (திருச்சி மாநகராட்சி) | 2.21 | 1.81 | 0.90 | 0.90 |
| 4. | சென்னிமலை | 7.59 | 4.96 | 0.96 | 2.00 |
| 5. | வேதாரண்யம் | 14.23 | 10.51 | 0.07 | 6.35 |
| 6. | திருத்துறைப்பூண்டி | 9.38 | 6.94 | 0.13 | 4.27 |
| 7. | அதிராமப்பட்டினம் | 1.62 | [illegible] | | |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப் பீட்டுத் தொகை | கடன் தொகை. | பெறப் பட்ட கடன் | 1999-2000-ஆம் ஆண்டு பெறப்பட வுள்ள கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| | **செறிவு 2—தொடர்ச்சி** | | | | |
| 8. | அல்லாபுரம் | 4.81 | 2.68 | 0.42 | 1.82 |
| 9. | தொரப்பாடி | 1.16 | 0.87 | 0.18 | 0.6[illegible] |
| 10. | தாராசுரம் | 1 20 | 0.85 | 0.66 | 0.19 |
| 11. | அருப்புக்கோட்டை | 0.84 | 0.54 | 0.42 | 0.13 |
| 12. | மணப்பாறை | 0.47 | 0.29 | 0.16 | 0.12 |
| 13. | கும்பகோணம் கழிவுநீரகற்று திட்டம் | 1.13 | 0.78 | 0.52 | 0.26 |
| | **மொத்தம்** | **76.24** | **55.40** | **5.34** | **30.65** |
| | **செறிவு 3** | | | | |
| 1. | திருநின்றவூர் | 3.25 | 0.94 | 0.49 | 0.39 |
| 2. | துவாக்குடி | 4.25 | 5.08 | 0.44 | 2.93 |
| 3. | தாந்தோணி | 4.96 | 3.00 | 2.96 | 0.03 |
| 4. | பிராட்டியூர் (திருச்சி மாநகராட்சி) | 3.97 | 1.82 | 1.82 | .. |
| 5. | கள்ளக்குறிச்சி | 5.26 | 1.84 | 0.81 | 1.03 |
| 6. | கிருஷ்ணகிரி | 3.73 | 1.12 | 1.12 | .. |
| 7. | ஆரணி | 5.55 | 4.54 | .. | 2.52 |
| 8. | வந்தவாசி | 3.41 | 1.52 | 1.18 | 0.34 |
| 9. | குடியாத்தம் | 4.13 | 1.72 | 1.33 | 0.39 |

[1999 மே 12

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீட்டுத் தொகை | கடன் தொகை. | பெறப்பட்ட கடன் | 1999-2000-ஆம் ஆண்டு பெறப்படவுள்ள கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| 11. | பட்டுக்கோட்டை | 6.91 | 3.96 | 3.96 | .. |
| 12. | துறையூர் | 7.93 | 4.09 | .. | 2.93 |
| 13. | தாத்தையங்கார் பேட்டை | 4.94 | 3.18 | 0.66 | 2.32 |
| 14. | மேட்டுப்பாளையம் (திருச்சி மாவட்டம்) | 2.98 | 1.96 | 0.19 | 1.61 |
| 15. | குமாரபாளையம் | 6.98 | 3.18 | 1.51 | 1.67 |
| 16. | பழனி | 9.98 | 0.90 | 0.90 | .. |
| 17. | சின்னாளப்பட்டி | 9.37 | 5.32 | 3.85 | 1.48 |
| 18. | வத்தலகுண்டு | 3.47 | 0.72 | 0.02 | 0.70 |
| 19. | இடப்பாடி | 7.79 | 4.41 | 4.41 | .. |
| 20. | விளாத்திக்குளம் | 4.57 | 2.27 | 0.53 | 1.74 |
| 21. | பாளையங்கோட்டை | 6.63 | 2.39 | .. | 2.29 |
| 22. | திசையன்விளை | 3.61 | 2.10 | 1.86 | 0.24 |
| 23. | நாங்குநேரி | 1.15 | 0.77 | 0.77 | .. |
| 24. | உடன்குடி | 1.98 | 1.02 | | 1.01 |
| 25. | சாத்தான்குளம் | 3.35 | 0.74 | .. | 0.69 |
| | மொத்தம் | **129.65** | **63.30** | **32.40** | **25.44** |
| | பெருமொத்தம் | 276.56 | 178.10 | 60.27 | 83.15 |



1999 மே 12]

## பொன்விழா திட்டங்கள்

21. பொன்விழா ஆண்டையொட்டி, அரசு ஒரு சிறப்புத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், குடிநீர் வசதி குறைவாக உள்ள கீழ்க்கண்ட 12 நகராட்சிகள் மற்றும் 25 நகரப் பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கு திட்டங்கள் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கென அரசு 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவன்றி, இத்திட்டத்திற்காக நிதி நிறுவனங்களிடமிருந்து 100 கோடி ரூபாய் பெறப்படும்.

| வ. எண் | மாவட்டம் | நகரத்தின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| **நகராட்சிகள்** | | | |
| 1 | விழுப்புரம் | பண்ருட்டி | 2.15 |
| 2 | விழுப்புரம் | விழுப்புரம் | 12.25 |
| 3 | கடலூர் | கடலூர் | 16.91 |
| 4 | காஞ்சிபுரம் | தாம்பரம் | 17.70 |
| 5 | திருவாரூர் | கூத்தாநல்லூர் | 1.55 |
| 6 | நாமக்கல் | திருச்செங்கோடு | 24.95 |
| 7 | தேனி | பெரியகுளம் | 5.50 |
| 8 | திருநெல்வேலி | தென்காசி | 10.66 |
| 9 | திருநெல்வேலி | கடையநல்லூர் | 15.24 |
| 10 | திருநெல்வேலி | புளியங்குடி | 16.31 |
| 11 | தூத்துக்குடி | தூத்துக்குடி | 17.27 |
| 12 | விருதுநகர் | சாத்தூர் | 4.26 |

[1999 மே 12

## நகரப் பேரூராட்சிகள்—தொடர்ச்சி

| | | | |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | பீர்க்கன்காரணை | 3.61 |
| 2 | காஞ்சிபுரம் | குன்றத்தூர் | 2.38 |
| 3 | கடலூர் | குறிஞ்சிப்பாடி | 1.35 |
| 4 | விழுப்புரம் | விக்ரவாண்டி | 2.01 |
| 5 | வேலூர் | அல்லாபுரம் | 4.81 |
| 6 | வேலூர் | பேரணாம்பட்டு | 3.67 |
| 7 | தருமபுரி | ஊத்தங்கரை | 3.04 |
| 8 | திருச்சிராப்பள்ளி | கல்லக்குடி | 0.32 |
| 9 | திருச்சிராப்பள்ளி | மணச்சநல்லூர் | 1.08 |
| 10 | ஈரோடு | அந்தியூர் | 4.62 |
| 11 | ஈரோடு | சென்னிமலை | 7.59 |
| 12 | ஈரோடு | கருமாண்டி செல்லிபாளையம் | 5.88 |
| 13 | கோயம்புத்தூர் | மடத்துக்குளம் | 3.90 |
| 14 | நாமக்கல் | சங்ககிரி | 7.61 |
| 15 | மதுரை | அவணியாபுரம் | 2.29 |
| 16 | மதுரை | பேரையூர் | 0.29 |
| 17 | திண்டுக்கல் | நத்தம் | 2.00 |
| 18 | திண்டுக்கல் | சித்தையன் கோட்டை | 2.00 |
| 19 | சிவகங்கை | கானாடுகாத்தான் | 0.58 |
| 20 | இராமநாதபுரம் | தொண்டி | 2.45 |
| 21 | திருநெல்வேலி | சுரண்டை | 5.50 |
| 22 | தூத்துக்குடி | ஆறுமுகநேரி | .. |
| 23 | தூத்துக்குடி | திருச்செந்தூர் | 10.35 |
| 24 | தூத்துக்குடி | காயல்பட்டினம் | .. |
| 25 | தூத்துக்குடி | ஆழ்வார்திருநகரி | 1.50 |



1999 மே 12]

## துரிதப்படுத்தப்பட்ட நகரகக் குடிநீர் வழங்கு திட்டங்கள்

22. மக்கள் தொகை 20,000-க்கும் குறைவாக உள்ள நகரங்களுக்கு குடிநீர் வசதி அளிக்கும் வகையில் மைய அரசு எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 'துரிதப்படுத்தப்பட்ட நகரகக் குடிநீர் வழங்கு திட்டத்தினை' அமல்படுத்தியது. இத்திட்டத்திற்கான செலவினங்களை மைய அரசு 50 விழுக்காடும், மாநில அரசு 50 விழுக்காடும் ஏற்கின்றன. மாநில அரசின் பங்கில் 5 விழுக்காடு இத்திட்டத்தினால் பயன்பெறும் உள்ளாட்சிகள் ஏற்கும். இதுவரை இத்திட்டத்தின் மூலம் 13 நகரங்களுக்குக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், 3 நகரங்களில் குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் ஏற்கெனவே செயலாக்கத்தில் உள்ள 3 நகரங்களுக்கான குடிநீர்த் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவதோடு, புதிதாக 4 நகரங்களுக்குக் குடிநீர்த் திட்டங்கள் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு உள்ளன. இத்திட்ட விவரங்கள் வருமாறு:

| வ. எண் | மாவட்டம் | நகரத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | செலவிடப்பட்ட தொகை | இருப்பில் உள்ள பணியின் மதிப்பு |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் கோடியில்) | | |
| **செயல்பாட்டில் உள்ள பணிகள்** | | | | | |
| 1 | திருவள்ளூர் | வெங்காத்தூர் | 0.46 | 0.14 | 0.31 |
| 2 | தருமபுரி | அரூர் | 1.70 | 0.60 | 1.12 |
| 3 | சேலம் | வீரக்கல்புதூர் | 2.98 | 0.35 | 2.63 |
| | மொத்தம் | | **5.14** | **1.09** | **4.05** |
| **புதிய திட்டங்கள்** | | | | | |
| 1 | மதுரை | ஒத்தக்கடை | 0.89 | .. | 0.89 |
| 2 | சிவகங்கை | திருப்புவனம் | 0.66 | .. | 0.66 |
| 3 | திருச்சி | தாத்தையங்கார்பேட்டை | 4.32 | .. | 4.32 |
| 4. | திருச்சி | மேட்டுப்பாளையம் | 2.68 | .. | 2.68 |
| | மொத்தம் | | **8.55** | .. | **8.55** |

## நகரகக் கழிவுநீரகற்று திட்டங்கள்

23. கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் கழிவு நீரகற்று திட்டப் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். திருவண்ணாமலை, விழுப்புரம், கும்பகோணம் மற்றும் கடலூர் நகராட்சிகளுக்கு கழிவுநீரகற்று திட்டங்களுக்கென நடைபெற்று வரும் ஆய்வுப் பணிகள் 1999-2000 ஆம் ஆண்டில் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், விருதுநகர், மாமல்லபுரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம் மற்றும் சிவகாசி ஆகிய நகரங்களுக்கு கழிவுநீரகற்று திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி

24. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி கழகத்தால் சில நகராட்சிகளுக்கு கழிவுநீரகற்று திட்டங்கள் அமைக்க ஆய்வு மற்றும் வடிவமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் (பகுதி), மதுரை (பகுதி), சேலம், திருச்சி (பகுதி) மற்றும் திருநெல்வேலி (பகுதி) ஆகிய 5 மாநகராட்சிகள் ஆலந்தூர், ஈரோடு, கரூர், பல்லாவரம், தாம்பரம், வேலூர் மற்றும் அம்பத்தூர் ஆகிய 7 நகராட்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 12 நகரங்களில் கழிவுநீரகற்று திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் காவிரி நதிநீர் மாசுபடுதலைக் கட்டுப்படுத்தும் திட்டம்

25. காவிரி நதிநீர் மாசுபடுவதைக் கட்டுப்படுத்த ஒரு விரிவான திட்டம் ரூ. 30.28 கோடிக்குத் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறையின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. மத்திய அரசு இத்திட்டத்தின்கீழ் 4 இடங்களில் பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளது.



| வ. எண் | இடம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | பள்ளிபாளையம் | 1.46 |
| 2 | குமாரபாளையம் | 1.30 |
| 3 | ஈரோடு (3 பகுதி) | 7.59 |
| 4 | திருச்சி (3 பகுதி) | 2.11 |
| | மொத்தம் | **12.46** |

இத்திட்டச் செலவினை மத்திய அரசு மற்றும் மாநில அரசு சரிவிகிதமாகப் பகிர்ந்து கொள்ளும். 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டப் பணிக்காக ரூ.1.90 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 1999-2000 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ.8.00 கோடி ஆகும்.

## புதிய திருப்பூர் திட்டப் பகுதி குடிநீர் வழங்கு திட்டம்

26 புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் என்ற நிறுவனத்தை நிறுவி, அந்நிறுவனத்திடம் திருப்பூர் உள்ளமைப்புப் பகுதி மற்றும் வழியோர கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி இயக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் அளவு வருமாறு —

| | (நாளொன்றிற்கு மில்லியன் லிட்டரில்) |
|---|---|
| திருப்பூர் நகராட்சி (குடிநீர்) | 50.00 |
| திருப்பூர் மற்றும் சுற்றியுள்ள தொழிற்சாலைகள் | 100.00 |
| திருப்பூர் உள்ளமைப்புப் பகுதிகள் மற்றும் பிரதானக் குழாய்ப்பாதையில் அமைந்துள்ள வழியோர கிராமங்கள். | 35.00 |
| மொத்தம் | **185.00** |

புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம், இத்திட்டத்திற்கு தனியார் நிதியுதவி பெறும் வகையிலும், திட்டத்தைச் செயலாக்கவும், 30 ஆண்டுகாலத்திற்குத் திட்டத்தைப் பராமரித்துப் பின்னர் அரசிடம் ஒப்படைக்கும் வகையில் தமிழக அரசுடன் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதியுதவி உலக வங்கி, அமெரிக்க உதவி, இந்திய தொழில் வளர்ச்சி வங்கி, தொழில் வளர்ச்சி நிதி நிறுவனம் மற்றும் ஹட்கோ ஆகிய நிறுவனங்களிடமிருந்து பெற முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான கட்டுமான செலவு சுமார் 900 கோடி ரூபாய் அளவில் இருக்கும்.

இத்திட்டத்தின்கீழ் பிரதான குழாயின் இருமருங்கிலும் உள்ள பெருந்துறை, சென்னிமலை, ஊத்துக்குளி மற்றும் திருப்பூர் ஆகிய 4 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 792 ஊரகக் குடியிருப்புகள் முழுமையாகப் பயன் அடையும். இது தவிர, ஊத்துக்குளி ஒன்றியத்திலுள்ள கடும் வறட்சிப் பகுதிகள் இத்திட்டத்தின் மூலம் பயன் அடையும். இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் 792 ஊரகக் குடியிருப்புகளின் உள் கட்டமைப்புப் பணிகளுக்கான தோராய மதிப்பீடு சுமார் ரூ.51 கோடி ஆகும். 1999-2000 ஆம் ஆண்டில் இப்பணிகளுக்காக ரூ.15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டப்பணிகள் அனைத்தும் மூன்றாண்டு காலத்தில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## மனித வள மேம்பாடு

27. இராஜீவ் காந்தி தேசிய குடிநீர் குழுமத்தின் உதவியுடன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் 1995-ஆம் ஆண்டு மனித வள மேம்பாட்டுப் பிரிவு தொடங்கப்பட்டது. ஊரகக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று துறையில், போதுமான அளவு செயல்நோக்கு, தேர்ச்சி ஆகியவற்றில் பல்வேறு நிலையில் உள்ள பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்து, அதன்மூலம் குடிநீர் மற்றும் கழிவுநீர் துறையில் நிரந்தர முடிவு காண, அதிலும் முக்கியமாக ஊரகப் பகுதியில் இத்துறையில் நிரந்தர முடிவு காண்பதே இப்பிரிவின் முக்கிய செயல்நோக்காகும்.

மனித வள மேம்பாட்டுத் துறையின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் வகையில் தமிழக அரசு மாநில தலைமைக் குழு, செயற் குழு மற்றும் மாவட்ட அளவிலான குழுக்களை ஏற்படுத்தியுள்ளது. மாவட்ட அளவில் 1000 நபர்களுக்கும் அடிமட்ட அளவில் 22000 நபர்களுக்கும் பயிற்சி அளிப்பதே மனித வள மேம்பாட்டுத் துறையின் முக்கிய நோக்கமாகும்.



பொதுச்சுகாதாரம், கல்வி, சமூக நலம் முதலிய பல்வேறு துறைகளைச் சார்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் அரசுசாரா நிறுவன அலுவலர்கள் (NGO) ஆகியோருக்கு மாவட்ட அளவில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

மாவட்ட அளவில் பங்கேற்கும் பயிற்சியாளர்களுக்கு (1) அடிகுழாய் இயக்கம் மற்றும் பராமரிப்பு (2) சுகாதாரக் கழிப்பிடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல் (3) சுகாதாரக் கல்வி, (4) பொதுமக்களின் பங்கேற்பு மற்றும் (5) குடிநீரின் தரச் சோதனை முதலிய பல்வேறு பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இதுவரை மாவட்ட அளவில் 123 நபர்களுக்கும், அடிமட்ட அளவில் 2098 நபர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 574 அலுவலர்களுக்கும் தொழில்முறை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## நீர்வள மேம்பாட்டுத் திட்டங்கள்

28. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தனது ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளில் ஒரு பகுதியாகச் செயற்கை முறையில் நீர் வளத்தை மேம்படுத்தும் கட்டமைப்புகளை உருவாக்க சரியான இடங்களை நீரியல், புவியியல் மற்றும் இரசாயனவியல் ஆகியவற்றைத் தேர்வு செய்ய முன்னோடி ஆய்வுகள் மேற்கொண்டது. இந்த ஆய்வின்படி காவிரி படுகையில் காரைப் பொட்டனார் நீர்ப்படுகையில் நீர்வள மேம்பாட்டுக் கட்டமைப்புகள் கட்டப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகின்றது. ஊரகப் பகுதிகளுக்கு நிரந்தரமாகக் குடிநீர் வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அ. வழுவநதி நீர்ப்படுகை, முட்டஞ்சேரி மற்றும் என்.புதுப்பட்டி நீர்ப்படுகைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பன்னாட்டு குழந்தைகள் நிறுவனம் மற்றும் ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்ட குழுமத்தின் உதவியுடன் மேற்கொண்டு ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

## தொலை உணர்வு ஆய்வு

29. நிலத்தடி நீர் நிலை பற்றி அறிந்திட தொலை உணர்வு ஆய்வு நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. செயற்கைக்கோள் படம் மற்றும் வான்வெளி நிழற் படங்களைக் கொண்டு பெறப்படும் தொலை உணர்வு தகவல்கள் நிலநீர் வள ஆய்வு, நில நீர் வரைபடங்கள் தயாரிக்க பயன்படுகின்றது.

இந்த தொலை உணர்வு ஆய்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் புவிபௌதீக ஆய்வு 98 விழுக்காடுகள் வெற்றி ஈட்டியுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், அண்ணா பல்கலைக்கழகத் தொலை உணர்வு மையமும் இணைந்து நிலத்தடி நீரை மேம்படுத்தும் இடங்களைக் கண்டறியும் திட்டம் ஒன்றினை ஏற்று, இதுவரை தமிழ்நாட்டில் 215 ஒன்றியப் பகுதிகளில் வரைபடங்கள் தயாரிக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. இதர பகுதிகளுக்கு வரைபடம் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## இயக்கம் மற்றும் பராமரிப்பு

30. பல குடிநீர்த் திட்டங்கள் கணிசமான முதலீட்டில் செயல்படுத்தப்பட்டபோதிலும், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் சரிவர பராமரிக்காத காரணத்தினால் இத்திட்டங்கள் சரிவர செயல்படாத நிலை கண்டறியப்பட்டது. இதனால் நிரந்தரப் பயன்பெறும் வகையில் இயக்கம் மற்றும் பராமரிப்பினை உறுதி செய்யும் பொருட்டு அரசு, ஒரு கோடியே 30 லட்சம் மக்கள் பயன்பெறும் வண்ணம் 5 மாநகராட்சிகள், 20 நகராட்சிகள், 56 நகரப் பேரூராட்சிகள், 117 ஊரகப் பேரூராட்சிகள் மற்றும் 117 ஊராட்சிகளில் உள்ள 1987 ஊரகக் குடியிருப்புகளை உள்ளடக்கிய 476 கூட்டுக் குடிநீர்த் திட்டப் பராமரிப்பினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைத்தது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் திட்டங்களிலிருந்து விநியோகிக்கப்படும் நீருக்கு நகர பயனாளிகளிடமிருந்து 1000 லிட்டருக்கு ரூ.3.50 வீதமும், ஊரகப் பயனாளிகளிடமிருந்து 1000 லிட்டருக்கு ரூ.2.25 வீதமும் குடிநீர்க் கட்டணமாகப் பெறவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பராமரிக்கப்படும் குடிநீர்த் திட்டங்களிலிருந்து பயன்பெறும் உள்ளாட்சி அமைப்புகள் பெறும்



குடிநீரின் அளவினைக் கணக்கிட அளவைமானிகளும் குடிநீர்த் திட்டங்களில் பொருத்தப்படுகிறது.

## வருங்காலத்தை நோக்கி . . . .

31. இந்த அரசு, மக்களின் இன்றையத் தேவைகளுக்கேற்ப திட்டங்களை அதிவேகமாகச் செயல்படுத்துகிறது என்பது அனைவரும் அறிந்ததாகும். அதேநேரத்தில் அடுத்த நூற்றாண்டில் மக்களின் தேவை என்னவாக இருக்கும் என்பதிலும், அவற்றை எப்படி நிறைவேற்றலாம் என்பதிலும், இந்த அரசின் கவனம் பதிந்துள்ளது. இந்த அரசு அனைத்துத் துறைகளிலும், அதிலும் மிக முக்கியமாக குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுப் பணிகளுக்கான துறையில், தொழில் நுட்ப வளர்ச்சியை விரைவுபடுத்தியுள்ளது. குடிநீர் வழங்கு துறையில் தமிழகம் எத்தனையோ சாதனைகளில் முதலிடம் வகித்துள்ளது. யூனிசெஃப் பன்னாட்டு நிறுவனத்துடன் அடிகுழாய் தொழில் நுட்பத்தை வளர்த்து அதனை பிரபலமாக்கியது தமிழகமாகும். இதேபோல் இந்திய துணைக்கண்டத்திலேயே முதல் முறையாக ஊரகப் பகுதிகளில் மின்னிறைப்பான் மூலம் குழாய் வழி குடிநீர்த் திட்டங்களையும், வீட்டு இணைப்பு வசதிகளையும் அறிமுகப்படுத்தியது இந்த அரசாகும். இந்தியத் துணைக்கண்டத்தின் மற்றப் பகுதிகளில் குடிநீர் வழங்கு திட்டங்கள் கிராம அளவில் இருக்கையில் தமிழகத்தில் மட்டுமே திட்டங்கள் குடியிருப்பு என்னும் நுண்ணிய அளவுவரை திட்டமிடப்படுகிறது.

குறைந்துவரும் குடிநீர் ஆதாரங்கள், கிடைக்கக்கூடிய நீரின் தரம், மக்கள் அதிகரிப்பு, விரைவான நகர்ப்புற வளர்ச்சி, அதிகரித்துவரும் குடியிருப்புகள் போன்ற சவாலான பிரச்சினைகள் காரணமாக குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று துறையில் அடுத்த நூற்றாண்டிற்கான பொறுப்புகள் எளிதானவை அல்ல என்பதை இந்த அரசு உணர்ந்துள்ளது. இந்தப் பிரச்சினைகளை எதிர்கொள்ள செயலாக்கத்தில் முன்னேற்றம் மற்றும் அதிக நிதி ஆகியவை தேவை. அடுத்த நூற்றாண்டில் திட்டச் செயல்பாடு தேவைகள் கீழ்க்கண்டவாறு அமையும்.

* குடிநீர் வழங்கு பணிகளில் குறிப்பிட்ட ஒரு நீர் வழங்கு அளவிற்கு திட்டங்களை வடிவமைக்கும் முறையிலிருந்து பயனாளிகளின் சரியான தேவைக்கேற்ப திட்டமிடும் முறைக்கு மாறுதல்.

* வீட்டு உபயோகத்திற்கு தண்ணீர் எடுத்தல், அதனை வீட்டிற்குக் கொண்டு செல்லுதல், சேமித்தல் மற்றும் பல பணிகளுக்கு நீரைப் பயன்படுத்துதல் என அனைத்துப் பணிகளிலும் அதிகம் ஈடுபடுபவர் பெண்களே. நீராதாரங்கள் பற்றியும் அவற்றின் தரம் மற்றும் நம்பகத்தன்மை, குடிநீரை அவர்களின் பயனுக்கு அளிப்பதில் ஆகும் செலவு, குடிநீரை பயன்படுத்துவதில் உள்ள தடை மற்றும் பயன்கள் ஆகியவை பற்றி பெண்கள் அறிவது அவசியமாகும். எனவே, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று திட்டங்களை முடிவு செய்தல் மற்றும் நிறைவேற்றுவதில் பயனாளிகள் அதிலும் குறிப்பாக பெண்களின் பங்கேற்பு மிக முக்கியமானதாகும்.
* குறிக்கோளை நிறைவேற்ற அரசு நிதி மட்டும் போதாது. எனவே, நிறுவன நிதி உதவி, அயல்நாட்டு நிதி உதவி, மேலும் தனியார் துறை மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் நிதி உதவி ஆகியவை தேவைப்படும்.
* தொழில் நுட்பம் தொடர்ந்து வளர்வது என்பதால் மாறி வரும் நிலைக்கேற்ப திட்டமுறைகள் மாற்றப்படவேண்டும். இதற்கேற்ப பணியாளர்கட்கு நவீன தொழில் நுட்பப் பயிற்சி வழங்குவதோடு தனியார் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் பங்கேற்பு ஊக்குவிக்கப்படும்.

இந்த அரசு எதிர்காலத் தேவைகளைக் கருத்தில் ஏற்று மேற்காணும் முறைகளில் சிறிய அளவில் நடவடிக்கைகளை ஏற்று அடுத்த நூற்றாண்டுக்குள் அடியெடுத்து வைக்கத் திட்டமிட்டுள்ளது. காலப்போக்கில் இம்முறைகளை மேலும் விரிவுபடுத்தி, இடைவிடா முயற்சியுடன் அடுத்த நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளுக்குள் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று துறையில் தமிழகம் முழுவதும் தன்னிறைவு காண இந்த அரசு நம்பிக்கை கொண்டுள்ளது.

## சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்

தமிழ்நாடு சட்டப்பேரவையில் இயற்றப்பட்டதொரு சட்டத்தின் வாயிலாக 1-8-1978-இல் உருவாக்கப்பட்ட சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், சென்னை நகர மக்களுக்கான



பணியில் தனது இருபத்திரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இவ்வாரியம் சற்றொப்ப 174 சதுர கிலோ மீட்டர் கொண்ட சென்னை நகர் மற்றும் அருகாமையில் வசிக்கும், ஏறத்தாழ 46 இலட்சத்திற்கும் அதிகமான மக்களுக்காக பணியாற்றி வருகிறது.

## 2. நிறுவன வளர்ச்சியும் பணிகளின் மேம்பாடும்

**2.1.** சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் கடந்த 21 ஆண்டுக்கால வளர்ச்சி பல்வேறு இனங்களில் குறிப்பிடத்தக்கதாக இருந்து வருகிறது. அவற்றுள் வழங்கும் குடிநீரின் அளவு, பயன்பெறும் மக்கட்தொகை, மூலதன முதலீடு, வாரிய இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகள், குடிநீர் மற்றும் கழிவுநீர் வீட்டுக்குழாய் இணைப்புகளின் எண்ணிக்கை முதலியவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம். இவற்றின் வளர்ச்சியின் வடிவுரு இணைப்பு-I-ல் விவரமாகத் தரப்பட்டுள்ளது.

**2.2.** கடந்த ஆண்டுகளில் வாரியத்தின் பணி வளர்ச்சியுடன், சேவைத் திறனும் மிகப் பெரும் அளவில் மேம்பட்டுள்ளன. சென்ற ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் குடிமக்கள் உரிமை ஆவணத்தை (Citizen's Charter) வெளியிட்டது. நாட்டிலேயே இதுபோன்ற ஆவணத்தை முதன் முதலில் வெளியிட்டுள்ள குடிநீர் வாரியமாக சென்னைக் குடிநீர் வாரியம் விளங்குகிறது என்றே கூறலாம். இந்த ஆவணத்தின் வாயிலாக மக்களுக்கான பல்வேறு திட்டப் பணிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று வாரியம் ஏற்றுள்ள பொறுப்பினை மீண்டும் உறுதி செய்துள்ளது. மேலும் போதிய அளவுக்கு விளம்பரம் செய்யப்பட்டு, பல்வேறு பணிகளின் குறித்தகால முன்னேற்றத்திற்கு நுகர்வோரின் பங்களிப்பு பற்றியும் மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் குடிநீர் வழங்கும் அளவை உயர்த்துவதிலும்; குடிநீர் விநியோகத்தின்போது ஏற்படும் பிரச்சினைகளைச் சரி செய்வதிலும்; தடைகளை நீக்குவதிலும்; கூடுதல் குடிநீர் இணைப்புக் குழாய்கள் அமைப்பதிலும்; குடிநீர் வசதி இல்லாத பகுதிகளில் புதிய குடிநீர் இணைப்பு அமைப்பதிலும்; குடிநீர் விநியோக அமைப்பில் 46 இடங்களில் தானியங்கிக் குளோரின் செலுத்துதல் முறையிலும்; பழுதான குடிநீர் இணைப்புக் குழாய்கள், சிமெண்ட் குழாய்கள், பிளாஸ்டிக் குழாய்களை மாற்றுவதிலும்; கழிவுநீர் அடைப்பு

நீக்கும் இயந்திரங்களை இயக்குவதிலும்; கழிவு நீரகற்று நிலையங்களை மேம்படுத்துவதிலும்; கழிவுநீர்க் குழாய்களில் அடைப்புகளை நீக்குவதிலும்; கழிவுநீர்ப் பாதையை மாற்றியமைப்பதிலும் மற்றும் தாழ்வான பகுதிகளில் சிறிய கழிவு நீர் இறைக்கும் நிலையங்களை அமைப்பதிலும்; கழிவு நீர்க் குழாய் வசதி இல்லாத தெருக்களில் கழிவுநீர்க் குழாய்கள் அமைப்பதிலும்; பராமரிப்புப் பிரிவுக்கு மேலும் பண ஒதுக்கீடு அளித்திருப்பதுடன் அன்றாடப் பராமரிப்புப் பணிகள் செம்மைப்பட, பராமரிப்புப் பிரிவு அலுவலர்களுக்கு அதிக அதிகாரம் வழங்கியும், மேலும் அதிகாரத்தைப் பரவலாக்கியும், பொது மக்களின் தேவைகளை அறிந்து, அப்பணிகளை நிறைவேற்றவும், மாதத்திற்கு ஒரு முறை 10 பகுதி அலுவலகங்களில் பொது மக்களை அடிக்கடி சந்தித்தும் தொடர்பு கொண்டும் பல முன்னேற்றப் பணிகளை மேற்கொள்வதில் வாரியம் வெற்றி கண்டுள்ளது. சென்னை மாநகராட்சியுடன் வாரியம் தொடர்ந்து ஒருங்கிணைந்து செயல்பட்டதனால்தான் இந்த நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

2.3. கடந்த ஆண்டு முதல், வாரியம் ஆற்றிவரும் பணிகள் யாவற்றையும் அனைவரும் முழுவதும் அறிந்து கொள்ளும் வகையிலும், நுகர்வோருடன் நல்லுறவு ஏற்படும் வகையிலும் நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் சில வருமாறு:-

## (அ) திறந்த வெளித் தகவல் மையத் தொடக்கம்

மக்களுக்குத் தகவல் அளிக்கும் முறைகளை விரிவுபடுத்தவும், மேம்படுத்தவும் வாரியம் திறந்த வெளித் தகவல் மையம் ஒன்றை, `www.chennaimetrowater.com' என்ற பெயரில் அமைந்த கணினி வெப்சைட்டை ஏற்படுத்தியுள்ளது. சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியச் சட்டம் 1978, குடிமக்கள் உரிமை ஆவணம், வாரியத்தின் ஆண்டு அறிக்கை, கட்டண வீதங்கள் பற்றிய ஒழுங்குமுறை விதிகள், குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புப் படிவம், குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி, கட்டண விவரங்கள், வரிகட்டண பாக்கி விவரங்கள், தண்ணீர் சேமிப்பு வழிமுறைகள் முதலியன குடிமக்கள் அவர்களாகவே கணினி திறந்த வெளித் தகவல் மையம் மூலமாகத் தேவையான தகவல்களைப் பார்க்கவும், நகல் எடுக்கவும் வசதியும் செய்யப்பட்டுள்ளன. மேலும் ஒப்பந்தப் புள்ளி அறிக்கைகள், அதற்கான ஆவணங்கள், பணி ஆணை வழங்கப்பட்ட ஒப்பந்த விவரங்கள்



அனைத்தும் திறந்த வெளித் தகவல் மையத்தின் மூலம் வாரியம் வெளிப்படையாக அளித்து வருகிறது.

(ஆ) நுகர்வோர் தாங்கள் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி மற்றும் கட்டண நிலுவையைத் தொலைபேசி மூலம் அறிந்து கொள்ள, கணிப்பொறியுடன் இணைக்கப்பட்ட குரல் மூலம் பதிலளிக்கும் முறை சென்னைக் குடிநீர் வாரியத்தில் நிறுவப்பட்டுள்ளது. 8525138 மற்றும் 8547891 ஆகிய தொலைபேசி எண்களுடன் நுகர்வோர் தொடர்பு கொண்டால் மேற்கூறிய தகவல்களை முறையே ஆங்கிலத்திலும், தமிழிலும் தெரிந்து கொள்ளலாம். இத்தகைய தகவல் சாதனத்தை நிறுவியதில், நம்நாட்டிலேயே முதல் இடம் வகிப்பது சென்னைக் குடிநீர் வாரியமே.

(இ) பொது மக்களிடமிருந்து வரும் புகார்களின் மீது உரிய நடவடிக்கைகள் எடுத்தலையும், இவற்றைக் கண்காணிக்கும் முறையையும் வாரியம் மேலும் சீர்படுத்தியுள்ளது. 'பேஜர்' என்னும் கையடக்கமான தகவல் சாதனம் இயங்குதல் மற்றும் பராமரிப்புத் துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு தொடர்புகொள்ள வேண்டிய பேஜர் எண்கள் செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு நுகர்வோர் தங்கள் குறைகளை எந்த நேரத்திலும் தொலைபேசி மூலம் உரிய அதிகாரிகளுக்கு உடனுக்குடன் தெரிவிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் தலைமை அலுவலகத்தில் கணிப்பொறி பொருத்தப்பட்ட புகார்ப் பிரிவு 24 மணி நேரமும் இயங்கி வருகிறது. பெறப்பட்ட புகார்கள் உடனடி நடவடிக்கைக்காக பேஜர் மூலம் தொடர்புடைய பகுதி அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்படுவதுடன் புகார்ப் படிவங்களும் (மூன்று நகல்கள்) அனுப்பி வைக்கப்படுகின்றன. குறையீடுகளைச் சரி செய்தபிறகு, பகுதி அலுவலர்கள், அசல் மற்றும் இரண்டாம் நகல் புகார்ப் படிவங்களை நுகர்வோரின் ஒப்புகையுடன் புகார்ப் பிரிவிற்குத் திருப்பி அனுப்புகின்றனர். குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள், பொதுமக்களுக்கு நிறைவு தரும் வகையில், புகார்களை உரிய அலுவலர்களுக்கு அனுப்பி அதன் மீதான நடவடிக்கைகள் கண்காணிக்கப்படுகின்றன. மேலும் பொதுமக்களிடமிருந்து அவர்களுடைய கருத்துகள், சேவையில் நிறைவுபற்றி அறிய மறுவிடை அஞ்சல் அட்டையை தேர்வு செய்யப்பட்ட சில புகார் செய்தவர்களுக்கு அனுப்பி வைத்து அவர்களது பதில்களும் பெறப்படுகின்றன. இவற்றால் சென்னைக் குடிநீர் வாரியத்தின் சேவையில் நுகர்வோர் அடையும் மனநிறைவு மிகுந்துள்ளது.

### (ஈ) கணினி மூலம் வரி வசூலித்தல் வாயிலாக நுகர்வோர் சேவை மேம்பாடு

வரி வசூல் செய்யும் முறை மேலும் ஒழுங்குபடுத்தப்பட்டு, நுகர்வோரின் கணக்குகள் கணினிகளில் பராமரிக்கப்படுகின்றது. ஒருசில பகுதிப் பிரிவு அலுவலகங்களிலும், 10 பகுதி அலுவலகங்களிலும், வசூல் மையங்கள் திறக்கப்பட்டு நுகர்வோர், பணத்தை எளிதாகச் செலுத்துவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. இவை தவிர 26 கனரா வங்கிக் கிளைகள் மூலமாகவும் நுகர்வோர் வரி செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் இதன்மூலம் நுகர்வோருடன் வாரியம் இணக்கமாக செயல்படவும், தங்கள் கணக்குகளை எளிதாகப் பார்த்து அறிந்து கொள்ளவும் வழி வகுக்கப்பட்டுள்ளது.

### (உ) குடிநீர் மற்றும் கழிவு நீர்க்கட்டணக் கொள்கை

கட்டண விதி சம்பந்தமான விரிவான கொள்கை தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, வாரியம் புதிய கொள்கையை அக்டோபர் 1998-இல் உருவாக்கியது. அதனுடைய சிறப்பியல்புகள் வருமாறு:

**குடிநீர் வழங்கல்**

(1) எளிதாகவும், புரிந்து கொள்ளும் வகையிலும், பயன்படுத்துவோரின் வகைகளைப் பாகுபாடு செய்வது.

(2) ஒவ்வொரு வகைக்கும் கட்டண விதிப்பில் இரு பிரிவுகள் என வீதங்களின் எண்ணிக்கையைக் குறைப்பது.

(3) ஒரேயடியாக கட்டணத்தை அதிகப்படுத்துவதற்குப் பதிலாக ஆண்டுதோறும் படிப்படியாகக் குறைந்தபட்ச அளவில் சீராகக் கட்டணத்தை உயர்த்துவது.

(4) ஒருசாராரின் கட்டண விதிப்பைக் கொண்டு மீதமுள்ள அனைத்து சாராருக்கும் மானிய விலைக் குடிநீர் அளிப்பதை குறைக்கும் பொருட்டு குடியிருப்பு மற்றும் தொழிற்சாலை ஆகியவற்றின் கட்டண வீதங்களை மாற்றியமைப்பது.



**கழிவுநீரகற்றல்**

(5) தொழிற்சாலைகளே கழிவு நீரைப் பெற்று சுத்திகரிப்பு செய்தபின் இயந்திரங்களைக் குளிர வைக்கப் பயன்படுத்த ஊக்குவிக்கும் வகையில், இயல்புக் கழிவுநீரை மட்டும் வழங்குவது.

(6) இரண்டாம்நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரைத் தொழிற்சாலைகளுக்கு உரிய கட்டண வீதத்தில் விற்பனை செய்தல், கட்டண வீதத்தை ஆண்டு தோறும் தகுந்த அளவு உயர்த்த முன்னேற்பாடு செய்தல்.

(7) கழிவுநீரை மூன்றாம் நிலைக்கு சுத்திகரித்துத் தொழிற்சாலைகளுக்கு வழங்கி அதற்கான செலவைக் கட்டணமாக வசூலித்தல். இதன்மூலம் தொழிற்சாலைகளுக்கு தற்போது வழங்கப்படும் இயல்பு நீரைச் சேமித்தல்.

(8) சுற்றுச்சூழல் பராமரிப்பில் அக்கறை கொண்ட நிறுவனமான சென்னைக் குடிநீர் வாரியம், அதற்குத் தகுந்தவகையில் கழிவுநீரைப் பயன்படுத்தி மரத்தோப்பு மற்றும் மீன் பண்ணைகளை உருவாக்கி மேம்படுத்துவது.

### 3. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று அமைப்பு முறைகளை மேம்படுத்திச் செயல்படுத்துதல்

3.1. சென்னை மாநகரின் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வசதிகளுக்கான அமைப்பு முறைகளை ஒழுங்குபடுத்தித் திட்டமிட்டு மேம்படுத்துதல், திறமையுடன் இயக்கிப் பராமரித்தல், என்பவை சென்னைக் குடிநீர் வாரியத்தின் தலையாய பணிகளாகும். வாரியம் இந்தப் பணிகளை தொடங்கிய 1978 ஆம் ஆண்டில் 2021 ஆம் நிறைவேற்றுவதற்கென ஒரு பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டது. 1991 ஆண்டில் இருக்கக்கூடிய மக்கள் தொகையின் தேவைகளுக்கேற்ப, ஆம் ஆண்டில் அந்தப் பெருந்திட்டம் மாற்றியமைக்கப்பட்டது. இப்பெருந்திட்டமே தற்போது செயற்படுத்தப்படுகின்றது. இதுவரை இத்திட்டத்தில் பயன்பெற்ற மொத்த மக்கள் தொகை விவரம் இணைப்பு 2-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 3.2. குடிநீர் வழங்குதல்

3.2.1 இப்பெருந்திட்டத்தில் அடங்கியுள்ள கீழ்க்கண்ட பணிகள் நிறைவேற்ற வேண்டியவைகளாகும்.

(அ) கிருஷ்ணா நதியிலிருந்து கூடுதலாக வரும் நீரைப் பெற்று சுத்திகரித்து வழங்குதல்.

(ஆ) தண்ணீர்க் கசிவு, குடிநீர் வீணாகுதல், குறைந்த அளவு அழுத்த, சமனற்ற குடிநீர் விநியோகம் ஆகியவைகளைச் சீர் செய்தல்:

இதற்காக நகரத்தை 16 மண்டலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மண்டலத்திலும் கீழ்நிலைத்தொட்டி/மேல்நிலைத்தொட்டி/நீரேற்று நிலையம், விசைக் கருவிகள் முதலியன கொண்ட குடிநீர்ப் பகிர்வு நிலையங்களை அமைத்தல்; குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து குடிநீர்ப் பகிர்வு நிலையம்வரை குடிநீர் கொணரும் குழாய்கள் அமைத்தல் ஆகியவை திட்டமிடப்பட்டுள்ளன.

பெருந்திட்டத்தில் அடங்கிய எல்லாப் பணிகளும் பல கட்டங்களில் நிறைவேற்றப்பட்டு 2002-2003 ஆம் ஆண்டில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் முதற்கட்டமாக, செங்குன்றம் ஏரியிலிருந்து நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் தண்ணீரைக் கூடுதலாக எடுத்து, அங்குள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்தம் செய்து, பெருங்குழாய்கள் மூலம் ஏற்கனவே உள்ள நான்கு குடிநீர்ப் பகிர்வு மையங்களுக்கு அனுப்பி, குடிநீர் வழங்கும் அமைப்பு மேம்படுத்தப்பட்டது. குடிநீர் வசதி இல்லாத தெருக்களுக்குப் புதிய குடிநீர்க் குழாய்கள் பதித்தல், பழுதடைந்த இரும்பு, ஏ.சி., பி.வி.சி. குழாய்களை மாற்றிப் புதிய இரும்புக் குழாய்களைப் பதித்து அதன் மூலம் நாளொன்றுக்கு 240 மில்லியன் லிட்டர் குடிநீரைக் கூடுதலாக வழங்க வகை செய்யப்பட்டது. இரண்டாவது கட்டமாக, செம்பரம்பாக்கத்திலிருந்து நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் நீரை எடுத்துச் சுத்தம் செய்து குடிநீரை விநியோகித்தல், மேலும் புதிய 12 குடிநீர்ப் பகிர்வு நிலையங்களை அமைத்தல், சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பெருங்குழாய்கள் மூலம் குடிநீர் கொணர்தல், 8 மண்டலங்களில் உள்ள குடிநீர்க் குழாய்களை மேம்படுத்துதல் ஆகிய பணிகளை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. மூன்றாவது கட்டமாக, கீழ்ப்பாக்கத்தில் உள்ள சுத்திகரிப்பு நிலையம் மற்றும் தற்போதுள்ள 4 குடிநீர்ப் பகிர்வு நிலையங்கள் ஆகியவைகளை மேம்படுத்துதல், குடிநீர்



கொணரும் குழாய்களை, 13 கி.மீ. நீளத்திற்குப் பதித்தல், மீதியுள்ள 8 மண்டலங்களின் குடிநீர்க் குழாய்களை, மேம்படுத்துதல் போன்றவை திட்டமிடப்பட்டுள்ளன. இத்துடன் மேற்கூறிய மூன்று கட்டங்களிலும் குடிநீர்க் கசிவைக் கண்டறிந்து சரி செய்தலும், மழை நீரைச் சேமிக்கும் பணிகளும், அளவு கருவிகள் பொருத்துதலும் நிறைவேற்றப்பட உள்ளன. மேற்கூறிய பணிகள் முடிவுற்றபின் 2021 ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கு, தற்போது வழங்கும் குடிநீர் அளவான நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 முதல் 100 லிட்டர்வரை என்பது உயர்த்தப்பட்டு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 120 முதல் 140 லிட்டர்வரை வழங்க இயலும்.

### 3.2.2. பெருந்திட்டச் செயற்பாடுகள்

(1) *முதற்கட்டப் பணிகள்:* இப்பெருந்திட்டத்தினைச் செயற்படுத்தும் பொருட்டு, வாரியம் தனது முதற்கட்டப் பணிகளை 1991-இல் தொடங்கி ரூ.132 கோடி அளவிலான கீழ்க்கண்ட பணிகளை முடித்துள்ளது.

(அ) செங்குன்றத்தில் நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் திறனுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையக் கட்டுமானம்;

(ஆ) அண்ணா பூங்கா, தென் தலைமை நீர்வழங்கு நிலையம், பள்ளிப்பட்டு, கலைஞர் கருணாநிதி நகர் ஆகிய இடங்களுக்குக் குடிநீர் கொணரும் பெருங்குழாய்களை அமைத்தல்;

(இ) தென் தலைமை நீர்வழங்கு நிலையத்தில நீரேற்று இயந்திரங்களைப் புதுப்பித்தல், நீர்வழங்கு குழாய்களைப் பதித்தல். இப்பணிகளை நிறைவேற்றியதன் பலனாகக் கிருஷ்ணா நதியிலிருந்து நீர் பெறப்பட்டு 29-9-1996 முதல் நகரக்குடிநீர் விநியோகம், நாளொன்றுக்கு 240-லிருந்து 440 மில்லியன் லிட்டர் ஆக அதிகரிக்கப்பட்டது.

(2) *இரண்டாம் கட்டப் பணிகள்:* பெருந்திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் 1997-இல் தொடங்கி 2003-இல் முடிக்கக் கீழ்க்கண்ட பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன.

(அ) செம்பரம்பாக்கத்தில் ரூ.300 கோடி செலவில் நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் திறனுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையமும் அதன் தொடர்பான பணிகளையும் மேற்கொள்ளுதல்;

(ஆ) செங்குன்றத்தில் ரூ. பத்து கோடி மதிப்பீட்டில் சுத்திகரிக்கப்பட்ட நீரேற்று நிலையம் அமைத்தல்;

(இ) ரூ.82 கோடி செலவில் 57 கி.மீ. நீளத்திற்குப் புதிய குடிநீர் கொணரும் குழாய்களை அமைத்தல்;

(ஈ) ரூ.129 கோடி மதிப்பீட்டில், 12 புதிய குடிநீர் வழங்கு நிலையங்களின் கட்டுமானம்;

(உ) ரூ.157 கோடி மதிப்பீட்டில் நகரின் 8 பகுதிகளிலும் உள்ள குடிநீர் வழங்கு அமைப்புகளை வலுப்படுத்துதல்;

(3) மூன்றாம் கட்டப் பணிகள்: 1999-2004 ஆம் ஆண்டுகளில் ரூ.335 கோடி செலவில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன;

(அ) கீழ்ப்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை சீர்படுத்துதல், கீழ்ப்பாக்கத்திலுள்ள தலைமை நீர் நிலையம் மற்றும் அண்ணா பூங்கா, தென் தலைமை நீர் வழங்கு நிலையம், கலைஞர் கருணாநிதி நகர் ஆகிய இடங்களில் உள்ள குடிநீர் வழங்கு நிலையங்களின் சீரமைப்புக் கட்டுமானப் பணிகள்;

(ஆ) 13. கி.மீ. நீளத்திற்கு 3 நிலைகளில் குடிநீர் கொணரும் குழாய்களைப் பதித்தல்;

(இ) நகரின் 8 மண்டலங்களில் மீதம் உள்ள குடிநீர் வழங்கு அமைப்புகளை வலுப்படுத்துதல்.

இப்பணிகள் 2003-2004 ஆம் ஆண்டுகளில் முடிக்கப்பட உள்ளன. இதனால் 1999-இல் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 110 லிட்டர் வீதம் வழங்கப்படும் குடிநீரின் அளவு 2003-2004-இல் நபர் ஒருவருக்கு 140 லிட்டர் என்ற வீதத்தில் அதிகரிக்கப்படும்.

## 3.3 கழிவுநீரகற்று அமைப்புமுறை

3.3.1. எந்த ஒரு குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்தினாலும், விரிவு படுத்தினாலும், இதனால் உண்டாகும் கூடுதல் கழிவுநீரை அகற்றிச் சுத்தம் செய்யத் திட்டம் தீட்டினால்தான் முழுமை அடையும். 1978 ஆம் ஆம் ஆண்டு முதன் முதலாக நகரின் கழிவு நீரகற்றும் அமைப்பை மேம்படுத்த பெருந்திட்டம் உருவாக்கப்பட்டது. பின்பு 1991-இல் இப்பெருந்திட்டம் 2021 ஆம் ஆண்டின் நகர மக்கள் தொகையின்



கழிவுநீர் அகற்றும் வசதிக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது. இக்கழிவுநீர் அகற்றுத் திட்டம் குடிநீர் வழங்கு திட்டத்திற்குப் பொருந்துகிறார்போல் பல நிலைகளில் நிறைவேற்றப்பட உள்ளது. குடிநீர் வழங்கு வசதி உள்ள ஆனால் கழிவுநீரகற்று வசதி இல்லாத இடங்களில் கழிவுநீர் அகற்றும் வசதியினை விரிவாக்கம் செய்தல், பராமரிப்புப் பணிகளில் ஏற்படும் தடைகளை நீக்கல் (கழிவுநீரைக் கொணரும் குழாய்களை மேம்படுத்துதல்), கழிவு நீர் இறைக்கும் நிலையங்களை மேம்படுத்துதல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய அமைப்புகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு படிப்படியாக நிறைவேற்றப்பட உள்ளன. தற்போதுள்ள கழிவுநீர்க் குழாய்களை 143 கி.மீ. நீளத்திற்கு வலுப்படுத்துதல், 320 கி.மீ. நீளத்திற்குப் புதிய குழாய்களைப் பதித்தல், 60 புதிய கழிவு நீரேற்று நிலையங்களின் கட்டுமானம், தற்போதுள்ள 56 பழைய கழிவுநீரேற்று நிலையங்களை மேம்படுத்துதல், 56 கி.மீ. நீளத்திற்குக் கழிவுநீர் அகற்றும் குழாய்களை வலுப்படுத்துதல், 6 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் இப்பெருந்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

### 3.3.2: பெருந்திட்டச் செயற்பாடுகள்

இப்பணிகளின் முதற்கட்டமாக, நகரில் சுமார் 60 இடங்களில், கழிவுநீர் கழிவுநீர் சேகர அமைப்பு, கழிவுநீரேற்றும் நிலையங்கள், சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவைகளில் உள்ள தடைகள் நீக்கப்பட்டன. கழிவுநீர்க் குழாய்களிலும், செங்கல் கட்டுமான கழிவுநீர்ப் பாதைகளிலும் தேங்கியுள்ள வண்டலைத் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டது. 40 புதிய கழிவுநீரேற்று நிலையங்கள் கட்டப்பட்டன. இப்பணிகள் யாவும் 1995-க்குள் முடிக்கப்பட்டன.

இரண்டாம் கட்டப் பணியாக, கழிவுநீர் வசதியற்ற பகுதிகளுக்கு இவ்வசதியினை விரிவாக்குதல், புதிய கழிவுநீரேற்று நிலையங்களைக் கட்டுதல், புதிய கழிவுநீர் கொணரும் குழாய்களைப் பதித்தல், தற்போதுள்ள 16 கழிவு நீர் இறைக்கும் நிலையங்களை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவையாவும் 2001 ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்பட உள்ளன.

மூன்றாம் கட்டப் பணியாக நகரில் உள்ள 143 கி.மீ. நீளத்திற்குக் கழிவுநீர்க் குழாய்களை வலுப்படுத்துதல், தற்போதுள்ள 40 கழிவுநீர் இறைக்கும் நிலையங்களை மேம்படுத்துதல், இதன் தொடர்புடைய

50 கி.மீ. நீளத்துக்கான கழிவுநீர் அகற்றும் குழாய்களை வலுப்படுத்துதல், 6 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலும் மேம்பாடு செய்தல், அதன் திறனை நாளொன்றுக்கு 486 மில்லியன் லிட்டர் ஆக அதிகரிக்கச் செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1999-2004-க்குள் முடிக்கப்பட உள்ளன.

நான்காம் கட்டப் பணியான, 2004 ஆம் ஆண்டுக்குப் பிறகு கூடுதலாக நாளொன்றுக்கு 280 மில்லியன் லிட்டர் கழிவுநீரினைச் சுத்திகரிப்பு செய்யும் வகையில் சுத்திகரிப்பு நிலையங்களை விரிவாக்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

## 3.3.3. கழிவுநீர்க் குழாய்கள் அமைக்க இயலாத இடங்களில் மாற்றுத் திட்டம்

இவ்வாறிட்டம் நகரின் அனைத்து மக்களுக்கும் கழிவுநீர் வசதியை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. ஆனால் பல குறுகிய தெருக்களில் கழிவுநீர்க் குழாய்கள் பதிக்க இயலாத நிலை நீடிக்கிறது. இதுபோன்ற பகுதிகளில் குறைந்த செலவில் கழிப்பறையுடன்கூடிய இரண்டு செலுத்து குழிகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது, (இதற்காகும் மொத்தச் செலவான ரூ. 25 கோடியில் சென்னை நகரை ஒட்டியுள்ள 17 உள்ளாட்சிகளும் அடங்கும்) இந்தக் குறைந்த செலவு சுகாதாரத் திட்டத்தை மூன்றாம் கட்ட பணிகளுடன், உலக வங்கி நிதி உதவியுடன் மூன்றாம் சென்னைக் குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது.

## 4. கூடுதல் நீர் ஆதாரங்களை உருவாக்குதல்/இருக்கும் நீர் ஆதாரங்களைப் பாதுகாத்தல்

4.1 ஜப்பானின் வெளிநாட்டுப் பொருளாதாரக் கூட்டுறவு நிதியத்தின் (O.E.C.F.) உதவியுடன் கழிவுநீர் அமைப்புகளைச் சீரமைத்தல் மற்றும் இயங்கும் அமைப்புகளின் மேம்பாட்டுத் திட்டங்கள்.

கிருஷ்ணா நதியிலிருந்து கிடைக்கும் 12 டி.எம்.சி. (நாளொன்றுக்கு 930 மில்லியன் லிட்டருக்கு சமமாக) நீரைப் பெற்றாலும் 2021-ஆவது ஆண்டில் சென்னைப் பெருநகர குடிநீர்த் தேவையில் சுமார் நாளொன்றுக்கு 600 மில்லியன் லிட்டர் அளவுக்குப் பற்றாக்குறை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால் கூடுதல் நீர் ஆதாரங்களைத் தேட வேண்டியது அவசியமாகிறது. ஆகவே "கழிவுநீர் அமைப்புகளை



சீரமைத்தல் மற்றும் இயங்கும் அமைப்புகளில் மேம்பாட்டு திட்டம்" தீட்டப்பட்டது இத்திட்டத்தில் கொடுங்கையூர் மற்றும் கோயம்பேடு கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையத்திலிருந்து நாளொன்றுக்குச் சுமார் 100 மில்லியன் லிட்டர் கழிவுநீரை மேலும் சுத்தம் செய்து, மணலி பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளுக்கு, தொழிற்சாலைகளின் நீர்த்தேவையில் (2021 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 330 மில்லியன் லிட்டர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது), ஒரு பகுதித் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ.572 கோடி செலவில், ஜப்பானின் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் உதவியுடன் தொடங்கப்பட்டுள்ளது. இதன் பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இத்திட்டம் 2001 ஆம் ஆண்டு முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 4.2. ஆரணியாறு - குசத்தலையாற்றுப் படுகை நீர் ஆதார மறு ஆய்வுத் திட்டம்

சென்னையிலிருந்து 30 கி.மீ. தூரத்திலுள்ள ஆரணியாறு-குசத்தலை ஆற்றுப்படுகை, சுமார் 1000 சதுரக் கி.மீ. பரப்பளவு கொண்டதாக உள்ளது. இப்பகுதியிலிருந்து நாளொன்றுக்கு சுமார் 44 மில்லியன் லிட்டர் நிலத்தடி நீர் எடுக்கப்பட்டு, சென்னை நகருக்கும் மற்றும் மணலியில் உள்ள தொழிற்சாலைகளுக்கும் வழங்கப்படுகிறது. ஆனால் 1980-ல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் நாளொன்றுக்கு 960 மில்லியன் லிட்டர் (ஆண்டுக்கு 350 மில்லியன் கன மீட்டர்) நீர் கிடைக்கும் என்று தெரிகிறது. தமிழ்நாடு நீர் ஆதார அமைப்பினர், நாளொன்றுக்கு 1627 மில்லியன் கன அடி நீர் (ஆண்டுக்கு 594 மில்லியன் கன மீட்டர்) என்ற பெருமளவு நீர் ஆதாரம் இருப்பதாக மதிப்பிட்டுள்ளனர். ஆகவே, உலக வங்கி நிதி உதவியுடன் நிறைவேற்றப்படும் இரண்டாம் சென்னை திட்டத்தின்கீழ் இரண்டு கட்ட ஆய்வுகள் மேற்கொள்ள கருதப்பட்டுள்ளது. ஆய்விற்குப் பிறகு வேளாண்மை மற்றும் குடிநீர்த் தேவைக்காக இப்பகுதிகளில் உள்ள நீரின் அளவு மதிப்பிடப்படும். தொழில்நுட்ப அடிப்படையில் போதிய அளவு நிலத்தடி நீர் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டால், இரண்டாம் கட்டப் பணியாக நீரை எடுத்தல், நிலத்தடி நீரை அளித்தல், அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்க மதிப்பீடு செய்யப்படும். இத்திட்டத்தினை மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. இது வெற்றிகரமாக முடியுமானால் பெரும் அளவு நீர், சென்னைக்கு அருகாமையிலுள்ள நீர் ஆதாரப் பகுதிகளிலிருந்தே கிடைக்கும்.

## 4.3. குடிநீரைச் சேமிக்கும் வழி முறைகள்

நீர் நிருவாக முறைகளின் பகுதியாக இவ்வாரியம் நீரைச் சேமிக்கும் பல முறைகளை செயல்படுத்தியுள்ளது. குடிநீர்க் கசிவை கண்டறிந்து சீர் செய்தல், மழை நீரைச் சேமித்தல், நிலத்தடியில் நீரைச் செலுத்துதல் ஆகிய பணிகள் தொடர்ந்து நிறைவேற்றப்படுகின்றன.

## 4.3. (அ) குடிநீர் கசிவுச் சீராக்கப் பணிகள்

1989-1994 ஆம் ஆண்டுகளின் இடைப்பட்ட காலத்தில் நடத்தப்பட்ட ஆய்வின் முதல் இரு நிலைகளின் பயனால் மூன்று கட்டங்களாக மாநகரம் முழுவதற்கும் குடிநீர்க் கசிவைக் கண்டறிந்து சீர் செய்யும் பணியினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டது. மூன்றாவது கட்டத்தில் திட்டமிடப்பட்ட 34,800 வீடுகளில், 1999 மார்ச் மாத இறுதிக்குள் 22,800 வீட்டு குடிநீர் இணைப்புகளில் கசிவைச் சீர்செய்யும் பணி நிறைவேற்றப்பட்டது. ஆகஸ்டு 1999-க்குள் மீதமுள்ள பணியினை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மூன்றாவது கட்டப் பணிக்கு ரூ.5.24 கோடி செலவிடப்பட்டுள்ளது. குடிநீர்க் கசிவு சீராக்கப் பணிகளில், சென்னைக் குடிநீர் வாரியம் பெற்ற அனுபவத்தின் விளைவாக குடிநீர்க் கசிவைக் கண்டறிந்து சீராக்கும் பணிகளின் நடைமுறைகள் மேலும் மேம்பாடுற்று ஏற்கனவே இருந்து வரும் 25-30 விழுக்காடு நீர்க்கசிவு, 3 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு குடிநீர்க் கசிவு தடுக்கப்பட்டு, பணி முடிந்த பகுதிகளில் முன்னைவிட நீண்ட நேரத்திற்குக் குழாய்களில் குடிநீர் வழங்கப்படுவதன் வாயிலாகக் குடிநீர் வழங்கும் அளவும் அதிகரித்துள்ளது.

எஞ்சியுள்ள 1,70,000 வீட்டுக் குழாய் இணைப்புகள், மேலும் இரு கட்டங்களாகச் சீராக்கம் பெறும். நான்காவது கட்டத்தில், 73,500 வீடுகளுக்கும், ஐந்தாவது கட்டத்தில் 96,500 வீடுகளுக்கும் என மேலும் இரு கட்டங்களாக பணி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்விரு கட்டப் பணிகளும் ஜூன் 1999-இல் தொடங்கி ஜூலை 2002-இல் நிறைவடையத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்விரு கட்டங்களுக்கான செலவு முறையே ரூ.70 கோடி மற்றும் 83.5 கோடி ஆகும். இப்பணியினை மேற்கொள்வதால் சற்றொப்ப நாளொன்றுக்கு 130 மில்லியன் லிட்டர் நீர் வீணாவது தவிர்க்கப்படும்.



## 4.3. (ஆ) மழை நீரைச் சேமித்தலும் நிலத்தடியில் நீரைச் செலுத்தலும்

மழைநீரைச் சேமிக்கும் திட்டம் முதன்முறையாக 1994-இல் தொடங்கப்பட்டு தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. மழைநீரைச் சேமிப்பதற்காகத் தனி வீடுகளுக்கும் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கும் தனித்தனி வழிமுறைகளை உருவாக்கி செயற்படுத்தப்பெறுகின்றன. 22-3-1998-இல் இவ்வாரியம் "சென்னையில் நீர் நிருவாகத்திற்கு ஓராண்டு நடவடிக்கை" என்ற இயக்கத்தைத் தொடங்கி அதில் அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்களையும் சில அரசு துறை நிறுவனங்களையும் ஈடுபடுத்தி, அரிய மழைநீரைச் சேமிக்க வேண்டியதன் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும், மழைநீர் சேமிக்கும் முறைகளை கண்டுபிடிக்க வேண்டியதனையும் வலியுறுத்தி மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. இது தவிர சென்னை மாநகர திட்டக் குழுமத்துடன் இணைந்து, மழைநீர் சேமிப்பு சம்பந்தமான நடவடிக்கைகளையும் வாரியம் எடுத்துள்ளது. புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான திட்ட அனுமதி வழங்கும்போது, உடன் மழைநீரைச் சேமிக்கும் வழிகளையும் கையாள வலியுறுத்தப்படுகிறது. கழிப்பறை சுத்தப்படுத்துவதில் அதிக பட்சமாக 6 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டிகளைப் பயன்படுத்த நுகர்வோர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

# 5. 1998-99 ஆண்டின் சாதனைகள்

## 5.1. குடிநீர் வழங்கல்

1998-99 ஆம் ஆண்டில், பெருந்திட்டத்தின் இரண்டாவது கட்டக் குடிநீர் வழங்கும் வேலைகள் தொடர்ந்து செயற்படுத்தப்படுகின்றன. பணி முன்னேற்ற விவரங்கள் கீழே தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

## 5.1.2. (அ) புதிய குடிநீர்ப் பகிர்வு நிலையங்கள்

வள்ளுவர் கோட்டம் மற்றும் திருவல்லிக்கேணி குடிநீர்ப் பகிர்வு நிலையங்களின் பணிகள் முடிவுற்று செப்டம்பர் 1998-இல் இயக்கப்பட்டன. கண்ணப்பர்திடல் மற்றும் ஈக்காட்டுத்தாங்கல் ஆகிய இரண்டு குடிநீர்ப் பகிர்வு நிலையங்களின் பணிகள் முடிவடைந்து விட்டன. விரைவில் இந்த நிலையங்கள் இயக்கப்படும். மீதமுள்ள நிலையங்களின் வேலைகள் நடந்து வருகின்றன. இவற்றைப் பற்றிய விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:

| மண்டலத்தின் பெயர் | 2021-வது ஆண்டில் பயனடையும் மக்கள் தொகை மதிப்பீடு | பயனடையும் பகுதிகள் | பணிகளின் மதிப்பீடு (ரூபாய் கோடியில்) | முன்னேற்ற நிலை |
|---|---|---|---|---|
| குளைமேடு | 6.76 இலட்சம் | அமைந்தகரை, வடபழனி சாலிகிராமம், காமராஜ்நகர், விருகம்பாக்கம், எம்.ஜி.ஆர்.நகர் | 22.50 | 80 விழுக்காடு பணி முடிவடைந்துள்ளது அக்டோபர் 1999 இல இயக்கப்படும். |
| குளத்தூர் | 3.80 இலட்சம் | குளத்தூர், வில்லிவாக்கம் (வடக்கு), அகரம், செம்பியம் | 12.64 | 50 விழுக்காடு பணிகள் முடிந்துள்ளது ஏப்ரல் 2000-இல இயக்கப்படும். |
| வியாசர்பாடி | 4.47 இலட்சம் | கொடுங்கையூர் வியாசர்பாடி, பெரம்பூர். | 15.76 | 30 விழுக்காடு பணிகள் முடிந்துள்ளது, மார்ச் 2000-இல் இயக்கப்படும். |
| பட்டேல் நகர் | 2.16 இலட்சம் | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், செரியன் நகர், தண்டையார் பேட்டை, கொருக்கு பேட்டை | 11.35 | 75 விழுக்காடு பணிகள் முடிந்துள்ளது பிப்ரவரி 2000-இல் இயக்கப்படும். |
| மயிலாப்பூர்-நந்தனம் | 4.34+2.32 இலட்சம் | மயிலாப்பூர், சாந்தோம், ஆசாத்நகர், பீமண்ணப்பேட்டை, ஆழ்வார்பேட்டை, ராஜா அண்ணாமலை புரம் | 23.55 | 40 விழுக்காடு பணிகள் முடிந்துள்ளது. மே 2000- இல் இயக்கப்படும். |
| வேளச்சேரி | 1.34 இலட்சம் | வேளச்சேரி மற்றும் கிண்டி (கிழக்கு) | 7.48 | 30 விழுக்காடு பணிகள் முடிந்துள்ளது மே 2000 இல் இயக்கப்படும் |
| பள்ளிப்பட்டு | 3.46 இலட்சம் | அடையாறு, திருவான்மியூர், இந்திராநகர் சாஸ்திரிநகர். | 10.47 | பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. டிசம்பர் 2000-இல் முடிவடைந்து, இயக்கப்படும். |



## 5.12 (ஆ) தூய குடிநீர் கொணரும் முதன்மைப் பெருங்குழாய்கள்

*1998-99* ஆம் ஆண்டுகளில் தூய குடிநீர் கொணரும் முதன்மைப் பெருங்குழாய்கள் பதிக்கும் ஏழு பணிகள் நடைபெற்று வருகின்றன.

அவற்றின் விவரம் வருமாறு:

| வ. எண் | பணியின் விவரம் | பணி மதிப்பீடு (ரூபாய் கோடியில்) | குழாய்களின் மொத்த நீளம் | இதுவரை பதிக்கப் பட்ட நீளம் | முடிவடையக் குறித்துள்ள காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | செங்குன்றத்திலிருந்து கே.கே.நகர் தலைமை நீர் வழங்கு நிலையம் வரை குடிநீர் கொணரும் குழாய்கள் பதித்தல் - இரண்டு ஒப்பந்தங்கள். | 31.00 | 25.299 மீட்டர் | 25,299 மீட்டர் | முடிவுற்றது. |
| 2 | போரூரிலிருந்து கத்திபாரா சந்திப்புவரை 1500 மி.மீ. விட்டமுள்ள குழாய்கள் பதித்தல். | 16.10 | 6,220 மீட்டர் | 4,040 மீட்டர் | ஜனவரி 2000 |
| 3 | பள்ளிப்பட்டு முனையிலிருந்து மயிலாப்பூர்-நந்தனம் நீர் பகிர்வு நிலையம்வரை 1100 மி.மீ. விட்டமுள்ள குழாய்கள் பதித்தல். | 11.72 | 6,330 மீட்டர் | 3,800 மீட்டர் | ஜனவரி 2000 |
| 4 | வேளச்சேரி முனையிலிருந்து வேளச்சேரி நீர் பகிர்வு நிலையம்வரை 800 மி.மீ. விட்டமுள்ள குழாய்கள் பதித்தல் | 2.14 | 1,860 மீட்டர் | 1,100 மீட்டர் | ஜூலை 1999 |
| 5. | மாதவரம் முனையிலிருந்து வியாசார்பாடி நீர் பகிர்வு நிலையம்வரை 800 மி.மீ. விட்டமுள்ள குழாய்கள் பதித்தல். | 5.59 | 4,640 மீட்டர் | 2,950 மீட்டர் | ஜூலை 1999 |
| 6. | கத்திபாராவிலிருந்து பள்ளிப்பட்டு முனை வரை 1300 மி.மீ. விட்டமுள்ள குழாய்கள் பதித்தல். | 12.60 | 5,980 மீட்டர் | 1,470 மீட்டர் | ஏப்ரல் 2000 |
| 7. | கே.கே.நகர் முனையிலிருந்து ஈக்காட்டுத்தாங்கல் நீர் பகிர்வு நிலையம்வரை 400 மி.மீ. விட்டமுள்ள குழாய்கள் பதித்தல் | 2.55 | 5490 மீட்டர் | 5,490 மீட்டர் | முடிவுற்றது |

### 5.1.2. (இ) குடிநீர் விநியோக அமைப்புகளை வலுப்படுத்துதல்

பட்டேல் நகர், வியாசர்பாடி, குளத்தூர், சூளைமேடு, ஈக்காட்டுத்தாங்கல், கண்ணப்பர் திடல், நந்தனம் மற்றும் பள்ளிப்பட்டு போன்ற 8 மண்டலங்களில் குடிநீர் வநியோக அமைப்புகளை மேம்படுத்த, சுமார் ரூ.130.00 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த ஒப்பந்தங்களை மே 1999-க்குள் முடிவு செய்து பணி ஆணைகள் வழங்கப்படும்.

### 5.1.2. (ஈ) குறுகிய காலத்தில் குடிநீர் வழங்கலை மேம்படுத்தும் நடவடிக்கைகள்

குடிநீர் வழங்குதலை மேம்படுத்தும் பெருந்திட்டம் நடைமுறையில் இருந்தாலும் சில கடைசிப் பகுதிகளுக்கு இத்திட்டம் முடிவடையும்போதுதான் குடிநீர் வழங்க இயலும், ஆகையால் இப்பகுதிகளுக்குக் குறைந்த கால கட்டத்தில் குடிநீர் விநியோகிக்க, கடல் நீரை அதில் உள்ள உப்பை நீக்கிவிட்டு வழங்குதல், பழுதடைந்த இரும்பு/ஆஸ்பெஸ்டாஸ்/பி.வி.சி. குடிநீர்க் குழாய்களை மாற்றிப் புதிய இரும்புக் குழாய்களைப் பதித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் நல்ல தரமான குடிநீரை வழங்கவும் குடிநீர்க் கசிவுகளை குறைக்கவும் முடியும்.

#### (1) உவர் நீரைக் குடிநீராக்கும் இயந்திரம்

நொச்சிக்குப்பத்தில் உவர்நீரைக் குடிநீராக்கும் திட்டம் 16-5-1997-இல் தொடங்கி வைக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. இதைப்போல மேலும் இரண்டு இயந்திரங்கள் வேளச்சேரி மற்றும் காசிமேடு பகுதிகளில் அமைக்கும் பணிகள் 29-11-1998 மற்றும் 2-1-1999 இல் முறையே முடிக்கப்பட்டு உபயோகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.



இத்திட்டத்தின் விவரங்களாவன:

| இயந்திரம் அமைக்கப் பட்டுள்ள இடம் | சுத்திகரித்து வழங்கும் குடிநீரின் அளவு (இலட்சம் லிட்டரில்) | பயனடையும் மக்கள் தொகை | பயனடையும் பகுதி | பணியின் மதிப்பு (ரூ. இலட்சங் களில்) |
|---|---|---|---|---|
| நொச்சிக் குப்பம் | 1.5 | 5000 | நொச்சிக்குப்பம் | 67.20 |
| வேளச்சேரி | 4.0 | 5000 | வேளச்சேரி-அம்பேத்கர் நகர் | 80.90 |
| காசிமேடு | 1.5 | 5000 | காசிமேடு குப்பம் | 90.00 |

#### (2) குடிநீர்க் குழாய்களைப் புதுப்பித்தலும் மாற்றுப் பாதையில் அமைத்தலும்

முகப்பேர் அண்ணாநகர் மேற்கு விரிவு பகுதிகளில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அமைக்கப்பட்ட ஏ.சி./பி.வி.சி. குடிநீர் விநியோக அமைப்பு இவ்வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பாராமரிப்புத் துறைகள் அடிக்கடி சாலையை வெட்டுவதாலும், கனரக வாகனங்களின் அதிகப் போக்குவரத்தினாலும் இக்குழாய்கள் பல இடங்களில் சேதமடைந்திருப்பது தெரிய வந்தது. இதனால் குடிநீர் வீணாவதும், குடிநீரில் மாசு கலப்பதும், சாலை பழுதடைந்து பொது மக்களுக்கு இடையூறும் ஏற்பட்டன. இவற்றைச் சீர்செய்ய, 30.30 கி.மீ. நீளத்திற்கு பழைய குழாய்களை மாற்றிப் புதிய இரும்பு குழாய்களை பதிக்க ரூ.9 கோடி மதிப்பில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. 1998-99-இல் இப்பணி மேற்கொள்ளப்பட்டு 7.73 கி.மீ. நீளத்திற்கு பணி நிறைவேற்றப்பட்டது. அதேபோல் 900 மி.மீ. விட்டமுடைய குடிநீர்ப் பெருங்குழாய்களை கங்காதீஸ்வரர்கோயில் தெரு முதல் சென்னை துறை ஆணையாளர் அலுவலகம்வரை மாற்றுப் பாதையில் அமைக்க ரூபாய் 3 கோடிக்கு பணி எடுத்துக்கொள்ளப்பட்டது.

[1999 மே 12

## 5.2 கழிவுநீரகற்றுப் பணிகள்

ஆதிஆந்திரா குடியிருப்புகளுக்கும் நகரில் கழிவுநீர் அகற்றும் வசதியற்ற இடங்களுக்கும் கழிவுநீர் அகற்றும் வசதியினை அளித்தல் மற்றும் நகரின் முக்கிய 16 கழிவு நீர் இறைக்கும் நிலையங்களை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் 1998-99 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

### 5.2.1. கழிவுநீர் அகற்றும் வசதியற்ற பகுதிகளுக்குக் கழிவுநீர் அகற்றும் வசதி அளித்தல்

#### (அ) ஆதிஆந்திரா காலனிகளுக்கான திட்டம்

ஆதிஆந்திரா குடியிருப்புகளுக்கும், பொருளாதாரத்தில் நலிந்த பகுதியினர் வாழும் பகுதிகள் மற்றும் தாழ்வான பகுதிகளுக்கும் கழிவுநீர் அகற்றும் வசதி செய்துதர முன்னுரிமை அளிக்கப்பட்டது. இதற்காக ரூ.5 கோடி மதிப்புள்ள திட்டம், அரசால் 16-8-1996 அன்று அங்கீகரிக்கப்பட்டது. கழிவுநீர்க் குழாய்கள் பதித்தல், கழிவுநீர் இறைக்கும் சிறிய நிலையங்களைக் கட்டுதல், கழிவுநீர் கொண்டு செல்லும் குழாய்கள் பதித்தல் போன்றவை இந்தத் திட்டத்திற்கு உட்பட்டவை. 36,000 மக்கள் பயன்பெறும் வகையில் சுமார் 11.60 கிலோமீட்டர் நீளத்திற்குக் கழிவுநீர்க் குழாய்களும், விசைக் குழாய்களும் ஏற்கெனவே பதிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மேலும், இவற்றை 1999-2000 ஆம் ஆண்டிற்குள் செய்து முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

#### (ஆ) மற்ற பகுதிகள்

கனகம்-தரமணி, கொடுங்கையூர் (வடக்கு, தெற்கு) வியாசர்பாடி ஏரிப்பகுதி, சாரதி நகர், வேளச்சேரி, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் (வடக்கு, தெற்கு) முதலிய பகுதிகளில் கழிவுநீர் அகற்றும் வசதிக்கான பணிகள் ரூ. 61.55 கோடி செலவில் நடந்து கொண்டிருக்கிறது. இதில் வேளச்சேரி கழிவு நீரகற்றும் திட்டத்தின் ஒரு பகுதி ஜனவரி 1999-ல் முடிவடைந்துவிட்டது. மற்ற பணிகள் 1999-2000-ல் பின்வருமாறு நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளன:



1999 மே 12]

| பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை | பயன்பெறும் பகுதி | முன்னேற்ற நிலை |
|---|---|---|---|---|
| வேளச்சேரி கழிவுநீர்த் திட்டத்தின் ஒருபகுதி | | | அண்ணா தோட்டம், அயோத்தியா காலனி | பணிமுடிந்தது |
| சீதாபதி நகர் கழிவு நீர் இறைக்கும் நிலையம் | 2.21 | 15,000 | தண்டீஸ்வரர் நகர், காந்தி நகர் | ஜனவரி 1999-ல் இயக்கப் பட்டது. |
| எல்.ஐ.சி. காலனி கழிவு நீர் இறைக்கும் நிலையம் | 9.81 | 15,000 | டான்சி நகர், எம்.ஜி.ஆர். நகர், விஜய நகர் (பகுதி) | |
| வியாசர்பாடி ஏரிப் பகுதி | 7.35 | 1,00,000 | வியசர்பாடி ஏரிப் பகுதி | 85 விழுக்காடு பணி முடிவடைந் துள்ளது ஜூன் 1999-இல் இயக்கப்படும். |
| சாரதி நகர் | 2.05 | 10,000 | சாரதி நகர் | 70 விழுக்காடு பணி முடிவடைந்துள்ளது. 1999 அக்டோபரில் இயக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. |
| டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர் (தெற்கு) | 5.22 | 18,000 | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர் (தெற்கு) | 80 விழுக்காடு பணி முடிவடைந் துள்ளது. 1999 செப்டம்பரில் இயக்கப்படும். |
| கனகம்-தரமணி | 7.25 | 25,000 | கனகம்-தரமணி | 65 விழுக்காடு பணி முடிவடைந் துள்ளது. இதில் 30 விழுக்காடு 1998-99-இல் முடிவுற்றது. 1999 டிசம்பரில் இயக்கப்படும். |

| பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை | பயன்பெறும் பகுதி | முன்னேற்ற நிலை |
|---|---|---|---|---|
| டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் (வடக்கு) | 11.94 | 63,700 | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் (வடக்கு) | 80 விழுக்காடு பணி முடிந்துள்ளது. டிசம்பர் 1999-ல் இயக்கப்படும். |
| வேளச்சேரி கழிவுநீர்த் திட்டம் (பகுதி) | 4.55 | 10,000<br>15,000 | ஏ.ஜி.எஸ் காலனி, முருகு நகர் | 85 விழுக்காடு பணி முடிவடைந்துள்ளது. இதில் 60 விழுக்காடு 1998-99-இல் முடிவுற்றது 1999 டிசம்பரில் இயக்கப்படும். |

## 5.2.2. கழிவு நீர்த் திட்டத்தை மேம்படுத்துதல்

### 5.2.2. (அ) 16 கழிவு நீரேற்று நிலையங்களை மேம்படுத்துதல்

16 கழிவு நீரேற்று நிலையங்களை மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. 9 நிலையங்களில் பணிகள் முடிவடைந்து இயக்கப்பட்டன. மீதமுள்ள பணிகள் 1999 செப்டம்பரில் முடிக்கப்படும்.

### 5.2.2. (ஆ) உடனடியான இடைக்கால நடவடிக்கைகள்

உடனடியான இடைக்கால நடவடிக்கையாக, 39 கழிவு நீரேற்று நிலையங்களில் உள்ள இயந்திரங்களை அகற்றி புதிய இயந்திரங்களை ரூ. 4.75 கோடி செலவில் பொருத்தி புதுப்பிக்க ஆணை வழங்கப்பட்டு இப்பணியை ஜூன் 1999-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.2.2. (இ) மாம்பலம் கால்வாயை ஒட்டி பதிக்கப்படும் கழிவுநீர் ஆழ்குழாய்கள்

மாம்பலம் கால்வாயில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் வந்தடைவதைத் தடுத்திட, தனியே கழிவுநீர் ஆழ்குழாய்களை இக்கால்வாயின் கரையில் பதிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான மொத்த முதலீடு சுமார் ரூ. 9.00 கோடி. இப்பணியை ஜனவரி 2000-க்குள் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது.



## 5.2.3. கழிவுநீர் மறு பயன்பாட்டுத் திட்டம் மற்றும் செயற்பாட்டை மேம்படுத்தும் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் சுத்திகரித்த கழிவுநீரைக் கொண்டுசெல்லும் விசைக்குழாய் அமைப்புகளை மாற்றி அமைப்பதற்கான ஒப்பந்தம் ரூ. 33.65 கோடி மதிப்பில் நவம்பர் 1998-ல் வழங்கப்பட்டுள்ளது. கோயம்பேடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கொடுங்கையூருக்கு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரைக் கொண்டு செல்வதற்கு ரூ.36.34 கோடி மதிப்பில் நவம்பர் 1998-ல் மற்றொரு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. இவ்விரு பணிகளும் ஏப்ரல் 2000-க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கழிவுநீர் சுத்திகரிப்பு சாதனம் அமைப்பதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு கணிப்பாய்வில் உள்ளன. இத்திட்டம் 2001-ல் நிறைவேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 5.2.4. கழிவு நீரகற்று அமைப்புகளின் பராமரிப்பு

இயந்திரங்களைக் கொண்டு கழிவுநீர்க் குழாய்களைத் துப்புரவு செய்வதன் வாயிலாகக் கழிவு நீரகற்று அமைப்புகளின் பராமரிப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது. ரூ. 3.60 கோடி செலவில் தூர்வாரும் வாளி இயந்திரங்கள் 50 மற்றும் நுழைவழி மண்வாரி இயந்திரங்கள் 10 ஆகிய இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு தினசரி ஏற்படும் கழிவுநீர் அடைப்புகளை அகற்றுவதற்கும் ஆண்டுக்கு இருமுறை அனைத்துக் கழிவுநீர்க் குழாய்களிலும் தூர்வாருவதற்கும் உபயோகப்படுத்தப்படுகிறது. இவைகளின் மூலமாக முன்தடுப்புப் பராமரிப்புப் பணிகள் செய்யப்படுவதனால் பொதுமக்களிடம் இருந்து வரும் புகார்கள் 50 விழுக்காடாகக் குறைந்துள்ளது. கழிவுநீர் சீராக ஓடக் கழிவுநீர்க் குழாய்களைப் புதுப்பித்தல், மாற்று வழியில் கழிவுநீரைக் கொண்டு செல்லும் குழாய்கள் அமைத்தல் ஆகிய பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் செய்யப்படுகின்றன:

(அ) பாரி சாலையிலிருந்து முகப்பேர் மேற்கு கழிவுநீரேற்று நிலையம் வரை ரூ. 1.56 கோடி மதிப்பீட்டில் 600 மில்லிமீட்டர் விட்டமுள்ள கழிவுநீர்க் குழாயை மீண்டும் பதித்தல்.

(ஆ) நுங்கம்பாக்கம் பகுதியில், வாலஸ் தோட்டம், சபி முகமது சாலையில் ரூ. 1.06 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர்க் குழாயை, மாற்றுப் பாதையில் மீண்டும் பதித்தல்.

(இ) ரூ. 1.18 கோடி மதிப்பீட்டில் கல்யாணி மருத்துவமனை சாலையில் கழிவுநீர் குழாயை மாற்றுப் பாதையில் அமைத்தல்.

## 5.3. புறநகர்ப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குதல், கழிவுநீரகற்று வசதிகள் அமைத்தல்

### (அ). அம்பத்தூரில் உள்ள பாடிப்புது நகருக்குக் குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றும் வசதிகள்

பாடிப்புது நகரில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வசதி பணிகளுக்காக ரூ. 1.90 கோடிக்கு தமிழ்நாடு அரசு இசைவளித்துள்ளது. இப்பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. 1999 ஆம் ஆண்டு மே மாதம் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பணியினைச் செயற்படுத்துவதன் மூலமாக 20,000 மக்கள் தொகையினர் பயன்பெறுவார்கள்.

### (ஆ) மாதவரம் நகராட்சிக்குக் குடிநீர் வழங்குதல்

தற்பொழுது மாதவரம் நகராட்சியில் 58,000 மக்கள் உள்ளனர். அவர்களுக்கு லாரிகள் மற்றும் கைப்பம்புகள் மூலம் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 10 லிட்டர் வீதம் நீர் விநியோகிக்கப்படுகிறது. மாதவரம் நகராட்சிக்குக் குடிநீர் வழங்குவதை மேம்படுத்துவதற்கு ரூ. 11.64 கோடி செலவில் ஒரு நீண்ட காலத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்துடன் உடனடியாகக் குடிநீர் வழங்குதலை மேம்படுத்த குறுகிய காலத் திட்டம் ஒன்று ரூ. 45.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 300 மி.மீ. விட்டமுள்ள குழாயகளைப் பதித்தல், கீழ்நிலை நீர்த்தொட்டி அமைத்தல், நீரேற்று நிலையம் ஒன்றின இயந்திரங்களுடன் அமைத்தல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில், குழாய் பதிக்கும் பணியும், லாரிகளுக்கு நீர் நிரப்பும் குழாய் முனைகளும் நிறுவப்பட்டு, 1999 மே திங்களில் அவற்றை இயங்கச் செய்வதன் வாயிலாக, மாதவரத்திலுள்ள 58,000 மக்கள் தொகையினரும் உடனடியாகப் பயன்பெறுவர். அத்துடன், ரூ. 49 இலட்சம் மதிப்பீட்டில், 10 கி.மீ. நீளத்திற்கு குடிநீர் பகிர்மானக் குழாய்கள் பதிக்கும் மற்றொரு திட்டத்தை நிறைவேற்றுவதன் வாயிலாக, இப்பகுதியின் குடிநீர் வழங்கல் மேம்படுத்தப்படும். இப்பணிகள் யாவும் 1999 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களுக்குள் முடிவடையும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளன.



### (இ) அம்பத்தூருக்கு குடிநீர் வழங்குதல்

1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களிலிருந்து நாள்தோறும் 30 இலட்சம் லிட்டர் தூய குடிநீர் சென்னைக் குடிநீர் வாரியத்தால் அம்பத்தூர் நகராட்சிக்கு வழங்கப்படுகிறது. ரூ. 1.20 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட இத்திட்டத்தின் பயனாய் கொரட்டூர் வீட்டு வசதி வாரியத் திட்டப் பகுதியில் வாழும் 15,000 மக்களுக்கும் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின் மூலம அம்பத்தூர் நகராட்சியில் பிற பகுதிகளுக்கு 75 லாரி நடைகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

### (ஈ) மதுரவாயல், போரூர், வளசரவாக்கம், இராமாபுரம், ஆலந்தூர், செயின்ட் தாமஸ் மவுண்ட், கன்டோன்மென்ட், பம்மல், அனகாப்புத்தூர், பொழிச்சலூர், கௌல்பசார், மீனம்பாக்கம், உள்அகரம் மற்றும் புழுதிவாக்கம் பகுதிகளுக்கு குடிநீர் வழங்குதல்

தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தினால் மேற்குறிப்பிட்ட உள்ளாட்சிகளுக்கு அமைக்கப்பட்டிருக்கும் குடிநீர் வழங்கும் அமைப்பு முறைகளைச் சென்னைக் குடிநீர் வாரியம் எடுத்துக்கொண்டு அவற்றிற்குக் குடிநீர் வழங்கலை மேலும் மேம்படுத்த வேண்டுமென்று அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க, இந்த உள்ளாட்சிகளுக்கும் குடிநீர் வழங்கலை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. திட்டத்தின் விவரம் வருமாறு :

| உள்ளாட்சியின் பெயர் | கூடுதலாக வழங்க இருக்கும் நீரின் அளவு நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்களில் | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சங்களில்) | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| ஆலந்தூர் | 12.8 | 1.50 | 6.65 |
| செயின்ட் தாமஸ் மவுண்ட் | 1.6 | 0.18 | |
| பம்மல் | 3.0 | 0.50 | |

| | | | |
|---|---|---|---|
| அனகாப்புத்தூர் | 1.5 | 0.26 | 3.90 |
| மீனம்பாக்கம் | 0.5 | 0.12 | |
| பொழிச்சலூர் | 1.0 | 0.26 | • |
| கவுல்பசார் | 0.5 | 0.12 | |
| உள்ளகரம், | 0.8 | 0.18 | 2.86 |
| புழுதிவாக்கம் | | | 2.83 |
| போரூர் | 3.2 | 0.35 | 1.59 |
| வளசரவாக்கம் | 2.6 | 0.31 | 1.85 |
| மதுரவாயல் | 1.9 | 0.32 | 1.85 |
| இராமாபுரம் | 2.0 | 0.31 | 1.29 |
| மொத்தம் | **31.4** | **4.41** | **22.82** |

**6.1. மூலதனச் செலவு**

***1998-99-ல்*** சென்னைக் குடிநீர் வாரியம் ரூ. ***269.40*** கோடி மூலதன முதலீட்டுச் செலவினைச் செய்துள்ளது. அவையாவன:

| தொடர் எண் | பணியின் பெயர் | செலவு (ரூ. கோடிகளில்) |
|---|---|---|
| 1. | உலக வங்கி நிதி உதவியுடன் நிறைவேற்றப்படும் இரண்டாம் குடிநீர்த் திட்டம் | 197.75 |
| 2. | ஓ.இ.சி.எப்.(ஜப்பான்) நிதி உதவியுடன் நிறைவேற்றப்படும் கழிவு நீர் அகற்றல் அமைப்புப் புத்தாக்கத் திட்டம் | 10.92 |
| 3. | [illegible] விடுபட்ட வீடுகளுக்குக் கழிவு நீர் அகற்று வசதிகளின் விரிவாக்கம். | [illegible] |
| 4. | அட்கோ/டுபிட்கோ நிதி உதவித் திட்டங்களும், பிற பணிகளும் | 146.87 |
| | மொத்தம் | **269.40** |



***6.2.*** 1999-2000 ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட முதலீட்டில், குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கு ரூ. 185 கோடியும், கழிவுநீர் அகற்றுத் திட்டங்களுக்கு ரூ. 98 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆக மொத்த முதலீடு ரூ. 283 கோடியாகும்.

திட்டங்களுக்கான விவரங்கள் பின்வருமாறு:

| திட்டத்தின் பெயர் | (ரூ. கோடியில்) |
|---|---|
| ***(அ) குடிநீர் வழங்கல்*** | |
| (1) உலக வங்கி நிதி உதவி பெறும் இரண்டாவது சென்னைத் திட்டம் | |
| குடிநீர் பகிர்வு நிலையங்கள் | 28.00 |
| குடிநீர் கொணரும் குழாய்கள் | 7.00 |
| குடிநீர் பகிர்வு உட்பணிகள் | 50.00 |
| நீர்க்கசிவைக் கண்டறிந்து பழுது பார்க்கும் பணிகள் | 37.00 |
| கலந்தாய்வு வேலைகள் | 3.50 |
| குடிநீர் அளவுக் கருவிகள் பொருத்துதல் | 4.50 |
| | **130.00** |
| (2) 3-வது சென்னைத் திட்டம் | 15.00 |
| (3) மண்டலக் குடிநீர் நிலையங்கள் கட்டுமானம் (அட்கோ/டுபிட்கோ) | 6.00 |
| (4) செம்பரம்பாக்கத்தில் 530 எம்.எல்.டி. திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிக்கும் நிலையம் (ஒரு பகுதி அட்கோ நிதி) | 25.00 |
| (5) பழுதடைந்த குழாய்களைப் புதுப்பித்தல் | 8.00 |
| (6) குடிநீர் குழாய்களை மாற்றுப் பாதையில் அமைத்தல் | 1.00 |
| **மொத்தம் (அ) குடிநீர் வழங்குவதற்காக** | **185.00** |

[1999 மே 12

**(ஆ) கழிவுநீர் அகற்றுதல்:**

| | | |
|---|---|---|
| 1. | ஓ.இ.சி.எப். நிதி மூலமாகக் கழிவு நீர் அகற்றல் அமைப்புகளின் புத்தாக்கம் | 75.00 |
| 2. | விடுபட்ட தெருக்களில் கழிவுநீர்க் குழாய்களைப் பதித்தல் | 2.00 |
| 3. | வியாசர்பாடி ஏரிப் பகுதி; கனகம்-தரமணி, கொடுங்கையூர், டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், வேளச்சேரி மற்றும் சாரதி நகர் கழிவுநீர் அகற்றல் திட்டம் | 6.00 |
| 4. | கழிவுநீர்க் குழாய்கள் மாற்றுப் பாதையில் அமைத்தல் | 1.00 |
| 5. | மாம்பலம் கால்வாயில் கழிவுநீர் வழிந்தோடுவதைத் தடுத்தல் | 6.00 |
| 6. | கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்துதல் | 8.00 |
| | (ஆ) மொத்தம் கழிவுநீர் அகற்றல் திட்டங்களுக்காக | 98.00 |
| | **ஆகமொத்தம்** | **283.00** |

***6.3.*** இணைப்பு மூன்றில் வாரியத்தின் மூலதனச் செலவு சம்பந்தமான விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

***6.4.*** உலக வங்கியின் உதவியுடன் செயலாக்கப்படவிருக்கும் ரூ. 84.62 கோடிக்கான சென்னைக் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றல் மூன்றாவது திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகள் சேர்க்கப்பட்டுள்ளன:

| வ.எண் | விவரம் | தொகை (கோடியில்) |
|---|---|---|
| 1. | குடிநீர் விநியோக அமைப்பை மேம்படுத்துதல் | 73.71 |
| 2. | கழிவுநீர் அகற்றும் அமைப்பை மேம்படுத்துதல் | 683.51 |
| 3. | குறைந்த செலவிலான சுகாதாரத் திட்டம் | 26.08 |
| 4. | சீராக்க நிலைப் பணிகள் | 15.32 |
| 5. | நிறுவனத்தை வலுப்படுத்துதல் | 22.54 |
| 6. | ஆய்வுகள் மற்றும் தொழில்நுட்ப உதவி | 26.46 |
| | **மொத்தம்** | **847.62** |



1999 மே 12]

இத்திட்டம் 1999-2000 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையில் 1999-2000 ஆம் ஆண்டில் இதற்காக ரூ. 1.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. வாரியத்தின் நிதி நிலைமை

*7.1.* 1997-98 ஆம் ஆண்டில் வாரியத்தின் மொத்த நிதி வருவாய் ரூ. 162.58 கோடி. இதில் நடப்பு ஆண்டு வரி நிலுவை ரூ. 30.34 கோடியும் அடங்கும். இது 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 168.35 கோடியாக இருந்தது. 1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 187.64 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1997-98-ல் வருமானக் கணக்கில் செலவினம் ரூ. 118.58 கோடி, 1998-99-ல் செலவினம் ரூ. 179.84 கோடியாகும், 1999-2000 ஆம் ஆண்டில் செலவு ரூ. 224.94 கோடி என மதிப்பிடப்படுகிறது. இவ்விரு வருடக்கணக்கில் முதலீட்டு வட்டி ரூ 3.5 கோடி மற்றும் ரூ. 63.80 கோடியும் முறையே அடங்கும். 1998-99ல் உபரி வருவாய் ரூ. 23.51 கோடி என்றும் 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ 26.51 கோடி என்றும் மதிப்பிடப்படுகிறது 1999-2000 ஆம் ஆண்டில், வருவாய் கணக்குச் செலவினத்தில் சுமார் 29.76 விழுக்காடு (ரூ. 47.95 கோடி) சம்பளச் செலவினங்கள் ஆகும்.

மேலும், மொத்த வருவாயிலிருந்து செலவினமாக 22 விழுக்காடு (ரூ 35.46 கோடி) இயக்குதல் மற்றும் பராமரிப்புக்காகச் செலவிடப்படும். இதைப்பற்றிய வரைபட அட்டவணை, இணைப்பு-4-ல் தரப்பட்டுள்ளது.

## 7.2. குடிநீர் உற்பத்தி விலை

குடிநீர் உற்பத்தி விலை, (1998-99 ஆம் ஆண்டில்) நீர் கொணர்தல், சுத்தம் செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல், கழிவுநீரை வெளியேற்றுதல் ஆகிய செலவுகளையும் சேர்த்து 1000 லிட்டருக்கு ரூ. 12.48 ஆகிறது. குடிநீரின் பயன்பாட்டினைக் கணக்கில்கொண்டு சென்னைக் குடிநீர் வாரியம் ஒவ்வொரு பிரிவு உபயோகிப்பாளர்களுக்கும் பல்முனை கட்டண வீதங்களை விதித்துள்ளது. நீர் அளவுக் கருவி பொருத்தப்படாத வீட்டு நுகர்வோருக்கு ஒட்டுமொத்த குறைந்தபட்ச மாதக் கட்டணமாக ரூ. 50 மட்டுமே வசூலிக்கப்படுகிறது. மொத்த வீட்டு உபயோகிப்பாளர் 2,37,957 பேரில் 2,37,943 பேருக்கு இதுபோன்ற ஒட்டுமொத்தமான கட்டணமே வசூலிக்கப்படுகிறது. ஒரு குடும்பத்திற்கு ஐந்து நபர்கள் என்று கணக்கிட்டால் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு

70 முதல் 100 லிட்டர்வரை என்ற அடிப்படையில் பார்க்கும்போது வீட்டு உபயோகிப்பாளர் பிரிவுக்குக் குடியிருப்பு ஒன்றிற்கு வருடத்திற்கு ரூ. 850 உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். குடிநீர் வழங்குவதற்காக அதிகரித்துவரும் செலவினைக் கருத்தில்கொண்டு, சென்னைக் குடிநீர் வாரியம், கடந்த ஆண்டுகளில் உற்பத்தித் திறனை மேலும் அதிகரிக்கத் தொடர்ந்து முயன்று வருகிறது. இணைப்பு-5-ல் சுட்டிக்காட்டியுள்ளபடி, 1986 ஆம் ஆண்டில் ஆயிரம் வீட்டுக் குழாய் இணைப்புகள் பராமரிக்க 70 பணியாளர்கள் இருந்தனர். ஆனால், 1998-99 ஆம் ஆண்டுகளில், ஆயிரம் வீட்டுக் குழாய் இணைப்புகளுக்கான பணியாளர்களின் எண்ணிக்கை 27 ஆகக் குறைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**7.3.** இவ்வாரியம் எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் ரூ. 1800 கோடி அளவுக்கான முதலீட்டுத் திட்டங்களை மேற்கொள்ள உள்ளது. இதற்குத் தேவையான மூலதனங்களைக் கடனாக உலக வங்கி, ஓ.இ.சி.எப்., அரசு மற்றும் இதர நிதி நிறுவனங்களிடமிருந்து பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னைக் குடிநீர் வாரியம் இனிவரும் ஆண்டுகளில் தனது முழு இயக்குதல் செலவினங்களில் தன்னிறைவு காண்பதோடு மட்டுமல்லாமல் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கேற்ற நிதி ஆதாரங்களையும் அதிகரிக்க வேண்டியுள்ளது.



## இணைப்பு-III

[ *14 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க*]

## மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண் 49

## 1999-2000

கடந்த மூன்றாண்டுகளில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் நிருவாகத்தில் பல மாற்றங்களை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பொது மக்களுக்கு அளிக்கும் நகர்ப்புற சேவைகளின் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்துடன் சட்டத் திருத்தங்களின் மூலமும், நிருவாக ஆணைகள் மூலமும் இந்த மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 40 விழுக்காடையொட்டிய மக்கள் தொகை 6 மாநகராட்சிகளிலும், 102 நகராட்சிகளிலும், 613 பேரூராட்சிகளிலும் வசிக்கும் சூழ்நிலையில் இந்தச் சேவைகளுக்கான முதலீட்டுச் செலவுகளுக்குத் தேவையான நிதியாதாரங்களை அதிகமாக்குவதோடு, இந்தச் சேவைகள் மக்களைச் சென்றடையத் தேவையான நிருவாகத் திறனையும் மேம்படுத்த வேண்டியது அவசியமாகியுள்ளது. இந்த நோக்கத்துடன் செய்யப்பட்ட மாற்றங்களில் சில ஏற்கெனவே பலனளிக்கத் தொடங்கியுள்ளன. மேலும், சில மாற்றங்கள் நடைமுறைப்படுத்தும் நிலையில் உள்ளன.

2. 1998 ஆம் வருடம் அக்டோபர் மாதம் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான பொதுவான சட்டவரைவு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளது. இச்சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட வேண்டிய விதிமுறைகளைத் தயாரிக்கும் பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும், இப்புதிய சட்டத்தினையும் விதிமுறைகளையும் இந்த நிதியாண்டின் இறுதிக்குள் செயலாக்கத்திற்குக் கொண்டுவர முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்புதிய சட்டமானது, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்குதல், அதன் பணிகள் தொடர்பான வரையறைகள், சொத்துவரி விதித்தல் தொடர்பான புதிய வெளிப்படைத் தன்மையான நடைமுறை, அனுமதி பெறாத

கட்டடங்களைக் கட்டுப்படுத்துதல், பொது இடங்களின் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான பிரிவுகள், ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை வெளிப்படைத் தன்மையுடன் தயாரித்தல், பணிகளைச் செய்ய தனியார் நிறுவனங்களைப் பயன்படுத்திக் கொள்ளல், உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு மூலதனச் சந்தையில் நிதி திரட்டுதல், மன்றத் தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் மதிப்பூதியம் வழங்கல் போன்றவை தொடர்பாக வரையறைகளை உள்ளடக்கி உள்ளது.

3. மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்படி மாநில வருவாயிலிருந்து ஒரு பகுதியை உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பங்கிடு செய்யும் முறை கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செயலாக்கப்பட்டு வருகிறது. இது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலைமையினை ஓரளவிற்கு உயர்த்தியுள்ளது.

4. வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதற்கு உள்ளாட்சி மன்றங்களுக்கு இருந்த நிருவாக அனுமதி வழங்கும் அதிகார எல்லையை உயர்த்தியதாலும், உள்ளாட்சி மன்றங்களில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு இருந்த தொழில்நுட்ப அனுமதி வழங்கும் அதிகார எல்லையை உயர்த்தியதாலும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நிறைவேற்றப்படும் பணிகளை வேகமாக நிறைவேற்றும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1996-க்குமுன் நடைமுறையில் இருந்த அவ்வதிகாரங்கள் குறித்த விவரமும் தற்போதுள்ள அதிகார எல்லை குறித்த விவரமும் அட்டவணை I-ல் தரப்பட்டுள்ளது.

5. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தொகுப்பின் அடிப்படையிலான புதிய கணக்கீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்புதிய முறை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளை வெளிப்படைத் தன்மை வாய்ந்ததாகவும் செறிவான நோக்கம் உடையதாகவும் மாற்றும் என எதிர்பார்க்கப்படுவதுடன் சிறந்த நிதி ஆளுமைக்கு வழிவகுக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இப்புதிய முறையானது 1999-2000 ஆம் நிதியாண்டிலிருந்து 10 நகராட்சிகளிலும் 2 மாநகராட்சிகளிலும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும். இதுசம்பந்தமாக இந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பணி தொடங்கப்பட்டுவிட்டது. இந்த 12 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து பெறப்படும் அனுபவத்தின் அடிப்படையில்



இப்புதியமுறை ஏனைய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

6. மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரைப்படி, நகராட்சிப் பணிகளை கணினிமயமாக்கல், சேவைகளை மிகுந்த செயல்திறனுடன் வழங்குவதற்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். தனது பெரும்பாலான பணிகளை உடனுக்குடன் கணினி மூலம் நடைமுறைப்படுத்தும் வசதியை ஏற்படுத்தியுள்ள முதல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பாக சென்னை மாநகராட்சி விளங்குகிற அதேநேரத்தில் தற்போது மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளும் தங்களுக்கென சொந்தமான இணைய அமைப்பை (website) ஏற்படுத்திக் கொண்டுள்ளன. ஏனைய நகராட்சிகளுக்குத் தேவையான கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. மென்பொருள் நிறுவும் பணி 1999 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளையில் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் இதற்கான ஊழியர்களைத் தேர்ந்தெடுத்து அமர்த்தும் பணியும் நடந்து வருகிறது. அனைத்து நகராட்சிப் பணிகளையும் கணினிமயமாக்கும் பணியில் நாட்டிலேயே முதல் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்கிறது. இதற்காக சுமார் ரூ. 4 கோடி செலவாகியுள்ளது.

7. 1997-98 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பில் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் கடன் சுமையைச் சீரமைக்க அரசு முயற்சிகளை மேற்கொண்ட விவரம் தரப்பட்டுள்ளது. 1-4-1998 வரையில் உள்ள அனைத்து அரசு மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகக் கடன்களையும் ஒரே கடன் தொகையாகத் தொகுத்து 13.5 சதவீத வட்டி வீதத்தில் 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்திடும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சீரமைத்தபின் பெரும்பாலான நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் கடனைத் திருப்பிச் செலுத்த இயலும் என எதிர்பார்த்ததற்கு மாறாக இன்றைய நிலையில் பல நகராட்சிகள் தங்களது கடனைத் திருப்பிச் செலுத்த இயலாத நிலையில உள்ளன. எனவே, கடன் சுமையினைக் குறைக்கும் வழிமுறைகளைப் பரிசீலிக்க ஒவ்வோர் உள்ளாட்சி அமைப்பின் நிதிநிலை குறித்தான விரிவான ஆய்வினை அரசு மேற்கொண்டுள்ளது.

8. வருவாய் கணக்கு மற்றும் மூலதனக் கணக்குகளில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு அளித்துள்ள அதிக அளவிலான மானிய நிதியானாலும், அரசு செய்துள்ள பல்வேறு நிருவாக

மாற்றங்களினாலும், இவ்வமைப்புகள், செய்துள்ள பணிகளின் எண்ணிக்கை பன்மடங்காக உயர்ந்தது. அட்டவணை II-ல் 1995-96 முதல் 1999-2000 வரை ஒவ்வொரு ஆண்டிலும், அரசு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு, அளித்த நிதி அளவின் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

## நகராட்சிகள் நிருவாகம்

### நகராட்சிகளின் நிதிநிலைமை

*9.* சட்டமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்பட்டு உள்ள செயல் விளக்கக் குறிப்பு 1998-99 ஆம் ஆண்டில் நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பற்றிய விவரங்களை விளக்கமாகக் குறிப்பிடுகிறது. மொத்த நிதிநிலை மேம்பட்டதின் காரணமாக 85 நகராட்சிகள் 1998-99 ஆம் ஆண்டில் தங்கள் பொது நிதியிலிருந்து ரூ. 32.67 கோடி மதிப்பிலான பணிகளை மேற்கொள்ளும் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது. ஆனால், அரசு, கேளிக்கை வரி விகிதங்களில் செய்துள்ள மாற்றங்கள் காரணமாகவும், சொத்துவரி சீராய்வு செய்வதில் உச்சவரம்பை மக்களின் கோரிக்கைகளை ஏற்று குறைத்ததன் காரணமாகவும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு எதிர்பார்த்த அளவிற்கு வருவாய் அதிகரிக்கவில்லை. மேலும், மாநில அரசிலிருந்து நிதிப்பங்கீடு செய்வதிலும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருட ஆரம்பத்தில் எதிர்பார்த்த அளவிற்கு பகிர்மானத் தொகையானது கிடைக்கப் பெறாமல் குறைவாகக் கிடைத்ததால் மொத்தத்தில் நிதியாதாரங்கள் குறைந்தது. அதேசமயத்தில் ஊதியக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தியதால், செலவினம் கணிசமாக அதிகரித்துள்ளது. இவற்றின் காரணமாக நகராட்சிகளின் பொது நிதியிலிருந்து செய்வதாகத் திட்டமிடப்பட்டிருந்த மூலதன முதலீடும் ரூ. 32.67 கோடியிலிருந்து ரூ. 10 கோடியாகக் குறைந்துவிட்டது.

*10.* 1998-99 ஆம் ஆண்டில் நகராட்சிகளின் வருவாய்க் கணக்கில் மொத்த வருவாய் ரூ. 474.06 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வருவாய்க் கணக்கின்கீழ் செலவு ரூ. 477.23 கோடியாக இருக்கும். 1999-2000 ஆம் நிதியாண்டில் மாநில வரிகளிலிருந்து பங்கீட்டுத் தொகை ரூ. 103.13 கோடிவரை நகராட்சிகளுக்குக் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகையானது 1998-99 ஆம் ஆண்டில் நகராட்சிகளுக்கு வழங்கப்பட்ட நிதியைவிட 12 விழுக்காடு அதிகமாகும்.



இதைத்தவிர கேளிக்கை வரியில் பங்குத் தொகையாக ரூ. 27 கோடியும் முத்திரை வரி மீதான மிகு வரியில் பங்குத் தொகையாக ரூ. 41.08 கோடியும் நகராட்சிகளுக்குக் கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### கடன்நிலை

*11.* நகராட்சிகளுக்கு தற்போது பெரிய சுமையாக இருப்பது கணக்குப்படி நிலுவையாக உள்ள அதிக அளவுக் கடன்கள் ஆகும். இந்தத் தொகையானது குடிநீர் வழங்கல் திட்டம், வருமானம் தரக்கூடிய திட்டங்கள் போன்றவற்றைச் செயல்படுத்துவதற்குத் தொடர்ந்து பல ஆண்டுகளில் பெற்ற கடன்களாகும். 1998-99 ஆம் நிதியாண்டு தொடக்கத்தில் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் நிலுவையாக இருந்த கடன் மற்றும் வட்டித் தொகையைத் தொகுத்து புதிய கடனாக ரூ. 330.28 கோடி என மதிப்பிடப்பட்டு, அதற்கு 13.5 விழுக்காடு வட்டியாகக் கணக்கிடப்பட்டு 20 ஆண்டுகளில் 40 அரையாண்டுக் கணக்கில் திருப்பிச் செலுத்திட திட்டமிடப்பட்டது. இருப்பினும் இப்புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்ட முதல் அரையாண்டில் 24 நகர்ப்புற உள்ளாட்சிகள் மட்டுமே தங்களது சொந்த நிதி ஆதாரத்திலிருந்து கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தின. 21 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரையில் அவ்வுள்ளாட்சிகளுக்கு மாநில நிதிப் பகிர்ந்தளிப்பிலிருந்து முழுத்தொகையும் கடன் தவணைக்காக முழுமையாகச் சரி செய்துகொள்ளப்பட்டது. அப்படிச் செய்தும் ரூ. 52.15 கோடி கேட்பில் ரூ. 33.51 கோடி மட்டுமே திரும்பப்பெற முடிந்தது.

### முதலீட்டுப் பணிகள்

*12.* இவ்வளவு நிதிக் கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும் 1998-99 ஆம் ஆண்டில் நகராட்சிகள் முதலீட்டுப் பணிகளை ரூ. 50.00 கோடி செலவில் மேற்கொண்டு சாலைகள் குடிநீர் வழங்கல் மற்றும் தெரு விளக்குகள் ஆகிய வசதிகளை ஏற்படுத்தியுள்ளன. இதில் ரூ. 40.60 கோடி அரசால் பல திட்டங்களின்கீழ் வழங்கப்பட்ட தொகையாகும்.

### முக்கிய பணிகள்

*13.* நகராட்சிகளால் பராமரிக்கப்படும் அடிப்படை வசதிகளுக்கான முக்கிய பணிகள், சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் விநியோகம், துப்புரவு வசதிகள் மற்றும் திடக்கழிவு நிருவாகம் ஆகியவைகள் ஆகும்.

## சாலைகள்

14. மாநிலத்திலுள்ள நகராட்சிகளால் மொத்தம் 6900.16 கி.மீ. நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்படுகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் அரசிடமிருந்து பெறப்படும் நிதியின் மூலமாகவும், நகராட்சிகளின் பொது நிதி மற்றும் ஐ.டி.எஸ்.எம்.டி., ஐ.யு.டி.பி., பெருநகரத் திட்டம் போன்ற பலதரப்பட்ட திட்டங்களுக்கான நிதி ஆதாரங்களிலிருந்தும் சுமார் 600 கி.மீ. நீளமுள்ள சாலைகள் புதுப்பிக்கப்பட உள்ளன.

## தெரு விளக்குகள்

15. நகராட்சிகளால் மொத்தம் 2,21,129 தெரு விளக்குகள் பராமரிக்கப்படுகின்றன. கடந்த 1997-98-ல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் புதிய தெரு விளக்குகள் அமைப்பதற்கு மாநில அளவில் நிர்ணயிக்கப்பட்ட ஒரே தொகையினை மின் வாரியத்திற்குச் செலுத்திடும் திட்டம் நல்லமுறையில் நிறைவேறியதால், இதே முறை தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது 1999-2000 ஆம் ஆண்டில் நகராட்சிகளில் சுமார் 14,000 புதிய தெரு விளக்குகள் அமைக்கவும் மற்றும் சுமார் 4000 குழல் விளக்குகளை சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## குடிநீர் வழங்கல்

16. நகர்ப்புறங்களில் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற, மூலதன மானியம் இல்லாதது ஒரு பெரும் குறையாகவே இருந்துள்ளது. இதுநாள்வரை, நகர்ப்புற குடிநீர் திட்டங்கள், அரசு மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன் தொகைகளைக்கொண்டு மட்டும் செயலாக்கப்பட்டு வந்தன. குறிப்பிட்டுச் சொல்லப்போனால், நகராட்சிகளிடமிருந்து நிலுவையில் உள்ள மொத்தக் கடன் தொகையான ரூ. 330.28 கோடியில் பெரும்பகுதி குடிநீர் திட்டங்களுக்கானவை. குடிநீர் கட்டணங்களிலிருந்து பெறப்படும் வருவாயைக்கொண்டு, குடிநீர் திட்டங்களுக்கான கடன் தொகை மற்றும் இத்திட்டங்களின் பராமரிப்புச் செலவு ஆகிய இரண்டையும் ஈடுகட்டுவது இயலாததாகும். அதே நேரத்தில், இவ்வமைப்புகளின் பொது நிதி நிலைமை சீராக இல்லாததினால், அவற்றில் இருந்தும் கடன்களைத் திருப்பிக் கொடுப்பது கடினமாகவே இருந்துள்ளது. இது நெடுநாளைய குறையாகவே இருந்தாலும், இதற்கான தீர்வு



இப்போதுதான் ஏற்பட்டுள்ளது. அரசால் 1999-2000 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ள நகர்ப்புறங்களுக்கான பொன்விழா ஆண்டு குடிநீர் திட்டத்திற்கு ரூ. 50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்புதிய திட்டத்தின்படி நகர்ப்புற குடிநீர் வசதித் திட்டங்களைச் செயலாக்க மூலதன மானியம் தேவையான அளவுக்கு அளிக்கப்பட்டு, இவ்வமைப்புகளின் கடன் பளுவை குறைப்பதோடு நியாயமான தண்ணீர் கட்டண முறையையும் அமல்படுத்த இயலும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலையைச் சீராக்க இது ஒரு முக்கியமான நடவடிக்கையாகும். நடப்பாண்டில் இத்திட்டத்தின்கீழ் 12 நகராட்சிகளில் குடிநீர் திட்ட மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

17. இந்த முக்கியமான திட்டத்தைத் தவிர, தாம்பரம் நகராட்சிக்கு குடிநீர் விநியோகத்தை மேம்படுத்த உடனடியாகச் செய்ய வேண்டிய சில பணிகள் ரூ. 1.82 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளன. அவ்வாறே, மாதவரம் நகராட்சியிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோக மேம்பாட்டுத் திட்டம் ரூ. 74 லட்சம் செலவில் மாநகர் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு அத்திட்டத்தினை நிறைவேற்றும் பொறுப்பை சென்னை பெருநகர் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது நாளொன்றுக்கு 30 லட்சம் லிட்டர் தண்ணீர் அளிக்கும் இத்திட்டம் கூடிய விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## துப்புரவு

18. நகர்ப்புறப் பகுதிகளில் குறைந்த செலவிலான கழிப்பறை கட்டும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் மத்திய அரசின் மானியம் மற்றும் ஹட்கோ நிறுவனத்தின் கடன் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இதுகாறும், மாநிலத்தில் நகராட்சிகளிலும் மற்றும் 5 மாநகராட்சிகளிலும் 98,526 கழிப்பிடங்கள் (புதிய தண்ணீர் வசதி கொண்ட கழிப்பிடங்களுடன் உலர் கழிப்பிடங்களை தண்ணீர் உபயோகப்படுத்தக் கூடிய கழிப்பிடங்களாக மாற்றம் செய்யப்பட்டவையும் சேர்த்து) கட்டப்பட்டுள்ளன. தற்போது, 74 நகராட்சிகள் மற்றும் 3 மாநகராட்சிகளில் தனி நபர் உலர் கழிப்பிடங்கள் எதுவும் இல்லை எனக் கூறலாம். மேலும், 1999-2000 ஆம் ஆண்டில் 9 நகராட்சிகளில் ரூ. 1 கோடி செலவில் பகுதி-II திட்டத்தில் 56 உலர் கழிப்பிடங்கள் தண்ணீர் உபயோகப்படுத்தக்கூடிய கழிப்பிடங்களாக மாற்றப்படவுள்ளன. இந்தத் திட்டம் முடிவுற்றதும்

பொது உலர் கழிப்பிடங்கள் எதுவும் எந்தவொரு நகராட்சிப் பகுதியிலும் இல்லை என்ற நிலை உருவாக்கப்படும்.

### திடக்கழிவு நிர்வாகம்

19. தமிழகத்தில் உள்ள நகர்ப்புறங்கள் தூய்மையாக இருப்பதற்கு 100 விழுக்காடு குப்பை கூளங்களை தினந்தோறும் நகராட்சிப் பகுதிகளில் இருந்து சேகரித்து அதனை உரமாக மாற்றும் தீவிர நடவடிக்கையினை இத்துறை மேற்கொண்டு வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் மேற்காணும் திட்டத்தின்படி, மேட்டூர், மேட்டுப்பாளையம், குன்னூர் மற்றும் தேனி அல்லிநகரம் ஆகிய நான்கு நகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு உரம் தயாரித்தலை நவீனமாக்குவதற்குத் தேவையான இயந்திரங்களை நிறுவவும், உரக்கிடங்குகளில் தேவையான கூடுதல் வசதிகளைச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் குப்பைகளை அகற்றத் தேவையான வாகனங்களும் வாங்கிப் பயன்படுத்தப்படும். இதற்காக பகுதி-II திட்டத்தில் ரூ. 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### எடை மேடைகளை நகராட்சிகளில் அமைத்தல்

20. நகர்ப்புறப் பகுதிகளில் முதன்மையாக இருக்க வேண்டியது துப்புரவுப் பணியும் அத்துடன் தக்க திடக்கழிவு நிருவாகமும் ஆகும். சுமார் 5250 மெட்ரிக் டன் குப்பைகளை தினந்தோறும் அகற்றும் பணியினை 102 நகராட்சிகளும் மற்றும் 5 மாநகராட்சிகளும் செய்து வருகின்றன. தினந்தோறும் தெருக்களில் உள்ள குப்பைகளைச் சேகரித்து உரக்கிடங்கிற்கு அதனைக் கொண்டு செல்லும் வாகனங்களைத் தீவிர கண்காணிப்பின் மூலம் பராமரிப்பதற்கு உலக வங்கி உதவியுடன் முதற்கட்டமாக ரூ. 1.32 கோடி செலவில் எடைமேடைகள் 17 நகராட்சிகளிலும் 5 மாநகராட்சிகளிலும் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

### இரண்டாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

21. தமிழக அரசு உலக வங்கியின் உதவியுடன் இரண்டாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தினை அமல்படுத்த உத்தேசித்துள்ளது. இத்திட்டப்பணியின் காலவரம்பானது 1999-2000 ஆம் ஆண்டு முதல், ஐந்து வருடங்களாகும். இத்திட்டத்திற்காக



10.5 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்குச் சமமான தொகை உலக வங்கியிலிருந்து கடனாகக் கிடைக்கப்பெற உள்ளது.

22. இத்திட்டம் இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். ஒன்று நகர்ப்புற முதலீடு அமைப்பு; மற்றொன்று பொது நிறுவன வளர்ச்சி அமைப்பாகும். நகர்ப்புற முதலீட்டு அமைப்பின்கீழ் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து பெறப்படும் குடிநீர் விநியோகம், கழிவு நீர் அகற்றுதல், துப்புரவு, திடக்கழிவு நிருவாகம், சாலைகள், மழைநீர் வடிகால்கள் மற்றும் தெரு விளக்குகள் ஆகிய அத்தியாவசியத் திட்டப் பணிகளுக்குத் தேவையான நிதியுதவி வழங்கப்படும்.

23. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-II-ன் பொது நிறுவன வளர்ச்சிப் பகுதியின்கீழ் நகராட்சிகளில் ஒருங்கிணைந்த துப்புரவுத் திட்டம் ஒன்று அமல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் 1999-2000 ஆம் ஆண்டு முதல், ஐந்தாண்டுகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான உத்தேச செலவு 10 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்குச் சமமான தொகையாகும். இத்திட்ட காலத்தில் தேவையான இடங்களில் பொதுக் கழிப்பிடங்கள் சகல வசதிகளுடன் அமைக்கப்படும். அந்தந்தப் பகுதி மக்களின் முழு ஒத்துழைப்புடன் இடத்தேர்வு, வடிவமைப்புகள் மற்றும் பராமரிப்பு பற்றிய ஆலோசனைகள் பெற்று இவை ஏற்படுத்தப்படும். இச்செறிவுத் திட்டத்தில் சுற்றியுள்ள குடிசைப் பகுதிகளைச் சுத்தமாக வைத்திருப்பதற்குத் தேவையான இதர பணிகளும் மேற்கொள்ளப்படும்.

24. இத்திட்டம் சம்பந்தமான ஆலோசனைகள் உலக வங்கியுடன் ஏற்கெனவே முடிந்துவிட்டது. இத்திட்டத்திற்கான இறுதி ஒப்புதல் உலக வங்கியிடமிருந்து விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

### பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்

25. முன்பு நடைமுறையில் இருந்த நேரு வேலைவாய்ப்புத் திட்டம், நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் மற்றும் பிரதமரின் வறுமை ஒழிப்புத் திட்டம் ஆகிய திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு 1-12-1997 முதல் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் (சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா) என்ற திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் சமுதாய கட்டமைப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு 75 சதவீதமும், மாநில அரசு 25 சதவீதமும் நிதியுதவி

வழங்குகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு சுமார் ரூ. 20 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் நகர்ப்புற ஏழை மக்களின் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் நோக்கில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்படும். மேலும், அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் இத்திட்டம் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள நகர்ப்புற ஏழை மக்களுக்கென சிறப்புத் திட்டமாகச் செயல்படுத்தப்படவுள்ளது

**பயிற்சி**

26. நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்காக தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு நகரவியல் பயிற்சி நிறுவனத்தை திருத்தி அமைப்பதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்க புதுடெல்லியிலுள்ள எச.எஸ்.எம்.ஐ., கலந்தாய்வு நிறுவனத்தினை அரசு கேட்டுக்கொண்டுள்ளது. இப்பயிற்சி நிறுவனம் வறுமை ஒழிப்புத் திட்ட செயல்பாடுகளைச் சிறப்பாகச் செயல்படுத்த மாநில அளவில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மாநிலத்தில் நகர்ப்புற உள்ளாட்சி நிருவாகம் சம்பந்தமாக பல சீர்திருத்தங்களை அண்மைக் காலமாக அரசு செயல்படுத்தியுள்ளதால் அவற்றைத் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுத்த அலுவலர்களுக்கு நல்ல பயிற்சி அளிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாலும் இந்தப் பயிற்சி நிறுவனத்தை முழுமையாக திருத்தி அமைக்க வேண்டியுள்ளது. இந்தக் கலந்தாய்வு நிறுவனத்தின் அறிக்கை கிடைக்கப்பெற்றதும் அரசு இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும்.

**சென்னை மாநகராட்சி**

27. முன்னூறு ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட சென்னை மாநகராட்சி, நாட்டில் உள்ள பழமையான மாநகராட்சிகளில் ஒன்றாகும். இம்மாநகராட்சியின் எல்லை 174 சதுர கிலோமீட்டர் அளவில் பரந்து விரிந்துள்ளது. 1991 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி சென்னை மாநகரின் மக்கட்தொகை 38.41 இலட்சமாகும்.



28. சென்னை மாநகராட்சியின் 1999-2000 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்படி ஆண்டு வருவாய் ரூபாய் 386.41 கோடி அளவில் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல், வருவாய் கணக்கில் செலவினம் ரூபாய் 422.50 கோடி அளவில் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் இம்மாநகராட்சியானது ரூ. 189.68 கோடிக்கான மூலதன பணிகளுக்கானத் திட்டங்களைத் தீட்டியுள்ளது. சென்ற ஆண்டைப்போல் இந்த ஆண்டிலும் கீழ்வரும் பணிகளில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்:—

(i) குடிசைப் பகுதிகள் மற்றும் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளின் வளர்ச்சி.

(ii) மழைநீர் வடிகால் அமைப்பை பலப்படுத்துதல்.

(iii) முக்கிய சாலைகள் மற்றும் சந்திப்புகளில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும்பொருட்டு கூடுதல் பாலங்கள், சுரங்கப் பாதைகள் மற்றும் சிறு மேம்பாலங்கள் அமைத்தல்.

(iv) திடக்கழிவு நிருவாக அமைப்பை நவீனப்படுத்துதல்.

(v) சரியான நேரத்தில் தக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துதல்.

(vi) தனியார் கல்வி நிறுவனங்களின் கல்வித் தரத்திற்கு சமமாக மாநகராட்சிப் பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்துதல்.

29. மாநகராட்சியின் சொந்த வருவாயை உயர்த்துவதன் மூலமாகவும், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழக நிறுவனத்திலிருந்தும், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்திடமிருந்தும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்திடமிருந்தும் கடன் வசதிகள் பெற்று மூலதன திட்டத்திற்கு நிதி உதவி திரட்ட சென்னை மாநகராட்சி உத்தேசித்துள்ளது.

**சாலைகள்**

30. ஒவ்வொரு நகரத்திற்கும் சாலைகள் உயிர்நாடிகள் ஆகும். சென்னை மாநகராட்சி 302 கிலோமீட்டர் நீளத்திற்கான பேருந்து வழி தடச் சாலைகளையும், 1,900 கிலோ மீட்டர் நீளத்திற்கான உட்புறச் சாலைகளையும் பராமரித்து வருகிறது. 1999-2000ல் சாலைப்

[1999 மே 12

பணிகளுக்காக, குறிப்பாக, உட்புறச் சாலைகள் பராமரிப்பிற்காக ரூ. 55 கோடி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

### தெரு விளக்குகள்:

31. தற்போது பல்வேறு வகையைச் சேர்ந்த 1,02,349 தெரு விளக்குகள் உள்ளன. ஒவ்வொரு வகையின்கீழ் உள்ள விளக்குகளின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:—

| வ.எண் | வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | 70,338 |
| 2 | சோடியம் ஆவி விளக்குகள் | 32,011 |
| | மொத்தம் | 1,02,349 |

32. தெரு விளக்குகள் கூடுதலாக அமைப்பதற்குத் தேவையான அடிப்படை மாற்றங்கள் சமீபத்தில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில் அதிக வெளிச்சம் தரும் உயர் கம்ப விளக்குகள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகள் அமைபபதற்கும், விடுபட்ட குடிசைப் பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கவும் ரூபாய் 6 கோடி மாநகராட்சியால் செலவிடப்படும்.

### பாலங்கள்:

33. சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து வருவதால் பாலங்களை மேம்படுத்துவதும், புதிய பாலங்கள் கட்டுவதும் மிகவும் அவசியமாகிறது. சென்னை மாநகராட்சி 1999-2000 ஆம் ஆண்டில் ரூபாய் 65 கோடி செலவில் ஏற்கெனவே இருக்கின்ற பாலங்களை மேம்படுத்தவும் மற்றும் புதிதாகக் கட்டவும் உத்தேசித்துள்ளது. மேலும், போக்குவாத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக ரூ.115 கோடி செலவில் புதிய 10 சிறு மேம்பாலங்கள் கட்ட திட்டம் தீட்டப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது.

### மழைநீர் வடிகால்கள்:

34. மழைக் காலங்களில் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்கவும், சாலைகளைப் பாதுகாக்கவும், சென்னை



1999 மே 12]

மாநகராட்சி சுமார் 688 கிலோமீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால்களைப் பராமரித்து வருகிறது. தேவையான பகுதிகளில் தற்போது உள்ள மழைநீர் வடிகால்களை மேம்படுத்த, 1998-99 ஆம் ஆண்டு ரூ. 24 கோடியில் பெரும் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. புதிய மழைநீர் வடிகால்களை கட்டவும் தற்போதுள்ள மழைநீர் வடிகால்களை மேம்படுத்தவும் 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.20 கோடி மதிப்பீட்டுச் செலவில் திட்டம் ஒன்று வரையப்பட்டுள்ளது.

### திடக்கழிவு நிருவாகம்:

35. துப்புரவுப் பணி சிறப்பாகச் செயல்பட்டால், அடிப்படை சுகாதாரம் மேம்பாடு அடையும். சென்னை மாநகரில், 3,100 மெட்ரிக் டன் கழிவுப் பொருட்கள் நாள்தோறும் சேகரிக்கப்படுகின்றன. சுமார் 8,400 துப்புரவுப் பணியாளர்கள்மூலம் இக்கழிவுப் பொருட்கள் சேகரித்து அகற்றப்படுகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் வாகனங்கள் வாங்கவும், மற்ற பணிகளுக்கும் ரூ. 15.50 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்:

36. பொது சுகாதாரத்திற்கான தேவைகளையும், மகப்பேறு மற்றும் குழந்தை நலத்திற்கானத் தேவைகளையும் நிறைவு செய்வதற்காக, சென்னை மாநகராட்சி 73 மருந்தகங்களையும், 93 சுகாதார மையங்களையும் பராமரித்து வருகின்றது. அனைத்து சுகாதார மையங்களிலும் தொடக்க சுகாதார பாதுகாப்பு வசதி உள்ளது. வரும் ஆண்டில் தொற்று நோய்கள் மற்றும் பூச்சிகளால் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த உரிய நேரத்தில் தக்க நடவடிக்கை மேற்கொள்ள சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

### கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள்:

37. நடப்பு ஆண்டில் மாநகராட்சி பள்ளிகளில் உள்ள கல்வி வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுக் கூடங்கள், நூலகங்கள் மற்றும் இதர சாதனங்கள் ஆகியவற்றை மேலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, ரூ. 3 கோடி வழங்கப்படவுள்ளது. வரும் காலங்களில் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் ஆகியவற்றை சென்னை மாநகர மக்களுக்கு சிறப்பான பொழுதுபோக்கு இடங்களாக மாற்றும் பொருட்டு தேவையான கூடுதல் வசதிகளை ஏற்படுத்தும் பணி ரூ. 2 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

## மதுரை மாநகராட்சி

38. மதுரை மாநகராட்சி 51.85 சதுர கி.மீ. பரப்பளவும் 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 9.51 இலட்சம் மக்கட்தொகையையும் கொண்டுள்ளது.

39. 1999-2000 ஆம் ஆண்டில் இம்மாநகராட்சி ரூ. 9 கோடி மதிப்பீட்டில் மூலதனப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகள் மாநகராட்சியின் வருவாய் மற்றும் அரசு மானியம் ஆகிய நிதி ஆதாரங்களைக்கொண்டு செயலாக்கப்படும். இப்பணிகளில் கீழ்க்கண்ட முக்கிய பணிகள் 1999-2000 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ளன:–

**அ. சாலைகள்:**

மாநகராட்சி 526 கி.மீ. நீளமுள்ள சாலைகளைப் பராமரித்து வருகிறது. இந்நிதியாண்டில் ரூ. 8 கோடி. செலவில் 120 கி.மீ நீளத்திற்கு சாலைகளைப் புதுப்பிக்கவும் 10 கி.மீ. நீள புதிய கற்சாலைகள் அமைக்கவும், 10 கி.மீ. நீள புதிய தார்ச் சாலைகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஆ. தெரு விளக்குகள்:**

இம்மாநகராட்சியானது 12,839 குழல் விளக்குகளையும், 1,116 சோடியம் ஆவி விளக்குகளையும், 5 உயர் கோபுர விளக்குகளையும் பராமரித்து வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 1 கோடி செலவில் 821 புதிய குழல் விளக்குகள் மற்றும் 1128 சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இச்செலவினம் மாநகராட்சியின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

**இதர பணிகள்:**

40. இரண்டு வணிக வளாகக் கட்டடங்களை ரூ.2 கோடி செலவில், கட்டுதல்-இயக்குதல்-மாற்றுதல் (B.O.T.) என்ற அடிப்படையில் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

41. இம்மாநகராட்சியானது 8 மேல்நிலைப் பள்ளிகள், 13 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 53 தொடக்கப் பள்ளிகளை பராமரித்து நலிந்த பிரிவினரின் குழந்தைகளுக்குக் கல்வி பயிற்றுவித்து வருகின்றது.



1999-2000 ஆம் ஆண்டில் சுமார் ரூ. 75 இலட்சம் செலவில் இப்பள்ளிக்கூட கட்டடங்களை புதுப்பிக்க உத்தேசித்துள்ளது.

## கோயம்புத்தூர் மாநகராட்சி

42. கோயம்புத்தூர் மாநகராட்சி 105.60 சதுர கி.மீ பரப்பளவும், 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 8.16 இலட்சம் மக்கட்தொகையும் கொண்டுள்ளது.

**குடிநீர் வழங்கல்:**

43. இம்மாநகராட்சியானது பொதுமக்களுக்கு சிறுவாணி மற்றும் பில்லூர் நீர்த்தேக்கங்களிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக ரூ. 27.23 கோடி செலவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதை நிறைவேற்றிட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ரூ. 12.1 கோடி இதுவரை வழங்கப்பட்டுள்ளது. மேலும், ரூ. 15 கோடி ஹட்கோ நிறுவனத்திடமிருந்து கடனாகப் பெறப்படவுள்ளது.

**தெரு விளக்குகள்:**

44. 1999-2000 ஆம் ஆண்டில் தற்சமயம் இருக்கும் 2000, 40 வாட்ஸ் குழல் விளக்குகளை, 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகளாக ரூ. 1 கோடி செலவில் மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. முக்கிய சாலைகள் சந்திப்பில் ரூ. 40 இலட்சம் செலவில் 8 உயர் கோபுர மின் விளக்குகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மின்சார விநியோகம் இல்லாத பொதுக் கழிப்பறை, சுடுகாடு போன்ற பகுதிகளுக்கு ரூ. 50 இலட்சம் செலவில் 75 சூரிய ஒளி விளக்குகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான நிதியை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்திடமிருந்து மானியமாகவும் கடனாகவும் பெறப்படும்.

**இதர பணிகள்:**

45. இம்மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் 98 நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 1 கோடி செலவில் மாணவ மாணவியருக்கான இருக்கைகள் வாங்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

**கழிவுநீர்த் திட்டம்:**

46. கோவை நகரின் 40% பகுதியில் மட்டும்தான் தற்போது பாதாள சாக்கடை அமைப்பு உள்ளது. நகரத்தின் பகுதி IV-க்கு பாதாள சாக்கடை அமைக்க திட்டம் ஒன்று வரையறுக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவு ரூ. 57.46 கோடியாக இருக்கும். கோவை மாநகராட்சி, இதற்கான நிதியை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவனத்திடமிருந்து கடனாகப் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கூடியவிரைவில் கோரப்படும்.

## திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

47. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 146.90 சதுர கி.மீ. பரப்பளவும், 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 6.66 இலட்சம் மக்கட்தொகையும் கொண்டுள்ளது.

48. இம்மாநகராட்சி 1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 11.17 கோடிக்கான மூலதன திட்டங்களைச் செயலாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இம்மூலதனப் பணிகளை மாநகராட்சியின் சொந்த வருவாய் மற்றும் அரசின் நிதியுதவி மூலம் நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட மூலதனப் பணிகளும் சேர்க்கப்பட்டுள்ளன:—

**அ. சாலைகள்:**

இம்மாநகராட்சிப் பகுதியில் 6.50 கி.மீ. நீளமுள்ள முக்கிய பேருந்து வழித்தடங்களை ரூ. 1.40 கோடி செலவில் அகலப்படுத்தி இருவழிப் பாதையாக மாற்றவும், இம்மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிக்கு முக்கியத்துவம் கொடுத்து மேலும் 20 கி.மீ. நீளமுள்ள சாலைகளை ரூ. 1.20 கோடி செலவில் மேம்பாடு செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலைகளில் ரூ. 3.35 கோடி செலவில் 48 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ஆ. தெரு விளக்குகள்:**

இம்மாநகராட்சிப் பகுதியில் புதியதாகத் தோன்றியுள்ள குடியிருப்புப் பகுதிகளில் 600 புதிய குழல் விளக்குகள் ரூ. 15 இலட்சம் மதிப்பீட்டிலும்,



ஏற்கெனவே உள்ள பேருந்துகள் செல்லும் சாலைகளிலும் முக்கிய சாலைகளின் சந்திப்புகளிலும் 150 சோடியம் ஆவி விளக்குகள் ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டிலும், 15 உயர் கோபுர மின் விளக்குகள் ரூ. 75 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் ரூ. 1 கோடி செலவில் பொது நிதியிலிருந்து அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவன நிதியுதவியுடன் இரண்டாம் கட்டப் பணியாக 1,201 சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**கழிவுநீர் பண்ணையில் மீன்கள் வளர்த்து சுத்திகரிப்புச் செய்தல்:**

49. மாநகராட்சி கழிவுநீர் பண்ணையில் மீன்கள் வளர்ப்பதன் மூலம் கழிவுநீரை சுத்திகரிப்பதுடன் மீன்கள் உற்பத்திச் செய்வதன் மூலம் மாநகராட்சிக்கு வருவாய் கிடைப்பதற்காக தேசிய ஆற்று நடவடிக்கை திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகமும் இணைந்து ரூ. 1.24 கோடி மதிப்பீட்டில் தயாரித்துள்ள ஒரு திட்டம் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டப்பணி 1999-2000 ஆம் ஆண்டில் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சேலம் மாநகராட்சி

50. சேலம் மாநகராட்சி 91.34 சதுர கி.மீ. பரப்பளவும், 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 5.85 இலட்சம் மக்கட்தொகையும் கொண்டுள்ளது.

51. இம்மாநகராட்சி 1999-2000 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட மூலதன திட்டங்களை மாநகராட்சியின் சொந்த வருவாய் மற்றும் அரசு நிதியுதவி மூலம் செயல்படுத்தவுள்ளது:—

**அ. சாலைகள்:**

தார்ச்சாலைகள் அமைக்கவும் மற்றும் பராமரிக்கவும் ரூ. 50 இலட்சமும், சாக்கடை மற்றும் சிறு பாலங்கள் கட்டவும், பராமரிக்கவும் ரூ. 25 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆ. துப்புரவுப் பணி:**

நடப்பு ஆண்டில் ரூ. 20 இலட்சம் செலவில் புதியதாக உரக்கிடங்கு அமைக்க உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

**இ. மகப்பேறு இல்லங்கள்/சுகாதார மையங்கள் மற்றும் மருந்தகங்கள்:**

புதியதாக இணைக்கப்பட்ட 28 டேனிடா துணை சுகாதார மையங்களுக்கும் மற்றும் ஏற்கெனவே இருந்துவரும் மையங்களுக்கும் உபகரணங்கள் மற்றும் பராமரிப்பிற்கு ரூ.20 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. தாதகாப்பட்டி மகப்பேறு மருத்துவமனை வளாகத்தில் ஒரு நவீன அறுவை சிகிச்சை அரங்கம் இவ்வாண்டில கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டு, இதற்காக ரூ. 10 இலட்சம் செலவிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஈ. தெரு விளக்குகள்:**

1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 15 இலட்சம் செலவில் 100 சோடியம் ஆவி விளக்குகளும் மற்றும் 1,000 குழல் விளக்குகளும் புதியதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**உ. வணிக வளாகம்:**

ரூ. 6.35 கோடி செலவில், வணிக வளாகம் கட்டும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இதற்கான நிதியினை, மாநகராட்சி, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனத்திடம் ரூ.6.35 கோடி கடனாகப் பெற்றுள்ளது. இப்பணி 2000 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## திருநெல்வேலி மாநகராட்சி

52. திருநெல்வேலி மாநகராட்சி 108.65 சதுர கி.மீ. பரப்பளவும், 1991 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி 3.69 இலட்சம் மக்கட் தொகையும் கொண்டுள்ளது.

53. 1999-2000 ஆம் ஆண்டில் இம்மாநகராட்சி ரூ.7.80 கோடி மதிப்பீட்டில் மூலதனப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. இதில் மாநகராட்சியின் சொந்த நிதியும் அரசிடமிருந்து பெறப்படும்



நிதியுதவியும் அடங்கும். மேற்கண்ட பணிகள் இவ்வினத்தின்கீழ் திட்டமிடப்பட்டுள்ள சில முக்கிய பணிகளாகும்.

**அ. சாலைகள்:**

ரூ. 1.5 கோடி மதிப்பீட்டில் சுமார் 25 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. சுமார் 30 கி.மீ. நீளமுள்ள வடிகால் கட்டும் பணிக்கு ரூ. 1.5 கோடி மதிப்பீட்டில் செலவிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**ஆ. தெரு விளக்குகள்:**

275 சோடியம் ஆவி விளக்குகளும், 500 குழல் விளக்குகளும் ரூ. 35 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. சுமார் ரூ. 6 இலட்சம் மதிப்பில் தெரு விளக்குகள் பராமரித்திட ஏணியுடன் கூடிய லாரி ஒன்று வாங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**இ. குடிநீர் வழங்கல்:**

தச்சநல்லூர் பகுதிக்கான குடிநீர்த் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூ. 1.12 கோடி செலவில் முடிக்கப்பட்டு உள்ளது. குடிநீர் விநியோகம் இல்லாத மாநகராட்சிகளின் பிற பகுதிகளுக்காக ரூ. 8.29 கோடியில் திட்டம் செயலாக்கத்தில் உள்ளது.

**ஈ. இதர பணிகள்:**

நடப்பாண்டில் மின்தகன நிலையம் நிர்மாணிக்க ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாளையங்கோட்டையில் உள்ள நேரு கலையரங்கத்தில் சுமார் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் உள்விளையாட்டு திடலுடன் கூடிய கலையரங்கு நடப்பாண்டில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## பேரூராட்சிகள் நிருவாகம்

54. மாநிலத்தில் தற்போது மொத்தம் 613 பேரூராட்சிகள் உள்ளன. இதில் 1997-98 ஆம் ஆண்டில் நகராட்சிகளாக இருந்து பேரூராட்சிகளாக மாற்றம் செய்யப்பட்ட பவானிசாகர் மற்றும் குற்றாலம் ஆகியவையும் அடங்கும்.

55. வருமானத்தின் அடிப்படையில் பேரூராட்சிகள் சிறப்பு நிலை, தேர்வு நிலை, முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை பேரூராட்சிகளாக வகைப்படுத்தப்பட்டு உள்ளன. இந்த வகைப்பாட்டின்படியான மாநிலத்தில் உள்ள பேரூராட்சிகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு:

| நிலை | எண்ணிக்கை |
|---|---|
| சிறப்பு நிலை | 28 |
| தேர்வு நிலை | 279 |
| முதல் நிலை | 219 |
| இரண்டாம் நிலை | 87 |
| **மொத்தம்** | **613** |

56. சிறிது காலத்திற்கு முன் மக்கள் தொகை, மக்கள் தொகை நெருக்கம், ஆண்டு வருமானம் மற்றும் விவசாய முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் சில பேரூராட்சிகளை ஊராட்சிகளாக மறுவகை மாற்றம் செய்ய முடிவு எடுக்கப்பட்டது. 96 பேரூராட்சிகள் இதற்கான தீர்மானங்களை நிறைவேற்றின. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி இவைகளை ஊராட்சிகளாக அறிவித்திட உத்தேசிக்கப்பட்டது தொடர்பாக அரசிதழில் முதல்நிலை அறிவிக்கை வெளியிடப்பட்டது. இருப்பினும், தற்போது 23 பேரூராட்சிகள் மட்டும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி கிராம ஊராட்சிகளாக மாற்றியமைத்திட ஒப்புதலளித்து தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியுள்ளதன் அடிப்படையில் இவை கிராம ஊராட்சியாக 1.4.1999 முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

57. பேரூராட்சிப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு அளிக்கப்பட வேண்டிய அடிப்படை சேவைகளின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்துள்ளது. இந்த இலக்கை எட்டுவதற்கு பேரூராட்சிகளின் நிதி, தொழில்நுட்பம் மற்றும் ஏறபுத் தன்மையுடைய நிருவாகத்தை, அளிக்கக்கூடிய வகையில் அரசு இப்பேரூராட்சிகளின் திறனை உயர்த்த முயற்சித்து வருகிறது. மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி மாநிலத்தில் உள்ள பேரூராட்சிகளுக்கு 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 111.32 கோடியும், 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 136.80 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் இத்தொகை ரூ. 136.80



கோடிக்கும் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் இத்தொகையில் ஒரு பகுதி, அதாவது ரூ. 18.55 கோடி சமன்பாட்டு மற்றும் ஊக்க நிதியாக நிதிநிலை நலிந்த பேரூராட்சிகளுக்கும் மற்றும் கடன் தவணைகள் செலுத்திய பேரூராட்சிகளுக்கும் பிரித்து அளிக்கப்பட்டு உள்ளது. இது நீங்கலாக, தெரு விளக்கு, குடிநீர்த் திட்ட அபிவிருத்தி, சாலை மேம்பாடு, வடிகால் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ள பேரூராட்சிகளுக்கென சுமார் ரூ. 36 கோடி வழங்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அனைத்துப் பேரூராட்சிகளிலும் குடிசை மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது. ரூ. 30.90 கோடி மைய மற்றும் மாநில அரசுகளின் மூலம் அளிக்கப்பட்டுள்ளது. பேரூராட்சிகளின் நிதி வசதியை உணர்த்தக்கூடிய அளவுகோலுக்கு, இப்பேரூராட்சிகள் 1998-99 ஆம் ஆண்டில் தனது பொது நிதியிலிருந்து அடிப்படை வசதிகளுக்கு செலவிட்ட தொகையே ஒரு சான்றாகும். 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 23 கோடி அளவிற்கும் 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 69 கோடி அளவிற்கும் மூலதனப் பணிகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் இத்தொகை இன்னும் அதிகரித்து ரூ. 75 கோடியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முந்தைய ஆண்டுகளில் ஆண்டு ஒன்றிற்கு, பேரூராட்சிகள் ரூ. 50 இலட்சம் மட்டுமே செலவழிக்கும் நிலைமை இருந்து வந்தது.

58. 1997-98ஆம் ஆண்டில் பேரூராட்சிகளுக்கென தனி பொறியாளர் அமைப்பினை அரசு ஏற்படுத்தியுள்ளது. தற்போது பேரூராட்சிப் பணிகளைக் கவனிக்க 16 உதவி நிர்வாகப் பொறியாளர்கள், 90 உதவிப் பொறியாளர்கள்/இளநிலைப் பொறியாளர்கள் உள்ளனர். தேவையான ஒட்டுமொத்த மேற்பார்வை, மண்டல நகராட்சிப் பொறியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பேரூராட்சிகளின் இயக்ககத்தில் ஒரு செயற்பொறியாளர் பணியிடமும் தற்போது தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையே பேரூராட்சிகளின் அனைத்துத் திட்டங்களையும் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்கக்கூடிய திறனை உயர்த்துவதற்கு ஏற்ற நடவடிக்கையாக அமைந்துள்ளது. தொழில்நுட்ப அனுமதி வழங்கும் வரம்பினை பல்வேறு நிலைகளில் பிரித்து வழங்கப்பட்டுள்ளது. மதிப்பீடுகளுக்கு தற்போது பேரூராட்சிகளில் பணியாற்றும் உதவிப் பொறியாளர்கள் / இளநிலைப் பொறியாளர்கள் ரூ.1.00 இலட்சம் வரை ஒப்புதல் அளிக்கவும், உதவி

நிருவாகப் பொறியாளர்கள் ரூ.5.00 இலட்சம் வரை ஒப்புதல் அளிக்கவும் உத்திரவிடப்பட்டுள்ளது. இதனால், பேரூராட்சிகளில் பணிகளை விரைவாகவும் திறமையாகவும் செய்து முடிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## தெரு விளக்குகள்:

59. தெரு விளக்குகள் அமைக்கும் நடைமுறைகளை அரசு எளிதாக்கி உள்ளது. ஒவ்வொரு மனுவின்மீதும் தமிழ்நாடு மின் வாரியம் விரிவான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்குப் பதிலாகப் புதிய கம்பத்துடன் மின் விளக்கு பொருத்திகளுடன் அமைக்க ரூ.1900/- என்றும், ஏற்கெனவே உள்ள கம்பத்தில் மின்விளக்கு அமைக்க ரூ.740/- எனவும் சோடியம் ஆவி விளக்கு அமைக்க (பொருத்திகளின்றி) ரூ.550/-ம் உள்ளாட்சி அமைப்புகள் நிதி செலுத்த வேண்டும் என்று அரசு நிர்ணயித்துள்ளது. இதனால், தெரு விளக்கு அமைக்கும் வேலைகளை விரைவில் மேற்கொள்வதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் பேரூராட்சிகளில் 19422 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 5022 சோடியம் ஆவி விளக்குகளும் அடங்கும்.

## பேரூராட்சிகளில் துப்பரவுப் பணி:

60. பேரூராட்சிகளின் சாலைகளின் நீளம், வடிகால்களின் நீளம் ஆகியவற்றின் அடிப்படையில் கூடுதல் துப்பரவுப் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு பொது சுகாதாரம் நன்கு பராமரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பேரூராட்சிகளில் பராமரிக்கப்பட்டு வந்த மாட்டு வண்டிகள் மற்றும் மூன்று சக்கர வண்டிகளை முற்றிலும் நீக்கம் செய்யக் கருதி ஆண்டுதோறும் டிராக்டர்கள், மினி லாரிகள், பவர் டில்லர்கள் பேரூராட்சிகளுக்கு வழங்கப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் ரூ.4.12 கோடி செலவில் 181 இயந்திர வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## குடிநீர் வழங்கல்:

61. மொத்தம் 613 பேரூராட்சிகளில், 497 பேரூராட்சிகளில் தினசரியும், 116 பேரூராட்சிகளில் இரண்டு நாட்களுக்கு ஒருமுறையும் குடிநீர் வழங்கப்படுகிறது. 1998-99ஆம் ஆண்டில் குடிநீர் வசதிக்கென ரூ.15.27 கோடி செலவில் குடிநீர் வழங்கும் அளவினை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு



வழங்கப்படும் குடிநீரின் அளவை அதிகரித்திடவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பேருந்து நிலைய தளம் மற்றும் சிறிய தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்தல்:

62. 1998-99ஆம் ஆண்டில் ரூ.105.74 கோடிக்கு சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் முதன்முறையாக பேருந்து நிலையங்களில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கும் பணிகளுக்கும், சிறிய சந்துகளுக்கும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளுக்கும் ரூபாய் 10.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1999-2000ஆம் ஆண்டிலும் இத்திட்டத்திற்கென ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

## பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்:

63. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டம் முதன்முறையாகச் செயல்படுத்தப்பட்டது. ரூ.28.45 கோடி நிதியில் நகர்ப்புறத்தில் உள்ள வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டது. 1999-2000 ஆம் ஆண்டில் பேரூராட்சிகளில் அண்டை வீட்டுக் குழு, சிக்கன நாணயச் சங்கம் போன்ற அமைப்புகள் ஏற்படுத்தவும் அவற்றின் மூலம் நகர்ப்புற சுய வேலைவாய்ப்பளிக்கும் திட்டங்களும் செயல்படுத்தப்பட உள்ளன.

## பெருந்திட்டங்கள்:

64. ரூ.19.54 கோடி முதலீட்டில் பெருநகரை ஒட்டியுள்ள ஏழு பேரூராட்சிகளில் வணிக வளாகம், மழைநீர் வடிகால், சாலை வசதி, சிறு பாலங்கள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. வளசரவாக்கம் மழைநீர் வடிகால் பணி ரூ.1.2 கோடி அளவில் முடிவடைந்து அதே பேரூராட்சியில் ரூ.1.2 கோடி அளவில் சாலைப் பணிகளும், மதுரவாயல் பேரூராட்சியில் ரூ.1.00 கோடி அளவில் மழைநீர் வடிகால் கட்டும் பணியும், போரூரில் அதே அளவிற்கு மழைநீர் வடிகால் கட்டும் பணியும் தொடங்கப்பட்டுள்ளன.

## புனித தலங்கள் மற்றும் சுற்றுலா மையங்கள் மேம்படுத்துதல்:

65. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.5.00 கோடி நிதி விடுவிக்கப்பட்டு முக்கிய கோயில் மற்றும் சுற்றுலா மையங்கள்

அமைந்துள்ள பேரூராட்சிகளில் அடிப்படை வசதிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 61 பேரூராட்சிகளில் 141 பணிகள் எடுக்கப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 1999-2000 ஆம் ஆண்டிலும் இதே தொகை அளவிற்குப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்**

66. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக நிதி உதவியும், தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கும் நோக்கத்துடன் 1990 ஆம் ஆண்டு கம்பெனிகளின் சட்டம் 1956-ன்கீழ் தொடங்கப்பட்டது. மேலும், இந்நிறுவனமானது மத்திய அரசால் தொடங்கப்பட்ட பெருநகரத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர வளர்ச்சித் திட்டங்களுக்கு அரசால் முகமை நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது.

**பெருநகரத் திட்டம்:**

67. பெருநகரத் திட்டமானது சென்னை, மும்பை, கல்கத்தா, பெங்களூர் மற்றும் ஹைதராபாத் ஆகிய ஐந்து மாநகரங்களில் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக மத்திய அரசின் ஆதரவுடன் தொடங்கப்பட்டுள்ள திட்டமாகும். இத்திட்டத்திற்கான நிதியை மத்திய மற்றும் மாநில அரசுகள் சரிசமமாகப் பகிர்ந்து கொள்ளும். மேற்படி நிதியுடன், நிதி நிறுவனங்களிடம் இருந்தும் நிதியினைப் பெற்று 100 சதவீதம் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கடனாக வழங்கப்படுகிறது. நகர உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக சொத்துகளைத் தொடர்ச்சியான முறையில் உருவாக்கும் பொருட்டு மாநகர சுழல் நிதியை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். 1998-99 ஆம் ஆண்டுவரை ரூபாய் 481.19 கோடி செலவினத்தில் 80 திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. அவற்றில் 18 திட்டங்கள் முடிக்கப்பட்டு எஞ்சியுள்ள திட்டத்தினை விரைவாக முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

68. இந்த நிதியாண்டில் ரூபாய் 50 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களை பெருநகரத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர்



வளர்ச்சிக் குழுமம், சென்னை பெருநகர் குடிநீர் வசதி மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், புதிய திருப்பூர் வசதித் திட்டம் சென்னை பெருநகர் பகுதியில் அமைந்துள்ள 8 நகராட்சிகளும், 23 பேரூராட்சிகளும் பெரு நகரத் திட்டத்தின்கீழ் உதவியினைப் பெறவுள்ளன.

**ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான வளர்ச்சித் திட்டம்:**

69. மத்திய அரசின் ஆதரவுடன் தொடங்கப்பட்ட ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான வளர்ச்சித் திட்டம், 6-வது ஐந்தாண்டுத் திட்ட காலமான 1979-80-ல் தொடங்கப்பட்டது. மக்கட் தொகை 20,000 முதல் 5 இலட்சம் வரையில் உள்ள நகரங்களுக்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான முகமை நிறுவனமாக, அரசு, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனத்தை 1-4-1997 முதல் நியமித்துள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் ரூபாய் 5.00 கோடியினை இத்திட்டத்தின்கீழ் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி:**

70. வளர்ந்துவரும் நகர்ப்புறங்கள் அடிப்படை வசதிகளின் புதிய தேவையை ஏற்படுத்தியதோடு ஏற்கெனவே உள்ள அடிப்படை வசதிகளின் மீது அதிகப் பளுவினைத் திணித்துள்ளது. இந்த தேவைகளைக் கருத்தில்கொண்டு உள்ளாட்சி அமைப்புகள் கடன் உதவியுடன் மூலதனப் பணிகளை மேற்கொள்ள அடிப்படை வசதி 74-வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் அடிப்படையில், பல நகர்ப்புறச் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.

71. இதுசம்பந்தமாக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதியைத் தோற்றுவித்த அரசு அது முடிவுற்றதும், அந்நிதியைத் திருத்தி அமைத்து தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தைத் தோற்றுவித்தது. இது, இந்தியாவில் நகராட்சிகளுக்கு பொறுப்புறுதி இல்லாமல் கடன் அளிப்பதற்கு அரசும் தனியாரும் சேர்ந்து ஏற்படுத்திய முதல் கூட்டு முயற்சியாகும். தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் இதுவரையில் 24 நகராட்சிகள் மற்றும்

மாநகராட்சிகளுக்கு ரூ. 106.82 கோடி மதிப்பீட்டில் 91 திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. நடப்பு நிதியாண்டு 1999-2000-ல் நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் அடிப்படை வசதிகள் திட்டங்களுக்காக ரூபாய் 200 கோடி கடன் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## திருப்பூர் குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றுத் திட்டம்

72. நம் நாட்டின் பருத்திப் பின்னலாடை ஏற்றுமதிக்கு 90% பங்கினை வழங்கும் திருப்பூர் நகரத்தில், தொழிற்சாலைப் பயன்களுக்கு நீர்த் தேவையும், கழிவுநீரகற்றல் போன்ற அடிப்படை வசதிகளின்மையும் நிலவுகிறது. திருப்பூர் உள்ளூர்த் திட்டப் பகுதி என அழைக்கப்படும், திருப்பூர் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றிற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த, புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் லிமிடெட் என்ற ஒரு சிறப்புப் பணி நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது.

73. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம், திருப்பூர் நகரத்தின் தொழிற்சாலை மற்றும் வீட்டு உபயோகத்திற்குக் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீர் அகற்றுதலுக்கான வசதிகளை ஏற்படுத்தி, அவற்றை 30 ஆண்டுகளுக்குப் பராமரித்து, பின் இறுதியாக அரசுக்கோ அல்லது அரசால் குறிப்பிடப்படும் நிறுவனத்திற்கோ பணம் ஏதும் பெறாமல் ஒப்படைக்கும்.

74. திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம், திருப்பூர் உள்ளூர்த் திட்டப் பகுதிக்குட்பட்ட திருப்பூர் நகராட்சி, இரண்டு பேரூராட்சிகள், 14 கிராம ஊராட்சிகளில் அடங்கும் வீடுகள் மற்றும் தொழிற்சாலைகள், அத்துடன் ... பகுதியையொட்டி உள்ள தொழிற்சாலைகளுக்கு மட்டுமின்றி, நீரேற்றுக் குழாய் செல்லும் பாதைக்கு அண்டையில் உள்ள 5 வழியோர ஊராட்சி ஒன்றியங்களுக்கும் குடிநீர் விநியோகம் செய்ய உத்தேசித்துள்ளது.

75. தற்போதைக்கு நாளொன்றுக்கு திருப்பூர் நகராட்சிப் பகுதிக்கு 40.0 மில்லியன் லிட்டரும், திருப்பூர் உள்ளூர்த் திட்டப் பகுதிக்குட்பட்ட



தொழிற்சாலைகளுக்கு 100 மில்லியன் லிட்டரும், வழியோர ஊராட்சி ஒன்றியங்களுக்கு 36.30 மில்லியன் லிட்டரும், நீர் ஒதுக்கீடு செய்யக் கருதப்பட்டுள்ளது.

76. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தினால் தயாரிக்கப்பட்ட திட்டம் குறித்து, வங்கிகளாலும், நிதி நிறுவனங்களாலும் செய்யப்படும் மதிப்பீடு, இறுதி நிலையில் உள்ளது. அந்நிறுவனங்கள் வழங்கவிருக்கும் நிதியுதவியின் அளவு குறித்த ஒப்புதல் விரைவில் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒட்டுமொத்த நீர் விநியோகத்திற்கான சலுகை ஒப்பந்தம் மற்றும் பொறியியல், கொள்முதல், கட்டுமானம், இயக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றுக்கான ஒப்பந்த ஆவணங்கள் இறுதிசெய்யப்பட்டு வருகின்றன. கடன் வழங்குவோர் சார்பில் பொறியாளர்கள் திட்டத்தினை மதிப்பீடு செய்து வருகின்றனர். இவை முடிந்தவுடன், நிதி நிறுவனங்கள் நிதியைப் பட்டுவாடா செய்யும். திட்டப் பணிகள் தொடங்கப்படும்.

77. திட்டப்பணி 1999 ஆம் ஆண்டு இரண்டாவது அரையாண்டில் தொடங்குமெனவும், குடிநீர்த் திட்டமும், கழிவு நீரகற்றுத் திட்டத்தின் பெரும்பகுதியும் 36 மாதங்களுக்குள் முடிவுறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

—o—

N2H, 31 N 99
W99. 81.1
22.1.99

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.